
Encyclopedia of Maha Dakshinamurthy in Purnas, Agamas, Poojas and Silpa Sastras

மகா தட்சிணாமூர்த்தி



திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால் நூல் நிலையம்
மற்றும் ஆய்வு மையம், திருவாவடுதுறை - 609803.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான

மயிலாடுதுறை
அருள்தரு அபயாம்பிகை உடனுறை
அருள்மிகு மாயூரநாதர்சுவாமி திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாமலர்

மகா தட்சிணாமூர்த்தி

திருவள்ளுவர் ஆண்டு 2036


மெய்கண்டார் ஆண்டு 782

பார்த்திப ஆண்டு

ஆவணி மாதம் 29ம் நாள்

14.09.2005 - புதன் கிழமை

உரிமைபதிவு
வெளியீடு எண்: 534
விலை ரூ. 275



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மகா தட்சிணாமூர்த்தி

(Encyclopaedia of Maha Dakshinamurti in Puranas - Agamas - Poojas and Silpa Sastras)



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
அவர்களின் 23-ஆவது ஆண்டு சிவஞான அருளாட்சியில்
வெளியிடப்பெறுவது

நூல் தொகுப்பு ஆசிரியர் மற்றும் வடிவமைப்பு
''ஆகம சிற்பக் களஞ்சியக் கலைமணி''
திருவிடைமருதூர் **S. நாராயணசுவாமி,**
ஆராய்ச்சியாளர்,
திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால் நூல் நிலையம் மற்றும்
ஆய்வு மையம், திருவாவடுதுறை.

திருவாவடுதுறை ஆதீனம்

உ


Sivamayam

Thirukkayilaya Paramparai,. Thiruvavaduthurai Adheenam,
During the Holy Reign of the 23rd Guru Mahasannidhanam Seer-valar-Seer

SIVAPRAKASA DESIKA PARAMACHARYA SWAMIGAL

BIBLIOGRAPHICAL DATA

1. Title of the book	:	MAHA DAKSHINAMURTI
2. Editor	:	S. NARAYANASWAMY, M.A., M.A., M.Ed., Dip.in.Sanskrit.
3. Publisher	:	Thiruvavaduthurai Adheenam Sarasvathi Mahal Library & Research Centre, Thiruvavaduthurai - 609 803.
4. Publication No	:	534
5. Price	:	Rs. 275
6. Subject	:	Religion (Agama - Silpa - Pooja & Fine Arts)
7. Languages	:	Tamil, Sanskrit & English
8. Number of Pages	:	516
9. Number of Photos	:	255
10. Edition	:	Ist Edition.
11. Number of Copies	:	1000 Copies
12. Date of Publication &	:	14.9.2005 - Sri.Mayuranathar Temple Maha Kumbabishekam.
13. Paper used	:	Maplitho.
14. Size of the Book	:	1/4 Demmy Size.
15. Printing type used	:	Offset printing.
16. Binding	:	Section Binding.
17. Printer	:	Surya Screens, Kovilpatti.



சிவஞானம் அருளும் தட்சிணாமூர்த்தி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குரு நமச்சிவாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

– மாபாடியகாரர்
அருள்திரு மாதவச் சிவஞான சுவாமிகள்.



ஆதீனம் குரு முதல்வர்

அருள்திரு நமசிவாய மூர்த்திகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆதீனம் குருமுதல்வர் அருள்வரலாற்றுச் சுருக்கம்

உலகம் ஓர் குலம்; உலகு அனைத்தும் இன்புறவேண்டும் என்ற பரந்த மனம் படைத்தது ஆசாரியப் பரம்பரை. திருக்கயிலையில் உண்டாகிய இப்பரம்பரை காலம் பல கடந்து இடையறாது இந்நாள் வரை வளர்ந்து வருகிறது. கயிலைப் பரம்பரையின் மெய்கண்ட சந்தான ஆசாரியர்களில் ஸ்ரீஉமாபதி சிவாசாரியரிடம் உபதேசம் பெற்ற ஸ்ரீ அருணமச்சிவாயரிடம் தீட்சை பெற்றவர் ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர். அவரிடம் சிவஞான அபிஷேகமும், ஆசாரிய பரம்பரையைப் பாதுகாத்துவர திருஆணையும் பெற்று, திருவாவடுதுறையில் ஆதீனத்தைத் தோற்று வித்த முதற்பெரும்குருமூர்த்திகள் ஸ்ரீநமசிவாயமூர்த்திகள்.

இவர்கள் சோழ மண்டலத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள மூவலூரில் பரம்பரை சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர்கள். இவர்களது பிள்ளைத் திருநாமம் வைத்தியநாதன் என்பது. இளம் பிராயத்தில் இவர்கள் தம் பெற்றோருடன் புள்ளிருக்கு வேளூரில் (வைத்தீஸ்வரன்கோயில்) ஸ்ரீவைத்தியநாதப் பெருமானை வழிபட்டுத் திருவருளில் ஒன்றிய சிந்தையினராக மனமுருகி நின்றபோது, பெருமானே ஒரு சிவாசாரியர் திருமேனி தாங்கி வந்து சிவலிங்கத் திருமேனி ஒன்றினைத் தந்தருளிய பேறுடையவர்கள்.

தல யாத்திரையாகத் தம் அடியார் திருக்கூட்டத்துடன் மூவலூர் சேர்ந்த ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர், சிறிய பெருந்தகையாராக விளங்கிய வைத்தியநாதரைக் கண்டார்கள். சிவஞானப் பேற்றிற்கு உரிய குறிகளையும் திருவருட் குறிப்பையும் உணர்ந்து, பெற்றோர் இசைவுடன் பிள்ளையைத் தம்முடன் அழைத்துக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்தார்கள்.

அங்கு ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர் அப்பிள்ளைக்கு ஞானதீக்கை புரிந்து *நமச்சிவாயம்* என தீட்சாநாமம் சாத்தி, குரு பரம்பரையில் தாம் பெற்ற சிவஞான உபதேசத்தை அருளிச் சிவாஞானானந்த அனுபவம் கைவருமாறு அநுக்கிரகம் செய்தார்கள். குருமரபில் தாம் பெற்ற ஸ்ரீஉமாபதி சிவாசாரியர் பூஜை செய்த ஸ்ரீஞான மாநடராசப் பெருமானையும், தம்முடைய ஆன்மார்த்த மூர்த்தியையும் பூஜித்து வரும் அதிகாரத்தையும் வழங்கினார்கள். தாம் வீற்றிருந்த இடத்தில் வரை கீறி அமைக்கப்பெற்ற அறையுள் அமர்ந்து சைவ சித்தாந்த மரபு தழைக்க சிவஞானோப தேசம் செய்துவர ஆணையருளி, தாம் திருமறைக் காட்டிற்குச் சென்றருளினார்கள்.

ஸ்ரீநமச்சிவாய தேசிக மூர்த்திகள் தம் ஞானாசிரியர் திருவாணையின் வண்ணம் அவர் வகுத்த அறையி லிருந்து, வரும் பக்குவ ஆன்மாக்களுக்கு சிவஞான உபதேசம் அருளி சுத்தாத்துவித சைவ சித்தாந்த பரிபாலனம் செய்து வந்தார்கள்.

இவ்வண்ணம் ஆதீன முதற்பெரும் குருமூர்த்திகளாக வீற்றிருந்து சுத்தாத்வித சைவ சித்தாந்த நன்மரபு தழைக்கச் செய்த ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகள், தங்கள் குரு சந்தானம் வளர்ந்தோங்கி வர, அம்பலவாண தேசிகருக்கு ஞானாபிஷேகம் செய்து துவிதீய ஆசாரியராக அமைத்து, ஒரு தை மாதம் அசுவதி நன்னாளில் சித்தாந்த சுத்தாத்வித முக்தி அடைந்தருளினார்கள். ஆதீனக் குருமுதல்வர் ஞான சமாதித் திருக்கோயிலில் நாள்தோறும் இரு காலம் பூசைகள் நடைபெற்று வருகின்றன. மாதந்தோறும் அசுவதி நட்சத்திரத்தில் குருமூர்த்திகளின் தோத்திரப் பனுவல்கள் பாராயணம் செய்யப்படுகின்றன.

பிரதி வருடம் தை மாதம் அசுவதி நன்னாளில் (மகரத்தலைநாள்) ஆதீன முதற்பெரும் குருமூர்த்திகளாக விளங்கும் ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் குருபூஜை வழிபாடுகள் 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மேலும் ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் திருமேனியானது மூவலூர் (அவதார இல்லம்), திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், விக்கிரமசிங்கபுரம் சிவந்தியப்பர் கோயில், திருநெல்வேலி சந்தி விநாயகர் கோயில், சுசீந்திரம் ஈசான்ய மடம் ஆகிய தலங்களில் பிரதிட்டை செய்யப் பெற்று, பூசையும் நடைபெறுகின்றன. தை அசுவதி நன்னாளில் ஷெ தலங்களில் சிறப்பு ஆராதனைகளும் மாகேசுவர பூசைகளும் நடைபெறுகின்றன.

மேலும் திருவாவடுதுறையில் நிகழும் (தை–அசுவதி) குருபூசை பத்து நாட்களில் – 5–ஆம் திருநாளில் தமிழ் மூதறிஞர் ஒருவர்க்குச் சிறப்பும் (மகா வித்துவான் நினைவுப் பரிசு), குருபூசை நன்னாளில் சித்தாந்த சைவப் பணியில் நூறு ஆண்டுகளையும் கடந்து வளர்ந்து வரும் சித்தாந்த சபைக்குச் ''சித்தாந்த சுடர் நிலையம்'' எனும் விருதினையும் வழங்கியருளுகின்றார்கள்.

இவ்வாறாக ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் வழிவழி வருகின்ற சிவஞான உபதேச, அபிஷேக பரம்பரையில், இந்நாளில் இவ்வாதீனத்து 23–ஆவது குரு மகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் சித்ராசன சிவஞான பீடத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்து வருகின்றார்கள்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

குரு பரம்பரை விளக்கம்

சீகண்ட பரமசிவம்

திருநந்திதேவர்

சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர்

சத்தியஞான தரிசினிகள்
பரஞ்சோதி மாமுனிவர்
மெய்கண்ட தேவ நாயனார்
அருள்நந்தி சிவாசாரியார்
மறைஞானசம்பந்த சிவாசாரியார்
உமாபதி சிவாசாரியார்
அருணமச்சிவாயர்
சித்தர் சிவப்பிரகாசர்

1.	ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள் *(திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர்)*	
2.	ஸ்ரீ மறைஞான தேசிகர்	1360 – 1625
3.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1360 – 1625
4.	ஸ்ரீ உருத்திரகோடி தேசிகர்	1360 – 1625
5.	ஸ்ரீ வேலப்ப தேசிகர்	1360 – 1625
6.	ஸ்ரீ குமாரசுவாமி தேசிகர்	1360 – 1625
7.	ஸ்ரீ (பின்) குமாரசுவாமி தேசிகர்	1360 – 1625
8.	ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்	1625 – 1658
9.	ஸ்ரீ இராமலிங்க தேசிகர்	1658 – 1678
10.	ஸ்ரீ வேலப்ப தேசிகர்	1678 – 1700
11.	ஸ்ரீ (பின்) வேலப்ப தேசிகர்	1700 – 1730
12.	ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர்	1730 – 1770
13.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1770 – 1789
14.	ஸ்ரீ (வேலூர்) சுப்பிரமணிய தேசிகர்	1789 – 1845
15.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1845 – 1869
16.	ஸ்ரீ (மேலகரம்) சுப்பிரமணிய தேசிகர்	1869 – 1888
17.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1888 – 1920
18.	ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்	1920 – 1922
19.	ஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்	1922 – 1937
20.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1937 – 1951
21.	ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்	13.4.1951 முதல் 23.9.1967
22.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	23.9.1967 முதல் 07.4.1983

23. ***சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 7.4.1983 முதல் இவ்வாதீன ஞான பீடத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றார்கள்.***

எடுத்தாண்ட நூல்கள்

1. திருமுறைகள்
2. சிவபராக்கிரமம்
3. ஸ்ரீ தத்துவநிதி
4. சில்பரத்நாகரம்
5. காசீப சில்பரத்னம்
6. திருத்தலப்பெருமை
7. காமிகம்
8. காரணம்
9. சிவரகசியம்
10. கந்தபுராணம்
11. மருதவனப்புராணம்
12. திருவிளையாடற்புராணம்
13. திருப்பெருந்துறைப்புராணம்
14. திருப்பெருந்துறை சிலைவிளக்கம்
15. பிறதல வரலாற்று நூல்கள்
16. ஆலங்குடித் தலபுராணம்
17. கணபதி
18. முருகன்
19. ஆதீன சரஸ்வதி மகால் நூலக கையெழுத்துப் பிரதிகள் - அச்சுப் புத்தககங்கள்
20. கலைச்செல்வங்கள்
21. அபிதான சிந்தாமணி
22. சிற்ப அகராதி (ஆதீன நூலக ஓலைச்சுவடிப் புலம்)
23. சமய சாத்திர அகராதி
24. கலைக்களஞ்சியம்
25. இவ்வாதீனத்தின் 17-வது குரு மகாசன்னிதானம் அவர்கள் எழுதி வைத்த ஏட்டுப்பரதி
26. சிலப்பதிகாரம்
27. பஞ்சமரபு
28. சிற்பச்செந்நூல்
29. திருமந்திரம்
30. திருவாசகம்
31. தென்னிந்திய சிவவடிவங்கள்
32. ஹிந்துமத தர்ம விளக்கம்
33. சிவமூர்த்தங்கள்
34. கவின்மிகு தஞ்சைக் கலைக்கூடம்
35. சிவபோதம்
36. தஞ்சைக் கலைக்கூட கலைவிழா மலர்
37. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய ஸ்ரீசுப்பிரமணிய வியாசமும் குரு சிஷ்ய சம்பவ வரலாற்று வியாசமும்
38. கலைஞன் கண்ட கடவுள்
39. தென்னிந்திய சிற்ப வடிவங்கள்
40. தென்னிந்திய கல்வெட்டு சாசனங்கள்
41 .தமிகழச் சிற்ப ஓவியம்
42. ஆனந்தவிடகன்
43. அமுதசுரபி
44. கல்கி
45. கலைமகள்
46. தினமணி - ஞாயிறு சுடர்
47. படிமக்கோடுகள்
48. எஸ்.எம்.கணபதி வரைந்தளித்த படத்தொகுப்பு
49. மங்கை ஆலயமலர்
50. ஸ்ரீ தட்சிணாமூர்த்தி ஸகஸ்ர நாம ஸ்தோத்திரமுமு திருவருட்பாவும்
51. தெய்வத் திருமேனிகள்
52. தெட்சிணாமூர்த்தி பாகம் 1
53. தெட்சிணாமூர்த்தி பாகம் 2
54. திருமுறைத் தலங்கள்
55. தினமலர் - பக்திமலர்கள் இதழ்கள்
56. தினமணி - வெள்ளிமணி இதழ்கள்
57. ஞானபூமி
58. மெய்கண்டார் 1983 முதல் 2000 வரை இதழ்கள்
59. படிமத் திருக்கோலங்கள்
60. சி.எஸ்.சதாசிவம் கையெழுத்துப் பிரதிகள்
61. மந்திர சாஸ்த்ர சங்கிரகம்
62. நித்ய பூஜா லக்ஷ்ண சங்கிரகம்
64. ஸ்ரீ வித்யா ஸர்வதேவதா ஆவரண பூஜை
65. பிரதிமாலட்சணம்
66. அஜிதாகமம்
67. ரௌரவாகமம்
68. சுப்ரபேதாகமம்
69. பரார்த்தபூஜை
70. தட்சிணாமூர்த்தி உபநிஷத்
71. தட்சிணாமூர்த்தி மந்திரம்
72. தட்சிணாமூர்த்தி திரிசதி நாமாவளி
73. தட்சிணாமூர்த்தி சகஸ்ரநாமம்
74. பிர்மாண்டபுராணம்
75. மந்திரசாரம்
76. மந்திரசார சாரசங்கிரகம்
77. மகாலட்சுமி மந்த்ர கோசம்
78. பிரபஞ்ச சாரம்
79. பிரபஞ்ச சாரசாரசங்கிரகம்
80. சிவபெருமான் வழிபாடு
81. தஞ்சாவூர்
82. நவக்கிரகங்களின் வழிபாடு
83. வைதீக தர்ம வர்த்தினீ இதழ்கள்
84. சிவத்தலங்களின் வரலாறு
85. ஆதீன நூலக கையெழுத்துப் பிரதிகள்
86. திருத்தலங்கள் வரலாறு
87. சூரைமாநகர்ப்புராணம்
88. திருவைகாவூர்ப்புராணம்
89. கலைக்களஞ்சியம்
90. கவின்மிகு கலைகள்
91. மயிலைகும்பாபிஷேக மலர்
92. 2ம் உலகத்தமிழ் மாநாடு கையேடு
93. தெட்சிணாமூர்த்தி பத்ததி
94. த.ச.ம.நூலகம் கையெழுத்துப்பிரதி
95. சிற்பமும் கலைவாழ்வும்
96. இந்துசமய கடவுள்களின் திருவுருவங்கள்
97. சகலாகம சார சங்கிரகம்
98. தட்சிணாபிஷேக கிரமம்
99. பிரதிமா லட்சணம் (மூலம்)
100. தஞ்சைப் பெருவுடையார் கல்வெட்டுகள்
101. ஆலய நிர்மாண பிம்பலக்ஷண சிற்பநூல்
102. மாயூரப்புராணம்
103. பேரூர்ப்புராணம்
104. தெய்வங்களின் பெருமையும், சுபகாரிய முறைகளும்
105. துறைசைப்புராணம்
106. திருக்குற்றாலத்தலபுராணம்
107. மண்ணிப்படிக்கரைப் புராணம்
108. காசி ரகசியம்
109. Early Chola art (Part-1)
110. South Indian Bronzes
111. Early Chola temple
112. Middle Chola temple
113. Later Chola temple
114. Elements of Hindu Iconography
115. Indian Architecture
116. Indian Culture
117. Indian History
118. South Indian Image
119. Indian Architecture
120. Temple of South India
121. Mahabalipuram
122. Frech Indology books
123. Elements of HIndu
124. Iconography
125. Dakshinamurti Puja
126. Art of South India
127. Nolamba sevlputure
128. Heritage of the Tamils
129. Temple arts
130. Temple cars of medieval
131. Tamilaham
132. Temple gateways in south
133. India
134. Iconography of South India
135. Diyana Ratnavali
136. Hindu Icongraphy - by Gobinatha Rao
137. Devata Rupa mala
138. Navagraha kosha Vol-ii
139. South Indian God & Goddesses
140. சிதம்பர சபநாதபுராணம்
141. திருத்துருத்திப்புராணம்
142. திருக்குடந்தைப்புராணம்
143. ஷெ நூலாசிரியரின் ஆகம விஷயங்களின் கையெழுத்துப் பிரதி
144. திருவெண்ணெய்நல்லூர்ப்புராணம்
145. திருத்திலதைப்புராணம்
146. அம்பைத்தலபுராணம்
147. பரிதியப்பர் தலபுராணம்
148. சூதவனபுராணம்
149. அம்பர்ப்புராணம்
150. சூதவனபுராணம்
151. பயறணீச்சுரர் புராணம்
152. திருக்கோளப்புராணம்
153. வயிரவன் கோயிற்புராணம்
154. திருக்கருவைத் தலபுராணம்
155. திருநல்லூர்ப்பெருமான் தலபுராணம்
156. பவானி கூடற் புராணம்
157. கோயிலூர்ப்புராணம்
158. திருவானைக்காப்புராணம்
159. திருவான்மியூர்ப்புராணம்
160. திருமுல்லைவாயிற்புராணம்
161. களந்தைப்புராணம்
162. தேவாங்கப்புராணம்
163. திருப்புங்கூர்ப்புராணம்
164. பெருந்தோட்டத்து அகத்தீச்சர புராணம்
165. திருப்பாதிரிப்புலியூர்ப்புராணம்
166. திருப்பாண்டிக் கொடுமுடிமுடிப்புராணம்
167. தில்லையாளித் தலபுராணம்
168. திருநெல்வேலித் தலபுராணம்
169. கேதாரீஸ்வரர் புராணம்
170. திருவேட்டக்குடி புராணம்
171. திருக்கழிப்பாலைப்புராணம்
172. திருவோத்தூர்ப்புராணம்
173. திருக்கடவூர் புராணம்
174. திருவியலூர்ப்புராணம்
175. திருவாமாத்தூர் தலபுராணம்
176. திருநாகேஸ்வர புராணம்
177. திருபைஞ்ஞீலிப்புராணம்.

உ

சிவமயம்

பொருளடக்கம்



திருவாவடுதுறை ஆதீனம் 23 வது குரு மகாசன்னிதானம்

சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறு
அங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்

–திருவிளையாடற்புராணம் ஸ்ரீ பரஞ்சோதி முனிவர்

செம்மலர் நோன் தாள்சேரல் ஒட்டாமல்
உயிரையெல்லாம தியக்கம் செய்யும்
அம்மலங்க ழீஇமிகுந்த அன்பரொடு
மருவிநீர் அடையு முத்தி
இம்முறையாம் எனநால்வர்க்[கு] இருவிரற்சின்
முத்திரையால் இயம்பி ஆல் கீழ்
மன்மதன்மேல் நுதற்கண் அனல் இறைத்திருந்த
குருபரனை வணக்கம் செய்வாம்.

–துறைசைப்புராணம் ஸ்ரீ சாமிநாத முனிவர்

உலகில் ஆன்மாக்களுக்கு உளவாகும் பிறப்புகளுள் மனிதப் பிறப்பே சிறப்புடையது. பிறந்து இறந்து உழலும் ஆன்மா, புண்ணிய மேலீட்டினால் பெற்ற மனிதப் பிறப்பில் தான் உயிர்க்கு உயிராகிய கடவுள் உண்மையை உணர்ந்து மனம், வாக்கு காயங்களினால் கடவுளை வழிபட்டு மீண்டும் பிறவா நிலையாகிய முக்தியின்பத்தைப் பெற்றுய்ய முடியும். இதனாலேயே அப்பரடிகள், இறைவனை வழிபடும் பேறு பெற்றால் இம்மாநிலத்து மனிதப் பிறவியும் வேண்டுவதே என்று அருளுகின்றார்.

மூன்று வடிவங்கள்

ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலாத இறைவன் நாம் உய்யும் பொருட்டுப் பல்வேறு வகையான திருமேனிகளைத் தாங்கி வந்து ஆட்கொள்கிறான். மக்களின் தகுதிக்கு ஏற்ப ஆட்கொள்ளும் பெருமானின் வடிவங்கள் மூன்று வகையனவாகும். அவை போகவடிவம், யோகவடிவம், வேகவடிவம் என்பன. இம்மூன்றுவித வடிவங்களின் அடையாளங்களாக சிவபெருமான் 64 திருமேனிகளைக் காட்டி நின்றார். இதனை அஷ்டாட்ட விக்ரக லீலா என்றும் சிவபராக்கிரமம் என்றும் கூறுவர். பெருமானின் லீலா பேதங்களை உணர்த்தி திருக்கோயில் கட்டுமானப்பணிகளைக் கூறும் சிற்ப நூல்கள் நமக்குப் பெரும் பொக்கிஷமாக உள்ளன.

திருக்கோயில் கட்டுமானப்பணிபற்றிய சிற்ப நூல்கள்

1.✸விசுவ கர்மீயம், 2.விஸ்வம் ,3.விஸ்வசாரம், 4. பிரபோதம், 5.விருத்தம், 6.✸மயமதம், 7. துவஷ்டாதந்த்ரம், 8. மனுசாரம், 9. நளம், 10. மானவிதி, 11.மானகல்பம், 12. மானசாரம், 13. பெகுஸ்ருதம், 14. சிருஷ்டம், 15. மானபோதம், 16. விஸ்வ போதம், 17. ஆதிசாரம், 18. விசாலாக்ஷம், 19. விஸ்வ காஸ்யபம், 20. வாஸ்து போதம், 21. மகாதந்த்ரம், 22.வாஸ்து வித்யாபதி, 23. பாராசரீயகம், 24. காலயூபம், 25. சைத்யம்,

26.சித்திரம், 27.ஆவர்யம், 28.சாதகசார சம்ஹிதை, 29. பானுமதம், 30.ஐந்திர மதம், 31. லோகக்னம், 32.சௌரம்.

(மேற்கண்ட 32 சிற்ப நூல்கள் மானசாரம் என்ற சிற்பக்கலை நூலில் குறிக்கப்பட்டுள்ளது. ✵ இக்குறியிட்ட நூல்கள் மட்டும் கிடைத்துள்ளன ஏனைய கிடைத்தில. இவையாவும் வடமொழி நூல்களாகும்.

1.ஈசானம், 2.சித்ரகாஸ்யபம், 3.பிரயோகமஞ்சரி, 4. பெருஹிதம், 5. பௌத்தமதம், 6. கௌதமம், 7. குலாலம், 8.வாசிஷ்டம், 9.மனோகல்பம், 10. பார்க்கவம், 11.மார்கண்டம், 12. கோபாலம், 13.நாரதீயம், 14. நாராயணீயம், 15.காஸ்யபம், 16. சித்ரயாமளம், 17. சித்ரபாகுல்யம், 18. தேசிகம், 19. சாரஸ்வதீயம், 20. பிராம்மீயம், 21.சகளாதிகாரம், 22.வாஸ்து வித்யை, 23. மனுஷ்யாலயச் சந்திரிகை.

அஷ்டாட்ட விக்ரக லீலா எனும் 64 சிவபராக்ரமம்

1. இலிங்க மூர்த்தி, 2.இலிங்கோத்பவ மூர்த்தி, 3.முகலிங்க மூர்த்தி, 4. சதாசிவ மூர்த்தி, 5. மகாசதாசிவ மூர்த்தி, 6.உமாமகேச மூர்த்தி, 7. சுகாசன மூர்த்தி, 8.உமேச மூர்த்தி, 9.சோமாஸ்கந்த மூர்த்தி, 10.சந்திரசேகர மூர்த்தி, 11. ரிஷபாரூட மூர்த்தி, 12.ரிஷபாந்திக மூர்த்தி, 13.புஜங்கலளித மூர்த்தி, 14. புஜங்கத்ராச மூர்த்தி, 15. சந்தியா நிருத்த மூர்த்தி, 16. சதாநிருத்த மூர்த்தி, 17. சண்ட தாண்டவ மூர்த்தி, 18. கங்காதர மூர்த்தி, 19. கங்காவிசர்ஜந மூர்த்தி, 20. திரிபுராந்தக மூர்த்தி, 21. கலியாணசுந்தர மூர்த்தி, 22.அர்த்த நாரீஸ்வர மூர்த்தி, 23. கஜசம்ஹார மூர்த்தி, 24. ஜ்வாரபக்ந மூர்த்தி, 25.சார்த்தூலஹர மூர்த்தி, 26. பாசுபத மூர்த்தி, 27. கங்காள மூர்த்தி, 28.சங்கர நாராயண மூர்த்தி, 29.பிட்சாடண மூர்த்தி, 30.சிம்ஹக்ந மூர்த்தி, 31.சண்டேசாநுக்ரக மூர்த்தி, 32.தட்சிணாமூர்த்தி, 33.யோக தட்சிணாமூர்த்தி, 34. வீணாதர தட்சிணாமூர்த்தி, 35. காலசம்ஹார மூர்த்தி, 36. காமதகன மூர்த்தி, 37.லகுளேஸ்வர மூர்த்தி, 38. பைரவ மூர்த்தி, 39.ஆபதோத்தாரண மூர்த்தி, 40. வடுக மூர்த்தி, 41. க்ஷேத்ர பாலக மூர்த்தி, 42. வீரபத்ர மூர்த்தி, 43. அகோர மூர்த்தி, 44.தட்சயக்ஞஹத மூர்த்தி ,45. கிராத மூர்த்தி, 46. குருமூர்த்தி, 47. அஸ்வாரூட மூர்த்தி, 48. கஜாந்திக மூர்த்தி, 49.ஜலந்தர வத மூருத்தி, 50. ஏக பாதத்ரி மூர்த்தி, 51.த்ரிபாத மூர்த்தி, 52. ஏகபாத மூர்த்தி, 53. கௌரீ வரபத மூர்த்தி, 54.சக்ரதான மூர்த்தி, 55.கௌரீலீலா சமன்வித மூர்த்தி, 56. விஷாபஹரண மூர்த்தி, 57. கருடாந்திக மூர்த்தி, 58. பிரம்ம சிரச்சேத மூர்த்தி, 59. கூர்ம சம்ஹார மூர்த்தி, 60. மச்ச சம்ஹார மூர்த்தி, 61.வராஹ சம்ஹார மூர்த்தி, 62. பிரார்த்தனா மூர்த்தி, 63.ரக்த பிக்ஷாப்ரதான மூர்த்தி, 64. சிஷ்ய பாவ மூர்த்தி.

திருக்கோயில்களில் மகேஸ்வர வடிவங்கள் - 25

1.சோமாஸ்கந்தர், 2.நடராஜர், 3.ரிஷாபரூடர், 4.கலியாணசுந்தரர், 5.சந்திரசேகரர், 6.பிட்சாடனர், 7.காமதகனர், 8.காலசம்ஹாரர், 9.சலந்தரர், 10. திரிபுராந்தகர், 11.கஜசம்ஹாரர், 12.வீரபத்திரர், 13.தட்சிணாமூர்த்தி, 14. கிராதமூர்த்தி, 15.நீலகண்டர், 16. கங்காளர், 17.சக்ரதானர், 18.கஜாந்திகர், 19. சண்டேசானுக்ரகர், 20.ஏகபாதர், 21. இலிங்கோத்பவர், 22.சுகாசனர், 23. உமாமகேசர், 24.ஹரிஹரர், 25. அர்த்தநாரி.

மேற்கண்ட 25 சிவமூர்த்தங்கள் ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் சில ஆலயங்களில் காணலாம். முன் கூறிய அறுபத்து நான்கினுள் இவ்விருபத்தைந்து முக்கியமானதாகும்.

தட்சிணாமூர்த்தி வழிபாடு

மனம் ஒன்றி உயர் வாழ்வெய்தி இன்புற அருளும் தட்சிணாமூர்த்தி வழிபாடு, சமய ஒழுக்கம் நிலவிய நாடுகள் எங்கணும் நிலவியது. சிந்து சமவெளி அகழ்வு ஆய்வுகள், அக்கால மக்களின் வழிபாட்டு நிலைகளை விளக்கியுரைக்கின்ற போது, அவர்கள் இலிங்க வழிபாட்டொடு, தட்சிணாமூர்த்தி வழிபாட்டினையும் (யோக சிவனாக) மேற்கொண்டிருந்ததாக அறிவிக்கின்றன.

தட்சிணம் நோக்கும்பெருமான்

தட்சிணம் என்ற சொல்லுக்கு ''தெற்கு'' என்றும் ''ஞானம்'' என்றும் பொருள். சனகாதி முனிவர்களுக்கு திருக்கயிலாயத்தில் ஐயம் நீக்கித் தெளிவித்து அருளுபதேசம் செய்யும் நிலை. வேதங்கள் மற்றும் சாத்திரங்கள் பலவாறாக பெருமானைப் போற்றிப் புகழ்ந்தாலும் முடிவில் ஆன்மாவானது தன்னுள்ளே இருக்கும் ஆணவம்,

---

மேலும் சில்பரத்னம், காசியப சில்பரத்னம், ஸ்ரீ தத்துவநிதி (மூன்று பாகம்), ஸாரஸ்வதிய சித்ர கர்ம சாஸ்திரம்) சிற்பக்கலை நூல்களாம்.

கன்மம், மாயா என்ற மூன்றினையும் அறவே ஒழித்து சிவனாரின் திருவடி பற்றுதலே உண்மையான ஞானமாகும். இத்தகு உண்மையினை சிவபெருமான் கல்லால மரத்தினடியில் நான்கு திருக்கரங்கள் கொண்டு பின்கரங்களில் சுடரும் ஜபமாலையும் முன்வலக்கரத்தில் சின்முத்திரையும் முன் இடக்கரத்தில் முயலகனையும் (சிலை உருவத்தில் சுவடி இருக்கும்) காண்பித்தல் போல உண்டு. இந்த உபதேசமானது கண்களைத் திறவாது மோன நிலையில் தாம் இருந்து காட்டினார் சிவபெருமான். இதனை அப்படியே உணர்ந்து பெற்றபடியால் சனகாதியர்களும் அவ்வாறே ஆயினர். கயிலாயத்தில் சிவபெருமானிடம் நந்திதேவர் உபதேசம் பெற்றார். உபதேசம் அவர் வாயிலாக தொடர்ந்து வந்தது இவ்வாதீனமாகும்.

திருக்கோயில்களில்

திருக்கோயில்களின் தென் ஆவரணம் கோஷ்டப்பகுதியின் மாடத்தில் தெற்கு நோக்கி முன் கூறப்பட்டவாறு சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக அருட்காட்சி வழங்குவதை இன்றும் காணலாம்.

திருக்கோயில்களின் விமானங்கள், இராஜகோபுரங்கள், மதில் சுவர்கள் இவைகளின் தெற்குப் பாகத்தில் தட்சிணாமூர்த்தியின் பல்வேறு நிலைகளில் உள்ள திருமேனிகளைப் பார்க்கலாம். சுதைச்சிற்பங்களாகவும், கல் திருமேனிகளாகவும், உற்சவ மூர்த்தியாகவும், தேரிலும் கண்டு தரிசிக்கலாம்.

வேத சிவாகமங்களில்

வேத சிவாகமங்களில் போற்றித் துதிக்கப்படும் சிவபெருமானைச் சிறப்பான முறையில் கிரியா மார்க்கத்துடன் ஆகமங்கள் வெகுவாக சிறப்பித்துக் கூறுகின்றன. காமிகம், காரணம், அஜிதம், ரௌரவம், ரௌரவோத்தரம் முதலான ஆகமங்கள் உருவத்தை வடிக்கும் முறை, உருவமுறை பிரதிட்டை முறை, வழிபாட்டு முறை ஆகியனவற்றைத் தெள்ளத்தெளிவாக விவரிக்கின்றன. இவைகளை இந்நூலில் விரிவாக மூலபாடத்துடன் அறியலாம்.

சிற்ப நூல்களில் இப்பெருமான்

சிவாகமங்களைத் தொடர்ந்து சிற்ப நூல்கள் கண்ணுக்கும், கருத்துக்கும், மெய்யுணர் வுக்கும் ஏற்றபடி அளவுகளோடும், வண்ணங்களோடும் கண்டாரை வசப்படுத்தும் நல்ஆஹ்ருதியாகக் கொடுக்கவல்லது சிற்பநூல் களாகும். இந்த நூல்களையே பிரமாணமாக ஏற்று சிற்பிகள் தத்தம் யுக்திக்கேற்பவும், தேவாரம் மற்றும் தலபுராண நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தியும் , பல்வேறு நிலைகளில் தட்சிணாமூர்த்தித் திருமேனிகளை வடிக்கின்றனர்.

கயிலாயத்தில் தட்சிணாமூர்த்தி ஒரு சமயம் சனகாதியர்களுக்கும், அடுத்து அடுத்து யுகங்களில் அம்பிகை, நந்தி, சுகர், நாரதர், விஸ்வாமித்திரர், தும்புரு, வியாக்ரபாதர், பதஞ்சலி, மார்க்கண்டேயர் முதலானோர்களுக்குப் பல நிலைகளில் உபதேசத்தை நல்கியுள்ளார். இவைகள் யாவும் சிற்பிகளின் கைத்திறனால் உணர்த்தப் பெறுகின்றன.

தட்சிணாமூர்த்தி பேதங்கள்

ஞானமூர்த்தி, வியாக்யான மூர்த்தி, வீரமூர்த்தி, யோகமூர்த்தி, ஆதிமூர்த்தி, சக்தி மூர்த்தி, மேதா தட்சிணாமூர்த்தி, வீணாதர மூர்த்தி, ரிஷாபாரூட ஞானமூர்த்தி, தர்ம வியாக்ஞான மூர்த்தி, ஹரிகுரு சிவயோக மூர்த்தி, சாம்பமூர்த்தி, குருமூர்த்தி, தர்ம வியாக்யான மூர்த்தி, ஆஸிந தட்சிணாமூர்த்தி, வரதட்சிணாமூர்த்தி, யோக பட்டாபிராம தட்சிணாமூர்த்தி என 64 தட்சிணாமூர்த்தி பேதங்கள் உண்டு. இந்நூலில் 69 தட்சிணாமூர்த்தி உருவங்கள் காட்டப்பட்டுள்ளன.

திருவாவடுதுறை ஆதீனமும் நுண்கலை நூல்களும்

செந்தமிழையும், திருக்கோயில்கலைகளையும் புரந்தருளுவது திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் ஆகும். பன்னெடுங்காலமாக தெய்வீக அறப்பணிகளோடு சிற்பக்கலைகளையும் திருக்கோயில் கட்டுமான முறைகளையும், பிரதிஷ்டை முதலான ஏனைய பூஜா முறைகளையும் தெள்ளத்தெளிவாக இக்காலத்திற்கேற்ப மூல பாடங்களை அடியொற்றி கணபதி, முருகன், ஆடல்வல்லான், தட்சிணாமூர்த்தி முதற்பாகம், தட்சிணாமூர்த்தி இரண்டாம் பாகம், சோமாஸ்கந்தர், சண்டேசுவரர், சரசுவதி, கலியாணசுந்தரர், பைரவர், பிரதிமாலட்சணம், இலிங்கோத்பவர், மகாசரசுவதி, மகாகால சம்ஹாரர், தெய்வத் திருமேனிகளின் தியானம்-ரூபம்-யந்திரம்- மந்திரம்,

மகா பைரவர், பன்னிரு திருமுறை அருளாளர்கள் கலைக்களஞ்சியம் முதலான நுண்கலை நூல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு அச்சிட்டு தொடர்ந்து வழங்கி வருகின்றது.

ஞானபீடத்தில் எழுந்தருளிய 23ஆவது குருமூர்த்திகள்

இவ்வாதீனத்தின் 23ஆவது ஞான பீடத்தில் எழுந்தருளி அருளாட்சி புரிந்தருளும் குரு மகா சன்னிதானம் **சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பராமாச்சாரிய சுவாமிகள்** அவர்கள் தெய்வத் தமிழோடு திருக்கோயில் திருப்பணிகளைச் செய்து குடமுழுக்குச் செய்தருளும் பாங்கு, கல்விசாலைகளைப் பேணும் முறை, கலைஞர்களை ஊக்குவிக்கும் முறை, புலவர்களை ஆதரித்து நல்நூல்களை வெளியிடும் முறை, வறியவர்களுக்கு அருட்கொடைகளோடு அன்னம்பாலிப்பு, கிராமத் திருக்கோயில்களில் அன்றாடம் நிகழ வேண்டிய பூசை முறைகளுக்கு நைவேத்திய பொருட்களை அளித்தல், தெய்வீக நூல்களை அச்சிட்டு வழங்கும் முறைகள் இவற்றோடு கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்கள், சிவாகமாச்சாரியர்கள், திருமுறைவாணர்கள், சைவசித்தாந்தச் சீலர்கள், தமிழறிஞர்கள், வடமொழி வல்லுநர்கள், நுண்கலை வல்லுநர்கள், சிற்பக்கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், நூல் ஆசிரியர்கள் முதலானோர்க்கு வருடம் தோறும் திருமடத்தில் நிகழும் மகரத்தலைநாட் குருபூசை (10 தினங்கள்), பங்குனி திருவோணம் குருபூசை, சித்திரை ஆயில்ய விழா, வருடப்பிறப்பு, மற்றும் சமய விழா கருத்தரங்குகளில் பட்டம் பாராட்டிதழ், பொற்கிழி, பொன்னாடை ஆகியன வழங்கியருளும் முறைகள் அனைத்தும் மிகவும் போற்றுவதற்குரியனவாகும்.

மீண்டும் உலா

1990 மற்றும் 1991ல் நிகழ்ந்த பங்குனி திருவோணம் குருபூசைகளில் (22-ஆவது பட்டம் குருபூசை) தட்சிணாமூர்த்தி (முதற்பாகம்) மற்றும் தட்சிணாமூர்த்தி (இரண்டாம் பாகம்), நூல்களை அச்சிட்டு குரு மகாசன்னிதானம் அவர்கள், குருபூசை விழா மலராக வழங்கியருளினார்கள். காலங்கள் செல்லச்செல்ல மேற்படி நூல்கள் முற்றிலும் செலவாகிவிட்டன. மெய்யன்பர்கள் பலர் பலமுறை தட்சிணாமூர்த்தி நூல்களை படி எடுத்துச் (செராக்ஸ்) சென்றனர். மேலும் பல அன்பர்கள் கடிதங்கள் வாயிலாகவும், நேரில் தரிசித்து ஆசி பெறுகின்ற சமயங்களில் எல்லாம் தட்சிணாமூர்த்தி பெருமானது நூல் மீண்டும் உலா வரவேணும் என குருமூர்த்திகளின் திருவடிகள் முன் பிரார்த்தனை செய்து வேண்டி நின்றனர். கனிந்த மனம் உள்ள குருநாதர், ''***தட்சிணாமூர்த்தி***'' நூலில் மேலும் பல்வேறு செய்திகளோடும், அரிய படங்களோடும் புராணம், ஆகமம், பூஜை, சிற்ப சாத்திரங்களோடு **மகா தட்சிணாமூர்த்தி** எனும் நுண்கலைக் களஞ்சியம் மயிலாடுதுறை அருள்தரு மாயூரநாதர் திருக்கோயில் குடமுழுக்கு நன்னாளில் வெளிவர திருவுளம் கொண்டு அடியேனுக்கு அருளாணையினை வழங்கியருளினார்கள்.

மகா தட்சிணாமூர்த்தி நூலின் உள்ளே

ஆதீனக் குருமூர்த்திகளின் அருளாணையின்படி களஞ்சியம் நூல் வரிசையில், புராணம் - ஆகமம்- பூஜை- சிற்பசாத்திரங்களில் மகா தட்சிணாமூர்த்தி ஆதீனத் தடாகத்தில் மலர்கின்றது. இந்நூல் 64 தலைப்புக்களைக் கொண்டது. 200க்கும் மேற்பட்ட படங்கள் அழகுடன் மிளிர்கின்றன. மூலபாடங்கோடு தமிழாக்கம் மற்றும் விளக்கங்கள் ஆங்காங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

1) சைவ சமயத்தின் தொன்மையும் தட்சிணாமூர்த்தி வழிபாடும், 2)கரம் -மகுடம் - ஆயுதங்கள் இவைகளின் லட்சணங்கள், 3.புராண நிகழ்வுகள், 4. காமிகம் முதலான ஆகமங்களில் கூறும் தட்சிணாமூர்த்தி வடிவம் மற்றும் பிரதிட்டை - பூசைகள், 5. பிரதிமாலட்சணம், 6.ஆலய பரிவார மூர்த்தங்கள், 7.சிற்ப நூல்களில் தட்சிணாமூர்த்தி, 8. குடைவரைக் கோயில்கள் மற்றும் அருங்காட்சியகங்களில்,9. வர்ணலேபனம், 10. ஓவியம் - மரச்சிற்பங்களில். 11.சிவாலயக் கோஷ்டங்களில் தட்சிணாமூர்த்தி திருமேனிகள், 12.புராணங்களில் அட்டமா சித்தி - அம்பிகை - நந்தி, 13.நந்தியின் பல திருக்கோலங்கள், 14. முனிவர்களின் வடிவங்கள், 15. கல்வெட்டுகள், 16.உபநிஷத் மற்றும் பத்ததிகளில், 17. ஸ்தோத்ரம் - அஷ்டகம் - நவரத்னமாலிகா - மந்த்ரவர்ண பதஸ்துதி, 18. மந்திர சாஸ்திரத்தில், 19.பன்னிரு திருமுறை - தலபுராணங்களில் - தட்சிணாமூர்த்தி திருவருட்பா, 20. சப்தகுரு, 21. பிரகஸ்பதி (வியாழ பகவான்) வழிபாடு, 22. சோதிடம் கூறும் குருவழிபாடும் சகல தோஷ நிவர்த்தியும் முதலான 64 தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலில் இன்றியமையாத சில பகுதிகளை தேவநாகரி லிபி, கிரந்தலிபி மற்றும் ஆங்கில வழியில் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்களஞ்சியத்திற்கு உறுதுணை

சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்களின் கருணை மேலீட்டால் அடியேன் இந்நூலினை மீண்டும் பல திருத்தங்களோடு எழுதும் காலத்தில் ஐயம் தெளிவுற நெறிப்படுத்திய ஆதீனப் பன்மொழிப்புலவர் காஞ்சிபுரம் சிவஸ்ரீ சி.எஸ். சதாசிவம் அவர்களுக்கும் பல நூல்களைக் கொடுத்து உதவிய சென்னை இந்து தர்ம மன்றம் செயலர் சிவஸ்ரீ. வி.மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கும் தமது படத்தொகுப்பினை ஆதீன உபயோகத்திற்கு சமர்ப்பித்த காஞ்சியுரம் திரு.எஸ்.எம்.கணபதி ஸ்தபதி அவர்களுக்கும், மகாபலிபுரம் கலைச்செம்மல் திரு.கோ.திருஞானம் அவர்களுக்கும் சோதிட விஷயங்களான கையெழுத்துப் பிரதிகளை அளித்து உதவிய சேலம் ஜோதிட நிபுணர் பைரவப்ரியன் திரு.பண்ணாரிதாசன் அவர்களுக்கும் என்றும் குருமூர்த்திகளின் ஆசி உரித்தாகுக.

மயிலாடுதுறை திருக்குடமுழுக்கு நன்னாளில் மலரும் மகா தட்சிணாமூர்த்தி

புராணம் - ஆகமம்- பூஜை- சிற்ப சாத்திரங்களைத் தன்னகத்தே கொண்டு மலரும் நுண்கலை நூலாம் ''மகா தட்சிணாமூர்த்தி'' (Encyclopaedia of Maha Dakshinamurti in Puranas- Agamas- Poojas and Silpa Sastras) பார்த்திப ஆண்டு ஆவணி மாதம் 29ஆம் தேதி (14-9-2005) புதன்கிழமை அன்று ஷெ ஆதீனத்திற்குரிய மயிலாடுதுறை **அருள்தரு அபயாம்பிகை உடனுறை அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா** நாளில் சிவ க்ஷேத்திர குருக்ஷேத்திர செந்தமிழ்ப்பரிபாலனம் செய்து சிவஞானச் செங்கோலோச்சும் **''திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது குரு மகாசன்னிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பராமாச்சாரிய சுவாமிகள்''** அவர்கள் திருவருளை நினைந்து போற்றிய நிலையில் சிவமாம் திருக்கோயிற் கலைகளை யாவரும் எளிதில் உணர்ந்து, நெறி பிறழாது வாழ்வில் சிறந்தோங்க, இந்நூலினை இந்நாளில் வெளியிட்டு அருளுகின்றார்கள். குருமூர்த்திகளின் திருவுள்ளக் குறிப்பினை உணர்ந்து திருவடிகளைப் போற்றி, இம்மலரினை யாவரும் பெற்று **''மகா தட்சிணாமூர்த்தி''** திருவருளுக்கு சத்பாத்திரர்களாக வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

திருவடி மலர்களைப் போற்றும்

ஒன்றுக்கும் பற்றாத இவ்வெளியேனை ஆதீன நூற்பணிக்கு ஆளாக்கி உலகறியச் செய்த பெருமை குரு திருவடிகளையே சாரும். திருவருளும் குருவருளும் இயக்கிட்ட கருவியாய் நிற்கும் அடியேனால் எழுதித் தொகுப்பாக்கம் பெற்ற **''மகா தட்சிணாமூர்த்தி''** எனும் இக்கலைக்களஞ்சியம் அனைவருக்கும் மெய்மைப் பூசனை விளைவிக்க அடியேனை ஆண்டு கொண்ட தீட்சா ஞானசாரியராக உபதேசித்து பணி கொண்டருளும் "இவ்வாதீனதின் 23-ஆவது குரு மகாசன்னிதானம் **சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்களின் திருவடிகளையும், தட்சிணாமூர்த்தி ரூபமாக குருமூர்த்தத்தில் விளங்கியருளும் அருள்திரு நமசிவாயமூர்த்திகள் திருவடிகளையும் என்றும் மனம் மொழி, மெய்யினால் சிந்தித்து வந்தித்து போற்றுவதைத் தவிர வேறு ஒன்றும் அறியேன். சுபம்.

வளர்க துறைசை யாதீனம் !

மகா தட்சிணாமூர்த்தி திருவடிகளே சரணம் !!

குரு மூர்த்திகளின் திருவடிகளே சரணம் !!!

இங்ஙனம்,
நூல்தொகுப்பாசிரியர் மற்றும் வடிவமைப்பு
''ஆகமசிற்பக் களஞ்சியக் கலைமணி''
எஸ்.நாராயணசுவாமி
ஆராய்ச்சியாளர்,
திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால்
நூல் நிலையம் மற்றும் ஆய்வு மையம்,
திருவாவடுதுறை - 609 803.

நாள் : 01.09.2005
வீடு:
''மகா சிவசக்தி இல்லம்''
பிளாட் நெ. 37
மகாலிங்கம் நகர்,
(கீழவீதி எதிரில்)
திருவிடைமருதூர் - 612 104.
போன். 95435-2461653

உ

Sivamayam

INTRODUCTION

The traditional convention of Thiruvavaduthurai Adheenam, is to nature Siddhanta Saivism by contribution to the development of Tamil in particular Saivite literature. Siddhar Sivaprakasar one among the "Navakoti Nadha Chief" disciple Sri. Namasivaya moorthigal is the founder of Thiruvavaduthurai Adheenam. His successor pontiffs vied with one another in nurturing and propagating Siddhanta Saivism acclaimed by Agamas and Vedas.

SIVA MOORTHAS

The Siva worship is universal. The Lord Siva means allround welfare. The Vedas, the Puranas, the Agamas, the Thirumurai all these extol Lord Siva in many ways.

A treatise called " Sivaparakramam" describes more or less 64 different forms of omnipresent Lord Siva. Out of these murthas, only one is taken to be very important. These 25 Siva murthas have orginated from the five faces of Lord Sadhasiva. Out of these - that which is personification of knowledge and wisdom is called Dakshinamurti. The Lord Dakshinamurti came out of one of the five faces of Sadasiva, called Agoramurthy.

This Dakshinamurti preceptor god, can be seen on the Southern ghosta nish (Maadam) of all Siva temples and also on the gopuras, Vimanas and prakaras in different aspects.

THREE FORMS OF SIVA

Lord Siva was worshipped by saivates from time immemorial. For the common man, the nameless, formless god was presented with names and forms, so that he can easily comprihend the almighty and attain salvation. This idol worship dates back to Indus valley civilization. The forms given were of three types. 1) Veeka vadivu, 2) Bogha vadivu, 3) Yoga vadivu, Kamari, Kalari, Kangalar and Veerabhadrar are Veeka vadivu.

Umamaheswarar and chandrasekarar are Bogha Vadivu.

Dakshinamurti and Sukasanamurti are Yoga Vadivu.

Dakshinamurti is called as "Aal Amar Selvan". He is also known as "Guru murti". Almost in all Siva temples we can see him in the inner praharam (Koshtam) facing south. His diciples Sanakathis, from whom in succession this famous Thiruvavaduthurai Adheenam came into, existance to teach and practice siddhanta are seated on the floor while the Lord - the Guru is seated on a raised platform under the sacred Kal Aal Tree. There are many different forms of Dakshinamurti, Viz. Gnana Dakshinamurti, Veena Dakshinamurti, Sakthi Dakshinamurti, Yoga Dakshinamurti etc.

THIS VALUME CONTAINS EXHAUSTIVE AND RITUALISTIC ON THE FOLLOWING ASPECTS.

1) The worship of Dakshinamurti in ancient days.

2) Hasta lakshnam, Greeda lakshnam, Asana lakshnam and some mudras in Silpa sastras.

3) The importance of the Dakshinamurti in Puranas, Agamas, Poojas, and silpa Sastras.

4) The Various forms of Lord Dakshinamurti in Saiva Temples.

5) Dakshinamurti Pratimalakshnam'

6) Dakshinamurti Iconography

7) The Devine forms of Dakshinamurti in museum and Art gallery.

8) Dakshinamurti in epigraphy.

9) Dakshinamurti stotrams, Navaratna malas, Astagam, Astotharam, Trisati, Sakasranamam, Thirumurai hymns and Thala puranas Poems.

10) Worship of Dakshinamurti (Guru) and Sakala dosha parikaram in Astrology. and so on.

PERSONS WHO HELPED FOR THIS BOOK

1) Adheenam Mummozhi Pulavar Kanchipuram Siva Sri. C.S.Sadasivam, 2) Kanchipuram Sri.S.M.Ghanapathi Stapati, 3) Mahabalipuram - Kalaichemmal Thiru.K.Thirugnanam and the publications and manuscripts available in Saraswathi Mahal Library were of great use in the preparation of this encyclopaedia of Maha Dakshinamurti.

I can only pray that the grace of 23rd Guru Maha Sannidhanam and Sri Namasivaya moorthigal should be my constant guardian and besto wall benevolence on all mentioned above.


The Encyclopaedia of Maha Dakshinamurti in Puranas, Agamas, Poojas and Silpa Sastras is being released on the Mayladuthurai Sri. Mayuranathar Temple Maha Kumbabishekam day (14.9.2005- Wednes day) by His Holiness 23rd Guru Mahasannithanam Seer-Valar-Seer. SIVAPRAKASA DESIKA PARAMACHARYA SWAMIGAL.

Once again being my boundless duty, I submit my most humble obeisances to my Deeksha Gnana Gurumoorthigal the 23rd Guru Maha Sannidhanam for the extreme kindness showered on me.

Suggestions for improvement of this volume from luminaries in the various faculties are always welcome.

Ever at the service of the Guru Mahasannidhanam
S.Narayanaswamy
Researcher,
Thiruvavaduthurai Adheenam
Saraswathi Mahal Library and Research Centre,
Thiruvavaduthurai - 609 803.

Resi:
"Maha Siva Sakthi Illam"
Mahalingam Nagar
Plot No.37,
Thiruvidaimarudur - 612 104.
☎ : 95435 - 2461653



சனாதியர்க்கு வியாக்யான தட்சிணாமூர்த்தியாக அருள்பவர்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மகா தட்சிணாமூர்த்தி

(Encyclopaedia of Maha Dakshinamurti in Puranas - Agamas - Poojas and Silpa Sastras)

சைவ சமயத்தின் தொன்மையும் தட்சிணாமூர்த்தி வழிபாடும்



உலகில் பல சமயங்கள் நிலவுகின்றன. இச்சமயங்களை இன்னார் இன்ன காலத்தில் தோற்றுவித்தார் என்று கூறிவிட முடியும். பௌத்த சமயம் புத்தராலும் சமணசமயம் ஜீனர் என்ற வர்த்தமானராலும் கிறித்தவம் ஏசுநாதராலும் தோற்றுவிக்கப்பட்டன என்பதைப் பெயர் அமைந்த முறையால் தரிந்துள்ளலாம். சைவமும் வைணவமும் அச்சமயக் கடவுளராகிய சிவன், விஷ்ணு என்னும்பெயர்களால் குறிக்கப் படுகின்றன. எனவே இவற்றைத் தோற்றுவித்தவர் என ஒருவரில்லை என்பது வெளியாகிறது. சைவம், வைணவம் என்பவற்றில் சைவத்தின் தொன்மை அளவிடற் கரியது.

சங்க காலம்:

மூன்று சங்க காலங்களில் கடைச்சங்க கால நூல்களே நமக்குக் கிடைத்துள்ளன. இதன் காலம் கி.மு.100 முதல் கி.பி.200 வரையாகும். இக்கால நூல்களில் சிவன், திருமால், பலதேவன், முருகன், இந்திரன், கொற்றவை முதலாகப் பல தெய்வங்கள் குறிக்கப்பெறுகின்றனர். இத்தெய்வங்களை ஒரு சேரக் குறிக்க நேர்ந்த இடத்தில், ''பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்'' என்று சிவனுடைய பெயரே முதலில் குறிக்கப்படுவதாலும், சிவனைப் பெரியோன் என்று சுட்டுவதாலும் சைவசமயம் தலையாய சமயமாக இருந்தது என்பது புலனாகும், மற்றும் சிவபெருமான் முக்கண்ணன், மணிமிடற்றோன். கணிச்சியோன் என்று அடையாளமும், திரிபுரம் எரித்தான் (திரிபுராந்தகர்), ஆலின்கீழ் அமர்ந்தான் (தட்சிணாமூர்த்தி) காரி உண்டிக்கடவுள் எனப் புராணவரலாறும் கூறப்படுகின்றன. இதனால் சங்க காலத்தில் சைவசமயம் நிலவியதென்பது தெற்றனப் புலப்படும்.

தொல்காப்பியர் காலம்:

தொல்காப்பியர் கி.மு.400-ஐ ஒட்டி வாழ்ந்தவர். இவர் செய்த தொல்காப்பியத்தில் மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை என்ற தெய்வப் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. சிவன் என்ற பெயர் காணப்படவில்லை என்றாலும் கொடிநிலை கந்தழி வள்ளி என்ற தொடர் தொல்காப்பியத்தில் உள்ளது. இத்தொடரில் குறிக்கப்பட்ட கந்தழி என்பது சிவலிங்கத் திருமேனியைக் குறிப்பதாகும். இதனால் தொல்காப்பியர் காலத்திலும் சைவ சமயம் இருந்தது என்பது உணரப்படுகிறது.

இதிகாச காலம்:

வால்மீகி இராமாயணமும் வியாசபாரதமும் இதிகாசங்கள் எனப்படும். இவை கி.மு.1400க்கும் 1000க்கும் இடைப்பட்ட காலத்தில் செய்யப்பட்டன என ஆய்வாளர்கள் கூறுவர். இராவணனைக்

கொன்ற பாவத்தைப் போக்கிக் கொள்வதற்காக இராமன் சிவலிங்கத்தை வைத்து வழிபட்டான் என்று வால்மீகி ராமாயணம் கூறுகிறது. அருச்சுனன் கண்ணனின் துணையோடு கைலைக்குச் சென்று சிவபெருமானிடம் பாசுபதம் பெற்று வந்தான் என்று வியாச பாரதம் கூறுகிறது. எனவே இந்நூல் எழுந்த காலத்திலும் அதற்கு முன்பும் சைவ சமயம் நிலவியது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

வேதகாலம்:

சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன் ஆரியர்கள் வட இந்தியாவில் குடியேறினர். அங்ஙனம் குடியேறிய பின் தாம் வழிபட்ட தெய்வங்களின்மீது துதிகளையும், மந்திரங்களையும் இயற்றினர். இவைகள் திரட்டப்பட்டு இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு வேதங்களாகத் தொகுக்கப்பட்டன. இவற்றில் யசுர் வேதத்தில் 'நமசிவாய' என்றும், 'சிவதராய' என்றும் சிவன் என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

"नमः शिवाय च शिवतराय च
நம: சிவாய ச சிவதராய ச" (ஸ்ரீ ருத்ரம் 8-1)

எனவே வேத காலத்தில் சைவ சமயம் நிலவியது என்பது தெரியவருகிறது.

சிந்துவெளிக்காலம்:


சுமார் 6000 ஆண்டுகளுக்குமுன் அதாவது ஆரியர் இந்தியாவில் குடியேறுவதற்கு முன்பே சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் சிறந்த நாகரிகம் உடையவர்களாய் சைவசமயச் சார்புடையவர்களாய் வாழ்ந்தனர். ஆரியரின் தாக்குதலாலும் சிந்து நதியின் வெள்ளப் பெருக்காலும் சிந்துவெளி நகரங்கள் அழிந்து மண்ணில் புதையுண்டு போயின. இவ்விடங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பெற்றதால் அதன் பயனாக ஏராளமான புதைபொருள்கள் கிடைத்துள்ளன. அப்படிக் கிடைத்தவற்றில் 600க்கும் மேற்பட்ட சிவலிங்கத் திருமேனிகளும், பெண்தெய்வச் சிலைகளும், முத்திரைகளில் உள்ள யோகநிலைச்சிவன், நந்தி சூலம் முதலியனவும் குறிப்பிடத்தக்கனவாகும். இதனால் 6000 ஆண்டுகளுக்கு முன்பே சைவ சமயம் நிலவியது என்பதை அறியமுடிகிறது.

தொடக்க காலத்தில் மக்கள் ஞாயிறு, திங்கள், மரம் போன்ற இயற்கைகளைத் தெய்வமாக வழிபட்டனர். அவ்வாறு வணங்கப்பட்ட மரங்கள் முதிர்ந்து பட்டுப்போய் கிளைகள் எல்லாம் நீங்கி அடிமரம் மட்டும் எஞ்சி நின்றபோதும் தெய்வமாகவே எண்ணி வழிபட்டனர். இத்தகைய அடிமரம் கந்தழி எனப்பட்டது. இங்ஙனமே மரத்தூணை நட்டு கந்தழி என்று வழிபட்டனர்.


இத்திருவுருவமே சிவலிங்கத் திருமேனியின் தோற்றத்துக்கு அடிப்படையாகும். மேலும் மாலை நேரத்தில் மலைச்சிகரத்தினின்று அருவி வழிந்தோட அதன் பின்னே செவ்வானம் மிளிர அதனிடை நின்ற பிறையைக் கண்டு தொழுதனர். இவ்வியற்கைக் காட்சிக்கு ஒரு உருவம் கொடுத்து மலைச்சிகரத்தைச் சிவனுடைய தலையாகவும், அருவியைத் தலைமேல் உள்ள கங்கையாகவும், செவ்வானப் பரப்பை அவிர்சடையாகவும், பிறையைச் சடைமேல் வைத்த பிறையாகவும் கொண்டு சிவனுக்கு வடிவம் காட்டினர். இவ்வாறு இயற்கைத் தோற்றத்திலிருந்துதான் சிவனது வடிவம் தோன்றியது என்ற கருத்தும் நிலவுகிறது.

சிந்துவெளி அகழ்வாராய்ச்சியால் அறியப்படும் செய்திகள்:

சிந்து நதி பாயும் நிலப்பரப்பு சிந்துவெளி எனப்படும். அதாவது சிந்து பலுஜிஸ்தானம், பஞ்சாப், இராஜபுதனம், சௌராட்டிரம் என்ற பகுதிகள் சிந்து வெளி எனப்படும். இப்பகுதிகள் இருக்கு வேதத்திலும் இதிகாசங்களிலும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இப்பகுதியில் இருந்த பழைய மாநகரங்கள் சிந்து வெள்ளத்தால் அழிந்து மண்ணில் புதையுண்டு போயின. இப்பகுதியில் உள்ள பல மண்மேடுகள்



கயிலாயத்தில் சிவபெருமான், தட்சிணாமூர்த்தியாக காட்சி தந்து விநாயகர், முருகன், உமா, நந்தி, தேவர்கள் மற்றும் பூதகணங்களுக்கு உபதேசம் செய்வது.



சனகாதி முனிவர்களுக்கு உபதேசித்த நிலையில் வியாக்யான தட்சிணாமூர்த்தி

அகழப்பட்டு ஆராயப்பட்டன. சிந்துவில் உள்ள மொகஞ்சதாரோவிலும், பஞ்சாபில் உள்ள ஹரப்பாவிலும் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியால் பல உண்மைகள் வெளியாயின.

அகழ்வாராய்ச்சியால் கிடைத்த பொருள்கள்:

சிந்து வெளியினை அகழ்ந்தபோது பல கட்டடங்களின் சிதைவுகளும் அவற்றின் நடுவே அகன்று நீண்ட தெருக்களும் ஒவ்வொரு வீட்டிலும் கிணறுகளும், ஊரின் தொடக்கத்தில் நீராடுகுளமும் அதன் பாய்காலும் வடிகாலும் தெரியவந்தன. மேலும் பானை ஓடுகள், பாத்திரங்கள், கருவிகள், சிவலிங்க உருவங்கள், பெண்தெய்வ வடிவங்கள், நடனமாதின் வெண்கலச்சிலை. மரத்தாலும் களிமண்ணினாலும் ஆன முத்திரைகள், (முத்திரைகளில் தெய்வ உருவங்கள்), மனித உருவங்கள், தாயத்துக்கள், நந்தி உருவங்கள் முதலியன கிடைத்துள்ளன. முத்திரைகளில் மனிதன், விலங்கு, பறவை, மரம் முதலிய உருவங்களும் காணப்படுகின்றன.

காலம்:

சிந்து வெளியில் புதையுண்ட இடத்தின் மண்படிவங்கள், கிடைத்த பொருள்களின் தன்மை, எழுத்துக்கள் ஆகியவற்றைக் கொண்டு சிந்து வெளிநாகரிகத்தின் காலம் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். இங்குக் கிடைத்துள்ள பொருள்கள் கல், மரம், செம்பு, வெண்கலம் ஆகியவற்றால் செய்யப்பட்டனவாக இருப்பதால் இந்த நாகரிகம் உலோக காலத்தைச் சார்ந்தது என்று முடிவு செய்துள்ளனர்.

சைவ சமயத் தொடர்பு:

இங்கு கிடைத்துள்ள பொருள்களில் சிவலிங்க உருக்கள், பெண் தெய்வச்சிலைகள், நந்தி, சூலம், தாயத்துக்கள், முத்திரைகள் முதலியன குறிப்பிடத்தக்கவையாகும். தாயத்துக்களில் சிவலிங்கவடிவமும், முத்திரைகளில் யோகநிலைச் சிவனும், எழுத்துக்களில் சிவன் பெயரும் காணப்படுகின்றன. எனவே இங்கு வாழ்ந்த மக்கள் சிவவழிபாட்டினர் என்று தெரியவருகிறது.

சிவலிங்கங்கள்:

மாக்கல்லாலும் மரத்தாலும் செய்யப்பட்ட சிவலிங்கங்கள் 600க்கு மேல் இங்குக் கிடைத்துள்ளன. இச்சிவலிங்கங்களில் சில பீடமில்லாமலும், பல பீடமுடையனவாகவும் இருக்கின்றன. சரியை, கிரியை, யோக, ஞானமாகிய நான்கு நெறிகளில், சிவலிங்கம் கிரியை நெறிக்கு உரியதாகும். எனவே இங்கு வாழ்ந்தவர்கள் கிரியை நெறியால் சிவலிங்கத்தை வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. மற்றும் இங்கு கிடைத்துள்ள தாயத்துக்களில் சிவலிங்கவடிவம் காணப்படுகிறது. இதனால் இந்த தாயத்துக்களை அவர்கள் அணிந்து கொண்டார்கள் என்றும், இத்தாயத்துக்களை அணிந்தால் நோயும் பேயும் தம்மை அணுகா என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்றும் உய்த்துணர வேண்டியிருக்கிறது.

யோகநிலை சிவன்:

மொகஞ்சதரோவில் சுண்ணாம்புக் கல்லால் ஆன யோகியின் சிலை ஒன்று கிடைத்துள்ளது. இவருடைய தலைமயிர் நன்றாகச் சீவப்பட்டு அணிகள் செருகப்பட்டுக் காணப்படுகிறது. முகத்தில் மீசையில்லை ஆனால் தாடிமட்டும் இருக்கிறது. உடம்பில் சித்திர வேலைப்பாடு கொண்ட போர்வை போர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் இச்சிலை அக்காலத்திய துறவியையோ அல்லது யோகநிலை சிவனையோ குறிப்பதாகக் கொள்ளலாம். மேலும் சிந்துவெளியில் மரத்தாலும் களிமண்ணாலும் செய்யப்பட்ட முத்திரைகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

இவைகளை சர் ஜான் மார்ஷல், மக்கே, வாட்ஸ் முதலிய அறிஞர்கள் ஆராய்ந்து பல கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். எண் 420 வது முத்திரையில் சிவன் பீடத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறார்.

கௌபீனம் மட்டும் அணிந்துள்ளார். ஆடை வேறு எதுவும் அணியவில்லை. மூன்று முகங்கள் இருக்கின்றன. இவருக்கு இடப்புறத்தில் யானை, புலி என்பனவும், வலப்புறத்தில் காண்டாமிருகம், எருமை என்பனவும், பீடத்தின் கீழ் இரண்டு மான்களும் காணப்படுகின்றன. எண் 235-வது முத்திரையில் சிவன் நிலத்தில் வீற்றிருக்கிறார். கீழே பீடம் இல்லை. தலையில் இரண்டு கொம்புகள் உள்ளன. கொம்புகளுக்கு நடுவே பூங்கொத்து ஒன்று காணப்படுகிறது. தலைமயிர் பின்னால் தொங்குகிறது.

''எண் 22-வது முத்திரையில் சிவன் பீடம் ஒன்றின்மேல் அட்டணக் காலிட்டு உட்கார்ந்து இருக்கிறார். மூன்று முகங்கள் உள்ளன. தலைக்கு மேல் இலைகளுடன் கூடிய ஆலமரத்தின் கொம்புகள் (கிளைகள்) உள்ளன. மற்றொரு முத்திரையில் சிவன், பீடம் ஒன்றின் மேல் அட்டணக்காலிட்டு உட்கார்ந்திருக்கிறார். இரண்டு கைகளையும் நீட்டி முழங்காலின் மேல் வைத்திருக்கிறார். கைகளில் வளையல் போல பல வளையங்கள் உள்ளன. பக்கத்தில் சூலம், இடபம் என்பன உள்ளன. மற்றொரு முத்திரையில் சிவன் தமது கண்களால் தமது மூக்கு நுனியைப் பார்ப்பது போல் இருக்கிறது (இத்தகைய உருவம் சோழர்கால சிற்பங்களில் உள்ளன. இங்குக் கூறியவாறு யோகநிலைச் சிவனைப் பிற்பகுதியில் காணலாம்). இவை யாவற்றையும் ஒரு சேரவைத்து ஆராயும் போது, ஆலமரத்தின் கீழிருந்து சடையைத் தொங்கவிட்டு யோக நிலையில் இருக்கும் தட்சிணாமூர்த்தியின் உருவமே அவைகள் என்று உய்த்துணர்ந்து கொள்ளலாம். மேலும் சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் யோக நெறியை அறிந்தவர்கள் என்றும், சிவலிங்கத்தோடு தட்சிணாமூர்த்தியையும் வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்றும் துணியலாம்.

எழுத்துக்கள்:

சிந்து வெளியில் கிடைத்துள்ள முத்திரைகளில் எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவைகள் ஆப்பிரிக்கா, அரேபியா முதலிய இடங்களில் கிடைத்துள்ள பழங்கால எழுத்துக்களை ஒத்திருக்கின்றன. எனவே எழுத்தமைதியைக் கொண்டு சிந்துவெளி நாகரிகத்தின் காலம் சுமார் 6000 ஆண்டுக்கு முற்பட்டது என முடிவு செய்யலாம். இவைகளைப் படித்தறிவது கடினமாக இருக்கிறது. பெரும்பாலான எழுத்துக்கள் இன்னும் படித்தறியப்படவில்லை. ஒரு சிலவற்றை மட்டும் ஹீராஸ் பாதிரியார் படித்துள்ளார். அவர் படித்தறிந்தவற்றில் எண்மை என்ற சொல் சிவபெருமானது எட்டு வடிவங்கள் அல்லது எட்டுக்குணங்களைக் குறிக்கக் கூடும். தாண்டவன் என்ற சொல் நடனமாடும் சிவனைக் குறிக்கக் கூடும்; விடுகண் என்ற சொல் தீயைவிடும் நெற்றிக்கண்ணைக் குறிக்கக் கூடும். மற்ற எழுத்துக்களையும் படித்தறியும் போது இங்கு வாழ்ந்த மக்களின் சைவ சமய நிலை நன்கு விளக்கமுறலாம்.

நந்தி:

சிந்து வெளியில் நந்தி, பெண்தெய்வங்கள், பாம்புகள் முதலியவற்றின் உருவச் சிலைகள் கிடைத்துள்ளன. முத்திரைகளில் நந்தி, சூலம், அரசமரம், வேப்பமரம் முதலிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவைகளில் நந்தி சிவனது வாகனமாகும். சூலம் சிவனது ஆயுதமாகும். எனவே இவைகள் அக்கால மக்களின் சைவ சமய ஈடுபாட்டை உணர்த்தும் சான்றுகளாக உள்ளன.

வழிபாடு:

முத்திரையில் உள்ள யோகநிலைச் சிவனுடைய தலையில் இரு கொம்புகளும் அவற்றுக்கு நடுவே ஒரு பூங்கொத்தும் காணப்படுகின்றன. இப்பூங்கொத்து, இறைவனுக்குப் பூச்சூட்டி வழிபட்டு வந்ததைக் காட்டுகிறது. இங்குக் கிடைத்த வெண்கலத் தட்டுகளில் ஒன்றில் நந்தி ஒன்றை ஊர்வலமாக எடுத்துச் செல்வதைக்காட்டும் காட்சி வரையப்பட்டிருக்கிறது. இதனால் அக்காலத்தில் திருவிழாக்கள் நடத்தியுள்ளனர் என்பதும் விழாக்காலத்தில் இறை உருவங்களை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர் என்பதும் தெரிய வருகிறது.

மற்றொரு தட்டில் ஒரு பெண் தெய்வத்தின் முன் சில பெண்கள் நிற்பது போலவும் அப்பெண்கள் உணவுப் பண்டங்களை ஏந்திக் கொண்டிருப்பது போலவும் ஒரு காட்சி வரையப்பட்டிருக்கிறது. இதனால் தெய்வங்களுக்கு நேர்த்திக் கடன் கொடுத்தனர் அல்லது உணவுப் பொருள்களை நிவேதனம் செய்து வழிபட்டனர் என்பது தெரியவருகிறது.

இதுகாறும் கூறப்பட்டவற்றால் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்பே சைவசமயம் வழக்கத்தில் இருந்தது என்பதும், சிவனை இலிங்க வடிவாகவும், தட்சிணாமூர்த்தி வடிவாகவும் வைத்து வழிபட்டனர் என்பதும், இறைவனுக்கு மூன்று முகங்கள், முக்கண்கள், சூலம், நந்தி வாகனம், சடை என்பவற்றை அடையாளமாகக் குறித்திருந்தனர் என்பதும் இறைவனுக்குப் பூச்சூட்டி உணவுப் பண்டங்களைப் படைத்து வழிபட்டதோடு திருவிழாவும் ஊர்வலங்களும் நடத்தினர் என்பதும், சிவனுடைய உருவைப் பொறித்த தாயத்துக்களை கழுத்திலோ கையிலோ அணிந்து வந்தனர் என்பதும் புலப்படுகின்றன. மேலும் இச்சமய வாழ்வு ஆரியர் கலப்பற்றது என்பதும் தெளிவாகிறது.

உலகில் சிவன்கோயில்கள்:

பாரததேசத்தில் மட்டுமின்றி சிவன் கோயில்கள் உலகெங்கும் உள்ளன. உலகின் பல்வேறு இடங்களில் சிவலிங்கங்கள் காணப்படுகின்றன.

ஜாவாத் தீவில் பல சிவன் கோயில்கள் அழிவுற்ற நிலையில் உள்ளன. இங்குள்ள டெகால் என்ற ஆற்றிலிருந்து சிவபெருமானின் செப்புச்சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. ஜாவாவில் கபால கணபதி, துர்க்கை சிலைகள் கிடைத்துள்ளன.

ஜாவாவில் உள்ள கோயில்களில் இன்றும் திருவாசகம் ஓதப்படுகிறது. அங்கிருப்பவர்க்குத் தமிழ்மொழி தெரியாத படியால் ஏதோ மந்திரம்போல உச்சரித்து வருகிறார்கள். மேலும் ஜாவாவில் உள்ள பெரம்பானம் என்ற இடத்தில் உள்ள சிவன்கோயிலில் சிவதாண்டவத்தின் 32 முத்திரைகளைக் குறிக்கும் சிற்பங்கள் உள்ளன.

சுமத்திராவில் அழிபாடுற்ற சிவன்கோயில் உள்ளது. இங்கே அர்த்தநாரிவடிவம், கணபதி சிலை, நந்திசிலை உள்ளன.

போர்ணியோவில் ஒரு மலைக்குகையில் சிவன், விநாயகர் சிலைகள் உள்ளன.

சியாம் நாட்டிலும் கம்போடியாவிலும் சிவலிங்கத்தின் உருவங்கள் கிடைத்துள்ளன. சியாமில் பழைய சிவன் கோயில் இருக்கிறது. இக்கோயிலுள்ள இடத்தில் இப்போதும் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

பாபிலோனியாவில் அகழ்வாராய்ச்சியால் 6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவலிங்கங்களும் சிவாலயத்தின் வழிபாடுகளும் கிடைத்துள்ளன. இங்குக் கண்டெடுக்கப்பட்ட களிமண் ஏட்டில் சிவன் என்ற பெயர் காணப்படுகிறது. பாபிலோனியர் தம் கடவுளுக்கு இட்டு வழங்கும் பெயர்களில் எல்சடை என்று ஒரு பெயர் காணப்படுகிறது. இச்சொல் சூரியனைப் போன்ற சிவந்த சடையுடையவன் என்று பொருள் தருவதாக இருக்கலாம். இங்கு கிடைத்த சிவபெருமான் சிலை ஆனேற்றின் மீது நிற்பதாகவும், கையில் மழுவும் இருபுறமும் முத்தலையுடைய சூலமும் ஏந்தியதாகவும் காட்சியளிக்கிறது. பாபிலோனியரின் மாதப் பெயர்களில் ஒன்று சிவன் பெயர் கொண்டிருக்கிறது.

சிரியா நாட்டில் சிவன் சிலையும், சிவன் உருவம் பொறித்த வெண்கலத்தட்டும் கிடைத்துள்ளன. இத்தட்டில் உள்ள உருவம் தந்தை கடவுளின் வடிவம் என்று கூறுகின்றனர். இவ்வுருவம் வலக்கையில் மழுவும் இடக்கையில் ஆறுமுனையுள்ள இடியேறும் தாங்கி இடபத்தின் மேல் நிற்பதாகப் பொறிக்கப் பட்டிருக்கிறது.

எகிப்தில் உள்ள பாலைவனம் ஒன்றுக்கு சிவன் என்ற பெயர் வழங்கி வருகிறது. இங்கு வாழும்

மக்கள் அமன்யூ என்ற கடவுளை வணங்கி வழிபடுகின்றனர். அக்கடவுளுக்கு இடபம் வாகனமாக இருக்கிறது.

கிரேக்க நாட்டில் சிவலிங்கங்களை பொது இடங்களில் எண்ணெயில் நீராட்டி வழிபட்டனர் என்று ஒரு கிரேக்க அறிஞர் எழுதி உள்ளார்.

அமெரிக்காவில் முதன் முதலாக ஐரோப்பியர் குடியேறிய போது அங்கு வாழ்ந்த பழங்குடியினர் சிவலிங்கங்களை வைத்து வழிபட்டதாக எழுதி வைத்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள கொலறடோ என்ற ஆற்றின் கரையில் மிக உயரமானதும் தட்டையானதும் ஆன ஒரு குன்று உள்ளது. இக்குன்றின் மேல் 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய சிவன் கோயில் ஒன்று இருக்கிறது.

மேற்கூறப்பட்ட சான்றுகளினால் உலகின் பல்வேறு இடங்களிலும் சிவன் கோயில்களும், சிவ வழிபாடும், சிவனின் பல்வேறு நிலையில் அமைந்த உருவங்களும், விழாக்களும் நடந்து வந்தமையினை அறிகிறோம். சிவலிங்கத்தினை வழிபட்ட மக்கள் சிவபெருமானுக்குச் சிறப்புடைய திருமேனியாகத் தட்சிணாமூர்த்தி திருவுருவத்தினையும் அமைத்து வழிபட்டனர் என்பதை தொல்பொருள் ஆய்வு மூலம் அறிகிறோம்.

சிவபெருமானின் 25 சிவமூர்த்தங்களில் சிறப்புடையதாகக் கூறப்படுவது தட்சிணாமூர்த்தி திருவுருவமாகும். சிவமூர்த்த சிறப்பினைக் கூறவந்த ஆகமங்களும், புராணங்களும், சிற்ப நூல்களும் பல்வேறு உருவ பேதங்களை எடுத்து இயம்புகின்றன. அத்தகைய உருவ பேதங்கள் இன்றும் நம் திருக்கோயில்களில் காட்சி தருகின்றன.

அத்தகைய திருவுருவங்களின் பல்வகைச் சிறப்புக்களை அடியார்கள் போற்றி வழிபடும்போது திருமுடித்தாமரை, திருமுகத்தாமரை, திருவுளத் தாமரை, திருக்கரத்தாமரை, திருவடித்தாமரை என உருவகிக்கின்றார்கள். இத்தகைய திருக்கரங்கள், அக்கரங்களில் ஏந்திய ஆயுதங்கள், அக்கரங்களால் உணர்த்தப்படும் முத்திரைகள்; திருமுடியை அலங்கரிக்கும் மகுடங்கள், ஆசனங்கள் ஆகியவற்றைப் பற்றிய விரிவான விளக்கங்களை முதலில் அறிந்துகொண்டு பின்னர் சிவ மூர்த்தங்களின் சிறப்புடைய தட்சிணாமூர்த்தியின் பல்வேறு உருவ அமைப்பின் பேதங்களைக் காண்பது பயனுடையதாகும்.

திருக்கயிலையில்:

திருக்கயிலாய மலையில் அழகாக அலங்கரிக்கப்பட்ட மணி மண்டபத்தின் நடுவில் எழிலுடன் விளங்கும் அரியணையில் சிவபெருமான் எழுந்தருளி இருக்கின்றார். சிவபிரானைக் கண்டு தரிசிக்கும் பொருட்டு பிரமதேவனின் குமாரர்களாகிய சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் திருக்கயிலையை அடைந்தனர். திருக்கயிலையில் ஒருசார் அழகுற அமைக்கப்பட்ட பர்ணசாலையில் உமாதேவி, தனிமையில் தவமியற்றுகின்றாள். அங்கு வந்த பிரமகுமாரர்கள் உமாதேவியை வணங்கிவிட்டு, பரமன் விளங்கும் பதியினை அடைந்து, நந்தியெம்பெருமானின் அனுமதி பெற்று சிவபிரான் திருமுன்பு சென்று ஆனந்தக் கண்ணீர் வார, அப்பெருமானின் திருவடிகளைப் பன்முறை வணங்கி, எழுந்து நின்று தொழுத வண்ணம், ''சிவபரம் பொருளே! வேதாகம புராணங்களை விதிப்படிக் கற்றும், எங்கள் மனம் தெளிவடையவில்லை. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மல இருள் எங்களை விட்டு அகலவில்லை. ஆகையால் ஜகத் குருவாக விளங்கியருளும் தாங்கள் எங்களுக்கு உண்மைப் பொருளை உபதேசித்து அருள் புரிய வேண்டும்'' என்று வேண்டினர். சிவபெருமான் அவ்வேண்டுகோளுக்கு இரங்கி அவர்களை அமரச் செய்து அவர்களுக்கு உபதேசிக்கும் பொருட்டு குருவடிவம் தாங்கியருளிய காட்சியே தட்சிணாமூர்த்தி திருவுருவாகும்.

மூவகை வடிவங்கள்:

சிவபிரானுடைய திருவுருவங்கள் போகவடிவம், யோக வடிவம், வேக வடிவம் என

மூவகைப்படுத்திக் கூறுவர் சான்றோர் பெருமான் தான் யோகியாக இருந்து காட்சி தந்து உயிர்களுக்குப் போகத்தை வழங்கி அருளுகின்றார். யோகியாக அமர்ந்து காட்சி தந்து உயிர்களுக்கு யோகத்தின் தன்மைகளை யெல்லாம் உணர்த்தி அந்த யோகத்தால் உண்டாகும் முக்தி இன்பத்தைக் கொடுத்தருளுகின்றார். வேக உருவத்துடன் காட்சி தந்து உயிர்களின் வினைகளை எல்லாம் அழித்து அருள்பாலிக்கின்றார்.

மேற்கூறிய மூவகை வடிவங்களுள் யோக வடிவம் தாங்கி ஆன்மாக்களுக்கு யோகத்தையும், அந்த யோகம் புரிவதற்குரிய ஞானத்தையும் வழங்கியருளும் வடிவம் தான் தென்முகக் கடவுளாகிய தட்சிணாமூர்த்தியின் திருவடிவமாகும்.

தட்சிணாமூர்த்தி என்பதற்கு, தெற்கு நோக்கிய தெய்வ வடிவம் எனப்பலரும் பொருள் கூறுவர். இங்கே தட்சிணம் என்பது தெற்கு என்னும் பொருளைத் தராது, ஞானம் என்ற பொருளையே தரும், ''த'' ''க்ஷி'' ''ணம்'' - இவை மூன்றுமே பீஜாட்சரங்களாகும். ஒவ்வோர் அட்சரத்திற்கும் விசேடமான பொருள் உண்டு.

ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிய அட்டாட்ட விக்கிரகலீலை என்னும் விருத்தப்பாவில் சிவபிரான் 64 திருவடிவங்களை மேற்கொண்டார் என்று கூறுவர். இவற்றுள் முக்கியமாக 25 வடிவங்களை மட்டும் சிறப்பாக எடுத்துக் கொண்டு போற்றுவர். மேற்கூறப்பட்ட மகேசனுடைய வடிவங்களுள் ஞானமயமாகவும் ஞானத்தை அருளும் ஜகத்குருநாதனாகவும் விளங்கும் திருவடிவமான தட்சிணாமூர்த்திப் பெருமானது வடிவமே மிகமிகச் சிறப்பாகப் போற்றித் துதிக்கப்பட்டு வரும் வடிவமாகும்.

திருக்கோயில்களில்:

திருக்கோயில்களில் - தேவ கோஷ்டத்தின் தென்புறத்திலும், இராஜகோபுரம், விமானம், மதிற்சுவர் முதலானவற்றிலும் தென்திசை நோக்கி பல்வேறு நிலைகளில் காணும் தட்சிணாமூர்த்திப் பெருமானின் திருவுருவங்களைக் கற்சிற்பங்களாகவும், சுதைச் சிற்பங்களாகவும், ஆகமங்களிலும் சிற்பநூல்களிலும் கூறியவாறு உற்சவமூர்த்தியாகவும் நம்முன்னோர்கள் நமக்கு வடிவமைத்துத் தந்துள்ளனர்.

மகேஸ்வர வடிவங்கள்:

சதாசிவமூர்த்திக்குத் திருமுகங்கள் ஐந்து என ஆகமங்களும் சிற்ப நூல்களும் கூறுகின்றன. அவைகள். 1.ஈசானம், 2.தத்புருஷம், 3.அகோரம், 4.வாமதேவம், 5.சத்யோஜாதம் என்பன ஆகும். 1. ஈசானமுகத்திலிருந்து - சோமாஸ்கந்தர், நடராஜர், ரிஷபாரூடர், கல்யாண சுந்தரர், சந்திரசேகர் திருவுருவங்களும், 2.தத்புருஷ முகத்திலிருந்து - பிட்சாடனர், காமாரி, காலாரி, சலந்தராரி, திரிபுராந்தகர் திருவுருவங்களும், 3. அகோர முகத்திலிருந்து - கஜசம்ஹாரர், வீரபத்திரர், தட்சிணாமூர்த்தி, கிராதமூர்த்தி, விஷாபஹரணர் திருவுருவங்களும், 4. வாமதேவமுகத்திலிருந்து - கங்காளர், சக்ரதானர், கஜாந்திகர், சண்டேச அனுக்கிரகர், ஏகபாதர் திருவுருவங்களும், 5. சத்யோஜாதமுகத்திலிருந்து - இலிங்கோத்பவர், சுகாசனர், உமாமகேசர், ஹரிஹரர், அர்த்தநாரி திருவுருவங்களும் தோன்றின. இத்திருவுருவமைதிகள் இன்றும் திருக்கோயில்களில் விளங்குகின்றன.

தட்சிணாமூர்த்தியின் பலவடிவங்கள்:

ஞான	தட்சிணாமூர்த்தி	நவாக்ஷரி	தட்சிணாமூர்த்தி
வியாக்யாந	,,	தாரக	,,
யோக	,,	கபில	,,
வீணாதர	,,	விபுல	,,

மேதா	,,	கிரிசர	,,
வரத	,,	சாஸ்த்ர	,,
யோகபட்டாபிராம	,,	அர்த்தநாரீஸ்வர	,,
சக்தி	,,	நிருத்ரரூப	,,
ஆஸிந	,,	வீர	,,
தர்ம வியாக்யாந	,,	ராஜ	,,
உத்குடிகாசன	,,	லக்ஷ்மீ	,,
சுகாசன	,,	கீர்த்தி	,,
அர்த்தநாரீஸ்வரவீணாதர	தட்சிணாமூர்த்தி	பிரம்மவித்யா	தட்சிணாமூர்த்தி
சாம்ப	,,	சுத்த	,,
ஹரிகுருசிவயோக	,,	திவ்ய	,,
ரிஷபாரூட	,,	வேத	,,
ரிஷபாரூடஞானயோக	,,	ருத்ர	,,
தீட்சாநுக்ரஹ	,,	விஷ்ணு	,,
வீராசன	,,	வீணாகான	,,
அமிர்தகலச	,,	ஸ்வதா	,,
பத்மாசன	,,	சம்ஹார	,,
அர்த்தபத்மாசனயோக	,,	வாகீஸ்வர	,,
ஊர்த்துவஜானுவீணாதர	,,	கேவலநிஷ்கள	,,
ரிஷபாரூடவீணாதர	,,	அஷ்டாதச	,,
ஜடாமண்டல	,,	செளபாக்ய	,,
ராஜலிங்காசனயோக	,,	ஞானருத்ரா	,,
ஜடாபார	,,	அகோர	,,
தியானஹஸ்த	,,	உக்ர	,,
சர்வக்ஞ	,,	கௌரிஆலிங்கன	,,
சித்தி	,,	பாசாங்குசவியாக்ஞான	,,
பாலா	,,	கைலாசவாசி	,,
போகா	,,	மேதாப்ரஞாப்ரதாயினி	,,
ஏகாக்ஷர	,,	அபஸ்மார நிவ்ருத்தக	,,
கீர்த்தி	,,	ஆஸிந	,,
வர	,,	கேய	,,

இன்னும் அநேக திருவுருவப் பேதங்கள் திருக்கோயில்களிலும், சகஸ்ர நாமங்களிலும் காணலாம்.

சிவபிரான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு தட்சிணாமூர்த்தி வடிவம் கொண்டு, கல்லால மர நிழலில் எழிலுடைய ஆசனத்தின் மீது வீராசனங் கொண்டு எழுந்தருளி விளங்கியிருத்தலை வேதங்களும், ஆகமங்களும், தேவாரப் பனுவல்களும் பல்வேறு வகையாக விளக்கிக் கூறுகின்றன. தலபுராணங்களின் துதிப்பாக்களில் அந்தந்தத் தலத்தில் விளங்கும் தட்சிணாமூர்த்திப் பெருமானின் திருவுருவ அமைதி தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது.

சித்ரம் வடதரோர் மூலே விருத்தா சிஷ்யா குருர்யுவா ।
குரோஸ்து மௌனம் வியாக்யானம் சிஷ்யாது சின்னஸம் சய ॥

''கல்லால மரநிழலில் வீற்றிருக்கும் குருநாதர் மிகவும் இளையவராகக் காணப்படுகிறார். சிஷ்யர்களோ மிகவும் வயது முதிர்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். குருவானவர் யாதொரு

வார்த்தையும் பேசாமல் வாய்மூடி மௌனியாக, சின்முத்திரையால் விளக்கம் தருகின்றார்'' என்று மேற்கண்ட வடமொழி சுலோகம் குருவின் தோற்றத்தை விளக்குகின்றது.

நல்ல குருநாதர்:

வாய்மொழிகளால் கற்பிக்கும் ஆசாரியனைவிட, ஒப்புயவர்வற்ற தன் தூய இனிய வாழ்வின் சிறப்பினால் மாணவர்களுக்கு உள்ளொளி பெருகச் செய்யும் திறம் உடையவனே, மிகவும் சிறந்த நல்ல பேராசிரியன் ஆவான். அதனாலேயே திருப்புகழில் ''ஊமைத்தேவர்'' என்று போற்றப்படுகிறார். பரஞ்சோதி முனிவர் கூறுகையில் ''பூரணமாய் மறைக்கப்பாலாய். எல்லாமாய் அல்லதுமாய், இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி'', என்று போற்றித் துதிக்கின்றார்.

சுந்தரர் காட்டும் திருக்கோலம்:

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநின்றியூர்த் தேவாரத்தில் தென்முகக் கடவுளின் திருக்கோலக் காட்சியினை பின்வருமாறு அருளிப் பாடியுள்ளார்.


காது பொத்தரைக் கின்னரர் உழுவை
கடிக்கும் பன்னகம் பிடிப்பரும் சீயம்
கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல்நிழற்கீழ் அறம் பகர
ஏதம் செய்தவர் எய்திய இன்பம்
யானுங்கேட்டு நின்இணையடி அடைந்தேன்
நீதிவேதியர் நிறைபுகழ் உலகில்
நிலவுதென்திரு நின்றியூ ரானே.

இத்தலத்தில் ஞானம் புகட்டும் ஆலமர் செல்வனின் இரண்டு காதுகளிலும் இசை எழுப்பும் கின்னரர்கள் இருக்கின்றார்கள். பாம்பும், புலியும் சிங்கமும் ஒருபக்கத்தில் விளங்க சிறந்த மாதவ முனிவர்கள் கூட்டமாக அமர்ந்திருக்கின்றனர். ஆலமர் செல்வனான சிவபிரான் கல்லாலமர நிழலில் எழுந்தருளி அம்முனிவர்களின் ஐயம் எல்லாம் நீங்கி, உண்மைப் பொருளினை உணரும்படி அறம் உரைத்தருளுகின்றார்.

துறைசைப்புராணம்:

''சிவந்த தாமரை மலர் போன்ற வன்மையான திருவடியைச் சேரவொட்டாமல், உயிர்களையெல்லாம் மயங்கச்செய்கின்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களையும் போக்கி, அன்புமிக்க அடியார் கூட்டத்தோடு கூடி, நீங்கள் அடையக் கூடிய முக்தி இன்பமானது இத்தன்மையை உடையது, என்று சனகாதி முனிவர் நால்வருக்கும் பெருவிரல் சுட்டுவிரல்களின் சின்முத்திரையால் சொல்லாமற் சொல்லி, கல்லால மரநிழலின் கிழ், மன்மதன்மேலே நெற்றிக் கண் நெருப்பை வீசி இறைத்து அமர்ந்திருந்த குருநாதரை வணங்குவோமாக'' என்ற கருத்தமைந்த, சாத்திரம் சாமிநாதமுனிவர் இயற்றிய துறைசைப் புராணப் பாடல் வருமாறு.

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டாமல்
உயிரையெல்லாம் தியக்கம் செய்யும்
அம்மலம்க ழீஇ மிகுந்த அன்பரொடு
மருவிநீர் அடையு முத்தி
இம்முறையாம் என நால்வர்க்[கு] இருவிரல்சின்
முத்திரையால் இயம்பி ஆல்கீழ்
மன்மதன்மேல் நுதற்கண் அனல் இறைத்திருந்த
குருபரனை வணக்கம் செய்வாம்.



தட்சிணாமூர்த்தி வடிவமும் லட்சணங்களும்

இத்துறைசை ஆதீனத்து முனிவரின் பாடல், தென்முகக் கடவுளின் சின்முத்திரை விளக்கத்தை நமக்குத் தெளிவு படுத்துகின்றது.

கோஷ்டப்பகுதியில்:

தட்சிணாமூர்த்திப் பெருமானின் சிலா ரூபத்தினை சிவாலயங்களின் தேவகோஷ்ட தென் பகுதியில் காணலாம். தெட்சிணாமூர்த்தியின் திருச்சந்நிதிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முகத்தான் சில தலங்களில் இப்பெருமான் முன்பு நான்கு தூண்கள் நிறுத்தப்பட்டு மண்டபம் போல அமைக்கப்பட்டிருக்கும் அல்லது சிங்கங்களின் மீது தூண்கள் அமைக்கப்பெற்று மண்டபத்தின் நான்கு மூலைகளிலும் கருங்கள் சங்கிலிகள் தொங்கவிடப்பட்டு இருப்பதையும் காணலாம். இம்மண்டப அமைப்பு, மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து தொடங்கப்பட்டது என ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர்.

உதாரணமாக திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவாலங்காடு ஸ்ரீ வடாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் விளங்கும் தட்சிணாமூர்த்தி சந்நிதியில் அமைக்கப்பெற்ற மண்டபத்தைக்கூறலாம். தூண்களின் இருமருங்கிலும் மூன்றாம் குலோத்துங்க சோழனது திருவுருவமும் உள்ளது. மேலும் இம்மன்னனது திருவுருவம் தெற்கு ஆவரணத்திலும் உள்ளது.

சிவாலயங்களின் தேவ கோஷ்ட மாடங்களில் மூன்று விதங்களாகப் பிரதிமங்களைப் பிரதிட்டை செய்துள்ளனர். நம் முன்னோர்கள் தென் திசையிலிருந்து தொடங்கி மேற்கு மற்றும் வடக்கு வரை பிரதிட்டையானது நிறைவடைகின்றது.

1. தலவிநாயகர், அகஸ்தியர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர் பிரமன் துர்க்கை என்ற முறையிலும்,

2. தலவிநாயகர், நடராஜர், தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீஸ்வரர், பிரமன், கங்காவிசர்ஜனர் துர்க்கை என்ற முறையிலும்,

3. அகத்தியர், தட்சிணாமூர்த்தி, விஷ்ணு அல்லது யோகம் செய்யும் விதத்தில் மான்மழுவோடு சிவன், பிரமன் , துர்க்கை என்ற முறையிலும் காணப்படும். தெற்குப்பகுதி மற்றும் வடக்குப் பகுதியில் இன்னும் சில சிவமூர்த்தங்கள், பெரிய சிவாலயங்களில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளதனை நேரில் கண்டு தெளியலாம்.

திருவுருவ தத்துவம்:

தட்சிணாமூர்த்திப் பெருமான் கல்லாலமரத்தின் கீழ் வீராசனம் கொண்டு எழுந்தருளி, சனகாதி முனிவர்களுக்கு உபதேசம் செய்யும் காட்சியினை திருக்கோயில்களில் இன்றும் நாம் காண்கிறோம். இப்பெருமானுக்கு நான்கு கரங்கள். பின் கரங்களின் முறையே அக்னியும், உடுக்கையுடன் இணைந்த சர்பமும் விளங்கும். முன் இடக்கரத்தில் வேதச் சுவடி காணப்படும். இல்லையேல் கரம் கீழ் நோக்கியவாறு காணப்படும். முன் வலக்கரம் சின்முத்திரையினைக் கொண்டு விளங்கும். மேலும் மிருகங்களும் பறவைகளும் காணப்படுகின்றன. சில தலங்களில் முனிவர்களின் கூட்டமும் காணப்படும். யோகிக்குரிய அனைத்து லட்சணங்களும் இப்பெருமானிடத்தே விளங்குதலைக் காணலாம்.

தட்சிணாமூர்த்தி - படவிளக்கம்:

1. கல்லாலமரம்
2. ஜாபந்தம்
3. பத்ரபூரிமம்
4. ஜடாபாரம்
5. பிறைச்சந்திரன்
6. லலாடம்
7. அக்னி

18. சுரோணிப்பட்டை
19. நந்தி
20. வீரகண்டாமணி
21. முயலகன்
22. சிலம்பு
23. தண்டை
24. வியாக்ரசர்மம்

8. காதோலை
9. ஏகருத்ராக்ஷம்
10. கண்டாபரணம்
11. ருத்ராக்ஷமாலை
12. தோள்வளை
13. உதரபந்தம்
14. உரஸ்சூத்திரம்
15. யக்ஞோபவீதம்
16. காப்பு
17. சுவடி
25. உள்ளங்காலில் பத்மரேகை
26. வஸ்திரக்கட்டு
27. பத்மரேகை
28. சின்முத்திரை
29. பாகுமாலை
30. பாதுதாமம்
31. டமருகம்
32. கங்கை
33. மகரகுண்டலம்
34. ஸ்தனசூத்திரம்

சனகாதி முனிவர்கள் (நால்வர்)
வீராசனம் (பெருமான் அமர்ந்திருக்கும் அமைப்பு)

திருநீறு:

தட்சிணாமூர்த்திப் பெருமான் வெண்ணீறு அணிந்து பளிங்கு போன்ற திருமேனியினைக் கொண்டு விளங்குவது தூய்மைத் தன்மையினை புலப்படுத்துகிறது.

திருமுடி:

சிரசில் விளங்கும் திருமுடிகள் (ஜடைகள்) வைராக்கியத்தையும், ஞான நோக்கினையும் புலப்படுத்துகிறது.

திருவிளையாடற் புராணத்தில்:

மானமுனி வோரதிசயிப்பவட நீழல்
மோனவடி வாகிய முதற்குரவன் எண்ணான்கு
ஊனமில் இலக்கண உறுப்பு அகவை நானான்கு
ஆனஒரு காளைமறை யோன்வடிவ மாகி

என்று கூறப்படுகிறது.

''முனிவர்கள் ஆச்சரியப்படும்படி வடஆலின் நிழற்கண் மோன வடிவமாகிய முதற் குருநாதன், முப்பத்திரண்டு சாமுத்திரிகா லட்சணங்களும் பொருந்திய, பதினாறு வயது நிரம்பிய காளை போன்ற அந்தணன் வடிவமாகிக் காட்சி தந்தான்'', என்பது இதன் பொருள்.

திரிபுண்டரமாக இடப்பட்ட திருநீறு நெற்றிக் கண்ணை மறைக்கவும், அழகிய மார்பில் கண்டிகை அணிசெய்யவும், காதில் அணிந்த குண்டலத்தில் பதித்த மணியானது சூரியனைப்போல ஒளிவீசவும் வெள்ளிய உத்தரீயம் வலப்பக்கம் ஒதுங்கவும், வெண்மையான உபவீதமும் இடைஇடையே முத்துக்கள் கோத்த உருத்திராக்க மணிமாலை ஒளிபரப்பவும், இடையில் வெண்பட்டாடை விளங்கவும், பாதத்தில் அணிந்துள்ள சிலம்பு வண்டின் இசைபோல ஒலிக்கவும், வலப்பாதத்தில் வீரகண்டை முழங்கவும் தென்முகக் கடவுள் வீராசனத்தில் வீற்றிருந்தார். இவ்வாறு வீற்றிருந்த பெருமானை முனிபுங்கவர்கள் கண்டு போற்றினார்கள். இந்நிகழ்ச்சியினைப் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறைஆ
றங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

-பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற்புராணம்

பாடலின் விளக்கம்:

சிவபெருமான் கல்லால மரநிழலின்கண் தென்முகமாக எழுந்தருளி இருந்து, நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் வேதாந்தங்களையும் நன்றாக அறிந்த, வல்லவர்களாகிய சனகாதியர் நால்வருக்கும் வேதவேதாந்தங்களினால் தம்மையும் தம் தலைவனையும் சந்தேக விபரீதமற உணரமாட்டாமல் மயங்கின மயக்கம் நீங்குவதற் பொருட்டு, வாக்கினாலே இத்தன்மையை உடையது என்று சொல்ல முடியாத நிலையில் நிறைவாயும், வேதங்களினால் அறுதியிட்டுக் கூறமுடியாததாயும், உயிருள்ள பொருள், உயிரில்லாத பொருள் ஆகிய எல்லாம் தன்னையின்றித் தனித்து நில்லாமையால் அவையாவும் தானாகியும், ஆயினும் அவற்றுள் உயிர் போலப்பிறந்து இறந்து உழலுதலும், உயிரில் பொருள் போலத் தோன்றி நின்று அழிதலும் இல்லாமையால், அப்பொருளுக்கு வேறாயும் இருந்த தனது சொருபத்தை இருந்தவாறே திருமேனி கொண்டருளிய முறைமையில் வைத்துக்காட்டி, அவ்வுண்மையை வாக்கினாலே சொல்லாமல், அறிவுக்கு அறிவாய் நின்று அருளால் அறிவித்தனர். இப்பேரருள் புரிந்த தட்சிணாமூர்த்தியை, நாம் ஆராய்ச்சி அறிவாகிய மனத்தால் நினையாமல் அநுபவ அறிவால் அறிந்து பிறந்து இறந்து உழலும் துன்பத்தை வெல்லுவோமாக'' என்பது இப்பாடலின் பொருளாகும்.

''இருந்து காட்டி'' என்று இப்பாடலில் பொதுவாகக் கூறிய பரஞ்சோதி முனிவர் எவ்வாறு இருந்து காட்டினார் என்பதை, வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்த படலத்தில் விளக்கியுள்ளார். அந்த திருவிளையாடற் புராணச் செய்யுள்,

சீதளப்பளிக்கு மேனியும் பளிக்குச்
செழுமலை பதித்த துப்பன்ன
பாதமும் செவ்வாய் மலரும் முக்கண்ணும்
பங்கயச் செங்கரம் நான்கும்
வேதபுத் தகமும் அமுதகும்பமும் தன்
விழி மணி வடமுமெய்ஞ் ஞான
போத முத்திரையும் தரித்ததோர் தனிமைப்
போதன்முன் தாழ்ந்தெழுந் தேத்தா

என்பதாகும்.

இதனால் முயலகனை மிதித்த திருவடி ஒன்றும், வீராசனமான மற்றொரு திருவடியும் வலப்பக்கத்தில் உள்ள ஒரு திருக்கரத்தில் சின்முத்திரையும், மற்றொரு திருக்கரத்தில் உருத்திராக்க மணிவடமும், இடப்பக்கத்திலுள்ள ஒரு திருக்கரத்தில் அமுதகும்பமும், மற்றொரு திருக்கரத்தில் சிவஞான போத புத்தகமும் விளங்கும்படி எழுந்தருளி இருந்தார் என்பது புலனாகிறது.

சின்முத்திரை:

★சின்முத்திரை என்பது கையிலுள்ள ஐந்து விரல்களுள் நடுவிரல் முதலாகப் பின் மூன்று விரல்களை வேறு பிரித்து சுட்டு விரலை பெருவிரல் அடிப்பாகத்தில் அடங்கும்படி மடக்கி வைத்தலாகும். பெருவிரல் ஏனைய நான்கு விரல்களோடும் கூடித் தனித்தனி ஒவ்வொரு விரலையும் பொருந்துவதற்கு உரிமையுடையதாயும் அவற்றின் வேறுமாயும் இருத்தலால் அது எல்லாமாயும் அல்லதுமாயும் நிற்கும் இறைவனைக் குறிக்கும்.

சுட்டுவிரல் பெருவிரலை உள்ளடக்கியும் நடுவிரலுக்கு உள்ளடங்கியும், இருத்தலால் அது ஆணவ மலத்தினுள் அடங்கிப் பதியைக் கீழ்ப்படுத்தி பசுபோதமாய் நிற்கும் ஆன்மாவைக் குறிக்கும்.

★ *பல்வேறு நிலையில் அமைந்த கரமுத்திரைகளை படத்தில் காண்க.*

நடுவிரல் பெருவிரலோடு பிரிப்பின்றி நிற்கும் சுட்டுவிரலைத் தன்னுள் அடக்கி நிற்றலால் அது பதியோடு பிரிப்பின்றி நிற்கும் உயிரைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் ஆணவ மலத்தைக் குறிக்கும்.

அணிவிரல் நடுவிரலுக்குட்பட்டு இருத்தலால், அது ஆணவமலச் சேட்டையால் அனாதியே உண்டான விருப்பு வெறுப்பென்னும் மூல கன்மத்தைக் குறிக்கும்.

கடைவிரல் (சிறுவிரல்) அணிவிரலுக்கு உட்பட்டும் முற்பட்டும் இருத்தலால் அது விருப்பு வெறுப்புக்கு உட்பட்டும் முற்பட்டும் விளங்கும் மாயா காரியங்களைக் குறிக்கும்.

ஆக, ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நீங்க, உயிர் சிவபரம் பொருளின் திருவடிவியாபகத்துள் இரண்டறக் கலத்தலை உணர்த்துவது ''சின்முத்திரை'' என அறியவேண்டும்.

சிவஞானபோதம்:

பரஞ்சோதி முனிவர் வேதபுத்தகம் என்றார். அவ்வேத புத்தகம் சிவஞான போதமே யாகும். என்னையெனில் சிவஞான போதம் வேதத்தின் சாரம் என்க. சனகாதியரின் ஐயத்தை தீர்த்தற்குரிய நூல் வேறு எதுவாகவும் இருக்க இயலாது. நான்கு திருக்கரங்களினாலும் இரண்டு திருவடிகளினாலும் உணர்த்துவதற்குரிய நூலாக அமையும் தகுதியுடையது, ''சிவஞான போதம்'' ஒன்றே யாகும். அது பன்னிரண்டு செய்யுட்களை உடையது. முன் ஆறு செய்யுட்கள் பொது அதிகாரம், பின் ஆறு செய்யுட்கள் சிறப்பு அதிகாரம். இது சாதனம், பயன் என இரண்டு இயல்களை உடையது.

சுவடி:

கரத்தில் விளங்கும் சுவடி சிவஞானம் ஆகும். சிவ ஞானத்தால் மும்மலங்கள் நீங்கி வீடு பேறு அடையலாம் என்பதை உணர்த்துகின்றது.

அக்கினி:

பின் இடக் கரத்தில் ஏந்தியுள்ள அக்கினி யுகமுடிவுக் காலத்தில் அனைத்துப் பொருளையும் அழித்துச்சாம்பலாக்க வல்லது என்பதைக் காட்டுகிறது.

உடுக்கை நாகம்:

பின் வலக்கரத்தில் உடுக்கையும் அதில் நாகமும் காணப்படும். உடுக்கையானது சிருஷ்டித் தொழிலையும், நாகபாசமானது உலகினை நம்பி ஆன்மாக்கள் உழலுவதையும் காட்டுகிறது.

உருத்திராக்கம்:

கழுத்தில் அணிந்துள்ள 36 மணி கொண்ட உருத்திராக்கமாலை முப்பத்தாறு தத்துவங்களைக் குறிக்கும். சின்முத்திரை கரத்தில் விளங்கும் ஜபமாலை ஆன்மாக்கள் ஐந்தெழுத்தைச் ('நமசிவாய') செபித்து கடைத்தேற வேண்டும் என்பதனைக் காட்டுகிறது. பெருமானுக்கு நமசிவாய என்ற திருநாமமும், அதே அவருக்கு மந்திரமாகவும் உள்ளது. இதில் ஐந்து எழுத்து உள்ளதால் ''பஞ்சாட்சரம்'' என்று கூறுவர். தீட்சா காலத்தில் குருவானவர் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கும் மந்திரமும் இதுவேயாகும்.

பஞ்சாட்சரம்:

இம்மந்திரத்தின் பெருமையினை வேதங்களும், திருமுறைகளும் பலவாறாக எடுத்து இயம்புகின்றன.

பஞ்சாட்சர மந்திரம் 125 பேதங்களைக் கொண்டது என்று சான்றோர் கூறுவர். இப்பேதங்கள் யாவும் ஆன்மாக்கள் அடையும் நன்மைகளை உணர்த்துகின்றன. முதலாவது ஆளுங்கிருத்தியத்தைப் புரியவல்லது.

ஈசானமாகிய - ''ந'' காரத்தில் உச்சாடனத்தை யுதவவல்ல அகோர பஞ்சாட்சரத்தில் தொடங்கி, 25 ஆகக் கூறப்படும் சர்வ பஞ்சாட்சரத்தில் முடிகிறது.

தத்புருஷமாகிய - ''ம'' காரத்தில் வித்வேஷண பஞ்சாட்சரத்தில் தொடங்கி 25 ஆகக் கூறப்படும் யக்ஷணி பஞ்சாட்சரத்தில் முடிகிறது.

அகோரமாகிய - ''சி'' காரத்தில் தம்பன பஞ்சாட்சரத்தில் தொடங்கி 25 ஆக முடியும் சஞ்சீவி பஞ்சாட்சரத்தில் முடிகிறது.

வாமதேவமாகிய - ''வ'' காரத்தில் பேத பஞ்சாட்சரத்தில் தொடங்கி 25 ஆக முடியும் சர்வபரிபாஷர் பஞ்சாட்சரத்தில் முடிகிறது.

சத்யோஜாதமாகிய - ''ய'' காரத்தில் மூலாதார பஞ்சாட்சரத்தில் தொடங்கி 25 ஆக முடியும் சதுஷ்பீட பஞ்சாட்சரத்தில் முடிகிறது.

மேலும் இம்மந்திரத்தின் பல்வேறு வகைகளையும், நிலைகளையும் உபநிஷத்துக்கள் சைவத் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் சிவரகசியம் சித்தாந்த சிகாமணி, பஞ்சாட்சர ரகசியம், சித்தாந்த சாதனம், சைவ பூஷணம் மந்திர சாரம், மந்திர சார சங்கிரகம் முதலான நூல்களில் காணலாம்.

மேலும் சில ஆயுதங்களை இவரிடத்தே காணலாம்.

மான்மழு:

பின் கரத்தில் விளங்கும் ''மான்'' மான் போன்ற மருண்ட மனத்தினை உடைய ஆன்மாக்கள் உள்ளனர் என்பதையும், ''மழு'' தீய சக்திகளை மனத்திலிருந்து அகற்றவேண்டும் என்பதையும் உணர்த்துகிறது.

அமிர்தகலசம்:

ஒரு சில தட்சிணாமூர்த்திப் பெருமானின் திருவுருவ அமைப்பில் இடக்கரத்தில் அமிர்தகலசம் விளங்குகிறது. இக்கலசம் எல்லா உயிர்களுக்கும் பேரின்ப வாழ்வை அளிக்கவல்லவர் என்பதனை காட்டுகிறது.

திரிசூலம்:

இது மூன்று நுனிகளை உடையது; சிவபெருமானுக்கு சிறப்பாக உரியது; மூன்று உண்மைப் பொருளை உணர்த்தவல்லது.

கபாலம்:

''வைராக்யம்'' என்பதனை உணர்த்த வல்லது.

முயலகன்:

பாசத்தில் கட்டுண்ட ஆன்மாக்கள் இவ்வுலகில் முயலகன் போல் அவதியுறுவர் என்பதனைக் காட்டுகிறது.

யோக தண்டம்:

இது மரத்தினால் ஆக்கப்பட்ட ஒன்றாகும். கவட்டை போன்று விளங்குவது. ஜபமாலையினைக் கையில் கொண்டு யோகதண்டத்தின் மீது கரத்தினை வைத்துக் கொள்ளுதலாகும். மேலும் யோகதண்டம் போன்று நிமிர்ந்து யோக நிட்டையில் இருக்கவேண்டும் என்பதை உணர்த்துவதாகும்.

வீணை:

இது ஓர் இசைக்கருவி, இசையின் உண்மையான நுணுக்கத்தை தும்புரு, நாரதர், சுகர் முதலான ரிஷிகளுக்கு ஐயம் நீக்கியருளுவதைக் காட்டுவது. இந்த வீணாதரர் காட்சியினை, விளநகர் திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருபுவனம் ஆகிய தலங்களின் ராசகோபுரங்களில் காணலாம்.

நெற்றிக்கண்:

இவரது நெற்றிக்கண் காமனை எரித்ததை உணர்த்துவதாகும். தவம் புரிவோர் காமனை வென்ற வைராக்கிய முடையவர்களாகத் திகழவேண்டும் என்ற உண்மையைக் காட்டுவதாகும்.

கல்லால மரம்:

அடர்ந்து, பரந்த கல்லால மரநிழல் மாயமான உலகச் சூழலை புலப்படுத்தும். அதன் கிளைகள் மாயையின் வகைகளைப் புலப்படுத்தும்.

இடபம்:

பெருமானின் கீழ் விளங்கும் இடபம் உழைப்பினையும், வேதங்களையும் தருமங்களையும் உணர்த்துவதாகும்.

பிறஉயிரினங்கள்:

பாம்புகள், பறவைகள், சிங்கங்கள், மான்கள் முதலிய மிருகங்கள் யாவும் இவரிடத்தே பகைமை நீங்கி இருத்தலாகிய ஒற்றுமையினை உணர்த்துகின்றது.

உதரபந்தம்:

இவர் உதரபந்தமாக அணிந்துள்ள நாகம் குண்டலினி சக்தியைக் காட்டுவதாகும்.

வீராசனம்:

அநேக ஆசனங்கள் இருப்பினும் இப்பெருமான் வீராசனம் கொண்டு எழுந்தருளி ஈடு எடுப்பற்ற தலைமைத் தன்மையை உணர்த்துகின்றார்.

மௌனம் கொண்ட தென்திசைத் திருமுகம்:


இவர் தென்முகமாக அமர்ந்திருப்பது ஆன்மாக்கள் எல்லாம் இவரை நோக்கி வடக்கு முகமாக இருந்து தியானம் ஜெபம் முதலியன செய்யவேண்டும் என்பதனை உணர்த்துகிறது. சாந்தம் தவழும் திருமுகம் ஆழ்ந்த சிந்தனையைப் புலப்படுத்தும். இப்பெருமானின் கண்கள் மூக்கின் நுனியினைப் பார்த்தவாறு உள்ளதால் ஒருமை மனத்தை அதாவது ஏகாக்கிர சித்தத்தை உணர்த்துவனவாகும். மௌனமானது புலனடக்கத்தையும் அறிவின் மேம்பாட்டையும் உணர்த்துவதாகும்.

முனிவர்கள் திருவுருவங்கள்:

முனிவர்கள் யாவரும் ஆலமர் செல்வனாகிய குருநாதன் சொல்லாமற் சொன்னவற்றைக் கேளாமற் கேட்டுணர்ந்து அவன் பாத கமலங்களை நினையாமல் நினைந்து பாசங்களிலிருந்து நீங்கப் பெற்று என்றும் அழியாத பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று இன்புறுவர் என்பதைக் காட்டுகிறது.

தத்துவப் பொருளை உணர்த்த வந்த பெருமானாகிய தட்சிணாமூர்த்தி, ஆலயங்களில் பல நிலைகளில் (உருவ அமைதிகள்) அருட்காட்சி வழங்குகின்றார். ஆகவே பெறுதற்கரிய மானுடப் பிறவியைப் பெற்ற ஒவ்வொருவரும் தெளிந்த சிந்தை உடையவர்களாக தென்முகக் கடவுளின் திருவடிகளைத் தொழ வேண்டும். தொழுதால் ஞானம் உண்டாகும். ஞானம் எல்லா வகைச் செல்வங்களையும், பேரின்ப வாழ்வையும் நல்கும்.

குரவே ஸர்வ லோகாநாம் பிஷஜே பவரோகிணாம்।
நிதயே ஸர்வ வித்யாநாம் தட்சிணாமூர்த்தயே நம:।।
அப்ர மேயத்வயாதீத நிர்மல ஜ்ஞான மூர்த்தயே
மநோகிரர்ம விதுராய தட்சிணாமூர்த்தயே நம:।।



ஞான தட்சிணாமூர்த்தி



யோகசிவன் (காமனை எரித்தற்கு முன்)
திருவெறும்பூர் - தென்னாற்காடு மாவட்டம் -
சோழர்காலம் - கி.பி.10ஆம் நூற்றாண்டு.

சிற்பங்களில் கரலட்சணம்

கையின் பல்வேறு செயல்நிலைகளைக் கூறுவது கரலட்சணம் எனப்படும். அதாவது மனத்தில் நிகழும் உணர்வு நிகழ்ச்சிகள் அங்கே எவ்வாறு நிகழ்கின்றனவோ அவ்வாறே கைவிரல்களின் அசைவினால் அல்லது குறிப்புச் சைகைகளினால் காண்போருக்குப் புலப்படுமாறு வெளிப்படுத்துவதாகும். இதனை முத்திரை அல்லது அடையாளம் என வழங்குவர் சான்றோர். முத்திரைகள் பலவகைப்படும். நாட்டியக் கலைக்கும் சிற்பக் கலைக்கும் தெய்வ பூசனை முறைக்கும் தனித்தனி முத்திரைகள் உள்ளன. இம்முத்திரைகளை 32 வகைகளாகப் பாகுபடுத்தியுள்ளனர் நாட்டியக்கலை வல்லுநர்கள். இக்கரலட்சணம் இருவகைப்படும். அவை செயல்நிலைகளைப் புலப்படுத்தும் கரம், அழகு நிலைகளைப் புலப்படுத்தும் கரம் என்பனவாம். இவற்றின் விரிவை இனிக்காண்போம்.

1. அபய கரம்:

கையின் சுட்டுவிரல் அணிவிரல் சிறுவிரல் ஆகிய நான்கு விரல்களையும் ஒரு சேர அமைத்து, கைக்குச் சம உயரத்தில் மேல் நோக்கிச் செங்குத்தாக நிறுத்தி, பெருவிரலைச் சுட்டு விரலோடு சேர்த்து மேல்நோக்குமாறு அமைத்துப் பிடிக்கும் கரலட்சணத்திற்கு 'அபயகரம்' என்று பெயர். இது 'அஞ்சாதே' என்ற குறிப்பை உணர்த்துவதாகும். இதனை உற்று நோக்கக் கொடிபோல் அமைந்திருத்தலினால், இது 'பதாகை முத்திரை' எனவும் வழங்கப்பெறும்.

2. வரத கரம்:

முற்கூறிய அபயகரத்தைக் கீழ்நோக்கியவாறும் உள்ளங்கை வெளிநோக்கியவாறும் அமைத்துக் காட்டினால் அது 'வரத கர' மாகும். வரத கரம் - கொடுக்கும் கரம்.

3 & 3 அ. கடக கரம்:

பெருவிரலை உட்பக்கமாகச் சிறிது வளைத்து நடுவிரல் அணிவிரல் இரண்டையும் சேர்த்து முன்பக்கமாக வளைத்து, சுட்டு விரல் சிறு விரல் இரண்டையும் தத்தமது இடங்களிலே நிறுத்தி, மேற்கணுக்களைச் சற்று வளைவாகப் பிடிக்கும் கரம் 'கடக கரம்' எனப்படும். இதில் வேறு நிலையும் உண்டு.

இதில் நடுவிரல் நுனி அணிவிரல் நுனியிலிருந்து சிறிதளவு முன்னோக்கியவாறு அமைந்திருத்தல் வேண்டும். இதன் தோற்றம் நண்டுபோல் இருத்தலின் இது 'கடக கரம்' எனப்படும்.

இது பொருள்களைப்பற்றிப் பிடிக்கும் தன்மையைப் புலப்படுத்துவதாகும்.

4 & 4அ. சிம்ம கர்ண கரம்:

மேலே கூறிய கடக கரத்தில் நடுவிரல் உள்ளங்கை வரையில் படிமானமாக வளைந்து அணிவிரலும் அதைத் தொடர்ந்து வளைய, ஏனைய விரல்கள் கடக கரத்தின் தோற்றம் போல் வளைந்து தோன்றும். இது 'சிம்ம கர்ணம்' எனப்படும். அதாவது சிங்கத்தின் காதுபோல அமைந்திருத்தலினால் இப்பெயர் பெற்றது. இந்த முத்திரை 'வருக' என்று அழைக்கும் தோற்றத்தை உணர்த்துவதாகும்.

5-5அ - 5ஆ வியாக்கியான கரம்:

பெருவிரலானது உள்ளங்கையை விட்டு விலகி முன்பக்கமாக நீண்டு வளைந்து நிற்க, சுட்டு

விரலானது கீழ்நோக்கி வளைந்து பெருவிரலின் நுனியைத் தொட்டு நிற்கும்படி விளங்கும். மற்ற நடுவிரலும், அணிவிரலும், சிறுவிரலும் அவ்விரண்டு விரல்களையும் விட்டு நீங்கித் தனியே மேல் நோக்கி நிமிர்ந்து விளங்கும். இந்த முத்திரை ஞானாசிரியன் மாணவனுக்கு மெய்ப் பொருளின் விளக்கத்தைக் குறிப்பினால் உணர்த்துவதாகும். எனவே இது 'வியாக்கியானகரம்' என வழங்கப்பெறும். இதற்கு 'சின்முத்திரை' என்ற மற்றொரு பெயரும் உண்டு. இத்தகைய கர அமைப்பு தட்சிணாமூர்த்தியின் சிலை அமைப்புக்களில் காணப்படும்.

இச் சின்முத்திரையில் பெருவிரல் பதியாகிய சிவபிரானையும், சுட்டு விரல் பசுவாகிய ஆன்மாவையும், நடுவிரல் ஆணவ மலத்தையும், அணி விரல் கன்மமலத்தையும், சிறுவிரல் மாயாமலத்தையும் குறிக்கும்.

இயல்பாகக் கையை விரித்தால் பெருவிரல் தனியாகவும் மற்ற நான்கு விரல்களும் ஒன்றாகவும் சேர்ந்து விளங்குவதைக் காண்கிறோம். இது சுட்டுவிரலாகிய ஆன்மா பெருவிரலாகிய சிவபிரானைவிட்டு விலகியே நிற்பதை உணர்த்தும். அவ்வாறு விலகி நிற்பதோடல்லாமல் நடுவிரலாகிய ஆணவத்தோடும் , அணிவிரலாகிய கன்மத்தோடும் சிறுவிரலாகிய மாயையோடும் சேர்ந்து அவற்றோடு கட்டுண்டு நிற்கின்றது.

அவ்வாறு கட்டுண்டு கிடக்காமல் அம்மும்மலங்களின் துன்பத்தினின்றும் விலகி, பெருவிரலாகிய சிவத்தோடு ஒன்றியிருந்தால் பேரின்பப் பெருவாழ்வு பெற்று இன்புறலாம் என்பதைக் குறிப்பினால் புலப்படுத்துவதே இச்சின்முத்திரையின் உட்பொருளாகும். இது ஞானமுத்திரை என்றும் பெயர் பெறும்.

இம் முத்திரையைக் கீழ்நோக்கியபடி உட்பக்கமாகப் பிடித்தால் இது யோக முத்திரை எனப்படும். இதில் சுட்டு விரல் பெருவிரல் அடியைப் பொருந்தி நிற்கும்.

இதே முத்திரையைக் கீழ்நோக்கியபடி உட்பக்கமாகப் பிடித்தால் இது யோக முத்திரை எனப்படும். இதில் சுட்டு விரல் பெரு விரல் அடியைப் பொருந்தி நிற்கும்.

இதே முத்திரையைப் பெருவிரல் நுனியும் சுட்டுவிரல் நுனியும் ஒன்றும்படி அமைப்பதொரு முறையும் உண்டு.

இவை ஆன்மாவானது மும்மலத் தொடர்பினின்றும் விலகி இறைவனோடு ஒன்றிப் பேரானந்தப் பெரு வாழ்வு வாழ்வதே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்பதை உணர்த்த எழுந்த முத்திரைகளாகும்.

6. சூசி கரம்:


சுட்டு விரலை மட்டும் செங்குத்தான நேர்நிலையில் வைத்து, கடக கரம் போல நிறுத்துவது 'சூசிகரம்' எனப்படும். இதன் தோற்றம் ஊசிபோல் அமைந்திருத்தலின் இப்பெயர் பெற்றது. ஏதாவது ஒன்றைச் சுட்டிக் காட்டுவது இதன் குறிப்பாகும்.


7. தர்ஜனீ கரம்:


இது சூசிகரம் போன்றதுதான். எனினும் சுட்டுவிரல் பின்பக்கமாகச் சாய்ந்து காணப்படும். இது அச்சுறுத்தும் தன்மையைப் புலப்படுத்தும்.

8. கர்த்தரீமுக கரம்:

சுட்டு விரலும் நடுவிரலும் நிமிர்ந்து நிற்க, பெருவிரலும் அணிவிரலும் முன்பக்கம் சிறிது வளைந்திருக்க, சிறுவிரல் சற்றே முன்புறம் வளைய அமைந்திருப்பது 'கர்த்தரீ' முககரம் எனப்படும். இது தோற்றத்தில் கத்தரிக்கோல் போல அமைந்திருத்தலின் இப்பெயர் பெற்றது. நீண்ட அமைப்பில் உள்ள ஆயுதங்களைப் பற்றிப்பிடித்து எறிவதற்கு இம்முத்திரை பயன்படும்.



1


2



3



3அ


4



4அ


5



5அ


5ஆ


6


7


8


9
10
12
13
11
14
15
16
17
18
19
20
21

9. அலபத்ம கரம்:

ஐந்து விரல்களும் சற்றே மேல் நோக்கி விரிந்து அமைவது 'அலபத்ம கரம்' எனப்படும். இது மலர்ந்த தாமரை மலர் போல் தோற்றமளித்தலின் இப்பெயர் பெற்றது. இம்முத்திரை மகிழ்ச்சியைப் புலப்படுத்துவதாகும். பத்மம் - தாமரை.

10. விஸ்மய கரம்:

மேலே கூறிய அலபத்ம கரத்தை உள்ளங்கையை வெளியே காட்டாமல் உட்பக்கமாக புறங்கையைக் காண்போருக்குத் தெரியுமாறு காட்டிப் பிடிப்பது விஸ்மய கரமாகும். இதுவியப்பு என்றும் மெய்ப்பாட்டை உணர்த்துவதாகும்.

11. பல்லவ கரம்:

மணிக்கட்டிலிருந்து சரிந்து கீழ்நோக்கி வளைந்து ஐந்து விரல்களும் புறங்கை வெளியே தோன்றுமாறு தொங்கவிடுவது 'பல்லவகரம்' என வழங்கப்பெறும். பல்லவம் என்பது தளிர். தளிர்க் கொத்து வளைந்து தொங்குவது போல இது அமைந்திருத்தலின் இப்பெயர் பெற்றது.

12. நித்ரா கரம்:

இடக்கை ஐவிரலும் அகங்கையும் ஆசனத்தில் ஊன்றியநிலையில் அமைந்து, சுட்டுவிரலும் சிறுவிரலும் சற்றே மேலெழுந்து வளைந்திருக்கத் தோற்றமளிப்பது நித்ரா முத்திரை எனப்படும். இது உறக்க நிலையைப் புலப்படுத்தும் எழில் முத்திரையாகும்.

13. அர்த்த சந்திர கரம் :

அகங்கையை மேல் நோக்கியமைத்து, பெருவிரல் நிமிர்ந்து நிற்க, ஏனைய நான்கு விரல்களும் இணைந்து அடுக்கடுக்காக, எதிர்ப்பக்கம் மேல் நோக்கி வளைந்து நிற்க, அரைவட்டம் போல்காட்சியளிப்பது 'அர்த்த சந்திரகரம்' எனப்படும். அரைவட்டமாக உள்ள எட்டாம் பிறைச்சந்திரனைப் போல் அமைந்திருப்பதனால் இப்பெயர் பெற்றது.

14. அர்த்த பதாக கரம்:

அகங்கயைப் புறத்தோற்றமாக அமைத்து, சுட்டுவிரலையும் நடுவிரலையும் இணைத்து மேல் நோக்கிச் செங்குத்தாக நீட்டி ஏனைய விரல்களையும் வளைத்து அழகுற அமைப்பது 'அர்த்த பதாககரம்' எனப்படும். இது ஆன்மாவும் இறைவனும் வேறானவை என்பதை உணர்த்தும் துவைதக் கொள்கைக்குரியதாகும்.

இது பதாக கர அமைப்பில் பாதியாக, அதாவது நான்கு விரல்களுக்குப் பதில் இருவிரல்கள் மட்டும் தோன்றுவதால் அர்த்த(பாதி) பதாக (கொடி) கரம் எனப்பட்டது.

15. திரி சூலகரம்:

அகங்கை புறத்தே தோன்றுமாறு அமைத்து சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல் ஆகிய மூன்றும் மேல் நோக்கி நிமிர்ந்து நிற்க பெருவிரலும் சிறுவிரலும் முனையோடு முனைபொருந்துமாறு நன்றாக வளைத்து நிற்க அமையும் கரம் திரிசூலகரம் எனப்படும். திரிசூலம் போன்றிருத்தலின் இப்பெயர் பெற்றது.

இம் முத்திரை பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளின் தன்மையை உணர்த்துவதாகும்.

16. முஷ்டிகரம்:

சுட்டுவிரல், நடுவிரல், அணிவிரல், சிறுவிரல் ஆகிய நான்கும் அகங்கையோடு நன்கு இறுகப் பொருந்துமாறு அமைத்து அவற்றின்மேல் பெருவிரலை வளைத்துப் பதியப் பிடிப்பது 'முஷ்டி கரம்' எனப்படும். இம்முத்திரை ஆயுதங்களை இறுக்கமாகப் பிடிப்பதற்கும், மல்யுத்தத்திற்கும்

பயன்படுவதாகும்.

17. சிகர கரம்:

பெரு விரலை மேல்நோக்கி நேராக நிமிர்ந்து நிற்குமாறு அமைத்து, ஏனைய நான்கு விரல்களையும் ஒன்றாக வளைத்துப் பிடித்து நிற்கும் நிலை 'சிகர கரம்' எனப்படும். இது வில்லைப் பற்றிப் பிடிக்கப் பயன்படும்.

18. பூஸ்பரிச கரம்:

அமர்ந்திருக்கும் நிலையில் புறங்கை வெளிப்புறம் தோன்ற ஐந்து விரல்களும் இயல்பாக வளைந்து பூமியைத் தொட்டு நிற்க அமைந்த கரம் 'பூ ஸ்பரிச கரம்' எனப்படும். பூ - பூமி, ஸ்பரிசம் - தொடுதல். இம்முத்திரை ஞானநிலையினை உணர்த்துவதாகும்.

19. கடி கரம்:

இடுப்பில் பெருவிரல் தனியாகவும், மற்றவிரல்கள் நான்கும் சற்று வளைந்த நிலையில் நன்கு பதியுமாறு அழுந்தக் கையூன்றி சுட்டுவிரல் சிறுவிரல் இரண்டும் சற்று மேலெழுந்த நிலையில் அமைந்து விளங்கும் அழகுத்தோற்றத்திற்குக் 'கடி கரம்' என்று பெயர்.

20. ஊரு கரம் :

கை மணிக்கட்டு இடுப்புக்கு கீழே நன்கு வளைந்து தொங்குமாறு தொடைமீது பொருந்தவைத்து அமைக்கும் கரம் 'ஊரு கரம்' என வழங்கப்பெறும். இதில் சுட்டு விரலும் சிறு விரலும் தொடையை விட்டு சற்றே விலகி மென்மையாக வளைந்தும், நடுவிரலும் அணிவிரலும் தொடை மீது பதிந்தும் அமைதல் வேண்டும்.

மேற்கூறிய இரு முத்திரைகளையும் நின்றகோலத் திருமேனிகளில் காணலாம்.

21. ஆலிங்கன கரம் :

சுட்டு விரல் முதலிய நான்கு விரல்களையும் நெருங்க வளைத்து அமைத்து சுட்டு விரல் சிறுவிரல்களைச் சிறிது மேலெழச் செய்து, பெருவிரலை விலக்கி உயர்த்தி, தேவியின் திருமேனியை வளைத்து அணைக்கும் கரம் 'ஆலிங்கன கரம்' என்று பெயர் பெறும். ஆலிங்கனம் - தழுவுதல்.

22. தனுர்க் கரம் :

புறங்கை வெளியே தோன்றுமாறு அகங்கையை உட்பக்கமாக அமைத்து நடுவிரல் அணிவிரல்களை இணைத்து வில்லின்மேல் படியவைத்து, சுட்டுவிரல் சிறுவிரல்களைச் சற்று வளைத்து மெலெழச் செய்து பெருவிரலை உட்பக்கம் வளைத்து விரலின் நுனி வில்லின் மேல் பதிய வைத்திருக்கும் நிலைக்கு 'தனுர்க்கரம்' என்று பெயர்.

இத்தகைய தோற்றம் வில்லேந்திய தெய்வப்படிமங்களில் காணலாம். தனுர் - வில்.


23. டமருக கரம் :

பெருவிரல் தனித்தும் நடுவிரல் அணிவிரல் இரண்டும் தனித்தும் நிற்கும் படி இருபுறமும் வளைத்து உடுக்கையைப் பிடித்து நிற்க, சுட்டுவிரலும் சிறுவிரலும் மேலெழுந்து வளைந்து நிற்க அமைந்திருப்பது 'டமருக கரம்' எனப்படும்.

இது துடி என்னும் உடுக்கையை முழக்கும் நிலையைப் புலப்படுத்தும். டமருகம் - உடுக்கை.

24. தாடன கரம்:

சுட்டு விரல் முதலிய நான்கு விரல்களையும் ஒன்றாக இணைத்து மேல் நோக்கி அமைத்து, பெரு


22
23
24
25
26
27
28
28 அ
29
29 அ
30
31
32

விரலைச் சற்றே பின்னோக்கி அகலச் செய்து அமைக்கும் நிலைக்கு 'தாடன கரம்' என்று பெயர்.

தாடனம் - அடித்தல், தட்டுதல்

இது காறும் ஒற்றைக் கரங்களின் முத்திரை வகைகளைக் கண்டோம். இனி இரு கரங்களின் முத்திரை வகைகளைக் காண்போம்.

25. அஞ்சலி கரம் :

அபயகரத் தோற்றத்தோடு அமைந்த வலக்கரம் இடக்கரம் இரண்டையும் நெஞ்சுக்கு நேராகச் சேர்த்து அமைத்த தோற்றத்தை 'அஞ்சலி கரம்' என்பர்.

அஞ்சலி - வணக்கம்.

26. தியான கரம் :

அமர்ந்திருக்கும் நிலையில் இடக்கை ஐந்து விரல்களையும் வலப்பக்கம் நீட்டி ஒருசேர இணைத்து மடிமீது அங்கை மேல்நோக்கியவாறு படிய வைத்தும், இதேநிலையில் வலக்கையை அதன்மேல் படியவைத்து விரல்களை எல்லாம் இடப்பக்கம் நீட்டியும் அமைக்கும் கரம் 'தியான கரம்' எனப் பெயர் பெறும்.

இது யோக முத்திரையாகும்

27. புஷ்ப புட கரம் :

வரதமுத்திரைபோல அமைந்த வலக்கரம் இடக்கரம் இரண்டையும் தனித்தனியே நெஞ்சுக்கு நேரே அழகுற அமைத்து, விரல்களைச் சற்றே உள் நோக்கியவாறு வளைத்துக் காட்டும் நிலையில் அமைந்து இருப்பது, 'புஷ்ப புட கரம்' எனப்படும்.

இது மலர்களால் வணங்கும் தன்மையைப் புலப்படுத்துவதாகும்.

28. தர்ம சக்கர கரம் :

வலப்புறங்கையை மார்பின் அருகே வைத்து அபய முத்திரையாக விரல்களை வெளிப்பக்கமாகப் பிடித்து சுட்டுவிரலை மட்டும் முன்னே நீட்டி வளைத்து, பெருவிரலைத் தொடச் செய்து, இடக்கையை வலக்கைக்குப் பக்கத்தில் கொண்டுவந்து அகங்கையை உட்பக்கமாகப் பிடித்து, ஐந்து விரல்களையும் மேல்நோக்கி நீட்டிப் பிடித்து, இருகைகளும் நெருங்கி அமையுமாறு செய்து வலச் சுட்டு விரலால் இடக்கை நடுவிரலை நெருங்க அமைத்து சின்முத்திரைபோல தருமவிளக்கம் கூறும் முத்திரைக்குத் 'தர்மசக்கர முத்திரை' என்று பெயர்.

இது தர்ம சக்கரத்தை இயங்கச் செய்யும் தோற்றம்போல் இருத்தலின் இப்பெயர் பெற்றது.

வலக்கையை நெஞ்சுடன் பொருந்த அமைத்து வெளிப்பக்கமாக வியாக்கியான முத்திரையைப் போலப் பிடித்து இடக்கையை வலக்கைக்குப் பக்கத்தில் கொண்டுவந்து உட்பக்கம் காட்டி, சுட்டு விரலும் பெருவிரலும் நெருங்கி அமையவும். மற்றவிரல்கள் பின்னோக்கியமைந்து நிற்கவும் ஞானமுத்திரையாகப் பிடித்த கையின் தோற்றம் 'தர்மசக்கர பிரவர்த்தன' முத்திரை எனப்பெயர் பெறும்.

இதுவும் முற்கூறியது போன்ற மற்றொரு வகை முத்திரையாகும்.

இனி மேற்கூறிய முத்திரைகளுடன் அழகுத்தோற்றத்தைப் புலப்படுத்தும் வகையில் அமைந்த நான்கு வகைக் கர லட்சணங்களையும் காண்போம்.

29-29 அ. கஜ கரம் :

மணிக்கட்டு கீழ்முகமாக வளைந்து புறங்கை வெளிப்பக்கமாகத் தொங்க, முற்கூறிய தளிர்க்கரம்

போலவே விரல்கள் விளங்க அமைத்துக் காட்டும் நிலைக்கு 'கஜகரம்' என்று பெயர். மணிக்கட்டு மேலும் சற்று வளைய அமைப்பது மற்றொருவகை கஜகரம்.

இது யானையின் துதிக்கை போல விளங்குவதனால் இப்பெயர் பெற்றது.

30. தண்ட கரம் :

முற்கூறிய கஜகரத்தை முன்பக்கமாக நீட்டி அமைப்பது 'தண்ட கரம்' எனப்படும்.

இது அமர்ந்த நிலையில் மடக்கிய முழங்காலின் மீது மணிக்கட்டு அமைய விளங்கும் தோற்றமாகும். யோக தண்டத்தில் மணிக்கட்டை வைத்திருப்பதற்குப் பதிலாக முழங்காலின் மீது மணிக்கட்டினை வைத்துள்ள தன்மையைப் புலப்படுத்துவதாகும்.

தண்டம் - யோகதண்டம், வளைதடி.

31. டோல கரம் :

ஒடிந்த மரக்கிளை கீழே விழாமல் மரத்தில் தொங்கி நிற்பது போல தோள் பகுதியிலிருந்து நீண்டு தொங்குமாறும் விரல்கள் பல்லவ முத்திரையைக் காட்டி நிற்குமாறும் அமைந்து விளங்கும் கரம் 'டோல கரம்' எனப்படும்.

32. பிரசாரித கரம் :

தோளினை நேராக நீட்டிப் பல்லவ முத்திரையைக் காட்டி நிற்கும் கரத்தோற்றத்திற்குப் 'பிரசாரித கரம்' என்று பெயர்.



சிற்பங்களில் மகுட முடிகள்

மகுட முடிகள் என்பன மகுடமாகிய முடிகள் என்றும், மகுடம் போன்ற முடிகள் என்றும் பொருள்படும். தலைமுடியைப் பல்வேறு வகையாக முகத் தோற்றத்திற்கு ஏற்றவாறு அழகுத் தோற்றத்தை அதிகரிக்கச் செய்வதற்கு உரியதொரு கலை தமிழ் மக்களிடையே தோன்றிப் பண்டைக்காலந் தொட்டுப் பரவி இருந்தது. சங்க இலக்கியங்களில் துஞ்சுகழல், பனிச்சை, கொண்டை போன்ற பலவகைக் கூந்தல் அலங்காரங்கள் கூறப்பட்டுள்ளன.

கூந்தலை இரண்டு பகுதியாகவும் மூன்று பகுதியாகவும் பகுத்துக் கொண்டு அழகுறப் பின்னித் தொங்க விடுதல், ஐந்து பகுதியாகப் பகுத்துக் கொண்டு பின்னித்தொங்க விடுதல் போன்ற பலவகைக் கூந்தல் அலங்காரங்கள் உள்ளன.

மிகப் பழங்காலத்தில் மகளிர் கூந்தலைச் சீவி முடிப்பதற்குச் சீப்புக்கள் இல்லை. இதனை ''கழற் கனி வகுத்த குழற்சில் ஓதி'' எனவரும் சங்க இலக்கியப் பாடலால் உணரலாம். அதாவது (ஊமத்தங்காய் போன்று) முட்களை அடர்த்தியாக உடைய கழற்சிக்காய் கொண்டு கூந்தலைச் சீவி முடித்தனர் என அறியக்கிடக்கின்றது. பின்னர் யானைத் தந்தம், மாட்டுக்கொம்பு, மரம் போன்றவற்றால் சீப்புக்கள் செய்து பயன்படுத்தி, தலையை எழில் தோன்ற அலங்கரித்தனர்.

நன்கு எழிலுடன் அலங்கரிக்கப்பட்ட தலையின் மீது பொன்னால் செய்யப்பட்டு மணிகள் இழைத்த மகுடத்தைச் சூட்டி அம்முடிக்குப் பின்னும் சிறந்த முறையில் அழகூட்டுவர். பெரும்பாலும் மகளிர்க்குக் கூந்தல் அலங்காரம் செய்து மகுடம் அணிவிப்பர். ஆடவர்க்குப் பொன்னால் செய்யப்பட்ட மகுடம் சூட்டிப் பொலிவூட்டுவர்.

இத்தகைய தலையழகுக் கோலங்கள் தெய்வங்கட்கும், அரசர்க்கும், அரசியர்க்கும் குழந்தைகட்கும் அலங்கரிக்கப்பட்டன. இவ்வாறு எழிலூட்டப்பட்ட மகுடமுடிகள் பதின்மூன்று வகைப்படும். இவைகளை எல்லாம் நமது திருக்கோயில்களில் உள்ள சிற்பங்களில் கண்டு மகிழலாம். அவையாவன: ஜடாமகுடம், ஜடாபாரம், ஜடாமண்டலம், ஜடாபந்தம், விரிசடை, சுடர்முடி, கேசபந்தம், சிரஸ்திரகம், குந்தளம், தம்மில்லம், அளகசூடம், கிரீடமகுடம், கரண்டமகுடம் என்பனவாம். இவற்றின் உட்பிரிவுகளும் பலவுள்ளன. இவற்றுள் இன்றியமையாச் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.


ஜடாமண்டலம்:

முகத்திற்கு ஏற்றவாறு முக அகலத்தைப் போல மும்மடங்கு குறுக்களவுடையதாக அமைத்து தலையின் பின்னே பிடர்க்கண் திரிசடைகளாக வகுத்துப் பின்னப்பட்ட சடைகளை வட்டமாக அமைத்த கோலத்திற்கு ஜடாமண்டலம் என்று பெயர்.


இந்த எழிற்கோலம் தட்சிணாமூர்த்தி, பிட்சாடனர், மாணிக்கவாசகர், புத்தர், திருவானைக்கா பைரவர் செப்புச்சிலை போன்ற படிவங்களில் காணலாம்.

ஜடாபரம்:

தலையின் இரண்டு பக்கங்களிலும் திரிசடையாக அமைக்கப்பட்ட தொகுதியும் சுருள்சடையாக முறுக்கி அமைக்கப்பட்ட தொகுதியும் பொருந்த மிகவும் அடர்த்தியாகத் தொங்கவிட்டு அமைந்த எழிற்கோலம் ஜடாபாரம் எனப்படும்.



1. ஜடாமகுடம்
2. ஜடாபாரம்
3. ஜடாமகுடம் (வேறுவகை)
4. ஜடாபாரம் (வேறுவகை)


ஜடாபந்தம்
ஜடாபந்தம்
சுடர்முடி
விரிசடை

இத்தகைய எழிற்கோலத்தினை தட்சிணாமூர்த்தி, ஐயனார், இவ்வாதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலினுள் அருள் வழங்கும் ஸ்ரீ மூகாம்பிகை முதலிய திருவுருவங்களில் காணலாம்.

விரிசடை :

திரி சடைகளாக வகுக்கப்பட்டு தலையின் இருபக்கமும் வீசிப்பறந்து வளைந்து நிற்கும் சடைக்கோலம் விரிசடை எனப்படும். இந்த அழகுத் திருக்கோலம் நடராஜப் பெருமானின் திருவுருவங்களில் கண்டு மகிழலாம். ஆனந்தக் கூத்தன் ஆடிக்கொண்டே இருப்பதனால் சடைகளும் விரிந்து பறந்து தொழிற்படுவது போல் காணப்படுகின்றன. சில சிற்பங்களில் விரிசடைகள் இல்லாமல் தலை உச்சியில் சடைகள் எல்லாம் ஒரு சேரக்கட்டி, மேல் நோக்கியவாறு (உச்சிக் கொண்டைபோல) அமைந்துள்ளன. சிதம்பரம் தலத்தில் விளங்கும் ஆடல் வல்லானின் சடைகள் விரிசடையாக அமையாமல், பின்தாழ்சடைகளாக உள்ளதை அபிஷேக காலங்களில் காணலாம். இது தனிச்சிறப்புடைய தாகும். மேலும் அறிய, நடராஜப் பெருமானின் விரிசடை அழகினை இவ்வாதீன வெளியீடான ''ஆடல்வல்லான்'' எனும் புத்தகத்தில் காணலாம்.


சுடர்முடி :

கொழுந்து விட்டெரியும் தீச்சுடர் போலக் கூந்தலை மேல் நோக்கிய நிலையில் அடுக்கடுக்காக உச்சி கூர்மையுடையதாக (வேம்பிலைபோல வெளித்தோற்றம்) அமைந்த கோலம் சுடர்முடி எனப்படும். இக்கோலத்தைக் காளியம்மன், மாரியம்மன், பிடாரி, அகோரவீரபத்திரர் போன்ற உக்ரமுடைய தெய்வத் திருவுருவங்களில் காணலாம்.


கேசபந்தம்:

உச்சந் தலையிலிருந்து ஒருமுக அளவு, ஒன்றரைமுக அளவு அல்லது இரண்டு முக அளவுடைய உயரங்கொண்டதாகவும் செங்குத்தாகவும் தூக்கி முடிக்கப்பட்ட கோலத்திற்கு கேசபந்தம் என்று பெயர். இதன் அடிப்பகுதியில் அதாவது நெற்றிக்குமேல் மணி வடங்களை வட்டமாக அமைத்து முகத்திற்கு மேலும் எழிலூட்டுவதாக அமைப்பதுண்டு.

இத்தகைய திருக்கோலம் சந்திரசேகரர், கல்யாணசுந்தரர், சோமாஸ்கந்தர், கங்காவிசர்ஜனர், உமாதேவியார், கலைமகள், சாவித்திரி போன்ற திருவுருவங்களில் காணப்படும்.



ஜடாமண்டலம்



கேசபந்தம்



சர்ப்ப மௌலி



ஜடாமண்டலம்

தெய்வத்திருமேனிகளின் ஆசனங்கள்

ஆசனம் என்பது இருக்கை என்றும் பீடம் என்றும் பொருள்படும். ஒருபடிவம் அமர்ந்துள்ள நிலையையும் ஆசனம் எனலாம். அப்படிவம் அமர்ந்துள்ள பீடத்தையும் ஆசனம் எனலாம். எனவே ஆசனம் என்னும் சொல்லுக்கு இடத்திற்கு ஏற்பப் பொருள் கொள்ளவேண்டும். ஆசனம் என்பது பொதுவாக எழிலூட்டுவதற்கும் சிறப்பாக யோகத்திற்கும் மன அடக்கத்திற்கும் பயன்படும். இத்தகைய ஆசனம் ஐந்துவகைப்படும். அவை ஸ்தானகம், ஆசனம், சயனம், ஸ்தானாசனம், சயனாசனம் என்பனவாம்.

ஸ்தானகம் என்பது நின்ற கோலத்தையும், ஆசனம் என்பது அமர்ந்த கோலத்தையும், சயனம் என்பது கிடந்த கோலத்தையும், ஸ்தானாசனம் என்பது நின்ற கோலத்தைச் சார்ந்த நிலைகளையும், சயனாசனம் என்பது கிடந்த கோலத்தைச் சார்ந்த நிலைகளையும் உணர்த்துவனவாகும்.

இனி இவ்வாசன நிலைகளின் தன்மைகளைச் சற்று விரிவாகக் காண்போம்.

1. ஸ்தானகம்

நின்ற கோலத்தை உணர்த்தும் ஸ்தானகம் நான்கு வகைப்படும்.

1. சமபாத ஸ்தானகம் :

இது நின்ற கோலத்தில் பாதங்களைச் சமமாக வைத்து நிற்கும் நிலையாகும். அதாவது உடலை வளைக்காமல் நேராக நிமிர்ந்து நின்று கை கால்களை நெருக்கமாக வைத்துநிற்கும் நிலையாகும். இதற்குச் சமபாத ஸ்தானகம் என்று பெயர்.

2. வைதஸ்திக ஸ்தானகம் :

மேற்கூறிய ஆசனத்தைப் போலப் பாதத்தின் பெருவிரல்கள் இரண்டும் இரண்டுசாண் அளவு இடை வெளியுள்ளதாக அகல விரித்து நிற்கும் நிலைக்கு வைதஸ்திக ஸ்தானகம் என்று பெயர்.

3. அர்த்த வைதஸ்திக ஸ்தானகம் :

முற்கூறிய வைதஸ்திக ஸ்தானத்தில் வலக்கால் மட்டும் முன்போல் ஒருசாண் அளவு இடைவெளியுள்ளதாக அகலவிரித்து, இடக்கால் இருந்த நிலையிலேயே அமைத்து நிற்கும் நிலைக்கு 'அர்த்த வைதஸ்திக ஸ்தானகம்' என்று பெயர். அதாவது வைதஸ்திக ஸ்தானத்தில் பாதி என்பது பொருள்.

4. காயோத் சர்க்கம்:

நேரான நிலையில் தலைநிமிர்ந்து நின்று பாதங்களைச் சமமாக வைத்து கைகள் தொடைகளைப் பொருந்தி இருக்குமாறு தொங்கவிட்டு நிற்கும் நிலைக்குக் 'காயோத் சர்க்கம்' என்று பெயர். இதற்கு 'ஆஜானு லம்பபாகு' என்று மற்றொரு பெயரும் உண்டு.

இது சமண சமயத்தில் நின்றகோலப் படிமங்களுக்கு அமைக்கப்படும்.

2. ஆசனம்

ஒரு பீடத்தில் அமர்ந்து கால்களை வெவ்வேறு வகையாக வைத்திருக்கும் நிலைக்கு ஆசனம் என்று பெயர். இது ஒன்பது வகைப்படும்.

1. சுகாசனம்:

ஓர் ஆசனத்தின் மீது சாய்வின்றி நேராக அமர்ந்து ஒருகாலை ஆசனத்தின்மீது. நேராக மடித்து வைத்து மற்றொரு காலை நேராகத் தொங்கவிட்டிருக்கும் நிலைக்குச் ''சுகாசனம்'' என்று பெயர்.

2. பத்மாசனம்:

உடலை நேராக அமைத்து இரண்டு பாதங்களையும் குறுக்காக இடக்கணுக்கால் கீழேயும் வலக்கணுக்கால் மேலேயும் பொருந்துமாறு பதிய வைத்து உள்ளங்கால் இரண்டும் மேல்நோக்கியதாக அமைந்த நிலைக்குப் 'பத்மாசனம்' என்று பெயர்.

இது மலர்ந்ததாமரை போல அமைந்திருப்பதனால் இப்பெயர் பெற்றது. இதற்குக் கமலாசனம் என்று மற்றொரு பெயரும் உண்டு.

பத்மாசனத்திற்குக் கூறியபடி பாதங்களை அமைக்கவேண்டும். ஆனால் ஒருபாதம் (இடப்பாதம்) கீழும் மற்றொரு பாதம் மேலுமாக ஒன்றன் மீது ஒன்று பொருந்துமாறு அமைக்கும் நிலைக்கு அர்த்தபத்மாசனம் என்று பெயர். பத்மாசன அமைப்பில் பாதி அமைப்பு உடையதாக அதாவது இரு பாதங்களும் மேல் நோக்கியதாக இல்லாமல் ஒன்று மட்டும் (பாதிமட்டும்) மேல் நோக்கியதாக அமைந்திருப்பதனால் அர்த்த பத்மாசனம் எனப்பட்டது.

இது பத்மாசனத்தின் மற்றொரு வகையாகும்.

3. லளிதாசனம்:

இருகால்களையும் பீடத்தின்மீது வைத்து அமர்ந்து, ஒருகாலைப் பீடத்தின் மீது மடக்கிப் படுக்கையாக வைத்து, மற்றொருகாலை மடக்கி நிறுத்திய நிலைக்கு 'லளிதாசனம்' என்று பெயர்.

இது விநாயகர், பூதகணங்கள் ஆகிய படிமங்களில் காணப்படும்.

4. மகாராஜ லீலாசனம்:

மேலே கூறிய நிலையில் வலக்கையை மடித்து, தூக்கி நிறுத்திய வலமுழங்காலின் மீது மடித்த வல முழங்கையை வைத்து நீட்டி, இடக்கையைப் பக்கத்தில் ஊன்றி உடலைச் சற்று வளைத்து இடக்காலைப் படிய வைத்து மடக்கி அமர்ந்திருக்கும் நிலைக்கு மகாராஜ லீலாசனம் என்று பெயர்.

இதனைப் பௌத்த படிமங்களில் காணலாம்.

5. வீராசனம்:

பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் வலக்காலைத் தொங்கவிட்டு ஊன்றி, இடக்காலை வலமுழங்காலின் மீது படியவைத்து நீட்டி, உடலைநேராக நிமிர்த்தி அமர்ந்திருக்கும் நிலைக்கு வீராசனம், என்று பெயர். இதற்கு 'இராஜலிங்காசனம்' என்று மற்றொரு பெயரும் உண்டு.


இது பெருமிதத்தையும் தலைமைத் தன்மையையும், ஆற்றலையும் புலப்படுத்தும் ஆசனமாகும். தட்சிணாமூர்த்தி படிவத்துக்கு இது சிறப்பாக அமைந்ததாகும்.

பீடத்தில் இரு கால்களையும் நெருங்கவைத்து அமர்ந்து வல முழங்காலின் மீது இடக்கால் பரடு பொருந்துமாறும், இட முழங்காலின் கீழே வலக்கால் பரடும் பெருவிரலும் படுமாறும் அமர்ந்திருக்கும் நிலை 'வீராசனத்தின்' மற்றொரு வகையாகும்.

இதனை வள்ளுவர், கம்பர் படிமங்களில் காணலாம்.

6. உத்குடிகாசனம்:

ஆசனத்தில் அமர்ந்த நிலையில் ஒருகாலைக் கீழே படியுமாறு தொங்கவிட்டு, மற்றொரு காலை


சுகாசனம்
வீராசனம்
இராஜலிங்காசனம்
பத்மாசனம்
உத்குடிகாசனம்
அர்த்த பத்மாசனம்
அர்த்த பத்மாசனம்
மகாராஜ லீலாசனம்
ஸ்வஸ்திக்காசனம்

மடக்கி, அமர்ந்துள்ள ஆசனத்தின்மீதே ஊன்றிய நிலையில் அமர்ந்துள்ள அமைதிக்கு 'உத்குடிகாசனம்' என்று பெயர்.

இது சிறப்பாக யோக தட்சிணாமூர்த்தி, ஐயனார் படிமங்களில் காணப்படும்.

7. யோகாசனம் :

மனத்தை ஒருமுகப்படுத்திப் பத்மாசன நிலையில் அமர்ந்திருக்கும் நிலைக்குப் பொதுவாக யோகாசனம் என்று பெயர்.

ஆசனத்தில் அமர்ந்து இரு கால்களையும் சுவஸ்திகம்போல் குறுக்காக மடித்து, முழங்கால் இரண்டையும் யோக பட்டத்தால் பிணித்து சற்று மேலெழச்செய்து, வலது முழங்கால் மீது வலக்கரத்தை வைத்துச் சின்முத்திரை காட்டி, இடது முழங்காலின்மீது இடது முழங்கை அமையுமாறு (யோகதண்டத்தில் வைத்திருப்பது போல) நீட்டி, நிமிர்ந்திருந்து மூக்கின் நுனியைக் கண்கள் நோக்கியவாறு அமைந்த நிலைக்கு 'யோகாசனம்' என்று பெயர்.

8. ஸ்வஸ்திகாசனம் :

அமர்ந்த நிலையில் கால்கள் இரண்டும் ஒன்றற்கொன்று குறுக்காக வைத்திருக்கும் நிலைக்கு 'ஸ்வஸ்திகாசனம்' என்று பெயர். ஞான முத்திரையும் மூக்கின்நுனியை நோக்கிய கண்கள் அமைதியும் இதற்கு உண்டு.

9. கருடா சனம் :

வல முழங்காலைக் கீழே ஊன்றி, பாதத்தைப் பின்னே நீட்டி, இடக்காலை மடக்கிக் கீழே ஊன்றி அமர்ந்திருக்கும் நிலைக்குக் 'கருடாசனம்' என்றுபெயர்.

திருமால் வாகனமாகிய கருடனுக்கு உரிய ஆசனம்.

3. சயனம்

ஆசனத்தின் மீது படுத்துள்ள நிலையில் கைகளையும் கால்களையும் உடலையொட்டி நீட்டிக் கிடக்குமாறு அமைந்த கோலத்திற்குச் 'சயனம்' என்று பெயர்.

4. ஸ்தானாசனம்

இது நின்ற கோலத்தைச் சார்ந்த நிலைகளை உணர்த்துவதாகும். இது ஏழுவகைப்படும்.

1. வைசாக ஸ்தானகம்:

நின்ற கோலத்தில் ஒரு காலைப் பதிய ஊன்றி, மற்றொரு காலை இரண்டரைசாண் அளவாக முன் வைத்து நிமிர்ந்து நிற்கும் நிலை 'வைசாக ஸ்தானகம்' என்று பெயர் பெறும்.

வில் ஏந்திநிற்கும் படிவங்களில் இந்தக் கோலத்தைக் காணலாம்.

2. வைஷ்ணவம்:

நின்ற கோலத்தில் ஒரு காலைப் பதிய ஊன்றி மற்றொரு காலைச் சிறிது மடக்கி உடல் வளைவோடு நிற்கும் நிலை வைஷ்ணவம் எனப்படும்.

இது விஷ்ணுவுக்கு உரியதாகும். இந்த நிலையில் ஒரு கால் சற்று வளைந்த நிலையில் அமைந்திருப்பதனால் இதற்கு 'ஸ்தித குஞ்சிதம்' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

3. ஸ்வஸ்திகாசனம்:

முற்கூறிய ஸ்வஸ்திகாசனம் அமர்ந்த நிலையில் உள்ளது. ஆனால் இது நின்ற நிலையில் ஒரு

காலைப்பதிய ஊன்றியும், ஒரு காலைக் குறுக்கே வளைத்து விரல்களை மட்டும் ஊன்றியும் நிற்கும் நிலையில் உள்ளது. எனவே இதுவும் 'ஸ்வஸ்திகாசனம்' எனப்பட்டது.

4. ஆலீடாசனம் :

நின்ற கோலத்தில் இடக்காலை முன்னே சிறிது மடக்கி எட்டி வைத்து வலக்காலைப் பின்னோக்கி வைத்து நிற்கும் நிலைக்கு ' ஆலீடாசனம்' என்று பெயர்.

இது வில்லை வளைத்து அம்பு தொடுத்து எய்யும் பாங்கில் அமைந்து விளங்குவதாகும்.

5. பிரத்யா வீடாசனம் :

இது வில்லிலிருந்து அம்பை எய்தபின் உடலின் முறுக்கிய விசை குறைந்து சமநிலையில் அமைந்த வீரனின் நிலையை விளக்குவதாகும். இதற்குப் 'பிரத்யா வீடாசனம்' என்று பெயர்.

6. ஊர்த்துவ ஜானு :

ஒரு காலைப்பதிய ஊன்றி, மற்றொரு காலை முழங்கால் மடியுமாறு வளைத்துப் பீடத்தின் மீது தூக்கி வைத்து ஊன்றி நிற்கும் கோலம் 'ஊர்த்துவஜானு' எனப்படும்.

7. ஏகபாதஸ்தானகம் :

நின்ற நிலையில் ஒரு காலை ஊன்றி மற்றொரு காலை மடக்கி ஊன்றி நிற்கும் காலின் முழங்காலின் மீது மடக்கிய காலின் பாதம் படியுமாறு வைத்து நிற்கும் நிலைக்கு 'ஏகபாதஸ்தானகம்' என்று பெயர்.

இது தவக்கோலத்திற்கு உரியது.

ஏகபாத ஸ்தானகம் போலவே ஒரு காலைப் பதிய ஊன்றிநின்று, மற்றொரு காலை உள்ளங்கால் வானோக்கியதாக அமைத்துக் குய்யத்தைப் பொருந்துமாறு வைத்து நிற்கும் கோலம் ஏகபாதஸ்தானகத்தின் மற்றொரு வகையாகும்.


இது தவநிலைக்கு உரியதாகும்.

5. சயனாசனம்

ஆசனத்தின் மீது தலையையும் கைகால்களையும் நீட்டியமைத்து மல்லாந்து படுத்த நிலைக்குச் 'சயனாசனம்' என்று பெயர்.

இதே நிலையில் ஒருக்கணித்துப் படுத்து வலக்கை தலையைத் தொட்டுக் கொண்டிருக்கவும், இடக்கை இடத்தொடையின் மீது நீட்டி அமைத்துக் கிடக்கும் நிலைக்கு அர்த்த சயனம் என்று பெயர்.

இவை இரண்டும் விஷ்ணுமூர்த்தத்திற்கு உரியவையாகும்.



தேவதா ரூபங்களின் முத்திரைகள் - ஆயுதங்கள் பிறபொருட்கள்

போர்க் கருவிகள் :

சக்தி, சூலம், சங்கு, சக்கரம், வஜ்ரம், தண்டம், உடைவாள், சுரிகை, கேடயம், வில், அம்பு, மழு, கதை, சம்மட்டி, ஈட்டி, வேல்.

தொழிற் கருவிகள் :

கலப்பை, உலக்கை, கொட்டாபுளி, சிருக், சிருவம், தந்தம், கத்தரி, எழுத்தாணி, தாளம், உழவாரப்படை, அங்குசம், பரசு, குந்தாளி, அரிவாள், சாட்டை, யோக தண்டம், முழக்கோல், உளி.

இசைக் கருவிகள் :

யாழ், (பஞ்ச மரபு நூலில் கூறப்பட்டுள்ள யாழின் வகைகளாவன - பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், வில்யாழ், நாரதயாழ், கீசகயாழ், ஆயிரப் பேரியாழ் என்பன), வீணை, குழல், முரசு, மத்தளம், பஞ்சமுக வாத்யம், உடுக்கை, எக்காளம், மிருதங்கம், தம்புரா.

உயிரினங்கள் :

இடபம் (ரிஷபம்), சிம்மம், குதிரை (அஸ்வம்), மான், அஜம் (ஆடு), பசு , மூஷிகம், ஞமலி (நாய்), ஆமை, அன்னம், மயில், சேவல், கிளி, காகம், சர்பம் (பாம்பு), முயலகன், வேதாளம், பூதம், கற்பக விருக்ஷம், காமதேனு, புருஷாமிருகம், யாளி, யானை.

பூக்கள் :

செந்தாமரை, குவளை, அல்லி, வெண்தாமரை, ஊமத்தை, எருக்கம்பூ, செங்கழுநீர், கொன்றை.

பொதுப் பொருள்கள் :

மணி, கண்ணாடி, தீபம், கலசம், கமண்டலம், கெண்டி, அக்ஷமாலை, ஸ்படிகமாலை, ஏடு, கொடி, கபாலம், கட்வாங்கம், குடை, வீரக்கழல், சாமரம், சிலம்பு, செங்கோல், தலைக்கோல், தீச்சுடர், கரும்பு வில் , மலர்க்கணை, மோதகம், கொக்கிறகு, கங்கை, நெற்கதிர், கும்பம், மலை, பாசம் , லிங்கம், பலிபீடம் , திருவாசி இன்னும் எத்தனையோ பொருள்கள் உள்ளன.


*காளிகா புராணத்தில் கூறப்பட்ட முத்திரைகள்

(65-வது அத்தியாயம்)

1. தேனு
2. சம்புடம்
3. ப்ரான்ஜலி
4. பில்வ
5. பத்மக
6. நாராசம்
7. முண்டம்
8. தண்டம்
9. யோநி
10. அர்த்தயோநி
11. வந்தனி
12. மகாமுத்ரா
13. வைஷ்ணவி
14. மகாயோநி
15. பகம்

★ ஆதீனத்தின் சரஸ்வதிமகால் கையெழுத்துப் பிரதிப்புலத்தில் காணப்பட்ட செய்தியாகும். இதனைத் தொகுத்து அளித்தோர் இவ்வாதீனத்தின் 17-வது குருமூர்த்திகள்.

சிற்பங்களில் விளங்கும் ஆயுதங்கள்




ஆயுதங்களின் விபரம்

1.பாசம், 2. அங்குசம், 3. தந்தம், 4. வேதாளம், 5. சக்தி, 6. அம்பு, 7. வில், 8. சக்கரம், 9.கத்தி, 10. கேடகம், 11.சம்மட்டி, 12. கதை, 13. நாகபாசம், 14. சூலம்

இவ் ஆயுதங்களின் விளக்கங்களை ஆதீன வெளியீடு எண் 100ல் காண்க.

சிற்பங்களில் விளங்கும் ஆயுதங்கள்



ஆயுதங்களின் விபரம்

15.குந்தாலி, 16.மழு, 17.கொடி, 18.தண்டம், 19.கமண்டலம், 20.பரசு, 21.கரும்புவில், 22.சங்கம், 23.புஷ்பபாணம், 24.கோடரி, 25.அக்ஷமாலை, 26சாமரம், 27.கட்டுவாங்கம், 28. தீ அகல், 29. வீணை

இவ் ஆயுதங்களின் விளக்கங்களை ஆதீன வெளியீடு எண் 100ல் காண்க.

16. புடகம்
17. நிஸ்ஸங்கம்
18. அர்த்த சந்திரன்
19. அங்கம்
20. த்விமுகம்
21. சங்கம்
22. முஷ்டிகா
23. வஜ்ரம்
24. ஆபத்தம்
25. விமலம்
26. கடம்
27. துங்கம்
28. புண்ட்ரம்
29. சிகரிணி
30. அர்த்ததேனுக
31. சம்மீலினி
32. குண்டம்
33. சக்கரம்
34. சூலம்
35. சிம்மமுகி
36. கோமுகம்
37. ப்ரோந்நாம
38. உன்மைநம்
39. பிம்பம்
40. பாசுபதம்
41. சுத்தம்
42. த்யாகம்
43. சாதனீ
44. ப்ரசாதனீ
45. உக்ரமுத்திரை
46. குண்டலி
47. வ்யூகம்
48. த்ரிமுகம்
49. அஸிவல்லி
50. யோகம்
51. பேதம்
52. சம்மோகனம்
53. பாணம்
54. தனுஸ்
55. தூணிரம்

''தந்திரசாரம்'' என்ற நூலில் காணப்படும் முத்திரைகள்

சிவனுடைய முத்திரைகள்

1. லிங்கம்
2. யோனி
3. த்ரிசூலம்
4. அக்ஷமாலா
5. அபயம்
6. மிருகம்
7. கட்வாங்கம்
8. கபாலம்
9. டமரு

விஷ்ணு முத்திரைகள் :

1. சங்கம்
2. சக்கரம்
3. கதை
4. பத்மம்
5. வேனு
6. ஸ்ரீ வத்சம்
7. கௌஸ்துபம்
8. வனமாலா
9. ஞானமுத்ரா
10. பில்வா
11. காருடா
12. நாரசிம்ஹீ
13. வாராகீ
14. ஹயக்ரீவி
15. தனுஸ்
16. பாணம்
17. பரசு
18. ஜகன்மோகினி
19. காமமுத்ரா

கணேச முத்திரைகள் :

1. சப்தமுத்திரை
2. தந்தம்
3. பாசம்
4. அங்குசம்
5. விக்னமுத்திரை
6. பரசு
7. வட்டுமுத்திரை
8. பீஜ பூர முத்திரை

அக்னி முத்திரை :

1. சப்தஜிஹ்வா

சூர்ய முத்திரை : 1. பத்மம்

சக்தி முத்திரைகள் 31 :

1. பாசம்
2. அங்குசம்
3. வரா
4. அபீதி
5. தனுஸ்
6. பாணம்
7. கட்கம்
8. கர்மமுத்திரை
9. முசலம்
10. துர்க்கை
11. சக்கரம்
12. லக்ஷ்மி
13. வீணா
14. புஸ்தகமுத்ரா
15. வ்யாக்யான்
16. காலினீ
17. கும்பமுத்ரா
18. தந்தம்
19. பிரார்த்தனா
20. அன்ஜலி
21. காலகர்ணிகா
22. விஸ்மயம்
23. நாதமுத்ரா
24. பிந்து
25. சம்ஹாரம்
26. மத்ஸ்யம்
27. கூர்மம்
28. முண்டம்
29. லேலிஹான
30. மகாயோநி
31. தூமகேது

ஆவாகன முதலிய முத்திரைகள் 9 :


1. ஆவாஹினீ
2. ஸ்தாபனீ
3. சந்நிதாபினீ
4. சம்போதினீ
5. சம்முகீகரணி
6. சகலாக்ருதி
7. அவகுண்டனம்
8. தேனு
9. மகாமுத்ரா

சக்தி சம்பந்தமான சில முத்திரைகள் 12 :

1. திரிகண்டா
2. சம்ரோக்ஷபகாரணீ
3. வித்ராவினீ
4. ஆகர்ஷணீ
5. வச்யகரி
6. உன்மாதினி
7. மகாங்குசா
8. கேசரி
9. பீஜம்
10. யோனிமுத்ரா
11. சௌபாக்யதாயினீ
12. பூதினீ

1.	காளிகாபுராணத்தில் முத்திரைகள்	..	55
2.	தந்திரசாரம் விஷ்ணு முத்திரைகள்	..	19
3.	சிவன் முத்திரைகள்	..	9
4.	கணேச முத்திரைகள்	..	8
5.	அக்னி முத்திரை	..	1
6.	சூரியன் முத்திரை	..	1
7.	சக்தி முத்திரைகள்	..	31
8.	ஆவாஹனாதி முத்திரைகள்	..	9
9.	சக்திசம்பந்தமான முத்திரைகள்	..	12
	ஆக முத்திரைகள்	..	145


சிற்பங்களில் விளங்கும் பொருள்கள்



சிற்பங்களில் விளங்கும் பொருள்களும் வாகனங்களும்



இவைகளின் விளக்கங்களை ஆதீன வெளியீடு எண் *123*ல் காண்க.



கரங்களும் ஆயுதங்களும்

(1) அங்குசம் (2) ஸ்வதந்தம் (3) பாசம் (4)கேடகம் (5) வாள் (6) சேவல் (7) மழு (8) &(13) திரிசூலம் (9) தோமரம் (10) & (11) வஜ்ரம் (12) அக்கினி (14) டங்கா (15) கதை (16) வில் (17) அம்பு (18) & (19) தாமரை (20) கட்வாங்கம் (21) சக்தி வேல் (22) கண்ணாடி (23) & (28) டமருகம் (26) - (30) அக்கமாலை (27) - (31) கமண்டலம் (29) ஏடு (32) பாம்பு (33) - (34) கபாலம் (35) கொடி (36) மான்.

அஷ்டாட்ட விக்ரஹ லீலையில் (சிவபராக்கிரமத்தில்) தட்சிணாமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி, வீணாதட்சிணாமூர்த்தி, குருமூர்த்தி.

★ நைமிசாரண்ணியம் என்பது வடஇந்தியாவிலுள்ள ஓர் புண்ணியத் தலமாகும். ஒளிமயமாகிய சிவபெருமானே பரம்பொருள் என்று உணர்ந்த பலவாயிர முனிவர்கள் அத்திருத்தலத்தே வாழ்ந்து வந்தனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் வசிட்டர், வேதாரணியர், புலத்தியர், துருவாசர், சுகர், மாண்டவியர், சம்வர்த்தர், சுனச்சேபர், சம்புபத்தர், சதானந்தர், ஆத்திரேயர், சௌனகர், புலகர், சமதக்கினி, சங்கர் மாதேசர், லிகிதர், பராசர், குற்சர், கற்கர், நாரதர், விசுவாமித்திரர், பரத்துவாசர், உத்தாலகர், காசிபர், வாமதேவர், கண்ணுவர் முதலியவர்களாவர். திருமேனி முழுதும் திருவெண்ணீறு பூசித் திரிபுண்டரமணிந்து, அக்கமாலை சூடிச் சிவத்தியானத்தில் மூழ்கி வேதாகமங்களால் இம்முனிவர்கள் சிவனைத் துதித்து வாழ்ந்து வந்தனர்.

அக்காலத்தே நான்கு வேதங்களையும் பதினெண் புராணங்களையும் ஐயந்திரிபற ஸ்ரீ வியாச முனிவருடன் கற்ற மாணவர்களுள் சிறந்தவரான சூதபுராணிகர் நைமிசாரண்ணியத்திற்கு எழுந்தருளினார். அங்கிருந்த முனிவர்கள் தங்களைத் துன்புறச் செய்யும் இடுக்கண் களைந்து இஷ்டசித்தி அருளும் அறுபத்துநான்கு மூர்த்தமாகிய சிவபராக்கிரமத்தை விளக்கிக்கூற வேண்டுகிறோம்' என்று கேட்டுக் கொண்டனர். சிறிது நேரம் சென்றபிறகு சூதமுனிவர் அங்குள்ள முனிவர்களை நோக்கித் ''தாங்கள் கேட்ட சிவபராக்கிரமம் பதினெண் புராணங்களில் சிறந்த ஸ்ரீஸ்கந்த மகா புராணத்தில் உள்ள சனற்குமாரசங்கிதை, சூதசங்கிதை, சங்கரசங்கிதை, விட்டுணு சங்கிதை, பிரம சங்கிதை, சூரிய சங்கிதையாகிய ஆறு சங்கிதைகளுள், சனற்குமார சங்கிதையில் மூர்த்திமான்மியம் உரைத்த சர்க்கத்தில் திருநந்தி தேவர் சனற்குமார முனிவருக்குக் கூறியதாக உள்ளது. இதனை அவர்பால் தெரிந்த வியாசமுனிவர் எனக்கு உபதேசித்தருளினார். அதனை ஒரு வகையாக உங்களுக்குக் கூறுகின்றேன்'' எனக் கூறிச் சிவபராக்கிரமப் புகழைக் கூறலானார்.

தட்சிணாமூர்த்தி

சிவபெருமான் கயிலாய மலையில் அனைத்துத் தேவர்களும் தங்களுக்கு வேண்டிய வரங்களைப் பெறும்படி திருவோலக்கங்கொண்டு இருந்தார். அப்போது பார்வதி தேவியார் எழுந்து சிவபெருமானது திருவடிகளை வணங்கி, ''எம்பெருமானே! எனக்குத் தாட்சாயினி என்னும் பெயர் தேவர்களை வணங்காத தட்சனின் மகளாகப் பிறந்ததால் வந்தது. ஆகவே அந்தப் பெயர் மாறும் வண்ணம் வரம் வழங்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். சிவபெருமான் மகிழ்ச்சி கொண்டு, ''மாதே! மலை மன்னன் உன்னை மகளாகப் பெறுவதற்காக நெடுநாட்களாக இடைவிடாமல் தவம் புரிகின்றான். ஆகையால் நீ அவனுக்கு மகளாக இருப்பாயாக. நான் உன்னை அங்கு வந்து மணம் செய்து கொள்கிறேன்,'' என்று கூறினார்.

அம்மையார் சிவபெருமானது கட்டளையை ஏற்று அவரது திருவடிகளைத் தொட்டு வணங்கிக் கயிலாயத்தை விட்டு நீங்கினார். பின்னர் இமயமலையை அடைந்து அங்கே அருந்தவம் செய்யும்

★அட்டாட்ட விக்ரக லீலை என்பது சிவபிரான் அறுபத்துநான்கு திருவுருவமைந்து அடியார்களுக்கு அருள்செய்த திருவிளையாடல் எனப்படும். இதனையே அட்டாட்ட மூர்த்தம் என்றும் சிவபராக்கிரமம் என்றும் வழங்குவர்.



தட்சிணாமூர்த்தி



யோக தட்சிணாமூர்த்தி

மலைமன்னனின் ஆசை நிரம்ப, ஒரு நீர் நிலையிலிருந்த தாமரை இலையின் மேல் குழந்தை வடிவம் கொண்டிருந்தார். பர்வதராசன் அக்குழந்தையைக் கண்டு 'தாம் செய்த தவத்தின் பலன் கிடைத்தது' என்று நினைத்து மகிழ்ந்தான், பின் அக்குழந்தையை எடுத்துக்கொண்டு மனையை அடைந்தான். அங்கு அவனின் மனைவி மேனையின் கையில் அக்குழந்தையைக் கொடுத்தான், மேனையும் அக்குழந்தையை நன்றாக வளர்த்து வந்தாள். தேவியார் தமது ஐந்து வயதில் இருந்து தவம் மேற்கொண்டு பின்னர்ச் சிவபெருமானை மணந்தார்.

தேவியார் தவத்தில் இருக்கையில் பிரமனின் புத்திரர்களாகிய சனகன், சனந்தனன், சனாதனன், சனத்குமாரன் என்னும் முனிவர்கள் நான்கு பேரும் வேத ஆராய்ச்சி செய்து முடித்துவிட்டு, பலவகையான தவங்களை முடித்துவிட்டு, மீண்டும் கயிலாய மலையை அடைந்தனர். அங்கே முதற் காவலாய் உள்ள நந்தி தேவரை வணங்கிவிட்டு, பின் அவர் அனுமதி பெற்று சன்னதியினுள் சென்று கண்களாரச் சிவபெருமானைத் தரிசித்து, தரையில் விழுந்து வணங்கிப், பின்னர் கைகள் இரண்டையும் தலையின்மேல் சேர்த்து வைத்து, ''அருட்கடலே! அனைத்து வகையான ஆரணப் பொருளை ஆராய்ச்சி செய்தும் அடியேங்களின் மனம் அலைந்து கொண்டிருக்கின்றன''. ''எங்களின் மனம் ஓரிடத்தில் அடங்கியிருக்கும்படி வேதத்தின் உட்பொருளை எங்களுக்கு உபதேசித்து அருளவேண்டும்,'' என்று பிரார்த்தனை செய்தனர். அவர்கள் கேட்டதற்கு ஒப்புதல் கூறிச் சிவபெருமான் அவர்களை 'இங்கு இருப்பீராக' என கூறினார். அவர்கள் சிவபெருமானது பாதத்தின் அருகே தங்கியிருந்தனர்.

அப்பொழுது சிவபெருமான் நந்திதேவரை அழைத்து ''எம்மைத் தரிசனம் செய்ய எத்தகைய தேவர் முதலானோர் வந்தாலும் உள்ளே விட வேண்டாம். மதனன் வந்தால் மட்டும் உள்ளே விடுக'' என்று கூறி உள்ளே சென்றார். சிவன் முனிவர்களின் விருப்பப்படி சிவாகமங்களில் கூறப்பட்ட திரிபதார்த்தங்களாகிய பதி, பசு, பாசம் முதலிய லட்சணங்களை விளக்கிக் கூறினார். சனகனாதியர் ''சங்கரா! எங்கள் மனம் விரிந்திருக்கிறது. ஆகையால் அவை ஒடுங்கும்படி மேலும் ஞான உபதேசம் செய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டனர்.

அதற்குச் சிவபெருமான் சிறிதாகப் புன்னகைத்து 'அப்பொருள், இவ்வாறிருக்கும்' என்று கூறினார். பின்னர் முனிவர்களுக்குப் புரியவைப்பதற்காகத் தன்னை முனிவர்போல ஆக்கி ஓர் கணப்பொழுது தியானத்தில் நின்றார். அதனால் அவர்கள் நால்வரும் மனம் ஒடுங்கி ஞானநிலையை உணர்ந்து சிவபெருமானின் நினைப்பில் அழுந்தி, தங்கள் செயல் ஒன்றும் இல்லாமல் இருந்தனர். அப்போது தேவர் மன்மதனை அனுப்ப அவன் சிவபெருமான் மேல் மலர் அம்பை எய்தான். அப்போது தியான நிலையில் இருந்த சிவபெருமான் கோபம் கொண்டு அவனைப் பார்க்க அவன் சாம்பலாகினான்.

சிவபெருமான் யோகம் நீங்கி ''முனிவர்களே! நீங்கள் முன்னர்போலவே தியானத்தைக் கடைப்பிடித்து நீடூழி வாழ்வீர்களாக'' என்று வாழ்த்தினார். இறைவர் தட்சிணாமூர்த்தியாக இருந்து சனகாதி முனிவர்கள் நான்கு பேருக்கும் உபதேசித்ததால் தட்சிணாமூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

ஓம் தட்சிணாமூர்த்தயே நம:

ஆலங்குடி

கும்பகோணம், நீடாமங்கலம் சாலையில் இத்திருவூர் உள்ளது. நீடாமங்கலம் புகைவண்டி நிலையத்திலிருந்து 6.5கி.மீ தூரத்தில் திருக்கோயில் உள்ளது. இங்குள்ள இறைவர் காசியாரணியர் என்றும் இறைவி உமையம்மை என்றும் அழைக்க பெறுகின்றனர். பிற தலங்களில் நடக்கும் குரு பெயர்ச்சி விழாவினைத் தவிர இங்கே நடக்கும் குரு பெயர்ச்சி ஆராதனையில் கலந்து கொள்வது விசேஷமாகும். சித்திரா பௌர்ணமி, தைப்பூசம் பங்குனி உத்திரம் போன்ற நாட்களில் இருபத்து நான்கு நெய் அகல் விளக்குகள் ஏற்றத், தடைபெற்ற திருமணம் நடக்கும், புத்திரப்பேறு கிடைக்கும்.

அர்ச்சனை - வெள்ளைப்பூ, வெண்தாமரை, நிவேத்தியம் - தயிர்ச்சாதம், கொண்டைக்கடலை: நாள் - வியாழன்: பலன் - நினைவாற்றல், குருப்பரிகாரம்.

இத்தலத்தில் தட்சிணாமூர்த்திக்கு முன் நீராஞ்சன தீபம் ஏற்ற தடைபெற்ற திருமணம் நடக்கும், புத்திரப் பேறு உண்டாகும்.

யோக தட்சிணாமூர்த்தி

சிவபெருமான் தட்சிணாமூர்த்தமாகச் சனகன், சனந்தனன், சனாதனன், சனத்குமாரன் என்னும் நான்கு முனிவர்களுக்கும் பதி, பசு, பாசம் ஆகிய லட்சணங்களை உபதேசித்தார். அப்போது அம்முனிவர்கள் ''அடிகளே! அடியேங்கள் மனம் விரிந்திருக்கிறது. ஆகையால் அவை ஒடுங்கும் வண்ணம் திருவருள் புரிக'' என்று விண்ணப்பித்தனர்.

சிவபெருமான் ''அந்தணரே! உடல் முதலிய யாவும் அழியும் பொருள்கள் என்பதையும், ஆன்மா ஒன்றே அழியாப் பொருள் என்பதையும் அறிந்தவர், ஞானத்தைக் கிரகிக்க வேண்டுவோர், மோட்சத்திற்கு வழியாகிய சாத்திரங்களைக் கேட்டலும், சிந்தித்தலும், அச்செய்திகளைத் தெளிவாகக் கற்றலும், மேலும் அட்டாங்க யோகங்களைச் செய்தலும் வேண்டும். சிலர் ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் ஒன்றோடு ஒன்று கலப்பதே யோகம் எனவும், மற்றும் சிலர் ஆன்மாவுடன் கூடுதலே யோகம் எனவும், வேறு சிலர் பிராணவாயுவும் அபானவாயுவும் சேருதலே யோகம் எனவும் கூறுவர்.

மேலே கூறிய இவையெல்லாம் முடிவான யோகசாதனம் அல்ல. ஆனால் சீவான்மா, பரமான்மா ஆகிய இவை இரண்டும் கலத்தலே யோகமாகும். அது எவ்வாறெனில் வெளிக்கரணங்களை அந்தக் கரணங்களில் அடக்கி மனத்தை ஆன்மாவில் அடக்கி உத்தமமாகிய ஆன்மாவைப் பரத்தில் சேர்ப்பதாகும். மேலும் யோகப் பயிற்சி ஒன்றினால் மட்டுமே பரம்பொருளைக் காணமுடியும்.

பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் ஒன்பதையும் பந்தித்தாலன்றி மனம் ஒருமைப்படாது. சங்கயோகத்தைச்சாதனத்தில் அன்றிச் சத்தியத்தை உணர்த்தல் அருமையாகும். இத்தகைய சிறப்புமிக்க யோகத்தை உங்களுக்காக நான் கூறுகின்றேன். அவை,

இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு வகைப்படும். அவற்றின் விளக்கம் இயமம் என்பது கொல்லாமை, சத்தியவசனம், கள்ளாமை, பிறருடைய பொருளுக்கு ஆசைப்படாமை என்பவையாகும். நியமம் என்பது தவம், பரிசுத்தம் தத்துவ நூல் ஆராய்ச்சி, மன மகிழ்ச்சியுடன் இருத்தல், கடவுள் வழிபாடு செய்தல் ஆகியவையாகும். ஆதனம் என்பது எட்டு வகைப்படும். அவை சுவந்திகம், கோமுகம், பதுமம், வீரம், பத்திரம், முத்தம், மயூரம், சுகம் என்பனவாகும். பிராணாயாமம் என்பது பிராணவாயுவை இரேசக, பூரக கும்பகஞ் செய்தல். பிரத்தியாகாரம் என்பது உபாதியை நீக்கி உள்ளே பார்ப்பது.

தாரணை என்பது கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவற்றில் ஒன்றிச் சந்ததஞ் சிந்தை வைப்பது. தியானம் என்பது ஐம்புலன்களை அடக்கி யோகம் செய்வதாகும்.

சமாதி என்பது மேலே கூறிய இயமநியமாதிகளைப் பொருந்தி சுழுமுனை, முதலாகிய நாடிகளுக்குக் காரணமாகிய நாடிக்குக் கீழுள்ளதாய்க் கிழங்கின் நடுவிலிருக்கும் எழுபத்தீராயிரம் நரம்புகளில் வலமும், இடமும் பிரிந்த இரண்டாகிய இடைகலை பிங்கலைகளைச் சுழுமுனையில் அடக்கி, அச்சுழுமுனையைக் கிழிருந்து தேகமத்தியமாகிய கந்தஸ்தானம் வரையில் இருகிளையாகவும், அதற்குமேல் பிரமரந்திரம் வரையில் ஒரு கிளையாகவும், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞையாகிய ஆறுஆதார சக்கரங்களையும், அதன்மேல் நாலுசக்கரங்களையும் வியாபிக்கச் செய்து, பிரமரந்திரம் வரையில் ஆதார தேவதைகளைச் சகளமாகவும், அப்பால் துவாதசாந்தத்தில் அசலராகியும் அமேயராகியும் அதுலராகியும் சூட்சுமராகியும் மகானாகியும், ஞானக் கிரியாசத்தி உடலாகியும் வியாபகராகியும் சத்திமானாகியும் மலரகிதராகியுமுள்ள பரசிவ மூர்த்தியை நிஷ்களமாகவும் தியானித்தலே சிவயோகம் என்னும் சமாதியாம்'' என்று இவ்வாறு கூறினார். சிவபெருமான் அம்முனிகுமாரர்கள் அறிந்து கொள்ளும்படி திருவுள்ளம் கொண்டு தாமே சிறிது நேரம்

அத்தகைய நிலையில் இருந்து அவர்கள் உணரும்படி செய்தார்.

அதனால் விரிவடைந்திருந்த உள்ளம் ஒடுங்கப்பெற்ற சனகன், சனந்தனன், சனாதனன், சனற்குமாரன் என்னும் நான்கு முனிவர்களும் சிவபெருமானது பாதத்தைத் தொட்டு வணங்கி அவரிடம் விடைபெற்றுத் தத்தம் இருப்பிடம் சென்றனர். சிவபெருமான், பிரமனின்.புத்திரர்களாகிய நான்கு முனிவர்களுக்கும் எளிதில் புரியும்படி யோக முறையைக் கற்பிக்கச் செய்யும் உருவமே யோகதட்சணாமூர்த்தி எனப்படும்.

ஓம் யோகதட்சிணாமூர்த்தயே நம:

யோகதட்சிணாமூர்த்தி

மயிலாடுதுறையிலிருந்து 12 கி.மீ. தூரத்தில் உள்ளது. நீடூர் புகைவண்டி நிலையத்திலிருந்து 11.கி.மீ தூரத்தில் சிவாலயம் உள்ளது. கிரகங்களுக்கு அதிபதியே தட்சிணாமூர்த்தியாவர். அவரும் யோக நிலையில் இருந்தால் எவ்வளவு பலம் மிக்கவராக இருப்பார் என்று நாம் கூறத் தேவையில்லை. வியாழக்கிழமை யோக தட்சிணாமூர்த்தியை வணங்கினால் பிறவித் துன்பத்தை அகற்றுவார்.

அர்ச்சனை - வெள்ளைப்பூ, வெண் தாமரை: நிவேத்தியம் - தயிர்ச்சாதம், கொண்டைக்கடலை: நாள் - வியாழன்: பலன் - கட்டுப்பாடான வாழ்வு, நினைப்பவை.

இங்குள்ள மூர்த்தியைப் பச்சை கற்பூர ஜலத்தால் அபிசேகம் செய்ய யோக சித்துக்கள் கிடைக்கும்.

வீணா தட்சிணாமூர்த்தி

சிவபெருமான் பக்தர்களுக்குத் திருவருள் அருளச் செய்வதற்காகத் திருக்கயிலாய மலையில் தட்சிணா மூர்த்தம் கொண்டு எழுந்தருளி இருந்தார். அப்போது நாரதர், சுகர் முதலிய முனிவர்கள் இசை ஞானத்தை நன்றாக உணரவும், சாமவேதத்தை வீணையில் ஏற்றிப் பாடவும் தங்களுக்கு அருள்புரிய வேண்டும் என்று சிவபெருமானை வேண்டுவதற்காகக் கயிலாய மலையை அடைந்தனர். பிறகு அவர்கள் சிவபெருமானை நோக்கிக் கை கூப்பி ''இறைவா! எங்களுக்கு வீணை பற்றி தெளிவாக விளக்கி அருள வேண்டும்'' என்று விண்ணப்பம் செய்தனர்.

சிவபெருமான் ''முனிவர்களே! அப்படியே ஆகட்டும்'' எனக்கூறிப் பின்வருமாறு வீணையைப்பற்றிக் கூறத் தொடங்கினார்.

நீரிலே நிற்றல் அழுகுதல் வேதன் நிலமயக்கும்
பாரிலே நிற்றல் அடிவீழ்தல் நோய் மரப்பாற்படல் கோள்
நேரிலே செம்பகை யார்ப்பொடு கூட மதிர்வு நிற்றல்
சேரின்ஏர் பண்கள் நிறைமயக்கப் படும் சிற்றிடையே.

என்றபடியே மேலேகூறிய அனைத்து மரங்களும் வீணா தண்டத்திற்கு உதவாதவை. அவற்றைக் கொண்டால் நான்குவகை இசைக்குற்றத்தையும் உண்டு செய்யும். நான்கு வகை இசைக்குற்றமாவது:-

செம்பகை யார்ப்புக் கூட மதிர்வு. அவற்றுள்,
செம்பகை என்பது பண்ணோ உளரா
இன்பமில் ஓசை என்மனார் புலவர்
ஆர்ப்பெனப் படுவது அளவிறந்து இசைக்கும்
கூடமென்பது குறிவுற விளம்பின்
வாய்வதின் வாராது மழுங்கியிசைப் பதுவே
அதிர்வெனப் படுவது இழுமென லின்றிச்
சிதறி உரைக்குநர் உச்சரிப் பிசையே.

எனப்பெறும்.

பஞ்சபாரதீயம்

இன்னிசை வழிய தன்றி இசைத்தல் செம்பகைய தாகும்
சொன்மாத் திரையின் ஓங்க இசைத்திடும் சுருதி யார்ப்பே
மன்னிய விசைவ ராது மழுங்குதல் கூட மாகும்
நன்னுதால் சிதறவுந்தல் அதிர்வென நாட்டி னாரே.

ஆதலால் மேலே கூறிய குற்றங்களை விளைவிக்கக் கூடிய விலக்கு மரங்களைத் தவிர்த்து உத்தமமாக விதிக்கப்பட்ட மரங்களால் வீணாதண்டம் செய்ய வேண்டும்.

சொல்லிய கொன்றை கருங்காலி மென்முருக்கு
நல்ல குமிழுந் தணக்குடனே - மெல்லியலாய்
உத்தம மான மரங்க ளிவையென்றார்
வித்தக யாழோர் விதி

தளமாய்ச் சமநிலத்துத் தண்காற்று நான்கும்
உளதாய் ஒருங்கு ஊனமின்றி - யளவு
முதிராது இளகாது மூன்றாங்கூ றாய
வதுஆகில் வீணாதண் டாம்

பதுமங் கழல்குடந் தாடியொ டுள்ளிபண் பூண்டுநின்ற
விதி அமர் தண்டு குடையே குடுமிமெய்க் கோட்டுறுபின்
மதியமர் போதிகை புட்டின் முகஞ்சுவர் மன்னெருத்தம்
விதியமர் பத்தர்கி குருபென் றுரைத்தனர் மின்னிடையே

என்றபடியே, நல்ல நலம் உடைய மரங்களைக் கொண்டு நல்ல இலக்கண சம்பந்தமாக நால்வகை வீணையையும் செய்ய வேண்டும். நால்வகை யாழாவன:- பேரியாழ், மகரயாழ், சகோட்யாழ், செங்கோட்டியாழ் என்பனவாம்.

பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியும் செங்கோடு செப்பினார் - தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற.

என்றபடியே, நால்வகை யாழும் செய்கையில் பேரியாழுக்கு இருபத்தொன்று நரம்பும், மகரயாழுக்குப் பதினேழு நரம்பும், சகோட யாழுக்குப் பதினாறு நரம்பும், செங்கோட்டியாழுக்கு ஏழு நரம்பும் தொடுக்க வேண்டும்.

ஒன்றும் இருபதும் ஓரேழ்மேற் பத்துடனே
நின்றபதி னாறேழு நேடுங்கால் - குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி.

என்னும் இலக்கணத்தின்படி, யாழிற்கு நரம்புகளை எண்ணித் தொடுக்கையில் ''கொடும்புரி மயிர்தும்பு முறுக்கிவை நாண், நடுங்கா மரபிற் பகையென மொழிப'' எனக் கூறிய குற்றம் நீங்கி, நரம்புகளைத் தொடுத்து, பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு ஆகிய கலைத்தொழில் எட்டு வகையாலும் இசை எழுப்ப வேண்டும்.

அவை: பண்ணல், பாடநினைத்த பண்ணுக்கு இணை கிளைபகை நட்பான நரம்புகள் பெயரும் தன்மையில் மாத்திரையறிந்து வீக்குதல், பரிவட்டணை - அவ்வீக்கின நம்பை விரல்களால் உள்ளேயும், வெளியேயும் கரணம் செய்து தடவிப் பார்த்தல், ஆராய்தல் ஆரோகண அவரோகண வகையால் இசையைத் தெரிதல், தைவரல் - அறுசுருதி பற்றுதல், செலவும் என்றழைக்கப்படும் ஆளத்திலே நிரம்பப்பாடுதல், விளையாட்டு என்றழைக்கப்படும். பாட நினைத்த வண்ணத்திற் சந்தத்தை விடுதல், கையும் என்றழைக்கப்படும் பாட நினைத்த வண்ணத்திற் செய்த பாடல் எல்லாம் இன்பமாகப் பாடுதல், குறும் போக்கு என்றழைக்கப்படும் குடகச் செலவுந் துள்ளற் செலவும் பாடுதல் என்பனவாகும்.

மேலே கூறிய எட்டுவகையான கலைத்தொழிலால் இசை எழுப்பி, வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்னும் எட்டு வகை இசைக்கரணத்துடன் உடற் குற்றம் முதலியவை நீங்கப் பாடல் பாட வேண்டும். வார்தல் முதலிய முறையே, வார்தல் - எடுத்தல், வடித்தல் - படுத்தல், உந்தல் - நலிதல், உறழ்தல் - கும்பித்தல், உருட்டல் - உருட்டு, தெருட்டல் - ஒலி, அள்ளல் - குடிலம், பட்டடை - தூக்கு எனப் பொருள்படும்.

உடற் குற்றங்களாவன:-

''கண்ணிமையா கண்டம் துடியாக் கொடிறு அசையா
பண்ணளவும் வாய்தோன்றா பல்தரியா - எண்ணில் இவை
கள்ளார் நறுந்தெரியல் கைதவனே கந்தருவர்
உள்ளாளப் பாடல் உணர்'' **என்றும்,**

''விரல் நான் கசைத்த அணிகுரல் வீங்காது
நான்மறை துள்ளும் வாய்பிற வாது
வாட்யுள் ளுணர்த்து நோக்கமா டாது
பிதிர்கனன் மணிசூழ் முடிநடுக் காது
வயிறுகுழி வாங்கி யழுமுகங் காட்டாது'' **என்றும்,**

''வயிறது குழிய வாங்கல் அழுமுகங் காட்டல் வாங்குஞ்
செயிரறு புருவம் ஏறல் சிரநடுக் குறல்கள் ணாடல்
பயிறரு மிடறு வீங்கல் பையென வாய்அங் காத்தல்
எயிறது காட்டல்இன்ன உடல் தொழில் குற்றமென்ப''

என்றும் கூறியபடியே உடல் குற்றம் இல்லாமலும், பாடல் தொழில் குற்றம் இல்லாமலும், உள்ளாளப் பாடல் பாட வேண்டும்.

பாடல் தொழில் குற்றமாவன:-

''நாசி காகுளி வெடிகுரல் வெள்ளை
பேசாக் கீழிசை யொருபுற மோட்டல்
நெட்டுயிர்ப் பெறிதல் எறிந்து நின்றிரட்டல்
ஓசை யிழைத்தல் கழிபோக் கென்னப்
பேசுறு குற்ற மசை வொடு மாற்றி''

என்றபடி, பாடல் தொழில் குற்றம் ஒழிய உள்ளாளப் பாடல் பாட வேண்டும்.

உள்ளாள மாவது:-

''உள்ளாளம் விந்துவுடன் நாதம் ஒலியுருட்டுத்
தள்ளாத தூக்கெடுத்தல் தான்படுத்தல் - மெள்ளக்
கருதி நலிதல்கம் பித்தல் குடிலம்
ஒருபதின்மே லொன்றென் றுரை''

என்றபடியே பாடுக என்று, அவற்றின் உட்பிரிவுகள் நன்றாக விளங்கும்படி கூறிவிட்டு, வீணை வாசிக்கும் முறையான இலக்கணங்களை நன்றாக விளங்கும்படி உபதேசித்தார். பின்னர் தாமே தமது திருக்கரத்தில் வீணையை ஏந்தி, திருத்தோளில் அணைத்து நின்று இசை எழுப்பி வாசித்துக் காட்டினார்.

அதுகேட்ட முனிவர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சியுற்றனர். தேவர், மனிதர், மற்றும் விலங்கு, புள் முதலிய பிராணிகள் எல்லாம் இன்பத்தோடு வாழ்ந்தன. முனிவர்கள் வீணையில் இசை எழுப்பிச் சாமகீதம்பாடிச் சிவபெருமானை வணங்கினர்.

சிவபெருமான், நாரதர், சுகர் முதலியோருக்கு வீணை இலக்கணத்தைப் புரியும் படி உணர்த்தி, தமது திருக்கரத்தில் வீணையை ஏந்தி வாசித்துக் காட்டிய திருக்கோலமே வீணா தட்சிணாமூர்த்தி எனப்பட்டது.

ஓம் வீணா தட்சிணாமூர்த்தயே நம:

திருச்சி - லால்குடி

இங்குள்ள சிவன் கோயிலில் உள்ள தட்சிணாமூர்த்தியை வணங்கினால் நியாயமான பதவி உயர்வு, கல்வியின் மேம்பாடு நினைத்த பாடப்பிரிவுகள் கிடைக்கும். வியாழக்கிழமை தோறும் நல்ல நேரத்தில் தட்சிணாமூர்த்திக்குச் சந்தனக் காப்பு போட்டால் நினைத்த காரியம் கைக்கூடும்.

அர்ச்சனை - வெள்ளைப்பூ, வெண் தாமரை: நிவேத்தியம் - தயிர்ச்சாதம், கொண்டைக்கடலை: நாள் - வியாழன்: பலன் - சங்கீத அறிவு, மனம் ஒருமுகப்படுதல்.

இங்குள்ள தட்சிணாமூர்த்திக்குத் தேன் அபிசேகம் செய்தால் கல்வி மற்றும் சங்கீதம் விருத்தியாகும்.

குருமூர்த்தி

குரு என்னும் வடசொல் பெரிது எனவும் பிதா எனவும் அரசன் எனவும் பொருள்படும். ஆகவே எல்லாவற்றிலும் பெரிய பொருளாகவும், மேலானதந்தையாகவும், சிறந்த அரசனாகவும் உள்ளவன் குரு எனப்படுவான். ''கு'' என்றால் இருள்.


அந்தகாரம், அறியாமை என்று பொருள். ''ரு'' என்றால் போக்குகின்றவன். நிரோதித்து அருள் செய்கிறவன் என்று பொருள். எனவே உயிர்களிடத்திலுள்ள அஞ்ஞானம் என்னும் அறியாமையாகிய இருளைப் போக்குகின்றவன் குரு எனவும் குரவன் எனவும் உபாத்தியாயன் எனவும் கூறப்படுவான். குருவானவன் அறியாமையைப் போக்கி அறிவுகொடுப்பவன் என்றும், மன இருளைப் போக்கி ஒளியைத் தருகின்றவன் என்றும் பொருள் கொள்ளல் வேண்டும்.

ஆசிரியன் என்ற தமிழ்ச்சொல் அறியாமையாகிய குற்றத்தைப் போக்குகின்றவன் என்று பொருள்படும். ஆசான் என்ற சொல்லும் இதே பொருளைத் தருவதாகும்.

ஏதும் தெரியாத ஒருவனுக்கு எல்லாம் தெரிந்த ஒருவன் நன்றாகத் தெரியும்படி கூறி விளங்க வைப்பது என்பதுதான் இச்சொற்களுக்கு உரிய பொருள் என்று கூறலாம். எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும், அந்தத் தொழிலை நன்றாக அறிந்தவன் அறிய விரும்புவோனுக்கு. அவன் விளங்கிக் கொள்ளும் வண்ணம் கற்றுக் கொடுப்பவனைக் குருவெனக் கொள்ளல் வேண்டும். சமுதாயத் தொழில்களாகிய மண்பாண்டம் செய்தல், மரவேலை செய்தல், நெசவுவேலை, இரும்பு பொன்வேலைகளைச் செய்தல் போன்ற தொழில்களையும், போர்த் தொழிலுக் குரியவை களாகிய வில், வேல், வாள் பயிற்சிகள், சிலம்பம், குத்துச்சண்டை, இக்காலத்தே கராத்தே போன்ற பயிற்சிகள், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் போன்ற பயிற்சிகள் ஆகியவற்றையும், கலைத்தொழில்களாகிய



வீணா தட்சிணாமூர்த்தி



குருமூர்த்தி

மருத்துவம், சோதிடம், ஓவியம், இயல், இசை, நாடகம், நாட்டியம் ஆகியவற்றையும் கற்றுக் கொடுப்பவன் குருவெனப்படுவான்.

மாதா பிதா, குரு, தெய்வம் என்ற இந்நான்கும் நாம் அறிந்ததேயாகும். தாயானவள் தந்தையைக் காட்ட தந்தையானவன் குருவைக் காட்ட, குருவானவன் இறைவனைக் காட்டுகிறான் என்பதே இந்நான்கின்கருத்தாகும். எனவே குருவின்அருள்உபதேசங் கொண்டு இறைவனைஅறிந்து இன்புறுவது ஆறறிவு படைத்த ஒவ்வொருவரின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

குரு என்பவர் வித்யாகுரு, தீட்சாகுரு, ஞானகுரு, லோககுரு எனப் பலவகைப்படுவர். வித்யாகுரு பலவகை வித்தைகளைச் சீடனுக்குக் கற்பிப்பார். தீட்சாகுரு பஞ்சாட்சரம், ஷடாட்சரம், அஷ்டாட்சரம் போன்றவற்றைச் சீடனின் பரிபக்குவம் அறிந்து விதிப்படி போதிப்பார். ஞான குரு தெளிவான உயர்ந்த ஞானம் எது என்பதை விளங்கக் கற்பிப்பார். லோககுரு அனைத்துக் குருக்களின் மேலானவராதலால் தெளிந்த ஞானத்தைப் போதித்து உயிர்களின் மல இருளைப் போக்கி ஞான ஒளி விளக்கேற்றி என்றும் அழியாத பேரின்ப வாழ்வளிப்பார். லோககுரு ஸ்ரீகண்ட பரமேசுரனாவார்.

தீட்சை:

தீட்சை என்பது வடமொழியில் ''தீக்ஷா'' எனவும், தமிழில் ''தீக்கை'' எனவும் கூறப்பெறும். வடமொழி ''தீக்ஷா'' என்ற சொல்லிலுள்ள 'தீ' என்பது தானம் என்று பொருள்படும். 'க்ஷா' என்பது போக்குவது என்று பொருள்படும். தானம் என்பது உயிர்களுக்கு முத்தி முதலியவற்றைத் தருவதாகும். 'க்ஷா' ஆவது உயிர்களைத் தொடக்கமில் காலம் தொட்டுப் பொருந்தி நின்ற பாசங்களைப் போக்குவதாகும். எனவே தீக்ஷை என்பது உயிர்களுக்கு, இம்மைக்கு வேண்டுவனவாகிய போக நுகர்ச்சிகளை அருளி, மறுமையில் நீங்கரிய பாசத் தொடர்களை அறுத்துப் பேரானந்த வாழ்வைத் தருவதாகும்.

தீட்சை பௌதிகி எனவும் நைஷ்டிகம் எனவும் இருவகைப்படும். பௌதிகி என்பது பூத சம்பந்தம் உடையது. உயிர்கள் விரும்பிய இன்பப் பேறுகளை அளித்து, முடிவில் வீடு பேற்றைக் கொடுப்பது. நைஷ்டிகி என்பது நிஷ்டை சம்பந்தம் உடையது. அதாவது அணிமாதி சித்திகளைக் கொடுத்துப் பின்னர் பேரானந்தத்தை அளிப்பது.

இனி தீட்சை சபீக்ஷை, நிரபீக்ஷை என இருவகைப்படும். சபீக்ஷையாவது சமயம், ஆசாரம், அநுட்டானம் முதலியவற்றை விரும்புகின்றவர்களுக்குச் செய்யப் பெறுவது. நிரபீக்ஷையாவது, சமயம் ஆசாரம் அநுட்டானம் முதலியவற்றைச் செய்ய இயலாத குழந்தைகள் முதியவர்கள். அறிவில்லாதவர், நோயாளர் முதலியோர்க்குச் செய்யப்பெறுவது முற்கூறிய பௌதிகியானது லௌகிகி, அலௌகிகி என, இருவகைப்படும். லௌகிகி என்பது உலகியலறத்தோடு சிவதருமம் உடையது. இதனை அநுசரிக்க வேண்டியவர்கள் இல்லறத்தவர்கள் ஆவர். அலௌகிகி என்பது சிவதர்மிணி என்ற பெயருடையது. இத்தீக்கை பெற்றவர் இலௌகிகம் வைதிகம் ஆகிய இரண்டும் நீங்கப்பெற்று சிவபரம்பொருளை எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்.

அன்றியும் தீட்சையானது சபீஜை, நிர்பீஜை என இருவகைப்படும். சபீஜை என்பது பீஜாட்சரங்களுடன் கூடியது. நிர்பீஜை என்பது பீஜாட்சரங்கள் இல்லாதது. சபீஜை - இத்தீட்சை பெற்றோர் மற்றவர்களுக்கு தீட்சை முதலியன செய்து வைப்பதற்கு உரியவராவர். நிர்பீஜைக்கு உரியவர் விசேடதீட்சை பெற்றவர்.

அன்றியும் தீட்சையாவது மேலும் இருவகைப்படும். அவை சத்தியோ நிர்வாணம், அசத்தியோ நிர்வாணம் என்பனவாம். சத்தியோ நிர்வாணம் என்பது தீட்சை பெற்றவுடன் முத்தி பெறுவது. பெற்றான் சாம்பான் பெற்றமுத்தி இந்த இயல்புடையதாகும். அசத்தியோ நிர்வாணம் என்பது பிராப்தம் முதலியவை நீங்கப்பெற்ற பின்னர் முத்தி பெறுவதாகும்.

மேலும் தீட்சையானது சாதாரம், நிராதரம் என இருவகைப்படும். சாதாரம் என்பது சிவபரம் பொருள் குருவை அதிட்டித்து நின்று அக்குருவின் மூலமாக உயிர்களுக்குச் செய்யும் தீட்சையாகும். நிராதரம் என்பது விஞ்ஞானகலர். பிரளயாகலர் ஆகியோருக்குச் சிவபெருமான் ஆசிரியனாய் திருமேனி தாங்கிச் செய்யும் தீட்சையாகும்.

மேலும் தீட்சையானது திருநோக்கம், ஸ்பரிசம், வாக்கு, மனம், நூல், உபதேசம், யோகம், ஔத்திரி எனப் பலவகைப்படும்.

நயன தீட்சை என்னும் திருநோக்கம் என்பது மீன் தனது முட்டையைக் கண்ணாலே நோக்கி நின்று குஞ்சாக்குவது போல, ஆசாரியன் திருவருள் நோக்கத்தால் மாணாக்கனைத் தன்னைப்போல் சிவம் ஆம் தன்மை உடையவனாக ஆக்குதலாம்.

''கண்ணால் நோக்கி கண்ணப்பர் பணியும்
கொள் காபாலி'' **– திருநாவுக்கரசர்,**

ஸ்பரிச தீட்சை என்பது கோழியானது முட்டையின் மேல் அடைகிடந்து தொட்டுக் குஞ்சைவெளிப் படுத்துதல் போல, ஆசான் மாணாக்கனைத் தொட்டுச்சிவம் ஆம் தன்மை உடையவனாக ஆக்குதலாம்.

வாக்கு தீட்சை என்பது மாணாக்கனுடைய தகுதிக்கு ஏற்பத் திருவைந்தெழுத்தை உபதேசித்தலாகும்.

மானத தீட்சை என்பது ஆமை தன் முட்டையைத் தான் நினைத்துக் குஞ்சாக்குவது போல, ஆசான் தன் மாணவனுக்குச் சிவஞானம் உண்டாக வேண்டும் என்று சிந்திப்பதாகும். இது பாவனை எனவும் படும்.

சாத்திர தீட்சை என்னும் நூலுபதேசம் பதி, பசு, பாச உண்மைகளையும் அவற்றின் இலக்கணங்களையும், பசுவானது பாசத்தை விட்டு நீங்கிப்பதியை அடையும் முறைமையையும் நூல்களின் வழியாக ஆசாரியன் போதிப்பதாகும்.

யோக தீட்சையாவது நிராதார சிவயோகத்தை அப்பியாசம் பண்ணும்படி ஆசான் உபதேசித்தலாகும்.

ஔத்திரி தீட்சையாவது ஓமத்தோடு செய்வதாகும். ஔத்திரி தீட்சை தொகையால் ஒன்றாகவும் கிரியாவதி ஞானவதி என வகையால் இரண்டாகவும் பேசப்பெறும். இவ்விரண்டும் சமயம் விசேடம் நிர்வாணம் எனத்தனித் தனி மூன்று வகைப்படும் விரிப்பின் பெருகும்.

இவ்வாறு பலவகைப்பட்ட தீட்சை முறைகளைச் சைவமடாலயங்கள் சீடர்களுக்கு உபதேசித்தருளிய காரணத்தால் சைவம் தழைத்தது. திருவாவடுதுறை ஆதீனம் போன்ற சைவ மடங்கள் தமிழகத்தில் பல உள. அவைகளும் பக்குவ ஆன்மாக்களுக்குப் பஞ்சாட்சரத்தை உபதேசித்தன. திருமடங்களுக்குச் சீடர்களின் தொகை பெருகியது. திருமடங்களின் முனிபுங்கவர்களாகிய தவஞான சீலர்கள் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருளுபதேசம் வழங்கி யருளியதோடன்றித் தமிழ் நூல்கள் செய்து தமிழ்த்தொண்டும் செய்தருளினார்கள். அத்துடன் தமிழ் வல்ல கவிஞர்களையும் வித்துவான் களையும் ஆதரித்தார்கள். இசைவல்ல சான்றோர்களுக்கும் ஆதரவு தந்தார்கள். நாடகமும் நாட்டியமும் வல்ல அறிஞர்களுக்கும் நல்லாதரவு தந்தார்கள், வடமொழி வாணர்களையும் வளர்த்து வந்தார்கள்.

ஆகவே, தமிழகத்தில் சைவமும் தமிழும் சிறந்தோங்கித் திகழ்ந்தன. அதனால் சமுதாயப்பணியும் சமயப்பணியும் செய்து வரும் மடாலயங்களுக்கு மன்னர்களின் பேராதரவு இருந்தது. பொதுமக்களின் ஆதரவும் இருந்தது. இன்றும் அப்பணிகள் தொடர்ந்து வளர்ந்து வருவதனால் அறிஞர்கள் பலர் மடாலயங்களைச் சார்ந்து மன அமைதிபெற்று இன்புறுகின்றார்கள்.

ஐம்முகச் சிவனார் ஆன்மகோடிகள் உய்ய அருளுபதேசம் செய்தது போலவே, ஆறுமுகச் சிவனாரும் செந்தமிழ் முனிவராகிய அகத்தியருக்கும், அருணகிரி நாதருக்கும் பிற அருளாளர்களுக்கும் அருளுபதேசமாகச் சடாக்கரத்தை உபதேசித்தருளினார்.

ஐம்முகச் சிவனாரின் மூத்த டபிள்ளையாகிய விநாயகப் பெருமானும் நம்பியாண்டார் நம்பிக்கு உபதேசம் செய்தருளினார்கள் என்பது இங்கு சிந்திப்பதற்கு உரியவையாகும்.

ஆலமுண்ட ஸ்ரீகண்ட பரமேசுரன் நாம் உய்ய குரு வடிவம் தாங்கி எவ்வாறு மணிவாசகரை ஆட்கொண்டார் என்பதைக் காண்போம்.

மணிவாசகர்:

தமிழ் மூன்றும் வளர்த்த தண்பாண்டி நாட்டின் தலைநகரமாகிய மதுரைக்குப் பதினைந்துகல் தொலைவில் அமைந்துள்ளது வாதவூர். அவ்வூரில் அமாத்திய அந்தணர் மரபில் சம்புபாதாசிரிதர் என்பவருக்கும் சிவஞானவதி அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராக அவதரித்தார் வாதவூரர்.

அவர் இளமைப்பருவம் முதற்கொண்டு இறையன்பு மிக்கவராக விளங்கினார். பதினாறு வயதுக்குள் கற்கவேண்டிய கலைநூல்கள் அனைத்தையும் கற்றுக் கல்வி வேள்விகளில் வல்ல நல்லறிஞராக விளங்கினார். தெளிந்த சிந்தனையாளராகத் திகழ்ந்தார். இவரது தெளிந்த ஞானத்தையும் சிறந்த நுண்ணறிவையும் கேட்டறிந்த அரிமர்த்தன பாண்டியன் இவரைத் தன்பால் தக்க சிறப்புடன் வருவித்து, முதலமைச்சர் பதவியைக் கொடுத்துச் சிறப்பித்தான். இவரது செயலாற்றலை நன்குணர்ந்த பாண்டியமன்னன் இவருக்குத் 'தென்னவன் பிரமராயன்' என்ற சிறப்புப் பட்டத்தையும் அளித்து மேலும் சிறப்பு செய்தான். வாதவூரர் பாண்டிய மன்னனுக்கு உறுதுணையாக இருந்து நாட்டை வளப்படுத்தி நல்லாட்சி நடத்தினார். ஆனால் இவரது மனம் ''எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும், முத்தர் மனமிருக்கும் மோனத்தே'' என்றபடி, உமையொருபாகன் மீது உண்மையன்பு பூண்டிருந்தது.

ஒரு நாள் அரிமர்த்தன பாண்டியன் அவைக்களத்தில் அரியணையில் அமர்ந்திருந்தபோது ஒற்றர் சிலர் வந்து சோழ நாட்டுக் கடற்கரையில் கப்பலிலிருந்து குதிரைகள் வந்து இறங்கியுள்ளன என்று தெரிவித்தனர். தன் குதிரைப்படையை நன்றாக வலிமைப்படுத்த எண்ணியிருந்த பாண்டியன் அச்செய்தி கேட்டு நல்லினக் குதிரைகளாகப் பார்த்து வாங்கி வரும்படி நிறைந்த பொன்னைக் கொடுத்து வாதவூரரை அங்கே அனுப்பிவைத்தான்.

அரிமர்த்தன பாண்டியன் கருத்திற்கு இணங்க வாதவூரண்ணல் தன்பின்னே படைகள் சூழப்புறப்பட்டு, அங்கயற்கண் அம்மையையும் அழகிய சொக்கநாதரையும் வணங்கிக் கிழக்குக் கடற்கரையை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் உள்ள திருப்பெருந்துறையில் தங்கினார்.

அங்கே ஒரு பூஞ்சோலையில் வேதாகமங்களின் ஒலி கேட்டது. வாதவூரர் அங்கே சென்றார். குருந்தமர நிழலில் அழகுமிகுந்த தோற்றத்துடன் ஞான குருநாதர் அடியவர் கூட்டத்துடன் வீற்றிருக்கும் அற்புதக் காட்சியைக் கண்டார். உள்ளம் அன்பு வெள்ளம் பொங்கக் கனிந்து உருகி, அந்தக் குருநாதருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி எழுந்து நின்று ''எம்பெருமானே! தேவரீர் அடியேனை இனிப் பிறவா வண்ணம் காத்து ஆட்கொள்ள வேண்டும்'' என்று வேண்டினார்.

அவரது பக்குவ நிலையைக் கண்ட குருநாதர் அவரைத் திருக்கண்ணால் நோக்கி 'அஞ்சற்க! நின்னை ஆட்கொள்ளுவோம்' என்று திருவாய் மலர்ந்தருளி அவர் சிரசின் மீது திருக்கரம் வைத்துப் பாதமலர் சூட்டி அறிவானந்தமாய் அன்புக்கடலாய் ஐந்தெழுத்தின் தத்துவ நியமங்களை உபதேசித்தருளினர். வாதவூரருக்குச் செவிவழியாகச் சிவானந்தம் சிந்தையுள் புகுந்தது. அகவிருள் அகன்றது. உள்ளொளி பெருகியது. வாதவூரர் சிவானந்த வெள்ளத்தில் திளைத்து நிட்டை கூடி இருந்தார்.

பின்னர் நிட்டை கலைந்தபோது அடியார் குழாத்துடன் குருநாதரையும் மற்றவர்களையும் காணவில்லை. 'பெருமானே! அடியாரெல்லாம் நின்னடி சேர்ந்தார். அடியேன் புறமே போந்தேன்' என்று கண்ணீர் வடித்தார். பாமாலை பாடினார். தன்னை மறந்தார். தலைவன் தாளே தலைப்பட்டுக் கோயில் திருப்பணிகள் செய்யத் தொடங்கினார். அங்கேயே தங்கி இருந்து பாமாலைபாடிப் பரவினார். அவையெல்லாம் விலைமதிக்கமுடியாத மாணிக்கம் போன்று இருந்தமையால் இவருக்கு மாணிக்கவாசகர் என்ற பெயர் இறைவனால் சூட்டப்பெற்றது.

வாதவூரர் ஆகிய மணிவாசகர் தாம் வந்த காரியத்தை மறந்து சிவப்பணி மேற்கொண்டிருப்பதை ஒற்றர் மூலம் உணர்ந்த பாண்டியன் மணிவாசகரை மதுரைக்கு வருமாறு ஓலைவிடுத்தான். அரசன் கட்டளை பெற்ற மணிவாசகர் கோயிலுள்ளே சென்று 'பெருமானே! கொண்டு வந்த பொருளை எல்லாம் கோயிற்பணிக்குச் செலவு செய்தேன் குதிரை வாங்க என்ன செய்வேன், என்று விண்ணப்பம் செய்தார். 'அஞ்சற்க! ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று போய்ச் சொல்லுக' என அசரீரி எழுந்தது.

அமைச்சர் பிரான் மதுரை சென்று மன்னனிடம் ஆவணிமூல நாளில் குதிரைகள் வரும் என்று கூறினார். அரசனும் ஆவணிமூல நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். வாதவூரர் கொண்டு சென்ற பொருள் முழுவதையும் ஆலயப்பணிக்குச் செலவழித்துவிட்டார், என்ற செய்தியை ஒற்றர்மூலம் அறிந்த பாண்டியன் வெகுண்டு அமைச்சரைச் சிறையில் அடைத்தான்.

அடியார் துன்பம் பொறுக்கமாட்டாத ஆலவாய் அரன் நரிகளைப் பரிகளாக்கித் தேவர்களைப் பாகர்களாக்கித் தாம் குதிரை வணிகனாகி பாயும் பரிமேல் ஏறிக் குதிரைப் படைகளுடன் மதுரை வந்து மன்னனிடம் அவற்றை ஒப்படைத்தார். மன்னன் வாதவூரரை விடுவித்துப் பிழை பொறுத்தருள வேண்டினான்.


பின்னர், நள்ளிரவில் குதிரைகள் நரிகளாகிப் பழைய குதிரைகளையும் கடித்துக் குதறிவிட்டு ஊளையிட்டு ஓடி மறைந்தன. மன்னன் அது கேட்டுக் கடுஞ்சினம் கொண்டு அமைச்சரை வைகைச் சுடுமணலில் நிறுத்தித் துன்புறுத்தினான். மணிவாசகர் மனமுருகிச் சிவனை வேண்டினார். வைகையில் வெள்ளம் வந்தது. வீட்டுக்கு ஒருவராகக் கரையை அடைக்க மக்களுக்குக் கட்டளையிட்டான். வந்தி பங்கு அடைக்க ஆள் கிடைக்கவில்லை. அன்புடைய வந்தி வருந்தினாள். மதுரைச் சொக்கரே வந்திக்கு ஆளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டு மறைந்தருளினார். பாண்டியன் உண்மையை அறிந்து இறைவன் திருவிளையாடலை உணர்ந்து மணிவாசகரை வணங்கிப் பிழை பொறுத்தருள வேண்டுமென்று வேண்டினான்.

மீண்டும் அமைச்சுப் பொறுப்பை ஏற்கும்படி கேட்டுக்கொண்டான். மணிவாசகர் துறவு பூண்டு தேனமுதத் திருவாசகம் பாடினார். பின்னர் தில்லை சென்று பொன்னம்பலவாணன் பூங்கழல் சேர்ந்தார்.

திருக்கயிலை நாதர் விண்ணுலகத்துத் தேவருக்கும் முனிவருக்கும் உபதேசித் தருளியதோடல்லாமல் மண்ணுலகத்து மணிவாசகருக்கும் ஞானோபதேசம் செய்தருளினார். அதனால் அப்பெருமானுக்குக் குருமூர்த்தி எனப் பெயர் வழங்குவதாயிற்று.

அத்துடன் மணிவாசகர் பொருட்டுக் குதிரைச் சேவகனாகி வந்து 'பாண்டியன் தனக்குப் பரிமாவிற்று ஈண்டு கனகம் இசையப் பெறாது ஆண்டான் எங்கோன் அருள்வழி இருப்ப' என்று மணிவாசகர் பாடியதற்கேற்ப அசுவாரூடமூர்த்தியாகவும் மன்னவர் காண எழுந்தருளினார் என்பது அறியத் தக்கதாகும்.


இவ்வாறு பல நிலைகளில் விளங்கியருளும் குருவடிவாகத் திகழும் சிவபெருமான் எல்லோருக்கும் அருளவேண்டி தாம் தட்சிணாமூர்த்தி வடிவம் கொண்டு ஆலயங்களில் திகழ்கின்றார். ஆகமங்களும், புராணங்களும், சிற்பநூல்களும் எண்ணற்ற தட்சிணாமூர்த்தி வடிவங்களை எடுத்து இயம்புகின்றன. குறிப்பாக ஆலயங்களில் பலநிலைத் திருக்கோல வடிவில் தட்சிணாமூர்த்தி திகழ்வதனை நாம் இன்றும் காணலாம். அவைகளை இந்நூலிலும் காணலாம்.



பரிச தீட்சை நயனதீட்சையும் உபதேசமும் பூவார் அடிச்சுவடு பொறித்தல்



திருவாதவூரர் திருப்பணி செய்விக்கின்றார் பணிகள் விரைவாக நடக்கின்றன.



திருவாதவூரர் (அமைச்சர்) திருவாதவூரர் (அடிகள்) மாணிக்கவாசகர் (திருவாசகச் சுவடியுடன்)

காமிகாகமத்தில் அஷ்ட தட்சிணாமூர்த்திகள்

(பிரதிஷ்டா தந்திரம் - கிரியா பாதம் - 18ஆம் படலத்தின்படி எண்வகைத் தட்சிணாமூர்த்தி திருவுருவங்கள்)

1. யோகதட்சிணாமூர்த்தி

கைலாசாதிரி ஸமாபஞ்ச சசாங்க தவளம் ப்ரபம்
ஸ்பூர்ஜர்ஜடா மண்டிதஞ்ச நாசாலோகாந தத்பரம்
வீராஸநெஸ்திதம் சைவ த்ரிணேத்ரஞ்சைக வக்தரகம்
ஜாநூரச விலஸத்பாணிம் பிரஸன்ன வதனான்விதம்
கட்யாம் புஜங்கபத்தஞ்ச முனிபிச்ச ஸமாவ்ருதம்
★யோககுரு ஸ்வரூபஞ்ச பாவயேச்ச விசேஷத:

கைலாய மலையைப் போன்ற சந்திரனுடைய வெண்மை யானவர்ணம் நிமிர்த்து கட்டியஜடை, மூக்கின் நுனியில் பார்வையுடன் வீராசனத்தில் அமர்ந்து முக்கண், முழந்தாளில் வைத்திருக்கும் கை, பிரசன்னமுகம், பாம்பணிந்த இடையுடன் முனிகளால் சூழப்பட்டவராய் யோக தக்ஷிணாமூர்த்தியைச் சிறப்பாக பாவிக்க.

ஆசாரிய லக்ஷ்ணபடலம் - காமிகம்

1.	சர்வசாதகாச்சாரியார்	-	யாகசாலை முழுப்பொறுப்பு உள்ளவர்
2.	ஆசாரியார்	-	ஹோமம் செய்பவர்
3.	சாதகாச்சாரியார்	-	மந்திரங்களைச் சொல்பவர்
4.	போதகாச்சாரியார்	-	ஆசாரியருக்கு சாதகர் சொல்லும் மந்திரங்களை கிரியை பாவனை முத்திரைகளுடன் உதவுபவர்.
5.	பாசகாச்சாரியார்	-	மந்திரபூர்வமாக நைவேத்தியம் தயாரித்துக் கொடுப்பவர்.


மேற்சொன்ன ஐவரும் ஆதிசைவராக தீட்சை பெற்று இருக்கவேண்டும் என்பது நியதி.

2. வீணாதர தட்சிணாமூர்த்தி


தவளாபஞ்ச ருசிரம் ஸர்ப்ப யக்ஞோப வீதகம்
அநலம் ஸாக்ஷமாலாஞ்ச ஸ்புரத்கநக வீணகம்
பாலநேத்ரம் கிரேர்ளூர்த்வம் தக்ஷிணாமூர்த்தி மீடே!

ஆதாரம்: ***1) ★ தட்சிணாமூர்த்தியை பஞ்சாவரண பூஜையில் இரண்டாவது ஆவரணத்தில் தெற்குமுதல் அக்கினி திக்குவரை எட்டு மூர்த்திகளைப் பூசிக்க என்று காமிகாகமத்தில் கூறப்பட்டுள்ளது.***

2) பிரதிஷ்டா தந்திரம் - கிரியாபாதம் 18வது படலம்.



வீர தட்சிணாமூர்த்தி / ஆஸீந தட்சிணாமூர்த்தி



வேதக்ஞான வியாக்யான தட்சிணாமூர்த்தி

வெண்மையான நிறம், மனோக்ஞமான பாம்புபூணூல் அக்னி அக்ஷமாலை, சுவர்ணவீணை, நெற்றிக்கண்ணுடையவராய், (கைலாய) மலையின்மேல் விளங்கும் வீணாதட்சிணாமூர்த்தியை வணங்குக.

3. மேதாதட்சிணாமூர்த்தி

மேதா ஸ்படிக வர்ணாபம் முத்ரா புஸ்தக வஹ்னிகம்
நாகைச்ச விலஸத் பாணிம் பிரசன்ன வதனான்விதம்
முக்தாஹார ஸமாயுக்தம் கிரீட மகுடான் விதம்
அக்ஞான மோசனார்த்தஞ்ச ப்யாகமார்த்தம் பிரகாசகம்
வடமூலே ஸமாஸீநம் த்யாயேத் மேதாஸ்வரூபகம்.

ஸ்படிகவர்ணம், ஞானமுத்திரை, புத்தகம், அக்னி, நாகம் இவற்றால் கூடிய கைகளும், பிரசன்னமுகம், முத்துமாலை, கிரீடத்துடன் விளங்கி, அக்ஞானத்தை போக்க, சிவாகமப்பொருளை விளக்கும் பொருட்டு ஆலமரத்தின் அடியில் அமர்ந்துள்ளவராய் மேதாதட்சிணாமூர்த்தியைத் தியானிக்க.

4. ஆஸீநதட்சிணாமூர்த்தி

சுக்லவர்ணம் திரிணேத்ரஞ்ச டங்கம் பாணஞ்ச தக்ஷிணே
வாமே கிருஷ்ண மிருகம்சைவ தனுஹீம்ச லஸத்கரை:
வ்யாக்யாபீடே ஸமாஸீநம் வியாக்ராஜி நாப்யலங்க்ருதம்
ஜடாமகுட சோபாட்யம் நாக யக்ஞோப வீதிநம்.

வெண்மைநிறம், முக்கண் , வலதுகைகளில் (உளி) டங்கமும் பாணமும் கொண்டு, இடக்கைகளில் மான், வில்லுடன் கூடி வியாக்யா பீடத்தில் அமர்ந்து, புலித்தோலாடையால் அலங்கரித்து, ஜடாமகுடம் பாம்புப் பூணூலணிந்துள்ளவராய் ஆஸீனதக்ஷிணாமூர்த்தியைத் தியானிக்க.

5. வரதட்சிணாமூர்த்தி

ஜான்வக்ரைகோர்த்வ பாதஞ்ச ப்யபஸ்மாரோ ர்த்வகேததா
இதரஞ்ச நிதாயாத ந்யக்ரோத மூலகேபிச!
முனினாம் வேத வேதாந்தம் வ்யாக்யாதத்வாஸ ஸம்யுதம்
ஞாந முத்ராக்ஷ மாலாஞ்ச வஹநனிம் ஸ்வேதம் திரிநேத்ரம்
ஜடாசூட வரம்சைவ தக்ஷிணாமூர்த்தி ரூபகம்.

முழந்தாளின்மேல் போட்டிருக்கும் பாதமுடையவராயும், அபஸ்மாரனை மிதித்துள்ள மற்றொரு பாத முடையவராயும், ஆலமரத்தின் கீழ் முனிகளுக்கு வேத, வேத முடிவுத் தத்துவங்களை உணர்த்தியும், ஞான முத்ரை, அக்ஷமாலை, அக்னி, வேதம் கைகளில் தாங்கி முக்கண்ணராய், ஜடையுடன் கூடியவராய் உள்ள வர தக்ஷிணாமூர்த்தியைத் தியானிக்க.

6. யோகபட்டாபிராமதட்சிணாமூர்த்தி

ஏகவக்திரம் த்ரிநேத்ரஞ்ச ஜடாசூட ஸமன்விதம்
வீணா வாத்ய ஸமாயுக்தம் வ்யாக்யாபீடேச ஸம்ஸ்திதம்
முனிபிஸ்ஸேவிதம் சைவ பிரஸன்ன வதனான்விதம்
வியாள யக்ஞோபவீதஞ்ச யோக பட்டாபிராமகம்


ஒருமுகம், மூன்றுகண், ஜடையுடன்கூடியவராயும், வீணா வாத்யத்துடன் வியாக்யா பீடத்தில் அமர்ந்து, முனிவர்களால் சேவிக்க பிரசன்ன முகத்துடனும், பாம்பினையே பூணூலாக அணிந்து யோக பட்டாபிராமராகிய விளங்கும் குருவைத் தியானிக்க.

7. ஞானதட்சிணாமூர்த்தி

ஏகவக்திரம் திரிநேத்ரஞ்ச ஸ்படிகாபம் சதுர்புஜம்
சூலம் கபாலகம் சைவ நாகம் வீணா ஸமாயுதம்
ஸநகாதிமுனி ப்ருந்த ஞானம் சாபி ப்ரபோதகம்
ஞானதக்ஷிணாமூர்த்திச்ச பாவயேச்ச விசேஷத:



சக்தி தட்சிணாமூர்த்தி
வாணியம்பாடி (வடஆற்காடு)



வியாக்யான தட்சிணாமூர்த்தி
ஆலங்குடி
(தஞ்சை மாவட்டம்)

ஒருமுகம், மூன்றுகண், ஸ்படிகம் போன்ற காந்தியுடன் நான்கு கைகளில், சூலம், கபாலம், வீணையுடன் கொண்டு, சனகாதி முனிவர்களுக்கு ஞானத்தை உணரபோதிக்கும். ஞான தக்ஷிணாமூர்த்தியைச் சிறப்பாக பாவிக்க.

8. சக்தி தட்சிணாமூர்த்தி

ஸ்படிகம் ரஜதவர்ணம் மௌக்திகை ரக்ஷமாலிகம்
அமிருத கலச பூர்ணம் ஞான முத்ராம் கராக்ரை
ஸர்ப்ப ஹஸ்தம் சந்திரசூடம் யக்ஞசூத்ர விராஜிதம்
சக்திபிர் தக்ஷிணாமூர்த்தே தியாயேத் தேவ விசேஷத:

ஸ்படிகம் போலும் வெள்ளி நிறமுடையவராய், முத்துக்களால் ஆகிய அக்ஷமாலை, நிறைவுடன் ஆகிய அமிர்தகலசம், ஞானமுத்ரை பாம்புடன் கூடிய கைகளைக் கொண்டு சந்திரனை சூடி, பூணூலுடன் விளங்கும், சக்தி தக்ஷிணாமூர்த்தியை தெய்வத்தன்மை பெறச் சிறப்புடன் தியானிக்க.



யோக
தட்சிணாமூர்த்தி
இலம்பையங்கோட்டூர்
(அரக்கோணம்
அருகில்)



வீணாதர
தட்சிணாமூர்த்தி
நாகலாபுரம்
(ஆந்திர மாநிலம்)

உத்தர காமிக மகா தந்திரத்தில் தட்சிணாமூர்த்தி ஸ்தாபன விதி

दक्षिणामूर्तिस्थापनविधिः

एकपञ्चाशत्तमे पटले दक्षिणामूर्तिस्थापनविधिरुच्यते । तत्र प्रथमं व्याख्यान गेय योगे निष्टस्य त्रिविधस्य दक्षिणेशस्य स्थापनं वक्ष्यत इति प्रतिज्ञा । ततो ज्ञानमुद्रासहितो व्याख्यानमूर्ति र्वीणा समन्वितो गेयमूर्ति र्द्वाभ्यांविरहितो योग मूर्तिरिति मूर्तित्रयस्य सामान्यलक्षणं प्रदर्श्य, त्रिविधस्यापि सूत्रपातपुरःसर विशेषलक्षणं प्रतिपाद्यते । अत्र व्याख्यानयुग् ज्ञानदः गेयी योगी च मुक्तित इत्युच्यते । किं च व्याख्यानमूर्तिविषये कौशिक काश्यप भरद्वाजात्रि, गौदमाख्यानां मुनीनां लक्षणं वर्ण्यते । एषां मुनीनामेकं द्वयं त्रयं वा पार्श्वयोर्न्यसेदित्युच्यते । ततः प्रतिष्ठाविधिः कथ्यते । पूर्ववद्वाराद्यं शुभंकालं निरीक्ष्य अङ्कुरार्पणं विधाय पूर्ववद्वेदिकाकुण्ड सहितमण्डपं कुर्यात् । ततोरत्नन्यासाक्षिमोक्षणप्रतिमाशोधन ग्रामप्रदक्षिण जलाधिवासान्ताः क्रियाः कुर्यादिति क्रियाः परं नामतोनिर्दिश्यन्ते । ततो यागार्थं प्रकल्पिते मण्डपे पुण्याहप्रोक्षण ब्राह्मणभोजन पुनः पुण्याहप्रोक्षण वास्तुहोम भूपरिग्रहाख्यानि कर्माणि कुर्यात् । ततो मण्डपे वेद्यूर्ध्वे स्थण्डिलं कृत्वा देवदेवस्य मुनीनां च पृथक् शयनं कल्पयेत् । ततो जलादानीतप्रतिमानां स्नान वेद्यां स्नपनं कृत्वा ताःप्रतिमाः शय्यायां वस्त्रकूर्चादिभूषिताः शाययेदिति शयनाधिवासविधिः प्रतिपाद्यते । अत्र व्याख्यानगेययोगनिष्ठाणां त्रयाणामपि प्रतिष्ठायामेतद्विधानं सामान्यमित्यभिधीयते । ततस्तत्तन्मूर्तीनां तत्तन्मूर्ति शिरोदेशे तदीयकुंभान् वस्त्रादिभूषितान्विन्यसेत् । अभितो वसु कुंभान् विद्येशाधिष्ठातान्विन्यसेत् । शिवकुंभस्योत्तरे वर्धनीं विन्यसेत् । प्रतिमालक्षणोदितरूपध्यानपूर्वकं पूजयेत् । तत्वमूर्त्यादि विन्यासं विधिवद्कुर्यादिति कुंभाधिवासविधिः संग्रहेण प्रतिपाद्यते । अत्र मुनीनामपि तत्वमूर्त्यादि विन्यासः कर्तव्य इति सूच्यते । ततोऽग्निकुण्डसंस्कारान्विधाय होमं समाचरेदित्युक्त्वा द्रव्यनिरूपणपूर्वकं होमविधिः संक्षेपेण निरूप्यते । ततो रात्रिशेषं व्यपोह्य विमले प्रभाते गुरुमूर्तिपैः सह स्नातः कृतमन्त्रादि विग्रहा बिंबानुद्धृत्य संपूज्य तथा कुंभाग्नीनप्यर्चयेत् । ततो यजमानो देशिकादीनां पृथक् पृथक् दक्षिणां दद्यात् । देशिको बिंबपुरतःस्थण्डिले कुंभान् विन्यस्य मन्त्रन्यासं समाचरेदित्युक्त्वा मन्त्रन्यासविधिरुच्यते । अत्र मुनीनामपि बीजानि तेषां हृदि विन्यसेदिति सूच्यते । ततस्तत्तत्कुंभतोयैस्तत्तद्देशेऽभिषेचयेत् । एवं तत्तद्कुंभोदकैर्मुनीनामपि स्नपनं कुर्यात् । व्याख्यानमूर्ति हस्तस्य पुस्तके कामिकाद्यमखिलागमं, सोपभेदं विन्यसेत् । ततो देवेशं स्थापयेत् । पश्चात्तद्दक्षवामयोर्मुनींश्च स्थापयेत् । ततःस्नपनमुत्सवं भूरि नैवेद्यं कारयेत् । अनुक्तमत्र सामान्यस्थापनोक्तवत् समाचरेत् । एवंप्रतिष्ठाविधिरतीव संग्रहेण निरूप्यते । अन्ते च दक्षिणेश प्रतिष्ठाकर्ताखिलान्भोगानिह भुक्त्वा, देहान्तेपरमेशानं यायान्न संशय इति फलं च निर्दिश्यते । एवमेकपञ्चाशत्तमपटलार्थसंग्रहः ।

51வது படலம் - தக்ஷிணாமூர்த்திஸ்தாபனம்

51வது படலத்தில் தக்ஷிணாமூர்த்தி ஸ்தாபன முறை கூறப்படுகிறது. முதலில் வ்யாக்யாணம், கேயம், யோகம் இவைகளில் இருக்கும் மூன்று விதமான தக்ஷிணாமூர்த்தியின் ஸ்தாபனம் கூறப்படுகிறது என்பது ப்ரதிக்ஞை, பின்பு ஞானமுத்திரையுடன் கூடியவர் வ்யாக்யான மூர்த்தி, வீணையுடன் கூடியவர் கேயமூர்த்தி, வ்யாக்யானம் வீணை இவை இரண்டும் இல்லாமல் இருப்பவர் யோகமூர்த்தி என்று மூன்று மூர்த்திகளின் சாமான்யமான லக்ஷணத்தை கூறி இந்த மூன்று மூர்த்திகளுக்கும் சூத்ரபாதம் என்ற முறைப்படி விசேஷலக்ஷணம் கூறப்படுகிறது. இங்கு வ்யாக்யானத்துடன் கூடியவர் அறிவை கொடுப்பவர் என்றும் கேயமூர்த்தியும் யோக மூர்த்தியும் மோக்ஷத்தை கொடுக்ககூடியவராகவும் கூறப்படுகிறது. மேலும் வ்யாக்யானமூர்த்தி விஷயத்தில் கௌசிக,காச்யப, பாரத்வாஜ, அத்திரி, கௌத்மர் என்ற முனிவர்களின் அமைப்பு முறை கூறப்படுகிறது. இந்த முனிவர்களின் ஒருவர் இருவர் மூவரையோ பக்கங்களில் ஸ்தாபிக்கவும் என்று கூறப்படுகிறது. பிறகு ப்ரதிஷ்டாமுறை கூறப்படுகிறது. முன்பு போல் திதி வாரம் இவைகளை உடைய நல்ல காலத்தை அறிந்து அங்குரார்ப்பணம் செய்து வேதிகை குண்டத்துடன் கூடியதான மண்டபம் அமைக்கவும். பிறகு ரத்ன நியாஸ நயனோன்மீலனம் பிம்ப சுத்தி, கிராம ப்ரதிட்சண, ஜலாதிவாசம் வரையிலான காரியங்கள் செய்யவேண்டும் என்று கிரியைகளின் மேலான பெயர்கள் குறிப்பிடப்படுகிறது. பிறகு யாகத்திற்காக அமைக்கப்பட்ட மண்டபத்தில் புண்யாக ப்ரோக்ஷண, பிராமண போஜனம் மறுபடியும் புண்யாஹ ப்ரோக்ஷணம், வாஸ்து சாந்தி, பூமி பரிக்ரஹம், முதலிய கர்மாக்களை செய்யவும். பிறகு மண்டபம் ஸ்தண்டிலம் அமைத்து தக்ஷிணாமூர்த்திக்கும் முனிவர்களுக்கும் தனித்தனியாக சயனம் அமைக்கவும். பிறகு ஜலாதிவாசத்திலிருந்து எடுத்துவந்த பிம்பங்களுக்கு ஸ்நான வேதியில் ஸ்நபனம் செய்யவும். அந்தப்ரதிமைகளை சயனத்தில் வஸ்திரம், கூர்ச்சம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவர்களாக சயனாதிவாசம் செய்யவும் என்ற சயனாதிவாஸ முறை கூறப்பட்டது. இவ்வாறு வ்யாக்யான கேய யோக நிஷ்டர்களான மூன்று மூர்த்திகளின் ப்ரதிஷ்டை கூறப்படுகிறது. பிறகு அந்தந்த மூர்த்திகளுக்கு அந்த மூர்த்தியின் சிரோதேசத்தில் அவர்களின் கும்பங்களை அலங்கரிக்க பட்டதாக ஸ்தாபிக்கவும், ப்ரதானகும்பத்தை சுற்றி வித்யேஸ்வர கும்பங்களாக எட்டு கும்பங்களை ஸ்தாபிக்கவும் சிவ கும்பத்தின் வடக்கு பாகத்தில் வர்த்தனியை ஸ்தாபிக்கவும் ப்ரதிமா லக்ஷணத்தில் கூறப்பட்டபடி ரூபத்தியானத்துடன் முறைப்படி பூஜிக்கவும். தத்வ தத்வேச்வர மூர்த்தீஸ்வர நியாஸம் முறைப்படி செய்யவும் என்று கும்ப அதிவாச முறை சுருக்கமாக கூறப்படுகிறது. இங்கு முனிவர்களுக்கும் தத்வ தத்வேஸ்வர மூர்த்திமூர்த்தீஸ்வர நியாஸம் செய்யவேண்டுமென்று அறிவிக்கப்படுகிறது. பிறகு குண்டஸம்ஸ்கார அக்னிஸம்ஸ்காரம் ஹோமம் செய்யவும் என கூறி திரவிய நிரூபணமுறைப்படி ஹோமம் சுருக்கமாக கூறப்படுகிறது. பிறகு இரவு பொழுதை போக்கி சுத்தமான காலை பொழுதில் ஆச்சாரியன் மூர்த்திபர்களுடன் கூடி நித்ய அனுஷ்டானம் முடித்து பிம்பங்களை எடுத்து பூஜித்து கும்ப அக்னி இவைகளையும் பூஜிக்கவும், பிறகு எஜமானன் தேசிகர்களுக்கு தனித்தனியாக தக்ஷிணை கொடுக்கவும். ஆசார்யன் பிம்பத்திற்கு முன் ஸ்தண்டிலத்தில் கும்பத்தை வைத்து மந்திர நியாஸம் செய்யவும் என்று கூறி மந்திரநியாஸம் முறை கூறப்படுகிறது. இங்கு முனிவர்களுக்கும் பீஜமந்திரங்களை அவர்கள் ஹ்ருதயத்தில் ஸ்தாபிக்கவும் என்று அறிவிக்கப்படுகிறது. பிறகு அந்தந்த கும்ப தீர்த்தங்களால் அந்தந்த தேசத்தில் அபிஷேகம் செய்யவேண்டும் இவ்வாறே முனிவர்களின் கும்பதீர்த்தங்களால் முனிவர்களுக்கும் அபிஷேகம் செய்விக்கவேண்டும். வ்யாக்யான தக்ஷிணாமூர்த்தி கையில் உள்ள காமிகம் முதலான ஆகமங்களை உபாகமத்துடன் கூடியதாக ஸ்தாபிக்கவும். பிறகு தேவேசனை ஸ்தாபிக்கவும் வலது இடது பாகங்களில் முனிவர்களை ஸ்தாபித்து, ஸ்நபனம், உத்ஸவம், அதிகமான நைவேத்தியம் செய்யவும். முடிவில் தக்ஷிணாமூர்த்தி ப்ரதிஷ்டையை செய்பவன் எல்லாம் அனுபவித்து முடிவில் பரமேஸ்வரனை அடைகிறான் என்பதில் சந்தேகம் இல்லை இவ்வாறு 51 வது படல கருத்தாகும்!!

५१ एकपञ्चाशत्तमे पटले दक्षिणामूर्ति स्थापन विधिः

51 வது படலத்தில் தக்ஷிணாமூர்த்தி ஸ்தாபன முறை

१ स्थापनं दक्षिणेशस्य शृणुध्वं विप्रसत्तमाः ।
व्याख्यान गेय योगेषु निष्ठस्य त्रिविधस्य च ॥

1. ஹே, விப்ரச்ரேஷ்டர்களே, தக்ஷிணாமூர்த்தி யினுடைய ஸ்தாபனத்தை கேளுங்கள். வ்யாக்யான லக்ஷணம், கேயலக்ஷணம், யோக லக்ஷணம் என நிஷ்டையில் மூன்று விதங்களாம்.

२ व्याख्यायुक्ज्ञानमुद्रातो गेयी वीणा समन्वितः ।
द्वाभ्यां विरहितो योगी स नानाकार भेदतः ॥

2. அந்ததக்ஷிணாமூர்த்தியானவர் வ்யாக்யான லக்ஷணத்தில் ஞானமுத்ரையோடும் (சின்முத்ரை) கேய லக்ஷணத்தில் வீணையோடும், இரண்டிலிருந்தும் வேறு பட்ட யோகத்தில் பலவிதமான திருஉருவ பேதங் களாகும்.

३ चतुर्भुजस्त्रिणेत्रस्तु कुन्देन्दु धवलप्रभः ।
श्वेतविद्रुमहेमाभश्श्यामाभो वा प्रकीर्तितः ॥

3. நான்கு கைகள், மூன்று கண்கள், வெண்மையாகிற காந்தியோடு கூடிய இளம் சந்திரனோடும், வெளுப்பு, பவள நிறமாகவும், பொன்னிறமாகவும் , கருப்பு திருமேனியோடு கூடியவராகவும்.

४ व्याघ्रचर्माम्बरो वापि दिव्याम्बरधरस्तु वा ।
उत्तरीय समोपेतः शुक्ल यज्ञोपवीतकः ॥

4. புலித்தோல் ஆடையை தரித்தவராகவும், அல்லது பீதாம்பரங்களை தரித்தவராகவும் மேல் (அங்க) வஸ்திரத்துடன் கூடியவராகவும் வெண்மையான பூணூலை அணிந்தவரும்.

५ विकीर्ण मूर्धजोवापि जटामकुट एव वा ।
पट्टिकाबन्धनो वापि सत्करोटिकयायुतः ॥

5. விரித்த ஜடையோடு கூடியவராகவும், ஜடாமகுடத்தோடு கூடியவராகவோ (தலையில்) பட்டையான பட்டுத்துணியால் கட்டப்பட்டவராகவும், தலையில் மண்டை ஓட்டை தரித்தவராகவும்.

६ धुर्त्तूराग्वधैर्नाग पत्रैश्चन्द्रेण मण्डितः ।
पञ्चमुद्रासमोपेतो गंगा किंकिणि संयुतः ॥

6. ஊமத்தப்பூ, கொன்றை புஷ்பம், பாம்பு படங்களுடன் கூடியவரும் சந்திரனோடு கூடியவராகவும் ஐந்தாவது தொழிலான (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) அனுக்ரஹமுத்ரையுடன் தலையில் கங்கை மற்றும் மணிச்சரங்களோடு கூடியவராகவும்

७ .अधस्ताद्वटवृक्षस्य शैलादूर्ध्वं श्रितः पुनः ।
व्याघ्रचर्मोपरिष्टात्तु स्थितो वीरासनोऽथवा ।

7. ஆலமரத்தினுடைய அடியில் பாறாங்கல்லில் மீது அமர்ந்தவராகவும், புலித்தோலின் மீது அமர்ந்தவராகவும் அல்லது (மரத்தினடியில்) நின்ற கோலத்துடனோ, வீராஸனமுடையவராகவும்

८ लम्बितं दक्षिणं पादं तज्जानूपरि संस्थितम्
वामांघ्रिनालकं कुर्यात् सव्यहस्तन्तुमुद्रया ॥

8. வலது காலை தொங்கவிட்டு அதனுடைய முழங்காலின் மீது வளைந்த இடது கால்விரல்களை வைக்கப்பட்டவராய் வலது கையில் முத்ரையோடு கூடியவராகவும் செய்யவேண்டும்.

९ सन्दर्शसंज्ञयोपेतो वामहस्तस्थ पुस्तकः ।
द्वात्रिंशन्मृत्तमात्रान्तं दैर्घ्यं स्यात् सतु पुस्तकः ॥

9. நன்கு காண்பிக்கப்பட்ட ஸமிக்ஞைகளோடு இடது கையில் இருக்கக்கூடிய புஸ்தகத்தோடு கூடிய வராயும் முப்பத்திரண்டு அங்குல நீளமான (சாய்ந்த) புஸ்தகத்தை கையில் உள்ளவராயும்.

१० अथवा नागसंयुक्तो वामहस्तस्समीरितः ।
वरदन्तं विजानीयाज्जानुस्थ मणिबन्धकम् ॥

10. அல்லது இடதுகையில் ஸர்ப்பம் (பாம்பு) உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. முழங்காலில் வைக்கப்பட்டுள்ள மணிக்கட்டுடன் கூடியதாக வரதஹஸ்தத்தை அறியவும்.

११ दण्डहस्तो यदा स स्यात् प्रकोष्ठञ्जानुसंस्थितम्।
विकसत् पद्मसंकाशः अधस्ताद्विस्तृतांगुलिः ।।

11. முழங்காலில் சேர்ந்த முழங்கையை உடையதாக தொங்குகிற கையை அமைக்கவும். விரிந்த (மலர்ந்த) தாமரையின் காந்தியைப் போன்று உள்ள விரிந்த விரல்களோடு கூடிய கையை உடையவராகவும்.

१२ परहस्तद्वये चाक्ष माला ज्वाला समन्वितः।
पद्मं वा चोत्पलं वापि व्यालं वा मेतु कल्पयेत्।।

12. பின்கையில் இரண்டிலும் அக்ஷமாலை, அக்னியோடு கூடியவராகவும் தாமரையையோ, நீலோத்பலத்தையோ, பாம்பையோ இடதுகையில் வைத்திருப்பவராகவும்.

१३ कटकौतौ प्रकर्तव्यौ प्रसन्नसमलोचनः।
नासाग्रदृष्टियुक्त् वामहस्तो वा स्यात्सुपुस्तकः ।।

13. அந்த இருகைகளையும் கடக முத்ரையோடு கூடியதாகவும் பிரஸன்னமான நேர்பார்வையோடு கூடியவராகவும், அல்லது தனது மூக்கு நுனியில் பார்வையுடையவராவும் இடது கையில் புஸ்தகத்தோடு கூடியவராகவும்.

१४ आभंगसहितं कुयद्दिहमध्ये तु वामतः।
सूत्रं वामे च हृदयं नाभेर्मेढ्रात् क्रमेण तु ।।

14. சரீர மத்தியிலிருந்து இடதுபாகத்தில் சிறிது வளைவான பங்கத்தோடு அதாவது ஆபங்க ஸஹிதமாக செய்யவேண்டும். சூத்திரமானது முறையாக இடது பாகத்தில் ஹ்ருதய, தொப்பூழ், குஹ்யப்ரதேதும் இவைகளில் இருக்கவேண்டும்.

१५ मात्रंकालञ्च भागञ्च त्यक्त्वातिष्ठति मध्यतः।
लंबपादस्थितं मध्य सूत्रादर्धांगुलान्तरे ।।

15. மத்தியிலிருந்து மூன்று மாத்ரை அளவு விட்டதாக தொங்கும் பாதமுள்ளதாகவும். லம்ப பாதத்தின் இருக்கையானது மத்ய சூத்ரத்திலிருந்து 1/2 அங்குல இடைவெளியுள்ளதாகும்.

१६ अर्द्धार्द्धांगुल वृद्ध्या तु यावत् सार्द्धयवं भवेत्।
सदशांगुष्ठ मूलोच्च स्तनाग्रावधिरेव तु

16. 1/2 அங்கு அதிகரிப்பால் ஒன்றறையவ பிரமாணம் வரையாகும். கட்டைவிரலின் அடியாக உயரத்திலிருந்து (மார்பு) நுனிவரை உள்ள இடைவெளி பத்து அங்குலமாகும்.

१७ नयने मध्यमं विद्यात् अंगुष्ठस्तनयोस्ततः।
नाभेस्तु मणिबन्धान्तः धृत्यंगुलमुदाहृतः ।।

17. கட்டை விரலுக்கும் மார்பகத்திற்கும் உள்ள இடைவெளி இருகண்களுக்கும் இடைப்பட்டது ஆகும். நாபியிலிருந்து மணிக்கட்டின் இடைவெளி நான்கங்குலமென்று உதாரணம் கூறப்படுகிறது.

१८ सपुस्तकस्य हस्तस्य चोरूर्ध्वात् भागमन्तरम्।
नाभेस्तुमणिबन्धान्तं सस्यादेकोनविंशतिः ।।

18. புஸ்தகமுள்ள கைக்கும் தொடையின் பாகத்தின் இடைவெளியும், தொப்பூழிலிருந்து கட்டு வரையிலான இடைவெளியும் பத்தொன்பது அங்குலமாகும்.

दोर्मध्यात् पार्श्वमध्याच्च द्व्यन्तरस्स्याद्रसांगुलम्।
परस्यमणिबन्धाच्च भुजमध्याद्दवांगुलम् ।।


19. கையின் தோள் பக்க மத்தியிலிருந்து பக்கவாட்டு மத்யபாகம் வரையிலான இடைவெளி ஆறங்குலமாகும். பக்கக்கையின் மணிக்கட்டிலிருந்து அந்த கையின் தோள்பட்டையின் மத்தியும் எட்டங்குலம் ஆகும்.

द्व्यन्तरं दशमात्रं स्यात् दोर्मूलान्मध्यमांगुलात्।
हिक्कासूत्र द्विमात्राथ कट्काग्र समुच्छ्रया ।।

20. நடுபாகமுள்ள கை, பக்கவாட்டுக் கையின் இடைவெளி பத்து மாத்ரையாகும். தோள்பட்டைபாக அடியிலிருந்து கையின் முடிவுபாகம் ஓரங்குலமாகும். இடுப்பு பாக சூத்ரம், கடக முத்ரையின் உயர அளவினால் இருமாத்ரை அங்குல அளவாகும்.


२१ सजटामकुटादेव चूचुकास्य गलान्तकाः।
तत्तत् कलासमोपेता श्शुक्ल यज्ञोपवीतिनः ।।

21. ஜடாமகுடம், ஸ்தனம், கழுத்தின் அடிபாகம் இவைகளின் முறையே இரண்டங்குல நீளம் மட்டும் அளவாகும். அவைகள் அந்தந்த அழகுடன் கூடியவைகளாகவும், வெண்மையான பூணூலை தரித்தவர்களாயும்



व्याख्यानसहितात्पेवं सन्दर्शस्य समास्यपुक्
तत्राक्षिपातयोगेन सदाकुञ्चितलोचनः
प्रसृतोवाम हस्तस्या योगमूर्तिरयंमतः
अथकुंचितवामांघियुग्मस्फिग्गतपार्ष्णिकः
उद्धृतं तस्य गान्वम्र दण्डकोर्परकान्तयुक्
संदर्श दृष्टिपातश्च आभङ्गं चैव पूर्ववत् ।

வ்யாக்யான தக்ஷிணாமூர்த்தி அமைப்பு போல் அமைத்து கண் பார்வையானது சிறிது வளைந்தும், இடது கை தொங்கும் அமைப்பையுடையதாகவும் இடது கால் வளைந்து ப்ருஷ்டத்தை தொட்டதான ஆஸனத்தின் மேல் நிறுத்தி இடது கையின் முழங்கை பாகம் இடதுகாலின் முழந்தாளின் மேல் (மூட்டு மேல்) வைத்து தொங்குமமைப்பையுடையதாயும் ரிஷிக் கூட்டங்களுடன் கூடியிருப்பவர் யோக தக்ஷிணாமூர்த்தியாவார்.



चतुर्भुजस्त्रिणेत्रश्च कुन्देन्दुधवलप्रभुः
श्वेतविद्रुमहेमाभः श्यामाभोवाप्रकीर्तितः
व्याघ्रचर्माम्बरो वाऽपि दिव्याम्बर धरस्तुवा
उत्तरीय समोपेतः शुक्लयज्ञोपवीतकः
विकीर्णमूर्धजो वाऽपि जटामकुट एव वा
पट्टिकाबन्धनो वाऽपि सत्करोटि कयायुतः
धुत्तूरारग्वधैर्नागपत्रैश्च न्द्रेण मण्डितः
पश्चमुद्रा समोपेतो गङ्गाकिङ्किणि संयुतः
अधस्ताद्वटवृक्षस्य शैलादूर्ध्वाश्रितः पुनः
व्याघ्रचर्मोपरिष्टात्तु स्थितो वीरासनोऽथवा
लम्बितं दक्षिणं पादं तज्जानूपरि संस्थितम्
वामांघ्रिनाळकं कुर्यात्सव्यहस्तं तु मुद्रयां
संदर्श संज्ञदोपेतं वामहस्तस्थ पुस्तकः
अथवा नागसंयुक्तो वामहस्तस्समीरितः
परहस्तद्वये चाक्षमाला ज्वालसमन्वितः

முல்லை புஷ்பம், சந்திரன் போன்று வெண்மையாக இருப்பவரும் வெண்மை பவளம், ஸ்வர்ணம், கருப்பு போன்ற நிறமுள்ளவராகவோ முக்கண் உடையவராகவோ இருந்து மேல் வஸ்திரம் வெண்மையான பூணூல் இவையுடன் புலித்தோலையோ அல்லது அழகிய ஆடையையோ உடுத்தி பறந்த ஜடை அல்லது ஜடாமகுடம் அல்லது கட்டப்பட்ட முடி, கபாலத்துடன் உள்ள ஜடையானது கருவூமத்தை புஷ்பம், கொன்றை புஷ்பம் சர்பம் இவைகளாலும் சந்திரனாலும் அலங்கரிக்கப்பட்டதாகவும், கங்கையையும், சலங்கையையும் முடியில் உடையவராயும் மலையின் மேல் அமர்ந்தோ புலி தோல் மேலோ ஆலமரத்தின் அடியிலோ, வீராஸனமாகவோ இருந்து வலது காலை தொங்க விட்டுக்கொண்டு இடது காலை வலது கால் முழந்தாள் மேல் மடக்கிய அமைப்பை உடையதாயும் நான்கு திருக்கரங்களில் வலது கையில் சின்முத்ரையும், இடது கையில் புஸ்தகமும், மற்ற இரண்டு கைகளில் நாகமும், அக்னியையும் தரித்தவராயும் ரிஷி கூட்டங்களுடன் இருப்பவர் வ்யாக்யான தக்ஷிணாமூர்த்தியாவார்.

२१ शुक्लाद्यंबर संयुक्ताः भस्मरुद्राक्षसंयुताः ।
कौशिकः काश्यपश्श्याम इतरः पीत वर्णकः ॥

22. வெண்மையான பட்டு முதலிய வஸ்திரங்களை தரித்தவர்களாகவும், விபூதி ருத்ராக்ஷங்களை அணிந்தவர்களாயும், கௌசிகர் மஞ்சள் நிறமுள்ளவராகவும், காச்யர் கரும்பச்சை நிறமாகவும்

२२ रक्तवर्णो भरद्वाजो धूम्राभावत्रिगौतमौ ।
एषामेकद्वयं वापि त्रयं वा पार्श्वयोर्न्यसेत् ॥

23. பரத்வாஜர் சிகப்பு நிறமாகவும், அத்ரி, கௌதமர் இவர் இருவரும் புகை நிறமாகவும், உள்ள இவர்களை சுவாமிக்கு இருபக்கங்களிலும் பக்கத்திற்கு ஒருவராகவோ மூவராகவோ வைக்கவேண்டும்.

२४ व्याख्यानमूर्तिरेवं स्यात् गेयमूर्तिस्ततोमतः ।
ऊर्ध्वाद्वोमध्य कटकौ सव्यासव्यकरावुभौ ॥

24. வ்யாக்யான (லக்ஷண) மூர்த்தியானவர் இவ்வாறாகவும், கேயமூர்த்தி என்ற வீணா தக்ஷிணா மூர்த்தியானவர் (நடுபக்கத்தில் உள்ள வலது கையில் கடகமுத்ரையோடு கூடியதாகவும்) வலது இடது பாகம் உள்ள நான்கு கைகளில் கடக முத்ரையையும்

२५ वीणातु दक्षिणेवाग्रे दक्षिणेकटकस्थितः ।
दक्षिणेकटकञ्चोरू स्थितायां विनिवेशयेत् ॥

25. கடக முத்ரையுடன் கூடிய வலதுகையில் வீணையும், அந்த வீணை இடது தொடையில் சேர்ந்ததாக அமைக்கவும். வலதுகை கடகமுத்ரையுடன் துடையின்மேல் வைத்ததாக அமைக்கவும்.

२६ कोलकञ्चोरुबाह्येतु तन्मूलं कटकोर्ध्वतः ।
भागमग्रन्तदावामो भागाधिक चतुर्भुखः ॥

26. அந்த வீணையினுடைய வட்டபாகமானது தொடைக்கு வெளியிலும், அதனுடைய மூலபாகமானது கடகமுத்ரைக்கு மேல் உள்ளதாகவும், இடது பாகம், ஒரு பங்காகவும், ஐந்து பாகத்தை உடையதாயும்,

२७ विस्तारस्तुकलास्तस्याः परिणाहन्तु पूर्ववत् ।
कलावक्रास्य विस्तारा यामं वापि षडंगुलम् ॥

27. அகலமானது ஐந்து அங்குலம், நீளமானது, ஐந்தங்குலம் வீணையினுடைய முகத்தின் சுற்றளவு ஐந்தங்குலம் வீணையினுடைய முகத்தின் உயர அளவானது ஆறங்குலமும்

२८ तत्तुंगन्तु तदर्धं स्यात् एवं ज्ञात्वा समाचरेत् ।
हस्तस्यमणिबन्धान्तं हिक्कासूत्रादितः क्रमात् ॥

28. வீணை வட்டபாகத்தின் உயரம் மூன்று அங்குலம் என்று அறிந்து செய்க. கையிலிருந்து மணிக்கட்டு வரையும் இடுப்பு சூத்ரமுதலும், முறையாக

२९ त्रिंशदंगुलमित्युक्त मथान्यमणिबन्धतः ।
आनाभेरन्तरंनालं शेषं सर्वन्तु पूर्ववत् ॥

29. முப்பது அங்குலம் என்றும், வேறு கை மணிக்கட்டிலிருந்து தொப்பூழ் வரையிலுமான இடைவெளியானது முன்பு போல 30 அங்குலமாகும்.

३० व्याख्यान सहित स्त्वेवं सन्दर्शस्य समास्ययुव
तत्राक्षिपात योगेन सदाकुञ्चित लोचनः ॥

30. வ்யாக்யான மூர்த்தியையும் இவ்வாறாக கவனித்து செய்யவும். அவ்விடத்தில் கண்ணின் பார்வை வளைந்ததாகவும் அமைக்கவேண்டும்.

३१ प्रसृतोवामहस्तः स्यात् योगमूर्तिरयम्मतः ।
अथकुञ्चितवामांघ्रि युग्मस्फिग्गतपार्ष्णिकः ।

31. விரிந்த இடது கையை உடையவர் யோக மூர்த்தி என்றும் பிறகு வளைந்த இடது குதிகால் நுனியானது இடுப்பு பிரதேசத்தை ஒட்டியதாகவும்

३२ उद्धृतन्तस्य जान्वग्र दण्डकोर्पर कान्तयुक् ।
संदर्शदृष्टिपातश्च आभंगश्चैव पूर्ववत् ॥

32. தூக்கப்பட்ட அவருடைய இடது முழங்கால் நுனியானது இடதுகையின் பின் பாகத்துடன் சேர்ந்ததாகவும் நன்கு பார்வையோடு கூடியவராகவும் சிறிது ஆபங்கத்தோடு கூடியவராகவும்

३३ नानामृगैस्तु संकीर्णं नाना व्यालैस्तु संयुतः ।
नानामुनिगणैस्साधं सिद्धविद्या धरैरपि ॥

33. பலவித பிராணிகளோடு கூடியவரா கவும், பலவித பாம்புகளோடு கூடியவராகவும், அனேக முனிவர்களோடு கூடியவராகவும் சித்த வித்யாதரர் களோடு கூடியவராகவும்

३४ भूतैश्च किन्नरैरन्यैः पुष्पवृक्षैश्च मण्डितम्।
शैलंकुर्यात्तुतत्पार्श्वे वटवृक्षस्तु शाद्वलः॥

34. பூதகணங்கள், கின்னர கிம்புருஷாதிகளோடு கூடியவராகவும், மரங்களால் சூழப்பட்டவராகவும், அவருக்கு பக்கத்தில் மலை முதலியவைகளைச் செய்தும் ஆலமரம், புல்லடர்ந்த பிரதேசத்தில் வீற்றிருப்பவராகவும்

३५ फलशाखोप शाखाद्यो नानापक्षिसमायुतः।
तन्मूले दक्षिणे छाया निषण्णः कृपयायुतः॥

35. பழங்களோடும், கிளைகளோடும், விழுதுகளோடும் பலவித பக்ஷிகளோடும் கூடிய மரத்தின் அடியில் தென்புறமாக நிழலில் அமர்ந்திருப்பவராகவும் கருணையோடு கூடியவராகவும்,

३६ रत्नोपशोभिते पीठे व्याघ्रचर्मोत्तरच्छदे।
आसीनोमुनिभिः सम्यक्
कौशिकादिभिरादरात्॥

36. ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்ட பீடத்தில் விரிக்கப்பட்ட புலித்தோலின் மீது நன்கு அமர்ந்தவராகவும் கௌசிகாதி முனிவர்களோடு கூடியவராகவும்,

३७ शिवद्विजकुलस्यादि भूतैस्तु परितस्थितैः।
आगमाहित चेतोभिः परमेशेन दीक्षितैः॥

37. ஆதிசைவர் குலத்தில் முதன் முதலில் தோன்றியவர்களும், ஆகமங்களை அறிந்த மனதை உடையவர்களும், பரமேச்வரர்களும் தீக்ஷை செய்யப்பட்டவர் களுமான கௌசிகாதி முனிவர்களால் சூழப்பட்டவராயும் ஆக,

३८ एवन्तु दक्षिणामूर्तेः मूर्तिभेदा उदाहृताः।
व्याख्यायुक् ज्ञानतः प्रोक्तो गेययुक्
भुक्तिदोमतः॥

38. தக்ஷிணாமூர்த்தியினுடைய மூர்த்தி பேதங்களானது கூறப்பட்டுள்ளது. வ்யாக்யான மூர்த்தியானவர் ஞானத்தை கொடுக்கக் கூடியவராகவும், கேய தக்ஷிணாமூர்த்தியானவர் போகத்தையும் கொடுக்கக்கூடியவராகவும் அறியவும்.

३९ सयोगेमुक्तिदोज्ञेयः इति ज्ञात्वा समाचरेत्।
आसीनो वा स्थितो वापि ऋषिभिः
स्संवृतो न वा॥

39. யோக தக்ஷிணாமூர்த்தியானவர் முக்தியை கொடுக்கக்கூடியவராக அறியவும், (நினைத்து பூஜை செய்யவும்) உட்கார்ந்த கோலமாகவோ நின்ற கோலமாகவோ, ரிஷிகளோடு கூடியவராக இல்லாமலோ வடிவமைக்க வேண்டும்.

४० वटवृक्ष विहीनो वा भूताद्यावृत एव वा।
भूतस्थलंव पादो वा दक्षिणेशस्समीरितः॥

40. ஆலமரம் இல்லாமலோ பூதகணங்களால் சூழப்பட்டவராகவோ பூதத்தின் மீது தொங்கிய திருவடியை வைத்தவராகவோ, தக்ஷிணாமூர்த்தியானவர் கூறப்படுகிறார்.

४१ एवं लक्षणमादिष्टं प्रतिष्ठाविधिरुच्यते।
वाराद्यं पूर्ववत् ग्राह्यमंकुरार्पणमेव च॥

41. இவ்வாறு அமைப்பு முறைகள் கூறப்பட்டு ப்ரதிஷ்டா முறையானது கூறப்படுகிறது. திதி, வார, யோகாதிகளை முன் போல் எடுத்துக் கொண்டு அங்குரார்ப்பணத்தை செய்யவேண்டும்.

४२ मण्डपं पूर्ववत् कुर्यात् नवपञ्चैक सख्यया।
कुण्डानि परितो श्राणि तद्दिगश्राणि वा भवेत्॥

42. யாக மண்டபத்தை முன்போல் செய்து ஒன்பது, ஐந்து, ஒன்று என்ற எண்ணிக்கைகளில் சதுரச்சமும், சுற்றிலும் அஷ்டாச்ரமுமோ அமைக்கவும்.

४३ रत्नन्यासाक्षि मोक्षौ च प्रतिमाशोधनं तथा।
ग्रामप्रदक्षिणञ्चैव जले चैवाधिवासनम्॥

43. ரத்னந்யாஸம், நயோன்மீலனம், பிம்ப சுத்தி, கிராம பிரதக்ஷிணம் முதலியவைகள் செய்து ஜலத்தில் அதிவாஸம் செய்யவேண்டும்.

४४ पुण्याहप्रोक्षणञ्चैव पश्चात् ब्राह्मण भोजनम्।
पुण्याहं वास्तु होमञ्च भूपरिग्रह मेव वा॥

44. புண்யாஹ ஜலத்தை தெளித்தலை செய்த பிறகு அந்தணர்களுக்கு உணவளிப்பதை செய்விக்க வேண்டும். புண்யாஹவாசனம், வாஸ்துஹோமாதிகளை செய்து பூமியை ஏற்றுக் கொண்டு,

௪௫ कृत्वातु देव देवस्य ऋषीणां च यथार्हकम् ।
वेद्यूर्ध्वेस्थण्डिलं कृत्वा शयनं कल्पयेत् पृथक् ॥

45. பூஜிக்கத்தக்க அந்த ரிஷிகளையும், சுவாமியையும், வேதிகையின் மீது தனியாக ஸ்தண்டிலம் அமைத்து அதன்மேல் சயனத்தை அமைக்க வேண்டும்.

௪௬ स्नानवेद्यान्तु ऋषिभिः स्नपनं कारयेत् शिवे ।
शय्यायां शाययेद्देवं कौशिकादि ऋषीनथ ॥

46. பிறகு ஸ்தான வேதிகையில் ரிஷிகளோடு கூட சுவாமிக்கு ஸ்நபனாபிஷேகம் செய்வித்து, பிறகு அந்த கௌசிகாதி ரிஷிகளோடு கூட சுவாமியை படுக்கையில் எழுந்தருளச் செய்யவேண்டும்.

௪௭ दक्षिणे तु भरद्वाज प्रमुखानप्य दक्षिणे ।
शाययेद्वस्त्रकूर्चादि भूषितांस्तान् पृथक् पृथक् ॥

மூர்த்திகளைப் பிரதிட்டை செய்தல் வேண்டும். அல்லது (1) கணபதி, (2) லெட்சுமி, (3) நாராயணமூர்த்தி, (4) நரசிம்ம மூர்த்தி, (5) துர்க்கை முதலிய மூர்த்திகளைப் பிரதிட்டை செய்தல் வேண்டும்.

5. *தாயார் சன்னதியில்:* விஷ்ணு ஆலயத்தில் விளங்கியருளும் தாயார் சன்னிதியில் அஷ்டலட்சுமிகளைப் பிரதிட்டை செய்தல் வேண்டும்.

6. *அம்பாள் ஆலயத்தில்:* சிவாலயத்தில் விளங்கும் அம்பாள் ஆலயத்தில் அல்லது தனி அம்பாள் ஆலயத்தில் (1) கணபதி, (2) சாமுண்டி, அல்லது கௌமாரி, (3) வைஷ்ணவி, (4)பிராம்ஹி, (5) துர்க்கை முதலான திருமேனிகளைப் பிரதிட்டை செய்தல்வேண்டும்.

மற்ற ஆலயங்களுக்கு சிவாலயத்தில் இருக்கின்ற பிரதிட்டைப்படி செய்தல்வேண்டும்.

பிரகாரத்தில் பரிவார தேவதைகள் இருக்கவேண்டிய ஸ்தான விபரம்:

சிவாலய சுற்றுப் பிரகாரங்களில் இருக்கவேண்டிய தேவதைகள் சன்னிதியைப் பார்த்தபடி வலதுபுறத்தில் சூரியனும், இடப்புறத்தில் சந்திரனும், அக்னி திக்கில் நவக்கிரகங்கள் - வீரபத்திரர் - காளி, தெற்குத் திக்கில் - சப்தமாதர்களும், நிருதி திக்கில் - கணபதியும், மேற்குத்திக்கில் - சிவலிங்கமும், வாயு திக்கில் - முருகனும், வடக்குத் திக்கில் - ஈஸ்வரி , சரஸ்வதி, ஈசான்ய திக்கில் - பைரவமூர்த்தியும், கோமுகம் எதிரில் சண்டேசுவரர் முதலான தேவதா பிம்பங்களை பிரதிட்டை செய்தல்வேண்டும்.

கணபதி - முருகன் முதலிய பிரதான ஆலயங்களுக்கு பிரகாரத்தில் அந்தந்த சுவாமிகளை பரிவர்த்தனமாக இடங்களை மாற்றியமைக்கவேண்டும்.

தெட்சிணாமூர்த்தி:

இப்பெருமானை தெற்கு நோக்கியபடி அமைத்தல் வேண்டும். இவரது திருமேனிகள் ஞான, வியாக்யான, மேதா, கேய, யோக, சக்தி தட்சிணாமூர்த்திகள் என பல இருப்பினும் புராணம் மற்றும் திருமுறைகள் படி தட்சிணாமூர்த்தி திருமேனிகளோடு பிரதானமாகக் கூறப்படுகின்ற (தல புராணப்படி) ரிஷிகளோடு கூடியிருத்தல் வேண்டும். மேலும் விமானம், மற்றும் கோபுரங்களின் தெற்குத் திசையில் பல நிலை தட்சிணாமூர்த்திகளின் சுதைகளை காண்பிக்கவேண்டும்.



சிற்ப நூல்களில் தட்சிணாமூர்த்தி

ஸ்ரீ தர்ம வியாக்யான மூர்த்தி

''ஆஸநாத சுகாஸீநொ பக்திமான் ஸ்வர்ணஸன்னிப : ।
தக்ஷிணாமூர்த்தி மீசானம் குர்யாத் வடதோரத் : ।
லம்பயேத் தக்ஷிணம்பாதம் வாமாங்கரேர் நலகாகிரகம் ।
ஸமமேவம் விதாதவ்யம் வாமபாதந்து சாபயேத் ।
தக்ஷிணே பூர்வஹஸ்தேது ஞானமுத்ராந்து தாரயேத் ।
தக்ஷிணே பரஹஸ்தேது தாரயேக்ஷமாலிகாம் ।
வரதம் வாமஹஸ்தேது தண்டம் வா பரிகீர்த்திதம் ।
வாமஜாநு பரிஷ்டாத்து தண்டச்சேத் கோர்பரம் நியஸேத் ।
வாமே பரகரே தத்ர வஹ்னிம் வா மிருகமேசவா ।
விகீர்ண மூர்த்தஜம் வாபி ஜடாமண்டல ஸம்யுதம் ।
சுத்தஸ்படிக ஸங்காசம் ....।
வாமே துர்தூரபுஷ்பஞ்ச நாகஸ்ச சிரஸிஸ்மிருதம் ।
தக்ஷிணேந்து கலாயுக்தம் ஸர்வாபரண பூஷிதம் ।
ஸித வஸ்த்திரோத்தரீயஞ்ச ஸித யக்ஞோப வீதினம் ।
வ்யாக்ர சர்மாம்பரோபேதம் த்ரிநேத்ரம் க்லேசவர்ஜிதம் ।
ருத்ராக்ஷம் கண்டமாலாஞ்ச ஹிருன்மாலாஞ்ச விதாபயேத் ।
நாரதோ ஜமதக்னிச்ச வசிஷ்டோ தக்ஷபார்சுவகே ।
பாரத்வாஜச்ச சுநக ஸ்வகத்யோ வாமபார்சுவகே ।
வந்திதை : கின்னராத்யைஸ்து ஸேவிதம்பக்தி ஸம்யுதை : ।
அபஸ்மாரோ பரிஷ்டாத்து லம்ப பாத தலம் நியஸேத் ।
தர்மவியாக்யான மூர்த்திஸ்யாத் தேவம் ஸர்வசுபாவஹம் ।।''

(-சில்பரத்தினம்)

விளக்கம்:

இப்பெருமானைக் கல்லால மரத்தின் அடியில் அமைத்தல் வேண்டும். இவர் வீற்றிருந்து அருட்காட்சி வழங்குகின்றார். இவரது வலதுகால் தொங்கவிடப்பட்டும் பாதமானது அபஸ்மாரத்தின் மேல் பொருந்துமாறு அமைக்கப்படவேண்டும். இடது கால் மடங்கிக் கிடத்தப்பட வேண்டும். இடது காலின் நலகத்தின் நுனி (வலது முழங்காலிற்குச்) சமமாக அமைக்கப்படவேண்டும். ('நலகம்' என்பது முழங்காலிலிருந்து பாதம் வரையில் கீழ்நோக்கிவரும் நீண்ட எலும்பு. இது கணைக்காலில் முடிவடையும். இந்த எலும்பின் நுனி வலது முழங்காலின் மேல் பொருந்துமாறு ஒன்றன்மேலொன்றாக அமைத்தல் என்பதாகும்) இம்மூர்த்திக்கு நான்கு கரங்கள் அமைக்கவேண்டும். வலது புறம் முன்கையில் ஞான முத்திரையினை அமைக்கவேண்டும். வலது புறத்திலேயே பின்

மேல்கையில் அக்ஷமாலையை (ஜபமாலை) அமைத்தல் வேண்டும். இடதுபுறம் முன்கையில் வரதமுத்திரை அல்லது தண்டத்தை அமைத்தல் வேண்டும். தண்டத்தை அமைப்பதாக இருப்பின் இடது முழங்கால்மேல் இடது முழங்கையை வைக்கவேண்டும். இடதுபுறம் மேல்கையில் அக்னி (தீச்சுடர்) அல்லது மானை அமைக்கவேண்டும்.

தலையில் உள்ள கேசங்கள் (முடிகள்) நாற்புறமும் சிதறினவாறும் அல்லது ஜடாமண்டல மாகவும் ஜடைகள் கட்டப்பட்டதாகவும் அல்லது மகுடம் உடையவராகவும் அமைக்கலாம் சுத்தமான பளிங்குக் கல் போன்ற நிறம் உடையவராக கருதப்படுவர். ஜடைகளின் இடதுபுறம் ஊமத்தமலரும், பாம்பும் இருக்கும், வலது புறம் பிறைச்சந்திரனையும் எடுப்பாக இருக்கச் செய்யவேண்டும். ஆபரணங்களையும், வெண்மையான ஆமையின் மீது வேஷ்டியையும் அணிவிக்கவேண்டும். அல்லது புலித்தோலை ஆடையாக அணிந்திருக்க வேண்டும். மூன்று கண்கள் அவரது திருமுகத்தில் திகழவேண்டும். கிலேசங்கள் இல்லாமல் (மனக்கவலைகள் இல்லாமல்) சிறிதும் இல்லாதவராய் முகமானது பிரகாசமும் அமைதியும், சாந்தமுமாய் இருக்கச்செய்தல் வேண்டும். கண்டமாலை (கழுத்தையொட்டி அமைந்தது), ஹ்ருன்மாலை (இதயத்தின் இடம் வரையில் தொங்கும் மாலை) அமைக்க வேண்டும்.

இவருடைய வலதுபுறம் நாரத மகரிஷியும் ஜமதக்நி முனிவரும் வசிஷ்ட முனிவர் பாரத்வாஜரும், சனகரும், அகத்திய முனிவரும் இருப்பர். கின்னரர்கள். கிம்புருஷர்கள் முதலிய தேவயோனி விசேஷங்களால் பக்தியுடன் வணங்கி வழிபடப் பெற்றவராயிருப்பர். தொங்கவிடப் பட்டிருக்கும் வலது காலின் பாதமானது அபஸ்மாரத்தின் மேல் பொருந்துமாறு அமைக்கப்பட வேண்டும். இவ்வாறாக அமைக்கப்படும் தட்சிணாமூர்த்தியே எல்லோருக்கும் சுபத்தைக் கொடுக்கின்ற ''தர்ம வியாக்கியான மூர்த்தி'' (தர்மத்தை விரித்துரைக்கும் மூர்த்தி என்பதனால்) எனப்படுவர்.

யோக தட்சிணாமூர்த்தி

சனகாதி முனிபுங்கவர் நால்வர்க்கும் சிவபிரான் தட்சிணாமூர்த்தமாக எழுந்தருளி மெய்ப்பொருளைச் சொல்லாமல் சொல்லிச் சின்முத்திரையால் விளக்கியருளினார். சிவஞான போதத்தை உணர்ந்த அம்முனிவர்கள் அக்குருநாதரின் திருவருளை எண்ணி இன்புற்றுப் புலனடக்கம் மன அமைதியும் பெற்றனர். அவர்கள் மேன்மேலும் சிவபோதம் பெறவேண்டுமென்று பெருவிருப்பம் கொண்டு குருநாதரை நோக்கி 'எம்பெருமானே! தேவரீர் எங்கள் ஐயத்தைப் போக்கியருளினீர்கள். மேலும் எங்கள் மனம் ஒரே நிலையில் நிற்பதற்குரிய யோகமார்க்கத்தையும் போதித்தருள வேண்டும்' என்று பணிந்து வேண்டிக் கொண்டனர்.

அதனைக்கேட்ட பரமசிவனார் அவர்களை நோக்கி அன்பான 'பிரமபுத்திரர்களே! ஆன்மாவாகிய அரசன் வாழ்ந்துவரும் தூலசரீரம் ஐம்பூதங்களாலாகிய ஒரு தேராகும். அத்தேர் மனம் என்ற குதிரையால் கட்டப்பட்டிருக்கிறது. அக்குதிரையின் கடிவாளத்தை அறியாமை என்னும் சாரதியிடம் கொடுத்தால் அவன் அந்தத்தேரையும் அதில் அமர்ந்திருக்கும் ஆன்மா என்னும் அரசனையும் ஐம்புலன்களாகிய ஆழ்ந்த குழிகளில் தள்ளித் துன்பமடையச் செய்வான். ஆனால் அறிவு என்னும் நல்ல சாரதியிடம் கொடுத்தால் தேர் இனிமையாகவும் மேடுபள்ளங்களில் துயரப்படாமலும் அமைதியாகச் செல்லும். மன அரசனும் இன்புறுவான். அதுபோல மனத்தைத் தீயவழிகளில் செலுத்தாமல் நல்லவழியில் செலுத்தினால் ஆன்மா பேரின்பப் பெருவாழ்வில் திளைத்து மகிழும். அந்த மனத்தை ஒருநிலைப் படுத்துவதற்கு யோகமார்க்கம் சிறந்ததாகும். அம்மார்க்கத்தால் நம்மை அடைந்து நம்மோடு இரண்டறக் கலந்து என்றும் அழியா இன்பமடையலாம். அந்தயோக நியமங்களை உணர்த்துவோம். கேட்பீராக, உலக விஷயங்களில் ஈடுபடுகிற மனத்தை வலிய இழுத்துத் தனக்கு விருப்பமுடைய ஒரு பொருளில் நிலையாக நிறுத்துவது யோகம் எனப்படும். அந்த யோகம் பயிற்சியின் முதிர்ச்சியால் மேன்மை அடையும் அந்தயோகம் எட்டு உறுப்புகளையுடையது. அவை, இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம்.

1. இயமம்

ஐம்பொறிகளையும் மனத்தையும் தீயவழியில் செல்லவொட்டாமல் தடுத்து நல்லவழியில் செலுத்துவது. அது பத்துவகைப்படும். அவை கொல்லாமை, உண்மை, கள்ளாமை, காமம்இன்மை, பொறுமை, உறுதியுடைமை, தயை, நேர்மை. அளவறிந்து உண்ணல், தூய்மை என்பனவாகும்.

கொல்லாமை: உயிர்களை மனம் வாக்கு காயம் என்பனவற்றால் துன்புறுத்தாமல் இருத்தல்.

உண்மை : மனம் வாக்கு காயத்தால் உண்மையாக இருத்தல்.

கள்ளாமை: பிறர் பொருளை மனத்தினாலும் கவர நினையாமல் இருத்தல்.

காமம் இன்மை: காமவிகாரத்தைத் தடுத்து பிரமச் சரியம் காத்தல்.

பொறுமை: பிறர் தன்னைத் துன்புறுத்தினாலும் அவர்மீது வெகுளாமல் இருத்தல்.

உறுதியுடைமை: தனக்கு எத்தகைய துன்பம் வந்தாலும் வருவது தெரிந்தாலும் அவற்றால் சிறிதும் அஞ்சாதிருத்தல்.

தயை: எல்லா உயிர்களிடத்திலும் அன்புடன் இருத்தல்.

நேர்மை: எல்லாரிடத்திலும் வஞ்சகமில்லாமல் இருத்தல்.

அளவறிந்து உண்ணல்: தன் உடம்பில் உயிர் நிலைபெறுவதற்கு வேண்டிய உணவை மட்டும் அளவொடு உண்ணுதல்.

தூய்மை: இது உடல் தூய்மை மனத்தூய்மை என இருவகைப்படும். உடலை நீரினால் தூய்மைப்படுத்தலாம். மைத்திரி கருணை முதிதை உபேட்சை என்பனவற்றால் மன அழுக்கைப் போக்கி மனத்தைத் தூய்மைப்படுத்தலாம். மைத்திரியாவது புண்ணியம் செய்பவர்களிடம் நட்பு கொள்ளுவதாகும். கருணையாவது துன்பப்படுகின்றவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவி செய்யவேண்டும் என்கிற இரக்கமாகும். முதிதையாவது இன்பம் அனுபவிக்கின்றவர்களைப் பார்த்தும் கேட்டும் தான் இன்பம் அனுபவிப்பது போல இன்பமாய் இருத்தலாகும். உபேட்சையாவது தீமை செய்கின்றவர்களைப் பார்த்து அவர்களை நல்வழிப்படுத்த முயன்றும் அம்முயற்சி பலிக்காத போது அவர்களை நிந்தனை செய்யாமல் இருப்பதாகும்.

2. நியமம்

இயமத்தினால் ஏற்படும் நற்செயல்களைச் செய்து கொண்டு அவற்றிற்குக் கட்டுப்பட்டிருத்தல் நியமம் எனப்படும். அது பத்துவகைப்படும். அவை தவம், மகிழ்ச்சி, ஆஸ்திக்யம், தானம், சிவபூசை, சித்தாந்த சிரவணம், வெட்கம், நற்புத்தி, ஜபம், விரதம் என்பனவாகும்.

தவம்: விரதங்கள் இருந்து விரதகாலத்தில் சிவத்தியானம் செய்து கொண்டிருத்தல்.

மகிழ்ச்சி: 'போதும் என்ற மனமே பொன் செய்யும்மருந்து' என்பது போலக் கிடைத்ததைக் கொண்டு எப்போதும் இன்பமுற்றிருத்தல்.

ஆஸ்திக்யம் : இறைவன் ஒருவன் உளன் என்ற நம்பிக்கையும் வேதாகம புராண இதிகாசங்களில் நம்பிக்கையும் இருத்தல்.

தானம்: வறுமை உடையவர்களுக்குத் தம்மால் இயன்ற பொருளைக் கொடுத்தல்.

சிவபூசை: எல்லாச் செயல்களையும் பயனை எதிர்பாராமல் சிவபிரானுக்கே அர்ப்பணம் செய்துவிடல்.

சித்தாந்த சிரவணம்: குருவினிடமிருந்து சமயம் பற்றிய உண்மைகளைக் கேட்டுச் சிந்திப்பது.

வெட்கம்: செய்யத்தகாத செயல்களைச் செய்ய நினைக்கும் போது நாணமடைதல்.

நற்புத்தி: வீடுபேற்றுக்கு வேண்டியனவற்றைத் தேடவேண்டும் என்ற நல்லறிவு.

ஜபம்: இட்ட தெய்வத்திற்கு உரிய மந்திரங்களைச் செபித்தல்.

விரதம்: பிரமசரியம், இல்லறம், வானப்பிரத்தம், துறவறம் என்ற ஆசிரமங்களுக்குரிய விரதங்களை மேற்கொள்ளுதல்.

3. ஆசனம்

இறைவனைத் தியானிக்கும்போது உடல் வளையாமலும் அசையாமலும் இருப்பதற்கு அதனைக் கட்டுப்படுத்திக் கொண்டு வீற்றிருப்பது ஆசனம் எனப்படும். அதுயோக நூலில் 108 வகையாகக் கூறப்பட்டிருப்பினும் மிகச்சிறந்த 8 வகை ஆசனங்களைப்பற்றித் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

1. சுகாசனம்: எந்தவகை ஆசனங்களிலும் பழக இயலாதவர்கள் ஏதாவது ஒரு வகையாகத் துணிவுடன் அசையாமல் வீற்றிருப்பது.

2. வீராசனம்: ஏதாவது ஒரு தொடையின் மீது மற்றொரு பாதத்தை ஏற்றி வைத்துக் கொண்டு நிமிர்ந்து அசையாமல் இருப்பது இது எல்லாப் பாவங்களையும் போக்கும்.

3. பத்மாசனம்: வலது தொடையின் மீது இடது பாதத்தையும், இடது தொடையின் மீது வலது பாதத்தையும் ஏற்றி வைத்துக் கொண்டு பாதங்களின் கட்டை விரல்களை மாறின கைகளால் இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பது.

4. வீரபத்மாசனம்: வல இடத்தொடைகளின் மீது இடவலப்பாதங்களை ஏற்றி வைத்துக் கொண்டு முதுகின் வழியே பின்னால் மாறிவிடப்பட்ட வல இடக்கைகளால் வல இடப்பாதங்களின் கட்டை விரல்களை இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பது. இது எல்லா நோய்களையும் விடங்களையும் போக்கும்.

5. சிம்மாசனம்: அண்டகோசத்திற்குக் கீழே உள்ள சீவனி நாடியினது இருபக்கங்களிலும் குதிகால்களை மாற்றி அழுத்தி வைத்துக் கொண்டும் இரண்டு கைவிரல்களைப் பரப்பி முழந்தாள்களின் மீது வைத்துக் கொண்டும் மூக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டிருப்பது.


6. குக்குடாசனம்: பத்மாசனத்தில் அமர்ந்துகொண்டு முழங்கால்களுக்கும் தொடைகளுக்கும் இடையிலுள்ள வெளியில் நேராக இரண்டு கைகளையும் உள்ளே விட்டு உள்ளங்கைகளைப் பூமியில் பதியவைத்துக் கொண்டு உந்தி மற்ற உடற்பகுதியை பூமியிற் படாமல் உயர்த்திக் கொண்டு மேலே அசையாமல் இருப்பது.

7. மயூராசனம்: முழங்கை இரண்டும் உந்திப்புறத்தில் அழுந்தப் பூமியில் கையூன்றிக் காலைப்பின்னே நீட்டித் தலைநிமிர்ந்திருப்பது.


8. சுவஸ்திகம்: தொடைக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டு உள்ளங்கால்களையும் செலுத்தி இறுமாந்திருப்பதாகும்.

4. பிரணாயாமம்

இயன்ற ஆசனத்தை அமைத்துக்கொண்டு முறைப்படி சுவாசத்தின் இயற்கையான போக்கு வரத்துக்களைத் தடுத்தல் பிராணாயாமம் எனப்படும். தடுத்தலாவது பிராணவாயுவை அடக்குதல் என்பதாகும். அது ரேசக பூரக கும்பகம் என மூவகைப்படும். நாசியின் துவாரத்திலிருந்து 16 மாத்திரை அளவுள்ள காலம் வரை சுவாசத்தை வெளியே விடுதல் ரேசகம் எனப்படும். 32 மாத்திரையளவுள்ள காலம் வரை நாசித் துவாரத்தின் வழியே சுவாசத்தை உள்ளே இழுத்தல் பூரகம் எனப்படும். 64 மாத்திரை



யோக தட்சிணாமூர்த்தி (வேறு வகை)



சனகாதி நால்வருக்கு உபதேசம் செய்யும் தட்சிணாமூர்த்தி

அளவுள்ள காலம் வரை சுவாசத்தை விடாமல் உள்ளேயே தடுத்துவைத்தல் கும்பகம் எனப்படும். ஒரு மாத்திரை என்பது இயல்பாகக் கண் இமைக்கும்நேரம். இம்மூன்றையும் சேர்த்து ஒருமுறை செய்வது ஒரு பிராணாயாமமாகும். இப்பிராணாயாமத்தின் அளவாகிய 16 : 32: 64 என்பதை 8: 16: 32 என்ற அளவிலும் செய்யலாம். அவரவர் உடல் நிலைக்கு ஏற்பக் கூட்டியும் குறைத்தும் செய்யலாம். இப்பயிற்சியைக் குருவின் உதவி கொண்டு செய்தல் வேண்டும். இப்பிராணாயாமத்தை மந்திரத்துடனும் செய்யலாம். மந்திரமின்றி எண்ணிக்கையுடனும் செய்யலாம். இப்பயிற்சியால் மன ஒருமைப்பாடு உண்டாகும். ஆயுள் நீட்டிக்கும்.

5. பிரத்தியாகாரம்

மெய் வாய் கண் மூக்கு செவி முதலிய ஐம்பொறிகள் : அவற்றின் செயல்களாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகியவற்றில் செல்லும் அறிவை அவ்வாறு செல்ல வொட்டாமல் இருக்கும்படி தடுத்துத் திருப்பி மனத்திடம் சேர்த்து, இவற்றையும் முன்பு அடக்கப்பட்ட பிராணவாயுவையும் அசையாமல் இருக்கும்படி பயிற்சி செய்தல் பிரத்தியாகாரம் (திருப்புதல்) எனப்படும்.

6. தாரணை

மனத்தில் உள்ள எண்ணங்களை எல்லாம் விலக்கி, அதனை உடம்பில் சக்திவடிவமாக விளங்குகின்ற சக்கரம் என்று சொல்லக்கூடிய சில இடங்களில் நிலை பெறச் செய்து அவற்றில் இறை வடிவத்தைத் தோன்றும்படி செய்வது தாரணை எனப்படும்.

அச்சக்கரம், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவாம். இந்தச் சக்கரம் உள்ள இடங்களில் மனதை நிலைபெறச் செய்து தியானித்து ஆனந்தம் அடைதல் தாரணையாகும்.

7. தியானம்

புலன்களை வெளியில் செல்லவிடாமல் மனத்துடன் சேர்த்து அந்தமனத்தினால் இதயதாமரையில் வீற்றிருக்கும் இறை வடிவத்தைத் தைல தாரைபோல இடைவிடாமல் சிந்திப்பது தியானம் எனப்படும்.

8. சமாதி

இறைவனிடம் அன்பைச் செலுத்தி, புறப்பொருள்களின்மேலுள்ள ஆசைகளை ஒடுக்கி, சுழுமுனை நாடி வழியே சென்று கும்பகம் செய்து, அங்கே சிவத்துடன் இரண்டறக் கலத்தலே சமாதி ஆகும். இத்தகைய சமாதி கைகூடப்பெற்றால் பிறப்பும்இல்லை: இறப்பும் இல்லை.

முனிபுங்கவர்களே! இவ்வுலகிலுள்ள இயங்கியற் பொருள், நிலையியற் பொருள் ஆகிய எல்லாவற்றிலும், எல்லாப் புவனங்களிலும் யாம் வியாபித்திருக்கின்றோம் என்பதை நன்றாக உணர்ந்துகொண்டு யோக சாதனைகளைப் புரிந்து அவற்றால் அறிவானந்தமயமாக விளங்குவீர்களாக என்று பரமேஸ்வரன் திருவாய் மலர்ந்தருளினார், அப்பரம்பொருளாகிய யோக குருவைப் பலமுறையும் வணங்கித் துதித்து அம்முனிவர் நால்வரும் விடைபெற்றுச் சென்றார்.

ஸ்ரீ யோக தட்சிணாமூர்த்தி

அன்யோன்னியங்கிரிதலம் ஸம்யக்ஸ்பிக் பிண்டாதப் பிரகல்பயேத் ।
ஞானமுத்ராம் ஹிருதிஸ்தானேத் வயப்பியந்தர முகம்கரம் ।
வரதம் வாமஹஸ்தந்து மேட்ர பீடோபரிந்நியஸேத் ।
அபரே சோத்பலஞ் சாக்ஷ மாலாம் பூர்வவதாசரேத் ।
நாஸாக்ரம் ஸ்வம் ஸமீக்ஷ்யஸ்வ மார்ஜவம் தேஹமாசரேத் ।
ஸுவிகீர்ண ஜடாயுக்தம் யோகமூர்த்தி ரிதிஸ்மிருதம் ॥

-''சில்பரத்தினம்''

விளக்கம்:

இத் திருவுருவத்தினை அமைக்கும்போது இரண்டு உள்ளங்கால்களையும் மாற்றி ஆசனத் துவாரத்தின் முன்புறத்தில் ஸ்பிக்பிண்டத்தின் கீழ் (காச்யப நூலில் ''ஸ்பிக்பிண்டம்'' என்பது ஆசனத் துவாரத்தின் இருபுறத்திலுமுள்ள வட்டமான உடற்பகுதியே ஆகும் எனக் கூறுகின்றது) அமைக்க வேண்டும். ஞான முத்திரையுள்ள வலதுகையை உள் நோக்கியவாறு இதயத்திற்குச் சரியாக அமைக்கவேண்டும். வரத முத்திரையுடன் கூடிய இடது கையையோவெனில் மேட்ர பீடத்தின் (ஆண்குறிக்கு மேட்ரம் எனப்பெயர்) மேல் வைக்கவேண்டும். இவ்வாறு முன் கைகளிரண்டுக்கும் உரியதனைக் கூறப்பட்டது. பின் கைகளிரண்டிலும் அக்ஷமாலையும், குவளை மலரையும் அமைக்கவேண்டும். தனது மூக்கின் நுனியைப் பார்த்தவாறாகவும் நேர்மையான உடம்பு உள்ளவராகவும் இருப்பர். இவரது சடைகள் எல்லாம் சிதறிக்கிடந்தாலும் அழகாக அமைத்தல் வேண்டும். இந்நிலையில் விளங்குபவர்யோக தட்சிணாமூர்த்தி எனப்பெறுவார்.

இதிலே சிறப்பான மற்றொரு வகை

லம்பயேத் தக்ஷிணம்பாதம் வாமமுத்குடிகாஸநம் ।
ஸம்பத்தயோக பட்டேன . . . . தேஹோத்குடி காங்கிரிசௌ ।
ப்ரஸார்ய வாமஹஸ்தந்து வாமஜா நூபரிஸ்திதம் ।
ஏதச்ச யோக மூர்த்திஸ்யாத் சேஷம் பூர்வவதாசரேத் ।

விளக்கம்


வலது காலைத் தொங்கவிட வேண்டும். இடது காலில் முன்போல் உத்குடிகாஸனம் அமைக்கவேண்டும். தனது உடம்பையும் உத்குடிகாஸனத்திலுள்ள இடது பாதத்தையும், யோக பட்டத்தினால் நன்றாகக் கட்டப்படவேண்டும். இடது கை விரித்தவாறு இடது முழங்கால் மேல் பொருத்தப்பட்டிருக்கும். மற்ற அடையாளங்களெல்லாம் (பின் கரங்களில் திகழும் முத்திரைகளுடன்) முன் போலவே இவருக்கும் அமைத்தல் வேண்டும்.

யோக தட்சிணாமூர்த்தி (மற்றொரு வகை)

ஊரு மூலம் ஸமாச்ருத்ய அன்யோன்னியா பத்த பார்ஷிணிகம் !
யோக பட்டிகயோபேதம் ஜங்காமத்யே விசேஷத : !
ப்ரஸார்ய பூர்வஹஸ்தௌ த்வௌ ஞானுபரி நிதாபிதௌ !
அபரே தக்ஷிணே சாக்ஷமாலாம் வாமே கமண்டுலம் !
ஜடாமண்டல ஸமாயுக்தம் கரோட்யர்தேந்து சேகரம் !
நீலக்கிரிவா ஸமாயுக்தம், சங்ககுந்தேந்து சன்னிபம் !
யோகமூர்த்தி விசேஷாக்யம் சேஷம் ப்ராகிவ காரயேத் !

விளக்கம்:

இவரது இரண்டு பாதங்களின் குதிகால்களும் இரண்டு துடைகளின் அடிப்புறங்களிலும் மாற்றி வைக்கப்பட்டு நன்றாகப் பதிந்திருக்க வேண்டும். முழங்காலுக்கும், கணைக்காலுக்கும் மத்தியிலுள்ள நீளமான காலின் மத்திம பகுதியில் (ஜங்கை) யோகப்பட்டம் சிறப்புற்று விளங்கும். முன் கைகளிரண்டும் விரிக்கப்பட்டு முழங்காலின் மேல் வைக்கப்பட்டிருக்கும் மேலுள்ள இரண்டு கைகளுள் வலது கையில் அக்ஷமாலையும், இடதுகையில் கமண்டலத்தையும் வைத்திருப்பார். சடைகள் மண்டலாகாரமாய்த் (ஜடாமண்டலமாக) திகழும் மண்டைஓடு, பிறைச்சந்திரன் இவற்றை அணிந்திருப்பார். கருநிறமான கழுத்துள்ளவர். சங்கு, குருக்கத்திப்பூ, சந்திரன் இவைகளைப் போன்ற வெண்மையான நிறத்தை உடையவர் என்றும் கூறப்படுகிறது. (சுதைச் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் இவ்வாறு அமைக்கலாம்) இவருக்கு முன்போலவே மற்ற அங்க அடையாளங்கள் எல்லாம் அமைக்கப்படவேண்டும்.



வீராசன வீணாதர வியாக்யான (இசை) தட்சிணாமூர்த்தி

ஸ்ரீ ஞான தட்சிணாமூர்த்தி

வாமம் ப்ராஸாரிதஞ்சாத ஞானூர்த்துவ கோர்ப்பரே ।
அபரே தக்ஷிணேத்துவ க்ஷமாலா முத்பல மன்யத : ।
ஞானமுர்த்திரிதிக்யாதம் ஸர்வகாரண காரணம் : ।

இப்பெருமானின் இரண்டு முன்கரங்களிலும் முறையே ஞான முத்திரையும் (வியாக்யான முத்திரையான சின்முத்திரை) அபய முத்திரையும் தரித்திருப்பர். அல்லது இடதுகை இடது முழங்காலின் மேற்புறத்தில் விரிந்தவாறு அமைக்கப்படுவதும் உண்டு. பின்கைகளிரண்டில் வலது கரத்தில் அக்ஷமாலையும், இடது கரத்தில் குவளைமலரையும் ஏந்தியிருப்பார். காரணமான பொருள்கள் எல்லாவற்றுக்கும் ஆதிகாரணமான இவரை ஞான தட்சிணாமூர்த்தி என அழைப்பர்.

வீணாதர தட்சிணாமூர்த்தி

பண்ணிசையால் பாடிப் பரவுகின்ற மெய்யன்பர்களுக்கு அருள்பாலிக்கும் அண்ணலாகிய - சிவபிரான் திருக்கயிலாய மலையில் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளி இருக்கும்போது, யாழிசையில் வல்லவர்களாகிய தும்புரு, நாரதர், சுகர் முதலிய முனிவர்கள் திருக்கயிலைக்குச் சென்று நந்தியெம் பெருமானின் அனுமதி பெற்று சிவசந்நிதியை அடைந்து பல முறையும் பணிந்து வணங்கி எழுந்து துத்து நின்றனர். சிவபெருமான் அம்முனிவர்களை அருளுடன் நோக்கினார். அப்போது அந்த முனிவர்கள் பெருமானை நோக்கி 'அருட்கடலே ! தேவரீருடையை பெருமைகளைக் கூறும் சாமவேதத்தைத் வீணையில் இயைத்து வாசிக்கவும் பாடவும், இன்னிசை ஞானத்தின் உண்மைகளை அடியேங்களுக்குத் தெளிவுற விளக்கியருள வேண்டும். அதன் பொருட்டே தேவரீரைத் தரிசிக்க வந்தோம் எப்போதும் சிவத்தொண்டில் ஈடுபட்டுள்ள எங்களுக்கு அதுமிகவும் இன்றியமையாததாகும். தேவரீர் கருணை பாலிக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். வேண்டுவனவற்றை ஈயும் கருணைக் கடலாகிய பரமன் அருளுடன் வீணை இசையின் இலக்கணங்களை எல்லாம் திருவாய் மலர்ந்தருளினார். அவற்றின் முடிந்த கருத்துக்களைக் கீழே காண்போம்.

வில்லேந்திய வீரன் அவ்வில்லில் இழுத்துக் கட்டப்பட்ட நாணினைச் சுண்டிக் குணத்தொனி எழுப்பினான். அதிலிருந்து தோன்றிய ஓசை இனிமையாக இருந்தது. பின்னர் பெரிதும் சிறிதுமான விற்களை நாணேற்றி மீட்டினான். பலவகை இன்னோசைகள் உண்டாயின. படிப்படியாக வேறுவேறு அமைத்து யாழாக்கினான். யாழே பழங்காலத்து இசைக்கருவி. யாழின் முதிர்ந்த நாகரிகம் வீணையாயிற்று. யாழ் நான்கு வகைப்படும்.


பேரியாழ் பின்னும் மகரம் சகோடமுடன்
சீர்பொலி செங்கோடு செப்பினரால் - தார்பொலிந்த
மன்ன திருமாற வண்கூடற் கோமானே
இன்னம் உளவே சில

எனவரும் செய்யுளால் அறியலாம்.

இசைக்குப் பிறப்பிடமாகிய யாழ்க்கருவிகள் பேரியாழ் மகரயாழ் சகோடயாழ் செங்கோட்டியாழ் என நான்கு வகைப்படும்.

பேரியாழிற்கு இருபத்தொரு நரம்பும், மகரயாழ்க்குப் பத்தொன்பது நரம்பும், சகோடயாழ்க்குப் பதினான்கு நரம்பும் செங்கோட்டியாழ்க்கு ஏழு நரம்பும் கொள்ளவேண்டும்.

சொல்லிய கொன்றை கருங்காலி மென்முருக்கு
நல்ல குமிழே தணக்குடனே - மெல்லியலாய்
உத்தம மான மரங்கள் இவைஎன்றார்
வித்தகமா மானே விதி



க.பழூர் - வியாக்யான தட்சிணாமூர்த்தி

எனவரும் வெண்பாவால், யாழின் உறுப்பாகிய கோட்டுக்குக் கருங்காலியும், கொன்றையும் சிறந்த மரங்கள் என்றும் : மற்றொரு யாழ் உறுப்பாகிய பத்தர்க்குக் குமிழ், தணக்கு, முருக்கு ஆகிய மரங்கள் சிறந்தன என்றும் அறியலாம்.

இம்மரங்களைத் தேர்ந்தெடுக்கும்போது நீர்நிலை அருகில் இருந்த மரமானால் அது மந்தசுரத்தையும், மிகவும் மேட்டுப்பாங்கான பாலைபோன்ற இடங்களில் இருந்த மரமானால் அது மேல்ஸ்தாயியில் ஏறிய சுரத்தையும், கொடுக்கும், ஆகவே மருதநிலம் குறிஞ்சிநிலம் போன்ற இடங்களில் கொண்ட மரமாக இருத்தல் வேண்டும்.

யாழ் நரம்புகளும் தூய்மை யுடையனவாகவும் மயிர்த் தொகுதிகள் இல்லாதனவாகவும் இருத்தல் வேண்டும். மயிர்த்தொகுதிகள் இருந்தால் அது மந்த சுரத்தைக் கொடுக்கும். எனவே நல்ல நரம்புகளைக் கொள்ளவேண்டும்.

மேலும் 1000 நரம்புகளையுடைய பேரியாழ் என்ற யாழும் பண்டைக் காலத்தில் வழக்காற்றில் இருந்தது. அதனை ஆதியாழ் என்று கூறுவர்.

ஆயிரம் நரம்பிற்று ஆதியா ழாகும்

எனவரும் பிங்கலந்தையால் அறியலாம்.

தட்சிணாமூர்த்தியின் கரத்தில் உள்ளது வீணையாகும். நாரதர் ஏந்திய வீணை மகதியாகும், சரசுவதி ஏந்திய வீணை கச்சபீயாகும்.

இவ்வீணையில் ஏழிசையைக் கூட்டி எழுப்புவதே பண்ணிசையாகும். பண்கள் 17, பண்ணியல் திறங்கள்ட 70, திறங்கள் 12, திறத்திறங்கள் 4, ஆகப்பண்கள் 103 ஆகும். இவை தமிழிசைப்பண்கள் ஆகும். இனி 72 மேளகர்த்தா ராகங்களும் அவற்றினின்றும் பிறந்த ஜன்னிய ராகங்களும் பலவாகும். இவை அனைத்தும் கர்நாடக இசைப்பாணியைச் சார்ந்தவையாகும் என அறிக.

ஏழிசையாய் இசைப்பயனாய்

என்றார் சுந்தரர் பெருமான்.

ஏழிசையாவன குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இவை முறையே சங்கு, குயில், யானை, மயில், புரவி, அன்னம், காடை முதலியவற்றால் எழுப்பப்படும் ஓசையை ஒத்தனவாகும். இவற்றிற்கு உரிய தெய்வம் முறையே பிரமன், ஆதிரையான், பாரத்துவாசன், முருகன், அங்காரகன், பார்கரன், காசிபன் என்பவர்.

இவ்வாறெல்லாம் தோன்றும் இசையைப் பண்ணில் அமைத்து யாழிலும் வீணையிலும் இசைத்தால் கல்லும் உருகும். பசுவும் மானும் பாம்பும் யானையும் மெய்மறக்கும். எனவே, ஏழிசை இறைவனோடு இசைவிப்பதற்கு உரியதாகின்றது. இறைவன் இசைமயமானவன்.

இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன்று அவ்வயின் அறிந்தோன்காண்க

- மணிவாசகர்

வேயுறு தோளி பங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி

- திருஞானசம்பந்தர்

''வரும் பயனை எழுநரம்பின் ஓசையானை''

''தம் கையின் யாழும் வைத்தார்
தாமரை மலரும் வைத்தார்''

''உலகமெல்லாம் ஒடுங்கியபின் வேதத்தொலி கொண்டு
வீணை கேட்பார்''

''பெருங்கடல் மூடிப் பிரளயம் கொண்டு
பிரமனும் போய் . . . .
வருங்கடல் மீளநின்று எம் இறைநல்
வீணை வாசிக்கும்''

- திருநாவுக்கரசர்

வித்தக வீணையோடும் வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவல் மங்கையொ டும்முடனே
கொத்த வரும்பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அத்தன்இவ் வழிப்போந்த அதிசயம் அறியேனே.

- சுந்தரர்

இவ்வாறெல்லாம் நாயன்மார்கள் பாடிப்பரவ நின்ற பரம்பொருள் தமது திருக்கரத்தில் வீணையை ஏந்தி, புயத்தில் அணைத்து, திருவிரல்களால் நாதகீதம் இசைத்தருளினார். அந்த இசை அடியார்கள் இதயத்தில் தேனமுத வெள்ளமாகப் பாய்ந்தது. அவர்கள் மெய்ம்மறந்து இறை இன்பத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

வீணை ஏந்தி இன்னிசை பரப்பியருளிய வித்தகனை வீணாதர தட்சிணாமூர்த்தி என வழங்கலாயினர்.

கயிலைநாதர் குருநாதராகி உணர்த்தியருளிய பண்ணிசைகளின் இலக்கணத்தின்படி நாரதர் முதலிய முனிவர்கள் வீணாகானத்தினால் சாமவேதம் பாடி மகிழ்ச்சி கொண்டனர்.

வீணாதர தட்சிணாமூர்த்தி

ததேவ வாமபாதேநோத் குடிகாஸந ஸம்யுதம் !
பூர்வ ஹஸ்த த்வயே வீணாஞ்சேத் வீணாதரம் ஸ்மிருதம் !
அதவா பூர்வ ஹஸ்தாப்யாம் ஞானமுத்ராப யௌத்ருஹா ।

(-சில்பரத்தினம்)

''தர்ம வியாக்யான மூர்த்தி'' போலவே பெரும்பாலும் இருக்கும். சிறிது மாறுதலும் உண்டு. இடது காலினால் உத்குடிகாஸனத்தில் அமர்ந்திருப்பார். இவரது முன்கைகளிரண்டிலும் வீணையை ஏந்தியிருப்பார். இவருக்கு வீணாதர தட்சிணாமூர்த்தி என்று பெயர்.

நிலைகள்

கற்சிலைகளில், வீணாதர தட்சிணாமூர்த்தியினை உருவாக்கும்போது அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் அமைக்கப்படும். உலோகச்சிலைகளில் மட்டும் நின்ற நிலையில் வீணையை ஏந்தி மீட்டும் பாவனை இருக்குமே தவிர, வீணை அவரது கையில் இருக்காது என்பதை நேரிலே காணலாம். சுதைச்சிற்பத்திலும், கற்சிற்பத்திலும், வீணை ஏந்தி மீட்டும் பாவனை இருக்கும். மேலும் இம்மூர்த்தி நந்தியின் பின்னாலோ அல்லது அமர்ந்தோ காணப்படுவார். வீணாதர தட்சிணாமூர்த்தியின் பல நிலைகளை பிற்பகுதியில் இப்புத்தகத்திலே காணலாம்.

சகளாதிகாரம் சிற்ப நூலில் வியாக்யான தேவலட்சணம்

॥ अथ दक्षिणामूर्तिलक्षणम् ॥

व्याख्यानदेवरूपं तु वक्ष्यते विधिनाऽधुना ॥ ३७४

ऊर्ध्वजानुस्थिता जङ्घा वामाङ्घ्रिमपि चासने ।
लम्बयेद्दक्षिणं पादं चतुर्बाहु समन्वितम् ॥ ३७५

ललाटदक्षिणे तस्य नेत्रान्ते पुटबाह्यचके ।
हिक्कावामे च हृदयमध्ये नाभेश्च मध्यमे ॥ ३७६

योनिमध्ये भवेन्मध्यसूत्रं स्यादासने तथा ।
आसनं सार्धमात्र स्यात् संदंश दक्षिणं करम् ॥ ३७७

தக்ஷிணாமூர்த்தி என்னும் வ்யாக்யானதேவ லக்ஷணம்

374 - 377. வ்யாக்யான தேவர் என்னும் தக்ஷிணாமூர்த்தியின் அமைப்பு இனி முறையாகச் சொல்லப்படுகிறது. இடது பாதம் வலது முழங்காலின் பேரில் வைக்கப்பட்டு வலது பாதம் தொங்கவிடப்பட்டு நான்கு கைகளுடன் கூடியிருக்கவேண்டும். இந்த மூர்த்தியின் முக்கிய சூத்திரம் நெற்றியின் வலது புறத்திலும், வலது கண் ஓரத்திலும், நாஸாபுடத்திற்கு வெளியிலும், நெஞ்சுக்குழிக்கு இடது புறத்திலும், ஹ்ருதய மத்தியிலும், நாபி மத்தியிலும், யோனி மத்தியிலும், ஆசனத்திலுமாக தொங்கவிடப்படவேண்டும். சூத்திரத்திற்கும் ஆசனத்திற்குமுள்ள இடைவெளி 1 1/2 அங்குலம்.

अपरं साक्षमालं स्यात् वरदं वामहस्तकम् ।
अपरं चाग्निधरं स्याद्दण्डहस्तमथापि वा ॥ ३७८

सार्धवक्त्रं सर्वाङ्गमार्जवं सुन्दरान्वितम् ।

378- 379 ஒரு வலக்கையில் சந்தம்ச முத்திரையும்[1] மற்றொரு வலக்கையில் ருத்ராக்ஷ மாலையும், ஒரு இடக்கையில் வரத முத்திரையும் மற்றொரு இடக்கை அக்னியை ஏந்தியோ அல்லது யோக தண்டத்தின் பேரில் வைக்கப்பட்டோ இருக்கவேண்டும். அந்தத் தண்டம் 12 1/2 அங். இருக்கவேண்டும். உடம்பு அழகாக நிமிர்ந்திருக்க வேண்டும்.

---

1. கட்டை விரல் நுனியும் ஆள்காட்டி விரல் நுனியும் ஒன்றொடொன்று சேர்ந்து மற்ற விரல்கள் பிரிந்திருக்கும் முத்திரைக்கு 'சந்தம் சமுத்திரை' என்று பெயர்.

विकीर्णमूर्धजं वापि जटामकुट संयुतम् ॥ ३७९

उन्नतं वा जटामौळिकिरीटी मध्यसंयुतम् ।
यज्ञोपवीतसंयुक्तमुत्तरीयं तु लम्बयेत् ॥ ३८०

अथवा पूर्वहस्तौ द्वौ वीणावाद्यान्वितौ तु वा ।
अथवा वामपादं तु ऊरावारोपितान्वितम् ॥ ३८१

379-381 விரிந்த சடையுடனும் அல்லது ஜடாமகுடத்துடனும் அல்லது உயர்ந்த ஜடாமகுடத்தின் மத்தியில் கபாலத்தோடும் இருக்கவேண்டும். பூணூல் தரித்தும், உத்தரீயம் (மேலாடை) தொங்கவிடப்பட்டும் இருக்கவேண்டும். அல்லது முன்கை இரண்டும் வீணா வாத்தியத்துடன் கூடியதாகவும் இருக்கலாம். அல்லது இடது பாதத்தை வலது தொடையின் பேரில் வைத்தும் இருக்கலாம்.

त्रिणेत्रं शङ्खकुन्दाभमक्षमालावलम्बितम् ।
कर्णान्ते रुचिरं विद्याद्धर्मव्याख्यानरूपकम् ॥ ३८२

किञ्चिन्निर्मीलितं नेत्रं योगबन्धानुसारिणम् ।
व्याघ्रचर्माम्बरं कर्णकुण्डलं वापि मण्डनम् ॥ ३८३

कर्णपूरान्वितं वापि सर्वक्लेशविवर्जितम् ।

382- 384. மூன்று கண்களோடும், சங்கு, மல்லிகைப் புஷ்பங்களைப் போன்ற பிரகாசத்தோடும், ருத்ராக்ஷ மாலையைத் தொங்கவிட்டுக்கொண்டும், கையில் அழகிய உபதேச முத்திரையைக் காதுக்குச் சமீபமாக வைத்துக்கொண்டும், இலேசாகத் திறந்த கண்களோடும், யோகபந்த நிலையில் இருந்துகொண்டும், புலித்தோல் ஆடை அணிந்தும், காதில் குண்டலமோ அல்லது கர்ணபூரமோ (தோடு) அணிந்தும் யாதொரு கவலையுமற்ற மனத்தோடும் அமர்ந்திருக்கவேண்டும்.

नारदो जमदग्निश्च वसिष्ठो भृगुदक्षिणे ॥ ३८४

भारद्वाजश्चशुनकौ अगस्त्यो भार्गवो भवेत् ।
वामभागेविधातव्यं किन्नराद्यैस्तु वन्दितम् ॥ ३८५

384- 385. வலது புறத்தில் நாரதர், ஜமதக்னி, வசிஷ்டர், ப்ருகு ஆகிய நான்கு மகரிஷிகளும், பாரத்வாஜர், அகஸ்தியர், சனகர், பார்க்கவர் ஆகிய நால்வர் இடது புறத்திலும் அமர்ந்திருக்கவேண்டும்.

कैलासपर्वते तस्मिन् वटवृक्षस्य मूलके ।
आसीनं सकळशं तु शान्तरूपं महेश्वरम् ॥ ३८६

लम्बपादाधस्थाने त्वपस्मारन्तु स्थापयेत् ।
फणिलीलान्वितंश्यामवर्णभूताकृतिं तथा ॥ ३८७

386- 387. கைலாச பர்வதத்தில் கின்னரர்களால் வணங்கப்பட்டு ஆலமரத்தடியில் சாந்த ரூபமாய் உலகுக்கெல்லாம் ஈசனாகிய மகேச்வரன் வீற்றிருக்கிறார். தொங்கவிட்டுக்கொண்டிருக்கும் பாதத்தின் கீழ் அபஸ்மாரன் என்னும் முயலகனின் உருவத்தை அமைக்கவேண்டும். அவன் கையில் பாம்பை வைத்து விளையாடிக் கொண்டிருக்கவேண்டும். கருத்தமேனியும், பூதங்களைப் போன்ற உருவமும் அமைந்திருக்கவேண்டும்.



வியாக்யான தட்சிணாமூர்த்தி
(வானவர்கள் , சனகாதிகள், ஏனைய ரிஷிகள்)

ஸ்ரீ தத்துவநிதி சிற்பநூலில் தட்சிணாமூர்த்தி தியானம் அல்லது வியாக்யான மூர்த்தி தியானம்

தியான உரை

விபூதியை தரித்திருப்பதனாலே விசேஷித்து வெளுப்பான சரீரகாந்தியை உடையவரும், சந்திர கலையை தரித்திருப்பவரும், ஞானமுத்திரை, ஜபமாலை, வீணை, புத்தகம் இவைகளுடன் பிரகாசிக்கின்ற தாமரை மலர்போன்ற கைகளையுடையவரும், யோக பட்டத்துடன் அழகாக இருப்பவரும், வியாக்யான பீடத்தில் வீற்றிருப்பவரும் சகல முனிவர்களால் சேவிக்கப்பட்டவரும், தெளிவான (சாந்தமான) தோற்றத்துடன் இருப்பவரும், சர்பங்களை அணிந்திருப்பவரும், யானைத்தோலாடையை அணிந்திருப்பவரும், தட்சிணாமூர்த்தி சொரூபமாக இருப்பவருமான பரமேசுவரன், எப்பொழுதும் காப்பாற்றுவாராக.

இந்த மூர்த்தியின் வலது பக்கத்தில் நாரதர், ஜமதக்னி, வசிஷ்டர், பிருகு இவர்களையும் இடது பக்கத்தில் பரத்வாஜர், சௌநகர், அகஸ்தியர், பார்கவர் (பரசுராமன்) இவர்களையும் கல்பிக்கவேண்டும்.

கிந்நரர் முதலான தேவ விசேடங்களால் சேவிக்கப்படுகின்ற கைலாச பர்வதத்தில், ஆலமரத்தினடியில் உட்கார்ந்து கொண்டிருப்பவரும், சகல உலகங்களுக்கும் ஈசனாக இருப்பவரும், சாந்தமான சொரூபமுடையவருமான ஸ்ரீ பரமேசுவரனையே தட்சிணாமூர்த்தி என்று கூறுகின்றார்கள். இந்த மூர்த்தியின் கீழே அபஸ்மாரனை படுக்கையாக கல்பிக்கவேண்டும் (வெளுப்புநிறம்)

மூர்த்தித்தியானத்தில் தட்சிணாமூர்த்தி வடிவம்

வடவிடபிஸமீபே பூமிபாகே நிஷண்ணம்
ஸகலமுனி ஜனனாம் ஞானதா தாரமாரத்
த்ரீபுவன குருமீசம் தக்ஷிணாமூர்த்திமீசம்
ஜனன மரண துக்கச்சேத தக்ஷம் நமாமி [1]

வடவிருட்சத்தின் அடியில் பூமியில் அமர்ந்திருப்பவரும் சமீபத்தில் சூழ்ந்திருக்கின்ற முனிவர்களுக்கு ஞானத்தை அளிப்பவரும் (போதித்தல்) ஜனனமரண (பிறப்பு இறப்பு) துக்கத்தைப் போக்கடிக்கவல்லவரும் மூன்று உலகங்களுக்கும் குருவாக இருப்பவருமான தட்சிணாமூர்த்தி உருவிலமைந்த பரமேஸ்வரனை வணங்குகின்றேன்.

புஸ்தகம் ஞானமுத்ராம் ச டக்காம் வஹ்னிம் கரைர்தரன் ।
வடமூலகதம் சம்பும் வந்திதம் ஸநகர்திபி : ।।
த்ருதருத்ராக்ஷ பூதிஞ்ச ஸ்மிதாஸ்யம்ச ஜடாதரம் ।
திவ்யஞான ப்ரதாதாரம் தக்ஷிணாமூர்த்தி மாச்ரயே ।।

[2]

புஸ்தகம், ஞானமுத்திரை, டக்கா (உடுக்கை) நெருப்பு இவைகளைக் கைகளில் வைத்திருப்பவரும், ஜடையைத் தரித்திருப்பவரும், புன்முறுவலுடன் கூடிய முகத்தையுடையவரும், வடவாலினடியில் (கல்லாலமரம்) வீற்றிருப்பவரும், சனகாதி முனிவர்களால் வணங்கப்பட்டவரும், மோட்ச ஞானத்தை உபதேசிப்பவருமான தட்சிணாமூர்த்தி உருவில் அமைந்த பரமேஸ்வரனை வணங்குகின்றேன்.

சோழர்காலத்து கற்றளிகளில் தட்சிணாமூர்த்தித் திருமேனிகள்

முற்காலச் சோழர்களின் தட்சிணாமூர்த்தித் திருவுருவங்கள்

[முதல் பராந்தகன் முதல் - முதல் இராசராசன்வரை - கி.பி.907 - 985]



இத்திருவுருவம் திருவிடைமருதூரை அடுத்துள்ள திருவியலூர் சிவயோகநாத சுவாமிகோயில் தேவ கோஷ்டத்தில் உள்ளது. இந்தத் தட்சிணாமூர்த்தி ஜடாபாரம் எழிலுடன் விளங்க புன்னகை பூத்த திருமுகத்துடன் காட்சி தருகின்றார். திருமார்பில் கண்டாபரணமும் மகர கண்டியும் சரப்பள்ளியும் உருத்திராக்க மாலையும் பூணூலும் விளங்குகின்றன. உதரபந்தமும் அணிந்துள்ளார். பின் வலக்கரத்தில் நாகமும் இடக்கரத்தில் தீச்சுடரும் முன்வலக்கரம் சின்முத்திரையும் இடக்கரத்தில் சுவடியும் விளங்குகின்றன. வலப்பாதம் முயலகனை அழுத்திய நிலையிலும் இடப்பாதம் வலத்தொடையின் மீது தூக்கிவைத்த நிலையிலும் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். சில கோயில்களில் அமர்ந்த நிலையிலும் வீணாதரதட்சிணாமூர்த்தி விளங்குகின்றார்.



கிராமம் என்று முன்பு அழைக்கப்பட்ட ஊர். அப்பரடிகள் காலத்தில் முண்டீச்சுரம் என வழங்கப்பட்டது. இது சென்னை திருச்சி பெருவழிச் சாலையில் திருக்கோயிலூரை அடுத்த 3.கி.மீ தொலைவில் பெண்ணையாற்றங்கரையில் அமைந்துள்ளது. இப்போது மலட்டார் என்று வழங்கப்படுகிறது. இங்குள்ள சிவலோக நாதர்கோயிலில் இத் தட்சிணாமூர்த்தி எழுந்தருளி யிருக்கின்றார். இவரது ஜடாமுடி ஜடாபந்தம் போல் விளங்கு கின்றது. ஜடாபந்தத்தில் கங்காதேவி இருக்கின்றார் இவர் நெற்றிக் கண்ணும் சாந்தம் தவழும் திருமுகமும் கொண்டு யோக நிலையில் ராஜலிங்காசனத்தில் அமர்ந்திருக்கின்றார். மார்பகத்தில் உருத்தி ராக்க மாலைகளும் பூணூலும் இடையில் உதரபந்தமும் விளங்கு கின்றன. சின்முத்திரை தெளிவாக விளங்குகின்றது. இத்தகைய சிறப்புடைய சிற்பம் இன்று இடக்கரமும் திருவடியும் இன்றி, சிதைந்த நிலையில் உள்ளது.



இத்திருவுருவம் வீணாதர தட்சிணாமூர்த்தியாகும். இது திருச்சிக்குத் தென்மேற்கில் 37 கி.மீ தொலைவில் உள்ள கொடும்பாளூர் எனும் தலத்தில் உள்ளது. இவ்வூர் இருக்குவேளிர் வாழ்ந்த பழம்பெரும் புகழுடையது ஒரு காலத்தில் இங்கே 108 கோயில்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. சிதைந்தன போக எஞ்சியன இரண்டு இவற்றுள் ஒன்று மூவர்கோயில். இக்கோயிலின் தேவகோஷ்டத்தில் இந்த வீணாதர தட்சிணாமூர்த்தி காட்சி தருகின்றார். இவரது ஜடாமுடிகள் எல்லாம் சேர்ந்து ஜடாபந்தம் (வேறுவகை) போல அமைந்து விளங்குகின்றது. திருமூர்த்தி புன்னகை தவழ்கின்றது. இருகரங்களிலும் இன்னிசை வீணையை ஏந்தி எளிய கோலத்தோடு நிற்கின்றார் கைகளில் வீரட்டடகம் திகழ்கின்றது. இடையில் ஆடை அணிகள் எழிலூட்டுகின்றன. இது 10ஆம் நூற்றாண்டுச் சிற்பம் இரண்டாம் ஆதித்தியன் காலத்தாகும்.

எறும்பூர் கடம்பவனேஸ்வரர் கோயில் யோக தட்சிணாமூர்த்தி

எறும்பூர் எனும் தலம் தென்னார்க்காடு மாவட்டத்தில் சென்னை கீழணைப்பெரும் பாதையில் சேத்தியாத்தோப்புக்கு அருகில் 5.கி.மீ தொலை வில் உள்ளது. இங்குள்ள கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலில் தேவகோஷ்டத்தில் சிவ பெருமான் யோகநிலையில் (யோகதட்சிணாமூர்த்தி நிலையின் வேறு வகை) பத்ம பீடத்தில், அர்த்த பத்மாசனநிலையில் எழுந்தருளியுள்ளார். தவத்தின் மேன்மை யை உணர்த்தத் தாமே முதன்மையாக இருந்து இடக்கரத்தின் மேல் வலக் கரத் தினைத் தியான ஹஸ்தமாக வைத்துள்ளார். இவரது திருமார்பில் அணிகலன் களாகத் திகழும் கண்டிகை சரப்பள்ளி (கிரைவேயஹாரம்), இரும்புச்சரம், சுவடி, பூணூல், விரஸ்சூத்தரம், ஸ்தனசூத்திரம் உதர பந்தம், ஆகியன எழிலுடன் விளங்கு கின்றன. புஜங்களில் தோள்வளைகளும் கடகவளைகளும் திகழ்கின்றன. பின் கரங் களில் மானும் மழுவும் பெருமானின் கேசபந்தமான மகுடத்தை நெருங்கி அமைந் துள்ளன. நெற்றியில் நெற்றிப் பட்டையும் பூரிமமும் காதுகளில் காதோலையும் குழையும் விளங்குகின்றன. யோக நிலைக்குரி யோரது பார்வை மூக்கின் நுனியினைப் பார்த்திருப்பது போல இத்திருவுருவப் பார்வையும் அவ் வாறு அமைந்துள்ளது இது முற்காலச் சோழர் கலையின் சிறப்பான படைப்பேயாகும்.





இத்திருவுருவம் வேளச்சேரி எனும் தலத்தில் உள்ளது. இது செங்கல்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டை அருகில் உள்ள அடையாறு பாலத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள தண்டீஸ்வரர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் இத்திருவுருவத்தைக் காணலாம். இவரது சிரசில் ஜடாமண்டலம் விளங்குகின்றது. எழில் முகம் சாந்தமாகத் திகழ்கின்றது. மார்பில் ஏக உருத்திராக்க மாலையும் பூணூலும் உள்ளன. வலக்கரம் சின்முத்திரை காட்டுகிறது. ஏனைய மூன்று விரல்கள் மடங்கிய நிலையில் உள்ளதனைக் கவனிக்கவும். இடக்கரம் சுவடி ஏந்தியுள்ளது. இடையில் ஆடை சரிந்து விளங்குகின்றது. வலப்பாதத்தைப் பீடத்தில் தூக்கி நிறுத்தி இடப்பாதத்தை முயலகன் மீது அழுத்தி உத்குடிகாசனமாக எழுந்தருளியுள்ளார். வலமும் இடமும் இருமுனிவர்கள் ஜடாமகுடம் விளங்க அமர்ந்துள்ளனர். இதன் காலம் 10ம் நூற்றாண்டாகும்.




இத்திருவுருவம் ஆடுதுறை (தென் குரங்காடுதுறை) எனும் தலத்தில் உள்ளது. கும்பகோணத்திற்குக் கிழக்கே 14 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள ஆபத்சகாயேசுர சுவாமி கோயிலின் தெற்குக் கோஷ்டத்தில் இத்தட்சிணாமூர்த்தி திருவுருவம் விளங்குகின்றது. இவரது ஜடாபாரம் இருகட்டுகளுடன் காணப்படுகிறது. சிரசில் பூரிமம் எடுப்பாக அமைந் துள்ளது. பின் இருகரங்களில் தீச்சுடருடனும் ஜபமாலையுடனும் விளங்க முன் இருகரங்களில் சின்முத்திரையுடனும் சுவடியுடனும் திகழப் பெருமான் வீராசனத்தில் அமர்ந்துள்ளார். வலப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. திருமார்பில் பூணூலும், இடையில் உதரபந்தமும் விளங்கு கின்றன. காலம் பத்தாம் நூற்றாண்டு ஆகும். இத்தென்குரங்காடு துறை மகாதேவர் கோயில் செம்பியன் மாதேவியால் திருப்பணி செய்யப்பட்டது.



இத்திருவுருவம் திருவாவடுதுறைக்குக் கிழக்கே 3 கி.மீ தொலைவில் உள்ள ஆனாங்கூர் எனும் கிராமத்தில் உள்ளது. இங்குள்ள அகஸ்தீஸ்வரர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்திப் பெருமான் விளங்குகின்றார். சாந்தம் தவழும் திருமுகம். ஜடாபாரத்துடன் விளங்கும் இவரது மார்பில் கண்டிகை, சரப் பள்ளி ஒற்றை உருத்திராக்கம், உதரபந்தம், பூணூல் முதலியன விளங்குகின்றன. முன் வலக்கரம் சின்முத்திரையுடன் திகழ்கின்றது. இடது கரம் சுவடி யுடன் மாலை யும் காணப்படுகிறது. (இதனை உருத்திராக்க மாலையாகவும் கருதலாம்) இவர் வீராசனத்தில் எழுந்தருளியிருக்கின்றார். இரு மருங்கிலும் முனிவர்கள் விளங்கு கின்றனர். இத்திருக்கோயிலின் காலம் 10-ஆம் நூற்றாண்டு உத்தம சோழர் காலத் திலும், செம்பியன் மாதேவி காலத்திலும் திருப்பணி செய்யப்பட்டதாகக் கல் வெட்டுகள் மூலம் தெரியவருகிறது.




திருமணஞ்சேரி எனும் தலம் மயிலாடுதுறையிலிருந்து 21 கி.மீ தொலைவிலும் குத்தாலத்திலிருந்து 5.கி.மீ தொலைவிலும் உள்ளது. இங்குள்ள அருள்வள்ளல் நாயகர் கோயில் தேவ கோஷ்டத்தில் இத்திருவுரு அமைந்துள்ளது. அழகுத் திருமுகமும் ஜடாபாரத்தோடு பூரிமமும் விளங்க புன்னகை தவழ்கிறது. மார்பில் சரப்பள்ளியும் பூணூலும் அழகு செய்கின்றன. முன் இருகரங்களிலும், சின்முத்திரையும், சுவடியும், ஏந்தியுள்ளார். இச்சிற்பம் உத்தம சோழன் காலத்தது ஆகும். முயலகன் பூமியை நோக்கியவாறு உள்ளான்.




திருவேள்விக்குடி எனும்இத்தலம் குத்தாலம் இரயில் நிலையத் திலிருந்து வடகிழக்கே 5 கி.மீ தொலைவில் உள்ளது. இத்தலத்தில் கலியாண சுந்தரர் கோயி லில் விளங்கும் தட்சிணாமூர்த்தி பெருமானின் ஜடாபாரம் சுருள் சுருளாக அமைந் துள்ளது. இவரது திருமுகம் கீழ் நோக்கிய பார்வை யும் சாந்தமும் கொண்டு திகழ் கிறது. ருத்திராக்க மாலையும் மழுவும் பின் கரங்களில் விளங்க, முன் வலக்கரம் சின்முத்திரை காட்டியும், இடக்கரம் சுவடி ஏந்தியும் உள்ளன. மார்பில் கண்டிகை சரப்பள்ளி, அரும்புச்சரம் சுவடி ஆகியவை அணி செய்கின்றன. பூணூல் பிரம்ம முடிச்சுடன் காணப்படுகின்றது. உதரபந்தமும் கட்டப்பட்டுள்ளது. சதுரபீடத்தில் வீராசனமாக எழுந்தருளியுள்ளார். இது உத்தம சோழன் காலத்துச் சிற்பமாகும்.

இத்திருவுருவம் திருவாரூர் தியாகராஜர் திருக்கோயிலினுள் தனிக் கோயிலாக விளங்கும் அசலேஸ்வரம் திருக்கோயிலின் தேவகோஷ்டத்தில் விளங்குகின்றது. இப்பெருமானது சிரசில் ஜடாபாரம் விளங்க, மார்பில் அணிகலன்கள் அணிசெய்ய அபயகரத்துடன் வீராசனத்தில் எழுந்தருளி யுள்ளார். பாதத்தருகில் நாகம் காணப்படுகிறது. இதுவும் 10ஆம் நூற்றாண்டுச் சிற்பமாகும்.





இத்திருவுருவம் மேல்பாதி எனும் ஊரில் விளங்கும் சோளீஸ்வரர் கோயிலில் காணப்படுகிறது. இது சித்தூருக்குத் தென்மேற்கில் 26 கி.மீ தொலைவில் நிவா நதிக்கரையில் அமைந்துள்ளது. இங்குள்ள சிவாலயம் அரிஞ்சிகையீஸ்வரம் அல்லது சோளீஸ்வரர் என்று முற்காலத்தில் வழங்கப்பட்டது. இப்போது சோமநாதேஸ்வரர் கோயில் என அழைக்கப்படுகின்றது, இக்கோயிலின் தேவ கோஷ்டத்தில் ரிஷபாரூட வீணாதர தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் அமைந்துள்ளது. சிரசில் ஜடாமகுடமும் பூரிமமும் விளங்குகின்றன. மார்பில் முப்புரிநூலும் வயிற்றில் உதரபந்தமும் திகழ்கின்றன. அமர்ந்திருக்கும் நந்தியின்மீது உத்குடிகாசனத்தில் எழுந்தருளி யுள்ளார். இது இங்கு சிறப்புடையதாகும். முன் கரங்கள் இரண்டும் வீணையை ஏந்தி இசைக்கும் பான்மையில் அமைந்துள்ளது. இச்சிற்பம் முதற் பராந்தகசோழன் காலத்தது ஆகும்.



திருச்சி - லால்குடிப் பெருவழிச் சாலையில் திருவாசிக்கருகில் கொள்ளிட நதிக்கரையில் 13 கி.மீ தொலைவில் துறையூர் எனும் தலம் உள்ளது. இங்கே மூலத்தானத்துப் பரமேஸ்வரர் கோயில் என வழங்கும் விஷமங்களேஸ்வரர் கோயிலின் தேவகோஷ்டத்தில் இத்திருவுருவம் காணப்படுகிறது. இந்த வீணாதர தட்சிணாமூர்த்தி எழில்மிகு தோற்றத்துடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறார். ஜடாபாரம் உச்சிக் கொண்டையுடன் சிரஸ்திரகம் போல் காணப்படுகிறது. இரு கரங்களிலும் வீணையை ஏந்திய விரல்களால் மீட்டும் தோற்றத்தில் காணப்படுகின்றார். இதுவும் முதலாம் ஆதித்திய சோழன் காலத்ததாகும்.

புஞ்சை - தட்சிணாமூர்த்தி

மயிலாடுதுறைக்குக் கிழக்கில் 10 கி.மீ தொலைவில் அமைந்துள்ள புஞ்சை எனும் தலத்தில் நற்றுணை ஈஸ்வரத்தில் தெற்குக் கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். முகமண்டலம் ஜடாபாரத்தால் எழிலுடன் விளங்குகின்றது. மார்பில் ஆபரணங்களும் பூணூலும் விளங்க வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். வலப்பாதத்தின் அருகில் நாகமானது தெளிவாகக் காணப்படுகிறது. இரண்டாம் ஆதித்திய சோழன் காலத்தில் செய்யப்பட்டது. (10-ஆம் நூற்றாண்டுச் சிற்பம்) இத்தலம் திருஞான சம்பந்தரின் தாயார் பிறந்த திருநனி பள்ளியாகும்.



இடைக்காலச் சோழர்களின்

தட்சிணாமூர்ததித் திருவுருவங்கள் (கி.பி.985 - 1070)

திருவையாறு யாவரும் அறிந்த சிவத்தலமாகும். இது தஞ்சைக்கு அருகில் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தில் அமைந்துள்ள கைலாசநாதர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் கைதேர்ந்த சிற்பியால் உருவாக்கப்பட்ட மிகவும் சிறப்புடைய இத்தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் காணப்படுகிறது. கல்லால மரத்தின் கிளைகளும் இலைகளும் தெளிவாக விளங்குகின்றன. அம்மரத்தின் கிளையில் உருத்திராக்கமாலையும், மற்றொன்றில் விபூதிப்பை போன்றதொன்றும் காணப்படுகின்றன. இதனை அமிர்த கலசம் என்றும் கூறுவர். ஜடாமண்டலம் சுருளாகவும் வட்டமாகவும் அமைந்து பிறைச்சந்திரனுடன் விளங்குகின்றது. நெற்றிக்கு மேல் அமைந்த பூரிமம் சாந்தமான திருமுகத்துக்கு எழிலூட்டுகிறது. எழிற்பார்வை மூக்கின் நுனியை நோக்கியவாறு அமைந்துள்ளது. மார்பில் பல்வகை ஆபரணங்களும் பூணூலும் கைகளில் வீரகடகமும் விளங்குகின்றன. திருவடிக்கு வலப்பக்கம் வராகமும் நாகமும், இடப்பக்கம் படுத்த நிலையில் நந்தியும் மானும் உள்ளன. திருவடி முயலகன்மீது பதிந்துள்ளது. முன்கரங்களும் பாதங்களும் சிதைந்துள்ளன. கைதேர்ந்த சிற்பியின் மெய்சோர்ந்தாலும், மனம் சோராமல் பக்தியோடு செய்தமைத்த சிற்பத்தைப் பொய் சேர்ந்த மனத்துப் புன்மையாளர் சிதைத்ததை எப்படிச் சொல்வது? இது முதலாம் இராசராசன் காலத்துச் சிற்பம் ஆகும்.



இத்திருவுருவம் திருச்செங்காட்டங்குடி எனும் தலத்தில் விளங்குகின்றது. (நன்னிலத்திற்கு தென்கிழக்கில் 8 கி.மீ தொலைவில் உள்ளது) இங்குள்ள உத்தராபதீஸ்வரர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் இத்திருவுரு அமைந்துள்ளது. குருநாதர் கல்லால மரநிழலில் நாகம் ஏந்திய முயலகனை மிதித்தவாறு வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். சிரசில் ஜடாபாரமும் பூரிமமும் அழகாக விளங்குகின்றன. காதுகளில் குழையும் தோடும், மார்பில் ஆபரணங்களும் பூணூலும், பின் இருகரங்களில் உருத்திராக்க மாலையும், தீச்சுடரும் பிரகாசிக்க முன்வலக்கரம் சின்முத்திரை காட்ட, இடக்கரம் சுவடியேந்தக் கீழ் நோக்கிய பார்வையுடன் காட்சி தருகின்றார். இத்திருவுவம் முதலாம் இராசராசன் காலத்தது ஆகும்.



இந்த யோக தட்சிணாமூர்த்தி திருநெடுங்களத்தில் உள்ள திருநெடுங்களநாதர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் எழுந்தருளியுள்ளார். (திருச்சியை அடுத்துள்ள சோளகம்பட்டி இரயில் நிலையத்திற்கு மேற்கே 5 கி.மீ தொலைவில் உள்ளது). இக்கோயிலை முதலாம் ஆதித்த சோழனும் பாண்டியர்களும், விஜயநகர வேந்தர்களும் திருப்பணி செய்துள்ளனர். குருநாதர் நீண்ட ஜடாபாரத்துடனும் மார்பிலும் கரங்களிலும் ஆபரணங்கள் திகழ்கின்றன. பின்கரங்களில் மானும் மழுவும் விளங்க ராஜலிங்காசனத்தில் காட்சி தருகின்றார். இவர் யோக தட்சிணாமூர்த்தியாக விளங்குவதனால் முதுகுடன் இடமுழங்காலை யோக பட்டையால் பிணைத்துள்ளார், இங்கு இடுப்புடன் யோக பட்டை

இல்லாதது நோக்கத்தக்கது பாதங்களில் சிலம்புகளை அணிந்துள்ளார். இவர் அமர்ந்துள்ள பீடத்தின் கீழ் மானும், கிளியும் விளங்குகின்றன.



திருவாவடுதுறைக்கு வடக்கே 3 கி.மீ தொலைவில் திருக்கோடிக்கா எனும் தலம் உள்ளது. இங்குள்ள திருக்கோடீஸ்வரர் கோயிலில் ஐம்பொன்னாலாகிய வீணாதர தட்சிணாமூர்த்தியின் திருவுருவச்சிலை காணப்படுகிறது. (இதனைத் திரிபுராந்தகர் என்றும் சிலர் கூறுவர்) இவரது கேசபந்தமுடி மீது (ஜடாமகுடம்) சந்திரனும் பின்னால் சிரச்சக்கரமும் விளங்குகின்றன. திருமுகத்தில் நெற்றிப் பட்டையும் நெற்றிக் கண்ணும் விளங்க புன்னகையுடன் காட்சி தருகின்றார். மார்பில் பிரம்ம முடிச்சுடன் கூடிய பூணூலும் ஸ்தன சூத்திரமும் உள்ளன. வயிற்றில் உதரபந்தமும் கழுத்தில் கண்டிகையும் சரபளியும், சுவடியும் விளங்குகின்றன. இடையில் அரைப்பட்டிகையும், தாரகைச் சும்மையும் அணிந்துள்ளார். பின் வலக்கரத்தில் மழுவும், இடக்கரத்தில் மானும் (மான்சிதைந்துள்ளது) விளங்குகின்றன. முன் இருகரங்கள் வீணையை மீட்டும் நிலையில் அமைந்துள்ளன. அலர்ந்த பத்ம பீடத்தில் கால்களில் சிலம்பு தவழ நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார். இது இடைக்காலச்சோழர் காலத்துச் சிற்பமாகும்.



உற்றத்தூர் (உத்தத்தூர்) எனும் தலம் திருச்சி சென்னை பெருவழிச்சாலையில் பாடலூருக்குத் தென் கிழக்கில் 3 கி.மீ தொலைவில் உள்ளது. திருச்சிக்கு 34 கி.மீ தொலைவிலும் உள்ளது. இங்குள்ள சித்தரத்னேஸ்வரர் கோயில் தேவகோஷ்டத்தில் அமைந்துள்ளது. இத்திருவுருவம் , கல்லால மரம் அடுக்கடுக்காக மயில் தோகை போல் தோற்றம் அளிக்கிறது. சிரசில் ஜடாபாரம் விளங்க மார்பில் அணிகலன்கள் அழகு செய்ய, பின் இருகரங்களும் நாகமும் தீச்சுடரும் ஏந்த முன் வலக்கரம் சின்முத்திரை காட்ட இடக்கரம் சுவடி ஏந்த வலப்பாதம் முயலகனை மிதித்து, பெருமான் வீராசனத்தில் எழுந்தருளி இருக்கின்றார். பாதத்தருகில் ஜடைக்கட்டுடன் முனிவர் இருவர் அமர்ந்துள்ளனர். இக்கோயில் திருப்பணி முதலாம் ஆதித்தியன் காலத்தில் தொடங்கி இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் முடிவுற்றதாக வரலாறு கூறுகின்றது.



இத் திருவுருவம் திருப்பைஞ்ஞீலி எனும் தலத்தில் உள்ள நீலி வனநாத சுவாமி கோயிலில் விளங்குகின்றது. இப்பெருமான் விரிந்த கல்லால மரநிழலில் ஜடாபாரம் பூரிமத்துடன் விளங்க புன்னகையுடன் காட்சி தருகின்றார். முயலகனை வலப்பாதம் மிதிக்க, வீராசனத்தில் அமர்ந்துள்ளார். வலக்கரத்தில் உருத்திராக்க ஜபமாலையுடன் சின்முத்திரை விளங்குகிறது. பாதத்தருகில் (கீழ்) படுத்த அமர்ந்த நந்தி உள்ளது. பெருமானின் கட்டளையை நிறைவேற்ற ஆயத்தமாக இருப்பது போல இந்நந்தி விளங்குகின்றது. இது முதல் ஆதித்திய சோழன் காலத்துச் சிற்பமாகும்.



திருச்சிக்கு மிக அருகில் விளங்கும் திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் ஆலயத்தில் இப்பெருமான் விளங்குகின்றார். இவரது சிரிசல் ஜடாபாரம் சரிந்து தொங்கவும் பூரிமம் விளங்கவும் திருமுகத்தில் சாந்தம் நிலவவும் காட்சி தருகின்றார். திருமார்பினில் அணிகலன்கள் விளங்குகின்றன. பிரமமுடிச்சுடன் பூணூல் அணி செய்கிறது. உதரபந்தம் அணிந்துள்ளார். திருவடிகளில் சிலம்பணிந்து வலக்கரம் சின்முத்திரையினைக் காட்ட வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். இக்கோயில் கோசெங்கணான் காலத்தைச் சார்ந்தது. பின்னர் முதலாம் ஆதித்திய சோழன் திரும்பவும் திருப்பணி செய்தான். எத்தனையோ எழில் சிற்பங்களை இத்திருக்கோயிலில் காணலாம்.


திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் திருக்கோயில் தட்சிணாமூர்த்தி

சென்னைக்கு மிக அருகில் உள்ள திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் காணப்பெறும் தட்சிணாமூர்த்தி திருவுருவத்தில் சிரசில் கங்காதேவி விளங்குகின்றார். ஜடாமண்டலமும் பூரிமமும் திருமுகத்துக்கு அழகு செய்கின்றன. மார்பில் உருத்திராக்க மாலை கண்டிகை, சரப்பள்ளி, சுவடி ஆகியவை விளங்குகின்றன. வலக்கரம் சின்முத்திரையைக் காட்டுகின்றது. இடக்கரம் சுவடியினை ஏந்தியுள்ளது. வலப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. இடப்பாதத்தை வலத்தொடைமீது வைத்து வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். பாதத்தில் சிலம்பும் வீரக்கழலும் அணி செய்கின்றன.

பிற்காலச் சோழர் காலத்துத் தட்சிணாமூர்த்தி சிற்பங்கள் (கி.பி. 1070 - 1289)



வடஆர்க்காடு மாவட்டம் செய்யாறு தாலுக்காவில் காஞ்சிபுரத்திற்குத் தென்கிழக்கில் 30 கி.மீ தொலைவில் திருவோத்தூர் எனும் தலம் உள்ளது. இங்குள்ள வேதநாதேஸ்வரர் கோயில் தேவ கோஷ்டத்தில் இத்திருவுருவம் விளங்குகிறது. கல்லாலமரம் அடர்த்தியான இலைகளுடன் கூடிய அரை வட்ட வடிவத்தில் காணப்படுகின்றது. சிரசில் ஜடாமண்டலமும் பூரிமமும் விளங்குகின்றன. மார்பில் அணிகலன்கள் அணிசெய்கின்றன. கரங்களில் நாகமும் தீச்சுடரும் சின்முத்திரையும் சுவடியும் உள்ளன. சின்முத்திரை கரத்தில் உருத்திராக்க மாலை எடுப்பாக உள்ளது. பாதத்தில் சிலம்பும், வீரக்கழலும் விளங்க வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். திருவடி அருகில் முனிவர் இருவர் ஜடாபந்தத்துடன் அமர்ந்துள்ளனர். இது பிற்காலச் சோழர்களது காலத்தது ஆகும்.




இத் தட்சிணாமூர்த்தித் திருவுருவம் சித்தலிங்க மடத்தில் வியாக்ர புரீஸ்வரர் கோயிலில் காணப்படுகிறது. இப்பெருமான் சிரசில் ஜடாபாரம் விளங்க மார்பில் ஆபரணங்களும் பூணூலும் அணிந்துள்ளார். வலக்கரம் சின்முத்திரை காட்டுகின்றது. ஆனால் பெருவிரல் அணிவிரல் சிறுவிரல் மூன்றும் மடங்கி வளைந்த நிலையில் உள்ளன. இது சிந்திப்பதற்கு உரியது. இடக்கரம் சுவடி ஏந்தியுள்ளது. இடப்பாதத்தை உள்ளே மடக்கி வலப்பாதத்தைத் தொங்கவிட்டு சாய்வாக எழுந்தருளியுள்ளார். என்று கொள்ளலாம். இவ்வமைப்பில் இது போன்ற சிற்பம் காண்பது அரிதே ஆகும்.



இத்திருவுருவம் திரிசூலம் எனும் தலத்தில் (பல்லாவரம் இரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் உள்ளது) விளங்கும் தர்மபுரீஸ்வரர் கோயிலின் தேவ கோஷ்டத்தில் விளங்குகின்றது. பெருமானுடைய ஜடாமுடி அழகிய சுருள்களுடன் ஜடாமண்டலமாகக் காட்சி தருகின்றது. சர்வ ஆபரணங்களுடன் விளங்க இப்பெருமான் உத்குடிகாசனத்தில் எழுந்தருளியுள்ளார். சிலம்புகள் பாதத்திற்கு மேலும் அழகூட்டுகின்றன. தெற்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் இரு முனிவர்கள் சின்முத்திரையுடன் இப்பெருமானின் கீழ் அமர்ந்துள்ளனர். இது 13-ஆம் நூற்றாண்டுச் சிற்பமாகும்.



மயிலாடுதுறைக்கு வடக்கே 8 கி.மீ தூரத்தில் நீடூர் எனும் தலம் உள்ளது. இத்தலத்தில் விளங்கும் சோமநாதேஸ்வரர் கோயிலில் தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் காணப்படுகிறது. பெருமான் கல்லால மரநிழலில் அழகிய வரிவரியான ஜடாமண்டலம் பூரிமத்துடன் விளங்க எழில் முகத்துடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். மார்பில் உருத்திராக்க மாலையும் ஆபரணங்களும் விளங்குகின்றன. வலக்கரத்தால் சின்முத்திரை காட்டியருளுகின்றார். இது முதற் குலோத்துங்கன் காலத்துச் சிற்பமாகும்.



இலவநாசூர் (கோட்டை) எனும் ஊர் தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூருக்கு அருகில் உள்ளது. இது இறைவனாரையூர் என்றும் வழங்கப்படும் இங்குள்ள அர்த்தநாரீஸ்வரர் கோயிலில் இத்திருவுருவம் காணப்படுகிறது. அகலமாக விரிந்த ஜடாமண்டலத்துடனும் எடுப்பான பூரிமத்துடனும் புன்னகை பூத்த முகத்துடனும் குருநாதர் காட்சி தருகின்றார். சரிந்த ஆடையும் விரிந்த மார்பில் ஆபரணங்களும் விளங்குகின்றன. வீராசனத்தில் அமர்ந்து காட்சி தருகின்றார். இது உத்தமசோழன் காலத்துச் சிற்பம். இத்தலத்தில் மாணிக்கவாசகர் அருளிய திருச்சாழலை ஓதுவார்க்கு விக்கிரம சோழன் (கி.பி 1118 - 1135) நிபந்தம் விட்ட செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது.



இத்திருவுருவம் மயிலாடுதுறைக்கு மிக அண்மையில் உள்ள பல்லவராயன் பேட்டை சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் விளங்குகின்றது. இப்பெருமானின் ஜடைகள் வட்டமாகவும் சுருள் சுருளாகவும் அமைந்த ஜடாமண்டலத்துடன் எழில் முகம் காண விளங்குகின்றார். சிரசில் கங்கையும் மார்பில் பூணூலும் கண்டாபரணமும் திகழ வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். இவர் திருநந்திதேவர் மீது அமர்ந்திருப்பது போலவும் விளங்குகின்றார். வலப்பாதத்தின் கீழ் வராகமும், புலியும், முயலகனும் காணப்படுகின்றன. இது இரண்டாம் இராசராசன் காலத்தைச் சேர்ந்த சிற்பம் ஆகும்.



இத்திருவுருவம் திருவெண்ணெய் நல்லூர் (தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது) அருட்டுறை நாயனார் கோயிலின் தேவகோஷ்டத்தில் விளங்குகின்றது. குருநாதர், திருவடியால் முயலகனை மிதித்து வீராசனத்தில் வீற்றிருக்கின்றார். சின்முத்திரை காட்டியருளும் கரம், அணிகலன்கள் திகழும் மார்பு, அழகு ததும்பும் திருமுகம், பூரிமத்துடன் விளங்கும் ஜடாபாரம் தாங்கிய சிரசு ஆகியவற்றுடன் கல்லால மரநிழலில் எழுந்தருளியுள்ளார். இது இரண்டாம் இராசராசன் காலத்துச் சிற்பமாகும்.

துறையூர் ஸ்ரீ நந்திகேஸ்வரர் திருக்கோயில் தட்சிணாமூர்த்தி



துறையூர் - திருச்சி பெருவழிச் சாலையில் நாமக்கல்லுக்கு வடக்கே அமைந்துள்ளது துறையூர். இங்குள்ள நந்திகேஸ்வரர் கோயிலில் இத்திருவுருவச்சிலை காணப்படுகின்றது. பெருமானுடைய ஜடாபாரம் பூரிமத்துடன் விளங்குகின்றது. இலைகள் அடர்ந்த கல்லால மரம் சிறியதாக உள்ளது. மார்பில் ஆபரணங்களும் பூணூலும் நன்றாக விளங்குகின்றன. சின்முத்திரையுடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். முயலகன் ஜடாபாரத்துடனும் ஆபரணங்களுடனும் காணப்படுகின்றான். குருநாதர் திருமுகத்தில் சாந்தம் நிலவுகின்றது. இது மூன்றாம் இராசராசன் (கி.பி.1246 - 1280) காலத்தைச் சார்ந்த சிற்பமாகும்.



விஜயாலயாசோழீஸ்வரம் வீணாதர தட்சிணாமூர்த்தி (வலகால் குத்திட்டும் இடது காலை மடித்தும், மாறியமைந்த வீணை மற்றும் ஜடாபார அழகுடன் கூடிய குமின் சிரிப்பு.

குடைவரைக்கோயில்கள் மற்றும் அருங்காட்சியகங்களில் தட்சிணாமூர்த்திப் படிமங்கள்

மாமல்லபுரம் - வீணாதர சிவன்

மாமல்லபுரம் எனும் மகாபலிபுரம் சென்னைக்குத் தெற்கே 55 கி.மீ தொலைவில் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள ஒரு சிற்றூராகும். இங்குள்ள கோயில்கள் அனைத்தும் குடைவரை மற்றும் கட்டுமான நிலையில் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிற்பமும் நமக்குப் பிரமிப்பை ஊட்டுவதாகவும், அழகின் செறிவாகவும் அமைந்துள்ளது.

இது பல்லவர் காலத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு கடற்கரைப் பட்டினமாகவும், துறைமுகமாகவும் விளங்கியது. இதற்குக் '' கடன் மல்லை'' என்ற பெயரும் உண்டு. இது பல்லவர் காலத்தில் பேரரசனாக விளங்கிய முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி.630 - 668) காலத்தில் மிகவும் செல்வச் செழிப்புடனும் பெரும் புகழுடனும் விளங்கியது. மேலை நாட்டினருக்கும், கீழை நாட்டினருக்கும் இது சிறந்த வணிகத் தலமாக இருந்தது.

நரசிம்மவர்மன் என்பவன் தன் தந்தை மகேந்திரவர்மனைப் போலவே கலைத்துறையிலும், வணிகத்துறையிலும் சிறந்து விளங்கினான். பல்லவர்கள் காலத்துக்குச் சற்று முன்பு தமிழகத்துக் கோயில்கள் செங்கற்களாலேயே கட்டப்பட்டுவந்தன. பல்லவர்கள் காலத்தில் தான் கருங்கற்கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்களைக் கட்டும்போது தனித்தனிக் கருங்கற்களை இணைத்துச் சுவர் எழுப்பியும், நீண்ட கருங்கற்களைக் கொண்டு மேற்கூரை வேய்ந்தும், தூண்கள் வைத்தும் கட்டப்பட்டன. விமானம் கோபுரம் முதலிய நுட்ப வேலைப்பாடுகள் செய்யும்போது அவற்றைச் செங்கற்களைக் கொண்டு செய்தும் அவற்றில் எழில்மிக்க சிற்பங்களைச் சுதை வேலைகளாகச் செய்தும் வண்ணம் தீட்டியும் கோயிலுக்கு எழிலூட்டினர்.

கலையார்வம் கொண்ட நரசிம்மவர்மன் கைதேர்ந்த சிற்பிகளைக் கொண்டு நூதனமாகப் பெரிய சிறிய கற்பாறைகளை உச்சிமுதல் சேதம் ஏற்படாதவாறு குடைந்து பெரியதும் சிறியதுமான ரதங்களின் அமைப்பில் கோயில்களை அமைத்தான். இவற்றிற்குக் குடைவரைக் கோயில்கள் என்று பெயர்.

அதாவது மலையைக் குடைந்து செய்யப்பட்ட கோயில்கள் என்று பெயர். இத்தகையகனதான் மாமல்லபுரத்தில் (மகாபலிபுரம்) கடற்கரை ஓரமாக அமைந்த குடைவரைக் கோயில்கள். இவற்றைப் பஞ்சபாண்டவ ரதங்கள் என்றும் திரௌபதி ரதம் என்றும் குறிப்பிடுகின்றனர்.

அவற்றுள் ஒன்று தருமர்ரதம் என்பது. அதன் வெளிச்சுற்றுப் பகுதி மாடங்களில் இரண்டு வீணாதர தட்சிணாமூர்த்தியின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. இவ்வீணாதரர் நின்ற நிலையில் விளங்குகின்றார். இத்திருவுருவத்தினை விவரிக்கின்ற வரலாற்றுப் பேராசிரியர் திரு.கோபிநாத ராவ் வீணாதரசிவன் என்றே குறிப்பிடுகின்றார். மேலும் மற்றுமொரு வீணாதரசிவனும் உள்ளார். ஆக மூன்று திருவுருவங்களை மகாபலிபுரத்தில் காணலாம்.


ஸ்வஸ்திகாசன வீணாதர சிவன்:

இந்த வீணாதரசிவன் நின்ற நிலையில் சற்று மாறுதலான அமைப்பில் விளங்குகின்றார். அதாவது ஸ்வஸ்திகாசன நிலையில் நின்று முன் இருகரங்களில் வீணை ஏந்தி அதனை மீட்டும் நிலையில் உள்ளார். ஒரு காலை நிலையாகவூன்றி, மற்றொரு காலை அதற்குக் குறுக்கே வைத்து நிற்கும் அமைதியே ஸ்வஸ்திகாசன மென்று சொல்லப்படும். இந்நிலையினை ரிஷபாந்திக சிவமூர்த்தங்களிலும், கொடிப் பெண்வடிங்களிலும் காணலாம். நின்று கொண்டிருக்கின்ற

அபஸ்மாரத்தின் தலைமீது தனது பின் இடக்கரத்தை வைத்துப் பதித்து அழுத்துகின்றார். பின் வலக்கரத்தில் ஜபமாலை போன்ற அமைப்பும் உள்ளது. கரங்களில் காப்புகள் அழகு செய்கின்றன. இவரது ஜடைகள் ஒருங்கே அமைந்து தொங்கிய நிலையில் உள்ளன. காதுகளில் குழையும் குண்டலமும் விளங்குகின்றன. கழுத்தில் உருத்திராக்க மணிகள் கோக்கப்பட்ட மாலை விளங்குகின்றது. இடுப்பில் வஸ்திரக் கட்டும், வலப்பக்க இடுப்பில் வஸ்திரக்கட்டுப் பகுதியும் விளங்குகின்றன. புன்முறுவலுடன் கூடிய கீழ்நோக்கிய பார்வையுடன் இப்பெருமான் காட்சி தருகின்றார். இக்காட்சியினை அப்படியே சற்று மாறுதலாகத் தாராசுரம் திருக்கோயிலின் (சோழர் கலைப்பாணி) மகா மண்டபத்தூணில் வீணாதரர், முயலகன் தலைமீது தனது திருவடியைப் பதியவைத்திருப்பதைக் காணலாம். வேறு எங்கும் காணப்படாத வகையில் அமைந்த இச்சிற்பத்தின் கலை அழகினை வர்ணித்துக் கொண்டே போகலாம்.

வைதஸ்திக ஸ்தானகத்தில் வீணாதரர்:


இதே தருமர் ரத சுற்றுச்சுவர் மாடத்தில் மற்றொரு வீணாதர சிவன் காணப்படுகின்றார். இவர் இரண்டு பாதங்களையும் முன் பக்கமாக விலக்கியவாறும் தலையினை வலப்பக்கம் சாய்த்தவாறும் காணப்படுகின்றார். (சமபாதஸ்தான நிலையில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று வைதஸ்திக ஸ்தானகம் என்றும் மற்றொன்று அர்த்த வைதஸ்திக ஸ்தானகம் என்றும் பெயர் பெறும். சமபாத ஸ்தானக நிலையில் சமமாக வைக்கப்பட்ட பாதங்களின் பெருவிரல்களின் இடைவெளி ஒரு விதஸ்தி (இரண்டு சாண்) அளவிருப்பின் இக்கோலம் வைதஸ்திக ''ஸ்தானகம்'' என்று சொல்லப்படும்) லாவகமாக வளைந்து நிற்கும் இவரது முன் கரங்களில் வீணையினை ஏந்தியுள்ளார். பின் கரங்களில் ஒன்று ஜபமாலை போன்ற அமைப்புடன் காணப்படுகின்றது. மற்றொன்று தொங்கும் பாவனையில் உள்ளது. கரங்களில் மும்மூன்று காப்புகள் விளங்குகின்றன. இடையில் வஸ்திரக்கட்டு அமைந்துள்ளது. அதில் முன் வலக்கரத்திற்கும் இடுப்புக்கும் இடையே வஸ்திரம் ஒன்றும் காணப்படுகிறது. நெற்றிப்பட்டையுடன் கூடிய ஜடைகள் எல்லாம் மேல் நோக்கியவாறு கட்டி அமைந்த ஜடாமகுடமாக உள்ளது. புன்னகை தவழவிளங்கும் இவர் கீழ்நோக்கிய பார்வையுடன் வீணையின் நாதப் பேரொலியால் தன்னையும் மறந்த நிலையினை உடையவராக அமைக்கப் பட்டிருப்பது சிற்பியின் கைத்திறத்திற்குச் சான்றாக அமைகிறது.



மகாபலிபுரம் - விணாதர தட்சிணாமூர்த்திகள்

கால்மாறி அமர்ந்தருளும் தட்சிணாமூர்த்தி

(இராக்கிணாம்பாளையம்)



பெரியார் மாவட்டம் - கோபி வட்டத்தைச் சார்ந்த இராக்கிணாம்பாளையம் என்னும் ஊரிலிருந்து கிடைக்கப்பெற்றது இத்தட்சிணாமூர்த்தியின் திருவுருவம். இதன் காலம் 15 அல்லது 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததென்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். இதன் உயரம் 87 செ.மீ, அகலம் 37 செ.மீ அளவில் உள்ளது. தற்போது இச்சிலையை ஈரோடு அரசு அருங் காட்சியகத்தில் காணலாம்.

இத்தட்சிணாமூர்த்திப் பெருமானின் பின்னால் அமைந்த கல்லால மரம் பெருமானுக்குக் குடை விரித்தாற்போன்று விளங்குகின்றது. நெற்றிப்பட்டையுடன் கூடிய ஜடாபாரம் எடுப்பாக அமைந்துள்ளது. காதுகளில் குழைகளும் காதோலையும் உள்ளன. தோள்களில் பாதுதாமமும் புஜங்களில் தோள்வளைகளும் காணப்படுகின்றன. இப்பெருமானின் கழுத்திலும் திருமார்பில் ஏகருத்திராட்சம் கண்டாபரணம், ருத்திராட்சமாலை ஆகியவை விளங்குகின்றன. இவரது இடப்பின்கரத்தில் தீயகலும், வலப்பின்கரத்தில் நாகபாசமும், முன் வலக்கரத்தில் ஞானம் அருளும் சின்முத்திரையும் (வியாக்யானமுத்திரை) அதன் கட்டைவிரல் இடுக்கில் ஜபமாலையும் அழகாக அமைந்துள்ளன. மாய இருளை அகற்றும் வேதச்சுவடிகளை, இவரது முன் இடக்கரம் ஏந்தியுள்ளது.

இப்பெருமான் ஒருவகை வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். வலக்காலைத் தொங்கவிடாமல் இடக்காலைத் தொங்க விட்டபடி, வலக்காலின் முழங்கால் மடங்கி பாதப்படம் மேல் நோக்கியவாறு இடக்கால் மீது காணப்படுகிறது. இதைப்போன்ற கால்மாறி அமைந்த அற்புதமான திருவுருவங்களை ஒருசில இடங்களில் மட்டுமே காணலாம்.

திருநெல்வேலி மாவட்டம் பிரமதேசம் - கைலாசநாதர் திருக்கோயிலில் இதைப்போன்ற கால்மாறி அமைந்த தட்சிணாமூர்த்தி திருவுருவத்தைக் காணலாம்) ஜடாமண்டலத்துடன் விளங்கும் முயலகன் மீது தமது இடப்பாதத்தைப் பதியவைத்துள்ளார். இவரது பாதங்களில் காப்பு, சிலம்பு, தண்டை, வீரக்கழல் (வீரக்கழல் இடக்காலில் இருப்பதை நோக்கவேண்டும், பெரும்பாலும் வலக்காலில் தான் காணப்படும்) ஆகியவை விளங்குகின்றன. இங்கு வீரக்கழல் சூடாமணி போன்ற அமைப்பில் உள்ளது. பாதத்தின் இரு பக்கங்களிலும் நான்கு முனிவர்கள் பெருமானின் மோன நிலையினைக் கண்டு, உணர்ந்தவாறு தாங்களும் அவ்வாறே அமர்ந்துள்ளனர்.

இத்தகைய அபூர்வ அழகிய நுண்கலைச் சிறப்புடன் திகழும் சிற்பங்களைப் பாதுகாத்தல் நமது கடமையாகும்.

மிருதங்க தட்சிணாமூர்த்தி

வெட்டுவான் கோயில்

தமிழ்நாட்டில் கோயில் வழிபாட்டுமுறை தொன்று தொட்டு இருந்து வருவதாகும். பல்லவர் காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட கோயில்கள் அனைத்தும், செங்கல், மண் ஆகியவற்றால் கட்டப்பட்டவை ஆனால் அவைகள் காலத்தை எதிர்த்து நிற்க இயலவில்லை. கி.பி.7ஆம் நூற்றாண்டில்

பல்லவப் பேரரசர்களால் கட்டப்பட்ட குடைவரைக் கோயில்கள் (பாறைகளைக் குடைந்து கட்டப்படும் கலை) முதற்கொண்டு தமிழர்களின் கோயில் கட்டடக் கலைகள் வரை பதிமூன்று நூற்றாண்டுகளாக அயல் நாட்டுக் கலைப்பண்புகளால் பாதிக்கப்படாமல் தனித்து வளர்ந்துள்ளன.

குடைவரைக்கோயில்கள்:

குடைவரைக் கோயில்களும், கற்கோயில்களும் தொண்டை நாட்டில் பல தோன்றின. பல்லவப் பேரரசர்களை முன்மாதிரியாகக் கொண்டு பாண்டியர்கள், முத்தரையர்கள், சேர மன்னர்கள், கீழைச்சாளுக்கியர்கள் ஆகியோரும் தங்களது நாட்டில் பல்வேறு மாற்றங்களுடன் குடைவரைக் கோயில்களை அமைத்தனர்.

கழுகுமலை:

பல்லவர்களின் கலைப்பாணியைப் பின்பற்றி வ.உ.சி. மாவட்டம் சங்கரன் கோயிலிலிருந்து கோவில் பட்டிக்குச் செல்லும் வழியில் வெட்டுவான் கோயில் உள்ளது. உலகப்புகழ் பெற்ற மாமல்லபுரம் செல்ல இயலாதவர்கள் இக்கோயிலைக்கண்டு மகிழலாம். (கோவில்பட்டியிலிருந்து சுமார் 20 கி.மீ தூரம்) ''அரைமலை'' என்பது இங்கு அமைந்துள்ள மலையின் பழைய பெயராகும்.


''நின்றசீர் நெடுமாறன்'' காலத்தில் சமணர்களை இவ்வூரில் கழுவேற்றிய காரணத்தால் ''கழுமலை'' என்று பெயர் பெற்று, பின்னர் ''கழுகுமலை'' என்றாயிற்று. இவ்வூரிலுள்ள கோயில்கள் ஒற்றைக்கற்கோயில்கள், குடைவரைக் கோயில், கட்டிடக் கோயில் என்ற மூன்று வகையான கட்டிடக்கலைக்கும் சான்றாக அமைந்து விளங்குகின்றன.

மலையில் ஒரு பகுதியைக் குடைந்து குடைவரைக் கோயிலாக முருகன் கோயில் அமைந்துள்ளது. இங்குள்ள முருகன் ஆறு கரங்களுடன் காட்சி தருகின்றார்.


வெட்டுவான் கோயில்:

இது முருகன் கோயிலுக்குப் பின்னால், மலையின் ஒரு பகுதியை, மலையில் இருந்து வேறுபடுத்திக்காட்டி கற்கோயிலாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு வெட்டுவான்கோயில் என்பது பெயர். இது எட்டாம் நூற்றாண்டின் முற்காலப் பாண்டியர்களின் படைப்பாகும்.


விமானம்:



கருவரையின் மேல் உள்ள விமானம் எட்டுப்பட்டை களைக் கொண்டதாக உள்ளது. பட்டைகள் தோறும் கூடுகள் அமைக்கப் பட்டுள்ளன. விமானத்தின் கீழ்ப் பகுதியில் நான்கு திசைகளிலும் அழகிய சிற்பங்கள் காணப்படு கின்றன. மேலும் கிழக்கில் சிவனும் பார்வதியும் அமர்ந்த திருக்கோலத்தில் உள்ளனர். மேற்கில் நரசிம்மரும், தெற்கில் தட்சிணா மூர்த்தியும் (மிருதங்க தட்சிணாமூர்த்தி) வடக்கில் பிரமனும் காட்சி தருகின்றார் கள். விமானத்தின் நான்கு மூலை களிலும் நந்திகள் அமர்ந்துள்ளன. மேலும் யாளிகள், கந்தர்வர்கள், தலையுடன்



தட்சிணாமூர்த்தி - பல்லவர்காலம்
காஞ்சிபுரம்.



அறமுரைத்தபட்டர் (தட்சிணாமூர்த்தி கழுகுமலை - வெட்டுவான்கோயில் - நெல்லைமாவட்டம் கி.பி. 8ஆம் நூற்றாண்டு பாண்டியர்காலம் (பின் இருகரங்களில் மானும், சுடரும், முன் இருகரங்களில் இடக்கரம் தொடைமீது இருத்தியும் வலக்கரம் உபதேச முத்திரை காட்டியதாக இருந்திருக்கும்.

கூடிய கூடுகள், பூதகணங்கள், தேவகன்னியர்கள் முதலான சிலை வடிவங்களைக் கண்டு மகிழலாம், முற்காலப் பாண்டியரின் கலைத்திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்த இக்கோயில்லை இராஷ்டிரகூட மன்னன் முதலாம் கிருஷ்ணன் எல்லோராவில் எடுத்த கைலாசநாதர் கோயிலுக்கு இணையான சிறப்புடையதாகக் கூறலாம்.

மிருதங்க தட்சிணாமூர்த்தி:

பொதுவாக திருக்கோயில்களின் தென்திசை பகுதியில் கோஷ்டம், விமானம், இராஜகோபுரங்கள், மதிற்சுவர்கள் முதலானவற்றில் ஆலமர் செல்வனான சிவபெருமானைத் தென்திசைக் கடவுளாக அமைப்பது வழக்கம். அதிலும் தென்திசைப்பெருமானை பொதுவாக நான்கு நிலைகளில் அமைப்பர் அவை யோக பட்டையுடன் கூடிய யோக தட்சிணாமூர்த்தி, சங்கீதத்தை உணர்த்தும் வீணாதரமூர்த்தி, வியாக்யானம் செய்கின்ற நிலையில் வியாக்யான கர்த்தர், ஞானத்தைப் புகட்டும் நிலையில் ஞானதட்சிணாமூர்த்தி என்பனவாகும். இக்கோயிலின் விமானத்தின் தென்திசையில் வேறெங்கும் காணமுடியாத தனிச்சிறப்பு வாய்ந்த தட்சிணாமூர்த்தியைக் காணலாம். இங்கு யோகநிலையோ, ஞானநிலையோ, வீணையேந்திய நிலையோ இல்லாது, மிருதங்கத்தை வாசிக்கும் ''மிருதங்க தட்சிணாமூர்த்தியாகக்'' காட்சி தருகின்றார்.

உருவநிலை:


பெருமானின் ஜடைகள் அப்படியே சரிந்த நிலையில் உள்ளன. பின் இரு கரங்களில் மழுவும், அட்சமாலையும் விளங்குகின்றன. பெருமானின் இடத் திருப்பாதம் தொங்குகின்ற நிலையில் அபஸ்மாரத்தின் முதுகின் மீது பதிந்துள்ளது. இடக்கால் மடங்கியும் உள்ளது. முன்வலக்கரம் விரல்களால் மிருதங்கத்தை இசைக்கும் பாவனையில் உள்ளது. முன்இடக்கரம் மிருதங்கத்தைப் பிடிக்கும் நிலையில் உள்ளது. தென்திசைப் பெருமானான இவர், மிருதங்க ஓசையை ஆள்வதுபோல் அமைக்கப்பட்டுள்ளார். வீணையுடன் காணப்படும் வீணாதரதட்சிணாமூர்த்தி இங்கு மிருதங்கத்துடன் காணப்படுகின்றார்.

இப்பெருமானின் கரங்களில் காப்புகளும், தோள்வளை, பாதுதாமம் முதலானவைகளும் காணப்படுகின்றன. திருமார்பில் கண்டாபரணமும் உருத்திராக்க மாலையும் விளங்குகின்றன. ஒரு காதில் காதோலையும் மற்றொரு காதில் நீண்ட துளையும் காணப்படுகின்றன. இடுப்பில் வஸ்திரக் கட்டும், வியாக்ர சர்மமும், சுரோணிப்பட்டையும் காணப்படுகின்றன. சிலம்பானது தொங்கும் நிலையில் உள்ள பாதத்தின் மேல் பகுதியில் அணிசெய்கிறது. பெருமானின் பார்வை கிழக்குப் பார்த்தவாறும், உடலானது நேராக நிமிர்ந்தும் விளங்குகின்றன. முகம் அந்நேர்கோட்டிலிருந்து ஒரு நூல் இடப்பக்கம் தள்ளி திரும்பி புன்முறுவலுடன் அமைந்து விளங்குகின்றது. ஆனந்தமயமாக நாத ஒலியினை ஆட்டமில்லாது இருந்த நிலையில் இருந்தபடியே மிருதங்கத்தை வாசிக்கும் பேரழகினை அவர் முன்நின்று காண்பவர் அறிவர். இத்திருவுருவமானது தென்திசை மக்களுக்குக் கிடைத்த பொக்கிஷமாகும். மனிதன் தன் வாழ்நாளில் காணவேண்டிய அற்புதக் காட்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

செய்யானம் இசைக்குருமூர்த்தி

இந்த வீணாதர இசைக் குருமூர்த்தியின் திருவுருவம் சென்னை அரசினர் அருங்காட்சியகத்தில் உள்ளது. தஞ்சை மாவட்டத்துச் செய்யானம் திருக்கோயிலைச் சார்ந்தது. இது கலைத்தொழில் நுட்பங்கொண்ட ஐம்பொன்னாலாகிய செப்புத்திருமேனி ஆகும். இது கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலச் சோழர்கலைப்பாணியைக் கொண்டது உயரம் 86 செ.மீ. உடையது (Vinadhara - late chola - 13th century A.D.Ht. 86 cms. seyyanam Thanjavur District. Government Museum Madras)

மிக்க எழிற் கோலத்துடன் விளங்கும் இக்குருநாதர் திரிபங்கி நிலையில் சைவாகஸ்தான கோலத்தில் காட்சிதருகின்றார். திருவடிகளில் தண்டையும் சிலம்பும் அணிசெய்கின்றன.




தஞ்சைக்கலைக்கூடம்
காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு



ஷ தஞ்சைக்கலைக்கூடத்தின்
செப்புப் படிமங்கள் பகுதியில்
உள்ள வீணாதர தட்சிணாமூர்த்தி
- சோழகம்பேட்டை -
காலம் கி.பி.7-8ஆம் நூற்றாண்டு

கீழையூர் வீணாதரர்
தஞ்சைக்கலைக்கூடம்
சோழர்காலம்
கி.பி. 10ஆம் நூற்றாண்டு





வீணாதர தட்சிணாமூர்த்தியின் செப்புத் திருமேனி - சோழர்காலம் கி.பி.11ஆம் நூற்றாண்டு - இப்போது இச்சிலை பாரீஸ் ''மியூசி கிம்மே'', பொருட்காட்சி சாலையில் உள்ளது
(Vinadhara in Musee Guimmet - Paris)

பத்ரபீடத்தின் மேல் உள்ள பத்மத்தில் பெருமானின் திருவடி பதிந்துள்ளது. இடையில் உடுத்தியிருக்கின்ற ஆடையில் மணிகள் கோக்கப்பட்டது போன்ற வேலைப்பாடுடைய சுரோணிப்பட்டை உள்ளது. மார்பில் யக்ஞோபவீதம், ஸ்தனசூத்திரம் ஆகியவை விளங்க, உதரபந்தமும் பட்டையாகக் காட்சிதருகின்றது. கரங்கள் நான்கிலும் வீரகட்கம், காப்பு, தோள்வளை, பாகுமாலை முதலியன அணி செய்கின்றன. பின் இரு கரங்களில் மானும் (பாயும் நிலையில் உள்ளது), மழுவும் ஏந்தியிருக்க முன் இருகரங்களில் வீணையினை ஏந்திக் கொண்டு மீட்டும் பாவனையில் இத்திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. வலக்காதில் குழையும், இடக்காதில் காதோலையும் விளங்க, ஜடாமகுடம் தரித்து எழில் முகம் புன்முறுவலுடன் விளங்குதல், நம் கருத்தை எல்லாம் ஒரு நிமிடம் ஈர்க்கச் செய்கின்றது. ''ஏழிசையாய்'' உருக்கொண்ட இத்திருவுருவ அமைதி வியத்தற்குரியதாகும்.

புறம்பயம் - வீணாதரர்

இந்த வீணாதர மூர்த்தியின் திருவுருவம் தஞ்சாவூர் - அரண்மனை வளாகத்தில் உள்ள கலைக்கூடத்தில் இருக்கின்றது. இது கும்பகோணம் சுவாமிமலை கற்சாலையின் வடக்கில் (புளியஞ்சேரிக்கு வடக்கில்) 4 கி.மீ தொலைவில் உள்ள வரலாற்றுப் புகழ் மிக்க திருப்புறம்பயம் சிவாலயத்தைச் சார்ந்தது. இத்தலத்தில்தான் சிவனார் பல அறங்களை வகுத்தருளினார் என்பதனை மணிவாசகர் 'புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்' என்று திருவாசகத்தில் போற்றித் துதித்துள்ளார். இது ஐம்பொன்னால் ஆகிய அழகான சிற்ப வேலைப்பாடமைந்த திருவுரு ஆகும். இதன் உயரம் 79 செ.மீ. காலம் கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. (31 a - Vinadhara early chola 10th century A.D.Ht.79 cms Tiruppurambiyam Thanjavur Art Gallery, Thanjavur.)

பத்ரபீடத்தில் விளங்கும் இவர் திரிபங்கி நிலையில் நின்ற கோலத்தில் காட்சிதருகின்றார். பாதங்களில் சிலம்பு விளங்க அர்த்த வைதஸ்திக ஸ்தானமாக திருப்பாதங்கள் விளங்குகின்றன. பாதங்களின் இடைவெளி ஒரு சாண் அளவே இருப்பின் அது அர்த்த வைதஸ்திக ஸ்தானகம் என்று சொல்லப்படும் என்று யூகிக்க வேண்டியுள்ளது. இடையில் சுரோணிப்பட்டையுடன் அரைக்கச்சை அணிந்துள்ளார். தொடையின் வெளிப்பகுதியில் ஆகமங்களில் கூறியபடி வெள்ளாடை (உடலை ஒட்டியவாறு) காணப்படுகிறது. இடுப்பில் உதரபந்தமும், மார்பில் யக்ஞோபவீதத்துடன் கூடிய ஸ்தன சூத்திரமும், கழுத்தில் ஏகருத்திராட்சமும், கண்டாபரணமும், தோளில் பாதுதாமமும் விளங்குகின்றன. பின் இருகரங்களில் முறையே (கத்தரிஹஸ்தத்தில்) இடக்கரத்தில் மானும், வலக்கரத்தில் மழுவும் உள்ளன (பெரும்பாலும்) இடக்கரத்தில் மானும் வலக்கரத்தில் மழுவும் காணப்படும். இங்கு மாறாக அமைந்திருப்பது நோக்கத்தக்கது. இடப்பக்க முழங்கைகளின் இடுக்கில் சீறிப்படம் எடுத்துள்ள நாகம் காணப்படுகிறது.

முன் இருகரங்கள் வீணையை ஏந்தி நாத ஒலியினை மீட்டி உணர்த்துவனவாக அமைந்த நிலையில் உள்ளன. கரங்களில் இரண்டிரண்டு காப்புகள் உள்ளன. முன் வலக்கரத்தில் காப்பு அணிந்துள்ளார். நீண்டு தொங்குகின்ற காதுகளில் ஆபரணம் ஏதும் இல்லை. பெருமான் நெற்றிப் பட்டையுடன் கூடியதாக அமைந்த ஜடாமகுடத்தைக் கொண்டு சற்று மேல் நோக்கிய பார்வையுடன் ''இன்னும் பேரொலி மீட்டவோ? '' என்று கேட்பதுபோலக் காட்சிதருகின்றார். இசை வள்ளலின் இன்ப நாதத்தினை உணர நேரில் காண வேண்டுமே தவிர எழுத்தில் காட்டலாகாது.

மேலும் இவ்வாலய இராசகோபுரத்தின் வடபால் தனிக்கோயிலாக (திருக்குளம் முன்பு) தட்சிணாமூர்த்தி கோயில் உள்ளது. இது இவ்வாலயச்சிறப்பாகும்.

கீழையூர் - வீணாதரமூர்த்தி

இந்த வீணாதரதட்சிணாமூர்த்தியின் திருவுருவத்தினைத் தஞ்சைக் கலைக் கூடத்தில் காணலாம். இது மயிலாடுதுறை பூம்புகார்ச் சாலையில் (மயிலாடுதுறைக்குக் கிழக்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது) உள்ள கீழையூரைச் சார்ந்தது ஆகும். இத்திருவுருவத்தின் அமைப்பினைத் திரிபுராந்தக மூர்த்தி

என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். ★சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டு மலரில் இச்சிலையினை வீணாதர மூர்த்தியாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே இதனை வீணாதர குருமூர்த்தியாக எண்ண வேண்டியுள்ளது. ஐம்பொன்னாலாகிய இத்திருவுருவம் (76 செ.மீ. உயரம்) கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலத்ததாகும். (A very early image that should come close in Point of time to the seated siva at kilayur. Vinadharar Early chola 10th. century A.D.Ht.76cms. Kilayur Thanjavur District. Thanjavur Art Gallery Thanjavur)

இக்குருமூர்த்தியின் அழகிய திருமுகத்திற்கு ஜடாமகுடம் எடுப்பாக அமைந்துள்ளது. ஜடாமகுடத்தில் பிறைச் சந்திரனும் பாம்பும் மிளிர்கின்றன. இவரது காதுகளில் குழையும், காதோலையும் விளங்குகின்றன. பின் இருகரங்களில் வலக்கரத்தில் மான் உள்ளது. (மானுக்கும் தோளுக்கும் 'தாங்கி' ஒன்று உறுதியாக அமைக்கப்பட்டுள்ளது) பின் இடக்கரத்தில் உள்ள மழு பின்னப்பட்டு கத்தரி ஹஸ்தமாக உள்ளது. முன் இரு கரங்களும் வீணையினை ஏந்தி மீட்டுகின்ற பாவனையில் அமைந்துள்ளன. மார்பில் யக்ஞோபவீதம் (வெண்மையான பூணூல்) உரஸ் சூத்திரம், ஸ்தனசூத்திரம், பூணூல் முடிச்சு ஆகியவையும் இடுப்பில் உதரபந்தமும், முழங்காலுக்கு மேற்பகுதியின் தொடைப் பகுதியில் வஸ்திரம் ஸ்ரோணிப்பட்டை ஆகியவையும் அமைந்துள்ளன. புஜங்களில் தோள்வளைகளும், முன்வலக்கரத்தில் உருண்டைவடிவிலான காப்பு ஒன்றும் விளங்குகின்றன. ஏனைய கரங்களில் மணிக் கட்டுப் பகுதியில் காப்புகளும் உள்ளன. வட்டமான தளத்தில் சிலம்பு அணிந்த கால்களில் வலக்காலை நன்றாக ஊன்றி, இடக்காலைச் சற்று முன்நோக்கி வைத்துள்ளமையால் ''வைசாக ஸ்தானமாக'' இத்திருவுருவம் அமைந்துள்ளது. தொடைப்பகுதியின் ஆடையில் வரிவரியாக (டிசைன்) சித்தரிக்கப்பட்டுள்ளது. பெருமான் கழுத்தில் ருத்திராக்ஷமாலையுடன், இசைவடிவாய், நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார்.

பல்லவர்காலத்து அரிய தட்சிணாமூர்த்தி சிற்பம்

(மழுகொண்ட சுகாசன அபய தட்சிணாமூர்த்தி).



தஞ்சை மாவட்டம் சுவாமிமலை அருகே பல்லவர் கால தட்சிணாமூர்த்தி சிற்பம் காணப்பட்டுள்ளது. திருவையாறு - கும்பகோணம் சாலையில் சுவாமிமலை அருகே தியாகசமுத்திரம் எனும் ஊரில் உள்ள சோழர் காலஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் இதுவரை படி எடுக்கப்பெறாத மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு ஒன்றும் கண்டறியப்பட்டது. அந்நாளில் கண்டியூர், வீரசிங்கம்பேட்டை பகுதி கி.பி.8,9 ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர்களின் சோழ மண்டலத் தலைநகரமாக விளங்கியது. இங்கு பாசுபதர்கள் செல்வாக்கு அதிகமிருந்ததால், அவர்கள் பல அரிய சிவபெருமான் திருவுருவங்களைச் சிற்பமாகப் படைத்து வழிபட்டனர். வாகீசர் எனும் நான்கு தலை உடைய சிவபெருமான் சிற்பங்கள் பல இப்பகுதியில் மட்டும் காணப்படுகின்றன.

தியாகசமுத்திரம் கோயிலில் உள்ள பல்லவர் காலச் சிற்பம் தட்சிணாமூர்த்தி வடிவமாகும். ஒரு காதில் பத்ர குண்டலம், மறு காதில் மகரக்குழை தரித்து ஜடாபாரம் எனும் தலை அலங்காரத்துடன் சுகாசன மூர்த்தியாக இச்சிற்பம் காணப்படுகிறது.

மேல் இரு கரங்களில் மழுவும், மாலையும் உள்ளன. வலது கீழ்

★ *1968 - உலகத்தமிழ் மாநாட்டு மலரில் படிமக்கலை பகுதியில் - தஞ்சை மாவட்டம் கீழையூரில் கிடைத்த வீணாதரர் செப்புத் திருமேனி - சோழர்காலம் 10ஆம் நூற்றாண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

கரம் அபயம் காட்ட, இடது கீழ்க்கரம் சுவடி ஏந்தியுள்ளது. இதே கோயிலில் 12 கரங்களுடன் மயில் மீது அமர்ந்த ஞானமூர்த்தியாகிய முருகன் அழகான சோழர்கால சிற்பமைதியுடன் காணப்படுகிறது. சோழ நாட்டில் பல சிவாலயங்களில் பல்லவர் கால சிவ வடிவங்கள் பல உள்ளன. தியாகசமுத்திரத்தில் சிவபெருமானை சண்டேசுவரர் என்றும் திருவாரூர் மாவட்டம் செதலபதி கோயிலில் இதே தட்சிணாமூர்த்தி வடிவை ஆதி கணபதி என்றும் மக்கள் இன்றும் வழிபடுகின்றனர். வழிபடும் அன்பர்கள் பெரியோர்களைக் கேட்டு வழிபடின் மேலும் பல பலன்கள் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

- நன்றி: தினமணி 21.11.2003 நாளிதழ்

தஞ்சைக்கலைக்கூடத்தில் யோகதட்சிணாமூர்த்தி

யோக தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் ஒன்று தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள அருங்காட்சியகத்தில் காணப்படுகிறது. இதன் உயரம் 3 அடி ஆகும். இச்சிலையின் வேலைப்பாடு முற்றும், முற்றுப்பெறாத நிலையில் காணப்படுகிறது. இப்பெருமானின் யோக நிலையினைக் காணும் போது இவர் ஸ்வஸ்திகாசன நிலையில் அமர்ந்து, தமது முன் இருகரங்களை முழங்கால் முட்டியின் மீது அமைத்து, கீழ்நோக்கித் தொங்கவிட்டபடி உள்ளார் என்பது தெரியவருகிறது. பின் இருகரங்களில் முறையே மான், மழு காட்சியளிக்கின்றன. இவரது ஜடைகள் எல்லாம் வட்டவடிவாக விளங்கும் ஜடாமண்டலம் போல் உள்ளது. கழுத்தில் ஏகருத்திராட்ச மாலையும், மார்பில் யக்ஞோப வீதமும் எடுப்பாகக் காணப்படுகின்றன. யோக நிலையில் உடலை நிமிர்த்தியவாறும், தமது பார்வையானது மூக்கின் நுனியைப் பார்த்தவாறும் அமையப்பெற்றுள்ளது இச்சிலையின் வடிவமைப்பு. இது கற்பலகையின் புடைப்புச் சிற்பமாக உள்ளது. இதுவும் சோழர் காலத்துப் படைப்பில் ஒன்று என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

தஞ்சாவூர் - மராட்டா தர்பார்ஹாலில் வீணாதரர்

இந்த வீணாதர மூர்த்தியின் சிற்பம் தஞ்சாவூர் அரண்மனையாகிய மராட்டா தர்பார் ஹாலின் புல்வெளியில் உள்ளது. இதன் உயரம் 86செ.மீ. அகலம் 42 செ.மீ அளவு உள்ளதாக அமையப்பெற்றுள்ளது. மேலும் அமர்ந்த கோலத்தில் இரண்டு தட்சிணாமூர்த்தி சிலைகளும் அங்கு காணப்படுகின்றன. இப்பகுதியில் விளங்கும் சிலைகள் எல்லாம் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் சேகரிக்கப்பட்டதாகும். இவரது கேசங்கள் சுருள் சுருளாக அமைந்தும் அவைகள் எல்லாம் ஜடாமண்டல அமைப்பை உடையதாகவும் விளங்குகின்றது. வலக்காதில் காதோலையும் இடக்காதில் குழையும் காணப்படுவது நோக்கத்தக்கது. பின்கரங்கள் சிதைந்து காணப்பட்டாலும் சுருடம், சர்ப்பமும் இருந்த அமைப்பு தென்படுகிறது. முன் இருகைகளும் வீணை ஏந்தி மீட்டும் பாவனையாக இருந்தாலும் இக்கரங்களும் பின்னமாகியுள்ளன. கரங்களில் காப்புகள் உள்ளன. கழுத்தில் உருத்திராக்க மணியும், கண்டாபரணமும், மார்பில் யக்ஞோபவீதமாக முப்புரிநூலும், இடுப்பில் சுரோணிப்பட்டையுடன் கூடிய வஸ்திரக்கட்டும் அமையப் பெற்றுள்ளது. தமது இடுப்பினைச்சற்று வளைத்து, திருமுகத்தை கீழ்நோக்கியபடி வைத்துத் தாம் இசைக்கும் வீணாநாத ஒலியினைக் கூர்ந்து கேட்கின்ற நிலையில் இச்சிலைவடிக்கப் பெற்றுள்ளது. இச்சிலையின் முழங்கால் பாதியளவு பூமியில் புதைக்கப்பட்டுள்ளது. வெளிப்பார்வைக்கு வைதஸ்திக ஸ்தானமாக காணப்பட்டாலும் இவரது வலக்கால் சற்று தள்ளி உள்ளது. ''முற்கூறிய வைதஸ்திக ஸ்தானகத்தில் வலக்கால் மட்டும் முன்போல் ஒருசாண் அளவு இடைவெளியுள்ளதாக அகலவிரித்து, இடக்கால் இருந்த நிலையிலேயே அமைந்து நிற்கும் நிலைக்கு அர்த்த வைதஸ்திக ஸ்தானகம் என்று பெயர்.

இத்தகைய அர்த்தவைதஸ்திக ஸ்தானக நிலையில் நின்று நம் கண்களைக்கவரும் இச்சிலையின் வடிவமைப்பைக் காணும்போது சோழர்களின் கலை அம்சத்தை அப்படியே தெள்ளத்தெளிவாகக் காணமுடிகிறது. இது தஞ்சை அரண்மனைக்குச் செல்வோர் காண வேண்டிய ஓர் அரிய சிற்பமாகும்.

குவாலியர் கண்காட்சி சாலையில் வரதஹஸ்த - வீணாதரமூர்த்தி

இப்பெருமானானவர் அமர்ந்திருக்கும் ரிஷபத்தின் மீது சுகாசனமாக எழுந்தருளியுள்ளார். பின் இடக்கரத்தில் வீணையினைக் குத்திட்டாக வைத்து வாசிக்கும் பாவனையைக் கொண்டுள்ளார். சிரசில் உள்ள சிகை உரோமபந்தியாக வாரிவிட்டது போல் அழகுடன் விளங்குகிறது. அழகிய முகமும் கீழ் நோக்கிய சாந்தம் தவழும் கண்களும் குவிந்த அழகிய உதடுகளும் அழகாகத் தோற்றமளிக்கின்றன. கழுத்திலும் மார்பிலும் மிகச்சிறிய அளவினதான உருத்திராக்க மணிகளும், வில்வாபரணமும், திகழ்கின்றன. கரங்களில் ஒற்றை வடமாகவுள்ள உருத்திராக்க மணிகளால் கோக்கப் பெற்ற காப்புகளும் விளங்குகின்றன. முப்புரிநூலில் மணிகள் கோத்தது போன்று காணப்படுகிறது. பின் வலக்கரம் சிதைந்துள்ளது. இம்மூர்த்தியானவர் வலக்கரத்தால் சின்முத்திரை காட்டாது, வரதஹஸ்தமாகக் காட்டி வீரக்கழல் அணிந்த தனது இடப்பாதத்தைக் காட்டுகின்றார்.

இது எதனை உணர்த்துகின்றது என்றால் உலகத்து உயிர்கள் அனைத்தும் இறுதியில் இத்திருவடியினை வந்து அடைகின்றன என்பதையும், மீண்டும் வீணையின் நாதஒலியினால் தோன்றுகின்றன என்பதையும் உணர்த்துகின்றது. ''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'' என்ற அப்பர் திருவாக்கு இங்கு நினைவு கூறத்தக்கது.

இவரது முன் இடக்கரத்தில் அமிர்தகும்பம் விளங்குகிறது. இது மலநீக்கமும் திருவடி அடைதலாகிய சிவப்பேறும் ஆகிய பயன் இரண்டும் வாய்ப்பதற்குச் சாதனம், சிவஞானம் என்பதை உணர்த்துகின்றது. இத்தகு அழகிய சிற்பம் மத்திய பிரதேசத்தில் உள்ள குவாலியர் கண்காட்சி சாலையில் உள்ளது. ஆராய்ச்சியாளர்கள் இதனை 11-ஆம் நூற்றாண்டுச் சிற்பமாகக் கருதுகின்றனர். இதன் உயரம் 97.7.செ.மீ அளவாக உள்ளது.

கணித சாத்திரத்தில் வீணாதர தட்சிணாமூர்த்தி

சிவபெருமானை - அறிவியல் - நுண்கலைகளின் தலைவுனாக வீணாதர தட்சிணாமூர்த்தியாகச் சித்தரிக்கும் இந்த வெண்கலச் சிலை சோழர் காலத்து 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. குறியீடுகளின்படி ''ருத்ரஸ்யா'' (சிவபிரானின் ஐம்முகங்கள்) என்ற சமஸ்கிருதச் சொல், இலக்கம் ஐந்தினைக் குறிக்கும்.

கி.பி.8ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் சமஸ்கிருத கணித நூல்களை அரபு அறிஞர்கள் ஆராய்ந்து இரு உண்மைகளைக் கண்டனர். 1. சுன்னக்(0) குறியுடன் சேர்த்து தசம முறையைப் பயன்படுத்தும் இட மதிப்பு எண் குறியீட்டு முறை ; 2. நிமிர் வீதங்கள் (Sines) அடங்கிய ஒரு திரிகோண மிதி. வடமொழியில் எழுதப்பட்ட கணித நூல்கள் செய்யுள் வடிவில் மாணாக்கன் மனப்பாடம் செய்யத்தக்கக எளிய முறையில் இயற்றப்பட்டன. கணிதச் செய்யுளுக்கு விளக்கம் தர உரை நூல்கள் பல எழுதப்பட்டன.

எண்கள் செங்குத்தாகப் பலவரிகளில் எழுதப்பட்டன. ''ஆரியா பாட்டியா'' குறித்து கி.பி.629ல் ''மூத்த பாஸ்கரர்'' எழுதிய விளக்க உரையிலிருந்து எண்களை எழுதும் முறைபற்றி அறியமுடிகிறது. இவை அனைத்தும் கணிதத்தைத் தெளிவாக அறிவுதற்குத் துணை செய்யவில்லை. காரணம் ஓலைச்சுவடிகள் பெரும்பாலும் அழிந்து விட்டன.

ஆனால் மிகப்பழைய ஆவணம் எனக் கருதப்படும் 12 -ஆம் நூற்றாண்டு ''பக்ஷாலி'' எழுத்துப் படியில் வடமொழியில் எழுதப்பட்ட ஒரு கணித நூலின் உடற்பகுதியில் கட்டங்களுக்குள் பல வரிகளில் அரபு எண் குறியீடுகள் காணப்படுகின்றன. இந்தக் குறியீடுகள், இலக்கண அல்லது சொல்லணித் தன்மையனவாக உள்ளன. அதில் இலக்கியச் சொற்றொடர்களாலும் உருவகங்களாலும் குழூஉக் குறிகளாலும் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆகாயம் என்றால் சூனியம் என்று பொருள் இச்சூனியத்தை ''0'' (சைபர்) என்ற வடிவம் குறிக்கிறது.

இவ்வாறாக ''நயனம்'' என்றால் கண் என்று பொருள் ''பாகு'' என்றால் சுரம் என்று பொருள். இவை இரண்டு என்ற எண்ணைக் குறிப்பனவாகும்.

அக்னி என்றால் தீ என்று பொருள். இந்தத்தீ ஆகவனீயம், காருக பத்தியம், தட்சிணாக்கினீயம் என மூவகைப்படும் எனவே அக்னி என்பது மூன்று என்ற எண்ணைக் குறிக்கும்.

அத்தரி என்ற சொல் மலையைக் குறிக்கும். இது இந்து சமயத்தில் ஏழுமலைகளைக் குறிக்கும். எனவே அத்திரி என்பது ஏழு என்ற எண்ணைக்குறிக்கும். இதன்படி ''அக்னி நயனம்'' என்றால் 21 என்ற எண்ணைக் குறிக்கும். இவ்வாறாக எண்மானக் குறியீடுகள் அக்கால வழக்கில் இருந்திருக்கின்றன.

சிலை அமைப்பு:

★நுண்கலைகளின் தலைவனாக விளங்கும் வீணாதர தட்சிணாமூர்த்தியின் கேசங்களே ஜடாம குடமாகப் பத்ரபூரிமத்துடன் விளங்குகின்றன. நெற்றிப் பட்டையும், நெற்றிக் கண்ணும் விளங்க சற்று மேல்நோக்கிய பார்வையாக அமைந்து காணப்படுகின்றது. மார்பில் பிரம்ம முடிச்சுடன் கூடிய முப்புரி நூலும், ஸ்தன சூத்திரமும், உரஸ்சூத்திரமும், இடுப்பில் உதரபந்தமும் காணப்படுகின்றன. மேலும் கழுத்தில் கண்டிகையும் சரப்பளியும், ஏக ருத்ராட்சமும், கணடாபரணமும் விளங்குகின்றன. கால்களில் சிலம்பும் விளங்குகிறது. தாமரை மலரில் தனது இடக்காலை சற்று வளைத்து நின்ற கோலத்தில் முன் இருகரங்களில் வீணையை ஏந்திநிற்கும் பாவனையில் காட்சியளிக்கின்றார். பின் இருகரங்களில் இடப்பக்கம் மானும், வலப்பக்கம் மழுவும் காணப்படாமலும் (மழு சிதிலமாகியுள்ளது) வலப்பக்கம் தலையானது சற்று சாய்ந்தவாறு காட்சி தருகின்றார். காப்புகள் கரங்களில் தவழுகின்றன. இடையில் அடைப்பட்டிகையும், தாரகைச் சும்மையும் அணிந்து வாழ்க்கை என்னும் கணக்கின், உருவமாக காட்சி தந்தருளுகின்றார்.

ஞான தட்சிணாமூர்த்தி

இந்த ஞான தட்சிணாமூர்த்தி ஜடாபாரத்துடன் காணப்படுகின்றார். புன்னகை தவழும் சாந்தமுகமும் உதரபந்தமும் விளங்க வீராசனத்தில் வீற்றிருக்கின்றார். மார்பில் உரஸ்ஸூத்திரமும், ஸ்தனஸூத்திரமும் இவற்றின் கீழ் உதரபந்தமும் தெளிவாகக் காணப்படுகின்றன. கரங்களிலும் புஜங் களிலும் இரட்டைவட ருத்திராட்ச மணிகள் அணியப் பெற்றுள்ளன. இப் பெருமானின் இடுப்பி லிருந்து பாதம் வரை வஸ்திர அமைப்பு காணப்படுவது குறிப்பிடத் தக்கது. வீரக் கழல் அணிந்த வலப்பாதம் முயலகன் மீது பதிந்துள்ளது. இடப்பாதப் படம் மேல் நோக்கியவாறு வலத் தொடை மீது வைக்கப் பெற்றுள்ளது. பின் வலக்கரத் தில் நாகமும், பின்இடக்கரத்தில் தீச்சுடரும் விளங்குகின்றன. முன் இடக்கரம் சுவடி ஏந்தியும் முன் வலக்கரம் ஞான முத்திரை காட்டியும் விளங்குகின்றன. முனிவர்களின் திருவுருவங்கள் வெவ்வேறு விதமான மோனநிலையில் அமைந்துள்ளன. இந்தச் செப்பு விக்ரகம் 14 அல்லது 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததென வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். தற்போது (இதன் உயரம் 14.3 செ.மீ) அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சலஸ் மாநிலக் கண்காட்சி சாலையில் உள்ளது.



ஆதாரம் : ★ (யுனெஸ்கோ கூரியர் ஜனவரி 1990 - பக்கம் 19-20) Vinadhara - early chola - IIth century A.D Guimet - Paris,



வீணாதர தக்ஷிணாமூர்த்தி - தஞ்சைப்பெரியகோயில்
தற்போது கலைக்கூடத்தில் இருக்கிறது - திரிபுராந்தருக்கும்,
வீணாதர தக்ஷிணாமூர்த்திக்கும் ஒரேயொரு வித்தியாசம் தான் - வீணை
யேந்தும் கையையும் வில்லேந்தும் கையையும் (இடக்கையைத்தான்)
கூர்ந்து கவனித்துத் தெரிந்து கொள்ளவேணும்.

சித்திரம் மற்றும் சிற்பங்களுக்கு உரிய வர்ணங்கள் தீட்டும் முறை (வர்ண லேபனம்)

சுதை மற்றும் மூர்த்திகளுக்குரிய வர்ணங்கள் பற்றி கூறப்படுகிறது இப்பகுதி. பீதவர்ணமான கல்லானது பீதம் எனப்படும் (மஞ்சள் நிறம்) அந்த மஞ்சள் நிறமான கல்லை நன்கு பொடி செய்து அதில் இளநீர் விட்டு பிசைந்து, அதை நெருப்பிலிட (புடம் வைக்க) அது சிகப்பு நிறமாகும் அதுவே சிகப்பாக செய்யும் ஸுதாகர்மாக்கு உரியதாகும். சங்கைச்சுட்டால் அது வெளுப்பு நிறமாகும். இராஜாவர்த்தம், சியாமம் என்ற இருவிதக் கற்களும் ஸுதாகர்மாவுக்கு சிறந்தவைகளாகும். மற்ற நிறங்கள் சுதாகர்மாவுக்கு கூடாதவைகளாகும்.

இனி ஸமஸ்க்கார வர்ணங்களைக் (ஒரு வர்ணத்துடன் மற்ற வர்ணத்தை கலப்பதனால் உண்டாகும்) கூறுகிறேன்.

வெளுப்பு - சிகப்பு இரண்டு வர்ணங்களையும் சமமாக கலந்தால் அது ''கௌர'' வர்ணமாகும்.

வெளுப்பு - மஞ்சள் இரண்டையும் சமமாக கலந்தால் ''கர்புரவர்ணம்'' ஆகும்.

வெளுப்பு - கறுப்பு இரண்டையும் சமமாக கலந்தால் அது ''தூம்ரவர்ணம்'' ஆகும்.

வெளுப்பு - கறுப்பு - மஞ்சள் இம்மூன்றையும் சமமாக கலந்தால் ''ஸாரவர்ணம்'' ஆகும்.

வெளுப்பு - சிகப்பு - மஞ்சள் இவைகளைக் கலந்தால் அது ''மிஸ்ரவர்ணம்'' ஆகும்.

சிகப்பு - மஞ்சள் இவ்விரண்டையும் சமமாக கலந்தால் ''வகுளபவ (மிகழம்பழ)'' வர்ணமாகும்.

மஞ்சள் 1 பங்கும் - சிகப்பு 2 பங்கும் சேர்ந்து கலந்தால் அது ''அதிரக்த வர்ணம் (அதிசிகப்பு)'' ஆகும். இது ''ஜவல நச்கவி'' என்றும் அக்னி வர்ணம் என்றும் கூறப்படும். இரண்டு வர்ணங்களையும் சமமாக கலப்பதினால் உண்டாகும் வர்ணமானது இவ்விதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

சிகப்பு 1 பங்கு விஷம் (கருப்பு) 2 பங்கு சேர்த்தால் அது ''குளவர்ணம்'' ஆகும். (குளம் - வெல்லம்)

மஞ்சள் 1 பங்கும் - சிகப்பு 1 / 2 பங்கும் கலந்தால், அது கபில வர்ணமாகும்.

வெளுப்பு 1 பங்கும் சிகப்பு 1/4 பங்கும் கலந்தால் அது கர்புர வர்ணமாகும். (கர்புரம் - கர்புரதுத்தம்). அதுவே நீலம் அதிகமாக சேர்க்கப்பட்டால் அது தாநியாங்குர (பயிர்முளை) வர்ணமாகும்.

பச்சையில் சரிபாதி அரிதாரம், அதில் சரிபாதி குங்குஷ்டம் (குங்குமம்) கலந்தால், அது பயிர் பச்சை வர்ணமாகும்.


கருப்பும் லாக்ஷாரமும் சமமாக கலந்தால் அது ஜம்பூபல (நாவல்பழ) வர்ணமாகும்.

ஜாதிபலமும் (ஜாதிலிங்கமும்) லாக்ஷாரமும் சமமாகக் கலந்தால் அது லோஹிதவர்ணமாகும்.

ஆதாரம் - ஆலய நிர்மாண பிம்பலக்ஷண சிற்பநூல் - திரு.எம்.முத்தையா ஸ்தபதி - இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை சென்னை. பக்கம் 254 - 258.



ஸ்ரீ தட்சிணாமூர்த்தி - தக்கோலம்
ஸ்ரீஜலநாதேஸ்வரர் திருக்கோயில்
(வண்ண வரைகோட்டுப்படம்)



நாகைமாவட்டம் கீழ்வேளூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள தேவூர் ஸ்ரீ தேவபுரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள தேவகுருவாகிய தட்சிணாமூர்த்தி. காலடியில் முயலகன் (அபஸ்மாரன்) இல்லை. கி.பி.4ஆம் நூற்றாண்டு கோட்செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயிலாகும். விபூதி அலங்காரம் முகத்தில்.

கருப்பும் நீலமும் சமமாகக் கலந்தால் கேசவர்ணமாகும்.

பயிர்பச்சையும் சிவப்பும் கலந்தால் அது மாஞ்சிஷ்ட (மஞ்சிட்டை) வர்ணமாகும்.

கருப்பும் மஞ்சளும் சமமாக கலந்தால், அது ''மது வர்ணம்'' (தேன்) வர்ணமாகும்.

கருப்பும் அதற்கு இரண்டு பங்கு மஞ்சளும் கலந்தால் அது ''மாநுஷ''(மனித) வர்ணமாகும்.

மனித வர்ணத்துடன் சிகப்பு சேர்க்கப்பட்டால், அது ''ஹரித'' (மஞ்சள்) வர்ணமாகும்.

இந்த வர்ணங்களில் குறைந்த அளவுடன் அதிக அளவைக் கலந்தால் அது ''பஹுஸாரம்'' எனப்படும். அதிக அளவுடன் குறைந்த அளவைக் கலந்தால் அது அல்பசாரம் எனப்படும் (இது ஸூதாகர்மாவுக்கு உரியதாகும்) வர்ணங்களுக்கு அனுகூலமான வர்ணத்தை கல்பித்துக் கொள்வதற்காக ஸாரவர்ணமானது கூறப்பட்டிருக்கிறது.

கருப்பு 1 பங்கும் சிகப்பு 2 பங்கும் கலந்தால் அது காஷாய வர்ணமாகும்.

வெளுப்பு 1 பங்கும் மஞ்சள் 2 பங்கும் கலந்தால் அது ''பிங்கள'' வர்ணமாகும்.

வெளுப்பு 1 பங்கும் மஞ்சள் 2 பங்கும் சேரத்தால் அது கல்ஹார (செங்கழுநீர்ப்பூ) வர்ணமாகும்.

கருப்பு 1 பங்கும் மஞ்சள் 2 பங்கும் சேர்த்தால் அது ஜலவர்ணமாகும். அதுவே மனித வர்ணமாகும்.

கருப்பும் மஞ்சளும் சமமாகக் கலந்தால் அது மானுஷ வர்ணமாகும்.

அரிதாரமும் - கருப்பும் சமமாகக் கலந்தால் அது கிளிப்பச்சை நிறமாகும். அதில் மஞ்சள் அதிகமாக (2 பங்கு) கலந்தால் அது தானியாங்குர (பயிர்முனை) வர்ணமாகும்.

கருப்பும் அதில் 1/4 பங்கு அரிதாரமும் (மஞ்சளும்) 1/4 பங்கு குங்குமமும் (சிகப்பும்) கலந்தால் அது பயிர் பச்சை நிறமாகும்.

கருப்பும் லாக்ஷாரமும் சமமாக கலந்தால் அது ஜம்புபழ (நாவல்பழம்) வர்ணமாகும்.

ஜாதிலிங்கமும் லாக்ஷாரமும் சமமாக கலந்தால் அது லோஹித வர்ணமாகும். லோஹித வர்ணத்தில் சிகப்பு அதிகமாக கலந்தால் அது ரூக்ஷஹரீதக வர்ணம் ஆகும்.

கருப்பும் நீலமும் சமமாகக் கலந்தால் அது கேசமர்ய வர்ணமாகும்.

வஸ்ய சியாமமும் (பயிர் பச்சையும்) குறைந்த அளவில் சிவப்பும் (சிவப்பு சமமாக) கலந்தால் அது மாஞ்சிஷ்ட (மஞ்சிட்டை) வர்ணமாகும்.

கருப்பும் சிகப்பும் சமமாகக் கலந்தால் அது ''மது'' (தேன்) வர்ணமாகும். அந்த வர்ணமே சிகப்பு (மஞ்சள்) அதிகமாக சேர்க்கப்பட்டால் அதுவும் மானுஷ வர்ணமாகும். அந்த வர்ணத்துடன் சிகப்பு அதிகமாக சேர்க்கப்பட்டால் அது ''ருக்ஷஹரீதக'' வர்ணமாகும். அந்த வர்ணத்துடன் பச்சை அதிகமாக சேர்க்கப்பட்டால் அது (ஸூத்ர) தூமிர, கிளி வர்ணமாகும்.

வர்ணங்களுக்கு ஒற்றுமையாக இருப்பதை உத்தேசித்து ஸாரவர்ணமானது கூறப்பட்டிருக்கிறது.

வர்ணயுக்தி பிரகரணத்தில் வேறு நூல்களில் அதிகமாக சில வர்ணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவை உபயோகரமானவைகளாதலால் அவைகளும் இங்கு சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மஞ்சள் - வெளுப்பு - சிகப்பு இவைகளைச் சமமாக கலந்தால் அது ஸாரவர்ணம்'' ஆகும்.

வெளுப்பு - கருப்பு - மஞ்சள் இவைகளைச் சமமாக கலந்தால் அது ''மிஸ்ர'' வர்ணமாகும்.

கருப்பு 1 பங்கும் சிகப்பு 2 பங்கும் கலந்தால் அது கஷாய வர்ணமாகும்.

கருந்நும் மஞ்சளும் சமமாகக் கலந்தால் அது திருண வர்ணமாகும்.

மஞ்சள் - சியாமம் (பச்சை) இவைகளைச் சமமாகக் கலந்தால் அது கிளியின் சிறகு போன்ற

வர்ணமாகும். அதுவே தாலம் (மஞ்சள்) அதிகமாகச் சேர்க்கப்பட்டால் தானியாங்குர (பயிர்முனை) வர்ணமாகும்.


கருப்பையும் சிகப்பையும் சமமாகக் கலந்தால் அது மாஞ்சிஷ்ட (மாஞ்சிட்டை) வர்ணமாகும். அந்த வர்ணத்தில் சிகப்பை அதிகமாகக் கலந்தால் அது மானுஷ வர்ணமாகும். மானுஷ வர்ணத்தில் சிகப்பை அதிகமாகக் கலந்தால் அது ருக்ஷ வர்ணமாகும். ருக்ஷ அருவறுக்கக் கூடியது. இதைக் காட்டிலும் பச்சை அல்லது கருப்பு அதிகமான வர்ணமானது கூறப்படவில்லை. வர்ணங்களில் அதிகமாக திரவியங்களைச் சேர்த்தால் அது ''பஹுசாரம்'' எனப்படும். ஸவல்பமாகச் சேர்த்தால் ஸவல்பசாரம் எனப்படும்.

வர்ணலேபனம்

வர்ண பூச்சு ஆனது சிலாகர்பம், இஷ்ட்டகாகர்பம், தாரு கர்பம் என மூன்று விதம் ஆகும்.

★ வர்ணலேபனம் செய்யவேண்டிய பிம்பமானது சிலாமயமாக இருந்தால் அதன் மஹா அங்கம் முதலியவைகள் சிலாமயமாக இருக்க வேண்டும். அதற்கு மேலே படாச் சாதனம் செய்து துணியைப் போத்தி அதற்கு மேலே சர்க்கரா லேபனம் (சுக்கான் சுண்ணாம்பு) செய்யவேணும். அதற்கு மேலே சிக்கனம் பூசி அதற்கு மேலே வெள்ளை முதலிய வர்ணங்களைப் பூச வேண்டும். அதற்குப் பிறகு அந்த பிம்பத்திற்குத் தக்க வர்ணத்தை பூசி மூர்த்தியை நன்கு பிரதிஷ்டை செய்யவேணும். பிம்பமானது சுதையாக இருந்தால் அதன் மீது படாச்சாதனம் செய்யாமல் 1 யவை அளவு சுண்ணாம்பு பூசி அதன்மேல் சிக்கன லேபனம் செய்து வெள்ளைபூசி அதற்குமேலே பிம்பத்திற்குரிய வண்ணத்தை பூச வேண்டும்.

பிம்பமானது தாருவாக இருந்தால் சூலஸ்தயனம் முதலிய எல்லாவற்றையும் முன்பு கூறியது போல செய்து வர்ணம் பூசவேணும். வர்ணத்துடன் விலாம்பிசினைக் கலந்து கொள்ளல் வேணும்.



★ இம்முறையில் தஞ்சாவூர், தாராசுரம், திருபுவனம், கங்கைகொண்ட சோழபுரம் முதலான கோயில்களில் உள்ள வெளிப்பிம்பங்களுக்கு வண்ணம் செய்யப்பட்டுள்ளது.

ஆதீனத்தின் ஆளுகையில் உள்ள திருவீழிமிழலை, நல்லூர் ஆகிய மூலஸ்தான மூர்த்திகள் மேற்சொன்னவாறு அமைந்துள்ளன. (மூல லிங்கத்தின் பின்னால் உள்ள சிலைகள்)

ஓவியங்களில் தட்சிணாமூர்த்தி

பண்டைய ஓவியம்:

இந்தியாவில் சிற்பத்தைப் போலவே ஓவியத்தையும் ஒரு கலையாக மக்கள் போற்றி வளர்த்தனர். மக்கள் இதனை ''விநோத ஸ்தானங்'' களுள் ஒன்றாக எண்ணினார்கள். அரசர்கள், பிரபுக்கள், மக்கள் ஆகியோர் ஓவியம் போன்ற பல கலைகளையும் பயின்றிருந்தார்கள். ஆடல், இசை, ஓவியம், சிற்பம் ஆகியவை அழகுக்கலைகளில் மிக முக்கியமானவைகளாகக் கருதப்பட்டன. மக்கள் ஓவியரை அவருடைய கலைக்காகப் பெரிதும் மதித்து வந்தார்கள். மக்களுடைய ஆதரவை மிகுதியாகப் பெற்ற சில சித்திரச்சாலைகள் இருந்தனவென்று இலக்கியங்களால் தெரிகிறது. அவற்றுள் சில அரண்மனையில் இருந்தன. பொதுமக்களுக்குப் பயன்படும் சித்திரச்சாலைகள் பொது மன்றங்களில் இருந்தன. சில சித்திரச் சாலைகள் வண்டிகளில் வைத்து ஊர் ஊராகக் கொண்டு போகப்பட்டன.

ஓவியங்களின் வகைகள்:



கட்டடக்கலையை அழகுபடுத்துவதற்காகச் சிற்பம் பயன்பட்டது போலவே ஓவியமும் பயன்பட்டது. ஓவியங்களுள் பெரும் பாலானவை கோயில்களிலும், குகை களிலும், அரண்மனைகளிலும் பின்னர் மடாலயங் களிலும் காணப்படுகின்றன. ஆதியில் சிற்பங் களின் மீது வர்ணம் தீட்டியிருந்தார்கள். தற் போது இயற்கையின் அழிவால் புறத்தே இருந்த நிறம் அழிந்துபோய் சுவர்கள், தூண்கள், கூரைகள் முதலானவைகளில் தீட்டப்பெற்ற ஓவியங்களை மட்டும், இன்று நாம் காண் கிறோம். இத்தகைய ஓவியங்களைத் தான் நாம் அஜந்தா, பாக் பாதாமி, சித்தன்ன வாசல், எல்லோரா முதலான குகைகளிலும், திருக் குற்றாலம், காஞ்சிபுரம், தஞ்சாவூர், திரு வஞ்சைக்களம், திருவீழிமிழலை, கும்பகோணம், திருப்பெருந்துறை, திருவையாறு, சிதம்பரம், லேபாட்சி, தாடலத்திரி போன்ற மிகப்பிரசித்திப்பெற்ற திருக்கோயில்களிலும் ஓவியங்களின் சிறப்பைக் காண்கிறோம்.

ஓவியங்கள் சுவர்களில் மட்டுமே தீட்டப்பெற்றன என்பதில்லை. சித்திரப்படம் என்னும் சொற்றொடர் ஓவியங்கள் சீலையின் மீது தீட்டப்பெற்றன என்பதைக் காட்டுகிறது. பெரும்பாலும் ஓவியத்தைச் சீலையில் எழுதிக் கவனமாகச் சுருளாகச் சுருட்டி வைத்துக் கொள்வதும் (திருவாவடுதுறை ஆதீனக் கொலு மண்டபத்தில் இத்தகைய ஓவியத்தைக் காணலாம்) வேண்டியபோது விரித்துப் பார்த்துக் கொள்வதும் வழக்கமாகும். சில வேளைகளில் இத்தகைய ஓவியங்களின் மீது சிறு சீட்டுகள் தீட்டிவைப்பர். சிபிஜாதகக் கதையிலுள்ள சிபியைத் தீட்டிய அஜந்தா ஓவியத்தின் மீது இத்தகைய சீட்டுத் தீட்டப்பெற்றிருப்பதால் அந்தமுறை மிகப்பழமையான வழக்கம் என்று தோன்றுகிறது.

காகித ஓவியம்


காகிதம் வந்த பின்னர் ஓவியங்கள் அதன் மீதும் வரையப்பட்டன. அவ்வாறு காகிதத்தின் மீது வரைந்த அழகான ஓவியங்களையுடைய மிகச் சிறந்த ஏடுகள் மேற்கு இந்தியாவிலும், நேபாளத்திலும் கிடைத்தன. இந்து, ஜைன, பௌத்த நூல்களில் பளப்பளப்பான நிறங்களில் விளக்கப்படங்கள் எழுதப்பட்டன. ஓவியம் தீட்டிய கையெழுத்துப் பிரதிகள் இந்தியக்கலை வரலாற்றில் ஒரு முக்கியமான பகுதியாகும்.

மேற்கு இந்தியாவில் கிடைத்த ஜைனக் கையெழுத்துப் பிரதிகளும், நேபாளத்தில் கிடைத்த கையெழுத்துப் பிரதிகளும் பண்டைக்கால மரபின் இறுதியில் வரையப்பட்ட சுவரோவியங்களையும், பிற்கால மொகலாய, ராஜபுத்திர மரபுகளின் ஓவியங்களையும் இணைப்பனவாக இருக்கின்றன.

தட்சிண ஓவியம்:

விஜயநகர சாம்ராச்சியத்தின் காலத்தில் தட்சிணத்தில் ஒரு தனித் கலைமுறை இருந்து வந்தது. அதில் மேற்கிந்திய முறையின் சின்னங்கள் தெளிவாகக் காணப்பட்டன. பீஜப்பூரில் 16ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் ஒரு தனிக் கலைமுறை இருந்து வந்ததாக இலக்கியங்களிலிருந்து தெரியவருகிறது. தட்சிணக் கலைமுறை ஓவியங்கள் சிறப்பாக பீஜப்பூர் கோல்கொண்டா. அகமத்நகர் ஆகிய இடங்களில் சிறந்து விளங்கிற்று. பீஜப்பூரும், கோல் கொண்டாவும் வீழ்ச்சியடைந்த பின்னர் ஐதராபாத் ஓவியக்கலையை வளர்க்கும் தாயகமாக விளங்கிற்று. இராகமலா ஓவியங்களையும், உருவச் சித்திரங்களையும் போற்றுகின்ற ஒரு புதிய கலைமுறையானது ராஜபுத்திரர்களிடம் ஊக்கம் பெறலாயிற்று. ராஜபுத்திரக் கலைமுறைக்கு இரண்டு கிளைகள் உண்டு. அதில் ஒன்று ராஜபுத்திரக் கலைமுறை கையாண்ட பொருள்கள் அனைத்தும் இந்துமதம் பற்றியனவாகவே இருந்தன. இந்துக்களின் தெய்வத் திருவுருவங்கள் பல இதில் சித்தரிக்கப்பட்டன.

இராகமாலா ஓவியத்தில் பத்மாசன வீணாதரர்



இந்தப் பத்மாசன வீணாதர தட்சிணாமூர்த்தியின் வண்ண ஓவியம் வடநாட்டில் (ராஜபுத்திரர்களது இராகமாலா ஓவியம்) 18ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்டதாகும். வடநாட்டுக் கட்டடபாணியில் அமைக்கப்பட்ட சிகரம்வைத்த கொடிகட்டிய மாடியும், அதன் எதிரில் பூந்தோட்டமும் அமைந்துள்ளன. கட்டடத்தின் உட்பகுதியைத் தனியே பிரித்துக் காட்டுவது போல இவ்வோவியம் அமைந்துள்ளது. கீழே உள்ள பகுதி செல்வச் செழிப்பு மிக்கதாகக் காட்டப்பட்டு விலையுயர்ந்த பொருள்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது.

★ கட்டடத்தின் முன்பகுதி முகப்பில், நாதத்திற்கே நாயகனாக விளங்கும் சிவபெருமான் இங்கு இசைக்குரு நாதராக (வீணையினை ஏந்தி மீட்டும் சிவபெருமான்) பத்மாசனத்தில் கல்லும் கரையும்படி வீணையின் நாதத்தை எழுப்புகின்றார். இப்பெருமானின் எதிரில் வடநாட்டு நாகரிகத்துடன் விளங்கும் மாணாக்கரும் ஓர் நரம்பு இசைக்கருவியுடன் தானும் ஊடன் இசைத்து அதில் லயித்து உருகு கின்றார். ஓவியத்தின் மேற்பகுதியில் கதிரவன் வட்டவடிவமாகக் காட்சி தருகின்றான். அக்கதிரவனை மேற்குத் திசையில் படிப்படி யாக மறையும்படி வீணாதரப்பெருமான் வீணாநாத மூலமாக

ஆதாரம் - Ragmala Kota - Bundi School late 18th century Raga kedar : Depicts lord siva guiding the Sun to set by his music courtesy National museum.

வழிகாட்டுகின்றார். இங்கு விளங்கும் பெருமான் இரு கைகளுடன் விளங்குகின்றார். காதுகளில் ருத்திராட்ச மணிகள் விளங்குகின்றன. ஜடைகளை ஜடாபந்தமாகக் காட்டியுள்ளார். திருமார்பில் பெரிய ருத்திராட்சமாலையும் புஜங்களில் ருத்திராட்சங்களும் அணிந்துள்ளார். நெற்றியில் வெண்ணீறும் சந்தனமும் விளங்க புன்முறுவலுடன் காடசி தரும் இவ்வண்ண ஓவியத்தை நேரில் கண்டு அனுபவித்தல் சிறப்பாகும்.

தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயில் ஓவியம்

இத்திருக்கோயிலில் விளங்கும் திருமாளிகைப்பத்தியில் விளங்கும் (பிரதட்சண வீதிச்சுவர்) சுவரிலும் கர்ப்பக் கிருகத்தைச் சுற்றியுள்ள இரண்டு பாதையிலும் இரண்டு அடுக்கு ஓவியங்கள் காணப்படுகின்றன. மேலாக உள்ள ஓவியங்கள் 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இதன் அடிப்பகுதியில் இராசராசன் காலத்தில் தீட்டப்பெற்ற சைவ சமய ஓவியங்களைக் காணலாம். அவ்வோவியங்களுள் சுந்தரருடைய திருமணத்தன்று சிவபெருமான் வேதியர்போல் வந்து அடிமையாக்கிய வரலாற்று வண்ண ஓவியமும், அப்சரஸுகளுடன் நடனம் உள்ள சொர்க்கலோக காட்சி ஓவியமும், இவற்றிற்கெல்லாம் மேலாக 'காலைச் சுற்றி அர்த்தயோகப்பட்டத்துடன் கூடியயோக தட்சிணாமூர்த்தி' யின் ஓவியம் மிகச் சிறப்புடையதாகும். மற்றும் திரிபுராந்தகர், திருவிளையாடற் காட்சிகளின் ஓவியங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவ்வோவியங்களை எல்லோரும் காணும் வகையில் மத்திய தொல்பொருள் துறை இக்கோயிலினுள் ஓர் மியூசியம் நிறுவி அதில் வண்ண ஓவியங்களைச் சேகரித்து வைத்துள்ளனர். இன்றும் அவ்வோவியங்களைக் காணலாம்.

ஓவியம் தீட்டும் முறை:

மறை நூல்களில் காணும் அருவமான கருத்துக்களைப் பருவடிவில் (Asbstract & Concrete) காட்டும் வண்ணமாகப் பாரத நாட்டு ஓவியம் திகழ்கின்றது. உலகத்திலுள்ள உயிர்கள் மற்றும் உயிரிலிகள் ஆகிய எல்லாப் பொருள்களையும் இறைவனின் தோற்றமாகவே கருதினர்.

கலவை முறை:

ஓவியம் தீட்டுவதற்கு இந்திய ஓவியர் நெய்வண்ணத்தைவிட நீர் வண்ணத்தையும் ஒட்டு வண்ணத்தையும் பெரிதும் விரும்பினர். இவைகளைக் கொண்டு பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களினால் மென்மையான சாயல்களை அமைத்தும், அதில் பளபளப்பான வண்ணங்களைப் பூசி, மேலும் அழகூட்டினர். மேலும் மூலிகைச் செடிவகைகளின் சாறுகளையும் வண்ணத்தில் கலந்து கொண்டு ஓவியம் அழியாது இருக்கச்செய்துள்ளனர்.

அளவுமுறை:

ஓர் உருவத்தின் பல்வேறு உறுப்புகளும் குறிப்பிட்ட அளவினவாயும் ஒன்றுக்கொன்று பொருத்தமான விகிதம் உடையனவாயும் இருக்கவேண்டும் என்பது ஓவியத்தின் விதிகளாகும். ஓவியர் பின்பற்றும் அளவு ''தாலம்'' என்று வழங்கப்பட்டது. முகத்தின் நீளமே 'தாலம்' என்று வழங்கப்பட்டது. ஒரு தாலத்தின் பன்னிரண்டிலொன்று அங்குலம் எனப்படும். மனித உருவம் எட்டுதால அளவு உயரமுள்ள தென்பது பிருகத்சங்கிதை' 'சுக்கிரநீதி' முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. இதனை வலியுறுத்துவதன் பொருட்டு ''எறும்புந் தன் கையால் எண்சாண்'' என்ற பழமொழியும் உள்ளது.

தமிழர் ஓவியம்:

ஒவ்வு என்னும் வினையடியாகப் பிறந்த ஓவு, ஓவம், ஓவியம் என்னும் இம்மூன்று சொற்களும் ஓவியத்தையே குறிக்கின்றன. ''எது ஒன்றன் பிரதிரூபமாக இருக்கிறதோ அதுவே சில்பம்'' என்று கூறிய ''சதபத பிராமணத்தைப் போலவே'' தமிழர்களும் ஒரு பொருளை ஒத்திருக்கும் தன்மையால் சித்திரத்தை மேற்கூறிய மூன்று சொற்களாலும் விளக்கினர் போலும். தமிழ் நாட்டின் தலைநகரில்

ஓவியர்களுக்கு எனத் தனியாக ஒரு வீதி இருந்ததைத் தமிழ் நூல்கள் தெரிவிக்கின்றன. ''நுண்ணிதின் உயர்ந்த நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைஞர்'' - என்று மதுரைக் காஞ்சியிலும், ''எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி'' என்று மதுரைகாஞ்சியிலும் ''மையறு படிவத்து வானவர் முதலா - எவ்வகை யுயிர்களும் உவமங்காட்டி'' என்று மணிமேகலையும், 'உயிராவண மிருந்துற்று நோக்கி யுள்ளக் கிழியி னுருவெழுதி'' என்று அருளிய திருநாவுக்கரசர் பாடலிலும் ஓவியத்தின் மேன்மை கூறப்பட்டுள்ளன.

''ஸ்ரீராஜராஜதேவர் தஞ்சாவூர்ப் பெரிய செண்டு வாயில் சித்திர கூடத் தெற்கில் கல்லூரியில் எழுந்தருளி என்ற கல்வெட்டுப் பகுதி தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயில் வெளிப்புறத்துக்கு அருகில் இருந்த ஓவியமண்டபத்தை நமக்கு நினைவூட்டுகிறது. இது போன்றே சிதம்பரம் ஆயிரங்கால் மண்டபம், திருக்குற்றாலம் சித்திரசபை, திருவீழிமிழலை. திருவாரூர் தேவாசிரியர் மண்டபத்திலும் தமிழ் நாட்டின் ஓவிய மேம்பாட்டினைக் காணலாம்.

யோகதட்சிணாமூர்த்தி ஓவியம்:

தஞ்சைப் பெரியகோயிலின் சித்திரங்கள் மிகவும் சிறப்புடையன ஆதியில் இவ்வாலயத்தில் முதலாம் இராஜராஜ சோழனின் காலத்தில் அவர்களிலும், மேல் விதானங்களிலும் வண்ண ஓவியங்கள் வரையப்பெற்றிருந்தன. காலப்போக்கில் அதன்மேல் நாயக்க மன்னர்களின் ஓவியங்கள் வரையப் பட்டன. அண்மைக்காலத்தில் வரைந்த மேலும் சில சித்திரங்களைக் காணலாம்.

தட்சிணாமூர்த்தி ஓவியம்:

மேற்படி ஆலய ஓவியங்களில் யோக தட்சிணாமூர்த்தியின் வடிவம் அடங்கிய காட்சி பிரதானமானது. அது மேற்குச் சுவர் முழுவதிலும் பரந்து காணப்படுகின்றது. அதில் யோக தட்சிணாமூர்த்தி வடிவத்தைச் சித்திரமாக வரைந்துள்ளனர். இதில் ஆசனம் புலித்தோலாகும். கால்களைச் சுற்பிப் ''பர்யங்க கிரந்தி பந்தம்'' என்னும் யோக பட்டம் தெரிகின்றது. அப்சரசுகளின் நாட்டியத்தைப் பார்த்துக்கொண்டு இருக்கும் நிலையிலே தட்சிணாமூர்த்தியின் கோலம் தெரிகின்றது. கணத்தவருள் ஒருவரும் மேளவாத்தியம் செய்யும் நிலையிலே காணப்படுகின்றார். தேவலோகத்தவர் மேள தாளங்களை வாத்தியஞ் செய்த வண்ணம் நாட்டியத்தைக் காண்பதற்கு வானத்திலிருந்தும் இறங்கி வருகின்றனர். ஆடும் களத்தில் இருந்த வண்ணமாகச் சிலர் நாட்டியத்தைப் பார்த்துப் பரவசமாகிய நிலையில் உள்ளனர்.

அந்தக் காட்சியின் கீழே சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் சேரமான் பெருமாள் நாயனாரின் உருவங்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் இருவரும் முறையே வெள்ளையானை மேலும் குதிரை மேலும் அமர்ந்த கோலத்தில் நிகழ்ச்சியைப் பார்ப்பதற்குப் போகும் காட்சி தெரிகின்றது.

நாயக்கர் மன்னர்கள் காலத்து ஓவியம்:

பதினேழாம் நூற்றாண்டில் தஞ்சாவூரை ஆண்டு வந்த இரகுநாத நாயக்கர் காலத்து எழுதப்பட்ட 'ரகுநாதாப் யுதயம்' என்னும் நூலினாலும் விஜயபவனம் என்ற வேறொர ரண்மனையில் சோழர்கள், பாண்டியர்கள், சிங்களவர், செஞ்சி நாயக்கர்கள் இவர்கள்மீது தாம் கொண்ட வெற்றிச் சித்திரங்களும் இவர் காலத்தது ஆகும். கும்பகோணம். இராமசாமிக் கோயில், திருவீழிமிழலைத் திருக்கோயில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் (நாயன்மார்கள் ஓவியம், புராணக் காட்சிகள்) வரையப்பெற்ற ஓவியத்தின் அடியில் தெலுங்கு எழுத்துக்களில் காட்சியின் தலைப்பு எழுதப்பெற்றிருப்பதைக் காணலாம். மேலும் நாயக்கர் காலத்து ஓவியங்கள் சில தஞ்சாவூர் சரஸ்வதிமஹால் நூலகத்திலும், திருவாவடுதுறை ஆதீனத்திலும் காணப்படுகின்றன. மேலும் மராட்டியர்கால ஓவியமும் இங்கு உள்ளன. இவ்வாதீனத்தில் விளங்கும் ஓவியங்கள் யாவும். நீர்வண்ணத்தாலும், ஒட்டுவண்ணத்தாலும் வரையப்பட்டவையாகும்.

ஆதாரம்: இந்து கலாசாரம் நடனங்களும் ஓவியங்களும் - வெளியீடு இந்துசமய, கலாசார அலுவல்கள்.



மராட்டிய காலத்துப் பலகை (19-ஆம் நூற்றாண்டு ஓவியம்)

மராட்டியர் கால ஓவியம்:

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்திலும் ஓவியக்கலையானது நன்கு வளர்க்கப்பட்டு. மரப்பலகையிலும் காகிதங்களிலும் சித்திரங்கள் வரையப்பட்டன. சரபோஜி மகாராஜா தமது காலத்தில் சேகரித்து வைத்த ஓவியச் சுருள்கள் மற்றும் காகித ஓவியங்கள், மருத்துவச் செடிகளின் ஓவியங்கள், மிருகங்கள் ஓவியங்கள், கடவுளரின் ஓவியங்கள் ஆகியவைகளை இன்றும் தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலில் காணலாம்.

தக்ஷிண ஓவிய முறையுடன் நெருங்கிய உறவுள்ள ஓவிய முறையைத் தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஆதரித்து வந்தார்கள். ஓவியங்களைத் தீட்டியவர்கள் உருவங்களின் சிறுசிறு விஷயங்களைக் கூட மிக நுணுக்கமாகக் கவனித்து வரைந்துள்ளனர். துணியைப் பலகைமீது சேர்த்து வைத்து, அதில் ஓவியம் தீட்டப் பெற்றுள்ளது. இவ்வோவியங்களில் போலி நவரத்தினங்களும் பதிக்கப் பெற்றுள்ளன. உடையிலும் திரைகளிலும் தங்கரேக்கைத் தட்வி இருக்கிறார்கள். அக்காலத்தில் மக்கள் பெரிதும் சிவபெருமான் முதலான தெய்வ உருவங்களையும், மன்னர்களின் உருவங்களையும் அழகாய் வரைந்து தமது இல்லத்திலும் கோயில்களிலும், மடாலயங்களிலும் நிறுவி மகிழ்ந்தனர். இவ்வகையில் திருவாவடுதுறை ஆதீனத்திலுள்ள கந்த விலாஸப் பகுதியில் இன்றும் மராட்டியர் காலத்து மன்னர்களின் ஓவியம் காணப்படுகிறது. இதன் விளக்கங்களை ஆதீன வெளியீடு எண் 354ல் விரிவாகக் காணலாம்.

மராட்டியர் காலத்துப் பலகை ஓவியம்:

தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூலக அருங்காட்சியகத்தில் பலகையில் வரையப்பட்ட இந்த தட்சிணாமூர்த்திப் பெருமானின் (படம் - 99) ஓவியம் மிகத்தெளிவாகக் காணப்படுகிறது. இப்பெருமானானவர் கங்கையும் மூன்றாம் பிறைச்சந்திரனுடன் கூடிய ஜடாபந்தமும் சிரசில் விளங்க காட்சிதருகின்றார். அதில் ஓரிரு ஜடைகள் விரிசடையாகவும் உள்ளன. மலைகள் சூழ்ந்த கானகத்தில் தாவரங்களும். மிருகங்களும் உள்ள அவ்விடத்தில், கல்லால மரநிழலில் யோக பட்டை அணிந்து வீராசனத்தில் நேராக வீற்றிருக்கின்றார். பின் கரங்களில் சுடரும், ஜபமணிமாலையும் விளங்குகின்றன. முன்வலக் கரத்தில் வியாக்யான முத்திரையினை முனிவர்களுக்குக் காட்டியும், இடக்கரத்தில் வேதச் சுவடிகளைச் சற்று மேல் நோக்கிய நிலையில் வைத்துள்ளார். வலக்கா லின் கீழ்ப்பகுதியில் கத்தியும் கேடயமும் தாங்கிய முயலகனை மிதித்துள்ளார். ட சர்வாபரணங்களும் திகழப் புலித்தோலாடை அணிந்த பெருமானின் இடுப்புப் பகுதியிலிருந்து திருப்பாதம் வரை பரிவட்டம் (பட்டுத்துணி) அணிவிக்கப்பட்டுள்ளது. இடுப்பு வஸ்திரம் இருமருங்கிலும் பக்கவாட்டில் உள்ளன.

இவ்வோவியம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நடுவில் தட்சிணாமூர்த்திப் பெருமான் விளங்குகின்றார். இப்பெருமானின் வலப்பக்கம் ஜடாமகுடத்துடன் விளங்கும் கௌசிகர்,

காஸ்யபர், பரத்வாஜர் முதலானோர் அமர்ந்த நிலையில் கூப்பிய கரங்களுடன் பெருமானின் ஞான மௌன நிலையினைக் கண்டு அனுபவிக்கின்றனர். இதைப்போன்றே இப்பக்கம் விளங்கும் அத்ரி மகரிஷியும் காணப்படுகின்றனர். காமிகாகமம் இத்தகைய முனிவர்களைப் பற்றிக் கூறுகிறது. இவ்வோவியத்தைச் சுற்றிலும் கொடியுடன் கூடிய பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மண்டபம் விளங்குகிறது. கி.பி.19ஆம் நூற்றாண்டில் (1700 - 1800) வரையப்பட்ட இப்பலகை ஓவியம் மராட்டியர் காலத்ததாகும். இன்று வரை இவ்வோவியம் புத்தம் புதியதாக விளங்குகிறது.

யோக சூத்ர வீராசன மூர்த்தி:

இந்த நூற்றாண்டில் வரையப்பெற்ற இக்குருமூர்த்தி கல்லால மரநிழலில் பக்கவாட்டில் அமர்ந்த நிலையில் யோக சூத்திரம் (யோக பட்டையுடன்) கூடிய ஒரு வகை வீராசனத்தில் அமர்ந்துள்ளார். நெற்றிப்பட்டமும் ஜடா மண்டலத்தில் மூன்றாம் பிறைச்சந்திரனும் கங்கையும் விளங்கக் காட்சி தருகின்றார். எழில் நிறைந்த திருமுகமும் அருள் ஒழுகும் ஞானப்பார்வையும், நெற்றிக் கண்ணும் விளங்க காதுகளில் குண்டலமும், குழையும் தோன்றக் காட்சி தருகின்றார். இவருக்குத் திருமார்பில் உருத்திராக்க மாலையும், கழுத்தில் கண்டாபரணமும் எழிலூட்டுகின்றன. பின் வலக்கரம் ஜபமாலையும், முன் வலக்கரம் சின்முத்திரையும் காட்டுகின்றன. பின் இடக்கரம் அனல் ஏந்தியும், முன் இடக்கரம் டோல ஹஸ்தமாகவும் அமைந்துள்ளன. வலத்தொடையின் மீது வைக்கப்பெற்ற இடது முழங்கால் (வீராசனமாக) இடுப்புடன் சேர்த்து யோக சூத்திரத்தால் (யோகபட்டை) பிணைக்கப்பட்டுள்ளது. சற்று முன்நோக்கிய வலப்பாதம் முயலகன் மீது பதிந்துள்ளது. முனிவர் ஒருவர் மட்டும் கண்ணுற்ற இக்காட்சியினைத் தனது ஞான அநுபவ நிலையினை ஏட்டில் எழுதிவிட்டு, தாமும் அவ்வாறே அமைதியுடன் காணப்படுகின்றார்.

சிற்பம் சுதை இவைகளும் மிக எளிமையானது ஓவியம் ஒன்றுதான். வரைகோட்டு ஓவியங்களினாலேயே எல்லாவித எண்ணத்தினையும் வெளிபடுத்தி விடலாம். சிற்பத்திற்கும், சுதைக்கும், கட்டட அமைப்புக்கும் ஓவியம் மூலமாகத்தான் வடிவங் கொடுத்து முழுமை பெறச் செய்யலாம். இவ்வகையில் இங்கு இடம் பெற்றுள்ள ஞானத்தின் மோனநிலையாக உள்ள தட்சிணாமூர்த்தி பெருமானின் வண்ண ஓவியங்கள் சிந்தனைக்கும் கருத்துக்கும் அப்பாற்பட்டு விளங்குதலைக் காணலாம்.

இன்னும் இதுபோன்ற இப்பெருமானின் திருவுருவம் திருக்கோயில்களில் மறைந்துள்ளன. அவைகளை வெளிக்கொணர்ந்து மக்களுக்கு வழங்குவது ஆராய்ச்சியாளர்களின் கடமையாகும்.

மராட்டியர் காலத்து காகிதச் சுவடி ஓவியம்:

கி.பி.1700 - 1800 ஆண்டுகளில் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மராட்டிய மன்னர்கள் ஓவியக்கலையினைப் பெரிதும் போற்றி வளர்த்தனர். அவ்வகையில் இவ்வோவியம் காகிதச் சுவடியில் வரையப்பட்டது ஆகும். இது தட்சிணாமூர்த்தி உபநிஷத்தில் கூறப்பட்டபடி (படம் 100) இவ்வோவியம் மூன்று பிரிவுகளாகக் காணப்படுகிறது. ஓவியத்தைச் சுற்றிலும் பூக்கொடிகளால் அமைக்கப்பெற்ற தடுப்பு உள்ளது.

இவ்வோவியத்தின் விளக்கத்தை வலப்பக்கத்திலிருந்து காண வேண்டும். ''ப்ரும்ம வர்த்தம்'' என்ற இடத்தில் முனிவர்கள் எல்லோரும் யாகம் செய்யும் பொருட்டு தத்தமது கரங்களில் சிருக், சமித்து முதலான பொருள்களை வைத்துக் கொண்டிருக்கையில் ''தத்வம்'' என்ற ஒன்றினை அறிய அவர்கள் மனத்தில் அவா எழுகின்றது. இதனை அறிய மார்க்கண்டேய மகரிஷியை முனிவர்கள் நாடி, ''மகரிஷியே! தாங்கள் என்றும் சிரஞ்சீவியாகவும், ஞான ஆனந்தமாகவும் விளங்குகின்றீர்கள், இதன் காரணத்தை (தத்வத்தை) எங்களுக்கு அருள வேண்டும்'' என்று வேண்டினர். இதுவே முனிவர்கள் கூட்டம் முன்பு வேதியர் போல் உள்ள பகுதியின் விளக்கம் ஆகும்.



திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கசுவாமி திருக்கோயில் சுவர் ஓவியம் (தலபுராணம் வரிசையில் உள்ள சாம்ப தட்சிணாமூர்த்தி) 1970ம் வருடம்.



மைசூர் ஓவியத்தில்
யோக மூர்த்தியாகிய சிவபெருமான்

'மலையின் மீது நீண்டு பரந்து விளங்கும் ஆலமர நிழலில் விளங்கும் தட்சிணாமூர்த்திப் பெருமானை வணங்கியமையால் இவை எல்லாவற்றையும் பெற்றேன்' என்றார். அவ்வாறே அக்னி, ஜபமாலை, புத்தகம், (சுவடி) சின்முத்திரை காட்டியருளும் தட்சிணாமூர்த்திப் பெருமானை தத்தமது ஐயங்கள் நீங்கும் பொருட்டு முனிவர்கள் தொழுது நிற்கின்றனர். ஆனால் பெருமானோ, மௌனியாக இருந்து அருளினார். இதனைக் கண்ட முனிவர்களும் மகாமௌனியாக இருந்து தாம் பெற வேண்டியவைகளைப் பெற்றனர் (இப்பகுதி கல்லால மரத்தில் தட்சிணாமூர்த்தி முன் முனிவர்கள் கூட்டத்தில் விளக்கமாகும்).

இந்த ஓவியத்தின் மூன்றாம் பகுதியாக வட்டமிட்டபடி உள்ள விசுவநாதர், விசாலாட்சி கோயில் காணப்படுகிறது. பண்டிதர் ஒருவர் தட்சிணாமூர்த்திப் பெருமானது தத்துவார்த்தங்களை, திருக்கோயில் மண்டபத்தில் கூடிய மக்களுக்கு விளக்கம் தருகின்றார். இத்தகைய உபநிஷத் விளக்க ஓவியத்தை ஒரு சிறு காகிதத்தில் அடக்கியுள்ள ஓவியரின் செயல்திறன் போற்றுதலுக்குரியதாகும்.

துறைசை ஆதீனத்து தட்சிணாமூர்த்தி ஓவியம் :

துறைசை ஆதீனம் என்று போற்றப்படும் இவ்வாதீனத்தில் பழம்பெருமை வாய்ந்த ஓவியங்கள் காணப்படுகின்றன. தெய்வத் திருவுருவங்கள், அடியவர்கள், ஆதீனத்தின் குருமகா சன்னிதானங்கள், ஆதீனத்தின் முனிபுங்கவர்கள், மன்னர்கள், சேவகர்கள் என்ற நிலையில் வகைப்படுத்தப்பட்டு ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்களை இவ்வாதீனத்தில் உள்ள பன்னிருகை விலாசம், கந்தவிலாசம், வேணுவனலிங்க விலாசம், ஆதீனக் குருமுதல்வர் நமசிவாய மூர்த்திகள் திருக்கோயிலின் முகமண்டபம் மகாமண்டபம், கோஷ்டப்பகுதி, பெரியபூசை மடம், வடக்கு ஒடுக்கம் முதலான இடங்களில் நீர்வண்ண ஓவியங்களையும் ஒட்டுவண்ண ஓவியங்களையும் காணலாம்.

தட்சிணாமூர்த்தி ஓவியம்:

தட்சிணாமூர்த்தி ஓவியம் ஒன்று முகமண்டபத்தின் தெற்கு மாடத்திலும், மகாமண்டபத் தென்புறச் சுவரிலும் ஒட்டு வண்ணத்தால் வரையப்பட்டுள்ளது.

தங்கநிறம் கொண்டு வரையப்பெற்ற தஞ்சை நாயக்கர் காலத்து ஓவியம் (கி.பி. 1700 - 1800), (நீளம் 2 1/2 அடி அகலம் 2 அடி) ஒன்று இவ்வாதீனத்தில் விளங்குகிறது.

இவ்வோவியத்தின் மேற்பகுதியில் சிதம்பரம் கோயிலின் தரைவரைப் படம் (Ground plan) அமைத்து அதன் நடுவில் ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவுருவம் வரையப் பட்டுள்ளது.

இதற்குக் கீழ்ப்பகுதியில் திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயிலின் வரைபடமும் அமைத்து அதில் திருஞானசம்பந்தர் பொற்கிழிபெறும் காட்சி, தியாகராஜர் உருவம். கோரூபாம்பிகை முதலான தலப்புராணச் செய்திகளை ஓவியமாக வடித்துள்ளனர். இதனைத் தொடர்ந்தாற்போன்று, பத்ரபீடத்தில் சுகாசனமாக ஞான தட்சிணாமூர்த்தி விளங்குகின்றார். இவரது பின் கரங்களில் உருத்திராக்க மாலையும், அக்னியும் விளங்க, முன்இரு கரங்கள் நடு மார்புப் பகுதியினைத் தொட்ட நிலையில் முன் வலக்கரம் ஞானமுத்திரையுடனும் முன் இடக்கரம் சுவடியும் கொண்டு திகழ்கின்றது. அடுத்து திருநந்தி தேவர் சனற்குமாரர், சத்தியஞானர் முதலானோர்க்கு அருளுபதேசக் காட்சி உள்ளது. அதன் பின்னர் பரஞ்சோதி முனிவர் மெய்கண்டார்க்கு உபதேசம் செய்கின்றார்.

இதற்குக் கீழ்ப்பகுதியில் மெய்கண்ட தேவர் திருவுருவம் தொடங்கி இவ்வாதீனத்தின் 14வது பட்டம் ஸ்ரீ வேளூர் சுப்பிரமணிய தேசிகர் வரையிலான (கி.பி.1789 - 1845) திருவுருவங்கள் மிகச் சிறிய வடிவமைப்பில் காணப்படுகின்றன. இவ்வோவியம் இவ்வாதீனக் குருபரம்பரையினைக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குகின்றது.

மரச்சிற்பங்களில் தட்சிணாமூர்த்தி

திருக்கோயில்களில் விளங்கும் உற்சவமூர்த்திகள் திருவீதியில் உலாவரும் பொருட்டு, படிச்சட்டம், மஞ்சம், பல்லக்கு, * வாகனம், *தேர், ரதம் முதலானவைகள் மரத்தினால் செய்யப்பட்டு திருக்கோயில்களில் விளங்குவதனை இன்றும் காணலாம். சில ஆலயங்களில் கொடிமரம் உட்பட, மேற்சொன்ன அனைத்துக்கும் செப்புத் தகடுகளோ, வெள்ளித் தகடுகளோ, தங்கத்தகடுகளோ அதன் மேற்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும். ஆனால் மரத்தில் எத்தகைய வேலைப்பாடுகள் இருந்தனவோ, அப்படியே தகடு சாற்றின பிறகும் அவற்றின் கலை நுட்பத்தினைக் காணலாம்.

மேற்சொன்ன பொருள்களில் சிற்பிகள் தட்சிணா மூர்த்திப் பெருமானின் திருவுருவத்தினைத் தென்திசையில் முறைப்படி வடித்திருப்பர். பெரும்பாலும் மலைகளைக் குடைந்தும், கட்டுமானத்தில் (சுதைவடிவில்) கட்டியும், மரத்தினாலும் செய்யப்படும் ரதம், தேர், கொடிமரம் இவற்றில் இப்பெருமானது திருவுருவத்தை இன்றும் நாம் காணலாம்.

என்றே துணிந்து கூறலாம். வேலைப்பாடுகள் அமைந்த இப்பெருமானின் ஜடைகள் எல்லாம் ஒரு சேர அமைந்து ''ஜடாமகுடமாக'' விளங்குகிறது. காதுகளில் குண்டலமும், கழுத்தில் ஹாரமும், உருத்திராக்க மாலையும் அணிசெய்ய யக்ஞோபவீதம் திருமார்பில் எடுப்பாக விளங்கப் பெருமான் காட்சிதருகின்றார். இப்பெருமான் 'ஸ்வஸ்திகாசனத்தில் உள்ளங்கால் தெரிய அமர்ந்துள்ளார், பின் வலக்கரத்தில் சூலம் இருந்திருக்க வேண்டும். ஆனால் சூலத்தின் மேற்பகுதி சிதைந்து அடிப்பாகம் மட்டுமே தற்போது காணப்படுகிறது. பின் இடக்கரத்தில் கபாலம் இருக்கிறது. முன்வலக்கரம் சின் முத்திரையினைக் காட்டுகிறது. முன்இடக்கரம் ஞான ஆசானுக்குரிய பாவத்தில் உள்ளது. தற்காலம் பொருள்விளங்காத ''குலீஸ்வரர்'' என எழுதப்பட்டுள்ளது.

காஞ்சி கைலாசநாத சுவாமி ஆலயச்சிற்பம் (Pl. LXXVII) :

இரண்டாவது வடிவமைப்பைச் சேர்ந்த இச்சிற்பத்தில் சிவன் தன் இடக்காலை மடித்து இருக்கைமீது குத்திட்டு வைத்துள்ளார். இக்காலும் உடலும் யோக பட்டையாக பிணைக்கப் பட்டிருக்கிறது. முன் வலக்கரமானது யோக முத்திரையினைக் காட்டுகிறது. முன் இடக்கரமானது அபய ஹஸ்தமாக விளங்குகிறது. பின் வலக்கரம் அக்ஷமாலையினைப் பற்றியிருக்கிறது, பின் இடக்கரம் அக்கினியை ஏந்தியுள்ளது. சில ஆகமங்களில் பின் கரத்தில் தாமரையினை ஏந்தியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவரது வலக்கால் ஆசனத்திலிருந்து இறங்கி கீழே தொங்கவும், ஆலின் நிழலில் முன் கூறிய சிற்பங்கள் போலவே அமர்ந்துள்ளார். சிவனை நோக்கியவாறு மான்கள் அவரது திருவடிக்கீழ் உள்ளன. முன் வலக்கரத்தில் படம் எடுத்த நாகம் உள்ளது. இதுவும் இறைவனை நோக்கியபடி உ ள்ளது. இவ்விறைவனின் தலையின் இருமருங்கிலும் இரு பூதங்கள் அமர்ந்துள்ளன. மேலும்இச்சிற்பத்தின் இருபுறமும் அமைந்துள்ள சுவரின் மாடத்தில் முனிவர்கள் அமர்ந்துள்ளானர். இவர்கள் பெருமானின் யோக விளக்கத்தைச் சிரத்தையுடன் செவி ஏற்கும் தோற்றத்தில் உள்ளனர். இக்கோயிலில் உள்ள மற்றொரு தட்சிணாமூர்த்தியின் சிற்பம் பத்ர பீடத்தில் காணப்படுகிறது. இப்பீடம் ஒரு மலைமீது காணப்படுகிறது. பெருமானின் வலக்கரத்தில் சர்ப்பத்தினைக் காண்கிறோம்.


மைசூரில் உள்ள நஞ்சன்கோடு ஆலய யோக தட்சிணாமூர்த்தி (Pl. LXXIX) :

மைசூரில் உள்ள நஞ்சன்கோடு ஆலய தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் மூன்றாவதாகக் கூறப்பட்ட வடிவமைப்பான - ''உத்குடிகாசன'' முறையில் அமர்ந்துள்ளதாகக் கூறலாம். கால்கள் உடலோடு யோக பட்டையினால் பிணைக்கப்பட்டுள்ளன. அவர் அமர்ந்துள்ள நிலையிலிருந்தே யோக தட்சிணாமூர்த்தியாகிறார். பின் இடக்கரத்தில் வீணை உள்ளதால் வீணாதர தட்சிணாமூர்த்தியாகிறார். முன் வலக்கரம் சின்முத்திரை காட்டுகிறது. முன் இடக்கரம் நூலினைத் தாங்கியுள்ளது. எனவே வியாக்கியான தட்சிணாமூர்த்தியாகிறார். மேற்சொன்ன மூன்று வகை வடிவமைப்புகளும் சேர்ந்த இச்சிற்பம் சிறப்பாக இங்கு அமைந்துள்ளது. ஆலின் கீழ் அமர்ந்துள்ள இவர் முன்பு ரிஷபம் உள்ளது. இது இறைவன் அமர்ந்துள்ள பீடத்தின் முன்பாக அமைந்துள்ளது. இப்பெருமான் ஆசனத்தின் கீழ், பீடத்தின் மத்தியில் இடக்கையில் லிங்கம் ஒன்றினை ஏந்தியபடி லிங்காயத்துக் குருக்கள் ஒருவர் அமர்ந்துள்ளார். இவரைக் குருவாகக் கொண்டு இருபுறமும் இவரது சீடர்கள் அஞ்சலி ஹஸ்தர்களாக இருக்கின்றார்கள். தட்சிணாமூர்த்திக்குப் பின் ''பிரபாவளி'' உள்ளது. இதன் இருமருங்கிலும் பக்கத்திற்கு ஒருவராக முனிவர்கள் அஞ்சலியுடன் காணப்படுகின்றனர்.

வீணாதர தட்சிணாமூர்த்தி:

குரல் இசையையும், கருவி இசையையும் போதிக்கும் பேராசானாக இறைவன் போற்றப்படுகின்றான். இம்மூர்த்தியின் வடிவமைப்புகளைப் பற்றிக் காமிகாகமம். அம்சுமானாகமம், காரணாகமம் முதலான ஆகம நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அம்சுமானாகமம் - இடக்கால் உத்குடிகாசன நிலையில் இருக்கவேண்டும் என்கிறது. முன் இரு கரங்களும் வீணைஏந்தி இருக்க, மற்ற இரு கரங்களும் வியாக்கியான மூர்த்தி போல் இருக்கவேண்டும்



வீணாதர (கேய) தட்சிணாமூர்த்தி

என்று கூறுகிறது.

காமிகாகமம் - ஞான தட்சிணாமூர்த்தியின் முன்புறமுள்ள வல இடக்கரங்கள் ''கடக'' பாவத்தில் இருக்கவேண்டும் என்கிறது. வலது உள்ளங்கை கீழ்ப்புறமும், இடது உள்ளங்கை மேல்புறமும் நோக்கியிருக்க வேண்டும் என்கிறது. கடக முத்திரையிலிருந்து சற்றே வேறுபடும் முத்திரையினைச் சர்ப்பகரம் என்று காமிகாகமம் கூறுகிறது.

இடக்கரம் உயர்ந்து, வலக்கரம் அதற்குச் சற்றே தாழ்ந்து நீண்ட வாத்தியமான வீணையினை முறையாகப் பிடிப்பது போல் இருக்கவேண்டும். வீணையின் நுனியை இடக்கரம் பற்றி இருக்கவும், வலக்கரம் அதன் அடிப்பாகத்தைப் பற்றி இருக்கவும் வேண்டும்.

வீணையினை எவ்வாறு ஏந்தி இருத்தல் வேண்டுமென்பது பின் வருமாறு கூறப்படுகின்றது. வீணையானது வலது தொடையில் இருந்து மூன்று அங்குலம் நீண்டு இருக்கவேண்டும். கடக ஹஸ்தம் உள்ள இடக்கரத்திற்கு, நான்கு அங்குலம் மேலே இருக்கவேண்டும். இவ்விரு புள்ளிகளின் இடையே உள்ள தூரம் தான் வீணையின் தண்டுப்பகுதியின் நீளமாகும்.

பொதுப்படையான சில கருத்துக்கள்:

தட்சிணாமூர்த்திப் பெருமானின் முகம் ''சந்தர்சன'' முத்திரையில் உள்ள கரத்தின்பக்கம் திரும்பி இருக்கவேண்டும், பார்வையும் இக்கரத்தில் படிய வேண்டும். தட்சிணாமூர்த்தியினைச் சுற்றிப் பலவித மிருகங்களும், ஊர்வனவும், முனிவர்களும், சித்தர்களும், மாணவர்களும், பூதகணங்களும், கின்னரர்களும் பொறிக்கப்பட்டிருக்கவேண்டும். நன்கு வளர்ந்த மரங்கள் அடர்ந்த குன்றில் ஆலமரநிழலில் இப்பெருமானின் திருவுருவம் இருக்கவேண்டும் ஆசனமானது வேலைப்பாட்டுடன் கூடியதாகவும், அதில் புலித்தோல் விரிக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். அதில் சிவபிரானாகிய தட்சிணாமூர்த்திப் பெருமான் கருணைப் பொலிவோடு தோன்ற வேண்டும். இப்பெருமானைச் சுற்றி ''சிவாத்விஜாக்களின்'' (சிவப்பிராமணர்கள்) முன்னோர்களான ரிஷிகள் அமர்ந்திருக்கவேண்டும். தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் நின்றகோலம் அல்லது அமர்ந்த கோலம் ஆகிய இரு நிலையிலும் இருக்கலாம். பெருமானின் திருவடிகள் அபஸ்மாரபுருஷன் மீது ஊன்றியும், ஊன்றாமலும் இருக்கலாம் ஆலமரமும், பூதமும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்.

சென்னை - அருங்காட்சியக வீணாதர தட்சிணாமூர்த்தி (P.L. Lxxxl.Lxxx) :

சென்னை அருங்காட்சியகத்தில் வீணாதர தட்சிணாமூர்த்தியின் வெண்கலத்திருவுரு ஒன்று உள்ளது. இம்மூர்த்தியின் வலத்திருவடி பூமியில் ஊன்றி இருக்க, இடத்திருவடி சற்றே வளைந்து முன்புறம் வைக்கப்பட்டுள்ளது. முன் இரு கரங்களும் ''கடக'' முத்திரையில் உள்ளன. இடக்கரம் மேல் நோக்கியும், வலக்கரம் கீழ் நோக்கியும் உள்ளன. தனியே வீணை ஒன்று செய்து இருகரங்களிலும் பொருத்த இருந்தனர் எனப்புலனாகிறது. ஆனால் வீணைகாணப்படவில்லை. ட பின்வலக்கையில் பரசும், பின் இடக்கையில் மானும் (மிருகா) உள்ளன. இத்திருமேனியில் வேலைப்பாடுள்ள அணிகலன்கள் அணிவிக்கப்பட்டுள்ளன. இது போன்ற அமைப்புள்ள மற்றோர் வெண்கலத் திருவுருவம் தஞ்சைமாவட்டம் - வடரங்கத்தில் (சீர்காழி வட்டம் கொள்ளிடக்கரைக்கு அருகில்) உள்ளது. இத்திருவுருவம் காலத்தால் முற்பட்டதும் கலைநயம் கொண்டதுமாகும்.

அர்த்தநாரீஸ்வர வீணாதரமூர்த்தி:

பாதாமி குடைவரைக் கோயிலில் வீணைஏந்திய அர்த்தநாரீஸ்வர மூர்த்தியின் திருவுருவத்தைக் காணலாம். இத்திருவுருவத்தின் முன்வலக்கரத்தில் பரசு உள்ளது. இதனை நாகம் ஒன்று சுற்றிக் கொண்டுள்ளது. புஜத்தில் சர்ப்ப வளையத்தை அணிந்திருக்கின்றார். மற்றொரு வலக்கரத்திலும் இடக்கரத்திலும் வீணையினை ஏந்திக் காட்சி தருகின்றார். மற்றொரு புஜத்தில் அரவு சுற்றி உள்ளது. வலக்காதில் சர்ப்ப குண்டலம் உள்ளது. இத்திருவுருவச் சிரசின் வலப்பாகத்தில் சர்ப்ப குண்டலம்

உள்ளது. இத்திருவுவச் சிரசின் வலப்பாகத்தில் பிறைச்சந்திரனும் மண்டை ஓடும் தாங்கிய ஜடாமகுடம் விளங்குகிறது.

அழகிய கலைநுட்பத்துடன் கூடிய கழுத்து அணியும், மார்பில் யக்ஞோபவீதமும் உள்ளன. வலப்புறம் மான் தோலானது இடுப்பு வரை அணிவிக்கப்பட்டுள்ளது. வேலைப்பாடுள்ள பீடத்தின் மீது சற்று வளைந்தபடி ''கரண்டமகுடத்தோடு'' இடப்புறம் அம்பிகை காணப்படுகின்றாள். கொண்டையில் கல்பதித்த ஆபரணங்களும், ஆபரணங்களுடன் கூடிய ஜடையும், புஜங்களில் பல கங்கணங்களும் காணப்படுகின்றன. கணுக்கால்வரை நீண்டு உள்ள பட்டாடையைப் பிடித்திருக்கும் மேகலையும் உள்ளது. முன்காலில் சிலம்பு இருக்கின்றது. இடக்கரத்தில் நீலோற்பல மலரும் காணப்படுகிறது. சிரசினைச் சுற்றி ''பிரபமண்டலம்'' உள்ளது, வீணாதர அர்த்த நாரீஸ்வரரின் இடப்பாகத்தில் பணிப்பெண் இருக்கின்றாள். இடக்கையை மடித்தும் அதில் பாத்திரம் ஒன்றினைத் தாங்கியும் உள்ளாள். பலவித ஆபரணங்கள் அணிந்து உடலில் மெல்லிய ஆடை உடுத்தியிருக்கின்றாள். கூந்தலானது ''தம்மில்லா'' முறையில் கொண்டையாகக் கட்டப்பட்டிருக்கிறது.

வலப்புறத்தில் விளங்கும் ரிஷபமானது நிலத்தின் மீது தனது பார்வை படிய சாத்வீகமாக உள்ளது. ரிஷபத்தின் பின்புறம் மனித உருவம் ஒன்று காணப்படுகிறது. உடலானது மெலிந்து காணப்படுவதால் பைரவராகவோ அல்லது பிருங்கி முனிவராகவோ இருக்கலாம் என யூகிக்கப்படுகிறது. மேலும் இவரது கரங்கள் அஞ்சலி ஹஸ்தமாக உள்ளன. அர்த்த நாரீஸ்வர வீணாதரமூர்த்தியின் தலைப்பகுதிக்கு மேல் தேவர்கள் பறந்தபடி துதித்தவாறு உள்ளனர். இம்மூர்த்தியானவர் நிற்கும் பீடத்தின் கீழ் சில கணங்கள் நாட்டியமாடும் நிலையிலும், சில கணங்கள் இசைக்கருவிகளை மீட்டும் நிலையிலும் உள்ளன. காணவேண்டிய கலைச்சிற்பங்களில் இம்மூர்த்தியானவர் முதன்மை பெற்று விளங்குகின்றார்



சிவாலயங்களின் கோஷ்டங்களில் தட்சிணாமூர்த்தித் திருமேனிகள்



காஞ்சிபுரம் - ஸ்ரீ கைலாசநாதர் கோயில் - பல்லவர்காலம் - விநாயகர், சிம்மங்கள், யானை, மான்கள், ரிஷிகள் சூழ (உத்குடிகாசனம்) யோகாசன (யோகபட்டையுடன்) தட்சிணாமூர்த்தி. யானை உருவத்திற்கு இடப்பக்கம் மாடத்தில் சிறிய தட்சிணாமூர்த்தியின் உருவம் உள்ளது. இச்சிற்பத் தொகுதி ஆய்வுக்குரியதாகும்.

காஞ்சி - சத்யேனேசுவரர் கோயில்
ஜடாமண்டல ஞானமூர்த்தி

காஞ்சி - சத்யேனேசுவரர் ஆலயத்தில் இக்குருமூர்த்தி எழுந்தருளியுள்ளார். இத்திருவுருவம் மிக நுண்ணிய வேலைப்பாடு அமைந்ததாகும். அடர்ந்து பரந்து விளங்கும் கல்லால மரத்தின் இலைகள் அடர்த்தியாகவும் (கி.பி.13ஆம் நூற்றாண்டு) தெளிவாகவும் விளங்குகின்றன. பெருமானின் திருமுகப் பொலிவினை மேலும் அழகூட்டுவனவாக, அவரது ஜடைகள் ஜடாமண்டலமாக சூரியபிரபை போன்று விளங்குகின்றன. நெற்றியில் நெற்றிப்பட்டம் விளங்க, சிரசில் பிறையும், கங்கையும் ஒளிந்துகாணப்படுகின்றன. பின் கரங்களில் இவரது திருமுகப் பொலிவைப் பார்த்தவாறு அமைந்துள்ள படம் எடுத்த நாகமும், தீச்சுடரும் விளங்குகின்றன. முன்கரங்களில் வேதச்சுவடிகளை ஏத்திக்கொண்டு, வேத தத்துவார்த்தங்களை விளங்குமுகத்தான் தாம் மௌன நிலையில் ஞானமுத்திரையினைக் காட்டுகின்றார். திருப்பாகத்தின் அடியில் முனிவர்களின் கூட்டங்கள் விளங்குகின்றன. அம்முனிவர்கள் மகா மௌனியாக இருந்து ஞானநிலையினைப் பெருமான் மூலமாக உணர்ந்தவாறு உள்ளனர். பெருமான் சுரோணிப் பட்டையுடன் பட்டு வஸ்திரம், காற்சிலம்பு, வீரக்கழல், மற்றும் திருமார்பில் சர்வாபரணங்களும் கொண்டுவிளங்குகின்றார். பெருமானின் இடப்பக்கம் முனிவர்களைப் பார்த்தவண்ணம் நந்தியம்பெருமானும் அமர்ந்துள்ளார். முயலகனின் பார்வை பெருமானைப் பார்த்ததால் ஆணவமலம் நீங்கினாற்போலக் காணப்படுகிறது. ஞானநிலைகளை யுணர்த்தும் இக்குரு மூர்த்தியின் பேரழகினை நேரில் கண்டு உணர்க.

தாராசுரம் - தட்சிணாமூர்த்தி

இந்த எழில் மிக்க தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் கும்பகோணத்தை அடுத்துள்ள ராஜராஜேஸ்வரம் என்று அழைக்கப்படும், தாராசுரம் ஸ்ரீ ஐராவதேஸ்வரர் திருக்கோயிலின் கருப்பக்கிருகத் தெற்குத் தேவகோஷ்டத்தில் அமைந்துள்ளது. இதுவும் இரண்டாம் ராஜராஜன் (கி.பி.1150-1173) திருப்பணியில் ஒன்றாகும். அமர்ந்த நிலையில் கம்பீரமாக விளங்கும் இத்தட்சிணாமூர்த்தியின் உயரம் 146 செ.மீ, அகலம் 78 செ.மீ கல்லாலமரத்தின் உயரம் 40 செ.மீ அகலம் 72 செ.மீ மேற்படி மரம் தனிக்கல்லில் புடைப்பாக உள்ளது ஆகும்.

பெருமான் அமர்ந்துள்ள கல்லால மரம் அடர்த்தியான இலைகளுடன் கூடியதாக அமைந்துள்ளது. சாந்தமும் புன்னகையும் தவழும் திருமுகத்திற்கு நெற்றிப்பட்டையுடன் கூடிய ஜடாபாரம் அழகுற விளங்குகின்றது. காதுகளில் காதோலையும் மகரக்குழையும் காணப்படுகின்றன. திருமார்பில் கண்டாபரணம் முதல் உதரபந்தம் வரை பல்வகை ஆபரணங்கள் எழில் பெறக் காட்சி தருகின்றன. பின் கரங்களில் தீச்சுடரும் ஜபமாலையும் உள்ளன. முன்வலக்கரம் சின்முத்திரையுடனும் இடக்கரம் சிவஞானபோதச் சுவடியுடனும் விளங்குகின்றன. இப்பெருமான் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். பின்னே நந்தியின் திருஉருவிளங்குகிறது.

சின்முத்திரைக் கரத்தினை நாகப்படம் தாங்கியுள்ளது. வலப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. முயலகன் தன் ஆட்காட்டி விரலை நீட்டிப் பாம்புடன் விளையாடுகின்றான். பெருமானின் வலப்பக்கத்தின் கீழ் இருகரங்களையும் மேலே கூப்பித்தொழுதவாறு பெண்ணுரு (காரைக்கால் அம்மையார் போலும்) காணப்படுகிறது. இரு இருடிகள் ஞான முத்திரையுடன் அமர்ந்துள்ளனர். மற்றும் திருவடிக்கீழ் சிங்கம், புலி, கரடி, குரங்கு, மான், பாம்பு, பன்றி ஆகியவை பகையின்றி அமைதியாய் இருத்தல் காணத்தக்கதாகும். கோஷ்டமாடத்தை ஒட்டி இருபக்கங்களிலும் ஒரு அடி உயர அளவிற்கு புடைப்புச் சிற்பமாகச் சுவரில் பூக்குடலை ஏந்திய முனிவர்களும், வீணையை உடைய கின்னரர்களும், தாளம் ஏந்திய பெண்களும் காணப்படுகின்றனர், இப்பேரழகினை நேரில் கண்டு உணரலாம்.

தாராசுரம் - கலைத்தூணில் யோகமூர்த்தி

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தாராசுரம் எனும் தலம் சிற்பவேலைத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இதனை ராஜராஜேஸ்வரம் என்பர். இங்கு அருள் வழங்கும் பெருமானின் திருநாமம் ஐராவதேஸ்வரர். இத்திருக்கோயிலின் பலிபீடத்திலிருந்தே சிற்ப நுணுக்க வேலைப்பாடுகள் தொடங்குகின்றன. அவை நம் உள்ளத்தை நெகிழவைக்கின்றன. பலிபீடத்தின் படிகள் நாத ஒலியை எழுப்புகின்றன. இத்தகைய திருக்கோயிலின் மகாமண்டபத்தூண்களில் எண்ணற்ற புராணக்கதைகளைக் காணலாம். சிலதூண்களில் சிவன்வடிவங்கள், விஷ்ணுவடிவங்கள், விலங்குகள், மலர்கள் முதலான வடிவங்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிற்பமும் ஒரு அடிக்கு மிகாமல் அமைந்துள்ளது. இவை அனைத்தும் புடைப்புச் சிற்பங்களாகும். இக்கலையழகு மிக்க திருக்கோயிலினை நமக்கு அளித்த மன்னன், இரண்டாம் ராஜராஜன் (காலம் 1150 - 1173) ஆவான்.

இத் திருக்கோயிலின் மகா மண்டபத்தூண்களில் 28 தட்சிணாமூர்த்தியின் திருவுருவங்கள் பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றன.

இவைகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற் போன்று விளங்குவது தேவ கோஷ்டத்தில் உள்ள தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் ஆகும். இந்த 28 தட்சிணாமூர்த்தியின் திருவுருவங்கள், 28 சிவாகமங்களைக் குறிப்பனவாக அமைந்துள்ளன எனலாம். இந்தத் தூணில் உள்ள காட்சிகள் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளன. மேற்பகுதியில் ஜகத்குருவாக விளங்கும் தட்சிணாமூர்த்திப் பெருமானின் முன்னால் சனகாதி முனிவர்கள் நால்வர் நின்ற வண்ணமாய், இருகரங்களைக் கூப்பிக் கொண்டும் பெருமானின் உபதேசச் சிறப்பு அம்சங்களை அனுபவித்துக் கொண்டும் இருக்கின்றனர்.

இதற்குக் கீழ்ப்பகுதியில் தேவர்களின் துயர் துடைக்கவும், முருகப் பெருமான் திருவவதாரம் கொண்டருளவும், இந்திரன் முதலான தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மன்மதன் தனது கரும்பு வில்லால் யோகநிலையில் விளங்கும் பெருமானின் மீது கணை தொடுக்கின்றான். பெருமானோ ஒன்றையும் பற்றாது ஞான சொரூபமாக இருந்து தன் மனத்துள் எல்லாவற்றையும் கண்டும் காணாமலும் உணர்ந்து வீற்றிருக்கின்றார். காமனின்கணை பட்டவுடன் பெருமானின் நெற்றிக்கண் மலர, காமன் பஸ்பமாகி அப்படியே விழுகின்றான். இக்காட்சி மூன்றாவதாக அமைந்துள்ளது. விழும் போது காமன் இருகரங்களைக் கூப்பியவாறே விழுகின்றான். இவனது கரங்களுக்குப் பக்கத்தில் ரதிதேவி மாங்கல்யப் பிச்சைக் கேட்டு அழுது புலம்புகின்றாள். ஞான மூர்த்தியின் திருவடியை நோக்கித் தனது இருகரங்களையும் தலைக்கு மேலே தூக்கியவாறு ''சம்போ'' என்று கூறுவது போல கண்ணீர்மல்க வேண்டுகின்றாள். பெருமான் ரதியின் துயர்துடைக்க அநுக்கிரகிக்கின்றனர். ரதியின் மாங்கல்யம் காக்கப்படுகிறது. இத்தகைய புராணக் காட்சிகளைச் சிற்பி நமக்கு உயிரோட்டமாக வடித்துக் கொடுத்துள்ளார். மேலும் இவ்வாலயத்தில் சிறியது பெரியதுமாக இருபத்து எட்டு தட்சிணாமூர்த்தி உருவங்கள் உள்ளன.

ஆய்விற்குரியது:

தாராசுரம் ஸ்ரீ ஐராவதேஸ்வரர் திருக்கோயிலினுள் விளங்கும் மத்திய தொல்பொருள் ஆய்வுக்கூடத்தில் ஒரு தட்சிணாமூர்த்தி சிலை காணப்படுகின்றது இச்சிலை மிகவும் தெளிவின்றிப் பின்னமாக உள்ளது. இதன் உயரம் 60 செ.மீ ஆகும். முடிகளெல்லாம் ஒரு சேர அமைந்த கேசபந்தமாக உள்ளது. பின் இருகரங்களும் அலபத்ம ஹஸ்தமாகவும் விஸ்மய ஹஸ்தமாகவும் உள்ளன. பெருமான் ஒருவகை வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். கல்லால மரமின்றி இருபத்துமூன்று (23 சுடர்கள்) சுடருடன் கூடிய திருவாசி காணப்படுகிறது. இத்திருவுருவம் ஆய்வுக்குரியதாக அமைந்துள்ளது.

தூணில்காணப்பெறும் வீணாதாரர்:

மேலும் தாராசுரம் ஸ்ரீ ஐராவதேஸ்வரர் திருக்கோயிலின் மகா மண்டபத்தூணில் வீணாதர தட்சிணாமூர்த்தி நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். செருக்குடன் நின்று கொண்டிருக்கும் முயலகன்



திருக்கருக்காவூர் - ஸ்ரீ முல்லைவனநாதர் திருக்கோயில்
ஞான வியாக்யான தட்சிணாமூர்த்தி

தலையில் தனது இடப்பாதத்தைப் பதியவைத்துள்ளார். திருவடியின் சிறப்பை அறியாத இவனோ மாய இருளில் அகப்பட்டமையால் துன்பம் தாங்க மாட்டாது அலறி இரு கரங்களையும் விரித்தாற்போன்று காணப்படுகின்றான். இது இப்பகுதியில் ஓர் அரிய சிற்பமாகும். பல்லவர்களின் கலைத்திறத்தில் அமைந்த மாமல்லபுரத்து வீணாதர தட்சிணாமூர்த்தியானவர் நின்று கொண்டிருக்கின்ற முயலகன் தலையில் தனது பின் இடக்கரத்தை வைத்து அழுத்தியமையினைக் கண்டு இங்கு சோழர்கள் மாய இருளை முழுவதுமாக அகற்றி அருளுபவன் என்பதனை உணர்த்தும் பொருட்டு இப்படி வடித்தனர் போலும் என்று எண்ண வேண்டியுள்ளது.

ஜடாபாரத்துடன் விளங்கும் இவர் இருகரங்களுடன் விளங்குவது சற்று உற்று நோக்கத்தக்கது. அவ்விரு கரங்களும் வீணையினை ஏந்தி மீட்டும் நிலையில் உள்ளன.

வீணாதரப் பெருமானின் இருமருங்கிலும் இருமுனிவர்கள் வீணை ஏந்திய நிலையில் நிற்கின்றனர். முனிவர்களின் கரங்கள் அலபத்மகரமாக உள்ளன. இக்கர அமைதியானது நாதத்திற்கே தலைவனாகிய பெருமான் வாசிக்கும். நாதஒலியின் சிறப்பை மகிழ்வுடன் அறிவிப்பனவாக அமைந்துள்ளன.

முல்லைவனநாதர் ஆலயத்தில் தட்சிணாமூர்த்தி

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த திருக்கருகாவூரில் ஸ்ரீ முல்லைவனநாதர் திருக்கோயில் விளங்குகின்றது. இத்திருக்கோயிலின் தேவ கோஷ்ட மாடத்தில் வனத்தில் இருப்பது போன்ற ஓர் உணர்வினை அப்படியே நமக்கு மோனநிலையில் இருந்து ஞான நிலையினைப் புகட்டும் வியாக்கியான தட்சிணாமூர்த்தியைத் தரிசிக்கலாம். பத்ரபீடத்தில் விளங்கும் இப்பெருமான் வீராசனம் கொண்டு வேதத்தின் உண்மைப் பொருளை முனிவர்களுக்கு உணர்த்துகின்றார். பின்னால் விளங்கும் ஆலமரத்தில் உருத்திராக்க மாலையும், விபூதிப்பையும், மரப்பொந்தில் பறவைகளும் மரக்கிளை யிலிருந்து படம் எடுத்துச்சீறும் பாம்பும், யோகதண்டமும் காணப்படுகின்றன.

ஞானகாரணராகிய பெருமான் ஜடாபாரத்துடன் விளங்குகின்றார். நெற்றிப்பட்டம், பத்ர பூரிமம், கண்டாபரணம், ஏகருத்திராக்கம் யக்ஞோபவீதம் ஜபமாலை ஆகியவை திகழ, காதுகளில் காதோலையும், மகரக்குழையும் அணிசெய்யக் காட்சிதருகின்றார். பின்கரங்களில் அக்னியும், ஜபமாலையும் ஏந்தியுள்ளார். முன்வலக்கரம் வியாக்கியான முத்திரையினைக் காட்டவும் முன் இடக்கரம் வேதச்சுவடி கொண்டு விளங்கவும் அருள் நோக்கராய் பத்ர பீடத்தில் அமர்ந்துள்ளார்.

இப்பெருமானின் திருவுருவம் சுமார் 3 1/2 அடி உயரம் உள்ளதாக அமைந்துள்ளது. வலப்பக்கம் மேற்குப்பகுதியில் தம்பதியர் இருவர் தொழுத வண்ணம் வரம் பெறவேண்டும் என்ற நிலையில் காணப்படுகின்றனர். இதன் கீழே முனிவர் இருவர் மௌனியாக விளங்கும் பெருமானின் திருக்குறிப்பை நோக்கிய பாவனையில் அமர்ந்துள்ளனர். இடப்பக்கம் மேலே வீணை ஏந்திய இருவர் உள்ளனர். இதற்குக் கீழ் இருமுனிவர்கள் உத்குடிகாசனத்தில் இருந்து யோசிக்கும் பாவனையில் விளங்குகின்றனர். முனிவர்கள் கேசங்கள் எல்லாம் ஜடாமகுடமாகக் காணப்படுகின்றன. பெருமானது திருவடிக்கீழே முயலகன் உள்ளான். பத்ரபீடத்தின் இருமருங்கிலும் இருமான்களும் மற்றும் சீறிப்படம் எடுத்துள்ள பாம்பும் தம் பகைமை நீங்கி அமைதியாகவே உள்ளன. முல்லைவனத்தில் மோன நிலையில் விளங்கும் பெருமானைத் தரிசித்தால் நம்மனத்தில் சாந்தி என்றும் நிலவும்.

யோகபட்டை கொண்ட இலம்பையங்கோட்டூர் ஞானமூர்த்தி

இலம்பையங் கோட்டூரில் உள்ள இந்தத் தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் சற்று மாறுபட்ட அழகிய தோற்றத்துடன் காணப்படுகிறது. ஜடாபரத்துடன் தோன்றும் இவரது திருமுகத்தின் எழில் அமைதி காண்பவரின் உள்ளத்தை நெகிழச் செய்கின்றது. பின் வலக்கரத்தில் விளங்கும் திரிசூலம்



யோக பட்டையுடன் ஞானமுத்திரை காட்டும்
இலம்பையங்கோட்டூர் ஞானமூர்த்தி

பீடத்திலிருந்து நேராக (செங்குத்தாக) நெற்றிப்பட்டைவரை நீண்டு காணப்படுகிறது. பின் இடக்கரத்தில் தீச்சுடர் விளங்குகின்றது. முன் வலக்கரம் சின்முத்திரையை மார்போடு பொருத்திக் காட்டுவதாக அமைந்துள்ளது. இதன் கருத்து சின்முத்திரையின் உட்பொருளை நெஞ்சில் நிறுத்தவேண்டும் என்று அறிவிப்பது போன்றுள்ளது. சுவடியேந்திய முன்இடக்கரமானது இடக்கால் முட்டியின் மீது காணப்படுகிறது. வல முழங்கால் யோக பட்டையால் இடுப்புடன் பிணைக்கப்பட்டுள்ளது. இடப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. ஜடாமகுடத்துடன் விளங்கும். இருமுனிவர்கள் இப்பெருமான் அருகில் காணப்படுகின்றனர். இத்திருவுருவத்தின் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு என்பர்.

திருவலஞ்சுழி - ஊர்த்துவ ஜானு வீணாதரர்

ஊர்த்துவஜானு கோலத்தில் காட்சி தரும் இந்த வீணாதர மூர்த்தியின் திருவுருவம் தஞ்சாவூர் அரண்மனை வாளகத்தில் உள்ள கலைக்கூடத்தின் உட்பகுதியில் காணப்படுகிறது. இச்சிலை திருவலஞ்சுழியில் கிடைக்கப் பெற்றதாகும். இதன் காலம் கி.பி.10ஆம் நூற்றாண்டு என ஆராய்ச்சியாளர்களால் கருதப்படுகிறது. இத்திருவுருவ அமைதியைக் காணும் போது இதுவும் சோழர்காலத்தின் படைப்புக்களில் ஒன்றாக விளங்குகின்றது எனலாம். (ஒரு காலை உறுதியாகக் கீழே ஊன்றி, மற்றொரு காலைப் பீடத்தின் மீது அல்லது ஒரு உருவத்தின் மீது தூக்கி வைத்து மடித்து நிற்கும் கோலம் ஊர்த்துவஜானு என்று சொல்லப்படும்)

ஊர்த்துவஜானு நிலையில் விளங்கும் இவ்வுருவம் 134 செ.மீ உயரமுடையதாகவும் கற்பலகையுடன் கூடிய புடைப்புச் சிற்பமாகவும் விளங்குகிறது. இப்பெருமானானவர் தமது இடக்காலை நேராக தாமரையின் மீது உறுதியாக நிறுத்தியும், முயலகனின் தலைமீது தனது வலக்காலைத் தூக்கிவைத்து மடித்து ஊன்றியும் உள்ளார். முன்கரங்களில் வீணை இருந்தும் தற்போது அவ்வீணை முற்றிலும் சிதிலமடைந்துள்ளது. ஜடாமண்டலத்துடன் காணும் இப்பெருமகனாரான வீணாதரமூர்த்தி ஏழிசையையும் மீட்டியவராய் நின்று ஆகாயத்தைக் காணுமாறு போல திருமுக அமைப்பு காணப்படுகிறது. கழுத்தில் கண்டாபரணமும், கைகளில் காப்புகளும், பாதங்களில் சிலம்பும் அணிவிக்கப்பட்டுள்ளன. ஏனைய இடங்களில் பெரும்பாலும் அபஸ்மாரம் என்கிற முயலகன் முதுகின்மீது பெருமானது பாதம் பதிந்து காணப்படும். ஆனால் இங்கோ முயலகனின் தலை மீது வீணாதரப் பெருமானின் திருப்பாதம் பதிந்துள்ளது. திருப்பாதம் பட்டதும் ஒரு உத்வேகத்தினை முயலகன் முகத்தில் காணலாம். இக்கலைக் கூடத்தில் காணவேண்டிய அரிய சோழர்கால சிற்ப வரிசையில் ஊர்த்துவஜானு வீணாதரரின் சிற்பம் முதன்மை பெற்று விளங்குகிறது.

சிவபுரம் - ஞானமூர்த்தி

செங்கை அண்ணாமாவட்டத்தில் உள்ள சிவபுரத்துச் சிவாலயத்தில் இந்த ஞானமூர்த்தி காட்சி தருகின்றார். கல்லால மரத்தின் கிளைகள் பெரியனவாக விளங்குகின்றன. மரத்தின் கிளையில் பாம்பு ஒன்று படம் எடுத்துச் சீறும் நிலையில் உள்ளது. விபூதிப் பை, தொங்குகிறது. மரப்பொந்தில் பறவைகள் பெருமானை எட்டிப்பார்த்தபடி உள்ளன. இப்பெருமான் பத்ரபீடத்தில் சர்வாபரண பூஷிதராக வீராசனம் கொண்டு காட்சி தருகின்றார். பின் இடக்கரத்தில் திகழும் தீச்சுடர் உயர்ந்தும் எடுப்பாகவும் உள்ளது. பின் வலக்கரத்தில் ஜபமாலையும், முன் கரங்களில் சுவடியும், ஞானமுத்திரையும் கொண்டு விளங்குகின்றார். வலக்காதில் மகரக்குழையும் இடக்காதில் அணி ஏதும் இல்லாமலும் இருக்கின்றார். ஜடைகள் எல்லாம் மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்தாற்போன்று (ஜடாபாரம்) உள்ளன. சின்முத்திரையான ஞானமுத்திரை ஹஸ்தத்தின் கீழ் ஒரு நாகமும் உள்ளது. முயலகன் சற்று மாறி காணப்பட்டாலும் பெருமானின் ஆற்றல் தாங்கமாட்டாது பூமியை நோக்கியவாறு விழிகள் பிதுங்கக் காணப்படுகின்றான். மேலும் பீடத்தில் சில சிறுவிலங்குகள் பெருமான் தமது சிந்தனையை ஒன்றாக்கிய ஞான நிலையினை இத்திருவுருவத்தில் நாம் காண்கிறோம். இத்திருவுருவம் கி.பி.10-ஆம் நூற்றாண்டு சோழர் காலத்தது ஆகும்.

அத்தியூர் குருமூர்த்தி

இத்திருவுருவத்தைச் செங்கை அண்ணாமாவட்டத்தில் உள்ள அத்தியூர் சிவாலயத்தில் காணலாம். பெருமானது ஜடைகள் வளைந்தனவாக, சற்றுப்பக்க வாட்டில் விரிந்து கீழ்நோக்கியபடி உள்ளன. எல்லா ஆபரணங்களும் அணிந்துள்ள இப்பெருமான் நான்கு கரத்திலும் அக்னி, ஜபமாலை, சின்முத்திரை, சுவடி கொண்டு அருட்காட்சித் தருகின்றார். வீராசனத்தில் திகழும் பெருமானின் பாதப்பகுதியில் நான்கு முனிவர்கள் ஜடாபந்தத்துடன் அமர்ந்துள்ளனர். பெருமானின் காலடியில் முயலகன் அழுந்திய நிலையில் காணப்படகின்றான். புன்முறுவலுடன் காணும் இக்குருமூர்த்தியின் பேரழகு சிறப்புடையதாகும். இத்திருவுருவம் கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

அர்த்த பத்மாசன ஞானமூர்த்தி - திருநாகேஸ்வரம்

தஞ்சைமாவட்டம் - திருநாகேஸ்வரம் ஸ்ரீ நாகநாத சுவாமி கோயிலின் அம்மன் கோயில் (ஸ்ரீகிரி குஜாம்பிகைக்கோயில்) வடக்குப் பிரகாரத்தில் சிவபெருமானின் நான்கு திருவுருவச் சிலைகள் காணப்படுகின்றன. அதில் ஒன்று தட்சிணாமூர்த்தியின் திருவுருவமாக அமைந்துள்ளது. ஞானத்தை உணர்த்தும் இவரது பின்கரங்களில் திரிசூலமும், வட்டவடிவில் அமைந்த உருத்திராக்கமும் காணப்படுகின்றன. இவரது முன் இடக்கரத்தில் கபாலம் உள்ளது. முன் வலக்கரத்தினால் ஞானமுத்திரையாகிய சின்முத்திரையினைக்காட்டி யோகநிலையில் அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்தவாறு காட்சி தருகின்றார். இப்பெருமானின் ஜடைகள் எல்லாம் ஒரு சேர மேல் நோக்கிக் கட்டியவாறு. அமைந்த ஜடாபந்தமாக விளங்குகின்றது. இவரது கரங்களில் காப்பு, தோள்வளை விளங்குகின்றன. ஜடாபந்தத்திற்குக்கீழே நெற்றிப்பட்டமும், மார்பில் யக்ஞோபவீதமும் காணப்படுகின்றன. யக்ஞோபவீதமானது சற்று மெல்லியதான பட்டையாக உள்ளது. காதுகளில் குண்டலங்கள் காணப்படுகின்றன. பின் கரத்தில் திகழும் திரிசூலத்தின் அடிப்பகுதி பீடம் வரைநீண்டு உள்ளது. ஞானத்தைப் புகட்டும் இப்பெருமானின் திருப்பார்வை கீழ்நோக்கியவாறு புன்முறுவலுடன் அமைந்துள்ளது. இத்திருவுருவப் பேரழகினைக்காணும் போது இது முற்காலச்சோழர்களின் படைப்பாக இருக்கலாம் எனக் கருதத்தோன்றுகின்றது. இச்சிலையின் உயரம் 118 செ.மீ. அகலம் 65 செ.மீ ஆகும். இவ் ஆலயத்தின் தெற்கு மேற்கு, வடக்குப் பிரகாரங்களில் காணும் சிலைகள் யாவும் ஆராய்ச்சியாளர்களின் ஆய்விற்குரியனவாக அமைந்துள்ளன.

நாகலாபுரம் சமபாத ஸ்தானக வீணாதர தட்சிணாமூர்த்தி

நாகலாபுரத்தில் கோயில் கொண்டு விளங்கும் வீணாதர தட்சிணாமூர்த்தி சமபாத ஸ்தானமாக நின்ற நிலையில் முன்வலக்கரத்தால் வீணையினைவாசிக்கும் பாவனையிலும், இடக்கரத்தால் வீணையைப் பற்றிய நிலையிலும் காட்சி தருகின்றார். பின் இடக்கரத்தில் மானும், பின் வலக்கரத்தில் மழுவும் காணப்படுகின்றன. சந்திரனும் கங்கையும் இவரது ஜடாமண்டலத்துக்கு மேலும் அழகூட்டுகின்றன. ஜடாமண்டலத்தைப் போன்று இவருக்குப் பின்னால் கல்லாலமரம் விளங்குகிறது. சர்வாபரணத்துடன் காட்சி தரும் இவரது திருவடிகளின் கீழ் பல்வேறு நிலைகளை உடைய நான்கு முனிவர்களும் காட்சி தருகின்றனர். முயலகன் பெருமானது திருவடிகளுக்கும் முனிவர்களின் ஜடாபந்தத்திற்கும் இடையில் காணப்படுகின்றான். (சமபாதஸ் தானகமாவது - நின்ற கோலத்தில் பாதங்களைச்சமமாகவைத்து உடலைவளைக்காமல் நேராக நிற்பதாகும்).

மயிலாடுதுறை - ஐயாறப்பர்கோயில் தட்சிணாமூர்த்தி

இக்குருமூர்த்தி - இவ்வாதீனத்திற்குச் சொந்தமான மயிலாடுதுறையில் விளங்கும் ஐயாறப்பர் திருக்கோயிலின் தெற்குத்தேவ கோஷ்ட மாடத்தில் விளங்கயருளுபவர். கல்லால மரம் தனிக் கற்பலகையில் அமைக்கப் பெற்றுள்ளது. இந்த வியாக்கியான மூர்த்திப் பெருமான் பத்ரபூரிமமும், மூன்றாம் பிறைச் சந்திரனும் கூடிய ஜடாபாரத்துடன் விளங்குகின்றார். பத்ர பீடத்தில் அமர்ந்த



ஸ்ரீ ஞானதக்ஷிணாமூர்த்தி
ஐயாரப்பர் ஆலயம்
மயிலாடுதுறை.

இப்பெருமான் தனது இடமுழங் காலினைச் சற்று மேல் நோக்கியவாறு (தூக்கினாற் போன்று) வீராசனம் கொண்டு அமர்ந்துள்ளார். கண்டாபரணமும், ஐம்பத்து நான்கு உருத்திராக்க மணிகள் கொண்ட மாலையும், யக்ஞோபவீதமும் இவரது திருமார்புக்கு அழகூட்டுகின்றன.

பின் இருகரங்களில் அழித்தலுக்குரிய அனலும் (சுடர்) ஜபத்திற்குரிய ஜபமாலையும் தன்தோளைவிட்டு எப்போதும் அகலாத சர்ப்பமும் (நாகம்) உள்ளன. முன்வலம் இடம் ஆகிய இருகரங்களிலும் முறையே வியாக்யான முத்திரையும், சிவஞானபோதச் சுவடியும் விளங்குகின்றன. வியாக்ர சர்மத்துடன் கூடிய சுரோணிப்பட்டையும், கால்களில் வீரகண்டாமணி, சிலம்பு, தண்டை ஆகியவையும் எடுப்பாக உள்ளன.

இப்பெருமான் பின்னால் கழுத்து மணிகள் அணிந்த நந்தியம் பெருமான் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். இவரது வலத்திருவடி ஜடாமண்டலத்துடன் கூடிய முயலகனின் நடுமுதுகில் பதிந்துள்ளது. மாயத்தால் சிக்குண்ட ஆன்மாக்கள் படும் துன்பம் இவன் முகத்தில் பிரதிபலிக்கின்றது. 6.5.1990 அன்று இத்திருக்கோயிலில் கும்பாபிஷேகம் நிகழ்ந்தமையால் கோயில் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.

திருவீழிமிழலை - பத்ம பாதம் வைத்த பரமன்

தஞ்சை மாவட்டத்தில் - மயிலாடுதுறை திருவாரூர் புகைவண்டிப் பாதையில் உள்ள பூந்தோட்டம் நிலையத்திற்கு மேற்கில் 10 கி.மீ. தூரத்தில் திருவீழிமிழலை எனும் தலம் உள்ளது. கும்பகோணம், திருவாரூர் நகரங்களிலிருந்து இத்தலத்திற்குச் செல்ல பேருந்து வசதிகள் உண்டு.


சுவாமி - வீழிநாதர்

அம்பிகை - சுந்தரகுஜாம்பிகை

இத்தலம் சமயாசாரியார்கள் மூவர் அருளிய 23 தேவாரத் திருப்பதிகங்களைக் கொண்டது. இத்திருக்கோயில் துறைசை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும்.

கோயிலமைப்பு:

ஸ்ரீ வீழிநாதர் கோயில் மாடக்கோயில் அமைப்பினதாகும். சுவாமி மற்றும் அம்பாளுக்குத் தனித் தனிக் கோயில்கள் உள்ளன. கிழைக்கோபுர வாயிலின் அருகில் உள்ள வௌவால் நத்தி மண்டபம் கட்டட வேலைப்பாடுமிக்கது. விண்ணிழி விமானத்தைக் கொண்ட கருப்பக்கிருகத்தில்வீழிநாதரின்(இலிங்கத்திருமேனி திருபின்புறம் பெருமான் திருமணக் கோலத்தில் அருட்காட்சி வழங்குகின்றார்.



ஸ்ரீ ஞானதக்ஷிணாமூர்த்தி
[முயலகன் இல்லாமல்]
திருவீழிமிழலை



மயிலாடுதுறை அம்மன் கோயில்
தெற்குப் பிரகாரம்
உத்குடிகாசன வியாக்யான தட்சிணாமூர்த்தி -
அனவர்த்தி அம்மன் கோஷ்டம்.



திருவீழிமிழலை - ஸ்ரீ வீழிநாதசுவாமி
கோயிலின் மேற்கே உள்ள அவிமுக்தீஸ்வரம்
ஜடாபாரம் வியாக்யான தட்சிணாமூர்த்தி.

கருப்பக்கிருகத்தின் வாயிலில் அரசாணிக்காலும், பந்தற்காலும் தூண்களாக உள்ளன. இத்திருக் கோயில் சிற்பம், கட்டடம், கல்வெட்டுச் சிறப்புகளைக் கொண்டது ஆகும்.

சிற்பச் சிறப்பு:

இத்தகைய சிறப்புடைய திருக்கோயிலின் தேவ கோஷ்ட வரிசையில் பத்ம பாதம் வைத்த மோனமூர்த்தி அருட்காட்சி வழங்குகினறார். இப்பெருமானின் திருமுடி கூடமகுடத்துடன் கூடியதாக அமைந்த ஜடாமண்டலமாகும். காதுகளில் காதோலையும், மகரக்குழையும் விளங்குகின்றன. திருமார்பில் எடுப்பாக விளங்கும், உருத்திராக்கமாலை, கண்டாபரணம், யக்ஞோபவீதம் ஆகியவை காணப்படுகின்றன.

இவரது பின்கரத்தில் அக்னியும், வலக்கரத்தில் மேல் நோக்கி உருட்டும் பாவனையில் அமைந்த ஜபமாலையும் உள்ளன. முன் வலக்கரம் ஞான முத்திரை காட்டுகிறது. முன் இடக்கரம் சுவடியைக் கொண்டுள்ளது. இங்கு இவர் பத்ரபீடத்தில் வீராசனம் கொண்டு விளங்குகின்றார். இவரது வலத் திருவடி தாமரை மலரின் மீது பதிந்துள்ளது. இங்கு முயலகன் இல்லாதது நோக்கத் தக்கதாகும்.

நன்கு நிமிர்ந்த திருக்கோலத்தில் அமைந்த இத்திருவுரு ஒரே கல்லால் ஆக்கப்பெற்ற புடைப்புச்சிற்பம் போல் காணப்படுகிறது. இங்கு பெருமானின் திருப்பாதத்தைத் தாங்கும் தாமரை உடுக்கை போன்ற அமைப்பில் உள்ளது. சோழர் காலக் கலைப்பாணியில் அமைந்த இத்திருவுரு வழிபடுவோருக்கு நன்னெறி புகட்டுவதாக அமைந்துள்ளது.

அருளாளர்களாகிய ஞானசம்பந்தப் பெருமானுக்கும், திருநாவுக்கரசருக்கும் படிக்காசு அருளிய பரமன், இங்கு யோக நிலையில் தாம் அமர்ந்து என்றைக்கும் நிலையாக உள்ள இறைநிலையினை உணர்த்துகின்றார் போலும்!

மேலும் இவ்வாலயத்தின் மேற்கே அவிமுக்தீஸ்வரர் ஆலயத்தில் அமைந்த ஜடாபார வியாக்யான தட்சிணாமூர்த்தி விளங்குகின்றார்.

திருப்பெண்ணாகடத்து ஞானமூர்த்தி

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற 22 நடுநாட்டுத் தலங்களுள் திருப்பெண்ணாகடமும் ஒன்றாகும்.

இறைவன் - சுடர்க்கொழுந்து நாதர்

இறைவி - கடந்தை நாயகி

திருப்பெண்ணாகடம் சிவாலயத்தின் கருப்பக்கிருக விமானம் - கஜப் பிரட்ட விமானமாகும். விமானத்தின் அழகும் அதனுள் விளங்கும் சுதைச் சிற்பங்களின் அழகும் நம்மை வசீகரப் படுத்துவனவாக விளங்குகின்றன. இவ்விமானத்தின் தென்பகுதியில் மேலிருந்து கீழாக சிவகாமி உடனாய ஆடல்வல்லானும், அதற்கு அடுத்தாற் போன்று அபய கரத்துடன் விளங்கும் ஞானமூர்த்தியாகிய தட்சிணாமூர்த்தியின் திருவுருவமும் உள்ளன. தெற்குக் கோஷ்ட மாடத்தில் சிலாரூபத்தில் சின்முத்திரை காட்டும் பெருமானையும் காணலாம்.

அபயம் அருளும் பெருமான்:

இவ் ஆலயத்தின் கஜபிரட்ட விமானத்தில் இரண்டாவதாக அமைவது அபயஹஸ்தத்துடன் விளங்கும் தட்சிணாமூர்த்தியாகும். பரந்து விரிந்த ஜடைகள் இல்லாது நெற்றிப்பட்டையுடன் கூடியதாக அமைந்த இவரது சிரசில் கங்கையும், சந்திரனும் காணப்படுகின்றன. தட்சிணாமூர்த்தியின் வலப்பாதம் தொங்க விட்டபடி முயலகனை மிதித்துள்ளது. இடப்பாதம் குத்திட்டு மடக்கியும் காணப்படுகிறது. அதில் இடக்கரம் தண்ட ஹஸ்தமாக உள்ளது. மார்பில் உருத்திராக்கமணியும் கண்டாபரணமும், இடுப்பில் புலித்தோலாடையும், பாதங்களில் சிலம்பும் காப்பும் விளங்க இவர் காட்சிதருகின்றார். பின்கரங்களில் அக்கினியும் நாகமும் காணப்படுகின்றன. இருமருங்கிலும் யோகியர் நால்வர்



காஞ்சிபுரம் அம்பிகை வழிபடும் யோகமூர்த்தி



திருப்பெண்ணாகடம் சுடர்க்கொழுந்துநாதர் திருக்கோயில் ஞானமூர்த்தி

புடைசூழ்ந்து விளங்க, அடர்ந்து படர்ந்துவிளங்கும் கல்லாலமரமும் காட்சி தருகின்றது.

கோஷ்டப்பெருமான்:

இந்த ஆலய கஜபிரட்ட விமானத் தெற்குத் கோஷ்ட மாடம் முகமண்டபத்துடன் விளங்குகிறது. இதற்குள் சர்வாபரணங்களுடன் முனிவர்கள் சூழ தட்சிணாமூர்த்தி அருட்காட்சி தருகின்றார். முனிவர்களுக்கு விளக்கம் தந்தருளுவதால் வியாக்கியான தட்சிணாமூர்த்தி எனப் போற்றப்டுகின்றார். (கல்லால மரம் தனியாக அமைந்துள்ளது. உயரம் 1 1/2 அடி, பெருமானின் உயரம் 3 1 /2 அடி) பத்ர பீடத்தில் அமர்ந்துள்ள இப்பெருமான் வீராசனத்தில் இருந்து காட்சி தருகின்றார். இப்பீடத்தின் இருமருங்கிலும் வஸ்திரங்கள் தொங்கவிட்ட படியுள்ளது. பின்கரங்களில் தீயகலும், ஜபமாலையும் முன்கரங்களில் சிவஞான போதச் சுவடியும் சின்முத்திரையும் (வியாக்கியான முத்திரை) காணப்படுகின்றன. இவரது கேசங்கள் சுருள் சுருளாக அமைந்த ஜடாபாரமாக உள்ளன. காதுகளில் காதோலை, மகரக்குழை உள்ளன. வலக்கால் முயலகனை மிதித்தபடி உள்ளது. பத்ரபீடத்தின் அடிப்பகுதியில் நாகம் ஒன்று விளங்குகின்றது. வைசிக பந்தம், சடாமகுடம் போல முனிவர்களின் கேசங்கள் அமைந்துள்ளன. அவர்களின் கரங்கள் சின்முத்திரையாகவும் விஸ்மய கரமாகவும் உள்ளன. இப்பெருமான் எழுந்தருளி விளங்கும் இவ்விடம் தியான நிலைக்கு ஏற்ற இடமாகும்.

வீணா கான தட்சிணாமூர்த்தி

மயிலாடுதுறைக்குக் கிழக்கே பொறையாறு கற்சாலையில் 6 கி.மீட்டர் தொலைவில் உள்ள விளநகரில் உசிரவனேஸ்வரர் (துறைகாட்டும் வள்ளல்) திருக்கோயில் விளங்குகின்றது. இத்திருக்கோயில் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும். உசிரம் என்றால் விழல் என்று பொருள்படும். இவ்வூருக்கு ''விழல்'' என்று பெயர். இதுவே பின்னர் விழல்நகர். விளநகர் என்றாயிற்று. தஞ்சையை ஆண்ட அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் இக்கோயிலில் பல திருப்பணிகள் நடந்தசெய்தியும், உத்தம சோழனின் மனைவி இத்திருக்கோயிலுக்கு அர்த்தசாமக் கட்டளைக்கு நிவந்தம் அளித்த செய்தியும் இத்திருக்கோயில் கல்வெட்டுகளால் தெரியவருகின்றன.

இத்திருக்கோயிலின் ராஜகோபுரத்தின் முதல் வரிசையில் இந்த வீணாகான தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் சுதைச் சிற்பமாகக் காட்சி தருகின்றது. கல்லாலமரத்தின் கிளைகளும் இலைகளும் நாக படங்களைப்போல விளங்குகின்றன. இந்த வீணை இசைக் குருமூர்த்தியின் திருமுடியில் பத்ம பூரிமமும் பிறைச் சந்திரனும் காணப்படுகின்றன.

பின் இரு கரங்களில் தீச்சுடரும், நாகமும் விளங்குகின்றன முன் வலக்கரம் வீணையின் தந்திகளை லாவகமாக மீட்டும் பாவனையில் உள்ளது. முன் இடக்கரம் ''மிக நல்லவீணை தடவி'' என்று ஞான சம்பந்தப் பெருமான் கூறுவதுபோல, ஏழு சுரங்களையும் ராகபாவ நிலைகளுக்கு ஏற்றாற் போலத் தந்திகளை விரல்களால் இழைக்கும் பாவனையில் அமைந்துள்ளது. இடையில் புலித்தோலாடை காணப்படுகிறது. வலப்பாதம் முயலகனை ஊன்றியுள்ளது. வீரக்கழல் மணியும், காப்பும், சிலம்பும் வலப்பாதம் கொண்டுள்ளது. இங்கு இடது முழங்கால் மடங்கிய நிலையில் சற்று மேலெழுந்தவாறு வீராசனத்தில் ஒருவகை என்று கூறத்தக்க நிலையில் உள்ளது. குருமூர்த்தியின் அருகில் அஞ்சலி ஹஸ்தங்களுடன் வலமாக சுகமுனிவரும், இடமாக தும்புருவும் அமர்ந்து பக்தியுடன் நாதத்திற்கே தலைவனாக விளங்கும் பெருமானின் நல் வீணையின் இசை கேட்கும் பாவனையில் அமர்ந்துள்ளனர். மற்றும் இவர்களின் முன்னால் முனிவர்கள் இருவர் வெவ்வேறு நிலையில் அமர்ந்துள்ளனர். இங்கு பெருமானின் திருவடியில் சிக்குண்ட முயலகன் மகிழ்ச்சியுடன் காணப்படுவது போல் உள்ளான். நல்லிசை என்றாலே நம் உள்ளத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுத்து, துன்பத்தை நீக்கும். அவ்வாறே பெருமானின் நல்வீணை இசை இவன் காதுகளில் ஒலித்தமாத்திரத்தில் தான் விடுபட்டது போன்ற உணர்வு ஏற்பட்டவன் போலக் காணப்படுகின்றான். இத்தகைய சுதைச்சிற்பம் காண்பவரின் உள்ளத்தை உருக்குகின்றது.

காஞ்சியில் அம்பிகை வழிபடும் யோகமூர்த்தி

இத் தென்முகக் கடவுளின் திருவுருவம் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் உள்ளது. இது போன்ற திருவுருவங்கள் பல நிலைகளில் அந்த ஆலயத் தூண்களிலும் காணப்படுகின்றன. ஜடாமகுடதாரியாகவும் சாந்த முகத்துடனும் விளங்கும் யோகப் பெருமானது மார்பில் யக்ஞோபவீதமும், மகரகண்டியும் கழுத்தில் ஒரு உருத்திராக்கமும் காணப்படுகின்றன. ஜடாமகுடத்தில் சந்திரன் காணப்படுகிறது. வீராசனத்தில் விளங்கும் இப்பெருமான் சற்று சாய்ந்த அமைப்பில் உள்ளார். பின் இரு கரங்களில் மானும், மழுவும் ஏந்தியுள்ளார். பின் இரு கரங்களை மேல் முகமாக இணைத்தாற் போன்றும் மகுடத்திற்கு, மேலும் அழகு செய்வதாகவும் உள்ள மாலையும் காணப்படுகிறது. காதுகளில் மகரக்குழையும், காதோலையும் அணிசெய்கின்றன. இடுப்பிலிருந்து கணுக்கால் வரை வஸ்திரம் அணிவிக்கப்பட்டுள்ளது. இவரது முன் வலக்கரம் ஜபமாலையுடன் கூடியதாக அமைந்த ஞானமுத்திரையுடனும், முன் இடக்கரம் தண்ட ஹஸ்தமாக உள்ள யோக முத்திரையினைக் கீழ்நோக்கிக் காட்டியவாறும் அமைந்துள்ளன.

இப்பெருமானின் வலப்பக்கம் ஞானமுத்திரையினைத் தாங்கிய நிலையில் படமெடுத்த நாகம் காணப்படுகிறது. முனிவர்கள் இருவர் அமர்ந்த நிலையிலும் ஒரு முனிவர் நின்ற நிலையிலும் காணப்படுகின்றனர். மலையின் மீது அமர்ந்து யோகநிஷ்டையில் விளங்கும் பெருமானின் வலப்பக்கம் உமாதேவியார் சர்வாபரணங்களுடன் உடம்பைப் பணிவாக வளைத்த நிலையில் இருந்துகொண்டு பக்தியுடன் தனது வலக்கரத்தால் பெருமான் திருநெற்றியில் திலகம் (சந்தனம்) வைத்து ஆராதிக்கின்றான். பெருமானின் வலத்திருவடிக்கீழ் தருமத்தின் திருவுருவான ரிஷபம் அமர்ந்த நிலையில் உள்ளது. இந்த புடைப்புச் சிற்பத்தை பத்மமானது (தாமரை) தாங்கியுள்ளது. இத்தகைய அமைப்பு வேறு எங்கும் காணாத வகையில் இங்கு அமைந்துள்ளது.

திருக்குடந்தை சோமேஸ்வரன்கோயில் - ஞானதட்சிணாமூர்த்தி



குடந்தையில் சிவன் கோயில்கள் ஏராளம். மகாமக யாத்திரை செல்வோர் தரிசிக்க வேண்டிய கோயில்களில் தலையானது கும்பேச்வரன் கோயில். நாகேச்வரன் , சோமேச்வரன், காசி விஸ்வநாதர், அபிமுகேச்வரர், கவுதமேச்வரன் கோயில் ஆகியவை அவசியம் தரிசிக்க வேண்டிய மற்ற சிவன் கோயில்கள்.

சாரங்கபாணி கோயிலுக்கு அருகில் இருக்கிறது. இதற்கு ‘ஏழைச் சோமேச்வரன் கோயில்’ என்ற பெயரும் உண்டு. அமுத குடத்தை பிரம்மன் ஒரு உறியில் கட்டித் தொங்க விட்டிருந்தான் அல்லவா? அது வெள்ளத்தில் மிதந்து வந்து விழுந்த இடத்தில் ஒரு லிங்கம் உருவானது. அதற்கு ‘சிக்கேசர்’ என்று பெயர். சிக்கம் என்றால் உறி என்று அர்த்தம். நவக்கிரகங்களுள் ஒருவரான சந்திரன், மாமனாரான தட்சப் பிரஜாபதியின் சாபத்துக்குக் ஆளானான். தன் பாவங்களில் இருந்து நீங்குவதற்காக கும்பகோணத்தில் ஒரு தீர்த்தம் உண்டாக்கினான். அதற்குச் ‘சந்திர தீர்த்தம்’ என்று பெயர் அந்தத் தீர்த்தத்தில் நீராடி, வழிபட்டு சாபவிமோசனம் பெற்றான். அது முதல் அவர் சோமேசர் என்று அழைக்கப்பட்டார்.

நவக்கிரகங்களில் பிரகஸ்பதி எனப்படும் கிரகம் தேவர்களின் குருநாதரான வியாழன். இவர் சோமேச்வரரை வழிபட்டார். கடும் தவம் புரிந்தார் தனக்குத் தேவர்களுக்குக் குருநாதராகும் பாக்கியம்

கிடைக்க வழி செய்யவேண்டும் என்று பிரார்த்தனை செய்துகொண்டார். குபேரனை சிவன் அழைத்து அளவில்லாத பொருளைப் பிரகஸ்பதிக்குத் தந்து பெரிய யாகங்களைச் செய்யுமாறு செய்து அந்தப் பதவி கிடைக்க அருள் செய்தார். அது முதல் சோமேச்வரர் வியாழச் சோமேச்வரர் எனப்படுகிறார். இந்தக் கோயிலில் விஷ்ணு வழிபட்ட லிங்கம் இருக்கிறது. அதை 'மாலீசர்' என்கின்றனர்.

குடந்தைக் காரோணம் என்னும் பெயரால் பாடல் பெற்ற தலம் ஒன்று உண்டு. அதைக்காசி விச்வநாதர் கோயில் என்கிற்னர். தேவாரத்தில் குடந்தைக் காரோணத்தார் தேவியின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார். ஞானசம்பந்தர். தேனார் மொழியம்மை என்பது தேவாரத்தில் சொல்லப்படும் பெயர். குடந்தை சோமேச்வரர் தேவியின் பெயரே இது. எனவே, சோமேசர் கோயிலே குடந்தைக் காரோணம் எனப் பலரும் கருதுகின்றனர்.



வடக்கு நோக்கியருளும் திருவொற்றியூர் - மகா தட்சிணாமூர்த்தி

''ஆதிபுரி'' 'பூலோக கைலாயம்' என்றெல்லாம் போற்றப்படும் பழைமையும் பெருமையும் மிக்க திருவொற்றியூர் தியாகராஜர் கோயிலுக்கு அருகில், இந்த வடக்கு நோக்கிய தட்சிணாமூர்த்தி கோயில் உள்ளது. இங்குள்ள வடிவுடையம்மன், மூன்று சக்திகளில் ஞான சக்தியாக, தெற்கு நோக்கி உள்ளார். இந்த அம்மனுக்கு ஞான உபதேசம் செய்யவே, வடக்கு நோக்கி தட்சிணாமூர்த்தி கோயில் கொண்டுள்ளார்.

'சடையன் சாமவேதன்' என்று ஞானசம்பந்தரும், 'சாமத்து வேதமாகி நின்றதோர் சுயம்பு' என்று அப்பரும், 'நான்மறை அங்கம் ஓதிய நாவன்' என்று சுந்தரரும், திருவொற்றியூரைப் பாடியுள்ள னர். எனவே நால்வேத பாடசாலைகள் இங்கு பல இருந்தன. 300 ஆண்டுகட்கு முன் யோகீஸ்வரர் என்ற வேத விற்பன்னர், பலருக்கும் வேதம் கற்பிக்கும் மடாலயமாக, இந்த வட குருதலத்தை அமைத்தார்.

சிவமூர்த்தங்களில் உக்கிரமாக பைரவரும், வசீகரமாக பிட்சாடனரும், ஆனந்தமாக நடராஜரும், கருணாமூர்த்தியாக சோமாஸ்கந்தரும், சாந்தமூர்த்தியாக தட்சிணாமூர்த்தியும் விளங்குகிறார்கள். வடக்குநோக்கியவாறு 8 அடி உயரத்தில் தட்சிணாமூர்த்தி பிரம்மாண்ட மூர்த்தியாக, முகத்தில் சாந்தம் தவழ, நாக உடுக்கை, அக்னி, ஓலைச்சுவடி மூன்று கரங்களிலும், சின்மய முத்திரை காட்டும் அபய ஹஸ்தமும் கொண்டு விளங்குகிறார். உக்கிரமூர்த்திகள் வடக்கு நோக்கி இருக்கும். ஆனால் சாந்தமூர்த்தி இங்கு வடக்கு நோக்கியுள்ளார்.

ஆணவமாகிய முயலகனைக் காலில் மிதித்த வண்ணம், கீழே அமர்ந்துள்ள சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய 4 முனிவர்களுக்கும், மௌன உபதேசகம் செய்கிறார். கல்லால் இவருக்கு மேல் ஆலமரம் குடை பிடிப்பது போல் உள்ள காட்சி, எங்கும் காண இயலாத சிற்ப அற்புதமாகும். மேதா, யோகா, வீணா தட்சிணாமூர்த்திகளுள், இவர் யோக தட்சிணாமூர்த்தியாவார்.

மாதா, பிதாவுக்குப் பின் குருவே பெரியவர். பிரகஸ்பதி, வியாழன், குரு என்றெல்லாம் போற்றப்படும் இவரே உலகில் பெரியவர். 'குருவருள் இன்றித் திருவருள் இல்லை' என்பதால், குருவே தெய்வத்திடம் நம்மை அழைத்துச் செல்பவர் ஆகிறார். வானியல், அறிவியல் கூட கோள்கள் யாவினும் பெரியது 'வியாழன் கிரகம்' தான் என்கிறது. ஜூபிடர் கிரகமே பெரியது. குருவே பெரியவர். குணம், ரூபம் கடந்து ஞானம் தருபவர் குரு. ஆசு குற்றம், இரியர் நீக்குபவர், சீடரின் அறியாமைக் குற்றம் நீக்கும் ஆசிரியர் குரு ஆவார்.

சதாசிவமூர்த்தி முன் தட்சிணாமூர்த்தி தரிசனம்

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினார்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'' - என்று தாயுமானவ சுவாமிகள் அருளிப் பாடியதற்கிணங்க மூன்று வகைச் சிறப்புகளோடு விளங்கும் தலம் புளியறைத் திருத்தலமாகும்.

இருப்பிடம்:

இத்திருத்தலம் நெல்லை மாவட்டத்தில் செங்கோட்டையிலிருந்து 8 கி.மீட்டர் மேற்கே. செங்கோட்டை - கொல்லம் பெருவழிச் சாலையில் இருக்கின்றது.

இறைவன் - சதாசிவமூர்த்தி இறைவி - சிவகாமி

ஆலய அமைப்பு:

பிற்காலத்தில் சேரமன்னர்கள், இவ்வாலயத்தையும் இதைச் சுற்றியுள்ள பிரதேசங்களையும் ஆட்சிசெய்தனர். இத் திருக்கோயில், மலைகளின் சாரலிலே ஒரு சிறிய குன்றின் மேல் விளங்குகின்றது. கற்களில் செதுக்கப்பட்ட திருப்படிகள் இருபதேழினை 27 (நட்சத்திரங்களை உணர்த்துகின்றன) தாண்டிச் சென்றால் இறைவனைத் தரிசிக்கலாம்.

இறைவனும் இறைவியும் தனித்தனிச் சந்நிதிகளில் அருட்காட்சி வழங்குகின்றனர்.

ஞானத்திருவுருக்காட்சி:

பிற ஆலயங்களில் காணாத தனிச்சிறப்பு இவ்வாலயத்திற்கு உண்டு. எல்லாச்சிவாலயங்களிலும் தட்சிணாமூர்த்திப் பெருமான் தேவ கோஷ்டத்தின் தென் திசையில் காணப்படுவார். ஆனால் இங்கு அவ்வாறின்றி மூலஸ்தானத்திற்கு எதிரே நந்திக்கும் இறைவனுக்கும் இடையே ஞானத்தின் திருவுருவமாகக் காட்சியளிக்கின்றார். இவரை ★ குரு என்றும் போற்றி மக்கள் வழிபடுகின்றனர். இவரை ஞானத்தின் திருவுரு என்றும் தேவகுரு என்றும் வியாக்யான குரு என்றும் மோனமூர்த்தி என்றும் சில்ப நூல்களும் சிவாகமங்களும் கூறுகின்றன.

இங்கு தட்சிணாமூர்த்தி, நந்தி சதாசிவமூர்த்தி இம்மூவரையும் ஒரே சமயத்தில் தரிசித்துப் பேறுபெறலாம். இங்கு வழிபடும் பக்தர்கள் ''சதாசிவோம்'' சதாசிவோம்'' என்று குரல் எழுப்புகின்ற போது பிரணவ மந்திரத்தோடு பெருமானின் திருநாமம் போற்றப்படுகின்றது. (சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களின் வாயிலாக 28 சிவாகமங்களும் தோன்றின என்பர்) இவ்வாலயத்தில் கொடிமரம் காணப்படவில்லை.

★ இவ்வாதீனத்திற்குச் சொந்தமான சூரியனார்கோயிலில் – நவக்கிரகங்களில் ஒருவரான வியாழபகவான் (குரு) சூரியனுக்கும் (மூலம்) வாகனமான குதிரைக்கும் இடையே காட்சி தருகின்றார். இதுபோன்ற திருக்கோயில் அமைப்பு உலகில் எங்கும் இல்லை.

மேலும் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள சிவாலயங்களில் தட்சிணாமூர்த்தி மற்றும் கோஷ்ட மூர்த்திகளுக்கு முன்னால் 9 பலிபீடங்களையும் காணலாம். இவ்வாறாக இந்த ஆலயத்தில் ஞானத்திருவுருவமாக எழுந்தருளி விளங்கும் தட்சிணாமூர்த்திப் பெருமானின் தரிசனம் பற்றிய உண்மைப் பொருளையும், பிரதிட்டையின் உட்கருத்தையும் அறிஞர் பெருமக்களின் துணையை நாடி அறிதல் சிறப்புடையதாகும்.

ஸ்ரீ குடித்திட்டை - தட்சிணாமூர்த்தி

தஞ்சாவூர் மாவட்டம் - திருவிடைமருதூருக்கு வடக்குத்திசையில் 5 கி.மீட்டர் தொலைவில் ஸ்ரீ குடித்திட்டை எனும் (திருக்களித்திட்டை என்று தற்போது வழங்கப்படுகிறது) தலத்தில் ஸ்ரீ வேதநாயகி சமேத வேதபுரீசுரர் திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோயில் கருப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், (சுற்றுச்சுவர் தற்போது முழுவதும் விழுந்துவிட்டது) முதலியனபெற்று ஏகதள விமானங்களுடன் விளங்குகின்றன. கிழக்குப் பார்த்தவண்ணம் கருப்பக்கிருகத்தில் இலிங்க வடிவில் ஸ்ரீ வேதபுரீஸ்வரர் அருள்வழங்குகின்றார். டிண்டி, முண்டி துவாரபாலகர்களின் சிற்பம் எடுப்பாகவும் கம்பீரமாகவும் உள்ளது. அம்பிகைகோயில் - முகமண்டபத்தில் இணைந்தாற் போன்று தெற்கு நோக்கி விளங்குகிறது.

முகமண்டபத்தில் வழிபாடில்லாமல் சப்தமாதர்கள், விநாயகர், பைரவர் (உடைந்தநிலையில்) சிவலிங்க பாணம், தாமரைப்பீடத்தில் நின்றுள்ள அம்பிகை முதலான கல் விக்ரஹங்கள் காணப்படுகின்றன.

சுவாமி கோயிலின் தென்பகுதி அர்த்தமண்டப வெளிச்சுவர் மற்றும் கோஷ்டப் பகுதி முழுவதும் 15க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன. தென்புறச்சுவர் மாடத்தில் ஸ்தலவிநாயகர் அருள் பாலிக்கின்றார். சுவரிலேயே புடைப்பாகக் காட்டப் பட்டிருக்கும் தூண்களில் நடன சிற்பங்களும், ஆடல்வல்லானின் சிற்பங்களும் 4 அங்குல உயரத்தில் நகாசுவேலையுடன் அழகாக வடிக்கப்பட்டுள்ளன.

மேலும் கோஷ்ட மாடங்களில் முறையே தெற்கில் தட்சிணாமூர்த்தியும் மேற்கில் விஷ்ணுவும் வடக்கில் பிரமனும், இருகரம் உள்ள துர்க்கையும் விளங்குகின்றன.

ஞானமூர்த்தி:

இத்திருக்கோயிலில் விளங்கும் தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் பத்ரபீடத்தின் முன் பகுதியில் வீராசகனமாகவும் தொங்கும் வலக்காலானது இடப்பக்கம் சாய்ந்தவாறும் முயலகனை அழுத்திய நிலையிலும் உள்ளது. கல்லாலமரம் முழுமை பெறவில்லை பெருமானின் பின்கரங்களில் அக்னியும், ஜபமாலையும் உள்ளன. முன்வலக்கரம் சின்முத்திரை காட்டியபடி வேதச் சுவடிகளின் உண்மையினை இருமருங்கிலும் உள்ள நான்கு முனிவர்களுக்கு விளக்குவதுபோல் உள்ளது. பிறையுடன் காணப்படும் இப்பெருமானின் ஜடைகள் ஜடாபாரமாக விளங்க, அப்ஸ்ரஸ்களும், மிருகங்களும் சூழ அமர்ந்துள்ளார். பீடத்திலிருந்து தட்சிணாமூர்த்தியின் உயரம். 3 $^1/_2$ அடியாகும். இத்திருக்கோயிலின் திருக்குளம் கோயிலின் பின்பகுதியில் உள்ளது.

இத்தகைய கலையம்சமும், சிற்ப அழகும், கலைத்திறனும் உள்ள இத்திருக்கோயிலுக்கு இராசகேசரி வர்மன் செம்பியன்மாதேவியார், முதலாம் இராசஇராசன், உத்தமசோழ தேவரின் தேவி. முதலாம் இராஜேந்திரன் முதலானோர், விளக்கு எரிக்க நிவந்தங்கள் வழங்கியும், பாத்திரங்களும், நிலங்களும், காசுகளும், நிவந்தமாகக் கொடுத்தும் சிறப்பு செய்த செய்திகள் யாவும் இத் திருக்கோயில் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இக்கோயில் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மக்களும், அரசாங்கமும் இணைந்து, இதனைப் புதுப்பித்து பராமரித்தல் வேண்டும். இக்கோயிலில் விளங்கும் தட்சிணாமூர்த்தியின் சிற்பம் வேறு எங்கும் காணாத வகையில் உள்ளது என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்தாகும்.

தனிக்கோயில் கொண்ட மோனமூர்த்தி

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள அகரம் கோவிந்தவாடி என்ற ஊரில் மோனமூர்த்தியாக விளங்கும் தட்சிணாமூர்த்திப் பெருமான் தனிக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். இப்பெருமானின் திருவருள் எளியோர்க்கு மேலும் சித்திக்கும் பொருட்டு எழுந்தருளும் மூர்த்தியாக இங்குக் காட்சி தந்தருளுகின்றார். (காஞ்சீபுரம் அரக்கோணம் பேருந்து மார்க்கத்தில் காஞ்சிக்குத் தென்மேற்கே பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவில் பேருந்து தடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் மேற்கே அமைந்துள்ள சிறிய ஊர் அகரம் கோவிந்தவாடி) இத்திருக்கோயில் தமிழகத்தில் தட்சிணாமூர்த்திக்கு என்று விளங்கும் இரண்டாவது தனிக்கோயிலாகும். சிலா ரூபத்தில் காணும் தட்சிணாமூர்த்தியின் காலடியில் இரண்டு ரிஷிகளையும் யானை மீது இருக்கும் துவார பாலகர்களையும் இங்குக் காணலாம்.

இத்திருக்கோயிலின் கட்டுமானப் பணியினை நோக்கும் போது இது 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர்காலப்படைப்பே என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

உற்சவமூர்த்திப் பெருமான் ஜடாபாரமும், சாந்தம் தவழும் திருமுகமும், கரங்களில் விளங்கும் தீச்சுடரும் நாகமும் ஜபமாலையுடன் விளங்கும் ஞானமுத்திரையும். சுவடி முதலயினவும் விளங்க இக்குருமூர்த்தி வீராசனத்தில் விளங்குகின்றார். முயலகனது உருவம் பீடத்தின் வலப்பக்க ஓரமாக இருக்கிறது. பெருமான் திருவடி அவனது முதுகில் பதிந்துள்ளது. முனிவர்கள் (இருவர் இருவராக) நால்வரும் அஞ்சலி ஹஸ்தமாகக் காணப்படுகின்றனர். சகல வித்தைகளையும் அருளும் மோன மூர்த்தியின் பெருமையினை நேரில் தரிசித்து உணரலாம்.

தில்லை - வீணாதர தட்சிணாமூர்த்தி

ஆடல் வல்ல பெருமான் எல்லையில்லாத ஆனந்த நடனம் புரியும் தில்லையம்பதியில் அமைந்துள்ள இச்செப்புத் திருமேனி வீணாதர தட்சிணாமூர்த்தியின் எழில் மிகுந்த தோற்றமாகும். இப்பெருமான் ''வைதஸ்திக ஸ்தானக நிலையில்'' சற்று வலமாக வளைந்து எழிலுடன். நிற்கின்றார். சிரசில் ஜடாமகுடம், காதில் குண்டலம், கழுத்தில் கண்டமாலை, மார்பில் பதக்கம், பூணூல், வயிற்றில் உதரபந்தம் ஆகியவை விளங்க அழகிய கோலத்துடன் காட்சி தருகின்றார். இடுப்பில் அரைக்கச்சையும், திருவடிகளில் பாதசரமும் புனைந்துள்ளார்.

பின் இருகரங்களிலும் மானும் மழுவும் தோற்றமளிக்கின்றன. முன் இரு கரங்களும் வீணை ஏந்திய நிலையில் விளங்குகின்றன. வலக்கை வீணையை மீட்டுகின்ற பாவனையில் விளங்குகின்றது. இடக்கை கட்டை விரலும் சிறுவிரலும் நீங்கலாக ஏனைய மூவிரல்களும் வீணையில் தந்தியை மீட்டும் பாவனையில் அமைந்துள்ளது. இதனை நோக்கும்போது கீழ்ஸ்தாயி, மேல்ஸ்தாயி வாசித்து மத்திம ஸ்தாயியில் நிரவல் செய்வது போல இருப்பது இசைநுணுக்கம் வல்லார் கண்டுகளிக்க வேண்டியதொன்றாகும்.

இசையே வடிவமாக விளங்கும் வீணாதரதட்சிணாமூர்த்தியின் எழிலுருவம் காணக் காண இன்பம் பயக்கும்.

நல்வழிகாட்டும் சிவஞான வள்ளலார்

''ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது'' என்பது பழமொழி. மயிலாடுதுறையாகிய மாயூரத்தில் துலாக்கட்டத்தில், இடப தீர்த்தக் கரையில் வட பக்கத்தில் உள்ளது வள்ளலார் கோயில்.

இறைவனே அனைவர்க்கும் வழிகாட்டும் வள்ளல். வடமொழியில் 'வதான்யேஸ்வரர்' என வழங்கப்பெறுகிறார் இச்சிவபெருமான். இறைவி ஞானாம்பிகை. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறப்புடைய இத்தலத்தில் தட்சிணாமூர்த்தி சந்நிதி மிகவும் சிறப்புடையது. ஏனைய தட்சிணாமூர்த்திகளை விட இம்மூர்த்திக்குள்ள சிறப்பு, இப்பெருமான் நந்தியெம் பெருமான் மீது எழுந்தருளி இருப்பது.

சிவபெருமானைத் தாங்கும் புண்ணியப் பேறு பெற்றது இடபம். தன் மீது எழுந்தருளி இருப்பதால்தான் பெருமானால் விரைவாகச் செல்லமுடிகிறது என இடபம் இறுமாப்பு கொண்டது. இதனை அங்கு இங்கு எனாதபடி எங்கும் உள்ள இறைவன் அறிந்தார். இடபதேவரின் இறுமாப்பைப் போக்கவும், சிறந்த ஞானம் அருளவும் திருவுளம் கொண்டார். தன் சடாமுடியிலிருந்து நுனி ஒன்றை எடுத்து இடபத்தின் மேல் இட்டார். அதன் சுமையை இடபத்தால் தாங்க முடியவில்லை. மன்னித்தருளுமாறு மன்றாடினார் இடபதேவர்.

பெருமான் மன்னித்தருளினார். ஞானோபதேசம் செய்தார். குருமூர்த்தியாகிய நிலையில் வாகனமாக ஏற்றருளினார். அத்திருவுருவமே மேதா தட்சிணாமூர்த்தியாக அனைவராலும் போற்றி வணங்கப்படுகிறது. தன்னை வணங்குவோர்க்கு பாரமார்த்திக, லௌகீக வழிகளைக் காட்டும் வள்ளலாராக இங்கு விளங்கு கின்றார் சிவபெருமான்.

இங்கே குறிப்பிடத்தக்க விஷயம் என்னவெனில் தர்மமே வடிவாக உள்ள இடப தேவருக்கு கர்வம் எழ வாய்ப்பே இல்லை. ஆணவம் நீங்கினால் மட்டுமே ஞானம் எய்த முடியும் என்று நமக்குக் காட்டவே இப்படியோர் திரு விளையாடல் நிகழ்த்தப்பெற்றது.

காவிரிதீர்த்தம்:

ஐம்புலன்களையும் வென்றவர் கண்ணுவ மகரிஷி. இவர் கங்கையில் நீராட விரும்பினார். மயிலாடுதுறையைக் கடந்த பொழுது அழகற்ற மூன்று பெண்கள் வழி மறித்தனர். இம்முனிவரைத் தொடர்ந் தனர். அம்மூவரும் கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் நதி தெய்வங்கள். மக்கள் இந்நதிகளில் மூழ்கியதால் நதி தேவதைகளைப் பாவம் பற்றியிருந்தது. அதனால்தான் ஒளி, அழகு இழந்திருந் தனர். அப்பாவம் நீங்க காவிரியில் நீராடி ஞான வள்ளலை வழிபடச் செல்வதாக முனிவரிடம் கூறினர் நதி தேவதைகள். அவர்கள் மூலம் இத்தலப் பெருமை அறிந்த முனிவர் காசிக்குச் செல்வதை மறந்தார்; காவிரியை அடைந்தார்; ஆசிரமம் அமைத்தார்; முறைப்படி நீராடி வள்ளலாரை வழிபட்டார்; சிவஞானம் கைவரப் பெற்றார்.

திருமாலும் தனக்கு நேரிட்ட ஒரு சாபத்தை இப்பெருமானை வணங்கி நீக்கிக் கொண்டதாகத் தல வரலாறு கூறுகிறது. இங்குதான் அகத்திய முனிவருக்கு சிவஞானம் உண்டாயிற்று நான்முகன் படைத்தல் தொழிலை வரமாகப் பெற்றதும் இத்தலத்தில்தான்.



ஸ்ரீ வதான்யேஸ்வரர்



ஸ்ரீஞானாம்பிகை



ஸ்ரீ தட்சிணாமூர்த்தி [உற்சவர்]

குரு தலமாக விளங்கும் இங்குள்ள ஸ்ரீமேதா தட்சிணாமூர்த்தி மீது தருமை ஆதீனம் 10வது குருமணி ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகர் அருட்பா ஒன்றினை அருளியுள்ளார். அதில் 10வது பாடலில், ''தனக்கு இந்திராதி வாழ்வு, கலைஞானம், புகழ் என எதுவும் தேவையில்லை. ஆணவம் கன்மம், மாயை நீங்கி அடியார்கள் பாதத் தாமரைகளை தலையில் ஏற்க வேண்டும்'' என்று வேண்டுகின்றார்.

தருமை ஆதீனத்தின் அருளாட்சியில் உள்ள இத்திருக்கோயிலில் பல அன்பர்களின் பொருள் உதவியுடன் தருமைக் குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள் திருவுளப்பாங்கின் வண்ணம் புதிதாக ராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கோயில் பிரகாரத்தில் மக்கள் வலம் வர ஏதுவாக மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

நதிகளுக்கு அருளிய அபிமுகேச்வரர் ஆலயத்தின் தட்சிணாமூர்த்தி



பிரம்மனால் பூஜிக்கப்பட்ட அமுதக் குடத்தின் மேல் ஒரு தேங்காய் வைக்கப்பட்டிருந்தது. அந்தத் தேங்காய் விழுந்த இடத்தில் தானே தோன்றிய லிங்கம் நாளிகேர லிங்கம் எனப்பட்டது. நாளிகேரம் என்ற வடமொழி சொல்லுக்கு தேங்காய் என்று பொருள். இக்கோயில் மகாமகக் குளத்தின் கிழக்குக் கரையில் உள்ளது. நவநதிகள் மகாமக நீராடியபோது அவர்களுக்குத் தரிசனம் தருவதற்காக கிழக்கு முகமாக சந்நிதி கொண்டிருந்த நாளிகேர லிங்கம் மேற்கு முகமாகத் திரும்பியது. அம்பாளும் தனது நிலையை மாற்றிக் கொண்டாள். நவ நதிகள் இதனைக் கண்டு ஆச்சர்யப்பட்டன. சிவபெருமானிடம் 'சுவாமி! தாங்கள் இவ்வாறு அபிமுகமாக மாறியது ஏன்? ' என்று கேட்டனர். அதற்கு அவர் 'யாமே நாளிகேர லிங்கமாக கோயில் கொண்டு, கிழக்குப் பார்த்திருந்தோம்! உங்களுக்கு அருள் செய்வதற்காக மேற்கு முகமாகத் திரும்பினோம். அபிமுகமானோம்!' என்றார்.

'எங்களுக்கு அருளுவதற்காக அபிமுகமானதால் அதே பெயரால் தாங்கள் அழைக்கப்படவேண்டும்!' என்று நவநதிகளும் வேண்டிக் கொண்டனர். அன்று முதல் நாளிகேரேசம் அபிமுகேச்வரர் கோயிலானது என்கிறது தலபுராணம்.

அபிமுகேச்வரர் கோயிலில் உள்ள தட்சிணாமூர்த்தி மிகவும் விசேஷமான தட்சிணாமூர்த்தி. யோக தட்சிணாமூர்த்தியாக மோன முதல்வராக இருந்து அருள்பாலிக்கிறார். இங்கே உள்ள வீரபத்திரர் மிகவும் உக்கிரமமானவர். சனி தோஷங்களை சடுதியில் நீக்குபவர். இவருக்கு எதிரே லிங்கம் பிரதிஷ்டை செய்து இவர் உக்கிரத்தை குறைத்திருக்கிறார்கள்.

திருநாவலூரில் - தட்சிணாமூர்த்தி நின்றநிலையில் இடபத்தின் மீது வலக்கரம் வைத்த திருமேனி

சுந்தரமூர்த்தி நாயனாரின் வளர்ப்புத் தந்தையாக விளங்கும், தவம் உடையவர் நரசிங்கமுனையரையர் என்னும் அரசர். இவர் வழிபட்ட சிவலிங்கத்திருமேனி திருநாவலூர் ஆலயத்தில் மேற்கு நோக்கியுள்ளது. திருநாவலூர் தலம், சுக்ரபரிகாரத்தலம். இங்கு சுக்ர கிரஹத்தில் ஆராதிக்கப்பட்ட பார்க்கவேஸ்வரரும் தனியே அருள்பாலிக்கின்றார்.

திருவிடைமருதுரில் கோயில் கொண்டுள்ள மூகாம்பிகை ஜடாபார அமைப்பு தட்சிணாமூர்த்திக்கு அமைந்திருப்பது போன்றதாகும். ஏனெனில் அம்பிகை தவக்கோலத்தில் வீற்றிருக்கின்றாள். ஸ்ரீயோகபீடேஸ்வரி என்று கல்வெட்டுகளில் மூகாம்பிகை குறிப்பிடப் பெறுவது கருதத்தக்கது.

இவ்வாலயத்தில் நின்ற திருக்கோலத்தில் இடபத்தின் மீது கரம் ஊன்றிக் காட்சிதரும் தட்சிணாமூர்த்தியைத் தரிசிக்கலாம். இது மிகமிக அபூர்வத்திருமேனியாகும். (இவரை ரிஷபாந்திகர் எனவும் சொல்லலாம்) இத்தலம் சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் விழுப்புரத்திற்கும் உளுந்தூர்போட்டைக்கும் இடையில் உள்ளது. பண்ருட்டி செல்லும் கிளைச்சாலையில், திரும்பி 2 கி.மீட்டருக்குள் ஷெ ஆலய கோபுரத்தின் தரிசனம் நமக்கு கிடைக்கும். இதுபாடல் பாடல்பெற்ற திருத்தலமாகும்.

திருக்கழுக்குன்றம் யோக தட்சிணாமூர்த்தி

நாயன்மார்களால் போற்றித் துதிக்கப் பெற்ற திருத்தலம் திருக்கழுக்குன்றம் ஆகும்.

மலையின் உச்சியில் வேதகிரிஸ்வரர் மலைக்கோயிலும் மகேந்திர பல்லவனால் ஆக்கப் பெற்ற குடைவரைக் கோயிலும் உள்ளன.

திருக்கழுக்குன்றம் அடிவாரத்தில் பக்தவத்ஸலேஸ்வரர் திருக்கோயில் உள்ளது. இது முற்காலச் சோழர்களால் திருப்பணி செய்யப்பட்டதாகும். கோஷ்டத்தில் பிரமன், துர்க்கை, தட்சிணாமூர்த்தி முதலான திருவுருவங்கள் காணப்படுகின்றன. இக்கோஷ்டம் அரைவட்ட வடிவமாக அமைந்துள்ளது. கோஷ்டம் முழுவதும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கோஷ்டத்தில் சதுரமாக அமைக்கப்பட்டட பீடத்தின் மீது யோக தட்சிணாமூர்த்தியின் எழில் உருவத் திருமேனி சிரசும், சற்று வலப்பக்கம் நளினமாகச் சாய்ந்து மேல் நோக்கிய விரிந்து பார்வையுடன் காட்சி தருகின்றது. இத் திருவுருவம் 3-அடி உயரத்தில் அமைந்துள்ளது.

இப்பெருமானின் கேசங்கள் ஜடாபார அமைப்புடையனவாகவும், பின்தோற்றும் வலக்கரத்தில் நாகமும், இடக்கரத்தில் ஜபமாலையும் விளங்குகின்றன. முன் விளங்கும் வலக்கரம் சின்முத்திரை யோடும் இடக்கரம் ஊரு ஹஸ்தமாகத் தொடையின் மீது பொருந்தியும் காணப்படுகின்றன. இடப்பாதம் கீழே தொங்கவிட்ட நிலையிலும் வலப்பாதம் பீடத்தில் குத்திட்டு வைத்து இடுப்போடு சேர்த்துக் கட்டிய யோக பட்டிகையுடனும் விளங்குகின்றன. யோக பட்டிகையோடு பெருமான் விளங்குவதனால் யோகதட்சிணாமூர்த்தி என வழங்கப்படுகின்றார். இங்கு சனகாதி முனிவர்களின் திருவுருவங்கள் காணப்படவில்லை.

திருவிடைமருதூர் - ஞானதட்சிணாமூர்த்தி - வேறுவகை

இந்த ஞான தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் விளங்குகிறது. சோழர்காலக் கற்றளிக்கு ஓர் சிறப்பான எழிற்கோலமாகும். இத்திருவுருவம் சிதிலமடைந்து விட்டதால் 1917ஆம் ஆண்டு நிகழ்ந்த திருப்பணியின் போது கோஷ்டத்திலிருந்து எடுத்து அம்மன்கோயில் முகமண்டபம் - சட்டைநாதர் பக்கத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது.

இத்திருவுருவத்தின் உயரம் 4 அடி ஆகும். ஆறு பெருங்கிளைகள் உடையதும் இலைகள் நிறைந்ததுமான கல்லால மரத்தின் கீழ் இப்பெருமான் வீற்றிருக்கின்றார். ஆறு கிளைகளும் ஆறு ஆதாரங்களை உணர்த்துவனவாக அமைந்துள்ளன. இந்த அமைப்பு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். பெருமானின் சிரசிலே காணப்படும் ஜடைகள் ஜடாபாரமாக அமைந்துள்ளது. ஜடாபாரத்தில் காணப்படும் பூரிமம் தனியான தோற்றத்துடன் எடுப்பாக அமைந்துள்ளது. நெற்றியில் லலாடமும் இடக்காதில் ஓலையும் வலக்காதில் குழையும் விளங்குகின்றன.

கரங்களில் காப்புகளும், சின்முத்திரையும் எடுப்பாக விளங்குகின்றன. இச்சின்முத்திரையினைக் காட்டும் கரம் யோக தண்டத்தில் இருப்பதுபோல் இருப்பினும், உண்மையில் யோக தண்டம் இல்லை. கரத்தைத் தாங்குவதற்குச் சிற்பியால் வடிக்கப்பட்ட கற்சட்டமே அப்படி நமக்குத் தெரிகின்றது.



நின்ற நிலையில் தட்சிணாமூர்த்தி - திருநாவலூர்.



ஸ்ரீ பார்க்கவேஸ்வரர் (மூலத்தான மூர்த்தி)



திருக்கழுக்குன்றம் - பக்தவத்சலர் ஆலயம்
திருமூலஸ்தானம் உடையார்கோயில்
யோகதட்சிணாமூர்த்தி(வலதுகால் குத்திட்டு
இடுப்பில் கட்டிய யோக சூத்திரம்.

பின் கரங்களில் தீச்சுடரும், ஜபமாலையும் விளங்குகின்றன. கழுத்தில் கண்டாபரணமும், ருத்திராட்சமாலையும், மார்பில் பட்டையாக உள்ள யக்ஞோபவீதமும் (பூணூல்) காணப்படுகின்றன. யக்ஞோபவீதம் இழைகளாக அமையாமல் பட்டையாக உள்ளது. யோக நிலையில் அமர்ந்துள்ள இப்பெருமான் புன்முறுவல் பூத்தவண்ணம் இடப்பக்கம் திருக்கண் சாத்திய நிலையில் வீராசனத்தில் எழிலுடன் இடப்பக்கம் சற்று வளைந்தபடி வீற்றிருக்கின்றார் வலக்கால் பூமியில் படியவும் இடக்காலின் தொடை மேலே நன்றாக தூக்கியபடி வலத் தொடையின் மீது வேதச்சுவடி தாங்கிய கரத்தை வைத்துள்ளார். வலத்தே அமைந்த இடுப்புப் பக்கம் வஸ்திரக்கட்டும் வியாக்கிரசர்மம் எனப்படும் புலித்தோலாடையும் உள்ளது.

பாதத்தின் கீழ் ஆசன பீடத்தின் முகப்பில் வலப்பக்கம் இரண்டு மான்களும் படமெடுத்தாடும் பாம்பும் உள்ளன. தென்முகக் கடவுளின் திருமுன்பு மானும் பகைமை நீங்கிய இயல்புடன் விளங்குகின்றன இத்தகைய சிறந்த சிற்ப வேலைப்பாடமைந்த தோற்றம் கண்டுகளிப்பதற்கு உரியதாகும்.

திருவிடைமருதூர் - சாம்ப தட்சிணாமூர்த்தி

திருவிடைமருதூர் என்னும் இத்தலம் கும்பகோணத்திற்கும் மயிலாடுதுறைக்கும் இடையே அமைந்துள்ளது. இது ஜோதிர்லிங்கத் தலம் என்பர். நால்வர் பெருமக்களும் பாடிய சிறப்புடையது. இறைவன் திருப்பெயர் ஸ்ரீ மகாலிங்கேசுவரர். இறைவி திருப்பெயர் பெருநலமாமுலைநாயகி. சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்கள் காலத்திய கல்வெட்டுகளும் உள்ளன. வரகுணபாண்டியன், பட்டினத்தார், பத்திரகிரியார் முதலானோர் வணங்கி பேறு பெற்ற தலமாகும். இத்திருக்கோயிலினுள் மூன்று பிரகாரங்கள் உள்ளன. (பிரணவப் பிரகாரம், சித்திரப்பிரகாரம், அஸ்வமேதப் பிரகாரம்)

ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் மகா மண்டபத்தின் வடக்குப் பக்கம் அமைந்துள்ள மேடையில் சாம்ப தட்சிணாமூர்த்தியின் சுதைச் சிற்பம் விளங்குகின்றது. (பெருமான் அம்பாளுடன் காட்சி தருகிறார்) இத்தல புராணத்தின்படி இத்திருவுருவம் இங்கு அமைக்கப்படலாயிற்று. இத்திருவுருவத்தின் கீழே தான் விசேட காலங்களில் அபிஷேக ஆராதனைக்குரிய பொருள்களை வைத்திருப்பது மரபாகும்.

புராண வரலாறு:

இத்தலத்துப் பெருமானாகிய இடைமருதீசரின் சிறப்புக்களைத் திருநந்தி தேவரின் மூலம் கேட்டறிந்த உரோமச முனிவர். இத்தலத்தின் ஒரு பக்கம் பர்ணசாலை அமைத்துக்கொண்டு ஜோதிர்மயமாக விளங்கும் ஸ்ரீமகாலிங்கப் பெருமானை நாள்தோறும் போற்றி வணங்கித் தவமிருந்து வந்தார். இவருக்குப் பக்குவ காலம் வந்தவுடன் இவருடைய தவச் சிறப்பைக் கண்டு இறைவன் சாம்ப தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளிக் காட்சி தந்து ஞானம் அருளினார் என்பது இத்தலபுராண வரலாறாகும்.

திருவுருவ விளக்கம்:

இடப்பக்கத்தில் அமர்ந்த அம்பிகையுடன் பெருமான் சுகாசன நிலையில் அமர்ந்துள்ளார். வலப்பாதத்தின் கீழே அமர்ந்திருக்கும் நந்தியின் மீது பாதம் பொருந்தியுள்ளது. இவரது ஜடாமகுடத்தில் பத்ர பூரிமமும், சந்திரனும் விளங்குவதைக் காணலாம். மார்பிலும், தோளிலும் கரங்களிலும் பல்வகை அணிகலன்கள் அணி செய்கின்றன. பின்கரங்களில் சந்திரசேகரர், சோமாஸ்கந்தர் முதலான திருவுருவங்களில் காணப்படுவது போன்று மானும் மழுவும் காணப்படுகின்றன. முன்னே விளங்கும் இடக்கரத்தில் சுவடியை ஏந்தியும், வலக்கரத்தால் சின்முத்திரையினைக் காட்டியும் விளங்குகின்றார்.

இடப்பக்கம் அமர்ந்துள்ள அம்பிகையின் வலத் திருக்கரத்தில் கடக முத்திரை விளங்குகின்றது. இடக்கரம் பூமியைத் தொட்டுக்கொண்டிருகின்றது. அம்பிகையின் திருவுருவம் சுவாமியை நோக்கிய வாறுள்ளது. சாம்ப தட்சிணாமூர்த்தியாகிய குருநாதர் பின்னால் பிரணவத்தை உணர்த்தும் திருவாசி யில் 18 தீச்சுடர்கள் விளங்குகின்றன. இப்பதினெட்டும் பதினெண் புராணங்களை உணர்த்துகின்றது.



திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி
ஆலய கோஷ்டத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி.




திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி
ஆலய அம்மன் கோயில் சட்டைநாதர் சன்னிதி
பக்கத்தில் உள்ள ஞான தட்சிணாமூர்த்தி.




தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில்
வீணாதர தட்சிணாமூர்த்தி
(காலம் - கி.பி.11ஆம் நூற்றாண்டு)



தஞ்சை மாவட்டம் சோழகம்பட்டியைச் சேர்ந்த
பொன்விளைந்தான்பட்டி வீணாதர தட்சிணாமூர்த்தி
(கி.பி.7ஆம் நூற்றாண்டு)



திருவிடைமருதூர்
ஸ்ரீமகாலிங்கசுவாமி திருக்கோயில் சித்திரப் பிரகாரத்தில் உள்ள சக்திதட்சிணாமூர்த்தி



திருவிடைமருதூர்
ஸ்ரீமகாலிங்கசுவாமி திருக்கோயில் மகாமண்டபத்தில் விளங்கும் சாம்ப தட்சிணாமூர்த்தி



திருவையாறு ஆலயத்தில் கோஷ்டத்தில் உள்ள ஹரிகுரு சிவயோக தட்சிணாமூர்த்தி (புதியது)



சுரட்டப்பள்ளி ஸ்ரீவன்மீகேச்வரர் திருக்கோயில் ரிஷபாரூட ஞானயோக சக்தி தட்சிணாமூர்த்தி

ஆகமங்களிலும் சிற்பநூல்களிலும் கூறப்படாத பல்வேறு நிலையுள்ள தட்சிணாமூர்த்தியின் உருவங்களைப் புராணங்களில் நாம் காணலாம். இத்திருக்கோயிலில் மட்டுமே இந்த எழில்மிகு திருவுருவம் அமைந்து விளங்குகின்றது.

ஏனைய திருக்கோயில்களில் திருப்பணி செய்யும் ஸ்தபதிகள் இத்திருவுருவை முன் மாதிரியாகக் கொண்டு தட்சிணாமூர்த்தியின் திருவுருவத்தை சுதையாகவும் சிற்பமாகவும் ஓவியமாகவும் அமைக்கின்றனர். மேலும் இத்திருக்கோயிலினுள் உள்ள் சித்திரப் பிரகாரத்திலுள்ள பல்வேறு நிலைகளில் உள்ள தட்சிணாமூர்த்தியின் திருவுருவங்கள் பின்னால் விளக்கப்படுகின்றன.

திருவையாறு - ஹரிகுரு சிவயோக தட்சிணாமூர்த்தி

பூலோக கயிலாயமாகிய திருவையாற்றிலுள்ள பஞ்சநாதேஸ்வரர் திருக்கோயிலில் இத்திருவுருவம் விளங்குகின்றது. இத்திருக்கோயில் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும். இத்திருவுரும் தட்சிணாமூர்த்தி பேதங்களில் சிறப்பானதாகும். இக்குருநாதர் பின் வலக்கரத்தில் கபாலமும் இடக்கரத்தில் திரிசூலமும், முன் வலக்கரத்தில் அபயஹஸ்தமும் இடக்கரத்தில் சிவாகமச் சுவடியும் ஏந்தியுள்ளார்.

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து

என்ற குறளை நினைவூட்டுவதுபோல் ஐம்புலன் அடக்கத்துக்கு எடுத்துக்காட்டாக ஐந்து உறுப்புக்களையுடைய ஆமையைப் பாதத்தில் அடக்கி அழுத்திக் காட்டுகின்றார். மேலும் தவத்திற்கு ஐம்புலன் அடக்கம் அவசியம் என்று தனது திருவடியின் கீழ்விளங்கும் ஆமையினை அடக்கி அழுத்தி உணர்த்துகின்றார்.

இக்குருமூர்த்தி சனகாதி முனிவர் நால்வர்க்கும் உண்மைப் பொருளை உபதேசவாயிலாக உணர்த்தாமல் உணர்த்திக் காட்டினார். அவ்வாறு உபதேசம் பெற்ற முனிபுங்கவர்கள் தியானயோகத்தில் அமர்ந்து சிவனடியே சிந்திக்கும் பேறு பெற்று அவனடியின் கீழ் தொழுது இருக்கின்றனர்.

இத்தலத்தில் திருமாலுக்குத் தனிச்சிறப்பு உண்டு, என்பதை அப்பர் சுவாமிகள் ''அரியலால் உருவமில்லை'' என்று தொடங்கும் பாடலின் இறுதியடியில் ''அரியலால் தேவி இல்லை ஐயன் ஐயறானார்க்கே'' எனக் குறிப்பிடுகின்றார். திருமாலையே தேவியாகக் கொண்டவர் என்பது கருத்து. மேலும் திருமால் திருவீழிமிழலையில் ஆயிரம் தாமரை மலர்களால் அருச்சித்தபோது ஒன்று குறைய, தம் கண்ணையே ஒரு மலராகக் கொண்டு அர்ச்சித்து பெற்றதை நாவுக்கரசர் 'ஏறுடன் ஏழடர்த்தான் எண்ணி ஆயிரம் பூக்கொண்டு, ஆளுடைச் சடையினானை அர்ச்சித்தான் அடியிணைக் கீழ், வேறு மோர்பூக் குறைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக், கூறுமோர் ஆழி ஈந்தார் குறுக்கை வீரட்டனாரே' எனவரும் பாடலால் கூறுகின்றார். இதற்குச் சான்றாகத் திருவீழிமிழலையில் உள்ள சோமாஸ்கந்த மூர்த்தியின் பாதத்தில் சக்கரம் காணப்படுவது கொண்டு உணராலம்

இத்தலத்தில் (பஞ்சநதீதஸ்வரர் ஆலயத்தில்) பஞ்சாக்கர ஜெபம் செய்தால் எமபயம் அகலும் என்பதற்கு எடுத்துக்காட்டாக சுசரிதன் வரலாற்றைக் கூறலாம். சுசரிதன் என்னும் அந்தணச் சிறுவன் வசிட்ட முனிவரின் அறிவுரைப்படி இக்கோயிலின் தெற்குக் கோபுரவாயிலில் அமர்ந்து பஞ்சாகரத்தைப் பலகோடி உரு செபித்தான். இவனை அணுகி வந்த எமனை ஐயாறப்பருடைய ஆணையின் வண்ணம் துவார பாலகர் அழித்து இவனுக்கு அருள்புரிந்தார். இத்துவாரபாலகர் ''ஆட்கொண்டார்'' என்ற பெயருடன் தெற்குக் கோபுர வாயிலில் எழுந்தருளியுள்ளார்.

இந்த ஜெபத்தின் பெருமையை உணர்ந்த அகத்தியர், துர்வாசர் முதலிய முனிவர்கள் இங்கு ஜெபம் செய்து பல சித்திகளைப் பெற்றார்கள் என்பது வரலாறு. இதனால் இக்கோயிலுக்குச் ஜெபேசுரம் எனப்பெயர் வழங்கலாயிற்று. இங்கு ஜெபேசமண்டபம் தனிச் சிறப்புடையது.

திருமால் ஜெபப் பெருமையை உணர்ந்து இங்கு எழுந்தருளியுள்ள சிவயோக தட்சிணாமூர்த்தியைத் தரிசித்து துதித்து வணங்கினார். தென்முகக் கடவுள் அவருக்கு திருவைந்தக்கரத்தை (பஞ்சாக்கரம்) உபதேசித்தருளினார். ஆகவே இங்கு வீராசனத்தில் வீற்றிருக்கும் குருநாதர் ஹரிகுரு சிவயோக தட்சிணாமூர்த்தி என்ற திருப்பெயரால் வழங்கப்படுகிறார் என்று கூறுவாரும் உளர். இப்பழம் பெருமை வாய்ந்த திருக்கோயிலினை முற்காலச் சோழர்களும் பேரரசர்களும் திருப்பணிகள் பல செய்து நிவந்தங்கள் பல அளித்துள்ளனர். திருநாவுக்கரசு சுவாமிகளுக்குக் கயிலைக் காட்சியை அருளிய திருத்தலமாகும்.

சுருட்டப்பள்ளி ரிஷாபாருட ஞானயோக சக்தி தட்சிணாமூர்த்தி (வேறுவகை)

இத்திருவுருவம் சுரட்டப்பள்ளி என்னும் தலத்தில் விளங்குகின்றது. (சென்னைக்கும் திருப்பதிக்கும் இடையே சென்னையிலிருந்து 48 கி.மீ. தொலைவில் உள்ள ஊத்துக்கோட்டை என்னும் ஊருக்கு அருகில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது) இத்தலத்தில் சிவபெருமான் பள்ளிகொண்ட நிலையில் காணப்படுவது தனிச்சிறப்பாகும். இங்கே புற்றுருவங்கொண்ட புனிதனின் திருமேனி சுயம்பு லிங்கமாக விளங்குகின்றது. இப்பெருமான் வால்மீகி முனிவரால் பூசிக்கப் பெற்றவர். ஆதலால் இவருக்கு வன்மீகேச்வரர் என்ற திருநாமம் வழங்கப்படுகிறது.

இச்சிவபெருமான் எழுந்தருளியுள்ள கருவறைச் சுற்றுச் சுவரான கோஷ்ட மாடங்களில் எழில் மிக்க பல்வேறு வகையான சிற்பச் செல்வங்களைக் காணலாம். இச்சிற்பங்களின் எழிற் கோலம் காண்போரின் கண்களை விட்டகலாத் தன்மை வாய்ந்தது.

ஜடாபாரமாக பூரிமத்துடன் விளங்குகின்றது ஜடாமுடியில் மூன்றாம் பிறைச் சந்திரனும் கங்கையும் காணப்படுகின்றன. நெற்றியில் அணிந்த நெற்றிப்பட்டையும், காதுகளில் காதோலையும், குழையும், சர்வ ஆபரணங்கள் பலவும் திகழ்ந்து பேரழகூட்ட பெருமான் எழில் மிகு தோற்றத்துடன் விளங்குகின்றார். இப்பெருமானது அழகு திகழும் முகமும் அருள் ஒழுகு கண்ணும் எழிலுடன் விளங்குகின்றன. இவரது பார்வை கீழ் நோக்கியதாக உளது. மேலும் குத்துக்கலாக வைத்த இடக்காலினைத் தன் இடுப்புடன் கட்டிய யோக பட்டையும் விளக்கப்பெறுகின்றது. தமது வலக்காலை கோரப்பல்லுடனும் சின்முத்திரைக் கரத்துடனும் விளங்கும் முயலகனின் முதுகின் மேல் பதிய வைத்துள்ளார். இங்கே முயலகன் அஞ்சும் நிலையில்லாமல் அமைதி தவழும் முகத்துடன் ஞானம் பெற்றவனைப் போல் காணப்படுகின்றான்.

இத் தலத்தில் எழுந்தருளியுள்ள தட்சிணாமூர்த்தி எல்லாத் தலங்களிலும் விளங்குவது போல சனகாதி முனிவர்களுடன் காட்சி தரவில்லை. இத்தலத்தில் சற்றுமாறுதலாகப் பதஞ்சலி, வியாக்ரபாதருடன் காட்சிதருகின்றனர்.


இத்திருக்கோயிலின் தெற்கு தேவகோஷ்ட மாடத்தில் கல்லால மரத்தின் கீழ் வீற்றிருக்கும் ரிஷபாருட ஞானயோக சக்தி தட்சிணாமூர்த்தியின் பேரழகினைப் புனைந்துரைக்க இயலாது.

சிவபிரான் யோக நிலையில் இருந்தபோது அவருடைய தவத்தைக் கலைப்பதற்கு மன்மதன் முயலுகின்றான். எல்லாம் உணர்ந்த சிவபிரான் நெற்றிக் கண்ணைச் சிறிதே திறந்து நோக்கிய அளவில் அவன் பஸ்பமாகி விடுகிறான். சின்முத்திரை காட்டி முனிவர்களுக்கு ஞான உபதேசம் செய்கின்ற தென்முகக் கடவுளின் திருமுகத்தை அம்பிகை அச்சத்துடன் நோக்குகின்றாள். தனது இடக்கரத்தால் இறைவனின் இடத்தோளின் கீழ் பொருந்த வைத்துச்சிந்தனையில் ஆழ்கின்றாள். இப்பெருமானின் பின் இருகரங்களில் மானும் மழுவும் விளங்குகின்றன. முன்னே விளங்கும் வலக்கரம் சின்முத்திரை காட்டி நிற்கிறது.

இடக்கரம் சுவடி இல்லாமல் குத்துக்காலாக இருக்கும் இடக்காலின் முட்டியில் தண்ட ஹஸ்தமாகக் கீழ் நோக்கியவாறு தொங்கவிடப்பட்டுள்ளது. சிரசில் விளங்கும் கேசங்கள் எல்லாம் அடுக்கி வைத்தாற் போன்று விளங்கவும் ரிஷபவாகனம் தன் பின்னே அமைந்து விளங்கவும் தாம்



திருவையாறு - ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் திருக்கோயில் - மூலத்தானத்து உட்பிரகார வடக்கு ஆவரணத்தில் உள்ள ஹரிகுரு சிவயோக தட்சிணாமூர்த்தி - இது பழைய திருவுருவமாகும். இதில் இடது கரம் மற்றும் வலது கரம் விரல் பின்னமாயுள்ளது. தட்சிணாமூர்த்தி உருவங்களிலேயே மிகவும் சிறப்புமிகுத் திருமேனியாகும். இது போன்ற புதிய திருமேனியும் உள்ளது.



திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில்
சித்திரப்பிரகாரத்தில் பல நிலைகளில் விளங்கும் தட்சிணாமூர்த்தி(சுதைச்சுற்பங்கள்)

விளக்கும் சின்முத்திரையினை, ரிஷபத்தின் சிரசின் மேல் வைத்தது போலவும் உள்ளது. முனிவர்களும் தாங்கள் உணர்ந்த ஞான நிலையினைச் சின்முத்திரையின் மூலம் காட்டி, பெருமான் எவ்வாறு தவநிலையில் உள்ளாரோ அதுபோலத் தவநிலையில் உள்ளனர்.

இந்த சக்தி தட்சிணாமூர்த்தியின் திருவுருவ அமைப்பானது. நுண்ணிய சிற்ப வேலைப்பாட்டுத் திறத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இதனை கண்டால்தான் உணரமுடியும்.

திருவிடைமருதூர் - சக்தி தட்சிணாமூர்த்தி

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலின் சித்திரப் பிரகாரத்தின் கிழக்குப் பகுதியில் மதில் மேல் சுதைச் சிற்பமாக விளங்கும் சக்தி தட்சிணாமூர்த்தியைக் காணலாம்.

அருளே வடிவமாக விளங்கும் சக்தியானவள் தட்சிணாமூர்த்தியின் இடப்பக்கம் நின்ற கோலத்திலும், பெருமான் அமர்ந்த கோலத்திலும் காட்சி தருவதைக் காணலாம். தென்முகக் கடவுள் இங்கே வீராசனத்தில் அமர்ந்துள்ளார். இவரது ஜடாபாரத்தில் சந்திரனும் கங்கையும் காணப்படுகின்றன. பின் கரங்களில் தீச்சுடரும். ஜபமாலையும் விளங்குகின்றன. முன் கரங்களில் சின்முத்திரையும் சுவடியும் காணப்படுகின்றன. வலப்பாதம் கீழே உள்ள முயலகன் மீது பொருந்தியுள்ளது. இடப்பாதம் வலத் தொடையின் மீது மடக்கி வைக்கப்பட்டுள்ளது. இறைவன் சற்று சாய்ந்த நிலையில் மேல் நோக்கிய பார்வையுடன் திகழ்கின்றார்.

மேலும் பல்வேறு வகையான நிலைகளில் எழுந்தருளியுள்ள தென்முகக் கடவுளின் திருவுருவத் தோற்றங்களை இக்கோயிலின் சித்திரப்பிரகாரத்தில் சுதைவடிவத்தில் கண்டுகளிக்கலாம்.

காமிகாகமத்தில் பிரதிஷ்டா தந்திரத்தில் சக்தி தட்சிணாமூர்த்தியின் திருவுருவ அமைப்பை பற்றியதாக வருகின்ற தியான சுலோகம் பின் வருமாறு

ஸ்படிகம் ரஜதவர்ணம் மௌக்திகை ரக்ஷமாலிகம்
அமிர்த கலசபூர்ணம் ஞானமுத்ராம் கராக்ரை:
ஸர்ப்ப ஹஸ்தம் சந்த்ரசூடம் யக்ஞ சூத்ரவிராஜிதம்
சக்தி பிரதக்ஷிணா மூர்த்தேர் தியாயேத் தேவவிசேஷத :

''ஸ்படிகம் போன்ற வெண்மை நிறமுடையவராய் முத்துக்களால் தொடுக்கப்பட்ட அக்ஷமாலையுடன் முழுவதும் நிறைந்து விளங்குகின்ற அமிர்த கலசத்தையுடையவராய் (நிறைகுட அமிர்தம் போன்றவராய்) மூன்றாம் பிறைச் சந்திரனைச் சடாமுடியில் தரித்தவராய், நாகத்தைக் கரத்தில் ஏந்தியவராய், மார்பகத்தில் பூணூல் அணிந்தவராய். ஞானமுத்திரை காட்டி சக்திதேவியுடன் காட்சியருளும் சக்தி தட்சிணாமூர்த்தியைத் தியானிக்கின்றேன் என்பது இந்தச் சுலோகத்தின் கருத்தாகும்''

திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில் தட்சிணாமூர்த்தி

திருவாவடுதுறை எனும் தலம் காவிரியின் தென்கரையில் அமைந்த திருத்தலமாகும். கும்பகோணம் மயிலாடுதுறை பெருவழிச்சாலையில், மயிலாடுதுறைக்கு மேற்கே 15 கி. மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும். இத்தலம் திருமூலர் எழுந்தருளியிருந்து திருமந்திரம் பாடியருளிய பெருமையும், திருஞானசம்பந்தர் பொற்கிழி பெற்ற சிறப்பும் உடைய சிவத்தலமாகும். சித்தபுரம் என்ற திருப்பெயரும் இதற்கு உண்டு. சித்தர் சிவப்பிரகாசரின் அருளாணையினைச் சிரமேற் கொண்டு ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் இங்குத் திருவாவடுதுறை ஆதீனத்தைத் தாபித்தருளினார்கள்.

ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயிலின் தேவகோஷ்டத்தில் தட்சிணாமூர்த்திப் பெருமான் பல கிளைகளையுடைய கல்லால மரத்தின் கீழ் வீராசனத்தில் வீற்றிருக்கின்றார். இவரது தலைக்குமேல்

(கர்ணகூட்டில்) நடராஜரும் விளங்குகின்றார். சிரசில் விளங்கும் ஜடாபாரத்தில் சந்திரன் ஒளிவீசுகின்றது. உஷ்நீஷம், லலாடம், பத்ரபூரிமம் ஆகியனவும் விளங்குகின்றன. மார்பில் கண்டாபரணமும் பூணூலும், சன்னவீரமுமு உத்திராக்கமும் அணிசெய்கின்றன. வலக்கரம் வியாக்கியான முத்திரையினைக் காட்டுகின்றது. மாடத்தின் உட்பக்கம் முனிவர்கள் நால்வரும் உள்ளனர்.

உபதேசம் நிகழும் இடத்திற்கு யாரையும் உள்ளே செல்ல அனுமதிக்கலாகாது என்பதால் இங்கே இரு குண்டோதரர்கள் வாயிலில் காவல் புரிகின்றனர். இது இங்குத் தனிச்சிறப்பாகும். ஏனைய ஆலயங்களில் உள்ள தட்சிணாமூர்த்தியின் திருவுருவங்களுக்கருகில் வாயிற் காப்போர் விளங்குவதனைக் காணமுடியாது. மேலும் இத்திருக்கோயிலினைத் திருப்பணி செய்த கற்றளிப்பிச்சன் புடைப்புச் சிற்பங்கள் மூன்று காணப்படுகின்றன. கோஷ்டத்தைச் சுற்றிக் கல்வெட்டுகள் உள்ளன. இத்திருக்கோயில் முதல் பராந்தக சோழன் (கி.பி 947) காலத்தில் திருப்பணி செய்ததாகக் கல்வெட்டுகளால் அறிகின்றோம். மேலும் இக்கோயில் கல்வெட்டால் ஒருமுழ உயரத்திற்கு தட்சிணாமூர்த்தியின் எழுந்தருளுந் திருமேனி (உற்சவர்) இருந்ததாக அறிகிறோம்.

ஆதி கோமுக்தீஸ்வரர் - விமானத்தில் ஞானமூர்த்தி


திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயிலின் இராஜகோபுர வாயிலுக்கு அருகே (உட்பக்கம்) வலப்பக்கம் ஒரு தனிக்கோயில் விளங்குகின்றது. இதுவே ஸ்ரீ ஆதிகோமுக்தீஸ்வரர் திருக்கோயில் ஆகும். கருப்பக்கிருகமும், முகமண்டபமும் விளங்க ஏகதள விமானத்துடன் இக்கோயில் விளங்குகின்றது. விமானத்தினைச்சுற்றிலும் எட்டு நந்திகளும் பூதங்களும் காணப்படுகின்றன. இத்தலம் திருநந்தித் தலம் என்று போற்றப்படுவதால் மதிற்சுவரில் நந்தியின் உருவத்தைக் காணமுடியாது. அதற்கு மூர்த்தியாக விளங்குகின்றார் என்பது இத்தல புராண வரலாறாகும். (துறைசைப் புராணத்தில் விளக்கம் காண்க) இத்தகைய சிறப்பு பொருந்திய இக்கோயிலின் விமானத்தின் தென் பகுதியில் மௌன மூர்த்தியினைக் காணலாம். இது ஓர் சுதைச்சிற்பமாகும். திருமுடியில் மூன்றாம் பிறைச்சந்திரன் விளங்கப் பெருமான் தன் வலத்திருவடியினைகச் சற்று முன்னோக்கியபடி நீட்டியும் முயலகனது முதுகின் மீது திருப்பாதப்படமானது பதியவும் அமர்ந்துள்ளார் இடக்கால் குத்திட்டு அதன் மேல் தண்ட ஹஸ்தமான முன் இடக்கரத்தை வைத்துள்ளார். ஞானமுத்திரையினைக் காட்டும் முன் வலக்கரமானது சற்றுமாறாக இங்கு பூமியைத் தொட்டவாறு காணப்படுகிறது. பின் கரங்களில் மானும் மழுவும் காணப்படுகின்றன. நினைத்த ஒன்றினை சிந்தனைக்குக் கொண்டு வருதல் போன்ற ஒரு யோக முறையினை இவரது திருவுருவத்திலிருந்து நாம் உணருகின்றோம். சிந்தனையாளர்களும், ஞானவான்களும் ஏகாந்தமாகத் தனிமையான இடத்தில்தான், இப்பெருமானின் உருவ அமைதி போல இருப்பது உண்டு. உலகத்திற்கே ஆதி மூர்த்தியாக விளங்கும் இம்மோன மூர்த்தியை இங்கே கண்டு அனுபவிக்கலாம். மேலும் இத்திருக்கோயிலின் தென்வாயிற் பகுதியில் (கற்சிற்பங்கள்) அருங்காட்சியகம் அமைப்பதன் பொருட்டு, தொகுத்து வைக்கப்பெற்ற பல்வேறுபட்ட தெய்வத் திருவுருவங்களைக் காணலாம். இவற்றில் மூன்று தட்சிணாமூர்த்தி உருவங்கள் நல்லூர் கோயிலிலிருந்து கிடைக்கப்பெற்றனவாகும். அந்தத் தட்சிணாமூர்த்தியின் திருவுருவங்களின் அமைதியினை இங்கு வருகை புரிவோர் கண்டு மகிழலாம்.

மயிலாடுதுறை - மேதா தட்சிணாமூர்த்தி


வள்ளலார் கோயில் என்பது மயிலாடுதுறையில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ள சிவத்தலமாகும். இத்திருக்கோயில் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும். இக்கோயிலில் எழுந்தருளியுள்ள தட்சிணாமூர்த்தி மேதா தட்சிணாமூர்த்தியாவார், ரிஷபதேவர் பின்னால் இடப்பக்கம் விளங்க, சின்முத்திரை காட்டி உபதேச நிலையில் காட்சி தருகின்றார். ஏனைய சிவத்தலங்களில் கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளிக் காட்சிதருவது போலன்றி இத்தலத்தில் கல்லாலமரம் காணப்படவில்லை. சுவாமிக்கு முன்நந்தி விளங்குகின்றது. பெருமானின் பின்புறம்




திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர்
திருக்கோயில் தட்சிணாமூர்த்தி



திருவாவடுதுறை
ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில்



திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில் கருப்பக்கிருகத் தெற்கு தேவகோஷ்டத்தில் விளங்கும் தட்சிணாமூர்த்தி



திருவிடைமருதூர் திருக்கோயில் தோற்றம்

உள்ள வலக்கரத்தில் உள்ள வலக்கரம் சின்முத்திரையினையும் இடக்கரம் சுவடியையும் கொண்டுள்ளன. திருப்பாதம் முயலகன் மீது உன்றிய நிலையில் காட்சி தருகின்றது.

புராண வரலாறு:

சிவபெருமான் திருக்கயிலாய மலையின்கண் எழுந்தருளிக் காட்சி தருகின்றபோது, ரிஷபதேவர் முக்கண் பெருமானைத் தாங்கும் ஆற்றலை நாம் பெற்றிருக்கின்றோம் என்று சற்று முனைப்பெய்தினார். இதனை உயிர்தொறும் விரவிநிற்கும் உமாமகேஸ்வரர் உணர்ந்தார். தமது ஜடாமகுடத்தினின்றும் ஒரு முடியை மட்டும் எடுத்து ரிஷபதேவர் மீது வைத்துத் தாம் மட்டும் தனியே நின்றார். அந்த ஒரு முடியின் சுமையைத் தாங்க மாட்டாதவராகிய ரிஷபதேவர் மூர்ச்சையடைந்து கீழே சாய்ந்தார். பின்னர் தம் முனைப்படங்கிக் குற்றம் பொறுத்தருளுமாறு இறைவனை இறைஞ்சினார். இறைவன் காவிரி ஆற்றங்கரையருகில் அமைந்துள்ள ஸ்ரீ வதான்யேஸ்வரரை வழிபட்டு வணங்கினால் பழைய நிலையைப் பெறுவாய் என்று கூறியருளினார்.

அவ்வாறே நந்தியெம்பெருமான் இத்தலத்து இறைவனை வழிபட்டு வணங்கி மனமுருகி வேண்டினார். அந்நிலையைக் கண்ட பெருமான் இத்தலத்தில் தட்சிணாமூர்த்தியாகக் காட்சி தந்தருளினார். தென்முகப் பெருமான் மீண்டும் ரிஷபதேவரைத் தம் வாகனமாகக் கொண்டு காட்சி தருகின்றார். வதான்யம் என்ற சொல்லுக்குக் கேட்காமல் கொடுப்பது என்பது பொருள். ஆகையால் இத்தலப் பெருமானுக்கு வள்ளலார் எனப்பெயர் வழங்குவதாயிற்று.

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில்

தட்சிணாமூர்த்தி

இத்திருக்கோயில் கும்பகோணத்திற்குக் கிழக்கே 10 கி.மீ தூரத்தில் உள்ளது. காவிரியின் தென்கரையில் அமைந்த திருத்தலமாகும். சமயாசாரியார்கள் பட்டினத்தடிகள், பத்திரகிரியார், வரகுணபாண்டியன் முதலானோர் வழிபட்ட திருத்தலமாகும்.

இத்திருக்கோயிலின் தேவகோஷ்டத்தில் தென்முகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இலைகள் அடர்ந்த கிளைகளையுடைய கல்லாலமர நிழலில் இப்பெருமான் வீராசனம் கொண்டு காட்சிதருகின்றார். பின் இடக்கரத்தில் திகழும் சுடர் திரிசூலம் போல உள்ளது. வலக்கரத்தில் ஏந்தியுள்ள நாகம் இருவட்டமாகச் சுழன்று காணப்படுகின்றது. காதுகளிலும் மார்பிலும் ஆபரணங்கள் எழிலூட்டுகின்றன. வலத்திருவடியில் சிலம்பும் வீரக்கழலும் விளங்குகின்றன. முயலகன் பெருமானின் திருவடிப்பதிவால் அஞ்சி விழித்த கண்களுடன் காணப்படுகின்றான். சனகாதி முனிவர்கள் நால்வரும் திருவடிக்கீழ் அமர்ந்துள்ளனர். இப்பெருமான் வீற்றிருக்கும் சன்னிதியின் முகமண்டபத்தினை இருசிங்கங்கள் தாங்கிய தூண்கள் காணப்படுகின்றன. இருகருங்கல் சங்கிலிகள் மேலிருந்து தொங்குகின்றன. இத்திருக்கோயிலும் துறைசையாதீனத்திற்குச் சொந்தமானதாகும்.

திருவாலங்காடு ஸ்ரீவடாரண்யேஸ்வரர் திருக்கோயில் தட்சிணாமூர்த்தி

கும்பகோணம் மயிலாடுதுறைப் பெருவழிச் சாலையில் திருவாலங்காடு எனும் வைப்புத்தலம் அமைந்துள்ளது. இத்தலத்திற்கு மிக அருகில் உள்ள தலம் திருவாவடுதுறை ஆகும். திருவாலங்காட்டில் உள்ள வடவாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் இத்திருவுருவம் காணப்படுகிறது. இக்கோயிலும் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும். குருநாதர் கல்லாலமர நிழலில் ஜடாபாரத்தோடு மார்பில் அணிகலன்கள் அழகு செய்ய சின்முத்திரை காட்டி, பட்டு வஸ்திரம் விரித்த பீடத்தில் வீராசனத்தில் எழுந்தருளிக் காட்சி வழங்குகின்றார். இப்பெருமான் சன்னிதியில் உள்ள சித்திர வேலைப்பாடமைந்த சிங்கம் சுமந்த இருதூண்கள் அழகாக விளங்குகின்றன. அத்தூண்களின் அடிப்பகுதியில் உடைவாளோடு குருமூர்த்தியைத் தொழும் நிலையில் மூன்றாம் குலோத்துங்க சோழன் புடைப்புச் சிற்பம் உள்ளது.

மேலும் தட்சிணாமூர்த்தியின் தலைக்கு மேல் மிகச் சிறிய அளவில் வீணாதர தடட்சிணாமூர்த்தி திருவுருவம் ஒன்று காணப்படுகிறது. இத்திருக்கோயிலின் தென்புறத்தில் விளங்குகின்ற அறுபத்துமூவர் திருவுருவச் சிலைகளை அடுத்து மூன்றாம் குலோத்துங்கன் உருவச்சிலை 3 அடி உயரத்தில் கூப்பிய கரத்துடன் காணப்படுகிறது. இவ்வரசனது தலையின் மீது இரு பாதுகைகள் காணப்படுகின்றன. இறைவன் திருவடிகளைச் சிரமேற் கொண்டு நாட்டை ஆட்சிபுரிந்தான் என்பதும், இவ்வரசனது சிவபக்தியும் விளங்குகின்றன. இத்திருக்கோயிலினை மூன்றாம் குலோத்துங்கன் திருப்பணி செய்ததாகக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. 165 ஆண்டுகளுக்குப் பிறகு இக்கோயில் முழுவதும் திருப்பணி செய்யப்பட்டு இவ்வாதீனத்து 23வது குருமகா சன்னிதானம் அருளாட்சியில் 17.6.2005 அன்று கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

நரசிங்கன்பேட்டை ஸ்ரீ சுயம்புநாதர் திருக்கோயில்

தட்சிணாமூர்த்தி

இத்தலம் தஞ்சைமாவட்டத்தில் கும்பகோணம் - மயிலாடுதுறை கற்சாலையில் உள்ளது. இவ்வூரின் தெற்கே 2 கி.மீ தொலைவில் ஸ்ரீ சுயம்புநாதர் கோயில் விளங்குகிறது. இது தேவாரப் பாடல் பெறாத தலமாக இருந்தபோதிலும் சிற்பச் சிறப்பு மிக்க திருக்கோயிலாக விளங்குகிறது. இத்தலத்தைப் பற்றிய அரிய செய்திகள் துறைசைப் புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்திருக்கோயில் துறைசையாதீனத்திற்குச் சொந்தமானதாகும்.

நரசிம்ம பல்லவன் நடுநாட்டையும் சோழ நாட்டையும் ஆட்சிபுரிந்த காலத்தில் காடவர்கோன் கழற்சிங்கன் என்பான் கீழ் சிற்றரசர் பலர் சிறந்து விளங்கினர். அவர்களுள் ஒருவன் நரசிங்க முனையரையன் என்பவனாவான். இவ்வரசன் திருமுனைப்பாடி நாட்டை ஆண்டுவந்தான். இவன் சோழ நாட்டுக்கு வரும் போதெல்லாம் திருவாவடுதுறையை அடுத்துள்ள பேட்டையில் தங்குவது வழக்கம். அரசர் விரும்பித் தங்கியதனால் இப்பேட்டை பல வகையிலும் சிறப்புற்று விளங்கியது. அதனால் இது, அவன் பெயரால் நரசிங்கன்பேட்டை என வழங்கப்பெறலாயிற்று.

நரசிம்மமூர்த்திக்கு பிரமஹத்தி தோஷம் ஏற்பட்டதால் இத்தலத்தில் விளங்கும் சுயம்புநாதரை வழிபட்டு நற்கதி பெற்றார். இத்தகைய புராண வரலாற்றுச் சிற்பம் மகாமண்டபச் சுவரில் புடைப்புச் சிற்பமாகவும் திருக்கோயிலின் முகப்பில் சுதைச் சிற்பமாகவும் உள்ளன.

இத்திருக்கோயிலின் மகாமண்டபத்தில் தெற்கு நோக்கிய தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் 2 1/2 அடி உயரமுடையதாய்க் காணப்படுகிறது. இப்பெருமான் வீராசனத்தில் அமர்ந்து எழிலுடன் விளங்குகின்றார். தலையில் மகுடமாக ஜடாபாரமும் அதில் பத்ர பூரிமமும் பிறைச்சந்திரனும் கங்கையும் காட்சியளிக்கின்றன. இவரது கரங்களில் தீச்சுடர், ஜெபமாலை, பாம்பு, சின்முத்திரையினைக் காண்கிறோம். கீழே வலக்காலால் மிதியுண்ட முயலகன், பெருமானின் ஆற்றலைக் கண்டு விழிகள் பிதுங்க அஞ்சிக் கலங்கிய நிலையில் காணப்படுகின்றான். புன்முறுவல் பூத்து ஞான நிலையினை உணர்த்தும் குருநாதர் திருமுகம் காண்போரைக் கவரவல்லது. இங்கே சனகாதி முனிவர்கள் காணப்படவில்லை. இத்திருக்கோயிலின் கருவறை அரைவட்டமாக அமைந்துள்ளது. கோஷ்ட மாடத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை முதலான திருவுருவங்கள் விளங்குகின்றன.

★(இந்த வைப்புத்தலமாகப் போற்றப்படும் மூவலூர் தலத்தில்தான் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வராகிய ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள், திருக்கோயிலின் கீழைவீதியில் தேர் நிலைக்கு அருகில் உள்ள வளாகத்தில் திருவவதாரம் செய்தார்கள். அவதாரத் தலத்தில் அவர்கள் வழிபட்ட ஸ்ரீ அம்பலவாணவிநாயகர் ஆலயமும், அவரது திருப்பெயர் கொண்ட நூலகமும் (ஸ்ரீநமசிவாயமூர்த்திகள் நூலகம்) உள்ளன.)



தஞ்சாவூர் மாவட்டம் திருவாலங்காடு
ஸ்ரீவடாரண்யேஸ்வரர் திருக்கோயில்
தட்சிணாமூர்த்தி



நரசிங்கம்பேட்டை
ஸ்ரீ சுயம்புநாதர் திருக்கோயில்
தட்சிணாமூர்த்தி



தஞ்சைமாவட்டம் - திருவாலாலங்காடு
ஸ்ரீவடாரண்யேஸ்வரர் திருக்கோயில் திருப்பணிசெய்த
3ஆம் குலோத்துங்கசோழன், இம்மன்னது உருவம்
சுவாமிகோயிலின் தெற்குப் பிரகாரத்தில் விளங்குகிறது.



திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயில் தட்சிணாமூர்த்தி ஜடாபாரம் - மான்கள் - சர்ப்பங்கள், சிங்கம் முதலான உயிரினங்களோடு வீராசனம் கொண்டு விளங்கும் எழிலார்ந்த தட்சிணாமூர்த்தி.

மயிலாடுதுறை ஸ்ரீ மயூரநாதசுவாமி திருக்கோயில்
வியாக்யான தட்சிணாமூர்த்தி, யோகதட்சிணாமூர்த்தி

தஞ்சைமாவட்டத்தில் மயிலாடுதுறை எனும் தலத்தில் மயூரநாதசுவாமி திருக்கோயில் விளங்குகிறது. இத்திருக்கோயிலும் துறைசையாதீனத்தின் ஆளுகையில் உள்ளது. இத்திருக்கோயிலில் இரு தட்சிணாமூர்த்தி திருவுருவங்கள் காணப்படுகின்றன.

இப்பெருமான் கல்லாலமர நிழலில் ஜடாபாரத்தோடும், சின்முத்திரையோடும் அணிகலன்கள் விளங்க வீராசனத்தில் அமர்ந்துள்ளார். அப்பப்பா! இவரது திருவடியின் கிழ்புலியும், மானும், பாம்பும் பகைநீங்கி நட்பு நிலையில் விளங்குகின்றன. முனிவர்கள் தம்மை மறந்த நிலையில் சிவானந்த அனுபவத்தில் ஆழ்ந்திருக்கின்றார்கள். குருநாதன் வியாக்யான தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்றார். ஞானம் வேண்டுபவர்கள் அதனை விரும்பினால் இங்குப் பெறலாம்.

மற்றொரு மூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தியாகக் காட்சிதருகிறார். தட்சிணாமூர்த்தி பேதங்களில் இதுவும் ஒன்று. சிலதலங்களிலேதான் இம்மூர்த்தியைக் காணலாம். குருநாதர் யோக நிலையினை ஆன்மாக்களுக்கு உணர்த்தவேண்டி, தாமே யோக நிலையிலிருந்து சின்முத்திரையோடு உத்குடிகாசனத்தில் எழுந்தருளியுள்ளார். இடமுழங்கால் மீதுள்ள கரம் கஜஹஸ்தமாக தொங்கவிட்டுக் கொண்டு திருமுகத்தில் சாந்தமும், கண்களில் கருணையும் பொழியக் காட்சி தருகின்றார்.

மூவலூர் குருமூர்த்தி

★ மூவலூர் எனும் தலம் கும்பகோணம் - மயிலாடுதுறை கற்சாலையில் உள்ளது. இத்தலம் வைப்புத்தலமாக போற்றப்படுகின்றது. இங்கு அருள் வழங்கும் பெருமானின் திருநாமம் ஸ்ரீ மார்க்கசகாயேசுரர் என்பதாகும். இத்திருக்கோயிலின் கருப்பக்கிருகத் தெற்குத் தேவகோஷ்ட மாடத்தில் சிற்பியின் கைத்திறத்தால் அமைந்த ஜகத்குருவாக விளங்கும் தட்சிணாமூர்த்தியின் திருவுருவ அழகினைக் கண்டு கொண்டே இருக்கலாம். ஆனந்தத்தின் மேலீட்டால் ஆடுல் வல்லானின் சடைகள் விரிசடையாக இருப்பதை நாம் ஆலயங்களில் கண்டிருக்கின்றோம். ஆனால் இங்கோ ஞானத்தின் மோன நிலையாதலால் விரிசடைகள் எல்லாம் அமைதியாக (மேலிந்து கீழ்நோக்கி) அப்படியே செயலிழந்து ஜடாபாரமாகக் காட்சிதருகின்றன. இவர் பின் கரங்களில் நாகமும், அக்கினியும் ஏந்தி முன் கரங்களில் சின் முத்திரையும், சுவடியும் விளங்க சர்வாபரணமும் அணிந்து வீராசனத்தில் எழுந்தருளி யிருக்கிறார். இத்திருவுருவத்தின் உயரம் சுமார் 3 ½ அடியாகும். இங்கு கல்லாலமரம் காணப்படவில்லை. பெருமான் வீற்றி ருக்கும் மலையின் இடப்பக்கம் கம்பீரமான தோற்றத்துடன் நந்தியம்பெருமான் அமர்ந்த நிலையில் உள்ளார். அதற்கு மேல் யானையின் முகமும், கீழ்ப்பகுதியில் சிங்கமும், மான்களும், விளங்குகின்றன. பெருமான் தனது வலப்பாதத்தினை மிரண்டுஓடும் முயலகன் முதுகில் பதிய ஊன்றியுள்ளார். அவன், அழுத்தம் தாங்க மாட்டாமல் எழமுயலுகின்றான். முயலகன் தலைக்குமேல் பகுதியில் கொம்புடைய மான் செயலற்று நிற்கின்றது. பக்கச்சுவரின் வலப்பக்கம் இருமுனிவர் களும், இடப்பக்கம் இருமுனிவர் களும் அமர்ந்துள்ளனர்.



மூவலூர் - குருமூர்த்தி

திருவாவடுதுறைக்கு எழுந்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஸ்ரீ மாசிலாமணிப் பெருமானைத் துதித்து வழிபடும் மூவலூர்ப் பெருமானை நினைவு கூர்ந்து ''வானநாடனே வழித்துணை மருந்தே'' (வழித்துணைநாதர் என்ற பெயரும் மூவலூர்ப் பெருமானுக்கு உண்டு) என்று பாடிப்பரவினார் போலும்.

திருப்பணி:

இந்த ஆலயம் கி.பி.10ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருப்பணி செய்யப்பட்டதாகும். திருநாவுக்கரசு சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளிய பாக்களில் இத்தலத்தின் சிறப்பினை உணரலாம். விக்கிரமசோழன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசேந்திரன், பாண்டியன், ஸ்ரீவல்லபன், விஜயநகர - வீரவிருப்பண்ண உடையார், அச்சுததேவராயர், தஞ்சை நாயக்க மன்னர்களான அச்சுதநாயக்கர், சேவப்பநாயக்கர் ஆகிய மன்னர்கள் இத்திருக்கோயில் திருப்பணிகள் பல செய்து, நிவந்தம் அளித்த செய்திகளை இவ்வாலயத்தில் உள்ள கல்வெட்டுகள் நமக்கு உணர்த்துகின்றன.



மூவலூர் - திருக்கோயிலின்
திருமாளிகைப்பத்தில் - தட்சிணாமூர்த்தி

திருமாளிகைப்பத்தியில் மற்றொரு மூர்த்தி:

இத்திருக்கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் (முதல் ஆவரணத்தில்) உள்ள திருமாளிகைப்பத்தியில் காலத்தால் முற்பட்ட தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் ஒன்று காணப் படுகிறது. ஜடாமண்டலத்துடன் காணப்படும் இவரது பின்கரங்கள் அக்கினியையும் சுடரையும் ஏந்தியுள்ளன. முன் வலக்கரம் சிதைந்து உள்ளது. (இக்கரம் ஞானமுத்திரையினைக் கொண்டிருக்கும்) முன் இடக்கரம் சுவடியினை ஏந்தியுள்ளது. பத்ர பீடத்தில் வீராசனம் கொண்டு திகழும் இவர் கழுத்தில் கண்டாபரணத்தையும், மார்பில் யக்ஞோபவீதத்தையும் கொண்டுள்ளார். கால்களில் காப்புகள் திகழ்கின்றன. இந்த ஞான மூர்த்தியினைக் காணும் போது இப்பெருமான் இவ்வாலயத்தின் மிகப்பழமையான மூர்த்தியாக இருக்கலாம் என்ற ஐயம் ஆராய்ச்சியாளர்களின் மத்தியில் நிலவுகின்றது. இருப்பினும் இவ்வாலயத்தில் இரு தட்சிணா மூர்த்திகளைக் காண்பது உண்மை நிலையினை உணரத் தூண்டும்.

சுவாமிமலை ஸ்ரீசுவாமிநாதசுவாமி திருக்கோயில் தட்சிணாமூர்த்தி

தஞ்சைமாவட்டம் - குடந்தை வட்டத்திலுள்ள அறுபடை வீடுகளில் ஒன்றான ஸ்ரீ சுவாமிநாத திருக்கோயிலின் அடிவாரத்தில் விளங்கும் ஸ்ரீ சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் தேவகோஷ்டத்தில் மிக நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய தட்சிணாமூர்த்தி எடுப்பான தோற்றத்தில் எழுந்தருளிக் காட்சிதருகின்றார்.

குடைபோன்று கவிந்து விளங்கும் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்துள்ள தட்சிணாமூர்த்தியின் திருமுடி ஜடாபந்தம் என்ற அமைப்பில் உள்ளது. காதுகளில் காதோலையும் குழையும் விளங்குகின்றன. இவரது மார்பில் மகரகண்டியும், பூணூலும், கண்டமாலையும், உருத்திராக்க மாலையும் அழகூட்டுகின்றன. பின்னே விளங்கும் வலக்கரத்தின் உள்ள நாகம் பெருமானின்

திருமுகத்தை நோக்குகின்றது. இடக்கரம் தீச்சுடரை ஏந்தியுள்ளது முன்னே விளங்கும் வலக்கரம் ஜபமாலை கொண்டு சின்முத்திரையுடன் விளங்குகின்றது. இடக்கரம் சுவடியுடன் கஜஹஸ்தமாக உள்ளது. சின்முத்திரை தாங்கிய கரம் யோகதண்டத்தில் இருப்பதுபோல் உள்ளது. இது சிலையின் கைப்பலத்திற்கு சிற்பி அமைத்த அமைப்பாகும். நாகத்துடன் விளங்கும் முயலகனை இறைவன் தமது வலக்காலினால் ஊன்றியும் இடமுழங்காலை வலக்கால் முட்டியில் மடக்கிவைத்தும் வீராசனத்தில் அமர்ந்தவாறு முனிபுங்கவர்களுக்கு ஞான உபதேசம் செய்தருளுகின்றார்.

இப்பெருமானின் திருவடிக்கீழிருக்கும் முயலகனின் தலைப்பக்கம் கால்பக்கம் ஆகிய இருமருங்கிலும் இருக்கும் முனிவர்கள் சின்முத்திரையுடன் கிழக்குத் திசையையும் மேற்குத் திசையையும் நோக்கியவாறு அமர்ந்துள்ளனர். குருநாதர் அமர்ந்த கோஷ்ட மாடத்தின் சுவர்த் தூணில் ஒற்றைக் காலில் நின்று கொண்டு (ஏகபாதஸ்தானக அமைப்பு) இரு கரங்களையும் உச்சிமேல் கூப்பிய வண்ணம் தொழுது தவநிலையில் நிற்கும் இரு முனிவர்களின் திருவுருவங்களைக் காணலாம்.

இக்குருநாதனின் எழில் உருவை ஒரு முறை கண்டோர் மீண்டும் காணவிழைவர்.

தக்கோலம் - திருவூறல் மகாதேவர் திருக்கோயில்
தட்சிணாமூர்த்தி


இத்திருவுருவம் தக்கோலம் - திருவூறல் மகாதேவர் திருக்கோயிலில் விளங்கும் தட்சிணாமூர்த்தியாகும். இத்தலம் வடஆர்க்காடு மாவட்டம் அரக்கோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 6 கி.மீ தொலைவில் உள்ளது. இது தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற தலங்களுள் 12-வது திருத்தலமாகும் இக்கோயிலின் கருவறைச் சுவரின் தெற்கு வெளிப்பக்கத்தில் (தேவகோஷ்டத்தில்) விநாயகரும் தட்சிணாமூர்த்தியும் காட் சி தருகின்றனர்.

இங்குள்ள தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் சோழ பரம்பரையினனாகிய முதலாம் ஆதித்தன் காலத்தில் நிருமாணிக்கப்பட்டதாகும். இத்திருவுருவம் எழில் மிக்கதாக விளங்குகிறது. இப்பெருமான் ஜடா மண்டலத்துடனும், காட்சி தருகின்றார். இவரது வலக்கரம் , சின்முத்திரையுடன் விளங்குகிறது.

இதில், நடுவிரல் அணிவிரல் சிறுவிரல் ஆகிய மூன்றும் மடங்கியுள்ளன. இது கடகஹஸ்தம் போல விளங்குகின்றது. திருவடியின் கீழே முயலகன் (அபஸ்மாரம்) காணப்படவில்லை. சர்ப்பம் ஒரு பக்கமும், இரண்டு மான்கள் மற்றொரு பக்கமுமாக விளங்குகின்றன. உத்குடிகாசனத்தில் அமர்ந்தருளும் இப்பெருமான் சன்னிதியில் உயிர்கள் அனைத்தும் பகைமை மறந்து நட்புடனும் சமத்துவத்துடனும் விளங்குகின்றன என்பதை இக்காட்சி புலப்படுத்துகின்றது. பெருமானின் ஆடைக்கட்டு, ஆபரணங்களின் நுட்பவேலைப்பாடு, சாயல் முதலியன சிற்பியின் கைவண்ணத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

காஞ்சிபுரம் கருக்கினில் அமர்ந்தாள் சக்தி ஆலய -
தட்சிணாமூர்த்தி

இத்திருவுருவம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் செல்லும் தெற்குச் சாலையில் கருக்கினில் அமர்ந்தாள் என்ற சக்தி ஆலயத்தில் விளங்குகின்றது. இவ்வாலயத்தில் விளங்கும் திருவுருவங்கள் எல்லாம் ஆகமங்களில் இல்லாத வகையில் அமைந்துள்ளன. இங்கு எழுந்தருளியுள்ள தட்சிணாமூர்த்தி வீராசனத்தில் அமர்ந்துள்ளார். இவரது ஜடைகள் ஜடாமண்டலமாகக் காணப்படுகின்றன. இவரது திருமுகத்தின் இருமருங்கிலும் அரசனுக்குரிய வெண்சாமரமும் வெண்கொற்றக்குடையும் விளங்க திருக்கரத்தில் திரிசூலமும் காணப்படுகின்றன. பெருமானது வலப்பாதம் பத்மத்தில் பதிந்துள்ளது. இது காணக் கிடைக்காத சிறப்பத் திருவுருவமாகும்.



கி.பி.1012-ல் சோழ மன்னனாய் விளங்கிய முதலாம் ராஜேந்திரன் அரியணை அமர்ந்தான். இவனது காலத்தில் காஞ்சிப்பதியில் பல கோயில்களுக்குத் திருப்பணிகளைச் செய்தான். அவற்றுள் இதுவும் ஒன்றாகும். ''ஜெயங்கொண்ட சோழ மண்டல எயிற் கோட்டப்பகுதியில் நின்றருளிய கருக் கமர்ந்த பட்டாரியர்'' என்றே இம்மன்னன் கல்வெட்டு கி.பி.1025-ல் குறிப்பிட்டு பொன் வழங்கிய செய்தியையும் வெளிப்படுத்துவதிலிருந்து சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பும் இக்கோயில் பிரசித்தி பெற்று விளங்கியதனை இதன் மூலம் அறிகின்றோம்.



திருவல்லம் பில்வநாதீஸ்வரர் திருக்கோயில் - தட்சிணாமூர்த்தி

தொண்டைநாட்டுத் தலத்தில் சிறப்புற்று விளங்குவது திருவல்லம் பில்வநாதீஸ்வரர் திருக்கோயில் ஆகும். இக்கோயிலின் தேவகோஷ்டத்தில் தட்சிணா மூர்த்திப் பெருமான் அருட்காட்சி தருகின்றார். இவரது ஜடாபாரம் சிறு சிறு ஜடைக்கட்டுகளுடன் வட்ட வடிவமாகக் காணப்படுகிறது. இடக்காதில் ஓலையும் வலக்காதில் குழைக்குப் பதிலாக நாகமே குழையாக அமைந்துள்ளது. மார்பில் கண்டாபரணமும் ஏகருத்திராக்ஷமும், பூணூலும் அணிசெய்கின்றன. வலக்கரம் சின்முத்திரையினைக் காட்டுகின்றது. வலப்பாதத்தால் முயலகனை மிதித்துள்ளார். இடப்பாதத்தை ஆசனத்தின் மீது குத்திட்டு வைத்து உத்குடிகாசனத்தில் வீற்றிருக்கின்றார். இடக்கரத்தில் சுவடியினை ஏந்தியுள்ளார். திருவடியால் கீழ் இருமுனிவர்கள் உள்ளனர். ஒருவர் குருநாதரின் திருமுகக் குறிப்பை நோக்குகின்றார். ஒரு முனிவர் சுவடியில் எழுதும் நிலையில் உள்ளார். சாந்தம் தவழும் திருமுகத்துடன் குருநாதர் காட்சிதருகின்றார்.



இந்த பஞ்சலோக தட்சிணாமூர்த்தி சிலை பாரீஸ் நாட்டின் "Guimet" மியூசியத்தில் உள்ளது. ஜடாபாரத்துடனும், முப்புரிநூலுடனும் விளங்கும் இவர் சின்முத்திரையினை காட்டியருளுகின்றார். பின் கரங்களில் தீச்சுடர் உள்ளது. மற்றொன்றில் ஏதும் காணப்படவில்லை வீரக்கழல் அணிந்த தனது வலக்காலால் முயலகனை அழுத்த, முயலகனது பார்வை பெருமானை நோக்கியவாறு உள்ளது. முன் இடக்கரம் கீழ் நோக்கியுள்ளது. இதன் உயரம் 11 செ.மீ. ஆகும். இது கி.பி.16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜயநகரர் காலத்தது ஆகும் இந்த அழகுச் சிற்பம் கிடைத்தற்கரியதாகும்.

ஆதாரம்: South India Vijayasnagara, 16th Century A.D.H.t., 11 C.Ms. Musee Guimet, Paris, A Miniature bronze typical of the Vijayanagara Period.



திருப்பூந்துருத்தி எனும் திருவையாற்றுக்குத் தென் கிழக்கில் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரில் உள்ள புஷ்பவன நாதர் திருக்கோயிலில் இத்திருவுருவம் காணப் படுகிறது. குருநாதர் ஜடா மண்டலத்துடன் முன் இருகரங் களிலும் வீணையை ஏந்திய வண்ணம் ஒருவகை உத்குடிகா சனத்தில் எழுந்தருளியிருக் கின்றார். இப்பெருமான் வீணை ஏந்தி இசைப்பதைக் கண்ட திருநாவுக்கரசர் ''பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னை'' என்று குறிப்பிடுகின்றார். இது முற்காலச் சோழர் காலத்துச் சிற்பக்கலையைச் சார்ந்தது ஆகும்.



திருக்கச்சனம் எனும் தலம் திருவாரூர் திருத்துறைப்பூண்டி பேருந்துப் பாதையில் திருவாரூரிலிருந்து 19 கி.மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள கைச்சின்னேசுவரர் திருக்கோயிலின் தேவ கோஷ்டத்தில் ரிஷபாருட தட்சிணாமூர்த்தி திருவுருவம் காணப்படுகிறது. இதனை மேதா தட்சிணாமூர்த்தி என்பர். குருநாதருடைய ஜடாபாரமும் எடுப்பான அழகிய பூரிமமும் திருமுகத்திற்கு அழகூட்டுகின்றன. மார்பில் பல்வகை ஆபரணங்களும் உருத்திராக்க மாலையும் பூணூலும் அணிசெய்ய சின்முத்திரையுடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். முயலகனது ஜடைகள் ஜடாமண்டலமாக உள்ளது, வலப்பக்கம் நந்தியம் பெருமான்


அமர்ந்து தனது நாவால் பெருமானின் இடது திருவடியினை ஸ்பரிசிக்கின்ற முறையில் அமைந்துள்ளது. ஆகையால் இவர் ரிஷபாரூட தட்சிணாமூர்த்தி என்று இத்தலத்தில் விளங்குகின்றார். இது இராஜேந்திர சோழன் காலத்துச் சிற்பவரிசையில் போற்றப்படுவதாகும்.




திரு ஆவூர் எனும் தலம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பாபநாசம் இரயில்நிலையத்திலிருந்து கோவிந்தகுடிக்கு அருகில் 11 கி.மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள பசுபதீச்சுரம் கோயிலின் தேவ கோஷ்டத்தில் இந்த அழகிய திருவுருவம் கண்டு இன்புறத்தக்கது. சிரசில் ஜடா மண்டலமும் பூரிமமும் விளங்க எழில்முகம் காட்சி தருகின்றது. மார்பில் அணிகலன்கள் அழகு செய்யவும் பாதத்தில் சிலம்பும் வீரக்கழலும் விளங்கவும் பெருமான் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். புன்னகை பூத்தமுகத்தோடு சின்முத்திரை காட்டியருளுகின்றார். இச்சிற்பம் ராஜேந்திர சோழன் காலத்தைச் சார்ந்ததாகும்.

ஆலங்குடி ஆபத்சகாயர் திருக்கோயில் - தட்சிணாமூர்த்தி (மூலவர்)

தட்சிணாமூர்த்தியின் சிறப்புத்தலமாக விளங்குவது ஆலங்குடி ஆகும். இத்தலம் திருஇரும்பூளை என்று திருமுறைகளில் குறிப்பிடப்படு கின்றது. இது நீடாமங்கலம் இரயில் நிலையத்திற்கு வடக்கே 6 கி.மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள ஆபத்சகாயர் திருக்கோயிலின் தேவகோஷ்டத்தில் இப்பெருமான் எழுந்தருளியுள்ளார். மூலவராகிய தட்சிணாமூர்த்தி சின்முத்திரை காட்டிய திருக்கரத்துடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். முனிவர் நால்வரும் உள்ளனர். மேலும் இத்திருக்கோயிலில் ஜடாபாரத்துடன் விளங்கும் ஐம்பொன்னாலாகிய தட்சிணாமூர்த்தியின் உற்சவமூர்த்தி காணப்படுகின்றது. படர்ந்த கல்லால மரத்தின் கீழ், ஐந்தலை நாகம் பெருமானுக்குக் குடைபிடித்தும் சனகாதி முனிவர்கள் சூழ உற்சவ மூர்த்தியாய் இப்பெருமான் விளங்குகிறார். வேறு எந்தத் தலத்திலும் தட்சிணாமூர்த்தியின் உற்சவத் திருமேனியைக் காண்பது அரிது ஆகும். காணவேண்டியது நமது கடமையாகும்.






இப்பெருமான் அழகாக விரிந்த ஜடாபாரத்துடன் மார்பில் அணிகலன்கள் விளங்க சின்முத்திரை காட்டி வீராசனத்தில் எழுந்தருளி இருக்கின்றார். இடக்கரத்தை நேராகப் பூமியைத் தொடும்படி தொங்க விட்டிருக்கின்றார்.

இடம்: திருநெல்வேலி மாவட்டம் ஊர்க்காடு திருக்கோட்டியப்பர் திருக்கோயில்



இப்பெருமானுடைய ஜடாமண்டலம் வரிசையாகவும் நேராகவும் குத்துட்டுக் காணப்படுகின்றது. பெருமான் சின்முத்திரை காட்டி வீராசனத்தில் அமர்ந்துள்ளார். இடப்பாதத்தின் பரடு மேல் நோக்கியுள்ளது. இடக்கரத்தை நேராகப் பூமியைத் தொடும்படி தொங்கவிட்டிருக்கின்றார். இடக்கரத்தருகே நாகம் இருக்கிறது. முனிவர் இருவர் பாதத்தருகே அமர்ந்துள்ளனர்.

இடம்: திருநெல்வேலி மாவட்டம் - அத்தாளநல்லூர் - முன்றீஸ்வரர் திருக்கோயில்.



இப்பெருமான் ஜடாபாரத்துடன் வீராசனத்தில் எழுந்தருளி யுள்ளார். இடப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. வலப்பாதம் மடங்கியுள்ளது. வீராசனத்தில் பாதம் மாறி அமைந்துள்ளது. சின்முத்திரை உள்முகமாகத் தனக்குத்தானே காட்டியவாறு அமைந்துள்ளது. இடக்கரம் நேராகத் தொங்கவிடப்பட்டுள்ளது.

இடம் : திருநெல்வேலி மாவட்டம் - பிரமதேசம் - கைலாசநாதர் கோயில்.



இக்குருநாதர் ஜடா மண்டலத்துடன் சின்முத்திரை காட்டி வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். வலப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. முயலகன் முகம் வலப்பக்கம் இருப்பதற்குப் பதிலாக இடப்பக்கம் அமைந்துள்ளது. இடக்கரம் நேராகத் தொங்க விடப்பட்டுள்ளது. முயலகன் கையில் ஓர் ஆயுதம் (நீண்டகோல்) காணப்படுகிறது என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

இடம் : திருநெல்வேலி மாவட்டம் - சேரன்மாதேவி - அம்மநாதசுவாமி திருக்கோயில்.



இப்பெருமான் ஜடாபாரத்துடன் வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். பின் இரு கரங்களில் சுடரும் ஜபமாலையும் திகழ்கின்றன. முன் இரு கரங்களில் சுவடியும் சின்முத்திரையும் காணப் படுகின்றன. பின்னால் நந்தி காட்சியளிக்கின்றது. முயலகன் ஜடாமண்டலத் துடன் மேல்நோக்கிய வாறு காணப்படுகின்றான். இவர் மேதா தட்சிணா மூர்த்தி ஆவார் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆனாங்கூர் (திரு வாவடுதுறைக்கு அருகில்) அகத்தீஸ்வரர் திருக்கோயிலின் உள்மண்டபத் தில் இப்பெருமான் விளங்குகின்றார். கோஷ்டத் தில் விளங்கும் தட்சிணாமூர்த்தியையும் இந் நூலில் வேறு இடத்தில் காணலாம். இக்கோயில் செம்பியன் மாதேவியாரால் திருப்பணி செய்யப்பட்டதாகும். காலம் -10 ஆம் நூற்றாண்டாகும்.



கலிங்கநாடு - யோகதட்சிணாமூர்த்தி

இந்தத் திருவுருவம் சிறப்புமிக்க வேலைப்பாடு அமைந்த கருக்குகளும், சிற்பங்களும் (நகாசுவேலை) அழகுற அமைந்த தோரண வாயிலைப் போல விளங்கும் கோஷ்டத்தில் யோக தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். பெருமான் ஜடாமண்டலத்துடனும் ஏகருத்திராட்ச மாலையுடனும் இடப்பக்கம் தண்டத்தை ஏந்தி அர்த்த பத்மாசனத்தில் எழுந்தருளியுள்ளார். சின்முத்திரை வேறு விதமாக அமைந்துள்ளது. குருநாதருடைய பீடத்தின் கீழ்முனிவர் நால்வரும் அமர்ந்துள்ளனர். பெருமான் எழுந்தருளியுள்ள மாடத்திற்கு மேலே சிவபிரான் ரிஷப வாகனத்துடன் புடைப்புச் சிற்பமாகக் காட்சிதருகின்றார். இது 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்த சிற்பமாகும்.

மராட்டியர் காலத்து - சக்தி தட்சிணாமூர்த்தி

இந்த சக்தி சமேதராகிய சிவபெருமான் கல்லால மரத்தின்கீழ் அமர்ந்து சின்முத்திரையுடன் காடசி தருவதால் சக்தி தட்சிணாமூர்த்தி என்று கருதப்படுகிறது. இத்திருவுருவம் தற்போது தஞ்சாவூர் கீழவீதி - புதுக்கோயில் சந்தில் உள்ள பாலதண்டாயுதபாணி திருக்கோயில் பூசையில் வழிபடும் மூர்த்தமாக விளங்கி வருகிறது. சின்முத்திரையினைக் காட்டும் இப்பெருமான் இங்குச் சுகாசனமாக இருந்து காட்சி தருகின்றார். இவரது பின் கரங்களில் மானும், மழுவும் காணப்படுகின்றன. முன்வலக்கரம் சின்முத்திரையினைக் காட்டவும் முன் இடக்கரம் வரதஹஸ்தமாகவும் உள்ளது.

இப்பெருமான் ஜடாமகுடத்துடன் சர்வஆபரணங்களை அணிந்தவராகவும், இடுப்புப் பகுதியிலிருந்து கணுக்கால்வரை வஸ்திரம் உடுத்தியவராகவும் காணப்படுகிறார். பத்ர பீடத்தில் எழுந்தருளியுள்ளார்.

பெருமானின் வலப்பக்கம் இருக்கும் கல்லாலமரம் விரிந்து பரந்த கிளைகளுடன் கூடியதாக அடர்த்தியான இலைகளுடன் காணப்படுகிறது. இடப்பக்கம் அம்பிகையானவள் திரிபங்கி நிலையில் நின்று தனது வலக்கரத்தில் நீலோத்பல மலரை ஏந்தியும், இடக்கரம் டோலஹஸ்தமாகவும் விளங்கக் காட்சி தருகின்றாள். (இதைப்போன்ற திருவுருவத்தினைத் திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலின் சித்திரப்பிரகாரத்தில் காணலாம்) கல்லாலமரம் தட்சிணாமூர்த்தி, அம்பிகை இவை மூன்றும் ஒரே கல்லினால் அமைந்துள்ளது. (உயரம் 2 1/2 அடி, அகலம் 1 1/4 அடி) பீடப்பகுதியில் மராட்டியர் காலத்துக் கல்வெட்டும் காணப்படுகிறது. மேற்படி கல்வெட்டுச் செய்தி பாதிமட்டும் வெளியில் தெரிகிறது. இத்திருவுருவத்தினை வேறு எங்கிருந்தோ இக்கோயிலில் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்துள்ளார்கள். என்பது கட்டுமானப்பாணியிலிருந்து தெரியவருகிறது. இத்தகைய சக்தி தட்சிணாமூர்த்தியின் வகையில் வேறு பல நிலைகளும் உண்டு.



திருவொற்றியூர் ஞானயோக தட்சிணாமூர்த்தி இவரை லகுளீசர் என்றும் கூறுவர் மிகப்பெரிய திருவுருவம் வேறு எந்த ஆலயத்திலும் காணமுடியாது.



ஓமாம்புலியூர்
தட்சிணாமூர்த்தி -
வெள்ளிக்கவசத்தில்



தென்குடித்திட்டை
ஜடாபாரம் சுவடி - ஞானமுத்திரை
கொண்டருளும் தட்சிணாமூர்த்தி



மூவலூர் (நாகை மாவட்டம்)
முனிவர்களுக்கும், ஏனைய
உயிரினங்களுக்கும்
அருள் வழிகாட்டும் ஞான தட்சிணாமூர்த்தி

திருப்புலிவனம் தலத்தில் விளங்கும் உத்குடிகாசன தட்சிணாமூர்த்தி ஜடாபாரம், அக்னி ஜபமாலை, தொங்குகரம், சின்முத்திரை, முயலகன் மீது திருவடியினைப் பதித்தல்.





திருப்புனவாசல் வியாக்யான தட்சிணாமூர்த்தி. ருத்ராட்சங்கள் மாலைகளாக உள்ளன. கைகளில் காப்பு, பாதங்களில் காப்பு எளிமையான தோற்றம். சுவடியில்லாது இடதுழ காலின் முட்டியில் இருத்திய கரம் முயலகனைக் காட்டுகின்றது. ஆபரணங்கள் இல்லாத மூர்த்தம்.



சந்திரன் வழிபட்ட திங்களூர் திருத்தலத்தில் உள்ள யோகபத்மாசன தட்சிணாமூர்த்தி


திருவையாறை அடுத்த திங்களூரில் நவக்கிரக தலங்களில் 2-வது தலமான சந்திரபரிகாரத் தலம் உள்ளது. இத்தலத்தில் யோக குருவாக, யோக பத்மாசன தட்சிணாமூர்த்தி அருள்பாலித்து வருகிறார். அவர் ஒரு கையில் ஜெமாலையும், மற்றொரு கையில் அமிர்த கலசத்தையும் கொண்டு தவக்கோலத்தில் காட்சி தருகின்றார்.



திருச்சி மாவட்டம் உத்தமர்கோயில் சிவகுரு தட்சிணாமூர்த்தி (வெள்ளிக்கவசம் சார்த்தப்பட்ட நிலையில்) (சிவ - விஷ்ணு - பிரமன் ஆலயம்)



தஞ்சை மாவட்டம் தாராசுரம் - ஸ்ரீ ஐராவதேஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் (பிற்காலசோழர் காலம்) கலையம்சமும் மிகப்பெரியதுமான தட்சிணாமூர்த்தி பார்த்துக் கொண்டே இருக்கலாம் இத்திருமேனியை.



ஜடாபாரம் - மான் - மழு கொண்ட ஞான தட்சிணாமூர்த்தி அழகுமலை.



கோவிலூர் தட்சிணாமூர்த்தி

இவரது ஜடைகளே மகுடமாக உள்ளது. இவ்வமைப்பு எங்கும் இல்லை எனலாம். சர்வாபரணங்களையும் அணிந்து சுவடி இல்லாது வியாக்யான முத்திரை காட்டுகின்றார்.



திருமுண்டீச்சரம்
ஜடாபாரத்தில் பூரிமமும் வீராசனமும் கொண்டு அருளும் தட்சிணாமூர்த்தி



திருநெடுங்களம் யோகசூத்திரம் கொண்ட வியாக்யான தட்சிணாமூர்த்தி - ஜடைகள் யாவும் பாரமாகவும் சற்று விரிந்தும் காணப்படுகிறது. இவர் இராஜலிங்காசனம் கொண்டாலும், யோகசூத்திரம் இடது முழங்காலிலிருந்து இடுப்போடு கட்டப் பட்டுள்ளது. மிக அரியதொரு சிற்பம்.



பிரமதேசம் கால் மாற்றியருளும் ஞான தட்சிணாமூர்த்தி - திருநெல்வேலலி மாவட்டத் தில் உள்ள பிரமதேசம் சிவனாலயத்தில் உள்ள ஞானதட்சிணாமூர்த்தி இவர் இடது காலின் தொடை மீது வலது காலை போட்டு காட்சி தருகிறார். ஆபரணங்கள் இல்லாத திருமேனி காலத்தால் மிகவும் பழமையானது. ஞான முத்திரையினை நெஞ்சிலே வைத்து காண்பித் தல் சிறப்பாகும். பாண்டியர் கால சிற்பமாகும். அரியசிற்பமாகும்.



கஞ்சனூர் - ஸ்ரீ அக்னீபுரிஸ்வரர்
ஆலயத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி
இத்தலம் சுக்ரத் தலமாகும்.
இங்குள்ள பெருமான் தான்
சுக்ரதோஷத்தை நீக்குகின்றார்.
சுக்கிரன் என்ற தனிச் சன்னதி இல்லை.

திருக்கண்டியூர் - பிரமனது
சிரசினை சிவபெருமான் கொய்த
தலமாகும். பிரமன் மற்றும்
சரசுவதி தனிச்சன்னதியாக
விளங்குகின்றனர்.
மழு, மலர், ரிஷபத்தின் மீது
வலது கரம் உள்ள அர்த்தநாரியே
தட்சிணாமூர்த்தியாவர்.
திருவண்ணாமலையில்
பிரமனுக்கும் திருமாலுக்கும்
உயர் ஜோதியாக காட்டி நின்றாலும்
இன்று அக்கோயிலில்
திருக்கார்த்திகைத் தினத்தில்
தரிசனம் கொடுப்பதற்காக
சிவஞான அர்த்தநாரீஸ்வரராக
(நின்றவாறு) திருக்காட்சித் தந்து
உடனே திருக்கோயிலினுள்
செல்கின்றார்.






இஞ்சிக்குடி - தட்சிணாமூர்த்தி : ஜடாபாரம், அக்னி, நாகம், சுவடி, வியாக்யான முத்திரை சுற்றிலும் முனிவர்கள். நேர்த்தியான சிற்பத்திருமேனியாகும்.

மணக்கால் ஐயம்பேட்டை வீணாதர தட்சிணாமூர்த்தி

அபஸ்மாரமாகிய அரக்கனின் தலைமீது தனது இடதுகாலை ஊன்றியும் வலது காலை நிலத்தில் பதித்தும் வீணையினை தனது முன் கரங்களில் மீட்டுகின்றார். பின்கரங்களில் சுடரும், அரவமும் உள்ளன. இந்த வினாதட்சிணாமூர்த்தி ஊழிக்காலத்தின் முடிவை உணர்த்துவதாகும். இவரை கேய தட்சிணாமூர்த்தி எனவும் கூறுவர்.





திருப்பூவணம் - தட்சிணாமூர்த்தி

இது பாண்டிநாட்டுத் தலமாகும். இறைவன் ரசவாதம் செய்த தலமாக திருப்பூவணம் விளங்குவதால் சித்தர்கள் வழிபாட்டில் ஈடுபாடு உடையவர்கள். சௌந்தரநாயகி சமேத புஷ்பவனேஸ்வரரையும், சித்தர்களின் பரிபூரண ஆசியும் பெற தட்சிணாமூர்த்தியையும் வழிபடுக. சித்தர்களின் ரூபமே தட்சிணாமூர்த்தி ஆவார்.




சிவஞானம் அருளும் வித்யேஸ்வரர்

திருப்பூவணத்தில், தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதிக்கு எதிரில் உள்ள 'வித்யேஸ்வரர்' மிகவும் வரப்ரசாதி. படிப்பில் மந்தமாக உள்ள குழந்தைகள் இவ்விடத்தில் வந்து பிரார்த்தனை செய்து கொண்டால் எல்லாவித வித்தைகளிலும் நல்ல தேர்ச்சி அடைவார்கள்.

சைவ சித்தாந்தத்தில் வித்யேஸ்வரருக்கு தனிச் சிறப்பிடம் உண்டு. கிரியா சக்தியினால் சுத்த மாயையைச் சூக்குமமாகக் காரியப்படச் செய்பவர் சிவபெருமான். பின்னர் ஞான சக்தியைச் செலுத்தி, அதனைத் தூலமாகவும் காரியப்படச் செய்வார்.

எனவே சிவஞானம் பெற விழைகிறவர் களும் வித்யேஸ்வரரை உபாசிப்பது நல்ல பலன்களைத் தரும்.



தஞ்சை மாவட்டம் - திருவிடைமருதூர் வட்டம் - நாகநாத சுவாமி ஆலயம் - ஸ்ரீ கிரிகுஜாம்பிகை அம்மன் ஆலய வெளிப்பிரகாரத்தில் உள்ள நான்கு விதமான (சிவன் உருவங்கள்) தட்சிணாமூர்த்தி உருவங்கள் - இவைகள் ஆய்வுக்குரியனவாகும். (உயரம் 4 அடிகள்)

உமாதேவிக்கு உபதேசித்த பெருமான்


திருப்பேரூரில் சிவபெருமான் பெருங்கருணையினால் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் போழ்து, உமாதேவியார் எழுந்துவணங்கி, ''சுவாமி, பெத்தநிலை நீங்கி, முத்தியின் பத்தில் அழுந்துகின்றவர்க்குக் காட்டும் ஆனந்த தாண்டவத்தைக் கோமுனி முதலியோருக்குக் காட்டிய காரணம் என்னை'' என்று வினவ அதற்குச் சிவபிரான், '' தேவீ, கோமுனியும் பட்டிமுனியும் பேரன்போடு சடைமுடியுடன் விபூதி உருத்திராக்கங்களைத் தரித்து, வில்வத்தளிர்களைக் கொண்டு உபசாரங்களினால் நம்மைச் சிவலிங்கத்தின் கண்ணே நெடுங்காலம் பூசித்ததேயன்றி, இரஜிதசபையிலே நடிக்கும் நமதுவடிவத்தும் அருச்சித்து மஹோற்சவம் நடாத்தி வணங்கி பஞ்சமலங்களையும் வென்று விரும்பியபடியால் அப்பொழுது நமது நாடகத்தைக் காட்டினோம்'', என்று திருவாய்மலர்ந்தனர்.

அதனைக்கேட்ட உமா தேவியார், ''அம்முனிவர் இருவரும் சடைமுதலியவற்றைத் தரித்துப் பூசித்தபடியால் அச்சடை முதலியவற்றின் மகிமைகளைச் சாற்றி அருளவேண்டும்'' என்று வேண்ட, அதற்குச் சிவபெருமான் அருளிச் செய்யத் தொடங்கினார்.

''உமையே, நமது வேடங்கள் பலவற்றுள்ளும் சடைமுடியே சிறந்ததாம். சடைமுடி தரித்தவரை யாமாகக் கருதி தேவர் முதலாயினோர் வழிபடுவர். ஒவ்வொரு சடையும் ஒவ்வொரு சிவலிங்கமாம். சடையை முடித்தவனுக்கு ஆயிரம் பிறவியின் முன்னுள்ளாரும் பின்னுள்ளாரும் நமது சிவலோகத்தைச் சேர்வர். அவனை வணங்கினோன் பாவியாயினும் புண்ணியமும் செல்வமும் பெறுவன். சடையிற்பொருந்திய ஒரு நீர்த்துளி ஒருவன் மேல் தெறித்தால் பேய் பூதம் ஆதியால் வருந்தும் துன்பமும் நோயும் பாவமும் போம். விபூதியாவது வைதிக விபூதி என்றும்இலௌகிக விபூதி என்றும் இரண்டாகும். அவற்றுள் வைதிக விபூதி ஓமகுண்டத்தில் விளங்குவதாம். இலௌகிக விபூதி கோமயத்தினால் ஆவதாம். வைதிக விபூதி பிரமன் ஓமகுண்டத்திலே தோன்றுவதாகிய புராதனி என்றும், பிராமணர் ஓமகுண்டத்திலே தோன்றுவதாகிய சத்தியோசாதை என்றும் இரண்டாம். தீக்ஷிதராகிய சைவர் தரிக்கும் விபூதி கற்பம். அநுகற்பம், விகற்பகம் என மூன்றாம். அவற்றுள் கற்பமாவது கன்று ஈனாத பசு, இளங்கன்றுப் பசு, கன்றிழந்த பசு, மலட்டுப்பசு, குறைந்த செவி கோடு வால்களையுடைய பசு, பவ்வீயுண்ணும் பசு, நோயுள்ள பசு என்னும் இவற்றைவிட்டு பங்குனி மாதத்தில் நெல்லரிந்த கழனிகளிலுள்ள தாளைமேய்ந்த நல்ல பசுக்கள் விட்ட மயத்தை எட்டாம் திதி, பதினான்காம் திதி, பதினைந்தாம் திதிகளிலே, சத்தியோசாதத்தினால் பூமியில் விழுமுன்னே தாமரை இலையில் ஏற்று மேல்வழும்பு நீக்கி, வாமதேவத்தினால் பஞ்சகவ்வியம் பெய்து, அகோரத்தினால் பிசைந்து, தற்புருடத்தினால் திரட்டி ஓமாக்கினியில் இட்டு ஈசானத்தால் எடுத்து, புதிய வஸ்திரத்தினால் வடிகட்டி, புதிய கடத்தில் நிறைத்து, காயத்திரிமந்திரம் உச்சரித்து, பரிசுத்த ஸ்தானத்தில் வைத்து, நறுமலர் சாத்தி, வஸ்திரத்தால் வாய்கட்டுவதாம். உடனே ஓம குண்டத்திலிடாது உலர்த்தி விளைவித்தலும் விதியாம்.

அநுகற்பமாவது வனத்தில் உலர்ந்த மயத்தைச் சித்திரை மாதத்தில் கொணர்ந்து பொடித்து அதில்கோஜலம் பெய்து முன்கூறிய விதிப்படி விளைவித்தலாம். உபகற்பமாவது இயல்பாக

ஆதாரம் : பேரூர்புராணம் - இவ்வாதீனத்தின் முனிவர் கவிராட்சச கச்சியப்ப முனிவர் அருளியது ஆதீன வெளியீடாகும்.



சக்தி தட்சிணாமூர்த்தி

அக்கினியினாலே தகிக்கப்பட்ட வனத்திலுள்ள பொடியில் பஞ்சகவ்வியம் பெய்து முற்கூறிய விதிப்படி அக்கினியிலிட்டு எடுத்தலாம். நீலநிற விபூதி நோயை ஆக்கும். தாமிரநிற விபூதி ஆயுளை நீக்கும். செந்நிற விபூதி புகழைப் போக்கும். பொன்னிற விபூதியானது தரித்திரத்தைச் சேர்க்கும். வெண்ணிற விபூதி புண்ணியத்தை விளைக்கும். ஆதலால் வெள்ளிய விபூதியே தரித்தற்குரிமை உடையதாம். அவ்விபூதியை மான்தோல், புலித்தோல், வஸ்திரம் இவைகளால் பன்னிருவிரல் அளவு உயரமும் எண்விரல் அளவு அகலமும் வாய் வட்டமுமாக அமைத்து ஆலயத்தில் வைத்து சைவரும் வைதிகரும் அவரவர்க்குரிய விதிப்படி மூவிரலாலும் சிரம் முதுலிய ஸ்தானங்களில் அணியக்கடவர். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் இம்மூவருக்கும் வைதிகவிபூதியே உரியது. அதீக்ஷிதராகிய சூத்திரர்க்கு அசைவ விபூதியும் திருக்கோயில் மடைப்பள்ளி விபூதியும் திருவடியார் மடாலயத்தின் மடைப்பள்ளி விபூதியும் வனத்தில் வெந்த விபூதியும் உரிமையாம். சங்கரஜாதியார்க்கு மடைப்பள்ளி விபூதியும் வனத்தில் வெந்த விபூதியும் ஆகும்.

அக்கினி, தேவர், குரவர் இவர் முன்னும், வழி, அசுத்தநிலம், இழிஞர் இவற்றிடத்தும் விபூதி தரிக்கப்படாது. ஒருகையால் ஏற்றவிபூதி, விதிப்படி இயற்றா விபூதி, விலைவிபூதி, அதீக்ஷிதர் கொடுத்த விபூதி ஆகிய இவைகள் தரிக்கலாகா. பூமியில் வீழ்த்தலும், அங்காத்தலும், தலை நடுக்கலும், கவிழ்தலும் செய்யாது, திருநீறு தரிக்கக்கடவர். பிராமணர் உருவமுழுவதும் மற்றையோர் நாபிக்கு மேலும் உத்தூளனம் செய்க. விபூதிதரித்தே அறமாதிகள் புரிக. திருநீறு தரியாதவர்முகம் சுடுகாடாகும். அதனைப்பார்த்தவர் பஞ்சாக்கரத்தில் நூறு உரு ஜபிக்கக்கடவர். விபூதி தரியாது தவம் முதலியன நிரம்பச் செய்தாலும் பயனில்லை. தரித்தவர் சும்மா இருந்தாலும் பயன் பெறுவர். திருநீறு தரித்தே சிரார்த்தம் செய்க. பாவத்தை நீற்றலால் நீறு, செல்வம் தரலால் விபூதி, உயிர்களின் மலக்குற்றத்தைக் கழுவுதலால் சாரம், அறியாமை நீங்க விளக்குதலால் பசிதம், பூதாதிகளைப் போக்கிக் காத்தலால் காப்பு என்னும் காரணப்பெயர்களும் அவ்விபூதிக்கு உண்டு.

உருத்திரக்ஷமாவது முப்புரத்தவர் வருத்தலினாலே அமரர்கள் தவம் செய்ய அதற்கு இரங்கி நாம் போய் இமையாது நோக்கினமை பற்றி மூன்று கண்களினும் நீர் துளித்தன. அவற்றுள் வலக்கண் நீரிலே பன்னிரண்டு விருக்ஷமும், இடக்கண் நீரிலே பதினான்கு விருக்ஷமும், நடுக்கண்நீரிலே பத்து விருக்ஷமும் உண்டாயின. இவைகளுக்கு உருத்திராக்ஷவிருக்ஷம் என்று பெயர். வெண்ணிறமணி பிராமணர்க்கும், பொன்னிறமணி க்ஷத்திரியர்க்கும், வெண்மை பொன்மை கலந்தமணி வைசியர்க்கும், கருநிறமணி சதுர்த்தருக்கும் உரிமையாம்.

ஒருமுகமணி சிவரூபமாய் பிரமகத்தி நீக்கும். இருமுகமணி சிவசத்தி ரூபமாய் கோகத்தி நீக்கும். மும்முகமணி அக்கினி ரூபமாய் ஸ்திரீகத்தி நீக்கும். நான்முகமணி பிரமனுருவாய் மாநுடக்கொலை தொலைக்கும். ஐம்முக மணி காலாக்கினி ருத்ரரூபமாய் உணவினாலாகும் குற்றங்களை ஒழிக்கும். ஆறுமுகமணி அறுமுகன் உருவாய் வலக்கையிலே தரித்தலால் பிரமகத்திச் சாயையைப் போக்கும். ஏழுமுகமணி ஆதிசேடன் உருவாய் பசுக்கொலை பொருட்களவுகளைத் தீர்க்கும். எண்முகமணி விநாயகனுருவாய் குருதாரகமனம் தானகிரகணம் பிறர் அன்னம்புசித்தலாகிய பாவங்களைக் கெடுக்கும். ஒன்பது முக மணி வயிரவனுருவாய் பூதாதிகளின் தீங்கும் பாம்புகளின் தீங்கும் நீங்கச் செய்து செல்வத்தையும் முத்தியையும் கொடுக்கும். பத்துமுக மணி விஷ்ணுரூபமாய் தீய நாள் கோள் முதலிய தீங்குகளைத் தீர்க்கும். பதினொருமுகமணி ஏகாதச ருத்திரரூபமாய் ஆயிரம் வேள்வியின் பயனும் ஒருலக்ஷம் பசுக்களோடு பெரும்பொருளும் தானம் செய்த பயனும் உண்டாக்கும். பன்னிருமுகமணி துவாதச ஆதித்தரூபமாய் அசுவமேதப் பயனும் மேருதானப் பயனும் கொடுக்கும். பதின்மூன்று முகமணி முருகனுருவாய் இஷ்டகாமிய முதலியவற்றைக் கொடுத்து தந்தை முதலியோர் கொலைப் பாவத்தைத் தொலைக்கும். பதினான்முகமணி எமதுருவும் நினதுருவுமாய் வசியத்தை ஆக்கி சிவபுரத்தில் இருத்தும். அதனைக் கழுத்தில் அணிந்தால் மந்திரங்கள் பலிக்கும். வெற்றியுண்டாம். உருத்திராக்ஷம் தரித்து சற்காரியங்கள் இயற்றினால் ஒன்று அனந்தமாம். தரியாதவர்க்குப் பயனில்லை. கீழ்மக்களாயினும்

பெண்களாயினும் மது மாமிச பக்ஷணிகளாயினும் உருத்திராக்ஷத்தை முடிமீது தரித்தாராயின் அவர் பாவம் நீங்கி, இறுதியில் நமது வடிவத்தைப் பெறுவர். சிகையில் ஒன்றும், சிரசில் முப்பத்தாறும், கழுத்தில் முப்பத்திரண்டும், மார்பில் ஐம்பதும், கரத்தில் பதினாறும் மணிக்கட்டில் பன்னிரண்டும், முகமுகம் சேர இடையே முடிந்து மேரு அமைத்து முறையே கொள்ளக்கடவர்.

ஜபவடம் நூற்றெட்டு, ஐம்பத்து நான்கு, இருபத்தேழு மணிகளாகக் கொள்க. அநாமிகை விரலில் செபித்தால் நோய் நீங்கும். மத்திமை விரலில் செபித்தால் பகைநீங்கும். தர்ச்சனி விரலில் செபித்தால் முத்தி சித்திக்கும். முத்திகாமிகள் மேல்நோக்கியும் புத்திகாமிகள் கீழ்நோக்கியும் ஒலியாமலும் பிறர் விழிக்குப் படாமலும் ஜபிக்கக்கடவர். மேருவினைத் தொடுத்து ஜபித்து மீட்டும் மேருவரும்போது அதனைக்கடவாது திருப்பல் வேண்டும். ஜபவடம் தவறுதல் முதலியவற்றிற்கு நமது அருட்குறிக்குச் செய்யும் பிராயச்சித்தத்திலே அரைவரிசை இயற்றுக. விரல், இறை, புத்திர சிவகமணி, சங்குமணி, படிகமணி, முத்து, தாமரைமணி, பொன்மணி, குசைமுடி, உருத்திராக்ஷம் இவை ஒன்றுக்கொன்று உயர்வாம். கிருகத்திலும் பசுக்கோட்டம் பத்துமடங்கு, நதிக்கரை நூறுமடங்கு, ஆலயம் ஆயிரமடங்கு, வனம் லக்ஷமடங்கு, மலைகோடிமடங்கு, நமது சந்நிதி அளவில்லாமல் ஜபிப்பவர்க்குப் பயன் உண்டாக்கும். முத்திகாமிகள் இருபத்தைந்து மணியும், சுபகாமிகள் இருபத்தேழுமணியும், திரவியகாமிகள் முப்பது மணியும் ஆபிசாரத்துக்குப் பதினைந்து மணியுமாகச் செபவடங்கொள்க. உருத்திராக்ஷத்தைத் தரிசித்தவர்க்கு லட்சம், ஸ்பரிசித்தவர்க்குக்கோடி, தரித்தவர்க்கு ஆயிரம்போடி, ஜபித்தவர்க்கு அநந்தம் மடங்குப் பயன் உண்டாம். அவர்கள் இம்மையில் வெற்றியும் மறுமையில் நமதுருவும் பெறுவர்.

உபசாரமாவது தேவர்கள், பாற்கடல் கடையும்போது வில்வமும் துளவமும் உண்டாயின. அவை நமக்கு மகிழ்ச்சி செய்வனவாம். துளவத்தினும் வில்வம் சிறந்ததாம். முற்றியதாயினும், சருகாயினும், ஈரிலை அல்லது ஓரிலை பொருந்தியதாயினும் விலக்கப்படாது. செல்வத்தைச் செய்யும் திருமகள் வாழ்தலால் ஸ்ரீ பலமாம். நோய்நீக்கம் முதலிய இம்மைப்பயனும் முத்திப்பயனும் தரும். அஷ்டோத்தர சத சகஸ்ரநாமங்களால் வில்வங் கொண்டு நமதடியில் அருச்சித்தவற்கு அளவற்ற பயனாம். இங்ஙனம் வில்வமாதிகளால் நம்மைப் பூசிப்பதேயாம். பின்னும் அவ்வுபசாரம் காலையில் செய்யும் கடன்களை முடித்து, திருப்பள்ளித்தாமம் கொண்டுவந்து, பின்பு நீராடி, சந்திபண்ணி, இடஞ்செய்து, சூரியனிடத்தும் நம்மைப் பூசித்து, பின்னர்ப் பஞ்சசுத்திபண்ணி, அருட்குறியின்கண் ஆசனமும் மூர்த்தியும் அருச்சித்து, மூர்த்திமானாகிய நம்மையும் தியானித்து, புஷ்பாஞ்சலியினால் ஆவாகித்து, பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் கொடுத்து, பூஜை முடியுங்காறும் இருந்தருளவேண்டி, எண்ணெய்க் காப்பு முதலியன அபிஷேகித்து அலங்கரித்து நிவேதித்து தீபாராதனை செய்து, கண்ணாடி முதலியனகாட்டி, திருவைந்தெழுத்தைச் செபித்து, அதனோடு உடல் பொருள் ஆவி மூன்றும்தத்தம் செய்து துதித்தலாம். இவ்வுபசாரத்தை இயற்றினோர் புத்தி முத்திகளைப் பெறுவர்'' என்று அருளிச் செய்தனர்.

ஆலமரத்தடியில் அஷ்டமா சித்தி உபதேசித்தல்

விருத்தம்

கொத்திலங்கு கொன்றைவேய்ந்த கூடலாதி மாடநீள்
பத்தியம்பொ பான் மறுகணைந்து வளைபகர்ந்த பரிசுமுன்
வைத்தியம்பி னாமியக்க மாதர்வேண்ட வட்டமா
சித்திதந்த திறமினித் தெரிந்தவாறு செப்புவாம்.

உரை: கொத்தாக விளங்கும் கொன்றை மாலையைத் தரித்தருளும் நான்மாடக் கூடலழகராகிய சோமசுந்தரக்கடவுள், மாடங்கள் நீண்டு வரிசையாக விளங்கும் அலங்காரத்தையுடைய பொன்மயமாகிய வீதிகளிற் சென்று வளையல் விற்றருளிய மகிமையை முன்னே சொன்னோம். இனி, யக்ஷஸ்திரீகள் வேண்டிக் கொண்டவாறு, அவர்களுக்கு அட்டமாசித்தியை உபதேசித்த திருவிளையாடல் யாமறிந்தபடி சொல்லுகிறோம்.

சோமசுந்தரக்கடவுள் குலத்தானான பாண்டியன் அரசாளும் நாளிலே கைலாய மலையினிடத்திலே, ஆலமரத்தினிழலிலே, வேதப் பொருளாகிய கடவுள் அருகிலே, வெள்ளி மலையினருகே ஒரு மரகதமலைபோலே பருவதராஜபுத்திரியான பார்வதியார் வெற்றிலைச் சுருள் மடித்துக் கொடுக்க, அன்பு பெருகுகிற சுகாசாரியனாய் எழுந்தருளியிருக்கும்போது பிருங்கி, நந்தி முதலாகிய கணங்களும் சனகாதி நால்வரும் வணங்கிச் சிவசரித்திரங்கள் கேட்க, அவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளிச் செய்து கொண்டிருக்கிற சமயத்திலே, கடலிலே சஞ்சரிக்கின்ற சூரன் முதலானவர்களை வென்று ஜெயங்கொள்ளத் திருவவதாரஞ் செய்த குமரக்கடவுளுக்குத்



திருமுலைப்பால் கொடுத்த யக்ஷகன்னியர்களாகிய அறுவர்களும், உடம்பெல்லாந் திருநீறணிந்து, சடை, ருத்திராக்ஷமாலிகை முதலிய சைவ தவக்கோலமாய் வந்து, பெருமானுடைய வேதமாகிய சிலம்புகளலம்புகின்ற பாத தாமரைகளிலே வந்தனைசெய்து, சுவாமி எங்களுக்கு அட்டமாசித்தியும் உபதேசிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கக் கடவுளாகிய ஆசிரியர் தம்முடைய மடியின்மேலெழுந்தருளி இருக்கின்ற பார்வதியாரைக் காட்டி, இவளே பராசத்தியாகிய மகேஸ்வரியாக அணிமா முதலிய அஷ்ட சித்திகளும் வணங்கிக் குற்றேவல் செய்யுஞ் சேடியார்களாய்ச் சூழ்ந்து சேவிக்க விளங்குவாள். ஆகையாலிவளை நீங்கள் தியானித்தால், உங்கள் வினைகளை போக்கி, அஷ்டசித்தியுந் தருவாளென் றருளிச் செய்ய, அந்தச் சித்திகளெட்டையும் தெளிவுசெய்யக் கேட்ட பெண்கள் பூர்வகருமத்தால் அந்தச் சித்திகளை மறந்துபோக, அப்போது சிவபரஞ்சோதியான கடவுள் அந்தக் குற்றத்தைத் தெரிந்து பெண்களைக் கோபித்து நீங்கள் பட்ட மங்கையில் ஆலமரத்தடியிலே சடமான பாறைகளாய்க் கிடக்க வென்று சபிக்க; அந்தப் பெண்கள் மிகவுந் துன்பங் கொண்டு கடவுளை வணங்கி, சுவாமி! நாங்கள் இந்தச்சாபத்தை எக்காலந் தீர்ந்து தெளிவோமென்று கேட்க, அதற்குக் கடவுள் நீங்கள் இப்படிக் கருங்கற் பாறைகளாய் ஆயிரம் வருஷகாலம் கிடந்தீர்களானால் அப்பால் நாமே மதுரையினின்றும் வந்து உங்கள் சாபத்தைப் போக்கிப் பழைய வடிவு கொடுத்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல அஷ்ட சித்திகளும் தெளிவு செய்வோம் போங்களென்றார்.

அப்போது அந்த ஆறு பெண்களும் பட்டமங்கை யென்னுமூரிலே ஆலமரத்தடியிற் பாறைகளானார்கள். அப்படிப் பாறைகளாய் ஆலம் பழங்கள் ஆபரணங்கள் போல மேலே யுதிர்ந்து கிடக்க மூடுபட்டு, ஆயிர வருஷமுங் கழிய, மதுரைக்கடவுள் திருவுள்ளமிரங்கித் தமதிஷ்டப்படியே ஒரு ஆசாரிய வடிவமாய் அங்கே எழுந்தருளிப் பெண்கள் சாப நீங்கத் திருவருட் பார்வையாலே பார்த்தபோது, புடம் போட்ட இரும்பு பொன்னானாற்போல மலவிருள் நீங்கி எழுந்து அன்புடனே கடவுளடிகளிலே வந்து வணங்க, கடவுளும் பார்வதியை யொத்த அந்தப் பெண்கள் தலைமேலே கையை வைத்து அவர்களைப் பார்த்து, அவர்கள் புத்திக்குத் தெளிவு தோன்றக் கேளுங்கள் பெண்களே என்று உபதேசஞ்செய்தருளுகிறார். எப்படியென்றால்; அணிமா - மகிமா- இலகிமா- கர்மா- பிராத்தி-பிராகாமியம்- ஈசத்துவம் - வசித்துவம் என்று சித்திகளின் பேரெட்டு. அவைகளிலே சிறிய உயிர்களிலே, பரமகாட்டையான அணுரூபமாய்ப் புகுந்திருப்பதே அணிமா; பிருதிவி முதல் சிவமீறான முப்பத்தாறு தத்துவம் உள்ளும் புறமும் நீங்காதிருந்து நிறையும் பெருமையே மகிமா; மேருமலைபோலக் கனமான தூலமாய் எடுத்தால் இலகுவா யிருப்பதே இலகிமா; பரமாணுப்போன்ற வடிவாய் எடுத்தால் மேரு மலைபோலிருப்பதே கரிமா; பாதாளத்திலிருந்து பிரமலோகம்போய் மீண்டும் பாதாளத்துக்கு வரத்தக்கதே பிரார்த்தி; ஒரு தேகத்திலிருந்து வேறொரு தேகத்திலே புகுதலும்; ஆகாசத்திலே சஞ்சரித்தலும், இச்சித்த போகமெல்லாம் தானினைத்தபடியே அனுபவிக்க வரச்செய்தலு மிவையெல்லாம் பிராகாமியம்; முத்தொழிலுஞ் செய்து சூரியன் முதலான கிரகங்களெல்லாந் தான் சொன்னபடியே நடக்கச் செய்வதே ஈசத்துவம்; அசுரர் - பட்சிகள் - மிருகங்கள் - பூதங்கள் - மனிதர்கள் - இந்திரன் முதலிய அஷ்டதிக்குப் பாலர்களெல்லோரையும் தன் வசமாக்கிக் கொள்வதே வசித்துவம்; ஆகிய இச்சித்திகளை எம்மைத் தெரிந்த யோகிகள் விரும்பார்கள். ஆனாலும் இந்தச் சித்திகள் அந்த யோகிகளைப் பின்றொடர்ந்து அவர்கள் நிழல்போலக் கூடநின்று உலகத்தாருக் கவர்கள் பெருமையை தெரியச் செய்யுமென்று அஷ்டமா சித்திகளை யுபதேசித்துத் தெளிவு செய்ய, அப்படிக் கடவுளுபதேசித்த சித்திகளை, அந்தப் பெண்கள் பார்வதியாகிய தேவியைப் பாவனையாகத் தியானித்து, நன்றாய் அப்பியாசம் பண்ணிக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்று கடவுளின் ஸ்ரீ கைலாசமலையைச் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இடபதேவருக்கு உபதேசித்த பெருமான்

★ மயிலாடுதுறையாகிய மாயூரம் தலச் சிறப்பினை அறியவும், இடபதேவர் பெருமானிடத்தில் உபதேசம் பெற்றதை அறிந்து தெளியும் பொருட்டு சூதமுனிவரைப் பார்த்து அவருடைய சீடர்கள் காவிரித்துறைக்கு இடபதீர்த்தம் என்று பெயர் வந்தது எப்படி? என்று கேட்டனர். அவர் இடபதீர்த்த வரலாற்றைச் சொல்லுகின்றார்.

பார்வதிதேவி மயிலுருக்கொண்டு மாயூரத்திற்கு வந்திருந்த பொழுது சிவபெருமான் திருமால் பிரமன் முதலிய தேவர்கள் தன்னைச்சூழ இடபத்தின் மேலேறி அதனை விரைந்து செலுத்தினர். தேவர் முதலானோர் விடையின் வேகத்திற்குத் தங்கள் ஊர்திகள் மிகவும் காலந் தாழ்த்திச் செல்கின்றனவே என்று வருந்திப் பின்வந்தனர். கருடன் அன்னம் முதலிய ஊர்திகளெல்லாம் விடையின் பின்னர் வருவதற்கு வலியில்லாமல் பல யோசனைதூரம் வலியிழந்து விட்டன. வேகமாக வந்த இடபம் காவிரித் துறையை ஒரு நொடிப் பொழுதிலே அடைந்து தனது வேகத்தை எண்ணிச் செருக்கி நின்றது. இடபத்தின் செருக்கை அறிந்த சிவபெருமான் தமது திருக்கால் விரல் ஒன்றால் சிறிது ஊர்தியை அழுத்தினார். அவ்வளவுதான் இடபம் பாதாள உலகம் வரை சென்று அழுந்தியது; தனது செருக்கை எண்ணி மிக வருந்தியது. ஆண்டவன் முன்னிலையில் ஆணவமும் அடங்கியிருக்கிற அடியேன் செருக்கு கொண்டேன்; அறிவில்லாமையினால் இத்தகாத செயலைச் செய்தேன்; குற்றம் பொறுத்தருளி அடியேனைக் குறிக்கொள்ளவேண்டும் என்று பரமனைப் பலவாறு வேண்டிநின்றது.

கயிலைமயிலையைப் பெயர்க்க எண்ணிய இராவணன் அடைந்த துன்பம் என் எண்ணத்தில் இருக்க நானும் இப்படிச் செய்தது பெருந்தவறல்லவா? இராவணன் தன் ஆணவம் அடங்கி வருந்திய பொழுது அருள்செய்த கருணாமூர்த்தி அல்லவா? அடியார்செய்த தீமையை மறப்பவனே! ஓலம் ஓலம்! என்று பலவாறு புலம்பி மனம் வருந்தி உருகி ஆண்டவனுடைய கருணையைப் பெற வேண்டி நின்றது. தான் செய்த குற்றத்தை எண்ணி வருந்திய இடபத்தைப் பெருமான் பிலத்தினின்றும் மேலெழும் படியாக அருள்செய்தார். இடபமானது மேலெழுந்து காவிரியாற்றின் நடுவிலே வந்து நின்றது. பெருமான் இடபத்தைப் பார்த்து, காவிரித் துறையின் நடுவில் மேற்குநோக்கியிருந்து முறைப்படி இந்த இடத்தில் காவிரி நீராடுவார்க்கு வேண்டும் வரங்கொடுத்து வாழ்வாயாக! உன் மற்றொரு கூறு நம்மைத் தாங்கும் பேறு பெறுக; இங்கு நீராடுவோர் பிறவற்றில் நீராடுகின்ற பயனைப் பெறுவர் என்று வரம் கொடுத்து இன்னும் வேண்டுமானால் கேள் என்று அருளினார்.

இடபம் பெருமானை வணங்கி அடியேன் ஆணவத்தினால் பிலம்சென்று மீண்டிருக்கிறேன்; அச்செருக்கு அழியும்படி அடியேனுக்கு ஞானோபதேசம் செய்தருள வேண்டும் என்று வேண்டிற்று.

சிவபெருமான் ஐப்பசிமாதம் அமாவாசை அன்று கங்கை முதலிய தீர்த்தங்களெல்லாம் காவிரியிலேயே வந்து நீராடும்; அந்த நாளில் உனது வேண்டுகோளை நிறைவேற்ற இத்துறையின் வடதிசையில் தோன்றுவோம். அந்த இடம் உத்தர மாயூரம் என்ற பெயர் பெறும்; அங்கு நாம் உனக்கு ஞானாசிரியனாய்த் தெற்கு நோக்கியிருந்து உபதேசம் செய்வோம் என்றருளிச் செய்தனர். இடபம் அந்தநாள் என்று வரும் என்று எண்ணி எண்ணி ஏங்கி நின்றது. தருமவிடையாகிய இடபம் காவிரியில்

★ மாயூரப் புராணம் - ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. - இடப வரலாற்றுப்படலம், உபதேசப்படலம்.

நிற்றலால் இடபதீர்த்தம் என்று இத்துறைக்குப் பெயர் வழங்கலாயிற்று. இங்கு நீராடுவோர் பெருஞ்செல்வம் பெற்று வாழ்வார்.

இடபத்தின் நான்கு கால்களும் நான்கு வேதங்கள். உரோமங்கள் சாத்திரம். கொம்புகள் சிவ சொரூபம். சுருதியும் மிருதியும் கண்கள். பிரணவம் சுவாசம் திமில் உமை. ஆகமங்கள் நெற்றி, இவ்வாறு எல்லாத் தெய்வங்களும் போற்றும்படியாகத் திருவுருவம் பெற்று இங்கே விளங்குகிறது. இங்கு இடப தேவரை வணங்கி இடபதீர்த்தமான காவிரித் துறையில் நீராடுவார். எல்லா நலங்களையும் பெறுவர்.

இடபதேவருக்குப் பெருமான் வரம் அளித்தபடி காவரி வடகரையில் இலிங்க வடிவாகத் தோன்றினார். திருமால் பிரமன் ஆகிய இருவரும் தமக்குள் நானே தலைவன் என்று போட்டியிட்டுப் போர் விளைவித்துக் கொண்ட பொழுது இறைவன் வயிரவரை அனுப்பிப் பிரமனைத் தலைகுனியச் செய்தும், திருமாலை இரத்தம் பீறிடச் செய்தும் தண்டனை அளித்துத் தானேதலைவன் என்பதை நிரூபித்தார். இருவரும், அறியாமையால் தாங்கள் தலைவன் என்று சொல்லியது தவறு என்பதை உணர்ந்து கௌரி மாயூரத்தை அடைந்து வணங்கினர். பெருமான் அவர்களை நோக்கி நீங்கள் இடபதீர்த்தத்திலே நீராடி உத்தர மாயூரத்தை அடைந்து நம்மை வணங்கி அருள்பெறுக, என்று ஆணையிட்டார்.

இருவரும் இறைவன் ஆணையின்படியே வந்து நீராடி அபிடேக ஆராதனைகள் செய்து வழிபட்டனர். பெருமான் அவர்களது அன்பிற்கு இரங்கி, படைத்தல் காத்தல் தொழில்களை நீங்கள் மீண்டும் மேற்கொள்ளுங்கள் என அருள் செய்தார்.

புண்ணிய விரவிப்புத்தேள் துலாத்திடைப் போதன்மேவப்
புண்ணிய விடபவேற்றிற் கன்றருள் புரிந்தவாறே
புண்ணிய வுபதேசஞ்செய் திறனுளம் பொருந்தக்கொண்டான்
புண்ணிய வுமையோர்பாகப் புண்ணிய மாயூரேசன். 1

ஆரரு ளுருவமாய வஞ்சனா யகிடாத்தும்
பேரருட் டிருவிழாவென் றுலகெலாம் பிறக்கம் வாய்ந்து
சீரருண் முழுகல்போலத் தெய்வதப் பொன்னிமூழ்கக்
கூரருட் டீர்த்தமெல்லாங் குண்டையந் துறைவிராவ. 2

எண்ணரு முனிவர்வானோ ரியாவருஞ் செறிந்துமூழ்க
நண்ணரு முதனாள்போல நாடொறுந் தீர்த்தநல்கிக்
கண்ணருங் குளிர்சா லிந்து கதிரொடு விராவுநாளில்
எண்ணருந் தெய்வக்கங்கை யாங்குவந் தடையநோக்கி. 3

முழுகுபல் கணங்களோடு புல்லமு முழுகச்செய்தே
யொழுகும்ப் பொன்னியாற்றிற் குத்தர திசைப்பாலெய்திப்
பழுதற முனமுளைத்து பராவுதன் குறிக்குத் தென்பாற்
றொழுதகு குரவனாகி யமர்ந்தனன் சுரர்கள்வாழ்த்த. 4

மலிதவப் பெருமைகாட்டி வயங்கிடு மற்றோர் கூற்றிற்
பொலிதரு சேமேற்கொண்டு தென்முகம் பொருந்தநோக்கி
நலிவற வமர்ந்துகுண்டை யேற்றினை நயந்துநோக்கி
மெலிவற கருணைதன்னாற் றனிவைத்து விளம்பலுற்றான். 5

வேறு

மேயபுற மகமென்னு மதத்துழன்றும் வருணநிலை வேட்டுநின்றும்
பாயமிரு தியுமறையும் புகலுநெறி யிட்டிகள்பற் பலபுரிந்து
மாயபெரு வேதாந்தப் பொருடெளிந்து முற்றியபி னறிவான்மிக்கோர்
தூயபுகழ்ச் சைவநெறிப் படுந்தீக்கைக் குரிமையுறுந் தூயோராவர். 6

மொழிதருமத் தீக்கைபல விதமாக நோக் கூறு மொழிதலெண்ணல்
அழிவருநூல் யோகமவுத் தரியெனவே மூள்ளுமவுத் திரியென்றோத
லொழிவரிய கிரியையென ஞானமென விரண்டாய்ப்பின் னொருமூன்றாகும்
பழிதபுநற் புகழ்ச்சமய விசேடநிரு வாணமெனும் பகுப்பினாலே. 7

நலமாருமித்தீக்கைக்குரியர்நமைச் சேர்தவமோர் நான்கேயாகும்
நிலமாருஞ் சரியையெனக் கிரியையென யோகமென நிலவாநின்று
புலமாரு ஞானமென வவைகொடுத் தனம்முகலம் பொருந்தலாதி
யலமாரு நம்மொடிரண் டறக்கலத்த லீறாக வறையு நான்குள். 8

போதவுரு நாமமருந் தளியிலல கிடன்மெழுகல் பொலியுமன்பின்
மேதகுபன் மலர்பறித்துப் பஃறொடைசெய் தணிதல்பல விளக்கமேற்றல்
கோதமினம் மடியரைநா மெனக்கருதி யவர்பணிமேற் கோடலாதித்
தாநெறிச் சரியையினை யாற்றுவா ரெம்முலகஞ் சார்ந்து வாழ்வார். 9

இன்னதுமுற் றியபின்மக நெறிக்காகும் விசேடமெய்தி யிரும்பூசைக்குச்
சொன்னவைகொண் டாதார சத்திமுதற் சத்தியெனச் சொலுங்கஞ்சத்து
மன்னவா தனமாதி பாவித்தா வாகித்தா வரணமாதி
யென்னவும்பூ சித்தழலோம் பிடுகிரியைப் புத்திரரெம் மருகுவாழ்வார். 10

கிரியையிது முற்றியபி னியமாதி யெட்டுறுப்பின் கிளர்ச்சிமேவி
யரியவிரு வளியடைத்து நடுநாடி யுறப்பயின்றங் காறாதாரம்
அரியபொரு ளுணர்ந்தேகி மதித்தானத் தமுதருந்தி வயங்குநம்பி
னிரியலுறா தழுந்துசக மார்க்கயோ கத்தின்ரெம் முருவமேய்வார். 11


மேதகைய விம்மூன்று முற்றியபி னருள்பதிந்து வினையொப்பெய்து
மாதரவாம் பருவத்தியா மேதோன்றி நிருவாணத் தத்துவாக்கள்
காதலுறச்சுத்தி புரிந்தருளுறுக்கு மெழுத்தைந்துங்க வினத்தேற்றிக்
கோதமையைம் பாசமிரித்தின்புறுத்தல் சன்மார்க்கங் கூறக்கேண்மோ. 12

பிறத்தலிறந் திடல்பெருகல் சுருங்கல்வெறுத் திடல்வேட்கை பெறுதலொன்றை
மறத்தனினைந் திடன்மயங்க றெளிதல்வெகு ளுதலுவத்தன் மாறாத்துன்பத்
துறத்தல்களித் திடனிற்ற னடத்தல்வெய்ய வாதறண்மை யுற்றுமேவ
றுறத்தல்கலப் புறக்கூட் லிவைமுதல்யா வையுமெய் தாத் தூயதாகி. 13

நினைவரிய தாயபர மானந்த மாய்வினையி னீங்கியாரும்
புனையவிளங் கியஞான மாய்மலருண் மனம்போலப் புவனத்தெல்லா



உத்தர மாயூரம் - வள்ளலார் ஆலயத்தில் கோஷ்டத்தில் காவிரியினை பார்த்தவாறும், நந்திக்கு உபதேசித்தவாறும் விபூதி, புஷ்பம், வெள்ளிக்கவசம் அணிந்து அருட்காட்சியருளும் ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்தி.



மேதா தட்சிணாமூர்த்தி

நனையமரு வுறவிராவி னும்வேறாய் மறைமுடிவு நனுகொனாதாய்த்
தனையடைந்தார்க் கபேதமா யாவுமொருங் குணர்வதாய்த் தானேதானாய். 14

அருவுருவங் குறிகடந்து கட்டுவீ டின்றியுயிர்க் கனைத்துநல்கி
மருவியுடன் றொழிற்படுத்துப் புலங்கொளுவி வீடுய்க்கு மாண்பிற்றாகி
யொருமுதலா யழிவறநின் றோங்கொளியாய் விளங்கிடுவ தோங்கும்வேதப்
பெருமுதலாம் பதியதுமற் றியாமேயென் றுணர்ந்திடுதி பிறங்குமேறே. 15

சத்தசத்தும் பகுத்துணர்சத் தாய்ப்பளிங்கிற் பற்றியவை தாமாயென்று
நித்தியமாய் மூவகையா யெண்ணிலவாய் வசிப்பவரு நிறைவாயெல்லாம்
பொத்தியகா ரிருளொளியு மல்லாத கண்ணியல்பாய்ப் பொலியுநம்மாற்
சுத்தியமைந் தின்புறுவ சிற்றுணர்விற் பசுக்களுணர் தோலாவேறே. 17

மாயமல மைந்தனொடு பழவினையு மலவேரும் பசுவிற்கன்றி
யாயநமக் கிலைநந்த மருளன்றி மாயைகன்ம மாவிக்கென்று
மேயவசை விலைமாயை கன்மமுங்கட் டாதலின்மேல் விளம்பான்மாவிற்
கேயவிவை பொருத்தியதென் னெனிற்சகச மலங்கழித்தற் கென்றுதேர்தி. 18

அதுகருமா சுறுபுடவைக் குவரூட்டுந் திறம்போலும் மளித்தல்காத்தல்
கதுமெனமுற் றிளைப்பொழித்த றிரோபவித்தல் கட்டொழியக் கருணைசெய்தல்
சதுமுகனா தியர்க்கொடுநா மியற்றிடினும் விகாரமொரு சற்றுமில்லை
முதுபுகழ்நந் தமக்கென்று தெளிதியற வுருவாய மூரியேறே. 19

பாயபெரு மாயையெம துடைமையா யினுமயக்கம் பண்ணாதெம்மைத்
தீயவிட மரவினையென் செயுமழலை யுட்டணமென் செய்யுமின்னும்
மாயமையிந் திரஞால மாற்றிடுவார் தம்மையெவ னாற்றுமோர்தி
மேயவுயிர் களைமல முமயக்காதேன் மற்றிரண்டும் விட்டுநீங்கும். 20

அளிகிளருஞ் சிவமாய நாமுநமை நீங்காத வருளென்றோதும்
மொளிகிளருஞ் சத்தியுமா வியுந்திரோ தா யும்பின் னுறமேலோங்குங்
களிகிளரு மாணவமா மலந்தேய நஞ்சத்தி கலந்துநாளுந்
தெளிகிளரும் புண்ணியநன் கூட்டுமல பாகமும்பின் சேருமாலோ. 21

சத்திபதி தரும்பின்னர் வினையொப்பு வாய்க்குமது சார்ந்தகாலை
யொத்தமல மெனவறைந்த திரோதாயி யருளாயே யுறும·்தாலே
வைத்தவிரு ளறலன்றி வேறுளதோ விச்சைமுதல் வருமோர்மூன்று
மெத்துயிரி னிச்சைமுதல் விளக்கஞ்செய் துள்ளிருத்தி மேலாகும்மே. 22

அருளினெமை யுந்தனையு மறிந்தவுயிர் கதிரின்விழி யணைந்தாற்போலத்
தெருளினெம்மு ளடங்கிய ா னந்தமொன்று மேதிளைக்குந் திருந்துமேறே
மருளினான் முதலென்ற லருளினான் முதலென்றால் வயங்காநிற்கும்
பொருளினருண் முதலென்ற லதினழுந்த றவிர்ந்தெம்மைப் புணர்தன்முத்தி. 23

சஞ்சிதமுன் பேயழிந்த தேறுவினை யுளதாயி னருளின்சால்பால்
எஞ்சியதா யிரியுமுட லியங்களவும் வாதனைவந் தெற்றாநிற்கு

மஞ்செழுத்தி னதுவுமிரி தருமுணர்வான் முதன்மூன்ற மற்றறாவாய்ச்
செஞ்சுடரை மூன்றிடத்தும் வழிபட்டு வாழ்வதுவே சீவன்முத்தி. 24

ஆயபர முத்தியுமீண் டேபெறுவ துண்மையினி தறிதியென்று
தூயகரு ணையினுரைத்தா னுரைத்தவெலா முறக்கேட்டுத் தொகச்சிந்தித்து
நேயமமை தரத்தெளிந்து நின்மலன்றா ளிடைப்பலகா னிரம்பத்தாழ்ந்து
மேயவிடை கொண்டுவிடை பொன்னிநடு விருக்கையினை மேவிற்றன்றே. 25

ஐயனுமைப் பசிமுடிவின் வரநதிதன் னிருக்கைபுக வனுப்பிப்பின்னர்
மையகலா ரியக்கோலத் தாங்கமர்ந்தா னனையதுலா மதியின்வான்றோய்
சையமிழி பொன்னியிட பத்துறையல் லாதுமந்தா கினிமுன்னாய
கையமையு நதிகள்பிற வினுமூழ்கார் வீட்டுநெறி காமுற்றோரே. 26

சிவனார் இடபதேவருக்கு உபதேசித்த வரலாறு (சுருக்கம்)

இடபதேவருக்கு அருள் செய்தபடியே அதற்கு உபதேசம் செய்ய மாயூரநாதர் திருவுள்ளம் கொண்டார். கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்கள் யாவும் காவிரியில் வந்து நீராடும் துலாமாச அமாவாசையில் இடபத்தையும் மூழ்கச்செய்து, காவிரியாற்றின் வடகரையிலுள்ள வள்ளலார்கோயிலின் தெற்குப்பக்கத்திலே குரு மூர்த்தியாக எழுந்தருளினார். இடபத்தைக் கருணையோடு பார்த்துப் பின்வருமாறு உபதேசிக்கலானார்.

அகச்சமயம் புறச்சமயம் இவற்றுள் உழன்று வருணாச்சிரம தருமங்களில் தவறாது நின்று வேள்விகள் பல செய்து, வேதாந்த ஞானம் முற்றிய ஞானிகளே சிவதீட்சைகளைப் பெறுவதற்கு உரியவர்கள். தீட்சை - நயன தீட்சை, ஸ்பரிச தீட்சை, வாசக தீட்சை, மானச தீட்சை, சாத்திர தீட்சை, யோகதீட்சை, அவுத்திரி தீட்சை என ஏழுவகைப்படும். அவற்றுள் அவுத்திரி, கிரியாவதி ஞானவதி என இரண்டு வகைப்படுவதாகும். அவை ஒவ்வொன்றும் சமயம், விசேடம், நிர்வாணம் என மூவகைப்படும்.

தீட்சைக்கு உரியவர்கள் நம்மை அடைவதற்கு இயற்றும் தவம் நான்கு வகைப்படும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவைகளால் முறையே சாலோகம் சாமீபம், சாரூபம் சாயுச்சியம் என்ற இப்பதவிகளை அடைதலாகும். இவற்றுள் சரியையாவது ஆலயத்தை அலகிடல், மெழுகுதல், மலர் பறித்தல், மாலை கட்டுதல், விளக்கேற்றுதல், நமது அடியவர்களை நாம் எனவே கருதிப்பணி செய்தல் முதலிய தாசமார்க்கமாம், கிரியையாவது சரியையில் நின்று முதிர்ந்தபின் வேள்விக்கு உரிய விசேட தீட்சை பெற்றுப் பூசைக்கு வேண்டிய உபகரணங்களையும் சேகரித்துக் கொண்டு சத்தியாதிச்சத்திபரியந்தம் பத்மாசனம் அமைத்து அதில் சிவபெருமானைப் பாவித்து ஆவானம் செய்து பூசித்து அக்கினிகாரியமும் செய்யும் சற்புத்திர மார்க்கமாகும். யோகமாவது கிரியை முற்றிய பின்பு இயம நியமங்களை இயற்றிப் பிராணாயாமம் செய்து சுழுமுனை வழியாகப் பிராணன் இயங்கப் பழகி மூலாதார முதல் ஆறு ஆதாரங்களிலும் அக்ஷரம், அதிதெய்வம், சக்கரம் இவற்றைத் தியானித்துச் சகஸ்ராரமாகிய மதிமண்டலத்து அமுதத்தை அருந்தி, அங்கிருந்து கிழ் இறங்காது அங்கேயே அழுந்திச் சமாதி கூடியிருக்கின்ற சகமார்க்கமாம்.

இந்த யோக மார்க்கம் முதிர்ந்த பிறகு இருவினைஒப்பும் சத்திநிபாதமும் வந்தபின் யாமே ஆசாரிய மூர்த்தமாகத் தோன்றி நிர்வாண தீட்சை பண்ணி அத்துவாசுத்தி செய்து, ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உபதேசித்து, பாசக்ஷயம் பண்ணுவித்துப் பேரின்ப நிலையில் நிறுத்துவோம். அந்த உண்மை ஞானத்தை உணர்த்தலே சன்மார்க்கமாம்.

உண்மை ஞானமாவது, பதிபசு பாசம் உணர்தலாம். அவற்றுள் பதியாவது பிறத்தல், இறத்தல்,

பெருகல் சுருங்கல், விருப்பு வெறுப்பு, பெறுதல், இழத்தல், மறத்தல், நினைத்தல், மயங்கல், தெளிதல், வெகுளல், உவத்தல், வருந்துதல், களித்தல், நிற்றல், நடத்தல், வெட்பமாதல், தட்பமாதல், பிரிதல் கூடல் இவை ஒன்றும் எய்தாது, தூய்மையுடன், நினைத்தற்கு அரிய பரமானந்தமாய் மலமாயைகளிலிருந்து இயல்பாகவே நீங்கி, யாவரும் புனைவதற்குரிய ஞானமே வடிவாய், மலருள் மணம்போலக் கலந்தும் வேறாயும் வேத முடிவும் காணமுடியாத ஒன்றாய், தன்னை அடைந்த அடியார்களுக்கு அபேதமாய், யாவற்றையும் ஒருசேர உணருகின்ற சிறப்பினதாய், தானேதானாய் உரு அரு அருவுருவாகிய இக்குறிகளைக் கடந்து பந்தமோக்ஷம் இல்லாததாய் எல்லா உயிர்களுக்கும் அருள் விளங்கி, ஒன்றாயும் வேறாயும், இருந்து தொழிற்படுத்தி, அவைகளுக்கு ஞானத்தை அருளி வீடுபேறு அருளுந் தன்மையதாய் ஒரு முதலாய் ஞானமாய் விளங்குவது என உணர்வாயாக.

சத்தாகிய இறைவனையும் அசத்தாகிய பிரபஞ்சத்தையும் பகுத்து உணரத்தக்க சத்தாய், வெண்பளிங்கு போலச் சார்ந்ததன் வண்ணமாய், நித்தியமாய், சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்னும் மூவகையாய், பலவாய் எல்லாவற்றையும் மறைந்திருக்கிற இருளும் ஒளியும் இல்லாத கண்ணின் இயல்பு உடையதாய் நம்மால் தூய்மையுற்று இன்புறுவன சிற்றுணர்வும் சிறுதொழிலும் உடைய பசுக்களாம்.

பல்வேறு ஆற்றல்களுடையதாய், ஒன்றாய், நித்தியமாய், தொன்றுதொட்டு வருவதாய், நம் அருளால் வலிகுன்றுவது ஆணவமலமாம். இதனது வன்மை வாட்ட தனுகரண புவனபோகங்களை இருவினைக்கு ஏதுவாக நாம் உதவ முதற்காரணமாவது சுத்தம் அசுத்தமாகிய மாயைகளாம். இருவினைக்கு ஏதுவாகச் சொல்லப்படுவது காமியமாம். இவற்றை நிகழ்த்துவது தீரோதானமாம். இவ்வைந்து மலங்களும் ஆன்மாக்களுக்கன்றி நமக்கு இல்லை. இவைகளை ஆன்மாவிற்குச் சேர்த்தியது ஆணவமலத்தின் வன்மையை வாட்டுவதற்கு என்று அறிவாயாக. இம்மலங்களைக் கொடுத்து ஆணவமலத்தை அகற்றுதல் அழுக்கேறிய ஆடையை உவர் மண்ணும் சாணியும் இட்டுப்பின்னும் அழுக்காக்கி, தூய்மைப்படுத்துவது போல்வதாம். படைத்தல், காத்தல், மறைத்தல் அருளல் முதலிய இத்தொழில்களைப் பிரமன் முதலியோரைக் கொண்டு நாம் செய்வித்தாலும் நமக்கு அதனால் விகாரமில்லை என்று அறிவாயாக.

மாயையாவது நமக்குப் பரிக்கிரக சத்தியாயினும் நம்மை மயக்காது. விஷம் பாம்புக்கு ஒன்றும் செய்யாதது போலவும், வெப்பம் தீயை ஒன்றும் செய்யாதது போலவும், இந்திரஜாலம் செய்வோர்தாம் மயங்காது பிறரை மயக்குவது போலவும், உயிர்களை மயக்குகின்ற மாயை நம்மை மயக்காது. உயிரும் திரோதானமலமும் பிற்பட, நாமும் திருவருள் சத்தியும் மேல் ஓங்கி விளங்க ஆணவ மலமானது உயிர்கட்கு இருவினையொப்பு வாய்க்கும். திரோதான சக்தி அருட்சக்தி ஆகும். அது அறியாமையை நீக்கி, இச்சா ஞானக்கிரியைகளாய் ஆன்மாவின் இச்சையாதிகளை நன்கு விளக்கம் செய்து சிவத்துவ வியாப்தியை அளிக்கும். அதனால் நம்மையும் தன்னையும் அறிந்த உயிர், தெளிந்து நம்முள் அடங்கி ஆனந்தானுபவத்தில் அழுந்தி நிற்கும். ஆதலால் அது நாமே பிரமம். அருளினால் நாம் பிரமமானோம். என்ற நிலைகளை விட்டுச் சிவமாகிய எம்மை அடைதலே முத்தி என உணர்ந்து தெளியும். ஆகாமிய சஞ்சிதமாகிய வினைகள் அருட்சார்பால் அழியப் பிராரத்த மட்டும் நுகர்ந்து கழிக்கப்படுவதாக இருக்க அவ்வினை வாதனையாய் வந்து பற்ற, திருவைந்தெழுத்தால் அவ்வாசனாமலத்தையும் வீட்டி உணர்வானும், பொருளும், உணர்வுமாகிய மூன்றும் அற்றுச் சிவத்தை வழிபட்டு வாழ்வதே சீவன் முத்தியாகும். மேலும் பரமுத்தி இங்கே பெறுவது எளிதாம் என்று உபதேசித்தார். இடபம் அதனை அறிந்து, இறைவன் ஆசான் மூர்த்தியாக எழுந்தருளி உரைத்த எல்லாவற்றையும் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடிக் காவிரியாற்றின் நடுவில் இன்பமயமாக வீற்றிருந்தது.

இடபதேவரின் பலநிலைத் திருக்கோலங்கள்

சிவபெருமானின் வாகனமாக விளங்குபவர் இடபதேவர் ஆவார். இவர் ஆலயங்களின் மதில், கோபுரம், விமானம், மண்டபம், கருப்பக்கிருக முன் மண்டபம், முதலான இடங்களில் அமர்ந்தும் நின்ற நிலையில் வாகனமாகவும் காணப்படுவார். நுழைவாயிலில் கூப்பிய கரத்துடனும் இவரது சக்தியான ஊர்மிளா தேவியுடன் விளங்குவார். இத்திருவுருவம் புருஷரூபமாகும். நந்தியின் சிறப்புத்தலம் திருவாவடுதுறையாகும். இங்கு விஸ்வ ரூப நந்தி உள்ளது. பல சதுரசெவ்வக கருங்கற்களால் ஆனது. இத்திருக்கோயிலின் தென்பால் விளங்குவது திருவாவடுதுறை ஆதீனமாகும். திருவாவடுதுறை ஆதீனத்தைத் திருநந்திதேவர் மரபு எனவும் கூறுவர். நந்தியெம் பெருமான் பல நிலைகளில் போற்றப்படுகின்றார்.

எப்பொழுதும் பெருமானைத் தாங்கியும் ஸ்ரீ கார்யகர்த்தாவாகவும் உள்ளார். இவரது இசைவு பெற்றே ஆலயம் தொழுவது மரபாகும். இடபர் தருமத்தின் வடிவாகும். இடபரின் உபதேசம் பெற்ற முனிவர் பலர் உளர். சிவனார்க்கு உரிய லட்சணங்களுடன் இவரும் விளங்குபவர் ஆவார். மேதா தெட்சிணாமூர்த்தி, சக்தி தெட்சிணாமூர்த்தி திருமேனியின் பின்னால்அமர்ந்து காணப்படுவார்.



1.

இடபதேவர்க்கு உரிய நாளான பிரதோஷம் மிகச்சிறப்புடையது. இத்தகு சிறப்புடைய இடபதேவ ஆலயங்களில் பல நிலைகளில் தோற்றம் கொண்டு அருளுகின்றார். இப்பகுதியானது இடபதேவர் நிலைகளை விவரிக்கின்றது. மேலும் மேதா தெட்சிணாமூர்த்தியின் பின்னால் இடபதேவர் விளங்குவார். சிவனிடம் முதன்முதலில் தீட்சா உபதேசம் பெற்று நீங்காதிருப்பவர். ஸ்ரீகண்டசிவனிடம் திருநந்திதேவர் பெற்ற உபதேசமே இம்மடாலயத்தின் குரு மரபாகும். இம்மரபு தொடர்கிறது.

1. இடபதேவர் (நந்தி) தியானம்

சுத்த ஸ்படிக ஸங்காசம் சூரிய சந்த்ராக்னி நேத்ரகம்!
ரத்ன சோபித க்ரைவேயம் அச்விநி கர்ணபூரகம்!!
சுவர்ண நூபுர ஸங்நாதம் சிவவாகன சங்கதம்!
சிவபக்தாக்ரகம் சுபம் வ்ருஷ தேவம் நமாம் யஹம்!!

சுத்தமான ஸ்படிகம் போன்ற வெண்மை நிறம் கொண்டவரும், சூரியன், சந்திரன் இவர்களைக் கண்களாக உடையவரும், சூரியன்

குறிப்பு : மூர்த்தித் தியானம், உத்தரகாமிகம், பூர்ணகாரணாகமம், அம்சுமத் பேதாகமம், சுப்ரபேதம், விஷ்ணு தர்மோத்ரம், சில்பரத்னம் ஆகிய நூல்களில் நந்தி தேவரின் ரூபம் மற்றும் அளவு முறை காணலாம். சிவனாலயத்தில் - அதிகாரநந்தி, இந்திர நந்தி, பிரமநந்தி, ஆன்மநந்தி, மால்விடை, தருமநந்தி, விஸ்வருபநந்தி, சம்மார நந்தி எனும் பல நிலைகள் உண்டு. இதன் விளக்கம் ஷ ஆதீன வெளியீடாகிய ''சிவாலயத் திருமேனிகள்'' நூலில் காண்க.

சந்திரனோடு அக்னியையும் கண்ணாக உடையவரும், ரத்னங்கள் பதிக்கப் பெற்ற சுவர்ண ஹாரத்தை கழுத்தில் தரித்திருப்பவரும், அஸ்வினீ எனும் ஆபரணத்தைக் காதுகளில் அணிந்திருப்பவரும், (அஸ்வினீ தேவதைகளைக் காதுகளாகக் கொண்டவர் என்றும் கொள்ளலாம்) பரமேஸ்வரனுக்கு வாகனமாக அமைந்தவரும், சிவபக்தர்களுக்குள் முதல்வரும், அழகானவருமான இடபதேவரை வணங்குகின்றேன்.

2. நந்திகேசர் தியானம்:

நந்திகேச நமஸ்துப்யம் சாந்தாநந்த ப்ரதாயினே!

தேவ தேவஸ்ய ஸேவார்த்தம் அனுக்ஞாம் தாதுமர்ஹஸி!!

இதன்பொருள்: மனச்சாந்தி ஆனந்தம் இவைகளை அளிக்கும் நந்திகேசரே உம்மை வணங்குகின்றேன். தேவர்கட்கெல்லாம் தேவனான பரமேசுவரனை வணங்குவதற்கு உத்தரவு அளிக்கவேண்டுகிறேன் என்பதாகும்.

3. அம்சுமத்பேதாகமம்:

★ இடபவாகனரின் வலப்பாதம் நன்கூன்றியும் இடப்பாதம் வளைந்தும் கொள்க. இடபத்தின் தலை உச்சியின் இட முன் முழங்கை ஊன்றிய தாய்க் கொள்க. கழுத்தின் நடுப்பகுதியில்இருந்து (தொண்டை) பதினாறு அல்லது பதினெட்டு அங்குலம் கீழாகவும் ஆசனபாகத்துக்குஷ்டங்களின் அடிப்பகுதி) சமமாகவும், இடபத்தின் உயரத்தைக் கொள்க. பதினாறு மாத்ர உயரமும் சிம்ம கர்ணம் போன்ற மேல்வளைவும் நின்ற பாதத்தின் முழந்தாளுக்கு மேல் தோளளவுயர்ந்தும் சிறுவிரல் பருமனும் திரிபங்கம் கொண்டதுமான வளைதடியினை (சிவனார்க்கு) கீழ்க்கரங்களில் அமைக்க. இந்தத் தடியானது உலோகத்தினாலோ மரத்தினாலோ செய்யப்படலாம். மேலிருகரங்களில் மானையும் மழுவையும் அமைக்க.

சிவனாரின் பாதி சடை சுருட்டியதாகவும், பாதிசடை தொங்குவதாகவும், முழுவதும் கட்டிய சடையாகவும் கொள்க. (இது சிற்பியின் இச்சைப்படி கொள்ளலாம்) அனைத்தணிகளும் கொண்டவராயும் சிவப்புநிறம். சிவந்த வஸ்திரம் கொண்டவராயும் நின்ற வலப்பாதமும் வளைந்த இடப்பாதமும் மலர்கொண்ட வலக்கரம் (தேவீ), நீண்டு தொங்கிய இடக்கரமுமாக இறைவரின் இடப்புறத்திலோ அல்லது சிறப்பாக வலப்புறத்திலோ உமாதேவியை அமைக்க. ஸ்திரிமானமாக உமாதேவிக்கு அளவு கொள்க.

4. உத்தர காமிகம்:

உரிய லட்சணங்கள் கொண்ட இடபதேவரின் பிரதிட்டை இந்த ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது. நாற்றோளர், முக்கண்ணர், சடைமுடி கொண்டவர், மேற்கரங்களில் - பரசும், மானும் கொண்டவராகக் கொள்க. முன்னிரு கரங்களில் வலக்கரம் வளைதடியும், இடக்கரமுழங்கை இடபத்தின் உச்சந்தலையில் ஊன்றிய தாயும் அமைக்க. இடக்கரம் மேனோக்கி விரிந்த உள்ளங்கையுடனோ அன்றி கீழ் நோக்கிய உள்ளங்கையுடனோ அமைக்க. நாபி சூத்திரத்துக்கு சமமாக இடக்கையின் நடுவிரற்பாகம் அமைக்க.

பின் அவரின் இடப்புறத்திலோ அல்லது வலப்புறத்திலோ அழகுருவாய்த் தேவியை அமைக்க. வேறு வகையான ஆயுதங்களை வேண்டுமானாலும் கொள்க. இருவரின் பின் புறத்தில் இடபத்தை அமைக்க. இறைவனின் தொடையளவு உயரமாகக் கொள்க. அல்லது பிருஷ்டங்களின் அடி அளவு வரையோ அல்லது நாபி சூத்ர அளவோ கொள்க.

★ அம்சுத்பேதம், உத்தரகாமிகம் சுப்ரபேதம், பூர்வகாரணம் - இவைகளின் தமிழாக்கம் காஞ்சி சி.எஸ்.சதாசிவம் M.A., M.H.Ed., M.Phil., D.S.M., D.S.S., **''சிவாகமம்: சுவடிப்புலம்'' ஷ ஆதீன சரஸ்வதிமகால் நூலக ஆய்வு மையம் அவர்களால் செய்யப்பட்டது.**

5. சுப்ரபேதம்:

இடபதேவர் பின்னால் நின்றவராயும், உமையும். ருத்திரரும் இடபதேவரின் உச்சந்தலையில் முழங்கை ஊன்றிய நிலையிலும், மானும் மழுவும் ஏந்தியவராயும் இடபதேவரை அமைக்க.

6. பூர்வகாரணம்:

கௌரியும் ஈசனும் பீடத்தில் நிற்க இடபதேவர் அவர்களின் பின்னால் விளங்குதல்வேண்டும். இறைவன் முக்கண்ணர், நாற்கரத்தார், சடைமுடி கொண்டவர். அழகிய ஆடையோடு அனைத்தணிகளையும் கொண்டவர். பின் வலக்கரத்தில் பரசும், பின் இடக்கரத்தில் மானும், முன் வலக்கரம் கடககரமாக இடபதேவரின்தலையில் (உச்சந்தலை) ஊன்றியதாகவும், இடக்கரத்தில் கோலை உடையவராகவும், இடப்புறத்தில் தேவியையும் அமைக்கவும்.

7. மூர்த்தித்தியானத்தில்:

அதிகார நந்தி தியானம்:


சதுர்ப்புஜம் த்ரிணேத்ரஞ்ச ஜடாமகுட மண்டிதம்!
ம்ருகடங்க தரம் தேவம், பத்தாஞ்ஜலிபுடம் சுபம்॥
த்வார ஸவ்யப்ரதேசஸ்தம் க்ருத்வாசக்திம் ஸ்வவாமகே।
அனுக்ஞாம் சிவ ஸேவார்த்தம் தததம் நந்திரம் பஜே॥

நான்கு கரங்களையும், மூன்று கண்களையும் உடையவரும், ஜடாமகுடத்தை அணிந்திருப்பவரும், மான், டங்கம் இவைகளை உடையவரும், கூப்பிய கரங்களையுடையவரும், திருக்கோயிலின் இடப்புறத்தில் தன் மனைவியுடன் (ஊர்மிளா) இருப்பவரும், சிவனை வணங்குவதற்கு உத்தரவு அளிப்பவருமான அதிகார நந்தி தேவரை வணங்குகின்றேன்.

8. வேறுவகை - நந்திகேஸ்வரர் தியானம்:

ரக்தாம் த்ரினேத்ரம் ஜடிலம் வரா பயகராம்புஜம்।
அக்ஷமாலாம் த்ரிசூலஞ்ச தாதநம் ஸவ்யவாமயோ : ॥
பஸ்மோத்தூளித ஸர்வாங்கம் விபுதஜன ஸேவிதம் ।
சிவா பரஸ்வரூபஞ்ச வந்தேஹம் நந்திகேச்வரம் ॥

சிவந்த மேனியையுடையவரும், மூன்று கண்களை யுடையவரும், ஜடையையுடையவரும், வரதமுத்திரை, அபாய முத்திரை ஜபமாலை, திரிசூலம் இவைகளைக் கைகளில் பெற்றிருப்பவரும் உடல் முழுதும் திருநீறணிந்திருப்பவரும், வித்துவான்களால் வணங்கப்படுபவரும், சிவனின் மறு அவதாரமாக உள்ளவருமான நந்திகேசுவரரை வணங்குகின்றேன்.



அதிகார நந்தி

9. விஷ்ணு தர்மோத்தரம் - நந்தி ரூபம் :

நாற்கரத்தர் பெருந்தோளர் (பெருவீரம்), முக்கண்ணர் சிந்தூரச் சிவப்பு நிறத்தர் புலித்தோல் ஆடையர், திரிசூலம் பிண்டிபாலம் ஆகியவற்றைப் பின் இரு கரங்களில் ஏந்தியவர் மற்ற இருகரங்களால் தலைமேற் கூப்பிச் சிவத்தை வணங்குபவர். தூரத்திலிருந்து வரும் மக்களைப் பார்த்து வருபவருமாக நந்திதேவரின் ரூபம் அமைக்கப்படும்.

10. ஸ்ரீ நந்தீஸ்வரர் - வேறுவகை - அபரசிவம்:

மான், பரசு (மழு) இவற்றைக்கையில் ஏந்தியவராயும், ஈசரைஅஞ்சலி செய்பவராயும், முழுநீறு பூசியமையால் வெளுத்தவராயும் இளமதியும் கங்கையும் சடையிற் கொண்டவரும், அபர திரிபுராந்தகரும் (அபரசிவம்) கணத் தலைவர்களின் தலைவரும், சிவகணங்களால் வணங்கப்பட்டவரும், அயன், மால், இந்திரன் ஆகியோரால் வணங்கப்பட்டவருமாகிய ஸ்ரீ நந்தீஸ்வரரை வணங்குகின்றேன்.

11. சில்பரத்தினம் நூலில் - இடபதேவர் அளவு முறை:

இடபதேவர் இருக்கவேண்டிய முழு உயரத்தை முதலில் தீர்மானம் செய்து கொள்ளவேண்டும். அதைப் பதினைந்து பாகமாகச் செய்தால் அதில் ஒரு பாகம் ஒரு அங்குலமென்னும் அடிப்படையில் இங்கு அளவுகள் கூறப்படுகின்றன.

''இனி இடபத்தின் உயரம்'' - விளக்கப்படுகிறது. முகத்தின் உயரம் கீழிருந்து மேல் ஒன்பதங்குலம். அதிலிருந்து கழுத்து வரை உயரம் 8 அங்குலம் அதிலிருந்து மார்பு வரை உயரம் எட்டங்குலம். அதிலிருந்து மார்புவரை உயரம் பதினாறங்குலம். துடைகளின் உயரம் ஆறங்குலம். முழங்காலின் உயரம் இரண்டங்குலம், கெண்டைக்காலின் உயரம் ஆறங்குல். குளம்பினுயரம் இரண்டங்குலம்.

''கொம்புகள்'' இரண்டு கொம்புகளின் இடைவெளி எட்டங்குலம், கொம்புகளின் உயரம் நாலங்குலம். கொம்புகள் தொடங்குமிடத்தில் அவற்றின் அகலம் நாலங்குலமாகும். கொம்புகளின் முனையினகலம் அரை அங்கும். அடியிலிருந்து நுனிவரை படிப்படியாகக் குறைந்து கொண்டே செல்லும். கொம்புகளின் மத்தியில் சிறிது வளைவு இருக்கவேண்டும்.

''நெற்றி'' - யின் அகலம் ஒன்பதங்குலம். முகத்தின் அகலம் ஐந்தங்குலம். அதன் கனமும் அவ்வளவேயாம்.

''கண்'' - ணின் நீளம் இரண்டங்குலம். கண்ணின் உயரம் ஒன்றரை அங்குலம். கண்களின் அமைப்பு மீன் போன்றதாக இருக்கவேண்டும். கண்களின் மத்தியிலிருந்து முகத்தின் உயரம் எட்டங்குலம்.

கண், காது இவற்றின் இடைவெளியினளவும் அதுவேயாம். ''காதின்'' நீளம் ஐந்தங்குலம். அடிப்புறத்தில் முகத்தின் உயரம் எட்டங்குலம். காதின் நடுவில் அதனகலம் நாலங்குலம். நுனியில் அதனகலம் ஒரு அங்குலம். காதின் கனம் அரை அங்குலம். கன்னமும் காது போன்ற அளவுள்ளதேயாம்.

''மூக்கின்'' - நீளம் ஒரு அங்குலமாகும். இவ்வாறாக சிற்பரத்தினம் நூலில் இடபதேவரின் அளவுகள் கூறப்பட்டுள்ளன.

*** சிவாலயங்களில் அமையும் பஞ்ச நந்திகள் (ஐவகை நந்திகள்):**

பெரிய சிவாலயங்களில் ஐந்து வகையான நந்திகள் அமைந்திருப்பதைக் காணலாம். இவை முறையே 1.இந்திர நந்தி, 2. வேதநந்தி (எனும் பிரம்மநந்தி) 3.ஆத்ம நந்தி (கொடி மரத்தின் அருகில் உள்ளது) 4.மால் விடை (மகா மண்டபத்தில் இருப்பது) 5. தருமநந்தி என்றழைக்கப்படும்.

1. இந்திர நந்தி

ஒரு சமயம் இந்திரன் இடப வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். போகங்களின்

★ ஐந்தும் சிவபெருமானும் - சிவமஞ்சரியின் 8வது மலர் பக்கம் 255, 256 சிவசுந்தரி கலைக்கூடம், 52 எல்லை முத்தம்மன் கோயில் தெரு, பழவந்தாங்கல், சென்னை - 600 114. ஆசிரியர் - பூசை.ச.அருணவசந்தன்.

அதிபதியாகிய இந்திரன் வடிவாக விளங்கும் இந்த நந்தியைப் போகநந்தி என்றும் இந்திர நந்தி என்றும் அழைக்கின்றனர். இந்த நந்தியைக் கோயிலுக்கு வெளியே சற்று தொலைவில் கருவறையை நோக்கியவாறு அமைக்கின்றனர்.

2. வேத நந்தி

பின்னும் ஒரு முறை பிரமதேவன் நந்தி வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். வேதனான பிரமன் நந்தி வடிவம் தாங்கியமையால் இந்த நந்தியை ''வேத நந்தி'' ''வேதவெள் விடை'' ''பிரமநந்தி'' என்று பல பெயர்களால் அழைக்கின்றனர். பிரம்மம் என்பதற்கு அளவிட முடியாத பெருமைகளை உடையது என்பது பொருளாகும். அதற்கேற்ப இந்த நந்தியை மிகப்பெரியதாகவும் கம்பீரமாகவும் அமைப்பர். இந்த நந்தியைச் சுதையினாலும் சுண்ணாம்புச் சாந்தினாலும் மிகப்பெரிய அளவில்அமைக்கின்றனர். திருவிடைமருதூர், இராமேஸ்வரம், காஞ்சிபுரம் முதலான தலங்களில் இத்தகைய பிருமாண்டமான வேத வெள்விடையை பெரிய மண்டபத்துள் காணலாம்.

3. ஆன்ம நந்தி

மூன்றாவதாக - ஆலயத்தில் கொடி மரத்தையொட்டி, தலைமை நந்தியாக அமையும் நந்தி ''ஆன்மநந்தி'' எனப்படும். இது உலக உயிர்களான (பசுக்கள்) ஆன்மாக்கள் பதியாகிய சிவபெருமானைச் சார்ந்து அவனுடைய நினைவில் நிலைபெற்றிருக்கவேண்டிய தன்மையை உணர்த்துகிறது. சிவாலயத்தில் பிரதோஷக் காலங்களில் இந்த நந்திக்குத்தான் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகிறது.


4. மால் விடை

இனி நான்காவதாக - மால் விடையைக் காணலாம். ஒரு சமயம் திரிபுராதிகளை வெல்லுவதற்காக தேவர்கள், சிவபெருமானுக்கு சிறந்ததொரு தேரினைச் செய்து கொடுத்தார்கள். தாங்கள் அளிக்கும் இந்தத்தேர் இல்லாமல் சிவபெருமானால் முப்புரங்களை வெல்ல முடியாது என எண்ணினர். அதை உணர்ந்த சிவபெருமான் அந்தத் தேர் தட்டின் மீது தன் வலக்காலை ஊன்றி ஏறினார். அவ்வாறு அவர் ஊன்றிய போதே அத்தேரின் அச்சு மளமள வென்று முறிந்தது. தேவர்கள் தாங்கள் செய்தளித்த ஒப்பரிய தேர் பெருமானின் ஒரு கால் அழுத்தத்தைக் கூடத் தாங்க மாட்டாமல் முறிந்தது கண்டு அஞ்சி பெருமானைத் தொழுதனர். அப்பொழுது திருமால் இடபவடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கி அவரை மகிழ்வித்தான். இந்நினைவு நீங்காது இருக்கும் பொருட்டு தானும் நந்தி வடிவம் கொண்டு அவர் சன்னதியில் நிலையாக எழுந்தருளினான். இந்த நந்தி சக்தி பதமான இரண்டாவது ஆவரணத்துள் அமைந்துள்ளதாகும். இதனை ''மால்விடை'' ''மால்வெள் விடை'' என்று பலவாறு அழைப்பர்.

5. தரும நந்தி


ஐந்தாவதாக - மகா மண்டபத்தில் அமையும் சிறு நந்தியே தரும நந்தி என்பதாகும். உலகம் சிவபெருமானிடத்தே ஒடுங்குகின்ற சங்கார காலத்தே உலகம்யாவும் அழியும். பிரளயவெள்ளம் பொங்கிப் பெருகி வானளவு எழுந்து உலகினை அழிக்கும் அந்த சங்கார காலத்தில் யாவும் சிவபெருமானிடம் ஒடுங்கும். அப்போது தருமம் மட்டும் நிலைபெற்று இடபவடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கும். இவ்வாறு தன்னைத் தாங்கும் இடபத்தை பெருமான் ஆரத்தழுவிக் கொண்டான். இவ்வகையில் தரும நந்தியானது இறைவனைப் பிரியாது அவனுடனேயே இருக்கும். இதை உணர்த்தும் வகையில் இந்த நந்தி இறைவனுக்கு அருகாமையில் மகாமண்டபத்திலேயே எழுந்தருளியிருக்கின்றது.

✵ ஷி காயத்ரி மந்திரங்கள் த.ச.ம.நூலகம் வெளியீடு - 351 பக்கம் 53, 68, 69, ''காயத்ரி கோசம்'' எனும் நூலில் காண்க.




''வேத நந்தி / பிரம நந்தி / வேதவெள்விடை''

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் திகழும்
சுதையினால் அமைந்த மிகப்பெரிய வேதநந்தி



ஆன்ம நந்தி



நந்தி வாகனம்

பெரிய ஆலயங்களில் இத்தகைய ஐந்து நந்திகள் இருப்பதைக் காண்கிறோம். திருவண்ணாமலை, காஞ்சிபுரம் முதலான தலங்களில் பஞ்ச நந்திகள் சிறப்புடன் போற்றப்படுகின்றன.

இவை தவிர உட்கோபுர வாயிலின் உட்பகுதியில் வடக்கு நோக்கியவாறு 'அதிகார நந்தியும்' கருவறைக்கு பின்புறம் 'விருஷபர்' என்கின்ற நந்தியும் இருக்கக் காணலாம். ஆதலின் பூரணமான சிவாலயத்தில் ஏழு நந்திகள் அமைக்கவேண்டும்.

★ நந்திதேவர் காயத்ரி

1] ***ஓம் தத்புருஷாய வித்மஹே, சக்ரதுண்டாய தீமஹி।***
தந்நோ நந்தி: ப்ரசோதயாத்॥

2) வ்ருஷப காயத்ரி

ஓம் தீக்ஷ்ணச்ருங்காய வித்மஹே, வேதபாதாய தீமஹி।
தந்நோ வ்ருஷ ப்ரசோதயாத்॥

3) நந்தி காயத்ரி

ஓம் வேத்ர ஹஸ்தாய வித்மஹே, டங்கஹஸ்தாய தீமஹி।
தந்நோ நந்தி ப்ரசோதயாத்॥

★ நந்திதேவர் தோற்றம்:

மகப்பேறின்மையினால் வருத்தமுற்ற சிலாதமுனிவர் ஐயாறப்பனைப் பூசித்து தவஞ்செய்ய, ஐயாறப்பர் "சிலாதனே! நீ புத்திரகாமேட்டி யாகம் செய்தல் வேண்டும். யாகம் செய்ய யாக பூமியை உழும்பொழுது பெட்டகம் ஒன்று தோன்றும், அதில் ஒரு புத்திரன் காணப்படுவான், அவனுக்கு வயது பதினாறு; அவனை எடுத்துக்கொள்" எனத் திருவாய் மலர்ந்தருளினார், அவ்வாறே சிலாத முனிவரும் யாக முடிவில் பூமியை உழுங்கால் ஒரு பெட்டகம் அகப்பட அதனைத் திறந்துப்பார்த்தனர். அதில் நான்கு தோள்களும் மூன்று கண்களும் சந்திரனை யணிந்த முடியும் கொண்டு விளங்கும் ஒரு மூர்த்தியைக் கண்டு வணங்கினார். ஐயாறப்பர் அசரீரியால் முன்னைய வடிவம் நீங்கி அழகிய குழந்தை வடிவுடன் திகழ்ந்தது. பெற்றோர்கள் அக்குழந்தைக்குச் செபேசுவரர் என்று நாமகரணம் செய்து வளர்த்து வந்தார்கள். செபேசுவரர் பதினான்கு வயதிற்குள் வேதாகம சாஸ்திரங்களாகிய சகல கலைகளிலும் வல்லவரானார்.

அறிவின் மிக்க இம் மைந்தனை இன்னும் இரண்டு வருடத்தில் இழக்க நேருமே என்று ஏங்கியதாய் தந்தையர்களைக் கண்ட செபேசுரர், ஐயாறப்பன் ஆலயத்தையடைந்து இறைவனை பூசித்து அயனரி தீர்த்தத்தில் நீராடிக்காலின்மேல் காலையூன்றிக் கடுந்தவம் செய்தனர். செபேசுவரரின் அருமைத் திருமேனியை நீர்வாழும் பாம்பு, மீன் முதலியவைகள் அரித்துத்தின்றன. பன்னாளாகியும் வெளிவராமையைக் கண்ட தாய் தந்தையர்களும் மற்றையோரும் கலங்கினர். செபேசுவரரின் உறுதியான அன்பையும், வைராக்கியத்தையும் கண்டு மகிழ்ந்த இறைவன் வெளிவந்து காட்சி கொடுத்து வேண்டும் வரங்களையும், பதினாறு பேறுகளையும் கொடுத்தருளினார்.

மேலும் இறைவன் செபேசுவரரது ஏற்புடம்பைக் கண்டு அவ்வுடம்பை நலமுறச் செய்தல் வேண்டுமெனத் திருவுளங் கொண்டு கங்கைநீர், மேகநீர், பிரமன் கமண்டல நீர். அம்மையின் கொங்கைபால், இடபநந்தியின் வாய் நுரைநீர் எனும் ஐந்து நீரினாலும் தாமே அபிஷேகஞ் செய்தார். செபேசுவரர் உடல் ஊறு நீங்கிச் சூரியனைப் போல் விளங்கிற்று.

★ திருவையாற்றுப் புராணம்

திருமணம்:

சிலாத முனிவர், வசிஷ்டமுனிவரின் பௌத்திரியும், வியாக்ரபாத முனிவருடைய புத்திரியும், உபமந்யு முனிவர் தங்கையுமாகிய சுயம்பிரகாசையம்மையாரைத் தமது புதல்வனுக்குப் பங்குனிமாத புனர்பூச நக்ஷத்திரத்தில் திருமணம் செய்வித்தார். பின் செபேசுவரர் ஐயாற்றண்ணலால் உபதேசம் பெற்றுக் கயிலையில் சிவகணங்களுக்குத் தலைவராம் பதவியும், முதற்றிருவாயிலில் இருந்து காக்கும் உரிமையும், சைவாசாரியருள் முதற் குருவாந்தன்மையும் பெற்றார். இத்தகைய பேறுகளைப் பெற்ற திரு நந்தியெம்பெருமான் மேலும் ஐயாறப்பரிடம் நிலைத்த 16 பேறுகளைத் தந்தருள வேண்டும் என்று வரமாக வேண்டினார். அவ்வரத்தை நாமும் ஸ்ரீ ஐயாறப்பரிடம் கேட்டு உய்ய வேண்டாமா? அப்பேறுகள் விளக்கமாகக் கீழே தரப்படுகின்றன.

பதினாறு பேறுகளின் விளக்கம்

பெருமானே!

1. வேதங்களைப் பழித்தலும் சிவத்தைப் பழித்தலுமாகிய செயலைக் கண்டால் பொறுக்க இயலா மனத்தையும்
2. மெய், வாய் , கண், மூக்கு, செவி எனும் ஐம்புல ஆசைகட்கு அடிமைப்படாத அறிவையும்
3. எடுத்தபிறவிதீதாகுமே என அறியாமாந்தரோடு மாறுபட்டு சேராது வாழும் இயல்பையும்
4. நல்ல அறச்சிந்தனையுடையார்களோடு உறவு கொள்ளவும்
5. சிவனடி மறவாச் சிந்தனையாளர், எது கேட்பினும் அதனை மறவாது கொடுக்கும் தன்மையையும்.
6. தவவலிமையுடையவர் நம்மைத் தண்டித்தாலும் அதனை மகிழ்வோடு வணங்கி ஏற்றுக்கொள்ளும் இயல்பும்
7. குருநாதர் நமக்கு உபதேசித்த உண்மைப் பொருளை உறுமையுடன் கடைப்பிடிக்கும் ஆற்றலையும்
8. சிவனடியார்கள் தீமைசெய்தாலும் அதனைச் சிவச் செயலென ஏற்றுக் கொள்ளும் மனத்தெளிவும்
9. சிவனடியாரிடத்து மனமும் வாக்கும் ஒன்றுபடும் தன்மையும்
10. கனவில்கூட சிவனடியார்களை வணங்கும் மனப்பக்குவத்தையும்
11. மனத்தாலும் மற்றொரு கடவுளை வழிபடாத உறுதிப்பாட்டையும்
12. பெருமானே! நாள்தோறும் உனது புகழையே பேசிக்கொண்டே இருக்கும் அழகையும்
13. தீமைபுரியும் புறச்சமயங்களை அழிக்கவல்ல ஆற்றலையும்
14. உ ண்மையாகவே பிறரது பொருளுக்கு ஆசைப்படாத வளத்தையும்
15. விரும்பத்தகாத அழகுடைய பிறர் மனைவியைக் கண்டு ஆசைப்படாத விரதத்தையும்
16. பரிசுத்தமான மனத்தில் 'யான்' எனது எனும் தன்முனைப் பற்ற துறவு மனப்பான்மையும்.

முத்தியுலகே கிட்டினாலும், நரகுலகே கிடைத்தாலும், இறந்தாலும், பிறந்தாலும், இன்பமே அனுபவித்தாலும் பிறைமுடி சூடியபெருமானே! யான் விரும்பிக் கேட்டுக்கொள்ளும் இப்பதினாறு வரங்களையும் மறுக்காமல் வழங்கியருள வணங்கிக் கேட்டுக் கொள்கின்றேன்.

தற்போது (திருமழபாடியில்) நந்திகேஸ்வரர் திருக்கலியாண நிகழ்முறை

பெருமைமிகு திருமழபாடி ஸ்ரீ வைத்தியநாத சுவாமி திருக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும்

பங்குனி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் திருக்கயிலாயத்தில் பரமேஸ்வரனுக்குக் காவலாகவும், உற்ற தோழனாகவும் விளங்கிவரும் நந்திதேவருக்கும் சுயசாம்பிகை தேவியாருக்கும் (சுயம்பிரகாசை யம்மை) நிச்சயிக்கப்பட்ட இத்தெய்வீகத் திருமணம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

(தஞ்சாவூர் மாவட்டம் - திருவையாற்றை அடுத்த அந்தணர் குறிச்சியில் வயலை உழும்போது பூமியிலிருந்து கிடைத்தவர் நந்திகேஸ்வரர். மாமுனிவர் சிலாதமுனிவரே இவரது தகப்பனார் ஆவார்)

திருமேனி கிடைத்தல்:

இந்த பிறப்பு நிகழ்ச்சி இன்றும் நந்தியெம்பெருமானின் திருமணத்திற்கு முதல் நாள் காலை அந்தணர்புரத்தில் நடந்து வருகிறது. அதாவது வெள்ளிக் கலப்பையால் பூமியை உழுவார். அப்போது ஏற்கனவே மறைத்து வைக்கப்பட்ட நந்தியெம்பெருமானின் திருவுருவம் கிடைக்கும். அங்கேயே நீராட்டி திருவையாறு திருக்கோயிலை அடையும், அன்று மாலையே நந்தியெம்பெருமானுக்கு பட்டாபிஷேகம் நடைபெறும்.

மறுநாள் திருமழபாடியில் நந்தி யெம்பெருமானுக்கும் வசிஷ்ட முனிவரின் தவப்புதல்வியாகிய சுயசாம்பிகை தேவியாருக்கும் திருமணம் நடைபெறும்.

மணாளரோடு ஐயாறப்பன்

திருமணத்தன்று காலை நான்கு மணிக்குச் சிறிய கம்பீரமான குதிரை வாகனத்தில் மாப்பிள்ளை நந்திதேவர் வெள்ளித் தலைப்பாகை, வெள்ளிக் கோலுடன் வருவார். உடன் திருவையாறு இறைவன் ஐயாறப்பனும், அறம் வளர்த்த நாயகியும் வெற்றிவேர்ப் பல்லக்கில் வருவார், வருமுபோது திருநெய்த்தானம், கடுவெளி, பனையூர், வைத்திய நாதன்பேட்டை வழியே வந்து கொள்ளிட ஆற்றில் இறங்குவார்.

எதிர்க்கரையில்

அதே சமயம் கொள்ளிட ஆற்றங்கரையில் போடப்பட்டுள்ள பெரிய பந்தலில் பெண் வீட்டார் - வைத்தியநாத சுவாமியும் (திருமழபாடித்தலப்பெருமான்) சுந்தராம்பிகையும் அழகிய கண்ணாடிப் பல்லக்கில் சென்று சம்பந்திகளை வாங்க! வாங்க! என்று வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறும்.

வரவேற்பும் - சம்பிரதாயமும்

வரும் வழயில் ஒவ்வொரு வீட்டின் முன்னும் பெரிய பந்தல் போட்டு வரவேற்பு அளிக்கப்படும், திருமழபாடியில் நான்கு வீதிகளையும் வலம் வந்தபின் திருக்கோயிலின் முன்னே உள்ள பிரம்மாண்டமான கலியாண மண்டபத்தில் மாலை ஆறு மணிக்கு நந்திதேவருக்கும் சுயசாம்பிகைக்கும் திருமணம் நிகழும். மனிதர்களின் சம்பிரதாயம் போல் கோயிலின் ஸ்தானிகர் இல்லப்பெண் நாத்திமுடிச்சும் போடுவார்.

மணமக்கள் பவனி

தனியேவந்த, நந்தியெம்பெருமான் சுயசாம்பிகை தேவியாருடன் தம்பதி சமேதராய் ராஜவீதிகளில் பவனி வருவர். அப்போதும் மணமக்களுக்கு பலத்த வரவேற்பு அளிக்கப்படும்.

கொள்ளிட ஆற்றங்கரையில் சம்பந்தியையும் மணமக்களையும் பெண்வீட்டார் (பல்லக்கு) வலம் வந்து வழியனுப்புவர். அப்போது பிரம்மாண்டமான வானவேடிக்கை நடக்கும்.

வருவது வைத்தியநாதன்பேட்டை, போவது புனல்வாயில் என்ற பழமொழிக்கேற்ப போகும்போது, புனல்வாயில், பெரும்புலியூர் என்ற ஊர் வழியாக சென்று திருவையாறு அடைவர்.

திருவையாற்றைச் சுற்றியுள்ள தெய்வங்கள் என்னது எங்களுக்கு அழைப்பு இல்லாமல் நந்தி கல்யாணத்தை நடத்தி விட்டீர்களே! என்று ஐயாறப்பனைக் கேட்டார்களாம்.

நாற்பதாம் நாள்

உடனே ஐயாறப்பர், கவலைப்படாதீர்கள் கல்யாணம் நடந்த நாற்பதாம் நாள் மணமக்களை உங்கள் பகுதிக்கு அழைத்து வருகிறோம் என்றனராம்.

அதன்படி மணமக்களுடன் ஐயாறப்பன் பல்லக்கில் ஏறி, திருப்பழனம், திருச்சோற்றுத்துரை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்யாடியப்பர் (திருநெய்த்தானம்) ஆகிய ஊர்களுக்குச் சென்று எட்டு பல்லக்கில் உலா வருவர். இதுவே 'சப்தஸ்தானம்' ஆகும்.

திருமணம் கைகூட

''நந்தி கல்யாணம் பார்த்தால் முந்தி கல்யாணம்'' என்பது வாக்கு! அதாவது திருமணம் ஆகாத ஆண், பெண்கள் நந்தி கல்யாணத்தைப் பார்த்தால் உடனே திருமணம் நடக்கும் என்பது தொன்று தொட்டு நிலவிவரும் ஒரு நம்பிக்கை.

இச்சீர்மிகு திருமண விழாவை பக்தர்கள் அனைவரும் கண்டு தரிசித்து, ஸ்ரீ நந்தியெம்பெருமான் சுயசாம்பிகை தேவியரின் திருவருள் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக.

திருவையாற்று புராணத்தில் மாகேசுவர பூசையின் போது திருநந்திதேவர் வேண்டியது.

(திருவாவடுதுறை ஆதீனத்தில் தினந்தோறும், மாகேசுவர பூசையின் போது திருநந்திதேவர் விண்ணப்பத்தைக் கூறுவது ஆதீனச் சம்பிரதாயமாகும்)

1. **தேசத்தில் உள்ள சிவாலயங்கள்
தோறும் நித்திய நைமித்திக பூசை
திருப்பணியாதிகள் நடக்கும் பொருட்டு
அனுக்கிரகம் பண்ணுக. ஹர! ஹர! ஹர!**

2. **சபாபதிக்கு மகாபிஷேகமும், நைவேத்தியமும்,
திருப்பணி உற்சவாதிகளும்
நடக்கும் பொருட்டு அனுக்கிரகம் பண்ணுக. ஹர! ஹர! ஹர!**

3. **பக்த ஜனங்களுக்குச் சிவஞானமும்
தீர்க்காயுளும், சிந்தித மனோரத சித்தியும்,
தேவ குருப்பிரசாதமும் உண்டாகும் பொருட்டு
அனுக்கிரகம் பண்ணுக. ஹர! ஹர! ஹர!**

4. **மாகேசுவர பூசை இந்தக்
குருமடத்திலே சதாகாலமும்
சிறப்பாக நடந்து வரும் பொருட்டு
அனுக்கிரகம் பண்ணுக. ஹர! ஹர! ஹர!**

5. **அடியேனுக்கு நல்ல புத்தியுண்டாகும்
பொருட்டு அனுக்கிரகம் பண்ணுக. ஹர! ஹர! ஹர!**

6. **அடியார்கள் எல்லோரும் சிரமம்
தீரும்படி திருவமுது செய்தருளுக. ஹர! ஹர! ஹர!**



நந்திதேவர் - சுயம்பிரகாசிகை

தட்சிணாமூர்த்தியிடம் உபதேசம் பெற்ற முனிவர்களின் வடிவங்கள்

1. ஆங்கீரசர்

நெற்றியில் திரிபுண்டரத்தை அணிந்திருப்பவரும், ஜபமாலை, கிண்டி, இவைகளை கையில் கொண்டிருப்பவரும், ப்ரஜாபதியானவரும், தங்கநிறமுடையவருமான ஆங்கிரசர் என்னும் முனிவரை வணங்குகின்றேன் (சுவர்ணநிறம்)

2. மரீசி

முதலாவது பிரஜாபதியானவரும் பிரம்ம தேவரின் மானசீக புத்திரரும், ஜபமாலை, குண்டிகையினைத் தரிப்பவரும், ஜடையைத்தரித்து மரவுரியை அணிந்திருப்பவரும், மேருமலையைப் போல்மஞ்சளான சரீரத்தை உடையவரும், உத்தமமான பிரணவத்தை ஜபம் செய்து கொண்டிருப்பவருமான மரீசி முனிவரை வணங்குகின்றேன்.

3. அத்திரி

மரீசி முனிவரின் புதல்வரும், ஜபமாலை கமண்டலத்தை உடையவரும், ஜடை, தாடி, மீசையுடையவரும், சாந்தமான சொரூபத்தை உடையவரும் நீலநிறமுடையவருமான அத்திரி முனிவரை எப்போதும் வணங்குகின்றேன்.

4. புலஸ்தியர்

பிரம்ம தேவரின் மானசீக புத்திரரும் சாந்தமானஸ்வரூபமுடையவரும், அரிஷ்ட வர்க்கத்தை (காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம்) ஜெயித்தவரும், ஜபமாலை - தண்டத்தை உயைடவரும், மான் தோலை உத்தரியமாக அணிந்திருப்பவரும் ஜடையினைக் கொண்டவரும், மஞ்சள் நிறத்தை உடையவருமான புலஸ்திய முனிவரை வணங்குகின்றேன்.

5. காச்யபர்


மரீசி முனிவரின் புதல்வரும், மாசற்றவரும், பிரணவ பிரம்மத்தில் லயமடைந்த மனதை உடையவரும், சுவர்ணம் போன்ற சரீரகாந்தியை உடையவரும், மரஉரியை ஆடையாக அணிந்திருப்பவரும், ஜடாமண்டலத்துடன் பிரகாசிப்பவரும், பிரஜைகளில் சிருஷ்டி செய்வதில் முயற்சியுடையவரும், ஜபமாலை - குண்டிகையைக்கொண்டவருமான காச்யபமுனிவரை வணங்குகின்றேன்.

6. கௌதமர்

ரஹூகணனுடைய புதல்வரும் சாந்தமான ஆகாரத்தைக் கொண்டவரும், நெற்றியில் திரிபுண்டரம் தரித்தவரும், ஜபமாலை - கமண்டலம் - தண்டம் இவைகளைக் கொண்ட கௌதம முனிவரை வணங்குகின்றேன்.

7. பரத்வாஜர்

மிகவும் சாந்தமானவரும், சுசீலையின் கணவரும், மனஉறுதியுடையவரும் (தபசில்) ஜபமாலை - யோகதண்டம் கொண்டவரும், ஆங்கீரச முனிவரின் புதல்வருமான பரத்வாஜ முனிவரை வணங்குகின்றேன். (நீலம் அல்லது கருப் பு)



பத்மம் சர்ப்பம் கொண்டருளும் ஜடாமண்டல வியாக்யான தட்சிணாமூர்த்தி

8. விசுவாமித்திரர்

பிரம்மதேவரைப் போன்று விளங்குபவரும், சடைமுடியினை கொண்டவரும், குமுத்வதீ என்பவளின் கணவரும், சாந்தமான சொரூபமுடையவருமான விசுவாமித்திரமுனிவரை வணங்குகின்றேன் (மஞ்சள் நிறம்)

9. ஜமதக்கினி

சாந்தமான சொரூபமுடையவரும் அரிஷ்ட வர்க்கத்தை ஜெயித்தவரும், பிருகுமுனிவரின் புதல்வரும், மிகுந்த தேஜஸையுடையவரும், யோக தண்டம் - ஜபமாலை கொண்டு திகழும் ஜமதக்னி முனிவரை வணங்குகின்றேன் (சிவப்பு நிறம்)

10. வசிஷ்டர்

தவத்தின் இருப்பிடமாக விளங்குபவரும், மித்திரன், வருணன் இவர்களின் புத்திரனாக இருப்பவரும், கைகளில் ஜபமாலையினையும் யோகதண்டத்தைக் கொண்டவரும், வரங்களை அளிப்பவருமான வசிஷ்டமுனிவரை வணங்குகின்றேன். (வெளுப்பு நிறம்)

11. அத்திரி

பிரம்மதேவரின் புதல்வரும், தெய்வத்தன்மைக் கொண்டவரும், அனுசூயாதேவியின் பதியுமானவரும், சாந்தமான ரூபத்துடன் ஜபமாலை - கமண்டலத்தைக் கொண்டு திகழும் அத்திரி முனிவரை வணங்குகின்றேன்.

12. பார்கவர் (பரசுராமன்)

மழுவேந்திய கையையுடையவரும் ஜடாமண்டலத்துடன் விளங்குகின்றவரும், தூயமனத்தையுடையவருமான பிருகு முனிவரின் புதல்வரான பரசுராமன் நீண்ட ஆயுளை அளிப்பாராக (தங்கநிறம்)

13. மார்க்கண்டேயர்

சர்வைசுவரிய சம்பன்னரும், மனதைக் கட்டுப்படுத்தியவரும், சிவபூசையில் ஆழ்ந்து ஈடுபட்டவரும், வேதம் சாஸ்திரங்களின் உண்மைகளை அறிந்தவரும், சிரஞ்சீவியாக என்றும் உடையவருமான மார்க்கண்டேய முனிவரை வணங்குகின்றேன் (வெளுப்பு நிறம்)

14. பிருகு

பிருகு, வாமதேவர், பிருவணர், பாவநர், ஸௌஜனியர், ஜௌஸநர், சர்வஸ்வசு, வியஸ்ருதர், பிரவாசர், அவ்வியயர் தக்ஷர் - இவர்கள் பன்னிருவரும் பிருகுகணம் எனக் கூறுவர். எப்போதும் யாகம் செய்பவர்கள் (வெளுப்பு நிறம்)

15. நாரதர்

நாரதமுனிவர் முனிவர்களுக்கெல்லாம் தலைமையானவர். தேவலோக சஞ்சாரி. பிரம்மபுத்திரர், ஜடாபந்தத்தைக் கொண்டவர். இவர் யோகதண்டம் கமண்டலத்தைக் கொண்டவர். இடது பக்கம் புஜத்தில் மாட்டியபடி தம்புராவினைக் கொண்டவர் (வெளுப்பு நிறம்)

16. சப்தரிஷிகள் (ஏழுமுனிவர்கள்) (அம்சுமத் பேதம் - படலம் 49ல்)

முனிவர்கள் - மஞ்சள் நிறமுடையவர்கள். பலவகை வண்ண உடைகள் கொண்டவர். முதிர்ந்த வயதினர். சாந்தர்கள் (ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்) சடைமுடி கொண்டவர்கள்.

மார்பில் படுமளவு நீண்ட (ஒட்டிய) முகவாயுடையவர், முப்புரிநூலர், திரிபுண்டரமாக நீறணிந்தவர். நின்றோ அல்லது அமர்ந்தோ இருப்பவர்.

வலக்கையில் தண்டமும், இடக்கரத்தில் குடையும் கொண்டவர். அல்லது வலக்கையில் ஞானமுத்திரை கொண்டவர் இடமுழந்தாளில் வைத்த இடக்கரமுடையர்.

17. சுப்ரபேதம் - படலம் 48ல்

1)பிருகு, 2)வசிஷ்டர், 3) புலஸ்தியர், 4) புலகர், 5) கிரது (க்ரது), 6) காசியபர், 7)கௌசிகர், 8)ஆங்கீரஸர் எனும் முனிவர்கள் மரவுரியும், சடைமுடியும் கொண்டவர்கள். இன்முகத்தர், தண்டமேந்தியவர்கள், மெலிந்த இடையினர். வெண்ணிற ஆடையர், சுபர்கள்.

அழகிய கண்களும், பொன்னிறமேனியும் கொண்டவர்களாய் இம்முனிவர்களின் மனைவியர் (ரிஷிபத்தினிகள்) ஆவார்கள்.

18. (பூர்வகாரணாகமம் - படலம் 13ல்)

அகஸ்தியர், புலஸ்தியர், விஸ்வாமித்திரர், பராசரர், ஜமதக்னி, வால்மீகி, சனத்குமாரர் ஆகியோர் வெண்ணிற ஆடையும் முப்புரி நூலும் கொண்டவர். வெண்மையான மேலாடை தரித்து சடையும் மரவுரியும் கொண்டவர்கள். கமண்டலம், ஜபமாலையுடன் நீண்ட தாடிமீசைக் கொண்டவர்கள்.

19. கௌசிகர் (அம்சுமத்பேதாகமம் - படலம் 51ல்)

அகஸ்தியரை ஒப்பக் கௌசிகரைச் செய்க என்கிறது இந்நூல்.

20. நந்தி (விஷ்ணுதர்மோத்திரம் நூலில்)

★நாற்கரத்தர், பெருந்தோளர் (பெருவீரர்), முக்கண்ணர், சிந்தூரச் சிவப்பு நிறத்தர், புலித்தோல் ஆடையர், திரிசூலம் ,பிண்டிபாலம் ஆகியவற்றை இருகரங்களிலேந்தியும் மற்ற இருகரங்களில் தலைமேற் கூப்பிச் சிவபெருமானை வணங்குபவர். தூரத்திலிருந்து வரும் மக்களைப் பார்த்தவாறிருப்பவருமாக நந்தி அமைவார்.

21. இதில் மற்றொரு வகை

★மான், பரசு(மழு), இவற்றைக் கையில் ஏந்தியவராயும், ஈசரை அஞ்சலி செய்பவராயும் , முழுநீறு பூசியமையால் வெளுத்தவராயும், இளமதியும் கங்கையும் சடையிற் கொண்டவரும் அபரதிரிபுராந்தகரும் (அபரசிவம் எனப்படுபவரும் கணத்தலைவர்களில் தலைவரும் சிவகணங்களால் வணங்கப்பட்டவரும், அயன், மால், இந்திரன் ஆகியோரால் வணங்கப்பட்டவரும் ஆகிய ஸ்ரீ நந்தீசரைப் போற்றி வணங்குகின்றேன்.

22. சனகர் -

ஏகவக்த்ரம் த்ரிணேத்ரஞ்சத்விபுஜஞ்ச ஜடாதரம் ।
ருத்ராக்ஷமாலிகாயுக்தம் பஸ்மோத்தூளித விக்ரஹம் ॥
ஸநகம் வாமநாகாரம் த்ருதாக்ஷமணிமாலிகம் ।
சுத்தஸ்படிகஸங்காசம் வந்தேஹம் பாலரூபிணம் ॥

இ-ள். ஒருமுகம் மூன்று கண்கள் இரண்டு கைகள் இவைகளையுடையவரும், ஜடையைத் தரித்துக் கொண்டிருப்பவரும், உருத்திராக்ஷ மாலையை அணிந்திருப்பவரும், உடல் முழுதும் திருநீறணிந்திருப்பவரும், குள்ளமானவரும் கையில் ஜபமாலையை வைத்திருப்பவரும் ஸ்படிகம் போல் நிர்மலமான சரீரத்தையுடையவரும், பாலரூபத்தையுடையவருமான ஸநகரை வணங்குகிறேன்.

ஆதாரம் - ஸ்ரீ தத்துவநிதி - பிரம்மதத்துவநிதி - த.ச.ம. வெளியீடு.

★ இப்பகுதி திரும்ப வருதலின் நோக்கம் யாதெனின் 20,21 விஷயங்களைப் படிப்பவர்கள் முனிவர்களின் கூட்டத்தில் நந்தி இருப்பதாக எண்ணல் வேண்டும்.

23. சனந்தனர்

த்விபுஜஞ்சைகவக்த்ரஞ்ச ஜடாகூர்ச்சதரம் முனிம் ।
ஞானமுத்ராஞ்சிதகரம் சோர்த்வஹஸ்தேந சோபிதம் ॥
கிஞ்சித்குஞ்சிதவாமாங்க்ரிம் ப்ரலம்பிதக்ஷிணாங்க்ரிகம் ।
த்ருதருத்ராக்ஷபஸ்மம் ஸ்ரீ ஸநந்தன முபாஸ்மஹே ॥

ஆசைவைத்தது போலவே
ஐயனே நின்னருளை அடைவதற்காசைவைத்து
அடியன்முகம் வீங்கிநின்றேன்
சந்த்ரசேகர சகள நிட்கள தயாபர
சதாசிவ சிதாகாயமாம்
சபாநாத சுந்தரானந்த கல்யாணகுண
சர்வேசதேவதேவே
உந்துந்தரங்கமெறி கங்காதரா கயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த வுருவாகி என்னுயிர்க்
குயிரான பரமசிவமே. 4

4. ஆகமப்பரமாணத்தின் பிரிவாகிய தந்திர கலையையும் அறியேன்; மந்திர கலையையும் மதியேன்; உபதேச கலையையும் உணரேன்; திருக்கயிலாய பரம்பரையில் வரும் (மெய் கண்ட சந்தானத்துச்)சம்பிரதாயங்களையும் தெரியேன், உயர்ந்தோங்கிய பெருமலையின் உச்சியில் உள்ள தேனுக்கு முடவன் ஆசைப்பட்டது போல, அடியேன் உன் அருளுக்கு ஆசைப்பட்டு முகம் வீங்கித் தேம்பி நிற்கின்றேன். சந்திரசேகரா! சகள நிஷ்கள தயாபரா, சதாசிவா, ஞானவொளியாகிய சபைக்கு நாயகா, சுந்தரானந்த கல்யாணகுண சர்வேசுவரா, தேவதேவா, கங்காதரா, கயிலாசவாசா, மெய்த் தெய்வமே ஒன்றாய் இன்புருவாய் என் உயிர்க்குயிராய்நிற்கும் பரமசிவமே. இம்முடவனுக்கும் உன் அருள் தேன் கிடைக்கச் செய்யலாகாதா?

பொல்லாத பாவங்கள் கோடாநுகோடியிப்
புவிமிசையில்ஓர் வடிவமாம்
புலையனேன்உனை மறந்தனுதினஞ் செய்துவரு
பொல்லாத வினையெண்ணிலேன்
அல்லாருமலமாயை கருமங்கள் அணுகாத
அகளநிட் பிரபஞ்சமாம்
அகளங்கசுத்தநித் யானந்த அனுபவம்
அணுவளவும் வந்ததில்லை
நல்லார்முன்நணுகாத யமதூதர் கொண்டுபோய்
நரகிலே விடுவரென்று
நடுநடுங்காநின்ற துள்ளம் உனைநம்பினேன்
நம்பினேன் வடகயிலையாய்


உல்லாச பரமகுரு நாதனே ஆலடியில்
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த வுருவாகி என்னுயிர்க்
குயிரான பரமசிவமே. 5

5. கோடாநுகோடி பொல்லாத பாவங்கள் ஒரு வடிவம் கொண்டு இப்பூமியில் இருப்பதுபோன்ற புலையனாகிய யான், உன்னை மறந்து, நாள்தோறும் செய்து வரும் பொல்லாத தீவினையை எண்ணுவதே இல்லேன். ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலமும் அணுகமாட்டாத அகளமும் நிஷ்ப்ரபஞ்சமும், அகளங்கமும், சுத்தமும், நித்தியமும் ஆன ஆநந்தாநுபவம் அணுவளவு கூட எனக்குக் கைவந்ததே இல்லை. நல்லவரிடத்தில் நுணுகமாட்டாத யமதூதர்கள் கொண்டு சென்று நரகத்திலே விட்டிடுவார்கள் என்று மனம் நடுநடுங்கிக் கலங்குகின்றது. உன்னையே நம்பினேன், நம்பினேன், வடகயிலை வாசா, உல்லாசா, பரமகுருநாதா! கல்லாலின் கீழ் வாழும் மெய்யான தெய்வமே! ஒன்றாய் இன்பவுருவாய் என் உயிர்க்கு உயிராய் நிற்கும் பரமசிவமே நித்தியாநந்தாநுபவம் அருள்வாய்.

பெரியபரமானந்த பரமசுகவாழ்வுஇப்
பிறப்பிலே வருவதன்றிப்
பிரபஞ்ச வாழ்க்கையெல்லாமும் விட்டுதறியே
பெண்ணாசை மண்ணாசையும்
இரணியத்தாசையுஞ் சீயென்று விட்டெறிந்
தேகாந்தமாயிருந்தால்
இவ்வுலகில் இடரேதும் இல்லாமல் வருமின்பம்
யாவர்க்கும் இல்லையென்று
தெரியமறை சொல்லவும் பெரியவர்கள் சொல்லவுந்
தீரத் துறந்திராத
சிறியனிவனென்றோ பராமுகமதாகவே
தேவரீர் நின்றசெய்தி
உரியதுறவுடன் ஞானம் உதவுவதும் நீரன்றி
ஒருதெய்வம் வேறில்லையே
ஒன்றாகி ஆனந்த வுருவாகி என்உயர்க்
குயிரான பரமசிவமே. 6

6 ஒன்றாய் இன்பவுருவாய் என் உயிர்க்கு உயிராய் நிற்கும் பரமசிவமே! தேவரீர் அடியேன் திறத்தில் பராமுகமாய் இருப்பது ஏனோ? வேதங்களும், அவற்றை உணர்ந்த பெரியவர்களும் சொல்லியவண்ணம் முற்றும் துறந்து பற்று விட்டிராத சிறியவன் இவன் என்று திருவுளங்கொண்டோ பராமுகமாயிருக்கின்றீர்? துறவும் ஞானமும் தேவரீர் அருளாவிடில், அவற்றை அருளுந் தெய்வம் வேறு ஏது? இல்லையே! அதனால், அடியேனுக்குத் துறவும் ஞானமும் அளித்துக் காத்தருள்வீர். வேதங்களும் பெரியவர்களும் சொல்லுவன: (1)பெரிய பரமாநந்த பரம சுக வாழ்வு இப்பிறப்பிலே வருவது அன்று. (2) இப்பிரபஞ்ச வாழ்க்கை எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு, பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை மூன்றையும் 'சீ' என்று வீசிவிட்டு ஏகாந்தமாயிருந்தால் தான் இவ்வுலகில் ஏதும் இடர் இல்லாமல் இன்பமே விளையும். (3) அம் மூன்றாசையும் உடைய யாவர்க்கும் அத்தகைய இன்பம் இல்லை. ஆசைதீர வீடு அருள்வாய்.

சரியைதனில் வல்லனோ கிரியைதனில் வல்லனோ
தகுயோக மதில்வல்லனோ



யோக தட்சிணாமூர்த்தி (வேறு வகை)

தவமதனில் வல்லனோ உபரதியில் வல்லனோ
தருபத்தி தனில்வல்லனோ
அரிபிரமர்காணா அகண்டபூரணசச்சி
தானந்த சிவஞானமா
மதையுணர வல்லனோ ஆகாதபிரபஞ்ச
மதையுணரும் வல்லமையிலே
பெரியனே ஆயினும் மேலான அனுபவம்
பெற்றவர்கள் போலிருந்து
பெருங்கபடநாடகம் நடிப்பேற்கு நின்னருட்
பிரகாசமாகுமோசொல்
உரியபரமானந்த நிர்த்தனேவடகயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 7

7. மெய்யின்பக் கூத்தனே! வடகயிலாசத்திலே வாழும் உண்மைத் தெய்வமே! ஒன்றாய் இன்பவுருவாய் என் உயிர்க்கு உயிராய் நிற்கும் பரமசிவமே! சரியை, கிரியை, யோகம், தவம், பற்றற்று நிற்றல், பக்தி என்பவற்றில் எதிலும் எனக்கு வல்லமை இல்லை. அவற்றால் அடையத்தக்கதும் மாலயன் அறியாததும் ஆன அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சிவஞானத்திலோ எனக்கு வலிமை உண்டாகும்? பாசப்பற்றிலே மிக்க வன்மையுடையேன் ஆயினும், சிறந்த அநுபவம் உயைடவர்கள் போல் இருந்து பெரிய கபட நாடகம் நடிக்கின்ற எனக்கும் உன் திருவருள் ஒளி கிடைக்குமோ? சொல்வாய். உபரதி-ஓய்வு. பற்றொழிதல் - செயலறுதல்.

மோகந்தரித்தவர்கள் மாதரைக்கூடியே
மோகந்தணிப்பரதுபோல்
முதுபசிதரித்தவர்கள் அன்னம்புசித்துலகில்
முதுபசி தணிப்பரதுபோல்
பாகந்தரித்தவர்கள் சற்குருவினோக்கப்
பயோததி படிந்தேபிர
பஞ்சவெப்பந் தணிப்பார்களென்றாகமம்
பலகலைகள் சொல்லவும்கேட்
டாகந்தரித்தமல வடவையாற் சூடுண்டுஎன்
ஐயனே நின்கடைக்கண்
ஆனந்த அருண்மழையின் மூழ்கவழி பாராமல்
அவமாக நாள்கழித்தேன்
ஊகங்கொடுத்தருளை அடையும்வழி அருளுவாய்
ஓங்குகுரு பரநாதனே
ஒன்றாகி ஆனந்த உருவாகிஎன்உயிர்க்கு
உயிரான பரமசிவமே. 8

8. ஒன்றாய் இன்பவுருவாய் என் உயிர்க்கு உயிராய் நிற்கும் பரமசிவமே! குருக்களுக்கெல்லாம் மேலாகி ஓங்கும் பரமகுருநாதனே! மோகம் அடைந்தவர் பெண்டிரை அண்டியே போகம் உற்று மோகம் தணிப்பர். பசியுடையோர் உணவு புசித்துப் பசி தணிப்பர். அவ்வாறே, இருவினை யொப்பும் மலபரிபாகமும் உற்றோர் சத்திநிபாதமும் சற்குரு கடாக்ஷமும் ஆகிய அருட்கடலுள் முழுகித்தான்


பிரபஞ்சபாச வெப்பம் தணிப்பர். இவ்வாறு ஆகமம் முதலிய பல கலைகளும் முழங்குகின்றன. அம் முழக்கத்தைக் கேட்டும், உடலெடுத்தற்கு அடியான மலம் எனும் வடவைத் தீயால் வெப்பம் அடைந்து, நின் கடைக்கண் சொரியும் ஞானானந்த மழையில் முழுக வழி தேடாமல், இவ்வளவு காலங்களையும் வீணிற் கழித்தேன். பக்குவமான புத்தியும் ஞானசித்தியும் முத்தியும் அருள்வாய்.

பொன்னினை விழுங்குமொரு ரசகுளிகைபோலவும்
பூதவிருள் தனைவிழுங்கும்
பூர்ணசந்த்ரோதயம் போலவும் சந்திரன்
பொன்னொளியை உள்விழுங்கும்
மன்னும் ஆயிரகோடி சூர்யர்கள் போலவும்
வல்இரும் பினைவிழுங்கும்
மண்டுகனல்போலவும் உப்பினைவிழுங்கிடும்
வாரிநீரைப்போலவும்
என்னைநீஉள் விழுங்கிக்கொண் டிருப்பதினி
எக்காலம் எக்காலமென்
றேழையேன் அழுதழுது வாடவும் திருவுள்ளம்
இன்னமும் இரங்கவிலையே
உன்னருள் இரங்குநாள் எந்தநாள் ஆல்அடியில்
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்உயிர்க்கு
உயிரான பரமசிவமே. 9

9. ஒன்றாய் இன்பவுருவாய் என் உயிர்க்கு உயிராய் நிற்கும் பரமசிவமே, கல்லாலடியில் வீற்றிருந்தருளும் மெய்யான தெய்வமே, பொன்னை ரசகுளிகை விழுங்கும். இருளைச் சந்திரோதயம் விழுங்கும். சந்திரப்ரகாசத்தைச் சூரியப்பிரகாசம் விழுங்கும். இரும்பைத் தீ விழுங்கும். உப்பைக் கடல் நீர் விழுங்கும். அவைபோல நீ என்னை விழுங்கிக்கொண்டு இருக்கும் காலம் எக்காலம்? எக்காலம்? அக்காலத்தை எண்ணி அழுது அழுது ஏழையேன் ஏங்கி வாடுகின்றேன். இன்னும் திருவுள்ளம் இரங்கவில்லையே. உன் அருள் இரங்கும் நாள் எந்நாள்? குரு - அறியாமையை விழுங்குவோன்.

அண்டர்தொழுமிந்த்ராதி வாழ்வையும் விரும்பிடேன்
அட்டசித்தியும் விரும்பேன்
அகிலகலைஞானமும் விரும்பிடேன் உலகுபுகழ்
அரிய கீர்த்தியும் விரும்பேன்
பண்டைமலம் எல்லாம் ஒழித்து நின்னருள்பெற்ற
பழைய அடியார்க ளடியார்
பாததாமரைகள் என்தலையின்மேல் வைத்தருள்
பார்வையால் இருள் அகற்றித்
தொண்டு செய்தரியபர மானந்த வெள்ளந்
துதைந்துவிளை யாடிஉலகந்
தோன்றாமல் இறுமாந் திருக்கின்ற பெருவாழ்வு
தொண்டனேன் வேண்டினேன்வண்டு
உண்டிடுங்கொன்றையணி அண்டர்நாயக கயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரமசிவமே. 10

10. ஒன்றாய் இன்பவுருவாய் என் உயிர்க்கு உயிராய் நிற்கும் பரமசிவமே, கயிலை வாழ்வே, மெய்யான தெய்வமே, இந்திரபோகமும் அஷ்டமாசித்தியும் கல்வியென்னும் பல்கடற் பரப்பும், புகழும் முதலிய எவற்றிலும் பற்று வைத்திலேன். பழமலம் பற்றறுத் தாண்டு கொள்ளப் பெற்ற பழவடியார்களுக்கு அடியவர்தம் மலரடிகளை என்தலைமேல் வைத்து, அருள்நோக்கத்தால் இருளைப் போக்கி அடிமை செய்து, பரமாநந்த வெள்ளம் திளைத்து விளையாடி, உலகம் தோன்றாமல் இறுமாந்திருக்கும் சிவாநந்தப் பெருவாழ்வு ஒன்றையே தொண்டனேன் வேண்டுகின்றேன். அதனை அருள்வாய்.



நாகை நீலாயதாட்சி அம்மன் கோயிலில் தனித்தனியே அமைந்துள்ள மூன்று தட்சிணாமூர்த்தித் திருவுருவங்கள், மிகுந்த கலைநுட்பத்துடன் இத்திருமேனிகள் விளங்குகின்றன.

ஆலமர்ச்செல்வரின் ஆலங்குடித் தலச்சிறப்பு



அகில உலகெங்கும் இறையருள் மலர்ந்திருப்பினும் அவ் இறைவன் சிறப்புடன் குடியிருப்பது நமது தென்னாடு ஆகும் என்பது மாணிக்கவாசகர் அருள்வாக்கு. ஆனந்தரூபியும், ஞானஸ்வரூபியுமான தட்சிணாமூர்த்தி ஆணவமான முயலகனை தன் பாதத்தின் கீழிருத்தி, தெற்கு நோக்கி காட்சியளித்து அவரைத் தொழுபவர்களுக்கு யமபயத்தைப் போக்கி ஞானத்தை தொழுபவர்களுக்கு யமபயத்தைப் போக்கி ஞானத்தை வழங்குகிறார். சிவபெருமானின் பல வடிவங்களில் குருவடிவம் தட்சிணாமூர்த்தியாகும்.

முன்னொரு காலத்தில் சனகர், சநந்தனர், சநாதனர், சணற்குமாரர் என்னும் நான்கு ரிஷிகள் சிவபெருமானிடம் தங்களுக்கு யோகம் பற்றி உபதேசிக்க வேண்டினர். இறைவன் தட்சிணாமூர்த்தி கோலம் கொண்டு ஆணவம் - கன்மம் - மாயை என்ற மும்மலங்களையும் விட்டு பசுவாகிய உயிர்கள் பதியாகிய இறைவனை அடையவேண்டும் என்று சின்முத்திரைக் காட்டி அதன் தத்துவத்தை உணர்த்தினார். உயர்த்திய மூன்று விரல்கள் மும்மலங்களையும், சுட்டுவிரல் பசுவையும், பெருவிரல் பதியையும் குறிக்கும். அதாவது ஆணவாதி மலங்களை ஆன்மா விடுவித்து இறைவனை அடைந்து பேரின்பம் எய்தலை குறிப்பதாகும்.

தட்சிணாமூர்த்தி

தக்ஷிணாமூர்த்தியின் விச்வரூபத்தை மகரிஷிகள் எல்லாரும் பிரத்தியட்சமாகத் தரிசனம் பண்ணுகிற காலத்தில் அந்தத் தக்ஷிணாமூர்த்தியின் ஸ்வரூபத்தைப் பற்றிச் சொன்னதாக ஒரு சுலோகம் இருக்கிறது. அது பரம்பரையாகப் பெரியோர்கள் நாளிலேயிருந்து வந்து கொண்டிருக்கிறது.

சித்ரம் வடதரோர் மூலே வ்ருத்தா: சிஷ்யா:
குருர் யுவா!
குரோஸ் து மௌநம் வ்யாக்யாநம் சிஷ்யாஸ் து
சிந்நஸம்சயா: !!

என்பது தான் அந்தச் சுலோகம்.

ஓர் ஆலமரத்தடியில் சின்முத்திரையைக் காட்டிக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருக்கிறார் குரு. சிஷ்யர்கள் எல்லாரும் சுற்றி உட்கார்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு சிவன் கோயிலிலும் தக்ஷிணாமூர்த்தி என்கிறவர் தெற்கு கோஷ்டத்தில் எப்பொழுதும் அமர்ந்து இருப்பதைப் பார்க்கலாம். எல்லா மூர்த்திகளைக் காட்டிலும் சாந்தமான மூர்த்தி தக்ஷிணாமூர்த்தி.

ஆனால் சாந்தமாக ஆலமரத்தடியில் அவர் உட்கார்ந்திருக்கும்போது அந்த ஜடைகள் எல்லாம் அப்படியே கீழே தொங்கிக் கொண்டு ஒரு ஜடாமண்டலமாக இருக்கின்றன. தாமே அப்படியே அமைந்து தொங்கி மூடிக் கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு சந்திரகலை. அது தான் ஞானத்தின் கலை. ஞானம் என்றால் மேலே மேலே வளர்ந்துகொண்டே இருக்கவேண்டும் எனபதற்கு அடையாளமாக மூன்றாம் பிறைச் சந்திரனைச் சிரசில் தரித்துக் கொண்டிருக்கிறார். ஜடாமண்டலம் எல்லாம் கீழே தொங்க, அதில் மூன்றாம் பிறைச்சந்திரன் பிரகாசிக்க, ஓர் ஆலமரத்தடியில் மிகவும் சாந்தமாக அமர்ந்திருக்கும் மூர்த்தி தக்ஷிணாமூர்த்தி. அந்த சாந்த மூர்த்தியைப் பார்த்தவுடனேயே நமக்கும் தானாகவே சாந்தம் வந்துவிடும் நாம் தக்ஷிணாமூர்த்தியைத் தரிசனம் பண்ணும்போது நமக்கும் சாந்தம் வந்துவிடுகிறது. ''மனோவேகம் இல்லாமல் சாந்தமாகக் கொஞ்சம் உட்கார்ந்துவிட்டுப்போ'' என்று சொல்வதுபோல அவர் சாந்தமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அங்கே கேள்வி கேட்கவேண்டாம். பதில் சொல்லவேண்டாம். சந்தேக நிவிருத்தி வேண்டாம். மௌனமாக, சாந்தமாக நாமும் அங்கே உட்கார்ந்துவிட வேண்டியதுதான்.

சிவன் கோயில்களுக்குப் போய்ப் பார்த்தால் தெரியும். தெற்கு கோஷ்ட மாடத்தில் இருக்கும் ஒரு புரையில் தெற்குப் பார்த்துக்கொண்டு அவர் உட்கார்ந்திருப்பார். அவர் ஒரு சித்திரம் போல் இருக்கிறார். ஜடை நிறைய இருக்கும். ஓர் ஆலமரம் கருங்கல்லால் செதுக்கி வைத்திருப்பார்கள். அந்த ஆலமரத் தடியில் அவர் உட்கார்ந்திருப்பார். அவரைச் சுற்றி எலும்புக் கூடுபோல சில ரிஷிகள் இருப்பார்கள். உடலோடு உடலாகத் தோல் ஒட்டிக் கொண்டிருக்கும்படியாக அந்த ரிஷிகள் உருவம் இருக்கும். அநேக ஊர்களில் நான்கு ரிஷிகள் இருப்பார்கள். காஞ்சியில் சப்த ரிஷிகள் இருப்பதாக வைத்திருக்கிறார்கள்.

அந்த ரிஷிகள் எத்தனை யுக யுகாந்தரங்களாகத் தபஸ் பண்ணிக் கொண்டிருக்கிறார்களோ தெரியாது. அவர்கள் சரீரத்தில் எலும்பு தான் இருக்கிறது.

அந்தத் தபஸ்விகள் எல்லாம் இதற்காகத்தான் எத்தனையோ காலமாகத் தவம் பண்ணிக்கெக்ணடிருக்கிறார்கள். உடம்பில் சதையே இல்லை. எலும்புகளே இருக்கின்றன. அந்த மகரிஷிகள் எலும்புக் கூடுகளாக இருந்துகொண்டிருக்கிறார்கள்.

வெறும் எலும்பு மாத்திரம் உள்ளவர்களாகத் தபஸ் பண்ணிக் கொண்டிருந்தர மகரிஷிகள் கடைசியாக எந்த ஆனந்த சாந்த ஸ்வரூபத்திடம் வந்தார்கள்? சாக்ஷாத் ஈசுவரர் தக்ஷிணாமூர்த்தியாக ஆலமரத்தடியில் உட்கார்ந்து ஞானப் பிரதானம் செய்துகொண்டிருக்கிறாரே, அவரிடம் வந்தார்கள். இவ்வளவு நாட்கள் தபஸ் பண்ணினதன் பயனாக அவர்களுக்குத் தக்ஷிணாமூர்த்தி உருவம் கண்ணில்

பட்டது.

''எந்த சாந்தம்! என்ன ஆனந்தம் !'' என்று அப்படியே அவர்களும் சாந்த ஸ்வரூபிகளாக, ஆனந்த அநுபவத்தில் ஈடுபட்டு இருந்து விட்டார்கள்.

வடதரு என்றால் ஆலமரம் ஆலமரத்தடியில் என்ன சித்ரம் !'' என்று அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். சித்ரம் என்றால் ஆச்சரியம்.

குரு என்றால் நல்ல அநுபவம் உடையவராக, முதிர்ந்த கிழவராக இருப்பார். சிஷ்யர்கள் இளமை உடையவர்களாக யௌவனமுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் இங்கே சிஷ்யர்கள் எப்படி இருக்கிறார்கள்?

வ்ருத்தா : சிஷ்யா:

சிஷ்யர்கள் விருத்தர்களா, கிழவர்களாக இருக்கிறார்கள். தலைகளெல்லாம் நரைத்துக் கிடக்கின்றன. உடலிலே சதையே இல்லை. எலும்பு தான் இருக்கிறது. மிகவும் வயதான கிழவர்கள். எத்தனை வயது அவர்களுக்கு இருக்கும் என்று சொல்ல முடியாத தொண்டு கிழவர்களாக, எலும்போடு கூடியவர்களாக இருக்கிறார்கள். எத்தனை காலமாக அவர்கள் இப்படித் தபஸ் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றே சொல்லமுடியாத விருத்தாப்பியர்களாக இருக்கிறார்கள் ஆனால் குரு எப்படி இருக்கிறார்?

குருர் யுவா

குருவோ நல்ல யௌவன வயது உடையவராக, என்றும் பதினாறு வயசு உடையவரைப் போலவே இளமை மாறாமல், மிகவும் சாந்தத்தோடு கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். சிஷ்யர்கள் கிழவர்கள்: குருவோ யௌவன தசை உள்ளவர். இது ஆச்சரியம் அல்லவா?

கிழவர்கள் இந்த யௌவன வாலிபனுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதா? இந்த யௌவன வாலிபனிடத்தில் கிழவர்கள் பாடம் கற்பதா? 'சரி. ஒருகால் இந்தக் கிழவர்கள் படிக்காதவர்களாக இருந்திருக்கக் கூடும். சின்னப் பையனாக இவன் இருந்தாலும் நிரம்பப் படித்தவன் போல் இருக்கிறது! அதனால் தான் இவனிடத்தில் அவர்கள் பாடம் படிக்க வந்திருக்கிறார்கள்' என்று வைத்துக் கெள்வோம். பாடம் சொல்லிக் கொடுப்பது எப்படி? ஞானம் வரவேண்டுமென்றால் ஒவ்வொரு தத்துவத்தையும் எடுத்து அலசிப் பார்த்து உண்மையைச் சொன்னால் அல்லவா சிஷ்யர்களுக்கு வித்தை வரும்? ஞானம் உண்டாகும்? இந்தக் குரு எப்படிச் சொல்லிக் கொடுக்கிறார்?

குரோஸ் து மௌநம் வ்யாக்யாநம்


குரு வாயை மூடிக் கொண்டிருக்கிறார். மௌனந் தான் அவருடைய உபந்நியாசம்.

இங்கே வியாக்யாநம் என்றால் உபந்நியாசம் என்று அர்த்தம் குரு என்ன 'லெக்சர்' செய்கிறார்?

குரோஸ் து மௌநம் வ்யாக்யாநம்

குரு மௌன விளக்கம் செய்கிறார். ஒன்றுமே பேசாமல் மௌனமாக, சாந்தமாக உட்கார்ந்திருக்கிறார். சாந்தமாகி விட்டால் அப்புறம் மௌனந்தானே? அவர் சாந்தமாக மௌனமாக உட்கார்ந்து கொண்டிருப்பதே மற்றவர்களுக்குப் பெரிய உபதேசமாக இருக்கிறது. வாய் திறந்தால் சந்தேகம் அதிகமாக உண்டாகிவிடும். அவர் வாய் மூடிக் கொண்டு மௌனியாக உட்கார்ந்துவிட்டார்.

என்ன என்னவோ சந்தேகங்களை அவர்கள் எழுப்பிக்கொண்டு வந்தார்களே. அவை எல்லாம் அந்தச் சாந்த ஸ்வரூபத்தைக் கண்டவுடனே நிவிருத்தியாகி அப்படியே மௌனிகளாக உட்கார்ந்து விட்டார்கள். ஒரு கேள்வி கேட்கவில்லை. ஒரு பதில் இல்லை. நிறைந்த ஆனந்தம். சாந்தந்தான் எல்லாச் சந்தேகத்தையும் நிவிருத்தி செய்துவிடும். ஒன்றையும் கேட்காமல் அப்படியே சாந்தமாக,



அந்தச் சாந்தஸ்வரூபியைக் கண்டவுடன் அவர்கள் நின்றுவிட்டார்கள். இத்தனை நாள் தபசு பண்ணினதன் பலனாக அவர்களுக்கு இப்போது தான் இந்தத் தரிசனம் கிடைத்தது. இந்த ஆனந்தம், இந்தச் சாந்தம் எல்லாம் உண்டாயிற்று.

சாக்ஷாத் பரமேசுவரர் ஒரு காரியமும் இல்லாது, அசையாத மனத்தோடு கண்ணை மூடிக் கொண்டு சாந்தமாக, ஆனந்த நிலையிலே அமர்ந்துவிட்டார். அவருக்கு யௌவனம் எப்போதும் மாறாமல் இருக்கிறது. புஷ்டியான யௌவன உடம்பாதலால் சிகை வளர்ந்து அப்படியே ஜடையாக விழுந்து கிடக்கிறது. எத்தனையோ யுகாந்தரமாக அவர் அப்படி உட்கார்ந்திருக்கிறார். தக்ஷிணாமூர்த்தி நிறைந்த சாந்த ஸ்வரூபர். அவருக்கு வேண்டியதென்று ஒன்றும் இல்லை. அதனால் ஒரு காரியமும் இல்லாமல், மனது சலிக்காமல் சாந்தமுள்ளவராக அவர் காணப்படுகிறார். காலம், தேசம் என்ற வரையரையின்றி எப்போதும் பரிபூர்ணமான அழகு நிரம்பியவர்களாக, சாந்தம் அடைந்தவர்களாக அப்படியே நின்றுவிட்டார்கள். ஒரு கேள்வி இல்லை, அவரும் ஒரு வார்த்தை பேசவில்லை. தம்முடைய சாந்தமான, ஆனந்தமான நிலையை உபதேசமாகச் செய்துகொண்டு மௌனமாக அவர் இருக்கிறார். அவருடைய மௌனமே ஒரு பெரிய உபதேசமாகிவிட்டது.

சிஷ்யாஸ் து சிந்நஸம்சயா:

சிஷ்யர்களோ, குருவை ஒரு கேள்வி கேட்காமல் அவர் காட்டுகிற சின்முத்திரையினாலேயே சந்தேகம் நிவிருத்தியானவர்களாக, சாந்தம் நிரம்பியவர்களாக, ஆனந்தம் உண்டானவர்களாக அப்படியே இருந்துவிட்டார்கள்.

ஆலமரத்தடியில் இப்படிக் காட்டிக்கொண்டு அவர் மௌனமாக, 'என் அநுபவத்தையே கண்டு கொள்ளுங்கள்' என்பதுபோல உபதேசம் செய்யாமல் செய்கிறார்.

ஆலமரத்தின் கீழ் இவரும் ஆலமரம்போல இருக்கிறார். ஆலமரம் என்றால் விழுதுகள் இருக்கும். அதுபோல இந்தப் பழுத்த ஆலமரத்தில் ஜடைகள் விழுது விழுதாக வளர்ந்து தொங்குகின்றன. அநாதியான தத்துவத்திற்கு இது அறிகுறி. ஆலமரம் என்றால் பால் இருக்கும். இவர் முகத்தில் பால் வடிகிறது. யௌவன அழகு, சாந்தமான ஆனந்த அழகு வடிந்து கொண்டிருக்கிறது. விருத்தர்களான சிஷ்யர்களோ இந்தத் தக்ஷிணாமூர்த்தியைச் சுற்றி எலும்புக் கூடுபோல இருக்கிறார்கள். இதைத்தான் அந்தச் சுலோகம் அப்படியே படம் பிடித்தாற்போல எடுத்துக்காட்டுகிறது.

சித்ரம் வடதரோர் மூலே வ்ருத்தா: சிஷ்யா: குருர்
யுவா
குரோஸ் து மௌநம் வ்யாக்யாநம் சிஷ்யாஸ் து
சிந்நஸம்சயா :

அவருடைய அநுபவம் பூர்ணமான ஆத்ம ஸ்வரூபந்தான். இரண்டற ஒரே ஆனந்த நிலைதான்.

அந்த நிலையில் அவர் உட்கார்ந்திருக்கிறார். அவருடைய ஆத்மானந்த ஸ்வரூபத்தை அநுசரித்துக் கையில் சின்முத்திரை தானாக அமைந்திருக்கிறது. பிறருக்குக் காட்டுவதுகூட இல்லை. அதுதான் அவர் அநுபவம். பேசாத மௌனியாக, சாந்தத்தோடு ஆனந்தத்தோடு இளமையோடு அவர் கண்களைப் பாதி மூடிக் கொண்டு யாரையும் பார்க்காமல் உட்கார்ந்திருக்கிறார். அந்த அநுபவத்தைப் பார்த்தவுடனே ரிஷிகளாகிய சிஷ்யர்களுக்கு எல்லாச் சந்தேகமும் போய்விட்டது. அப்படியே ஆனந்தபரவசர்களாகி விட்டார்கள்.

குருவினுடைய மௌனமே நமக்கு வ்யாக்யானம். அந்த மௌனம் என்ற வியாக்யானத்தினால் தானே பிரகாசிக்கிறது. (பிரகடித) பரப்ரஹமதத்வம். அந்தச் சிஷ்யர்களுக்கு எத்தனை வயசு என்றே சொல்ல முடியாமல் இருக்கிறது. பிரம்மநிஷ்டர்களாக இருக்கிற மஹரிஷிகள் எலும்பும் தோலுமாக இருக்கிறார்கள். குரு என்றும் பதினாறு வயசுடைய'வராக இருக்கிறார்.

மற்ற மூர்த்திகள் எல்லாம் அப்படி இல்லை. ஏதாவது ஒரு குறை அந்த அந்த மூர்த்தியிடம் இருப்பதுபோல தோன்றும். கோபம், வீரம் இப்படி ஏதாவது ஒன்று இருக்கும். நம்முடைய குறைகளை நிவிருத்திக்க அந்த மூர்த்திகளும் தங்களைக் குறைத்துக்கொண்டு இறங்கி வருகின்றன. அதனால்தான் அவதாரம் என்று சொல்கிறோம். அவதாரம் என்றால் கீழே இறங்குவது என்று பொருள். கீழும் இறங்காமல், மேலே ஏற இடமுமில்லாமல் தம் ஆத்மாநுபவ நிலையிலேயே இருப்பவர் தக்ஷிணாமூர்த்தி.

அவர் அப்படி உட்கார்ந்திருப்பதானலே அவர் ஒரு காரியத்தைச் செய்யவில்லை. ஆனால் எல்லாக் காரியங்களும் தாமே நடந்து கொண்டிருக்கின்றன. சூரியன் உதயமாகிவிட்டான் என்றால் பட்சிகள் கூட்டைவிட்டுப் பறந்து போகின்றன. ஜனங்கள் எழுந்திருந்து பல காரியங்களைச் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். சுறுசுறுப்பாக அவரவர்கள் அவரவர்களுடைய காரியத்தைக் கவனிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். உலகத்தில் அநேக காரியங்கள் நடைபெறுகின்றன. ஆனால் சூரியன் அந்தக் காரியத்தை செய்யவில்லை. அவன் பிரகாசித்த உடனே எல்லாக் காரியங்களும் அவன் சந்நிதானத்திலே நடைபெறுகின்றன.

அப்படியே இந்தக் குருவும் மனம் அசையாமல், தமக்கு ஒரு காரியம் என்பது இல்லாமல் ஆனந்த நிலையில் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய சந்நிதானத்திலே எல்லாத் தத்துவங்களும் தாமே பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. அவர் ஒன்றைக் கூட உபதேசம் செய்யவில்லை. மௌனமாகவே இருக்கிறார். ஒரு குறையும் இல்லாமல் அப்படி சாந்தமாக, அடங்கின ஆனந்த நிலையிலே அவர் இருப்பதைத் தரிசனம் பண்ணின மாத்திரத்தில் ஆனந்தம், சாந்தம் எல்லாம் மற்றவர்களுக்கு நிறைந்துவிடுகின்றன. சிஷ்யர்கள் குருவையே பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்கிறார்கள். குருவும் மௌனமாக சின்முத்திரை காட்டியருளுகின்றார்.

தலமும் இருப்பிடமும்:

இத்தலம் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்ற தலமாகும். இத்தலம் தஞ்சாவூர் மாவட்டம் வலங்கைமான் வட்டத்தில் கும்பகோணம் ரயில்நிலையத்திலிருந்து 17 கி.மீ தூரத்திலும், நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ தூரத்திலும் கும்பகோணம் - மன்னார்குடி பேருந்து மார்க்கத்தில் உள்ளது.

இதன் தலப்பெயர் ஆலங்குடி என்றும், காசி ஆரண்யம் என்றும், திரு இரும்பூளை என்றும், வழங்கப்பெறுகிறது. மூலவரின் பெயர் ஆபத்சகாயேசர். காசியாரண்யர், இறைவியின் பெயர் உமையம்மை; ஏலவார் குழலாம்பிகை, விநாயகர் பெயர்: கலங்காமற் காத்த விநாயகர், விசேஷ மூர்த்தி தக்ஷிணாமூர்த்தி, தல விருட்சம் பூளைச்செடி.

புராணவரலாறு - கலங்காமற் காத்த கணபதி

மாகதர் என்னும் ரிஷிக்கு கஜாசுரன் என்ற ஓர் மைந்தன் இருந்தான். தனது அசுர பலத்தினால் தேவர்களையும், மக்களையும் கொடுந்துன்பத்திற்குள்ளாக்கினான். அவர்களுடைய சொத்துக்களை களவாடினான். ஐசுவரியங்களை கொள்ளையடித்தான். அவர்களை அடிமைப்படுத்தி தனது படைக்கு ஊழியம் செய்யும் வேலையாட்களாக அமர்த்தினான். அவனைக் கண்டாலே - ஏன் பெயரைச் சொன்னாலே மக்கள் கதி கலங்கி மதி மயங்கி அங்கம் பதறினார்கள். அவனிடமிருந்து பயந்து மீள்வதற்கு, அவனைக் கண்ட மாத்திரத்தில் தோப்புக்கரணம் போட்டும், சிரசில் குட்டிக் கொண்டும் தேங்காய் உடைத்தும் மிகுந்த வணக்கத்துடன் நடந்துகொண்டனர்.

இப்பேர்பட்ட பயத்தோடு கூடிய மரியாதைக்குரியவனும் துஷ்டத்தனத்தில் கெட்டிக்காரனும் அசுரபலத்தில் வல்லவனுமாகிய கஜாசுரன் ஒரு சமயம் விளையாட்டாக விண்ணில் சென்ற காலை அங்குள்ள அண்டச் சுவர் ஒன்றை இடித்து விட்டான்; ஆம். ஆகாச கங்கை உடைப்பெடுத்து பூலோகம் முழுவதும் நீரில் மூழ்கிறது. ஆனால் இத்தலம் மட்டும் மூழ்கியும் மூழ்காமல் இருந்தது.

ஜலப்பிரளத்தையும் அதனால் ஜெகமெங்கும் ஏற்பட்ட ஜீவ, தாவர நாசத்தையும் கண்ட தேவரும், யாவரும் மனங்கலங்கி, கண்டித்து இத்தலத்தில் வீற்றிருந்த விக்னேஸ்வரனை அஸகி, அவன்தன் பாதகமலங்களை பணிந்து நின்றனர். அண்டிவருவோர்தம் அல்லல் போக்குதலே தொழிலென கொண்ட அறுமுகன் சோதரன் தனது துதிக்கையை நீட்டி தண்ணீரை எல்லாம் உறிஞ்சி தொழுதுநின்றோர் தம்துயர் துடைத்ததோடு, ஆகாசகங்கையின் அண்டச்சுவரையும் தன் காற்பெருவிரல் நகத்தால் அடைத்து, அதனின்றும் புனல் பெருகாமல் செய்துவிட்டார். அதோடு மட்டுமின்றி இக்கொடுஞ்செயலை செய்து பெருந்துன்பத்திற்குள்ளாக்கிய கஜாசுரனையும் வதம் செய்து, மக்களை சுகம்பெற வைத்துவிட்டார். அதனால் அவர் 'கலங்காமற் காத்த கணபதி' என்று அழைக்கப் படுவதோடு, மக்கள் தாங்கள் அசுரனுக்கு மரியாதை செலுத்திய விதமாகிய தெண்டனிடல், தோப்புத் தெண்டம் போடுதல், தலையில் குட்டிக் கொள்ளுதல், தேங்காய் உடைத்தல் ஆகியவற்றை பிள்ளையாருக்கே செய்து வழிபட்டு வரலாயினர். இந்த வரலாறு நாமறிந்ததுதான். ஆனால் சிறந்த வரலாற்றுத் தலம் ஆலங்குடி என்பதறிவோமா ? ஆம், எப்பேர்ப்பட்ட பெருமை படைத்தது இந்த திருஇரும்பூளையென்னும் ஆலங்குடி!

பார்வதியம்மையின் திருமணம்

கைலாச பருவத்தில் ஒரு நாள் பார்வதிதேவியார் தனது தோழியர்களோடு பந்தாடிக் கொண்டிருந்தார்கள். அப்படியாடியபோது ஒரு பந்து கிளம்பி ஆகாயத்தினூடே செல்லும் சூரியனுக்கும் உயரமாகப் போனபோது அதைத் திரும்பக் கையால் பிடிக்கும் பொருட்டு தேவியார் கையை உயரத் தூக்கிப் பந்தை எதிர்பார்த்து நின்றதைக் கண்ட சூரியன், அம்மையின் பந்து விளையாட்டு என்று அறியாமல் தன்னை அதேயிடத்தில் நிற்கும்படி கட்டளையிடுவதாக நினைத்து வேகமாகச் செல்லும் ஏழு குதிரைகளையும், பிடித்து நிறுத்தினான். உலகம் நடைபெறும் பொருட்டு காலத்தை அளக்குங் கருவியாய் உள்ள சூரியன் நிற்கவே உலகமுயிர்களும் நிலைகலங்கின. தேவரும் மூவரும் செய்வதறியாது நின்றனர்.

சிவபெருமான் தேவியைப் பார்த்து ''உன்னால் உலகத்திற்கு கேடுண்டாகிறது. அப்பாபத்தைப் போக்க நீ பிறவியெடுக்கக் கடவாய்'' எனக் கூற தேவி பயந்து. ''ப்ரபோ! நான் ஒரு பாபத்தையும் அறியாது செய்த பிழை யாது'' என்று கேட்க, சிவபெருமான் நடந்த வரலாற்றைக் கூறினார். தேவியும் நான் அப்படிப் பிறந்து உம்மையே நாதனாக அடைய தவம் செய்யும்போது என்னையாட் கொண்டருள வேண்டும் என்று அடிபணிந்தாள். சிவனும் அப்படியே அருள் செய்வதாக வாக்களித்தார்.

பார்வதி தேவியார் எது சிறந்த தலமென்றுய்ந்த இக்காசியாரண்யமே அவதரித்தருளக் கயிலையை விட்டு நீங்கினாள்.

சிவனருளால் ஒரு பெண்குழந்தையாய் அமுதபுஷ்கரணியில் செந்தாமரைப் பூவில் கிடந்தாள். மகாசிவபக்தரும் புத்ரப்பேறில்லாமல் சிவனை நோக்கி தவம் செய்யும் மகாமதி என்னும் அந்தணர் இங்கே தீர்த்தமாடிச் சிவாலயத் தரிசனத்திற்கு புறப்படும் சமயத்தில் குழந்தையைக் கண்டு சிவனருளென்று ஆனந்தங்கொண்டு அருகிலே சென்று குழந்தையைக் கண்டு சிவனருளென்று ஆனந்தங் கொண்டு அருகிலே சென்று குழந்தையை எடுத்து வீட்டிற்கு வந்து கற்பிற் சிறந்தவளாகிய தன் மனைவி சுசீலையிடம் கொடுத்து வரலாற்றையும் உரைத்தார். அப்புண்ணிய மங்கையும் மெய்ப் புளங்காகிதமாக குழந்தையை வாரியெடுத்தணைத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தனர்.

சிவசக்தியாகிய குழந்தை எல்லா வித்தைகளையும் ஓதாதுணர்ந்து வளர்ந்து மணப் பருவத்தையடைந்தது. தாயுந் தந்தையும் இத்தகைய பெண்ணுக்குத் தக்க கணவனை எங்கே தேடிப் பெறமுடியுமென்று மனம் வருந்திச் சிவனை துதித்துப் பெண்ணுக்குத் தக்க நாயகனைத் தந்தருள வேண்டி வருவாராயினர். இந்நிலையில் இப்பெண் தாய்தந்தையரை நமஸ்கரித்து நான் யாரையும் மணம் செய்து கொள்ள நினைக்க வில்லை. சர்வலோக நாயகனான பசுபதியை நோக்கித் தவம் செய்யவே எண்ணுகிறேன். அதற்கு நீங்கள் உத்தரவு தந்தருளவேண்டும் என வேண்டியது. தாயுந் தந்தையும் மனம் பூரித்து அப்படியே செய்வாய் என்று விடை கொடுத்தனர். உடனே இல்லத்தை விட்டு நீங்கி ஸ்ரீவிசாலம் என்னும் தலத்தை ஏற்படுதுதி ஸ்ரீ விசாலேசுவரர் என்னும் மகாலிங்கத்தை நிறுவிப் பூசித்து சிவனையே நாயகனாயடைய வேண்டுமென்று கடுந்தவம் புரிந்தாள். இப்பொழுது இவ்விடம் கோவிலுக்கு வடபுறத்தில் வடக்கு வீதிக்குப் பக்கத்தில் சந்தை வெளியென வழங்குகிறது.

கைலாயத்தில் முன் சிவபெருமான் இறைவிக்கு வாக்களித்தபடி திருமணம் செய்து தன் பக்கத்திலே வைத்தருளவேண்டுமென்று ஓர் கிழ அந்தணனாகி இத்தலத்தையடைந்து அம்பிகை தவஞ்செய்யுமிடத்திற்கு அதிதியர்க வரவே அம்பிகையும் முறைப்படி அவரை உபசரித்து அவர் ஆசியைப் பெற்றாள். வந்த அந்தணர் அப்பெண்ணின் தவத்துக்குரிய காரணத்தை வினவ பெண்ணும் தன் கருத்தைக் கூறினாள். அது கேட்டு வந்த வயோதிகர், ''பெண்ணே! நான் சொல்வதைக்கேள். நீயோ இளம் பெண். அதிரூபசுந்தரி. பார்வதிதேவிக்கு ஒப்பானவள். உன் முகம் சந்திரனைப் போல் பிரகாசிக்கிறது. ஆனால் அச்சிவன் சுடுகாட்டில் உள்ள பிணங்களுடைய சாம்பல்களை பூசிக் கொண்டிருப்பவன். அவர் கையில் பாம்புகள் கங்கணமாக விளங்குகின்றன. மேலும் அவர் கிழவர். மயானத்தில் கபாலங்களையும், எலும்புகளையும் அணிகளாக அணிபவன். புலித்தோலை போர்த்தியவன். உன் பெருமையெங்கே? அவரெங்கே? நீயோ ரத்னம் போன்றவள். அவரோ கல்லுக்குச் சமமானவர். நீ தங்கத்திற்கு ஒப்பானவள். அவரோ இரும்புக்கு சமமானவர். ஆகையால் அவர்மீது வீண் ஆசை கொள்ளாதே. அவர் உனக்கு ஏற்ற புருஷர் இல்லை'' எனச் சிவபெருமானுடைய வேடத்தையும் செயலையும் இழிவாகப் பேசியதைக் கேட்டு மனஞ்சகியாத அப்பெண் சிவனது அருசெயலையும் அவரது மேனியினழகையும் வர்ணித்து அவருக்கு சமமான கடவுளே இல்லையென்று காரணகாரியமுறைப்படி சிவபரத்வத்தை நிலைநாட்டினாள். மேலும் அதிதியானவர் வேடிக்கையாய் பேசவே, தவப்பெண்ணும் கோபமடைந்து உமது கிழத்தனமான மேனிக்கும், சிவச் சின்னத்துக்கும் மரியாதை கொடுத்து உம்மை சும்மா விடுகிறேன். நீர் உம்மிடத்திற்குப் போ'' என மொழிந்து தடாகத்துக்குச் சென்றாள். வயோதிகரும் பின்னே சென்று'' ''பெண்ணே! பெண்ணே'' என்று கையை நீட்டித் தொடவந்தபோது பெண்ணும் நடு நடுங்கி சிவபெருமானைத் தியானித்து ''ஏ, ஆபத்சகாயா! என்னைக் காப்பாற்றியருளும்'' என்று கதறியவுடன் அந்தணராய் வந்த சிவபெருமான் உருமாறி இடபாரூடராய்க் காட்சி தந்து ''தேவி! நானே அதிதியாக வந்தவன். உன் உறுதியான மனநிலையை உலகமறியும்படி திருவிளையாடல் செய்தோம். நான் முன் வாக்களித்தபடி திருமணம் செய்துகொள்ளுவோம்'' என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார்.

அம்பிகையும் தாய்தந்தையரிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறி திருமணத்திற்கு வேண்டியவை

களைச் சித்தம் செய்தனர். சிவபெருமானும் பிரம்மா, விஷ்ணு, தேவ முனிவர்களுடன் எழுந்தருளி ஏலாளகாம்பிகையைத் திருமணம் செய்தருளித் தன்னிடத்தமர்த்தியருளினார். ஸ்ரீவிசாலமெனும் இடத்தில் திருமணம் நடைபெற்றதால் இதற்குத் திருமணமங்கலமென்று பெயர் வந்தது. இங்குள்ள சிவனுக்குக் கௌரீசர் என்று பெயர்.

முசுகுந்த சக்ரவர்த்தி வழிபட்டது

முசுகுந்தர் எனும் சக்ரவர்த்திக்கு அமுதோகர் என்று ஒரு மகாமந்திரி இருந்தார். இருவரும் சிவபக்தர்கள். இந்திரன் முதலியவரும் வெற்றிகொள்ளமுடியாத பகையை வெல்ல வல்லவர் முசுகுந்தர். இந்திரன் முசுகுந்தரை வேண்டித் தன் பகைவரானப் பல அசுரர்களை வென்று பயம் நீங்கினான். இந்த மகிழ்ச்சியால் இந்திரன் மெய்மறந்தவனாய் தன்னையும் தன் இந்திராணியையும் தவிர எல்லாச் செல்வங்களையும் கொடுத்தான். இந்திரன் பூசித்த தியாகராஜாவையும் முசுகுந்தர் பெற்று ரதத்திலேறி இந்த ஆலங்குடி வழியாய்த் தன் தலைநகராகிய திருவாரூரை நோக்கி வந்து கொண்டிருந்தார். இத்தலத்தில் தேர் தடைபட்டு நின்றவுடன் ஏதோ அற்புதமிருக்கிறதென்று அறிந்து சேவகர்களைக் கொண்டு பரிசோதிக்கச் செய்தார்.

இப்படிப்பட்ட நிலையில் ஒரு வேடனும் அவன் மனைவியும் கண்ணீர் பெருக கோவென்று அலறி ஓடிவந்ததைக் கேட்டு சக்கரவர்த்தி நேரிற் சென்று விஷயத்தைக் கேட்டார். அவர்கள் தாம் உண்பதற்காக ஒரு கொடியின் அடிக்கிழங்கை வெட்டியபோது பயங்கரமான சப்தமும் நெருப்புப் பொறியும் பறந்தன. எங்கள் கண்களும் மறைந்தன. இதுவே நடந்ததென்று கூறினார்கள். அரசன் மெதுவாய் அடையாளங்கேட்டபடி அவ்விடத்தைச் சோதிக்க அதிலிருந்து ஓர் சிவலிங்கம் வெளிப்பட்டது.

சிவபக்தரான சக்ரவர்த்தி அவ்வேடர்கட்கு வேண்டிய மட்டும் பொன்னைக் கொடுத்து விட்டுத் தன் மந்திரியைப் பார்த்து இவ்விடத்தில் சிவாலய மற்றும் கிராமத்தையும் ஏற்படுத்திக் கும்பாபிஷேக நாளுக்கு திருமுகம் அனுப்பும்படி கட்டளையிட்டு அளவிலாத பொன் மூட்டைகளை அவரிடம் ஒப்புவித்து ஆரூரை அடைந்தார். அமுதோகர் சிவ திருப்பணியைச் செய்து முடித்து கும்பாபிஷேகம் காண வரும்படி அரசர்க்கு ஆளனுப்பினான். சக்ரவர்த்தியும் இங்கே வந்து சிவாலயத்தை தரிசித்து மகிழ்ந்து மந்திரியைக் கொண்டாடி கும்பாபிஷேக தரிசனம் செய்தார். மந்திரி அமுதோகர் முன் அரசன் தந்த அத்தனை செல்வத்தையும் அப்படியே முன்னே கொண்டுவந்து வைத்து வணங்கினார். அரசனர் காரணம் வினவ, மந்திரி தனது செல்வத்தைச் சிவார்ப்பணமாக விரும்பிச் செய்ததற்கு மன்னித்தருள வேண்டினார். அரசன் சிவ புண்யபலனைத் தனக்குத் தத்தம் செய்யும்படி கேட்டார். மந்திரி இணங்கவில்லை. அதிற் பாதியேனும் அல்லது கால்பங்கேனும் கொடுக்கும்படி கேட்டும் மந்திரி சம்மதியாமையால் அவர் தலையை வெட்டிவிட உத்திரவிட்டார். கொலைஞர்களும் மனம் வருந்தித் தயங்கினார்கள். மந்திரி ''நான் சிவத்தியானத்தில் இருக்கிறேன் சிவ புண்யமே யான் விரும்பியது. அதனால் எது நேர்ந்தாலும் சரி, அரசனது கட்டளையைச் செய்யுங்கள்'' என்று தேற்றினார். மந்திரி அமுதோகர் உயிர் சிவசந்நிதியை யடைந்தது. இதற்கு அடையாளமாக இத்தல முழுவதும் ''அமுதோகன் அமுதோகன்'' என்னும் சப்தமே குடிகொண்டிருந்ததை முசுகுந்தன் முதலாயினோர் கேட்டு மனம் வருந்தி அமுதோகர் அடைந்த அழிவிலாப் பதவியையும் சிவதிருப்பணியின் பலனையும் கும்பிட்டு வாழ்வாராயினர்.

''இத்தகைய சிவபக்தனைக் கொல்ல உத்திரவிட்டவன் யார்? அவனைக் கொல்லுவேன்'' என்று காளிசூலத்துடன் முசுகுந்த சக்ரவர்த்தியிடம் வரவே அவர் பயந்தவராய் முருகனைச் சரணடைந்தார். முருகனது சேனைகளையும் காளி ஒழித்துவிடவே பக்தனைக் காப்பாற்றும் பொருட்டு முருகனே வந்து காளியின் சூலத்தைப் பறித்து அவளைக் கால்விலங்கிட்டு அடக்கியருளினார். பிறகு காளி சாந்தமடைந்து தனக்குப் பலவிதமான பூசைகளைசெய்யும்படி சக்ரவர்த்திக்குக் கட்டளையிட்டருளும்படி முருகனை வேண்டிக் கொண்டபடி முருகனும் உத்தரவளித்தார். முசுகுந்தனும் காளி பயம் நீங்கி இத்தலத்தைவிட்டு

நீங்க மனமில்லாதபடி சிவதரிசனம் செய்து சிறிது காலம் தங்கினான்.

சிவபெருமான் ஒரு நாள் வயதான அந்தண வடிவத்துடன் வந்து அரசனையணுகி, ''ஏ சக்கரவர்த்தியே! நானிருப்பது காஞ்சி. இத்தல புராணத்தைப் படித்துக்கொண்டு இங்கேயே வசிப்பதற்காக வந்திருக்கிறேன். ஆனதால் எனக்கு ஒரு கிராமத்தை தானம் கொடுத்தருளும்'' எனக் கேட்டார். கேட்டபடியே சக்கரவர்த்தியும் தாரைவார்த்து சிவார்ப்பணம் செய்தார் திடிரென இவ்வந்தணர் மறையவே சக்ரவர்த்தி முதலானோர் இது சிவனுடைய திருவிளையாடல் எனப் போற்றி வணங்கினார்கள்.


சவாசனன் அரச செலல்வத்தைப் பெற்றது

முன்னொரு காலத்தில் வடநாட்டில் துச்சகன் என்னும் பெயருடன் ஒரு அரசன் இருந்தான். அவன் மிகுந்த பாபி. பஞ்சமா பாதகங்களை கொஞ்சமும் அஞ்சாமல் செய்பவன். தர்மமே அவனுக்கு விரோதி. ஜனங்களையும் உயிர்ப்பிராணிகளையும் துன்புறுத்துவதே அவனுக்கு ஆனந்தம். மற்றைய தேசத்தரகர்கள் இவனது அடாத செயலை யொழிக்கமுடியாமல் கடைசியில் ஒன்றுகூடி இவனிடம் யுத்தத்திற்கு வந்து பெருஞ் சேனையையழித்து அரசனையும் கொன்றார்கள். உலகம் மகிழ்ந்தது. யமதூதர்கள் இவனுயிரைக் கொண்டுபோய் நரகத்திலிட்டு வதைத்து மீண்டும் யமனிடம் கொண்டு வந்து நிறுத்தினார்கள். யமனும் இவனைப் பார்த்து இன்னும் உன் பாபங்களுக்குத் தக்க தண்டனை பாக்கியிருக்கிறது. ஆதலால் நீ பைசாச வடிவத்தோடு பூலோகத்தில் பலகாலம் அலைந்து திரிவாய் என்று கோபத்தோடு கட்டளையிட்டான். உடனே இவன் பைசாச வடிவத்தை யடைந்து பூவுலகில் உயிர்களை வருத்தியலைந்து பிணக்குவியலையே ஆசனமாகயிருந்து சவாசனன் எனப் பெயருடனிருந்து வரும் நாளில் தெய்வாதீனமாக ஒரு நாள் அகத்திய முனிவரை சந்தித்து அவரை அதட்டி கொன்று தின்னச் சென்றான். கருணை வடிவமான முனிவர் ஞானக்கண்ணால் இவனது பாபவடிவ வரலாற்றையுணர்ந்து ''ஏ பைசாசமே! நீ முன் ஜென்மத்தில் இப்படி அநேக உயிர்களைக் கொன்று நரகத்திலே கிடந்து இன்னும் பைசாசமாயலைகிறாய். நீ உன் பாபத்தினின்றும் விடுபட்டு முன்னேயிருந்தபடி சுகமான அரச செல்வத்தையடைய விரும்பினால் நான் கூறுவதைக் கேட்பாய்'' என்றவுடனே முனிவரது தரிசனத்தாலும் அருள்வாக்கினாலும், பக்குவப்பட்ட மனத்தினனாய் அகத்தியரை வழிபட்டு, அவர் கூறுவதை கேட்கலானான். அகத்தியரும் ''ஏ பைசாசமே! இப்பூமியில் காசியாரண்யம் என்று ஒப்புயர்வற்ற சிவதலம் ஒன்றுண்டு. அங்கே சிவபெருமான் நீலகண்டராய் ஆபத்சகாயர் எனும் பெயருடன் குருமூர்த்தியாயும் விளங்குகிறார். அங்குள்ளள அமிர்த புஷ்கரணியில் மூழ்கி அவரை அன்புடன் தரிசித்தால் உன் பாபம் நீங்கிப் பழைய மனித வடிவமும் பெற்று அரசபோகத்தையும் அடைந்து இன்புறுவாய்'' என்று அருள் செய்தார். பைசாசமும் முனிவரைப் பணிந்து, ''என் பாபத்தால் அத்தலத்தை அறியாமல் இருக்கிறேன். தாங்களே எனக்கு கருணை கூர்ந்து வழிகாட்டியருளவேண்டுகிறேன் என வேண்டினான். முனிவர் முன் செல்ல இவனும் அவருடன் சென்று இத்தலத்தில் எல்லையை அடைய அவனறியாமல் அவன் நல்லுணர்வு அடைந்தான்.

முனிவர் அமுத புஷ்கரணியில் மூழ்கி சிவச் சின்னங்கள் அணிந்து ஆலயம் வலம்வந்து சிவதரிசனம் செய்யதபடியே ஆலயம் இச்சவாசனும் செய்தபடியால் அவன் பாபம் நீங்கி நல்ல மனிதவடிவத்தையடைந்தான். பிறகு சில நாட்கள் அத்தலத்தில் தங்கி புஷ்கரணியில் நீராடி தட்சணாமூர்த்தியை தரிசித்து அப்புண்ணிய பலத்தால் தன் பழைய செல்வங்களையடைந்து அரசனாகி சிறந்த நீதியுடன் பலகாலமிருந்து பின் சிவலோகம் அடைந்தான்.

சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் சிவபெருமான் ஓடம் விட்டது

கயிலாயத்தில் சிவபெருமானிடத்திலே திருவணுகத் திருத்தொண்டராய் விளங்கும் சுந்தரமூர்த்தி தென்னாடு செய்த தவப்பயனாய், சைவந்தழைத்தோங்கத் திருமுறை விளங்க, திருத்தொண்டத் தொகையருள் செய்ய சிவாச்சார்ய மரபில் அவதாரஞ் செய்தார். திருமண காலத்தில் சிவபெருமானாலே



தடுத்தாட் கொள்ளப்பட்டு, சிவதலங்கடோறும் சென்று தேவாரம் பாடி, அளவிலாத பல அற்புதங்களையும் செய்து வருவாராயினர். இப்படியேயிருந்து வரும் நாளில், இத்தலத்திலுள்ள சிவபெருமானைத் தரிசிக்கும் பொருட்டு அடியார்களுடன் எழுந்தருளி வந்தபோது அகத்திய காவிரியாகிய வெட்டாறு வெள்ளமெடுத்தோடியது. பெருவெள்ளம் வந்ததால் ஓடக்காரனுமில்லாது போகவே, சிவதரிசனத்துக்கு இடையூறு நேர்ந்ததேயென்று யாவரும் வருந்திச் சிவனைத் தொழுதனர்.

அப்போது ஆபத்சகாயராகிய சிவபெருமான் ஓடக்காரனைப் போல வேடந்தரித்து அவ்விடத்துக்கு வந்தார். அன்பர்கள் சிவபெருமானது திருவருளே இப்படி நமக்கருள் செய்ய வந்ததென்று சொல்லி மகிழ்ந்து ஓடக்காரரை வரவேற்று ''ஓ ஓடக்காரனே! நீ ஆபத்து வேளையில் இங்கு எம்மிடம் வந்ததால் உன்னை ஆபத்சகாயன் என்றே மதிக்கிறோம். எதிர்தலத்துக்குச் சென்று திருஆலங்குடி தரிசிக்கவேண்டும். உனக்கும் சிவபுண்ணியம் தருவோம்'' என்று நாயனார் சொல்லவே ''ஐயா! சிவபக்தர்களே! நான் இப்படிச் சம்பாதிக்கும் பொருளில் என் வயிற்றுக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக்கொண்டு மீதத்தைச் சிவார்ப்பணமாகப் பூந்தோட்டத்தை விருத்தி செய்து வருபவன்'' என்று கூறினார். அன்பர்கள் ஆச்சரியமடைந்து அவரை வணங்கினர். நாயனார் உடனே ஆயிரம் பொன் கொடுத்தார். ஓடக்காரரும் மகிழ்ந்து வாங்கி அதை அப்படியே சிவார்ப்பணம் என்று சொல்லி ஓரிடத்தில் வைத்து ''ஐயா! அடியார்களின் தலைவரே ஆறு பெருவெள்ளமாயிருப்பதால், முதலில் உம்முடன் வந்த சில அன்பரை கரை சேர்ப்பேன். பின்னர் வந்து உம்மையும் மற்றவர்களையும் கரை சேர்ப்பேன்'' என்று சொல்லிச் சிலரையேற்றி ஒரு நொடிப்போதில், அடியார்க்கடியார்களை யாரும் கடக்கமுடியாத பெரும் பிறவிக்கடலைக் கடக்கச் செய்து அக்கரை சேர்த்தருளுவதைப் போல் ஆலங்குடியில் விடுத்து கண் இமைக்கு முன் மீண்டும் நாயனாரிடம் ஓடத்துடன் வந்தார்.

ஓடக்காரனை யாவரும் மெச்சினர். ஓடக்காரனும், ''எனது சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா! அன்பர்களாகிய நீங்கள் எனக்கு அடையாளமாகச் சன்மானம் கொடுக்க வேண்டும்'' என்று கேட்க, சுந்தரமூர்த்தி நாயனாரும் சிவனைப் பாடித் தாம் பெற்றிருந்த இரண்டு பீதாம்பரங்களைக் கொடுக்கவே,

ஓடக்காரர் மகிழ்ந்து பெற்றுக்கொண்டு நாயனாரையும் அடியார்களையும் ஓடத்தில் ஏற்றினார். ஓடத்தை வேகமாய்த் தள்ளிக்கொண்டு போகும்போது ஆற்றின் நடுவில் ஒரு சுழலுண்டாகும்படி மனதில் சங்கற்பித்தார். உடனே பெருஞ் சுழலொன்று ஓடத்தைக் கரகரவென்று சுற்றியது. பற்றுக்கோல் நழுவவே அதை யெடுப்பதுபோல் பாசாங்கு செய்து தடுமாறி வெள்ளத்தில் மூழ்கி தத்தளித்தார். ஓடமும் தடுமாறி வெள்ளத்தில் வழியாய் இருநாழி தூரம் சென்று திருக்கொள்ளம்பூதூரையடைந்தது. கரையினின்றோடும் படகிலுள்ள நாயனார் முதலியவர்களும் கலங்கிச் சிவனைப் பலவாறு துதித்தார்கள். திருக்கொள்ளம்பூதூர் என்னும் வில்வாரணத்திலுள்ள சிவபெருமான் அசரீரியாக நாம் உம்மை விரைவில் காப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினார். ஓடமும் சிறிது தூரம் சென்று கவிழ்ந்தது. அப்படி அமிழ்ந்த இடமே அமிழ்ந்தீசுவரம் என்ற பெயருடன் இப்போதும் விளங்குகிறது.

இப்படி சிறிது தூரம் செல்லவே ஓடம் ஒரு பாறையில் மோதி சிதறுண்டது. இவ்விடமே கப்பலுடையான் என்று பெயர் பெறும். ஓடத்துடன் திருவிளையாடல் செய்து வரும் ஓடக்காரரும், சுந்தரர் முதுலான அன்பர்களும் சேர்ந்து துக்கச் சிவபெருமான் ரிஷபாரூடராய்த் தோன்றி யாவரையும் தன் கைகளால் தூக்கிக் காப்பாற்றினார். இவ்விடம் இப்போது கைப்பத்தூர் என்ற பெயருடன் விளங்கிவருகிறது.

நாயனார் முதலிய அடியார்கள் சிவதரிசனத்தால் தங்கள் கஷ்டங்களையெல்லாம் மறந்து தம்முடன் திருவிளையாடலைச் செய்ய ஓடந்தள்ளுபவராகவும் வந்தருளிய அற்புதத்தைக் கொண்டாடிப் பலவாறு துதித்தனர். சிவபெருமான் நேரே காட்சி தந்து ''நாம் நித்ய வாசம்செய்யும் காசியாரண்யத்தை தரிசித்து தட்சிணாமூர்த்தியிடம் அருள்பெறுவீர்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வாறே காசி ஆரண்யத்தில் சிவாலயத்தைக் கண்டதும் யாவரும் நமஸ்கரித்து சிவநாமத்தையுச்சரித்து முதலில் ஞானகூபத்திலும், அமிர்தபுஷ்கரணியிலும், பிரம தீர்த்தத்திலும் நீருாடிச் சந்நிதியடைந்து சிவதரிசனம் செய்து, வலம் வந்து தட்சணாமூர்த்தியைத் தரிசித்து, துதித்து, ஞானோபதேசம் செய்தருளும்படி பிரார்த்தித்திருந்தார்.

சிவபெருமானுக்கும், தட்சிணாமூர்த்திக்கும் பலவித கைங்கர்யம் செய்துவரும் நாளில் குருமூர்த்தி சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பஞ்சாட்சரத்தையுபதேசித்தருளினார். இத்தகைய பெருமையுடைய தலத்தில் குருமூர்த்தியை தரிசித்து வழிபடுவோர்க்கு சிவஞானம் எளிதில் கைகூடும். இங்கே பஞ்சாட்சரத்தைச் ஜெபிப்போரது பலனையளவிட முடியாது.

சிலகாலம் செல்லவே சுந்தரர் முன்போலக் கைலாசத்தையடைந்தார். இத்தலத்துக்கு அவருடன் முன்பு வந்த பல பக்தர்கள் இத்தலத்தையும் குருவையும் விட்டுப் பிரிந்து செல்ல மனமில்லாதவர்களாய் இவ்விடத்திலேயேயிருந்து சிவத்தியானம் செய்துவந்தனர். இவர்கள் சுந்தரமூர்த்தி நாயனார் கைலாசத்தையடைந்ததும் அவரைப் போல் ஒரு மூர்த்தத்தைச் செய்து ஆலயத்திலே வைத்துப் பூசித்து வந்தார்கள்.

இஃது இப்படியிருக்க, திருவாரூரில் தியாகராஜர் உற்சவம் வந்தது. அப்போது அரசாண்ட ஈசசோழராஜன் மிகவும் பக்தியுடன் திருவிழாவை நடத்தும் இயல்புடையவன். சுந்தரமூர்த்தியைப் பெரிதும் பூசிக்கும் பேரன்புடையவனானதால், தனது தேசத்திலுள்ள எல்லா ஆலயங்களிலுமிருக்கும் சுந்தரமூர்த்தி உருவங்களைத் தாம் பார்க்க ஆசை கொண்டு எல்லாவற்றையும் எழுந்தருளச் செய்தான். திருவாரூராலயத்தில் எல்லா மூர்த்தங்களும் வந்து சேர்ந்தவுடன் ஈசசோழன் வந்து எல்லா மூர்த்தங்களையும் தரிசித்தான். அவைகளில் மிக சுந்தரமாய் விளங்கியது, இக்காசியாரண்ய மூர்த்தியென்று தெளிந்து இந்த மூர்த்தியையிங்கேயே வைத்து பூசித்தார்கள். தினமும் தரிசிக்க விரும்பினான். ஆகையால் மற்ற மூர்த்திகளைத் திரும்பக் கொடுக்க உத்தரவிட்டான். இந்தச் சுந்தரமூர்த்தியுடன் வந்த சிவாசார்யார் இம்மூர்த்தியை விட்டுப் பிரியமனமில்லாதவராய் சுந்தரரையே தியானித்தபடியே உறங்கினார். சுந்தரமூர்த்தி நாயனார் அவர்கள் கனவிற்றோன்றி ''ஏ, அன்பரே நான்

ஒரு குழந்தையாய் அம்மை வார்த்த வடிவத்தையடைவேன். நீர் உமது குழந்தையென்று சொல்லி என்னைத் தூக்கிக்கொண்டு காவற்காரனிடம் விவரத்தைச் சொல்லி காசியாரண்யம் போய்ச் சேரும்'' என்று கூற, அச்சிவாசார்யரும் அவ்வாறே செய்தார்கள்.

அரசன் மறுநாள் காலையில் சிவதரிசனத்துக்கு வரவே, காசியாரண்ய சுந்தரரைக் காணாமல் மனம் வருந்தி மந்திரியைக் கோபித்துக் கோயில் காவலர்களைத் தண்டிக்கும் போது தியாகேசர் அசரீரியாய் நடந்த உண்மையை உரைத்தருளினார்.

சுந்தரரை மீட்டுக்கொண்டு வந்த சிவாசார்யார் வழியில் திருக்கொளம்புதூரிலுள்ள ஒரு வடவால விருட்சத்தினடியில் சுந்தரரை வைத்துவிட்டு ஸ்நான முதலியவற்றை முடித்துப்பின்னர் சென்று மூர்த்தியை எடுக்க அது அசைக்க முடியாதபடி வேரூன்றியதைக் கண்டு வருந்திச் சென்று காசியாரண்யவாசிகளுக்கு வரலாற்றை யுரைக்க யாவரும் திரண்டு சென்று பூசித்துப் பிரார்த்தித்தனர். இவ்விடம் கூவாலடி எனவழங்கும். பிறகு, சுந்தரரையெடுத்தபோது முன்போல் அவர் எளிதாய் கைக்கு வரவே, உடனே ஒரு புஷ்ப ரதத்தையலங்கரித்து அன்பர்கள் யாவரும் ஆனந்தமாக சகல வாத்யங்களுடனும் திரும்பி வந்து இத்தலத்திலே வைத்துப் பூசித்து வருவாராயினர்.

ஆபத்சகாயேஸ்வரர்

துருவாசர் என்னும் முனிவர் சிவபூஜை செய்து சிவபிரசாதத்தை எடுத்து வருகையில், இடர் எனப்படுவதே இல்லாத இடமாகிய அமரர்கள் வதியும் பதியாகிய அமராவதியை நோக்கி ஐராவதம் என்னும் வெள்ளை யானையின் மீது இந்திரன் சென்று கொண்டிருப்பதைக் கண்டு, பிரசாதத்தை அவனுக்களித்தார். அதனை அலட்சியமாக வாங்கி இந்திரன் யானையின் மீது வைக்க, யானை அதனை கீழே தள்ளி காலால் மிதித்தது. சிவப்பிரசாதம் அபச்சாரத்திற்குள்ளானது கண்டு மிக வெகுண்டு, அவனது ஆணவத்திற்கு காரணமான செல்வ சுகபோக சம்பத்துக்கள் யாவும் ஒழியட்டுமென்று கொடுஞ்சாபமிட்டு தன் ஆசிரமத்திற்குச் சென்றார்.

தனது செல்வமெல்லாம் ஒழியக்கண்ட இந்திரனும், தேவர்களும் முனிவரிடம் வந்து மன்னிப்பு கோர, அவரும் பாற்கடலைக் கடையுங்கால் இழந்து போன செல்வங்களை மீண்டும் அதனின்றும் பெற்றுக் கொள்ளலாமென்று பகர்ந்தருள, அவ்வாறே செய்ய இந்திரன் தேவர்களுடன் புறப்பட்டான்.

இச்செய்தியறிந்த அசுரர்கள் பாற்கடலை தாங்கள் கடைந்தால் இந்திரன் செல்வமெல்லாம் தாங்களடையலாமென்று அவர்களும் பாற்கடலை கடைந்தனர். யார் பாற்கடலைக் கடைவது என்பதில் தேவருக்கும், அவுணருக்கும் போட்டி ஏற்பட்டது. இறுதியில் தேவர்களொரு பக்கமும் அசுரர்கள் ஒரு பக்கமும் நின்று, மந்தார மலையை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் சர்ப்பத்தை கயிறாக சுற்றி கடைய ஆரம்பித்தனர். அதில், இந்திரனின் மறைந்து போன செல்வங்கள் ஒவ்வொன்றாய் வந்தன. இந்த சமயம் அசுரர் தேவர் பிடியில் மூச்சுத் திணறிய வாசுகி நஞ்சைகக்கியது. அவ்விஷம் கொடிய வெம்மையுடன் உயிர்களை அழித்தது ; தேவர்களை தகித்தது; காற்றில் பரவி தாவரங்களை கரித்தது; மூச்சுத் திணறடித்தது; மனிதர்களை மூச்சுப் போகவைத்தது.

திருமால் தேவேந்திரன் உட்பட அனைவரும் ஓடிவந்து சிவபெருமானிடம் தஞ்சம் புகுந்தனர். தன்னை எண்ணாமல் அமுதம் கடைவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்ததால் தான் இக்கதி ஏற்பட்டதென்று கூறிய சிவபெருமான் அவர்களுக்கேற்பட்ட இன்னலை நீக்க திருவுளங் கொண்டார். ஆலகால விஷத்தைத் திரட்டி தனக்கு எவ்விதத் தீங்குமின்றி கொண்டு வருவதற்கு, திருக்கயிலாயத்தில் தனக்கு சிவபெருமானுக்கு திருத்தொண்டு புரிபவரும் தன் திருவடி நினைப்பில்லாமல் கணமேனும் இல்லாதவருமாகிய ஆலால சுந்தரரே தகுதியானவரென்று கருதி, அவரை அழைத்து அவ்வாலகால விஷத்தை திரட்டி வருமுாறு பணிக்க, சுந்தரரும் அவ்வண்ணமே பாற்கடல் சென்று ஆலத்தை திரட்டி வந்து பெருமானிடம் கொடுக்க அதன் தன்மையை அறிந்த சிவபெருமான் அதனை வெளியில் வைத்தால் பெருந் தீங்கு நேரிடுமென்பதை கண்டு தானே விழுங்கி எல்லா உயிர்களையும் காப்பாற்றினார்.

அகிலாண்டமும் ஆலகால விஷத்தால் அடையவிருந்த பேரழிவினின்றும், பேராபத்தினின்றும் காத்ததால் இத்தல இறைவன் ஆபத்சகாயர் என்றழைக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சி மிகவும் தொன்மைக் காலத்தில் நிகழ்ந்ததாகும். இந்த சுந்தரர்தான் பின் சிவபெருமான் அருளால் கி.பி.7ஆம் நூற்றாண்டில் சடையனார் இசைஞானியர் என்பவருக்கு பூலோகத்தில் திருநாவலூரில் பிறந்து தேவாரம் பாடி சைவத்தமிழ் மணம் பரப்பி வந்தார். அப்படி வரும்போது நிகழ்ந்தது தான் ஆலங்குடிக்கு வந்து ஆற்றில் சிவபெருமான் இவருக்காக ஓடம் விட்டதாக முன் கூறப்பட்ட நிகழ்ச்சி.

''ஏரா இரும்பூளை இடங்கொண்ட ஈசன் காரார் கடல்நஞ் சமுதுண்ட கருத்தே'' என்று ஞான சம்பந்தரும், ஆலங்குடியானை ஆலாலம் உண்டானை ஆலங்குடியானென்றாத சொன்னார் ஆலம் குடியானே யாகில் குவலயத்தோரெல்லாம் மடியாரோ மண் மீதினில்'' என்று காளமேகப் புலவரும் மொழிந்த பொய்யாமொழியினின்றும் சிவபெருமான் ஆலம் உண்ட இடம் இதுதானென்றும் அதுமுதற் கொண்டு இவ்வூர் (காசியாரண்யம்) ஆலங்குடி என்றும் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டவன் இத்தலத்தில் விஷமுண்டதால், இன்றளவும் பாம்பு தீண்டி இறந்தவர்கள் யாருமில்லை. ஆலங்குடி எல்லையில் விஷக்கடியினால் பயமில்லை.

தலப்பெயர்கள்

ஆலங்குடி என்றும் திருஇரும்பூளை என்றும் காசி ஆரண்யம் என்றும் வழங்கப்படுகின்றது. ''எழிலார் இரும்பூளை'' என்றும் ''இணையில் இரும்பூளை'' என்றும் திருஞானசம்பந்த சுவாமிகளால் போற்றப்படுகின்றது.

இது பஞ்ச ஆரண்ய தலங்களில் ஒன்றாகும். பஞ்சவாரண்ய தலங்களாவன. 1. திருக்கருகாவூர், 2. திருஅவளிநல்லூர், 3. திருஅரதைப் பெரும்பாழி, 4. திருஇரும்பூளை, 5. திருக்கொள்ளம் பூதூர். இப்பஞ்சவாரண்ய தலங்களில் திருஇரும்பூளை என்னும் ஆலங்குடி காசி ஆரண்யம் என்று சிறப்பித்துச் செப்பப்படுகின்றது. இவற்றை ஒரே நாளில் முறையே உஷத்காலம், காலசந்தி உச்சிக்காலம் சாயரக்ஷை, அர்த்தயாமங்களில் வழிபடுவது சிறப்பு எனக் கூறுவதுண்டு. இப்பஞ்ச ஆரண்ய தலங்களையும் திருஞான சம்பந்த மூர்த்தி ஒரே நாளில் தரிசித்து பேறு பெற்றார் எனவும், அவ்வாறு பஞ்சவாரண்ய தலங்களுக்கும் ஒரே நாளில் சென்று பரமனை தரிசிக்கும் அன்பர்களுக்கு முக்தி எளிதாகும் என வரலாறு வழங்கா நிற்கின்றது.

ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு ஸ்தலம் விசேஷ ஸ்தலமாய் விளங்குகிறது. அவற்றுள் ஆலங்குடி ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு விசேஷ ஸ்தலமாய் விளங்குகிறது.

இத்திருக்கோயில் எழும்புங்காலை இவ்விடத்து எங்கும் பூளைச் செடிகள் காடென மண்டிக்கிடந்தன. அதனால் இத்தலம் பூளைவனம் என்றும், இரும்பூளை என்றும் இன்றும் நவிலப்படுகிறது. இன்றளவும் பூளைச் செடிகள் ஆலயத்தின் வெளிப் பிரகாரத்திலும் ஊரெங்கும் செறிந்து நிறைந்து உள்ளன. பூளைச் செடியே தலவிருட்சமும் ஆகும். இதை ஒட்டியே இறைவரும் பூளைவனநாதர் என்றும் இரும்பூளை நாதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

தீர்த்தங்கள்

1. பிரம்ம தீர்த்தம்: தெற்கு சன்னிதியில் உள்ளது. இது நான்முகனால் உண்டு பண்ணப்பட்டது. அங்கு ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து, இந்த தீர்த்தத்தில் நீராடி வழிபட்டு, ஆலகால விஷத்தால் மறந்து போயிருந்த தனது சிருஷ்டித் தொழிலை மீண்டும் பெற்றனன். இதில் ஒரு முறை நீராடி எழுந்தால் கொடிய பாவங்கள் விலகும். பக்தியுடன் நாடோறும் நீராட பிரம்மலோக பதவி கிட்டும்.

2. விஷ்ணு தீர்த்தம்: மேற்கு திக்கில் உள்ளது. இதில் விஷ்ணு நீராடி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபட்டு மீண்டும் தமது அதிகாரத்தையும், திருமகளையும் அடைந்தார். மேலும் இலக்குமி இதனில் நீராடி சிவபெருமானை வழிபட்டு திருமாலின் திருமார்பை சேர்ந்ததால் இதற்கு ஸ்ரீ லக்ஷ்மி

தீர்த்தம் என்ற பெயருமுண்டு. இன்று இது ஆயக்குளம் என்றழைக்கப்படுகின்றது. இதில் நீராடினால் புண்ணியம் பெருகும். பாவம் விலகும். தாமரைக் கண்ணான் உலகு கிட்டும்.

3 இந்திர தீர்த்தம்: கதிரவன் உதிக்கும் திக்கில் உள்ளது. இதனை தேவேந்திரன் உணர்ந்து அதில் நீராடி சிவனை எண்ணி கிழ்திசை நோக்கி தவஞ் செய்து வந்தான். அதன் பயனால் ஆலகால விஷத்தின் தாங்கொணா கொடிய வெம்மையால் இழந்திருந்த தனது செம்மேனி வண்ணத்தையும், ஐசுவரிய செல்வங்களையும் மீண்டும் பெற்றான். இதில் நீராடி இறைவனைத் தொழுவதால் பற்பல பிறவிகளில் சம்பாதித்து வைத்திருக்கும் பாவ மூட்டைகளின் எண்ணிக்கையும், சுமையும் குறையும். இந்திரலோகம் செல்லலாம்.

4. அக்னிதீர்த்தம்: தென் கிழக்கில் அதாவது அக்கினித் திக்கில் உள்ளது. அக்கினி பகவான் உண்டு பண்ணி சிவலிங்க பூஜை செய்து தனது அதிகாரத்தைப் பெற்றான். அதனால் இந்த லிங்கத்திற்கு அக்னீசுவரர் என்ற பெயர் வழங்கி வருகிறது. இதில் நீராடுவதால் பாவம் அகலும். இவ்விடம் இப்போதுள்ள பூனாயிருப்பாகும்.

5. யம தீர்த்தம்: தெற்குத் திக்கில் உள்ளது. கூற்றுவன் குறித்தெழுந்து கண்ணுதலாரை கைதொழுது பெற்றது ஆகும். இதில் நீராடுவதால் கொடிய சாபத்தால் அகால மரணமேற்படுவதை தவிர்க்கலாம். நீண்ட ஆயுள் கிட்டும். இவ்விடம் இப்போதுள்ள நரிக்குடியாகும்.

6. நிருதி தீர்த்தம்: தென் மேற்குத் திக்கில் அதாவது நிருதி திசையில் உள்ளது. நிருதி தேவன் உண்டுபண்ணியதால் இப்பெயர் பெற்று அவன் பூஜித்த லிங்கமும் நிருதீஸ்வரன் என்று வழங்கப்படுகின்றது. இது புலவர் நத்தம் என்ற கிராமத்தில் உள்ளது.

7. வருண தீர்த்தம் : மேற்கில் உள்ளது. வருணபகவான் உண்டு பண்ணியது. அவன் பூஜித்த லிங்கம் வருணேஸ்வரர் ஆகும். இது இன்றுள்ள பூந்தோட்டமென்கிற கிராமமாகும்.

8. வாயு தீர்த்தம்: வடமேற்கில் உள்ளது. வாயு பகவான் நீராடியது. அவன் பிரதிஷ்டை செய்து பூஜித்த லிங்கம் மருதீஸ்வரர் ஆகும். இது மருதூர் என்ற கிராமத்திலுள்ளது.

9. குபேர தீர்த்தம்: வடக்கில் உள்ளது. குபேரன் உண்டு பண்ணியது. இதில் நீராடி எழுவோர் சுகத்தைப் பெறுவார்கள். இது அமராவதி என்னும் அண்மைச் சிற்றூரில் உள்ளது.

10. ஈசான தீர்த்தம்: ஈசானிய திக்கில் அதாவது வடகிழக்கில் உள்ளது. ஈசான மூர்த்தியானவர் உண்டு பண்ணி, நீராடி வழிபட்டு பேறு பெற்ற தீர்த்தம். அவர் பூஜித்த லிங்கம் ஈசானேஸ்வரர் என்று வழங்கப்படுகிறது. இது இங்குள்ள சித்தன் வாழூர் கிராமம் ஆகும்.

11. சூரிய தீர்த்தம்: கிழக்கில் சூரியேசுரம் என்ற ஊரில் உள்ளது. சூரியன் இதில் நீராடி தனது ஒளியை மீண்டும் பெற்றான். இது ஆதித்ய தீர்த்த மென்றும் அழைக்கப்படும்.

12. சந்திர தீர்த்தம்: இதுவும் கிழக்கில் உள்ளது. சோமேஸ்வரம் என்று இவ்வூர் அழைக்கப்படுகிறது. சந்திரன் தொழுது தனது தலைகளை மீளப் பெற்ற இடம்.

13. சப்த ரிஷி தீர்த்தம்: சப்தரிஷிகளும் இதில் தீர்த்தமாடி பேறு பெற்ற இடம். வாயு திக்கில் உள்ளது. கீர்த்தி, சுகம் ஆகியன இதில் நீராடுதலால் கிடைக்கும். ஞானயோகமும் கைகூடும். அகஸ்தியர், ஆங்கிரசர், களசிபர், கௌதமர், மார்க்கண்டர், புலத்தியர், வசிட்டர் ஆகிய ஏழு பேர்களும் சப்தரிஷிகள் என சிறப்பித்து ஏற்றப்படுகின்றனர்.

14. பூளை வள ஆறு: தெற்கில் கிழக்கு நோக்கி ஓடுகிறது துலா (ஐப்பசி) மாதத்தில் இதன் தீர்த்தத்தை கொணர்ந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்வர்.

15. அமிர்த புஷ்கரணி: ஆலயத்தைச் சுற்றி அகழி போன்றும் ஆலயத்திற்கு அரண் போன்றும் அமைந்துள்ளது. இதன் பெருமையை வாயினால் மொழியவும் கையினால் வரையவும் இயலாது.

அம்பிகை நீராடி அரனை அடைந்ததும் இதில் தான்; அன்பழகனும் ஆனைமுகனும் இளஞ்சிறார் உருக்கொண்டு ஆடி ஓடி நீராடி, விளையாடி களித்துப்பாடி நின்றதும் இதில் தான். சித்தரும், முத்தரும், மானிடரும், தேவரும் மற்றும் யாவரும் நீராடி பேறு பெற்றதும் இதில்தான். இதில் ஒரு முறை நீராடினால் கொடிய பாவமும் நொடியில் தொலையும், பலமுறை பக்தியுடன் நீராடி, அன்னை வயிற்றிற் பிறந்த தொல்லையாவும் நீங்கி அரனடி சேர்வர்.

16. ஞான கூபம்: சுவாமி மண்டபத்தில் உள்ளது. திருமஞ்சனக் கேணியாக உள்ளது.

ஆலயத்தின் அமைப்பு

ஊரின் மத்தியில் சுற்றிலும் அமைந்த திருக்குளமாகிய தாமரை மலர்ந்த புஷ்கரணியால் சூழப்பட்டு ஐந்து நிலை ராஜகோபுரம் தெற்கு வாயிலாக விளங்கிட இத்திரு கோயில் காட்சி தருகிறது. இராஜகோபுரத்தில் உள்ள பொம்மைகளின் தன்மையும், அம்பாள் சன்னிதியிலும் மற்றவிடங்களிலுமுள்ள கலைநுட்ப சிற்பவேலைப்பாடுகளும், இவ்வாலயத்தில் உள்ள அலங்கார கண்ணாடி மணி விளக்குகளும் இக்கோயிலின் பழம்பெரும் தன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

கோபுர வாயிலை நுழையுங்கால் அங்கே ஆதியோடந்தமாய் கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் கலங்காமற் காத்த விநாயகரைக் காணலாம். வாயிலுக்கு நேர் எதிரே தெற்கு நோக்கி, அன்னை பராசக்தி ஏலவார் குழலாம்பிகை என்ற பெயரில் அருள் பாலிக்கும் அம்பாள் சன்னிதி உள்ளது.

இரண்டாவது வாயிலைக் கடந்து உட்பிரகாரத்தை அடைந்ததும் தென்புறமுள்ள கீழ்ப் பிரகாரத்தில் சூரிய சன்னிதி உள்ளது. அடுத்து தெற்குப் பிரகாரத்தில் தேவார, திருவாசக ஆசிரியர் திருவுருவங்களும், சூரியேசர், சோமேசர், குருமோக்ஷேசுவரர், சோமநாதர், சப்தரிஷிநாதர், விஷ்ணுநாதர் மற்றும் பிர்மேசர் லிங்கங்களும் அவற்றுடன் காசி விஸ்வநாதர், விசாலாட்சி அகஸ்திய மாமுனிவரும் உள்ளனர்.

மேற்குப் பிரகாரத்தில் ஸ்தலவிநாயகரான ஆக்ஞா கணபதி சன்னிதியும், சோமாஸ்கந்தர் சன்னிதியும், அடுத்து தெய்வானை வள்ளியுடன் திருக்கோலம் கொண்டு, திருவருள் சுரக்கும் சுப்ரமணியர் சன்னிதியும் மஹாலெக்ஷ்மி சன்னிதியும் உள்ளன.

வடக்குப் பிரகாரத்தில் நவக்கிரகங்கள் சன்னிதியுள்ளது. சபாபதி, சிவகாமி அம்மை, சம்பந்தர், அப்பர், மணிவாசகர் ஆகியோர் உள்ளனர். சனகாதி முனிவர் நால்வருடன் உற்சவ தட்சிணாமூர்த்தி உள்ளார் கிழக்குப் பிரகாரத்தில் வடபுறத்தில் பைரவர், சந்திரன் ஆகியோர் சன்னதியும் உள்ளன.

மகாமண்டபத்தில் நந்தி, பலிபீடமும், துவாரபாலகரும், கருவறையில் அகிலாண்டமும் படைத்துக் காத்து, ரட்சிக்கும் சர்வேசுவரன் ஆபத்சகாயராய் கிழக்கு நோக்கி உள்ளார். அர்த்த மண்டபத்தில் பள்ளியறை சொக்கர், போக சக்தி அம்மன் உள்ளார்கள்.

தெற்கு கோஷ்டத்தில் விக்னேஷ்வரரும் இத்தலத்து விசேஷ மூர்த்தியாகிய ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தியின் சன்னதியும் காணலாம். மேற்கு கோஷ்டத்தில் ஸ்ரீ அண்ணாமலையார் உள்ளார். வடக்கு கோஷ்டத்தில் பிர்மதேவன், துர்க்கையம்மன் உள்ளனர். அங்கு சண்டிகேசுவரர் சன்னிதியும் ஞானகூவமும் உள்ளன.

கீழ்ப்புறம் திருமாலை கட்டி மண்டபமும், வசந்த மண்டபமும், மேற்கு நோக்கி காட்சிதரும் சனீஸ்வரர் சன்னிதியும் த்வஜ கணபதி, கொடிமரம், நந்தி, பலி பீடமும், கீழ்புறம் யாக, பாகசாலைகளும் கிழக்குத் தருவாயிலும், தென்புறம் நாகர் சன்னிதியும் புதிய நந்தவனமும் உள்ளன.

சுற்றுக்கோயில்கள்

கிழக்குக் கோபுரவாயிலுக்கு வடகிழக்கில் ஸ்ரீ பாதாள பைரவி காளியம்மன் கோயிலும், தென் கிழக்கில் ஸ்ரீ சப்தகன்னியர் ஆலயமும், தெற்கு கோபுர வாயிலுக்கு கீழ்புறம் மேற்குநோக்கி ஸ்ரீ கல்யாண சாஸ்தா ஆலயமும் அதற்கு சற்று தள்ளி கிழக்கு நோக்கி ஸ்ரீ கல்யாண வீரபத்திரர் ஆலயமும் தக்ஷன் பிள்ளையார் சன்னதியும் இதன் சுற்றுக் கோயில்களாக உள்ளன.

தெற்கு நோக்கி திகழும் இராஜகோபுரத்தை வணங்கி உள்ளே நுழையுங்கால், அங்கே ஆதியும் அந்தமுமாய், பிரணவ சொரூபமாய் போகாத் துயரமெல்லாம் போக வைக்கும் கலங்காமற் காத்த விநாயகர் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். அவருக்கு முதல் வணக்கம் செலுத்தி வழிபட்ட பின்பு ஆலயத்துள் பிரவேசிக்க வேண்டும்.

இவ்வாலய தரிசனப் பயன்கள்

1. இத்தலத்து எழுந்தருளி இருக்கும் கலங்காமற் காத்த விநாயகரை தொடர்ந்து பல வாரங்கள் வந்து தொழுதால், சத்துருக்கள், எதிரிகளின் அச்சுறுத்தல்கள் குறையும்; வம்பு வழக்குகள் அகலும்.


2. குருமூர்த்தியாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி கடவுளை ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் தொழுவோர்க்கு, விரைவில் திருமணம் நிகழும்; புத்திரப் பேறு இல்லாதவர்க்கு புத்திரபாக்கியம் கிட்டும். மேலும், ''குரு பார்க்க தோஷம் இல்லை'' என்பதால் வியாழன் (குரு) தோஷம் இத்தல தக்ஷிணாமூர்த்தியை வழிபட விலகும். சிவஞானம் கிட்டும். இது குரு ஸ்தலமாதலால் சகல தோஷங்களும் நிவர்த்தியாகும். கிரகங்களின் தலைவன் வியாழனுக்கு திருச்செந்தூரும், ஆலங்குடியும் விசேஷ ஸ்தலங்களாகும்.

3. இங்கு எழுந்தருளி இருக்கும் அகஸ்திய முனிவரை தொடர்ந்து வந்து சிந்திப்பதால் பேய், பிசாசு, அசுத்த ஆவிகளின் பிடிப்பினின்று நீங்கலாம். அகஸ்தியரை வழிபட்ட பின்பு முருகப் பெருமானை வணங்க வேண்டும்.

4. பரமேஸ்வரி தவஞ்செய்து கொண்ட தலமாதலால், இங்குள்ள ஏலவார் குழலாம்பிகையை தொழுவதால் விரைவில் திருமணம் நடக்கும். அன்னை அதற்காக அருள்பாலிக்கிறார்.

5. இங்குள்ள நாகர் சன்னிதிக்கு தோஷ நிவர்த்தி (பரிகாரம்) செய்து கொண்டால் நாகதோஷம் விலகி நன்மை ஏற்படும்.

6. விஷப் பாம்புகள், ஜந்துக்கள் கடித்துவிட்டால், எங்கு கடித்தாலும் அங்கிருந்தபடியே இங்குள்ள சர்வேஸ்வரனாகிய ஆபத்சகாயரை நினைத்து உயிர்ப்பிச்சைக் கேட்டால் நாம் உயிர் பிழைக்கலாம். பிழைத்த பின் இங்கு வந்து ஆண்டவனை தரிசிக்கலாம்.



ஆலங்குடி ஆலய அமிர்த புஷ்கரணியிலிருந்து கோவிலின் தோற்றம்
(வலது பக்கம்) கோவிலில் உள்ள ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி - மூலஸ்தானம்

உத்தமர் கோயிலில் சப்தகுரு

நவக்கிரக குருவின் அருள்பெற சப்தகுருக்கள் என்று அழைக்கப்படும் ஏழு குருபகவான்களை வழிபடுவது விசேஷம். ஒவ்வொரு குருவை ஒவ்வொரு இடத்தில் வழிபடாமல் எல்லா குருக்களையும் ஒரே இடத்தில் வழிபடத்தக்க அளவில் அமைந்த விசேஷமான ஸ்தலம் உத்தமர்கோயில் ஒன்று மட்டும்தான். இத்தகைய அமைப்பு இந்திய நாட்டில் வேறு எங்கும் இல்லை ஏன்று பெருமையோடு கூறிக்கொள்ளலாம்.

சப்த குரு ஸ்ரீ காண்டேய்யா என்ற ஸ்லோகத்தின்படி ஏழு குருபகவான்கள் உள்ளனர் என்று அறியப்படுகிறது.

1. தேவகுருவான பிரகஸ்பதி
2. அசுரகுருவான சுக்ராச்சாரியார்
3. தந்தைக்கு உபதேசம் செய்த ஞானகுரு சுப்ரமண்யர்
4. பரப்ரம்ம குரு பிரம்மதேவர்
5. விஷ்ணுகுரு வரதராஜ பெருமாள்
6. சக்தி குரு சவுந்தர்யநாயகி
7. சிவகுரு தட்சிணாமூர்த்தி

இந்த ஏழு குருநாதர்களையும் குருப்பெயர்ச்சியின் போதும் குரு பரிகாரம் செய்து கொள்ளும் போதும் தட்சிணாமூர்த்தியை வழிபடுவதுடன் நவக்கிரக குருவின் அதிதேவதையாகிய பிரம்மா உள்ளிட்ட மற்ற குருபகவான்களையும் வணங்குவது நல்லது. உத்தமர் கோயிலின் இந்த ஏழு குருபகவான்களையும் ஒரே இடத்தில் வணங்கமுடியும்.

அருள்மிகு உத்தமர்கோயிலில் ஒரே வளாகத்தில் முப்பெரும் தேவியருடன் மும்மூர்த்திகளும் கோயில் கொண்டிருக்கிறார்கள்.

படைத்தல் கடவுளான பிரம்மதேவன் ஞானசரஸ்வதியுடன் எழுந்தருளியிருக்கிறார்.

காத்தல் கடவுளான மகாவிஷ்ணு பூரணவல்லித்தாயாருடன் புருஷோத்தம பெருமாள் என்ற திருநாமத்துடன் கோயில் கொண்டிருக்கிறார்.

சிவபெருமான் சவுந்தர்ய பார்வதியுடன் பிச்சாண்டவராக எழுந்தருளியிருக்கிறார்.

கதம்பவனம், கரம்பனூர், ஆதியாபுரம், பிரம்மபுரி, நீபவனம் எனப்பலபல புராணப் பெயர்களுடைய இந்த ஊரில் சப்தரிஷிகளும் அவர் மனைவியரும் அறிவிழந்து நின்றபோது அவர்களை நெறிப்படுத்த சிவபெருமான் பிச்சாண்டவராகத் தோன்றினார். அதனால் பிச்சாண்டவர் கோயில் என்று பெயர்.


காத்தல் கடவுளாகிய பெருமாள் புருஷோத்தமர் என்ற பெயரில் பள்ளி கொண்ட கோலத்தில் காட்சி தருகிறார். இவரது இடப்புறம் தனி சன்னிதியில் பிச்சாடனரின் பிரம்மஹத்தி தோஷம் நீங்க அவரது பிச்சைப்பாத்திரம் பூரணமாக நிரம்பும் அளவுக்கு அன்னமிட்ட பூரணவல்லித்தாயார் கோயில் கொண்டு அருள்பாலிக்கிறார். இப்படி மும்மூர்த்திகளுடன் மற்ற குருநாதர்களும் கோயில் கொண்டுள்ள உத்தமர்கோயில் வழிபடத்தக்க ஒரு தலம், எல்லா வகையான குருதோஷங்களும் நீக்கும் திருத்தலமாகும்.



சிவகுரு - தட்சிணாமூர்த்தி



பிரம்மகுரு - பிரம்மா



விஷ்ணு குரு - வரதராஜப் பெருமாள்



சக்தி குரு - சவுந்தர்யபார்வதி



ஞானகுரு - சுப்பிரமணியர்



தேவ குரு - பிரகஸ்பதி



அசுர குரு - சுக்ராச்சாரியார்

வியாழன் வழிபட்ட தலங்கள்
(வியாழ பகவான் தலம்)



தஞ்சை மாவட்டம் திருக்கருகாவூருக்கு அருகில் உள்ள திருக்கோயில் திட்டக்குடி . இங்கே சுகந்த குந்தளேச்வரியுடனான வசிஷ்டேச்வரர் கோயில் உள்ளது. இது நவக்கிரகங்களில் ஒன்றான வியாழன் வழிபட்டு அருள்பெற்ற திருக்கோயில்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இங்கே குருபகவானுக்கு தனிக் கோயில் இருக்கிறது. கோயிலின் முன்புறத்தில் உள்ள திருக்குளம் புனிதம் பொருந்தியது. இத்திருக்குளத்தில் நீராடி சுவாமியையும், அம்மனையும் முறைப்படி வழிபட்டு குருபகவானை அர்ச்சித்தால் குருவின் அருள் கிடைப்பது நிச்சயம் என்பது பக்தர்கள் அனுபவித்திருக்கின்ற உண்மை.

குருவால் விளையும் தோஷங்கள் நீங்க தரிசிக்க வேண்டிய சிவாலயங்களில் ஒன்று தென்குடித் திட்டை. தஞ்சாவூரிலிருந்து திருக்கருகாவூர் போகும் வழியில் உள்ள பாடல் பெற்ற ஸ்தலமாகும். வசிஷ்டேஸ்வரர் என்பது சுவாமியின் பெயர்.

தென்குடித்திட்டையின் தல மகாத்மியத்தை விளக்கும் வடமொழி நூல் ஒன்று உண்டு. இந்த நூல் வசிஷ்டேஸ்வரரை பல்வேறு கிரகங்கள் குறித்து அருள்பெற்ற வரலாறுகளை விரிவாகச் சொல்லியிருக்கிறது.


நவக்கிரகங்களுள் குரு என்று சொல்லப்படும் பிரகஸ்பதி சிவபெருமானை பூஜித்து கோயில் கொண்டுள்ள திருத்தலம் இது. வசிஷ்டேஸ்வரர் கோயிலில் குரு பகவானுக்கு தனி கோயில் உண்டு. வியாழக்கிழமைகளில் விசேஷ வழிபாடுகள் நடக்கின்றன. குருப்பெயர்ச்சி, மகாமகம் போன்ற குருவோடு தொடர்புடைய விசேஷ நாட்களில் இங்கே கூட்டம் அலைமோதும்.



குருபகவான் மட்டுமல்ல, சூரியனின் மகனான எமன், சனீஸ்வரன், நாகராஜன், ராகுவின் மகன் சுமாலி ஆகியோர் இத்தலத்து இறைவனை வழிபட்டதாக புரணாத் தகவல்கள் சொல்லுகின்றன.

தங்களிடம் ஓரவஞ்சனையாக நடந்து கொண்ட சிற்றன்னை ஸம்ஞாவை அச்சுறுத்த யமன் சினங்கொண்டு தன் காலைத்தூக்கினான். அதைக் கண்ணுற்ற சிற்றன்னனை தூக்கிய கால் துண்டித்துக் கீழே விழட்டுமெனச் சபித்தாள். இந்நிகழ்ச்சியை யமன் தன் தந்தை சூரியதேவனிடம் வணக்கமாகத் தெரிவித்தான்.

பின்னர் அன்னையின் சாபத்திலிருந்து விமோசனம் பெற உபாயத்தைக் கூற வேண்டுமென்று தந்தை சூரிய தேவனை



வேண்டினான் யமன். அப்போது சூரியன் யமனிடம் கருணை கொண்டு உபாயத்தை உரைத்தான். தாயின் சாபம் எக்காலும் பொய்க்காது எனவும் அதன் பரிகாரமாக, பரமேஸ்வரனால் பக்தர்களைப் பாதுகாக்கவே படைக்கப்பட்டு, பாரதத்தில் தென்னாட்டில் தண்டகவனத்தில் திருத்தென்குடித் திட்டையெனும் திருத்தலம் உள்ளது என்றும் அந்த திவ்ய க்ஷேத்திரத்திற்குச் சென்று, அங்கு எழுந்தருளி விளங்கும் வேதங்களால் பாராட்டப்பட்ட ஜோதி மகாலிங்கத்தைப் பக்தியுடன் வழிபட உன் அன்னையின் சாபம் அகலும் என்றும் கதிரவன் உபதேசித்தான்.

தந்தையின் ஆணையின்படியே யமன் திட்டை க்ஷேத்திரத்தையடைந்து பரமேஸ்வரனின் ஏகாக்ஷர மந்திரத்தை ஜபித்தவாறு 12 ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தான். மகிழ்ந்த மகேசன் யமன் முன் தோன்றி, தாயின் சாபத்திலிருந்து யமனை மீட்டான். சின்னஞ் சிறிய கிருமிகள் உன்பாத மாமிசத்தை எடுத்துக்கொண்டு பூமிக்குச் செல்லப்போகின்றன. பின் உன்பாதம் முன் போல் முழுமை பெறும் என அருளினான். ஏகாக்ஷர மந்திரத்தை ஜபித்து நீ சித்திபெற்றதால் நீயும் அம்மந்திர தேவதையாக ஆவாய் எனவும் அருள் வழங்கினான். மேலும் யமனைத் தென்திசைக்கு அதிபதியாகவும் தேவேந்திரனுடன் ஒத்தவனாகவும் புண்யபாவங்களுக்கு ஏற்ப ஜீவர்களுக்கு பலனளிக்கும் தர்மராஜனாகவும் அமைத்து அருள் வழங்கினான்.

தந்தையின் ஆணைப்படி, சனீஸ்வரன் திட்டைத் திருத்தலம் அடைந்து வேதமுறைப்படி ஸ்வம்யூதேஸ்வரரைப் பூஜித்து ஆயிரம் ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தான். அவன் முன்தோன்றிய மகேஸ்வரன் சனீஸ்வரனைக் 'கிரஹநாதனாக' அமர்த்த அனுக்கிரஹித்தான். தென்குடித்திட்டையில் அருள்பாலித்து வரும் சிவனும் அம்மையும் ஏராளமான பக்தர்களுக்கு அருள் செய்தவர்கள்.

நவக்கிரகங்களுள் முக்கியமான இடத்தை பெறும் கிரகம் குரு எனப்படும். வியாழ கிரகம் ஆகும். வியாழன் 40க்கும் மேற்பட்ட நல்ல பலன்களை அள்ளிக் கொடுக்கக்கூடியவர் என்பதை ப்ருகத் ஜாதகம், •ஜாதக அலங்காரம் காளிதாசர் எழுதிய உத்தரகாலாமிர்தம் முதலிய நூல்கள் சொல்கின்றன. குரு பார்க்க கோடி நன்மை என்பார்கள். குருவின் பார்வை இருந்தால்தான் கடாட்சம் இருந்தால் தான் கல்யாணம் சுபமாக நடக்கும். இனிமையான இல்லற வாழ்வு அமையும். நல்ல மக்கட்பேறு கிடைக்கும். மக்கட்பேறு என்பது சூரியன், குரு, சந்திரகடாட்சத்தால் கிடைக்கக்கூடிய நன்மையாகும்.

குரு கொடுக்கக்கூடியவர். கொடுக்கும்போது மெல்ல மெல்ல கொடுப்பது அவர் வழக்கம். குரு வளையம் எனப்படும் வியாழ வட்ட விநோதம் கஜராஜகேசரி யோகம், முதலிய பல நல்ல அமைப்புக்களும் சிலர் ஜாதகத்தில் உண்டு. இதற்கு நேர்மாறாக...

சிலருடைய ஜென்ம ஜாதகத்தில் குருவால் தோஷங்கள் அமைவதும் உண்டு. குரு எந்த ராசியில் இருந்தாலும் ஏதாவது ஒரு கிரகத்தோடு சேர்ந்திருப்பதுதான் நன்மை. மாந்தியாக இருந்தால் தனித்திருந்தால் தான் நன்மை. குருவோ ஜாதகத்தில் தான் மட்டும் தனியாக இருந்தால் அந்த ஜாதகரை படாத பாடு படுத்திவிடுவார். அந்தணன் தனியனாகில் அவதிகள் பலவும் உண்டாம் என்று ஜோதிட நூல்கள் சொல்கின்றன. இப்படி இருக்கும் ஜென்ம ஜாதகக்காரர்கள் தவறாமல் பரிகாரம் செய்து கொள்ளவேண்டும். பரணி, பூரம், பூராடம் நட்சத்திரக்காரர்களுக்கு குரு தசை 6வது தசை. அதை மாரக தசை என்பார்கள். அந்த ஜாதகருக்கு கெட்டியான ஆயுள் இருந்தால் அந்த நேரத்தில் மரணம் சம்பவிக்காது என்றாலும், பினி, நோய் பாதிப்புகள் தொடர்ந்து துன்புறுத்திக் கொண்டே இருக்கும். இந்த ஜாதகர்களும் பரிகாரங்கள் செய்து கொள்ளவேண்டும்.

குரு தோஷங்களில் ரொம்பவும் கடுமையானது கேந்திராதிபத்ய தோஷமாகும். மிதுனம், கன்னி, தனுசு, மீனம் என்கிற நான்கு ராசிகளை லக்கினமாக கொண்டு பிறந்தவர்களுக்கு குருவால்

கேந்திராதி பத்ய தோஷம் ஏற்படும். இவர்கள் தொல்லை மேல் தொல்லைகளை சந்தித்து மனமும் உடலும் சலித்துப்போன நிலையில்தான் வெற்றிகளைச் சந்திப்பார்கள்.

மிதுன லக்கினக்காரர்கள் குடும்பம் மற்றும் ஜீவன வகையில் மிகப்பல சோதனைகளை சந்திப்பார்கள். சோர்ந்து போன நிலையில் சில வெற்றிகளை காண்பார்கள். கன்யா லக்கினக்காரர் களுக்கு 4-1க்குரிய குரு 4ம், 7ம் இல்லங்களுக்குரிய பலன்களை எளிதில் அனுபவிக்க விடமாட்டார்.

தனுசு லக்கினக்காரர்கள் வியாபாரம், பிரயாணம் மற்றும் வாகன ரீதியான நலன்களை சுலபத்தில் அடைந்துவிட முடியாது. மீன லக்கினக்காரர்கள் ஜீவன வகையில் மிகப்பல சோதனைகளை சந்திக்க வேண்டியிருக்கும். கேந்திராதி பத்ய தோஷக்காரர்கள் விடாமல் பரிகாரம் செய்வது நல்லது.

குருவினால் சகடை தோஷம் என்ற தோஷம் விளைவதுண்டு. சந்திரனும், குருவும் இதற்கு காரணம். வண்டிச்சக்கரத்தில் ஆரக்கால்களில் ஏற்ற இறக்கங்கள் இருப்பதுபோல இவர்கள் வாழ்க்கையில் ஏற்றமும் இறக்கமும் இருந்து கொண்டே இருக்கும். சகட தோஷக்காரர்கள் பரிகாரம் செய்துகொள்வது நல்லது

ஒவ்வொரு வருடமும் குரு பெயர்ச்சி நடக்கும் ஒவ்வொரு பெயர்ச்சியின் போதும் அப்பெயர்ச்சி சில ராசிகளுக்கு நன்மை, சில ராசிகளுக்கு தீமை என்று சொல்லியிருப்பார்கள். குருப்பெயர்ச்சி யாருக்கு பாதகமாக இருக்கிறதோ அந்த ராசிக்காரர்கள் பரிகாரம் செய்வது நல்லது.

பரிகாரம் செய்துகொள்ள வேண்டியவர்கள் எப்படி பரிகாரம் செய்வது, யாருக்கு பரிகாரம் செய்வது, எங்கே பரிகாரம் செய்வது என்றெல்லாம் தம்முடைய ஜாதகத்துக்கு ஏற்ப அலசி ஆராய்ந்த பின்னால்தான் செயல்படவேண்டும். ஒரு நோய் என்றால் அந்த நோய்க்கு என்று மருந்து சாப்பிட்டு விடமுடியாது. நோய் எது, அந்த நோய் எதனால் வந்தது? அதற்கு அடிப்படை என்ன? அடிப்படைக்காரணத்தை எந்தெந்த வழிகளில் சரி செய்யலாம்? அந்த வழிகளில் இந்த நோயாளிக்கு ஏற்ற முறை எது என்பதை ஆராய்ந்த பின்னர்தான் மருந்து கொடுக்கவேண்டும். இதுவே தமிழ் நெறி. மருந்து கடைக்குப் போய் வியாதியின் பெயரைச் சொல்லி மருந்து சாப்பிட்டு விட்டால் நோய் நீங்குவதை விட பக்கவிளைவுகளைத்தான் சந்திக்கநேரிடும்.

> நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்ப செயல்.

என்பது திருக்குறள்.

மருந்து சாப்பிடுவதற்கு நோய்நீக்கம் பெறுவதற்கு மேலே சொன்ன விதிமுறைகள் ஜாதக தோஷ பரிகாரத்திற்கும் பொருந்தும். ஜாதகத்தினுடைய தன்மைக்கு ஏற்பதான் பரிகாரங்கள் செய்து கொள்ள வேண்டும். அந்த நேரத்தில் மற்ற கிரகங்களையும் மனதிலே கொண்டு தக்க பரிகாரத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். குருதோஷங்களை நீங்குவதற்கு குருவுக்குத்தான் பரிகாரம் செய்யவேண்டுமா? ஏழு பேருக்குச் செய்யலாம். யார் யாருக்குச் செய்வது. எந்தத் தலத்திற்குச் செல்வது என்றால்? திருச்சிக்குப் பக்கத்தில் உள்ள உத்தமர் கோயிலுக்குச் செல்ல வேண்டும். அத்திருக்கோயிலில் தான் ஏழு குரு சன்னதிகள் உள்ளன. இதுபோன்று நம் இந்தியாவில் வேறு எங்கும் இல்லை எனலாம்.

திருலோகி தலம்

நவக்கிரகங்களில் ஒருவரான பிரஹஸ்பதி எனப்படும் குருபகவான் சிவனை வழிபட்ட தலங்கள் குருவின் அருள்பெற வழிபட வேண்டிய தலங்களாகும்.

குடந்தைப் பகுதியில் உள்ள ஊர் திருலோக்கி. திரைலோக்கியன் மகாதேவி சதுர்வேதிமங்கலம் என்பது இதன் பழைய பெயர். ராஜேந்திர சோழன் காலத்தில் கட்டப்பட்ட கோயில் உள்ள ஊர். திருப்பனந்தாளில் இருந்தும் சுக்கிரத் தலமான கஞ்சனூரில் இருந்தும் இந்த ஊருக்குச் செல்லலாம்.

இங்குள்ள சிவாலயத்தில் ஆதிகுரு எனப்படும். குருபகவான் இருக்கிறார். சிற்பவியல் அடிப்படையில் ஆராயும் போது பல்லவர் காலக் கலையமைப்பு கொண்ட திருவுருவம் இது.

தென்குடித்திட்டை நவக்கிரக குருவுக்கு தனிச்சன்னதி உ ள்ள திருக்கோயில்களில் ஒன்று.


கும்பகோணத்தில் உள்ள ஆலயங்களில் ஒன்று ஏழைச்சோமேஸ்வரன் கோயில். வியாழச் சோமேஸ்வரன்தான் அப்படியாகிவிட்டார். மிகத் தொன்மையான கோயில், பிரஹஸ்பதி, சிவபெருமானை வழிபட்டு அவர் அருளால் தேவகுருவாக அருள்பெற்ற தலம் இது.

கொண்டீஸ்வரம் என்ற கோயில் நன்னிலத்துக்கு அருகில் உள்ளது. கார்த்திகை மாத வியாழக்கிழமைகளில் கொண்டீஸ்வரத்துச் சிவபெருமானை வழிபடுவது சிறப்பு.

தஞ்சாவூர் - திருக்கருகாவூர் சாலையில் உள்ளது. தென்குடித்திட்டை நவக்கிரக குரு வழிபட்ட தலம். குருபரிகாரத் தலம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நவகைலாசத் தலங்களில் மொரப்பநாடு கைலாசநாதர் கோயில் குரு பரிகாரத் தலங்களில் ஒன்று.

தொண்டைமண்டலத்தில் உள்ள கோவிந்தவாடி அகரம் இலம்பயங்கோட்டூர் முதலியவை குருபரிகாரத் தலங்கள். பக்தர்கள் தம் வசதிக்கேற்ப இப்பரிகாரத் தலங்களுக்குச் செல்லலாம். அருகில் உள்ள சிவன் கோயில்களில் தட்சிணாமூர்த்தியை பக்தி சிரத்தையுடன் வழிபட்டால் போதும். நவக்கிரக குரு தோஷங்கள் நீங்குவது நிச்சயம். இன்னும் பல தலங்களை வியாழபகவான் வழிபட்டதாக தலபுராணங்கள் கூறுகின்றன. அவைகளை தரிசித்தல் மிகவும் முக்கியமாகும்.



புனித தீர்த்தவாரி குளம் —



குடந்தை சோமேஸ்வரன் கோவில் தெட்சிணாமூர்த்தி



திருலோகி சுந்தரேஸ்வரர் கோவில் ஆதிகுருபகவான்

வி

பிரகஸ்பதி (வியாழன்/ குரு) வழிபாடு
(மூலபாடம்)

WORSHIP OF BRHASPATI

बृहस्पतिग्रहावाहनम्।।

बृहस्पते गृत्समदो बृहस्पतिः त्रिष्टुप्।
गृत्समद ऋषिः बृहस्पतिर्देवता। त्रिष्टुप् छन्दः।

बृहस्पते अति यदर्यो अर्हाद्युमभाति द्विक्रतुमज्जनेषु। यद्दीदयच्छवसऋत प्रजात तदस्मासु द्रविणं धेहि चित्रम्।।

इन्द्र श्रेष्ठानि गृत्समद इन्द्रः त्रिष्टुप्।

इन्द्र श्रेष्ठानि द्रविणानि धेहि चित्तिं दक्षस्य सुभगत्वमस्मे। पोषं रयीणामरिष्टिं तनूनां स्वाद्मानं वाचस्सुदिनत्वमन्हाम्।

ब्रह्मणा ते ब्रह्मयुजा युनज्मि हरी सखाय सधमाद आशू। स्थिरं रथं सुखमिंद्राधि तिष्टन्प्रजानन्विद्वानुपयाहि सोमं।।

भगवान् बृहस्पतिग्रहं कनकवर्णं कनकगन्धं कनकपुष्पं कनकमाल्यांबरधरं कनकछत्रध्वजरथपताकादिशोभितं दिव्यरथसमारूढं मेरुं प्रदक्षिणीकुर्वाणं पूर्वाभिमुखं पद्मासनस्थं चतुर्भुजं दण्डाक्षमालाधारिणं सिंधुद्वीपदेशाधिपं आंगीरसगोत्रं धात्रसंवत्सर वैशाख कृष्ण चतुर्दश्यां भरणिनक्षत्रे जातं धनुमीनराश्याधिपं गुरुवासरप्रयुक्तं किरीटिनं सुखासनस्थं पत्नीपुत्रपरिवारसमेतं ग्रहमंडले प्रविष्टं अस्मिन्नधिकरणे सूर्यग्रहस्य उत्तरदिग्भागे दीर्घचतुरश्राकारमंडले भूः

बृहस्पतिग्रहं मावाहयामि।
भुवः बृहस्पतिग्रहमावाहयामि।
सुवः बृहस्पतिग्रहमावाहयामि।
भूर्भुवस्सुवः बृहस्पतिग्रहं आवाहयामि। स्थापयामि। पूजयामि।।

बृहस्पतिग्रहस्य दक्षिणदिग्भागे। इन्द्रमावाहयामि। स्थापयामि। पूजयामि।
बृहस्पतिग्रहस्य उत्तरदिग्भागे ब्रह्माणमावाहयामि। स्थापयामि। पूजयामि।।

बृहस्पतिजपम्।।

अस्य श्री बृहस्पतिमहामन्त्रस्य। गृत्समद ऋषिः। जगती छन्दः। बृहस्पतिर्देवता।
बृहस्पतिग्रहप्रसादसिध्यर्थे जपे विनियोगः-
गुरवे अंगुष्टाभ्यां नमः हृदयाय नमः।
वाक्पतये तर्जिनीभ्यां नमः शिरसे स्वाहा।
गीर्वाणवंदिताय मध्यमाभ्यां नमः शिखायै वषट्।
वरदाय अनामिकाभ्यां नमः कवचाय हुं।
सुरार्चिताय कनिष्ठिकाभ्यां नमः नेत्रत्रयाय वौषट्।
कमंडलुधराय करतलकरपृष्ठाभ्यां नमः अस्त्राय फट्।
भूर्भुवस्सुवरोमिति दिग्बन्धः।

ध्यानम्।।

वराक्षमालिकादण्डकमंडलुधरं विभुं
पुष्परागांकितं पीतं वरदं भावयेद्गुरुं।।

Reference: "Navagraha Kosha" - Mysore. Karnataka State.

लमित्यादि पंचोपचार पूजां कुर्यात्। ॐ बृहस्पते धेहि चित्रं यथा शक्ति जपित्वा पुनः अंगन्यास करंन्यासं कृत्वा दिग्विमोचनं कुर्यात्॥

बृहस्पतिकवचम्॥

अथ बृहस्पति कवचस्तोत्र महामन्त्रस्य।

ईश्वर ऋषिः। अनुष्टुप् छन्दः। बृहस्पतिः देवता। ह्रां बीजं। ह्रीं शक्तिः। ह्रूं कीलकं। बृहस्पतिग्रह प्रसादसिध्यर्थे जपे विनियोगः। ह्राँ इत्यदि अंगन्यासः। भूर्भुवस्सुवरोमिति दिग्बंधः॥

ध्यानम्॥

रक्तकांचनवर्णाभं चतुर्भुजसमन्वितम्।
दणडाक्षमालिकाहस्तं कमंडलुवरान्वितम्॥

पीतांबरधरं देवं पीतगन्धानुलेपनम्।
पुष्परागविभूषाढ्यं विचित्रमकुटोज्वलम्॥

स्दर्णाश्व रथमारुहय पीतध्वजसुशोभितम्।
मेरुं प्रदक्षिणं यांतं गुरुं देवं नतोऽस्म्यहं॥

अभीष्टवरदं देवं सर्वज्ञं सुरपूजितम्।
सर्वकार्यार्थसिध्यर्थं प्रणमामि गुरुं सदा॥

बृहस्पतिः शिरः पातु ललाटं पातु मे गुरुः।
कर्णौ सुरगुरुः पातु नेत्रे मेऽभीष्टदायकः॥

नासां नतामरः पातु जिह्वां मे वेदपारगः।
मुखं मे पातु सर्वज्ञः भुजौ भयविनाशनः॥
कण्ठं मे वरदः पातु कक्षौ गीर्वाणपूजितः॥

वक्षो वागीश्वरः पातु कुक्षिं क्रतुभुजां गुरुः॥

नाभिं मे पातु नीतिज्ञः कटिं कल्मषवर्जितः।
ऊरू पीतांबरः पातु जंघे मे ज्ञानदायकः॥

गीष्पतिः पातु मे पादौ सर्वांगानि सुरार्चितः।
प्रातः पुण्यस्मृतिः पातु संगमे सुरवंदितः॥

मध्यान्हे मघवद्वन्द्यः सायं सर्वाधिनाशनः।
निशीथे निर्मलः पायात् सर्वदा सर्वदैव तु॥

जीवस्य कवचं दिव्यं त्रिसंध्यां यः पठेन्नरः।
सर्वान् कामान् अवाप्नोति सर्वत्र विजयी भवेत्॥

इति बृहस्पति कवचम्-

बृहस्पतिस्तोत्रम्॥

बृहस्पतिस्सुराचार्यो दयावान् शुभलक्षणः।
लोकत्रयगुरुः श्रीमान् सर्वज्ञस्सर्वकोविदः॥

सर्वेशः सर्वदाऽभीष्टः सर्वजित् सर्वपूजितः।
अक्रोधनो मुनिश्रेष्ठः नीतिकर्ता गुरुः पिता॥
विश्वात्मा विश्वकर्ता च विश्वयोनिः अयोनिजः।
भूर्भुवस्सुवरों चैव भर्ता चैव महाबलः॥

पंचविंशतिनामानि पुण्यानि नियतात्मना।
वसतानन्दभवने विष्णुना कीर्तितानि वै॥
यः पठेत् प्रातरुत्थाय प्रयतस्सुसमाहितः।
विपरीतोऽपि भगवान् प्रीतो भवति वै गुरुः॥

यः श्रुणोति गुरुस्तोत्रं चिरं जीवेन्न संशयः।
बृहस्पतिकृतापीडा न कदाचित् भविष्यति॥

-इति गुरुस्तोत्रं संपूर्णम्॥

गुर्वष्टोत्तरशतनामावलिः-

ॐ गुरवे नमः।
ॐ गणवराय नमः।
ॐ गोप्त्रे नमः।
ॐ गोचराय नमः।
ॐ गोपतिप्रियाय नमः।
ॐ गुणिने नमः।
ॐ गुणवतां श्रेष्ठाय नमः।
ॐ गुरुणां गुरवे नमः।
ॐ अव्ययाय नमः।
ॐ जेत्रे नमः॥१०॥
ॐ जयंताय नमः।
ॐ जयदाय नमः।
ॐ जीवाय नमः।
ॐ अनन्ताय नमः।
ॐ जयावहाय नमः।
ॐ आंगीरसाय नमः।
ॐ अध्वरासक्ताय नमः।
ॐ विविक्ताय नमः।
ॐ अध्वरकृत्पराय नमः।
ॐ वाचस्पतये नमः॥२०॥
ॐ वशिने नमः।
ॐ वश्याय नमः।
ॐ वरिष्ठाय नमः।
ॐ वाग्विचक्षणाय नमः।
ॐ चित्तशुद्धिकराय नमः।
ॐ श्रीमते नमः।
ॐ चैत्राय नमः।
ॐ चित्रशिखण्डिजाय नमः।
ॐ बृहद्रथाय नमः।
ॐ बृहद् भानवे नमः॥३०॥
ॐ बृहस्पतये नमः।
ॐ अभीष्टदाय नमः।
ॐ सुराचार्याय नमः।
ॐ सुराध्यक्षाय नमः।
ॐ सुरकार्यहितंकराय नमः।
ॐ गीर्वाणपोषकाय नमः।
ॐ धन्याय नमः।
ॐ गीष्पतये नमः।
ॐ गिरिशाय नमः।
ॐ अनघाय नमः॥४०॥
ॐ धीवराय नमः।
ॐ दिव्यभूषणाय नमः।
ॐ देवपूजिताय नमः।
ॐ धनुर्धराय नमः।
ॐ दैत्यहन्त्रे नमः।
ॐ दयासाराय नमः।
ॐ दयाकराय नमः।
ॐ दारिद्र्यविनाशनाय नमः।
ॐ धन्याय नमः।
ॐ धिषणाय नमः॥५०॥
ॐ दक्षिणायनसंभवाय नमः।
ॐ धनुर्मीनाधिपाय नमः।
ॐ देवाय नमः।

ॐ धनुर्बाणधराय नमः।
ॐ हरये नमः।
ॐ अंगीरसाब्दसंजाताय नमः।
ॐ अंगिरसकुलोद्भवाय नमः।
ॐ सिंधुदेशाधिपाय नमः।
ॐ धीमते नमः।
ॐ स्वर्णकायाय नमः॥६०॥

ॐ चतुर्भुजाय नमः।
ॐ हेमांगदाय नमः।
ॐ हेमवपुषे नमः।
ॐ हेमभूषणभूषिताय नमः।
ॐ पुष्यनाथाय नमः।
ॐ पुष्यरागमणिमंडनमंडिताय नमः।
ॐ काशपुष्पसमानाभाय नमः।
ॐ कलिदोषनिवारकाय नमः।
ॐ इन्द्रादिदेवदेवेशाय नमः।
ॐ देवताभीष्टदायकाय नमः॥७०॥

ॐ असमानबलाय नमः।
ॐ सत्वगुणसंपद्विभावसवे नमः।
ॐ भूसुराभीष्टफलदाय नमः।
ॐ भूरियशसे नमः।
ॐ पुण्यविवर्धनाय नमः।
ॐ धर्मरूपाय नमः।
ॐ धनाध्यक्षाय नमः।
ॐ धनदाय नमः।
ॐ धर्मपालनाय नमः।
ॐ सर्वदेवतार्थतत्वज्ञाय नमः॥८०॥

ॐ सर्वापाद्विनिवारकाय नमः।
ॐ सर्वपापप्रशमनाय नमः।
ॐ स्वमतानुगतामराय नमः।
ॐ ऋग्वेदपारगाय नमः।
ॐ सदानन्दाय नमः।
ॐ सत्यसंधाय नमः।
ॐ सत्यसंकल्पमानसाय नमः।
ॐ सर्वागमज्ञाय नमः।
ॐ सर्वज्ञाय नमः॥९०॥

ॐ सर्ववेदान्तविदुषे नमः।
ॐ ब्रह्मपुत्राय नमः।
ॐ ब्राह्मणेशाय नमः।
ॐ ब्रह्मविद्याविशारदाय नमः।
ॐ समानाधिकनिर्मुक्ताय नमः।
ॐ सर्वलोकवशंकराय नमः।
ॐ सुरासुरगंधर्ववन्दिताय नमः।
ॐ सत्यभाषणाय नमः।
ॐ बृहस्पतये नमः।
ॐ सुराचार्याय नमः॥१००॥

ॐ दयावते नमः।
ॐ शुभलक्षणाय नमः।
ॐ लोकत्रयगुरवे नमः।
ॐ श्रीमते नमः।
ॐ सर्वगाय नमः।
ॐ सर्वतोविभवे नमः।
ॐ सर्वेशाय नमः।
ॐ सर्वदा तुष्टाय नमः।
ॐ सर्वगाय नमः।
ॐ सर्वपूजिताय नमः॥१०८॥

इति बृहस्पत्यष्टोत्तरशतनामावलिः।

பிருஹஸ்பதி (குரு) தாராதேவி அஷ்டோத்தர சதநாமாவளி

குருவைப் பற்றி, குவலயத்தில் குன்றளவு உயர்ந்து, கோடி குவித்து குறைவின்றி வாழ, அவரைப்பற்றி அறிவோம்.

1. குரு விளக்கம்

கு+ர்+உ-குரு, கு-சித்தி (வெற்றி) தருபவன், ர் - பாவத்தை போக்குபவன், உ-சிவன் என்று ஒரு பொருள்.

கு+ரு-குரு கு-இருட்டு, ரு- வெளிச்சம், மாயையிலிருந்து விலக்கி உயர்நிலைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு என்று மற்றொரு பொருள் உள்ளது.

2. குரு வேறு பெயர்கள்

கிரகங்களில் பெரியவன், ஜுபிடர், பிரகஸ்பதி, வியாழன், தேவகுரு, கோன், மங்கள நாயகன், தனகாரகன், புத்திரகாரகன், மஞ்சள் வண்ணன், பொன்னன், புஷ்பராகன், கிரகங்களின் நண்பன் அறிவுக்காரகன்.

3. குரு பிறப்பு

சப்தரிஷிகள் ஏழுவர், அவர்களில் ஒருவர் ஆங்கிருச மகரிஷி அவருடைய ஒரே மகன் குரு. சகல சாஸ்திரம் கற்று, தீட்சை பெற்று தேவலோக ஆஸ்தான குருவாக ஆதிபரம் பொருளால் நியமிக்கப்பட்டவர்.

4. குருபலன்கள்

தேவர்களுக்கு இறவாப்பேறு தரும், நாராயண கவச மந்திரத்தை உபதேசம் செய்தவர் குரு.

ஆகாயம் என்ற பஞ்சபூதத்தின் தன்மை பெற்றவர் குரு, புதன், செவ்வாய், சனியை விட பலமுள்ளவர் குரு. அறிவிலே மேம்பட்டவர் சாத்வீக குணமுடையவர், தன்னை வழிபடுவோருக்கு, பிறர்க்கு தலை வணங்காத உயர்வான பதவியையும், மனமகிழ்ச்சி செல்வம், புத்திரப் பேறு கொடுப்பவர்.

இந்திரனுக்கு அமைச்சர், தயாள சிந்தை கொண்டவர். உருவாகும் உலகில் எல்லாம் குருவாகுபவர், தனது அருளை தினமும் வழங்குபவர். தொழிலதிபதியாவார். தொழில் புரிபவர்களுக்கு அபயம் அளிப்பர் குரு.

5. குரு தோத்திரம்

மறைமிகு கலை நூல் வல்லோன் வானவர்க் கரசன் மந்த்ரி
நறைசொரி கற்ப கப்பொன் நாட்டினுக் கதிப னாக்கி
நிறைதனம் சிவிகை மன்றல் நீடுபோ கத்தை நல்கும்
இறையவன் குருவி யாழன் இணையடி போற்றி போற்றி

6. குரு காயத்ரி

நிரஞ்ஜனாய வித்மஹே நிராபாஸாய தீமஹி
தன்னஸ்ஸூக்ஷ்ம: ப்ரசோதயாத்

ஓம் வ்ருஷ த்வஜாய வித்மஹே ஸ்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குரு: ப்ரசோதயாத்

ஓம் ஆங்கிரசாய வித்மஹே சுராசார்யாய தீமஹி
தந்நோ குரு ப்ரசோதயாத்
ஓம் தேவானாம் ச ரிஷீனாம் ச குரும் காஞ்சன ஸன்னிபம்
புத்திபூதம் த்ரிலோகேசம் தம் நமாமி ப்ருஹஸ்பதிம்.

7. குரு தியானம்

தப்த காஞ்சன வர்ணாபம் சதுர்புஜ சமன்விதம்
தண்டாக்ஷ ஸூத்ர மாலாஞ்ச கமண்டுல வரம் ததா
பீதாம்பர தரம் தேவம் தானு பீதகந் லேபனம்
புஷ்ய ராகமயம் பூஜ்யம் க்ருபாமூர்த்திம் குரும்பஜே

(உருவாகிய தங்க வடிவுடன், நான்கு கரத்தில் தண்டம், ஜபமாலை கமண்டலம், வரமுத்திரை கொண்டவரும், மஞ்சள் நிற சந்தனம் பூசியவரும், புஷ்பராக மணியாலாகிய ஆபரணம் பூண்டவரும், கிருபா மூர்த்தியாகிய குருவை வணங்குவோம்)

8. குரு கணபதி (குருவருள் பெற) காயத்ரீ

ஓம் கம் கணபதயே ஸர்வவிக்ன ஹராய ஸர்வாய ஸர்வ
குரவே லம்போதராய ஹ்ரீம் கம் நம:

9. குரு ஸ்தலம்

குரு வழிபட்ட இடங்கள் தமிழகத்தில் குருபகவான் ஸ்தலங்களாக விளங்குகின்றன. அவை. 1.தென்குடித்திட்டை, 2. திருவலிதாயம், 3. திருச்செந்தூர் முதலியனவாகும்.

ஆலங்குடி என்பது குருவின் குரு, உலகின் குரு, ஸ்ரீகுரு தட்சிணாமூர்த்தியாரின் (ஆபத்சகாயேசுவரர்) ஸ்தலமாகும். குரு பரிகார ஸ்தலமாகும்.

இந்த ஸ்தலங்களில் சென்று வழிபட்டால் குரு பிரீதி கிடைக்கும், குரு பார்வை கிடைத்து எல்லா வளமும் பெற்று வாழலாம்.

10. தென்குடித்திட்டை

மூர்த்தி - ஸ்ரீ பசுபதிநாதர்
அம்பிகை - ஸ்ரீ உலகநாயகி

இம்மூர்த்தியை குருபகவான் வழிபட்டு, பூசித்து பெரும் பேறு பெற்றார். மேலும் கௌதமர், காமதேனு, ஆதிசேஷன், திருஞானசம்பந்தர் வழிபட்டு அருள் பெற்றனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் நீடாமங்களம் அருகில் இந்த ஊர் உள்ளது.

11. திருவலிதாயம்

மூர்த்தி - ஸ்ரீ வலியநாதர்
அம்பிகை - ஸ்ரீ தாயம்மை

இவரை குருவே வழிபட்டார் என்றால் நாம் ஏன் வழிபடக்கூடாது. எனவே, விரைந்து வழிபட்டு வளம் பெறுவோம். இந்த ஊர் சென்னைக்கு அருகில் 12 கி.மீ தொலைவில் உள்ளது.

12. திருச்செந்தூர்

மூலவர் - ஸ்ரீசெந்தில் ஆண்டவர் திருச்செந்தூர் முருகன்
உற்சவர் - ஸ்ரீ ஆறுமுக நாயினார்

ஆதாரம்: ''தெய்வங்களின் பெருமையும் சுபகாரிய முறைகளும்'' - மு.பாலமணிகண்டன் பக்கம் 26முதல் 31 - 2005 இலவச வெளியீடு தொலைபேசி 04292-223094.

இத்தலத்தில் ஸ்ரீ குருபகவானை, முருகப்பெருமான் வரவழைத்து அசுரர்களை பற்றி அறிந்து கொண்டு, சூரபத்மனை அழித்தார். இங்கு குரு விதிப்படி பெற்ற சாபங்கள் நீங்கி பெறும் பேறு பெற்ற நவக்கிரகமாவார். ஆதிசங்கரர், அருணகிரிநாதர், நக்கீரர், கச்சியப்பமுனிகள், குமரகுருபரர், அபியுக்தர், பகழிக்கூத்தர், பாலதேவராய சுவாமிகள், போன்றோரும் வழிபட்டு பலன்களை பெற்றுள்ளனர்.

13. ஆலங்குடி - பரிகாரஸ்தலம்

இது உலகின் குரு. ஆதிகுரு, ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி ஸ்தலமாகும். அருள்மிகு குரு பகவானுக்கு பரிகாரம் செய்ய உகந்த சிறந்த ஸ்தலமாகும்.

மூர்த்தி - ஆபத்சகாயேசுவரர்

தாய் - ஏலவார் குழலி

குருபெயர்ச்சி , குருபிரீதி, குருபலன் போன்ற செயல்களை முடிக்க இத்தலம் சிறந்தது. 15 தீர்த்தங்களை ஊரைச்சுற்றி பெற்றுள்ளது ஆலங்குடி. பார்வதி தேவி, காளமேகப்புலவர், ஆதிசங்கரர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், போன்றவர்கள் பாடி வழிபட்டு பலன்கள் பெற்றுள்ளனர்.

14. குரு வழிபடும் முறை

குரு வாரமான வியாழக்கிழமை விரதம் இருந்து, குருவை வழிபட்டு வந்தால் குரு பிரிதி நிச்சயம் கிடைக்கும். குருவிற்கு மஞ்சள் பட்டாடை அணிவித்து, அவரது தானியம் கொண்டைக்கடலை, இனிப்பு, தயிர் அன்னம் ஆகியவற்றை நைவேத்தியம் செய்து குழந்தைகளுக்கு கொடுத்து வர குரு பலன் கிடைக்கும்.

15. யார் குரு?

முக்தி பெற வழிகாட்டும் சிறந்த முற்றறிவு பெற்றவர், ஆன்மீக விசயத்தில் நமக்கு தடையாய் உள்ள பாபங்களை ஓட்டி இறைவனோடு நம்மை சேர்பவர். ஜயந்திரிபுற, நமக்கு அறவழிகளை எடுத்துக் கூறுபவரே குரு. குரு சீடனுக்கு செய்யும் உபகாரம் தீட்சை (தீக்கை) ஆகும். அது ஏழு வகைப்படும். அவை ஸ்பரிசம், நயனம், மானதம், வாசகம், மந்திரம், யோகம், ஔத்திரி முதலியனவாகும்.

16. குரு தத்துவம்

குருட்டினை நீக்குங் குருவினை கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. -திருமூலர் திருமந்திரம்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. -திருமூலர் திருமந்திரம்

17. குரு

தேவர்களின் குரு நவக்கிரகங்களில் வடக்கு பார்த்து இருப்பவர். குரு பார்க்க கோடி நன்மை உண்டாகும். தோஷம் நீங்கும், சுபக்கிரகம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரத்திற்கு அதிபதி.

ராசி - தனுசு, மீனம்

திசை - வடக்கு

அதிதேவதை - இந்திரன், ஆதிகுருதட்சிணாமூர்த்தி

வாகனம்	-	யானை
பிரத்யதிதேவதை	-	பிரம்மன்
பரிகார தலம்	-	ஆலங்குடி
நிறம்	-	மஞ்சள்
தானியம்	-	கொண்டை கடலை
மலர்	-	முல்லை, செவ்வரளி
வஸ்திரம்	-	மஞ்சள் பட்டாடை
ரத்தினம்	-	புஷ்பராகம்
அன்னம்	-	தயிர் அன்னம்
உலோகம்	-	தங்கம்
சமித்து	-	அரசங்குச்சி

18. குருவை வழிபட அவர் வழங்கும் பலன்கள்

புத்தி, ஞானம், மந்திரத்துவம், புராண இதிகாச ஞானம், கருவூலம் பாங்கு, சன்மானம், தயை, நியாயவாதம், சரீரபுஷ்டி, ஸ்தூல சரீரம், இரக்கம், கல்வித்துறை, ஆசிரியர் பணி போதகர், அஷ்டமாசித்து, தேன், கடலை, சீரகம், யாகசாலை, உபதேசம், ஜிவனயோகம், புஷ்பராகம், தவமியற்றல், வேதம் ஓதல், தீட்சை, பொன், பிராமணர் கனகதண்டிலக, கர்மாதிகாரம், புத்திரபிராப்தி அனைத்து தோஷநிவர்த்தி முதலியனவாகும்.

19. வைணவதலத்தில் குரு

இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான வல்லபபெருமாள் கோயில் ஒன்று மதுரை மாவட்டம் அணைப்பட்டி ஆஞ்சநேயர் கோயில் அருகில் குருவித்துறை என்ற கிராமத்தில் அமைந்துளள இக்கோயிலில் குரு அசுரர்களை அடக்க சக்கரத்தாழ்வாரை வேண்டி தவம்செய்தார், குருவின் ஆசைப்படி அசுரர்கள் அழிக்கப்பட்டனர். நவகுருக்கள் இக்கோயிலில் உள்ளனர். தமிழகத்தில் இக்கோயிலில் மட்டுமே மேற்கு நோக்கி குரு சக்கரத்தாழ்வாரோடு அருள்பாலிப்பது சிறப்பு அம்சமாகும்.

21. ப்ருஹஸ்பதி - தாராதேவி படத்தின் சிறப்புகள்

குருபகவான் தனது மனைவி தாராதேவியுடன் இருப்பது. ப்ரத்யதி தேவதை பிரம்மன், ஸ்ரீ ஆதி குரு தட்சிணாமூர்த்தி இருப்பது. அவருடைய வாகனம் யானை, திருமணத்தடை நீக்கும் விதத்தில் மலர் மாலையோடு அமைந்துள்ளது.

தனது விருட்சமான அரச மரத்தின் அடியில் குரு அமர்ந்துள்ளார். இது புத்திர பாக்கியம் அருளும், நாக பிரதிஷ்டை விநாயகர் அரசு-வேம்பு இடம் பெற்று இருப்பது மேலும் சிறப்பாகும். 27 நட்சத்திரங்கள் 27 இலைகள் ஆக படத்தில் உள்ளது.

கார்த்த வீரியர்ஜுனன் என்ற பிண்டத்திற்கு உயிர் அளித்து, பராக்கிரமம் அளித்த குரு தத்தாத்ரேயர் அருள் பாலிக்கிறார்.

அரசமரத்தின் அடிப்பகுதி படைத்தல் பிரம்மாவையும், நடுப்பகுதி காத்தல் விஷ்ணுவையும் முடிப்பகுதி அழித்தல் சிவனையும் குறிக்கின்றது.

வேம்பு - அரசு - நாகம், விநாயகர், சுற்றிவர திருமணத்தடை விலகும், புத்திர பாக்கியம் ஏற்படும்.

பிரம்மா, ஆதிகுரு தட்சிணாமூர்த்தி, குருதத்தாத்ரேயர் ஆகிய மூவரும் அருள் பாலிக்கின்றனர்.


மீன ராசியில் ஆட்சிபெற்றவர் எனவே மீனும் இடம்பெற்றுள்ளது.



தாராதேவியுடன் வியாழபகவான்(பிரகஸ்பதி)

பிருஹஸ்பதி (குரு) அஷ்டோத்தர சதநாமாவளி

ஓம்	ஸ்ரீ குரவே	நம:
ஓம்	குணாகராய	நம:
ஓம்	கோப்தரே	நம:
ஓம்	கோசராய	நம:
ஓம்	கோபதிப்ரியாய	நம:
ஓம்	குணிநே	நம:
ஓம்	குணவதாம்	நம:
ஓம்	குருணாம் குரவே	நம:
ஓம்	அவ்யயாய	நம:
ஓம்	ஜேத்ரே	நம:
ஓம்	ஜயந்தாய	நம:
ஓம்	ஜயதாய	நம:
ஓம்	ஜீவாய	நம:
ஓம்	அநந்தாய	நம:
ஓம்	ஜயாவஹாய	நம:
ஓம்	ஆங்கீரஸாய	நம:
ஓம்	அத்வராஸக்தாய	நம:
ஓம்	விவிக்தாய	நம:
ஓம்	அத்வரக்ருத்பிரியாய	நம:
ஓம்	வாசஸ்பதயே	நம:
ஓம்	வஸிநே	நம:
ஓம்	வஸ்யாய	நம:
ஓம்	வரிஷ்டாய	நம:
ஓம்	வாக்விக்ஷணாய	நம:
ஓம்	சித்த சுத்தி கராய	நம:
ஓம்	ஸ்ரீமதே	நம:
ஓம்	சைத்ராய	நம:
ஓம்	சித்ரசிகண்டிஜாய	நம:
ஓம்	ப்ருஹஸ்ரதாய	நம:
ஓம்	ப்ருஹத்பாநவே	நம:
ஓம்	ப்ருஹஸ்பதயே	நம:
ஓம்	அபீஷ்டதாய	நம:
ஓம்	ஸுராசார்யாய	நம:
ஓம்	ஸுராராத்யாய	நம:
ஓம்	ஸுரகார்யஹிதகராய	நம:
ஓம்	கீர்வாண போஷகாய	நம:
ஓம்	தன்யாய	நம:
ஓம்	கீஷ்பதயே	நம:
ஓம்	கிரிஸாய	நம:
ஓம்	அநகாய	நம:
ஓம்	தீவராய	நம:
ஓம்	திஷணாய	நம:
ஓம்	திவ்யபூஷணாய	நம:
ஓம்	தேவபூஜிதாய	நம:
ஓம்	தனுர்தராய	நம:
ஓம்	தைத்ய ஹந்த்ரே	நம:
ஓம்	தயாஸாராய	நம:
ஓம்	தயாகராய	நம:
ஓம்	தாரித்ர்ய நாசகாய	நம:
ஓம்	தன்யாய	நம:
ஓம்	தக்ஷிணாயன ஸம்பவாய	நம:
ஓம்	தனுர் மீனாதிபதயே	நம:
ஓம்	தேவாய	நம:
ஓம்	தனுர்பாணதராய	நம:
ஓம்	ஹரயே	நம:
ஓம்	ஆங்கீரஸாப்த ஸஞ்ஜாதாய	நம:
ஓம்	ஆங்கீரஸ குலோத்பவாய	நம:
ஓம்	ஸிந்து தேசாதிபாய	நம:
ஓம்	தீமதே	நம:
ஓம்	ஸ்வர்ண காயாய	நம:
ஓம்	சதுர்புஜாய	நம:
ஓம்	ஹேமாங்கதாய	நம:
ஓம்	ஹேமவபுஷே	நம:
ஓம்	ஹேம பூஷண பூஷிதாய	நம:
ஓம்	புஷ்யநாதாய	நம:
ஓம்	புஷ்பராகமணிமண்டநமண்டிதாய நம:	
ஓம்	காஸபுஷ்பஸமானாபாய	நம:
ஓம்	இந்த்ராதி தேவகணபாய	நம:
ஓம்	தேவதா பீஷ்டதாயகாய	நம:
ஓம்	அஸமான பலாய	நம:
ஓம்	ஸத்வகுணஸம்பத்விபாவஸவே	நம:
ஓம்	பூஸுரா பீஷ்டதாய	நம:
ஓம்	பூரியசஸே	நம:
ஓம்	புண்யவிவர்த்தநாய	நம:
ஓம்	தர்மருபாய	நம:
ஓம்	தனாத்யக்ஷாய	நம:
ஓம்	தனதாய	நம:
ஓம்	தர்மபாலனாய	நம:
ஓம்	ஸர்வேதார்த்ததத்வக்ஞாய	நம:
ஓம்	ஸர்வாபத்விநிவாரகாய	நம:
ஓம்	ஸர்வபாப ப்ரஸமனாய	நம:
ஓம்	ஸ்வமதா நுகதாமராய	நம:
ஓம்	ரிக்வேத பாரகாய	நம:
ஓம்	ரிக்ஷராசி மார்க்கப்ரசாராய	நம:
ஓம்	ஸதாநந்தாய	நம:
ஓம்	ஸத்ய ஸந்தாய	நம:
ஓம்	ஸத்ய ஸங்கல்பமானஸாய	நம:
ஓம்	ஸர்வாகமக்ஞாய	நம:
ஓம்	ஸர்வக்ஞாய	நம:
ஓம்	ஸர்வ வேதாந்தவிதே	நம:
ஓம்	ப்ரும்மபுத்ராய	நம:
ஓம்	ப்ரும்மணேஸாய	நம:
ஓம்	ப்ரும்மவித்யா விசாரதாய	நம:
ஓம்	சமானாதிக நிர்முக்தாய	நம:
ஓம்	சர்வலோக வசம்வதாய	நம:
ஓம்	சஸுராஸுர கந்தர்வ வந்திதாய	நம:
ஓம்	ஸத்ய பாஷணாய	நம:
ஓம்	ஸுராசார்யாய	நம:
ஓம்	தயாவதே	நம:
ஓம்	சுபலக்ஷணாய	நம:
ஓம்	லோகத்ரய குரவே	நம:
ஓம்	ஸ்ரீமதே	நம:
ஓம்	ஸர்வகாய	நம:
ஓம்	ஸர்வதோவிபவே	நம:
ஓம்	ஸர்வேசாய	நம:
ஓம்	ஸர்வதுஷ்டாய	நம:
ஓம்	ஸர்வதாய	நம:
ஓம்	ஸர்வபூஜிதாய	நம:





அன்னதான தட்சிணாமூர்த்தி

குருவழிபாடும் சகல தோஷ நிவர்த்தியும்

★ சிவபெருமானின் அருளாணையின் வண்ணம் நவக்கிரக நாயகர்கள் தத்தமது கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இருப்பினும் மக்கள் தங்களின் வாழ்வில் நவக்கிரகங்களின் பிடியால் வாடித் தவிக்கின்றனர். அந்த வகையில் ஒரு ராசியில் 2 1/2 வருடங்கள் தங்கக் கூடியவரான சனி பகவான், ஒரு ராசியில் 1 1/2 வருடங்கள் தங்கக்கூடிய ராகு - கேதுவும், ஒரு ராசியில் ஒருவருட காலம் தங்கக்கூடிய குருபகவானும் விளங்குகின்றனர்.

கோச்சாரத்தில் குரு சஞ்சரிக்கும் ராசிகளில் அவரவர் ஜென்ம ராசியிலிருந்து 2,5, 7, 9, 11 இடங்களில் வரும்போது சுப, அசுப பலன்களைத் தருவாராக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஒவ்வொரு குருபெயர்ச்சியின்போதும், ஒவ்வொரு ராசிகாரர்களும் ஜென்மராசியிலிருந்து 2, 5, 7, 9, 11 ஆகிய இடங்களுக்கு குருபெயர்ச்சி ஆகிறவர்களைத் தவிர மற்றவர்கள் மனதால் அல்லலும் அவதியும்படுவர். அவர்களுக்கான பரிகாரங்களைத் தெரிவிக்கும் ஜோதிடர்களும், அர்ச்சகர்களும் தட்சணாமூர்த்தியை வழிபட்டு வந்தால் குருவால் பிரச்சனைகள் ஏற்படாது என்றும் பரிகாரம் செய்வதானல் தட்சணாமூர்த்திக்குப் பரிகாரம் செய்யுமாறும் அறிவுறுத்துவர்.

குருபகவானால் ஏற்படக்கூடிய அனைத்து தோஷங்களுக்கும் நிவர்த்தி பரிகாரமாக தட்சிணாமூர்த்தி சுட்டிக்காட்டப்பட்டதன் காரணம் என்ன?

1. நவக்கிரகங்களில் ஒருவராகக் காட்சி தரும் பிரஹஸ்பதிக்கு தனிப்பட்ட முறையில் பரிகாரம் செய்வதன் மூலம் மற்ற கிரகங்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதாலா?

2. நவக்கிரகங்கள் சிவன்கோயிலில் அமைக்கப்படாத காலத்தில் குருவுக்கு செய்யவேண்டிய பரிகாரத்தை யாருக்குச் செய்வது என்று எண்ணியதாலா?

3. சில நூல்களில் குரு பிரஹஸ்பதியின் அதிதேவதையாக பிரம்மனுக்குப் பதில் தட்சணாமூர்த்தி குறிப்பிடப்பட்டுள்ளதாலா?

4. குருவின் அதிதேவதையான பிரம்மனுக்கு கோயிலகள் இல்லாமல் போனதாலா?

5. ஒவ்வொரு சிவன் கோயிலிலும் கருவறையின் வெளிப்பகுதியான கோஷ்டத்தில் தென்பகுதியில் தெற்கு நோக்கி தட்சணாமூர்த்தி இருப்பதாலா?

6. குருவிற்கெல்லாம் குருவாணதட்சணாமூர்த்தி சீடர்களான சனகாதி முனிவர்களுக்கு மௌன உபதேசம் செய்யும் கோலத்தில் காட்சி அளிப்பதாலா?

7. குருதோஷத்திற்குப் பரிகாரம் செய்ய கோயிலுக்கு வருபவர்கள் அதிதேவதையான பிரமனோ நவக்கிரகங்களோ கோயிலில் இடம் பெறாத காலத்தில் மனவருத்தத்துடன் திரும்பிச் செல்லக் கூடாது என்ற காரணத்தால் கோஷ்ட மூர்த்திகளில் ஒருவரான குருவாகக் காட்சிதரும் தட்சிணாமூர்த்திக்கு குருதோஷ நிவர்த்திக்கான பரிகாரங்களைச் செய்து அனுப்பி பழக்க வழக்கத்தை ஏற்படுத்திய அர்ச்சகர்கள் காரணமா?

8. குரு தோஷத்திற்காக தனக்கு செய்யப்பட்ட பரிகாரங்களை ஏற்று அவர்களுக்கு சர்வேஸ்வரனான

★ஆதாரம்: இந்த ஜோதிடப் பகுதியினை அளித்தவர்கள் - ''ஜோதிட ஆன்மீக மையம், செயலாளர். பைரவப்பிரியன். திரு.பண்ணாரிதாசன் அவர்கள், ஜோதி தியேட்டர் மெயின்ரோடு, அம்மாபேட்டை, சேலம்- 636003. தொடர்புகொள்ள தொலைபேசி - 0427-5536846. செல் நம்பர் - 9362103380.

தட்சிணாமூர்த்தி நன்மைகளைச் செய்து வருவதாலா?

இப்படி எத்தனையோ காரணங்களை அடுக்கிக் கொண்டே போனாலும் உண்மை என்னவென்றால் இவரே மூலகுரு. தட்சிணாமூர்த்தியே மூலபிம்பம்.

தட்சணாமூர்த்தியானவர் மூன்று நிலைகளில் உள்ளதாக ஆகமம் தெரிவித்த போதிலும் கோயில்களில் 12 நிலைகளில் காணப்படுகிறார். அந்த நிலைகளும் 12 ராசிகளுக்குரிய 12 தட்சிணாமூர்த்தி நிலைகளையும் அவர் கோயில் கொண்டுள்ள இடங்களையும் பார்ப்போம். தங்களுடைய ராசிக்குரிய தட்சணாமூர்த்தியை வழிபடுவதன் மூலம் நல்ல பலன்களைப் பெறமுடியும்.

எத்தனையோ தெய்வங்கள் இருந்தபோதும் தங்களுக்கு மிகவும் நன்மை செய்யக்கூடியது குலதெய்வமே என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது. அதுபோல் ஒவ்வொரு ராசி நேயர்களும் தங்கள் வாழ்விற்கு நன்மை தரக்கூடிய குலதெய்வமாக தங்கள் ராசிக்குரிய தட்சணாமூர்த்தி இருக்குமிடம் சென்று வழிபட்டு வருவதுடன் அவரது திருவுருவப்படத்தை வீட்டில் வைத்து வழிபட்டு வந்தால் குருகிரக தோஷம் மட்டுமல்ல சகல தோஷங்களும் நிவர்த்தியாகும்.

ராசி	தட்சணாமூர்த்தி ரூபம்	தரிசனம்தரும் கோயில்
மேஷம்	வீராசன தட்சணாமூர்த்தி	திரிசூலநாதர்கோயில், திரிசூலம்
ரிஷபம்	ரிஷபாரூட தட்சணாமூர்த்தி	நாவலேஸ்வரர்கோயில், திருநாவலூர்
மிதுனம்	மிருதங்க தட்சணாமூர்த்தி	வெட்டுவான்கோயில், கழுகுமலை
கடகம்	வீணாதர தட்சணாமூர்த்தி	கடம்பவனேஸ்வரர் கோயில், கடையூர்
சிம்மம்	நவக்கிரகதட்சணாமூர்த்தி	மத்தியஸ்தநாதர்கோயில், தாருகாபுரம்
கன்னி	சக்தி உபதேச தட்சணாமூர்த்தி	பிரணவவியாக்ரபுரீஸ்வரர் கோயில், ஓமாம்புலியூர்.
துலாம்	தாம்பத்ய தட்சணாமூர்த்தி	பள்ளிகொண்டீஸ்வரர்கோயில், சுருட்டப்பள்ளி
விருச்சிகம்	யோகதட்சணாமூர்த்தி	அரம்பேஸ்வரர் திருக்கோயில், இலம்பையங் கோட்டூர்(எலுமியன்கோட்டூர்)
தனுசு	மேதா தட்சணாமூர்த்தி	வள்ளலார் கோயில், மயிலாடுதுறை
மகரம்	பிரார்த்தனா தட்சணாமூர்த்தி	பக்தவத்சலேஸ்வரர் கோயில், நாகத்தி
கும்பம்	ஸம்ஹாரதட்சணாமூர்த்தி	ஐராவதேஸ்வரர்கோயில், அத்திமுகம்
மீனம்	வியாக்யான தட்சணாமூர்த்தி	கைலாசநாதர்கோயில், அகரம் கோவிந்தவாடி

தங்கள் ராசிக்குரிய தட்சணாமூர்த்தி திருக்காட்சி தரும் தலங்களிலோ அல்லது அவர்கள் ஊரிலுள்ள தட்சணாமூர்த்தியை தங்கள் ராசிக்குரிய தட்சணாமூர்த்தியாக பாவித்தோ கீழே தெரிவிக்கப்பட்டுள்ள பரிகாரத்தைச் செய்யலாம். மேலும் பெரியோர்களை கேட்டு கிரமமாக செய்யலாம்.

மேஷ ராசிக்காரர்கள் செய்யக்கூடிய பரிகாரம்

செவ்வாய்க் கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்கு குங்குமம் கலந்த பன்னீரால் அபிஷேகம் செய்து அரகஜா, ஜவ்வாது சேர்த்தரைத்த சந்தனத்தால் காப்பிட்டு செந்நிறப்பட்டுடுத்தி சண்பகப்பூ மாலை சூட்டி மாதுளம் பழம், ஜிலேபி, துவரம் பருப்பு பொடி கலந்த அன்னம் நைவேத்தியமாகப் படைத்து அர்ச்சனை செய்து தடசணாமூர்த்தி, செவ்வாய் வீரபத்திரர் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர சகல தோஷங்களும் விலகும்.

ரிஷபக்காரர்கள் செய்யக்கூடிய பரிகாரம்

வெள்ளிக்கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்கு இளநீர் அபிஷேகம் செய்து கடலைக்கொட்டை

காப்பிட்டு வெண்ணிறப்பட்டுடுத்தி வெண்தாமரை மலர்மாலை சூட்டி சேமியா பாயாசம் புளிசாதம் மொச்சைசுண்டல் படையலிட்டு அர்ச்சனை செய்து தடசணாமூர்த்தி, சுக்கிரன், லெட்சுமி காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர சகல கஷ்டங்களும் விலகி ஓடும்.

மிதுன ராசிக்காரர்கள் செய்யக்கூடிய பரிகாரம்

புதன்கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்கு அத்திப்பழம், நெல்லிக்காய் இவற்றில் சாறெடுத்து அதைப் பன்னீரில் கலந்து அபிஷேகம் செய்து பச்சைபயறு காப்பிட்டு பச்சை நிறப்பட்டுடுத்தி மல்லிகை மலர் மாலை சூட்டி பாசிப் பருப்பு பாயாசம், கொய்யாபழம், பாசிப்பருப்பு பொடி கலந்த அன்னம் படையலிட்டு அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி புதன், விஷ்ணு காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர நன்மைகள் நாடிவரும்.

கடக ராசிக்காரர்கள் செய்யவேண்டிய பரிகாரம்

திங்கட்கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்குப் பால் அபிஷேகம் செய்து அன்னக்காப்பிட்டு சந்தனக் கலர் பட்டுடுத்தி அல்லி அல்லது நந்தியாவட்டை மலர்மாலை அணிவித்து வாழைப்பழம், சாத்துக்குடி, முள்ளங்கி சாம்பார் கலந்த அன்னம் படையலிட்டு அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி சந்திரன், ஈஸ்வரி காயத்ரிகளை ஓதிவழிபட்டு வர வளமான வாழ்வு அமையும்.

சிம்ம ராசிக்காரர்கள் செய்யவேண்டிய பரிகாரம்

ஞாயிற்றுக்கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்கு ருத்ராபிஷேகம் செய்வித்து கோதுமை காப்பிட்டு சிவப்புநிற பட்டுடுத்தி செந்தாமரை மலர்மாலை அணிவித்து கோதுமை அவல் கேஸரி, ஆப்பிள், கேரட் கலந்த அன்னம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சூரியன், சிவகாயத்ரிகளை ஓதி வழிபட்டுவர நிம்மதியான வாழ்வமையும்.

கன்னிராசிக்காரர்கள் செய்யவேண்டிய பரிகாரம்

புதன்கிழமைநாளில் தட்சணாமூர்த்திக்கு வில்வதீர்த்தத்தால் அபிஷேகம் செய்து வெந்தயகாப்பிட்டு பச்சை நிறப்பட்டுடுத்தி வெண்காந்தள் மலர்மாலை சூட்டி கொய்யாப்பழம், பச்சைநிற ஸ்வீட்ஸ், பாசிப்பருப்பு கலந்த நெல்லிக்காய்சாதம் நைவேத்தியமாகப் படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, புதன் , துர்க்கை காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர இன்ப வாழ்வு அமையும்.

துலாம் ராசிக்காரர்கள் செய்யவேண்டிய பரிகாரம்

வெள்ளிக்கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்கு நெய் அபிஷேகம் செய்து அரகஜா, ஜவ்வாது, கஸ்தூரி சேர்த்து அரைத்த சந்தனக்காப்பிட்டு வெண்ணிறப் பட்டுடுத்தி பவளமல்லி மலர்மாலை சூட்டி சேமியாப்பாயாசம், பிதுக்கு பருப்புசாம்பார் கலந்த அன்னம், மாம்பழம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சுக்கிரன், சக்கரத்தாழ்வார் காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர சுக வாழ்வு அமையும்.

விருச்சிக ராசிக்காரர்கள் செய்யவேண்டிய பரிகாரம்

செவ்வாய்க்கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்குப் பாலாபிஷேகம் செய்து மாதுளாம்பழ காப்பிட்டு சிவப்புநிற பட்டுடுத்தி ரோஜாமாலை அணிவித்து விளாம்பழம், மாதுளம்பழம் அல்வா, சர்க்கரை கலந்து கொள்ளுருண்டை கொள்ளுப்பொடி கலந்த அன்னம், பீட்ரூட் கலந்த அன்னம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, செவ்வாய், கேது, முருகப்பெருமான் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர எல்லா நன்மைகளும் நாடிவரும்.

தனுசு ராசிக்காரர்கள் செய்யவேண்டிய பரிகாரம்

வியாழக்கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்கு எலுமிச்சம்பழச்சாறு கலந்த பன்னீர் அபிஷேகம் செய்து கொண்டைக்கடலை காப்பிட்டு மஞ்சள் நிறபட்டுடுத்தி முல்லைமலர் மாலை சூட்டி ஆரஞ்சுப்பழம், சர்க்கரை கலந்து வேகவைத்த கடலைப்பருப்புருண்டை, எலுமிச்சம்பழ சாதம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, குரு, தத்தாத்ரேயர் காயத்ரிகளை ஓதிவர இன்பமான வாழ்வு அமையும்.

மகர ராசிக்காரர்கள் செய்யவேண்டிய பரிகாரம்

சனிக்கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்கு வாஸனாதிதிரவியத்தால் அபிஷேகம் செய்வித்து எள்காப்பிட்டு, கறுப்பு நிறப்பட்டுடுத்தி கருங்குவளைமலர் மாலை அணிவித்து வேவைத்த கிழங்குவகைகள், குலோப்ஜாமூன், எள்ளுருண்டை கறிவேப்பிலை பொடி கலந்த அன்னம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சனி, விநாயகர் காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர நலமெல்லாம் தேடிவரும்.

கும்பராசிக்காரர்கள் செய்யவேண்டிய பரிகாரம்

சனிக்கிழமைகளில் தட்சணாமூர்த்திக்கு தேனபிஷேகம் செய்து உளுந்து காப்பிட்டு நீலநிற பட்டுடுத்தி நீலநிற மலர்மாலை அணிவித்து உளுந்து கஞ்சி, பலாப்பழம், உளுந்து கலந்து செய்த பலகாரங்கள், கீரைவகைகள், சுக்குக்களி; உளுந்தங்களி, பதனீர்சாதம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சனி, ராகு, பைரவர் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர நிம்மதியான வாழ்வு அமையும்.

மீன ராசிக்காரர்கள் செய்யவேண்டிய பரிகாரம்

வியாழக் கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்கு மஞ்சள் பொடி கலந்த பன்னீரால் அபிஷேகம் செய்து கடலைப்பருப்பு காப்பிட்டு மஞ்சள் நிறப்பட்டுடுத்தி மஞ்சள் அரளிமலர் மாலைசூட்டி ஆரஞ்சுப்பழம், பானகம், மஞ்சள் நிற இனிப்புகள், சித்ரான்னம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, குரு, பிரம்மா காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர தேடியது கிடைக்கும். மகிழ்ச்சிகரமான வாழ்வு அமையும்.

ராசிக்குரிய தட்சணாமூர்த்திகளும் அவர்கள் கோயில் கொண்டுள்ள தலங்களையும் ராசிக்காரர்கள் செய்யவேண்டிய பரிகாரங்களையும் தெரிவித்ததை படிக்கும் சில நட்சத்திரக்காரர்களான கார்த்திகை, உத்திரம், உத்திராடம், மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகியவற்றில் பிறந்தவர்கள் எங்கள் நட்சத்திரம் இரண்டு ராசிகளில் வருகிறதே நாங்கள் இரண்டு ராசிக்குரிய பரிகாரங்களையும் செய்யலாமா? எனக்கேட்டால் சொல்லக்கூடிய பதில் ஒன்று தான். உங்கள் நட்சத்திரம் எந்த ராசியில் வருகிறதோ? அந்த ராசிக்குரிய பரிகாரங்களை நீங்கள் செய்தால் போதும் என்பதுதான்.

ஒரு ராசியில் ஒன்பது நட்சத்திர பாதங்கள் வருகிறது. முழுமையாக இல்லாத போதிலும் வெவ்வேறு தன்மைகளுடைய மூன்று நட்சத்திரங்களின் பாதங்கள் ஒரு ராசியில் வருவதால் எல்லோருதும் ஒரே ராசிக்குரிய தட்சிணாமூர்த்தியைத் தான் வழிபடவேண்டுமா அவரவர் நட்சத்திரத்திற்குரிய தட்சணாமூர்த்தி உள்ள இடங்களைத் தெரிவித்தால் நன்றாகயிருக்குமே என நினைப்பவர்களின் அபிலாசையை பூர்த்தியை செய்யவேண்டியதும் நம்முடைய கடமைதான்.

ராசிக்குரிய தட்சணாமூர்த்திகளைப் போல் முழுமையான தனித்தன்மையுடன் கூடிய நிலைகளில்லாது ஒரே உருவமைப்புடன் தான் சிவன்கோயில்களில் தட்சணாமூர்த்திகளைக் காண இயலும். இருந்தபோதிலும் ஒவ்வொரு நட்சத்திற்கும் உரிய தட்சணாமூர்த்திகள் இடம்பெற்றுள்ள தலங்களைத் தெரிவிக்க எண்ணியபோது ஒருதலத்துக்குப்பதில் இரண்டு தலங்களைத் தெரிவித்தால் மக்களுக்கு அதிக அளவில் பயன்படும் என்பதால் ஒரு நட்சத்திரக் காரர்கள் வழிபடக்கூடிய இரண்டு தலங்கள் தெரிவிக்கப்படுகிறது. அந்த ஊர்களுக்கு செல்லக்கூடிய வழித்தடத்தினை தனிப்பட்டமுறையில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

நட்சத்திரத்திற்குரிய தட்சணாமூர்த்தியுடன் ராசிக்குரிய தட்சணாமூர்த்தியையும் வழிபட்டால் அதிக அளவில் பயன்பெறலாம். நட்சத்திரத்திற்குரிய தட்சணாமூர்த்தி கோயில் கொண்டுள்ள இரண்டு தலங்கள் தரப்பட்டுள்ளன. அந்த ஆலயத்திலோ அல்லது அவரவர்கள் குடியிருக்கும் ஊரில் உள்ள கோயில்களிலோ பரிகாரங்களைச் செய்து கொள்ளலாம்.

பரிகாரங்களைச் செய்து கொள்ள மட்டுமே சலுகை உண்டு. நட்சத்திரத்திற்குரிய தட்சணாமூர்த்தியை அடிக்கடி இல்லாவிட்டாலும், ஒரு தடவையாவது தரிசனம் செய்வது நலமாகும்.

இருபத்தேழு நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வழிபடவேண்டிய (தட்சிணாமூர்த்தி) கோயில்களும் பரிகாரங்களும்

அசுவினி

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் திங்களூர், அருள்மிகு பாதாளேஸ்வரர் திருக்கோயில், அரித்துவாரமங்கலம். தட்சணாமூர்த்திக்கு வெள்ளைநிற ஆடைஅணிவித்து நீலோத்பவமலர்மாலை சூட்டி வெல்லம் கலந்த உளுந்துவடை, பால்சோறு நைவேத்தியமாக படைத்து அர்ச்சனைசெய்து வழிபட்டு உளுந்து வடைகளைப் பக்தர்களுக்கு வழங்கவேண்டும். வறிய நிலையிலுள்ளோருக்கு வஸ்திர தானம் செய்யலாம். குழந்தைகளுக்கு குதிரை பொம்மை தானம் செய்யலாம். குதிரைகளுக்கு ஆகாரம் வழங்கலாம். தட்சணாமூர்த்தி, கேது, செவ்வாய் காயத்ரியை ஓதி வழிபடுவது நன்மைதரும்

பரணி

அருள்மிகு வன்மீகநாதர் திருக்கோயில் திருவொற்றியூர், அருள்மிகு சேஷபுரீஸ்வரர், இராப்பட்டீஸ்வரம், தட்சணாமூர்த்திக்கு சந்தனக்காப்பிட்டு நீலநிற வஸ்திரம் அணிவித்து செவ்வரளிப்பூ மாலைசூட்டி வெல்லம் எள் கலந்து செய்யப்பட்ட மாஉருண்டை, சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியமாகப் படைத்து அர்ச்சனை செய்து வழிபட்டு தட்சணாமூர்த்திக்கு சுக்கிரன், செவ்வாய் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வருவது நலம் தரும்.

பசுக்களைப்போல் செய்த துணிபொம்மைக்குள் எள் உருண்டைகளை வைத்து குழந்தைகளுக்கும் கஞ்சி வடிக்காத அன்னத்தை நதிக்கரையில் உள்ளவர்களுக்கு தானம் செய்யலாம். மாஉருண்டைகளை பக்தர்களுக்கு வழங்குவதும் நலம்தரும். மேலும் எருமைப்பாலில் சர்க்கரை கலந்து சிறுவர் சிறுமியருக்கு வழங்கலாம்.

கார்த்திகை

அருள்மிகு சிவலோகநாதர் திருக்கோயில், திருமுண்டீச்சுரம், அருள்மிகு மங்களேஸ்வரர் திருக்கோயில், திரு உத்தரகோசமங்கை. தட்சணாமூர்த்திக்கு நெய் அபிஷேகம் செய்து சந்தன காப்பிட்டு சிவப்புநிற ஆடை அணிவித்து செவ்வரளி மாலை சூட்டி நெய்யால் செய்யப்பட்ட அப்பங்களை நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சூரியன், சுக்கிரன் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வருவது நலம் தரும்.

நெய்யால் செய்யப்பட்ட அப்பங்களை தானம் செய்ய வேண்டும். ஆட்டு ரோமத்தால் செய்யப்பட்ட கம்பளி போர்வைகளை முதியவர்களுக்குத் தானமாக வழங்கலாம்.

ரோஹிணி

அருள்மிகு நாவலேஸ்வரர் திருக்கோயில் திருநாவலூர், அருள்மிகு சற்குணலிங்கேஸ்வரர் திருக்கோயில் மருதாந்தநல்லூர். தட்சணாமூர்த்திக்கு கஸ்தூரி கலந்த சந்தனக் காப்பிட்டு கறுப்பு வஸ்திரம் அணிவித்து செங்கழநீர்ப்பூ மாலை சூட்டி பால்சாதம், நெய்கலந்த சாதம், உளுந்தால் செய்யப்பட்ட இனிப்பு வடைகளை நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சந்திரன், சுக்கிரன் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வருவது நன்மை செய்யும்.

படையலுக்கு வைக்கப்பட்டது போன்றவைகளைத் தானம் செய்வதுடன் கிருஷ்ணர் பொம்மைகளை குழந்தைகளுக்கு தானமாக வழங்கவேண்டும்.

மிருகசீரிஷம்

அருள்மிகு வாய்மூர்நாதர் திருக்கோயில் திருவாய்மூர், அருள்மிகு அக்கினீஸ்வரர் திருக்கோயில் கஞ்சனூர். தட்சணாமூர்த்திக்கு வெண்சந்தனக்காப்பிட்டு மஞ்சள்நிறக்கோடுள்ள வெள்ளை ஆடை அணிவித்து முல்லைப் பூமாலை அணிவித்து பால் பாயாசம், குங்குமப்பூ கலந்த அன்னம் நைவேத்யம்


குரவே சர்வலோகானாம் பிஷஜே பவ ரோகிணாம்
நிதயே சர்வ வித்யானாம் ஸ்ரீ தட்சிணாமூர்த்தயே நம:

படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, செவ்வாய், புதன் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர சகல நன்மைகளும் கிடைக்கும். பால்பாயாசம் தானம் செய்யவேண்டும்.

திருவாதிரை

அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் ஆலங்குடி, அருள்மிகு ஏடகநாதேஸ்வரர் திருவேடகம். தட்சணாமூர்த்திக்கு வெண்சந்தனத்தால் காப்பிட்டு வெள்ளைநிற ஆடை அணிவித்து ஊமத்தம்பூ மாலை சூட்டி தயிரன்னம், வெல்லம் கலந்த எள்ளுசாதம் நைவேத்யமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்தி , ராகு, புதன் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வருவது நல்லது. எண்ணெய் குளியலுக்கு தேவையானதைத் தானம் செய்யவும். வெல்லம் கலந்த எள் சாதம் தானம் செய்யவும்.

புனர்பூசம்

அருள்மிகுதுயர்தீர்த்தநாதர் திருக்கோயில் ஓமாம்புலியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் திருவொற்றியூர். தட்சணாமூர்த்திக்கு குங்குமப்பூ கலந்த சந்தனம் காப்பிட்டு மஞ்சள் நிற ஆடை அணிவித்து மல்லிகைமலர் மாலை சூட்டி சர்க்கரைப்பொங்கல் நெய்யால் பக்குவம் செய்த அதிரஸம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, குரு, சந்திரன் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர நலம் பெருகும்.

சர்க்கரைப் பொங்கலையும் நெய்யால் பக்குவம் செய்யப்பட்ட பலகாரங்கள் மீது நெய் ஊற்றியும் தானம் செய்யலாம். கோயிலுக்குப் பச்சைக்கற்பூரம் ஜவ்வாது கலந்த சந்தனத்தை தானம் செய்யவும்.

பூசம்

அருள்மிகு திரிசூலநாதர் திருக்கோயில் திரிசூலம், அருள்மிகு திருமேனிநாதர் திருக்கோயில் ஒழுகமங்கலம். தட்சணாமூர்த்திக்கு குங்குமப்பூ, கஸ்தூரி கலந்த சந்தனக்காப்பிட்டு மஞ்சள்நிற ஆடை அணிவித்து தாமரை மலர்மாலை அணிவித்து கல்கண்டு பொங்கல் நெல்லிக்காய் சாதம், பால்சாதம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி சனி, சந்திரன் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர எல்லா வளமும் பெறலாம்.

கல்கண்டு பொங்கல், நெல்லிக்காய் சாதம், பால்சாதம் தானமாக வழங்கவும். குழந்தைகளுக்கு கவரிங் நகைகள் தானமாக வழங்கலாம்.

ஆயில்யம்

அருள்மிகு பக்தவத்சலேஸ்வரர் திருக்கோயில் நாகத்தி, அருள்மிகு சுகந்தவனேஸ்வரர் திருக்கோயில் பெரிச்சிகோயில். ராகுகாலத்தில் தட்சணாமூர்த்திக்கு குங்குமப்பூ ஜவ்வாது கலந்த சந்தனக்காப்பிட்டு மஞ்சள்நிற ஆடை அணிவித்து பாயாசம் அல்லது பால்கலந்த அன்னம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி புதன் சந்திரன் காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர நன்மைகள் கிடைக்கும். பால் பழங்கள் தானம் செய்யவேண்டும். சிவப்புநிறத்துணியில் பசுமாட்டைப்போல் செய்து அதற்குள் பழங்களை வைத்து தானம் செய்வது மிகவும் சிறப்பு.

மகம்

அருள்மிகு அரம்பேஸ்வரர் திருக்கோயில் எலுமியன்கோட்டூர், அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயில் கொடுமுடி. தட்சணாமூர்த்திக்கு கறுப்பு நிற வஸ்திரம் அணிவித்து சண்பகப்பூ மாலை சூட்டி நெய் சாதம், அதிரஸம், எள்சாதம் கோதுமையில் எள் கலந்து செய்யப்பட்ட பலகாரங்கள் நைவேத்தியமாகப் படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சனி, சூரியன் காயத்ரிகளை ஓதி வழிபட்டு நர நலம் பெருகும்.

எள் கலந்து செய்த பலகாரங்களைத் தானம் செய்யவும் கறுப்பு நிறத்துணியில் பசுபோல செய்து அதில் எள் உருண்டைகளை வைத்து தானம் செய்யவேண்டும்.

பூரம்

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் அகரம் கோவிந்தவாடி, அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில் வேங்கைவாசல். தட்சணாமூர்த்திக்கு சந்தனத்தால் காப்பிட்டு சிவப்பு வஸ்திரம் அணிவித்து அரளிப்பூ மாலை சூட்டி எள்சாதம், உளுந்து சாதம் தேன்பாகு நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சுக்கிரன், சூரியன் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர இன்பமான வாழ்வு அமையும். தேன் பாகு தானம் செய்யவேண்டும் (தேன்பாகு என்பது கரும்புச்சாறை காய்ச்சி கெட்டியாகவோ அல்லது நீர் போலவோ இல்லாமல் தோனைப் போலிருக்கும் போது எடுத்து தானம் செய்யவேண்டும்.

உத்திரம்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பட்டமங்கலம், அருள்மிகு பிரத்யட்ச பரமேஸ்வரர் திருக்கோயில் தேதியூர். தட்சணாமூர்த்திக்கு குங்குமப்பூ கலந்த சந்தனத்தால் காப்பிட்டு சிவப்பு நிற வஸ்திரம் அணிவித்து நீலோத்பல மலர் மாலை சூட்டி நெய், பால் கலந்த பொங்கல், பழங்கள் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி சூரியன் , புதன் காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர இன்பம் பெருகும். துணியில் செய்யப்பட்ட பசு பொம்மைக்குள் பழங்களை வைத்து தானம் செய்யவேண்டும். பொங்கல் சாதம் தானம் செய்யலாம்.

ஹஸ்தம்

அருள்மிகு பள்ளி கொண்டீஸ்வரர் திருக்கோயில் சுருட்டப்பள்ளி, அருள்மிகு மகாகாள நாதசுவாமி திருக்கோயில் கொல்லுமாங்குடி. தட்சணாமூர்த்திக்கு செஞ்சந்தனத்தால் காப்பிட்டு சிவப்புநிற ஆடை அணிவித்து செவ்வரளிப்பூ மாலை சூட்டி அதிரஸம், உளுந்து கலந்த அன்னம், பாயாசம், கறுப்பஞ்சாறு நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சந்திரன், புதன் காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர நலமான வாழ்வு அமையும். பாயாசம், கறும்புச்சாறு ஆகியவற்றை தானம் செய்யவேண்டும்.

சித்திரை

அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில் லால்குடி, அருள்மிகு அமிர்தகலேஸ்வரர் திருக்கோயில் சாக்கோட்டை. தட்சணாமூர்த்திக்கு குங்குமப்பூ கலந்த சந்தனத்தால் காப்பிட்டு பலவர்ண ஆடை அணிவித்து சித்திரான்னம் மோதகம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, செவ்வாய், சுக்கிரன் காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர நன்மைகள் கிடைக்கும். தக்காளி சாதம், எலுமிச்சைபழ சாதம், தயிர்சாதம் தானம் செய்யவேண்டும்.

ஸ்வாதி

அருள்மிகு விஷமங்களேஸ்வரர் திருக்கோயில் தொடையூர், அருள்மிகு ஜலநாதேஸ்வரர் திருக்கோயில் தக்கோலம். தட்சணாமூர்த்திக்கு சந்தனக்காப்பிட்டு நீலநிற ஆடை அணிவித்து கொடிமல்லி மலர்மாலை சூட்டி தயிர்சாதம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, ராகு, சுக்கிரன் காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர சுகமெலாம் கூடி வரும். பணத்தையும், தனக்கு பிடித்தமான பொருட்களையும் தானம் செய்யலாம்.

விசாகம்

அருள்மிகு பிரமபுரீஸ்வரர் திருக்கோயில் திருப்பட்டூர், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் சேலூர். தட்சணாமூர்த்திக்கு சிவப்பு வஸ்திரம் அணிவித்து முல்லைமலர் மாலை சூட்டி பீட்ருட் கலந்த அன்னம், தேன் படையலிட்டு அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, குரு, செவ்வாய் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர வெற்றி மேல் வெற்றி வரும். தானியங்கள் தானம் செய்வதுடன் குத்துவிளக்குகள் தானம் செய்யவேண்டும்.

அனுஷம்

அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில் திருவக்கரை, அருள்மிகு சிவானந்தேஸ்வரர்

திருக்கோயில் திருக்கண்டலம். தட்சணாமூர்த்திக்கு குங்குமப்பூ கலந்த சந்தனக் காப்பிட்டு சிவப்புநிற ஆடை அணிவித்து செவ்வரளி மாலை சூட்டி எள்ளுருண்டை, சர்க்கரைப்பொங்கல், கிழங்கு பழங்கள் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி சனி, செவ்வாய் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர கஷ்டமெலாம் விலகும். சர்க்கரைப் பொங்கல் தானம் செய்யவும். ஏழைகளுக்கு வஸ்திரம், போர்வை தானம் செய்யவும்.

கேட்டை

அருள்மிகு பஞ்சநாதேஸ்வரர் திருக்கோயில் திருவையாறு, அருள்மிகு மார்க்கசகாயேஸ்வரர் திருக்கோயில் மூவலூர். தட்சணாமூர்த்திக்கு சந்தனக்காப்பிட்டு பச்சைநிற ஆடை அணிவித்து மல்லிகைமலர் மாலை சூட்டி சித்ரான்னம், கருணைக்கிழங்கு மசியல், கீரை பொறியல் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, புதன், செவ்வாய் காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர இனிமையான வாழ்வமையும். சித்ரான்னம், கருணைக்கிழங்கு கீரை ஆகியவற்றுடன் கூடிய அன்னம் தானம் செய்யவேண்டும்.

மூலம்

அருள்மிகு நித்யசுந்தரேஸ்வரர் திருக்கோயில் திருநெடுங்களம் அருள்மிகு வடாரண்யேஸ்வரர் திருக்கோயில் திருவாலங்காடு. தட்சணாமூர்ததிக்கு கருங்காலி சந்தனத்தால் காப்பிட்டு கறுப்புநிற ஆடை அணிவித்து நீலோத்பலமலர் மாலை சூட்டி சிவந்த அன்னம் (பீட்ருட் கலந்து செய்யவும்) கிழங்குகள், பழங்கள் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, கேது, குரு காயத்ரி மந்திரங்களை ஓதி வழிபட்டுவர சிறப்பான வாழ்வு அமையும். கிழங்குகளையும், பழங்களையும் தானமாக வழங்கலாம்.

பூராடம்

அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் திருவெண்காடு, அருள்மிகு அக்கினீஸ்வரர் திருக்கோயில் திருக்காட்டுப்பள்ளி. தட்சணாமூர்த்திக்கு வெண்சந்தனக்காப்பிட்டு வெள்ளைநிற ஆடை அணிவித்து வெள்ளை அரளிப்பூ மாலை சூட்டி, பால்சாதம், எள் கலந்த சாதம், தயிர்சாதம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சுக்கிரன், குரு காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர நன்மைகள் தேடிவரும். பால்சாதம், எள் கலந்த சாதம், தயிர்சாதம் தானமாக செய்யவேண்டும்.

உத்திராடம்

அருள்மிகு சுக்ரீஸ்வரர் திருக்கோயில் குரக்குத்தளி, அருள்மிகு பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில் உறையூர். தட்சணாமூர்த்திக்கு செஞ்சந்தனக்காப்பிட்டு வெண்மைநிற ஆடை அணிவித்து ஐந்துவித மலர்கள் இணைத்து கட்டிய மாலை சூட்டி பயத்தம்பருப்பு கலந்த பொங்கல், பால்சாதம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி சனி, சூரியன் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர சிரமங்கள் நீங்கும். மோர் தானம் செய்யவேண்டும். தேன், தேன் பாகு தானம் செய்யவேண்டும்.

திருவோணம்

அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில் திருப்பூந்துருத்தி, அருள்மிகு தேவபுரீஸ்வரர் திருக்கோயில் தேவூர். தட்சணாமூர்த்திக்கு கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், ஜவ்வாது கலந்த சந்தனத்தால் காப்பிட்டு கறுப்பு நிற ஆடை அணிவித்து அல்லிமலர் மாலை சூட்டி பால் கலந்த பொங்கல் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, சந்திரன் சனி காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர நல்வாழ்வு அமையும். கம்பளி போர்வை வயதானவர்களுக்கு தானம் செய்யவேண்டும்.

அவிட்டம்

அருள்மிகு வெட்டியான்கோயில் கழுகுமலை, அருள்மிகு ஐராவதேஸ்வரர் திருக்கோயில் அத்திமுகம். தட்சணாமூர்த்திக்கு சந்தனக்காப்பிட்டு வெண்மைநிற ஆடை அணிவித்து தாமரை மலர் மாலைசூடி பாயாசம், பால்சாதம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, செவ்வாய், சனி காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர கஷ்டங்கள் நீங்கி வெற்றி கிட்டும். புதிய வஸ்திரங்களையும், தங்கநிற

பொருட்களையும் தானம் செய்யலாம். ஏழைப் பெண்களுக்கு திருமாங்கல்யம் செய்வதற்கு தங்கத்தினை தானமாக வழங்கலாம்.

சதயம்

அருள்மிகு காளஹஸ்தீநாதர் திருக்கோயில் காளஹஸ்தி, அருள்மிகு சாட்சிநாதேஸ்வரர் திருக்கோயில் திருப்புறம்பியம். தட்சணாமூர்த்திக்கு சந்தன காப்பிட்டு நீலநிற கோடிட்ட வெண்மைநிற ஆடை அணிவித்து வெண்தாமரைமலர் மாலைசூட்டி நெய் கலந்த அன்னம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, ராகு, சனி காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர நன்மை பெறலாம். சந்தனம் மற்றும் வாஸனாதி திரவியங்களை தானம் செய்யவேண்டும்.

பூரட்டாதி

அருள்மிகு வல்லீஸ்வரர் திருக்கோயில் திருவலிதாயம், அருள்மிகு மகாலிங்கேஸ்வரர் திருக்கோயில் திருவிடைமருதூர். தட்சணாமூர்த்திக்கு சந்தன காப்பிட்டு சிவப்புநிற ஆடை அணிவித்து எருக்கம்பூமாலை சூட்டி பலகாரங்கள், பழங்கள் , தயிர்சாதம், பால்சாதம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி குரு காயத்ரிகளை ஓதி வழிபட்டுவர நன்மை பெற முடியும். பலகாரங்கள், பழங்கள் தானம் செய்யவேண்டும்.

உத்திரட்டாதி

அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில் பவானி, அருள்மிகு வில்வனேஸ்வரர் திருக்கோயில் திருவைகாவூர். தட்சணாமூர்த்திக்கு சந்தனக் காப்பிட்டு வெள்ளைநிற ஆடை அணிவித்து தாமரைப்பூமலர் மாலை சூட்டி சர்க்கரைப் பொங்கல், பால் பொருட்களான பாஸந்தி, பால்கோவா, பால் அல்வா போன்ற இனிப்பு வகைகளை நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி சனி, குரு காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர துன்மெலாம் ஓடி மறையும். நெல், பால்பொருட்கள் தானம் செய்யவேண்டும்.

ரேவதி

அருள்மிகு வள்ளலார் திருக்கோயில் உத்தரமாயூரம்(மயிலாடுதுறை), அருள்மிகு மத்தியஸ்தநாதர் திருக்கோயில் தாருகாபுரம். தட்சணாமூர்த்திக்கு செஞ்சந்தனக்காப்பிட்டு சிவப்புநிற ஆடை அணிவித்து மந்தாரைப்பூ மாலை அல்லது தாமரைமலர் மாலை அணிவித்து எள்சாதம், பால்பாயாஸம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி புதன், குரு காயத்ரிகளை ஓதிவர நற்பலன் பெறலாம். பால் பாயாசம் தானம் செய்யவேண்டும். அவரவர் நட்சத்திரத்திற்குரிய தட்சணாமூர்த்தி கோயில் கொண்டுள்ள தலங்களையும் செய்யவேண்டிய பரிகாரங்களையும் பார்த்தோம். மேலும் தட்சிணாமூர்த்திக்கு பொதுவாக செய்யக்கூடிய சில பரிகாரங்களைப் பார்ப்போம்.

தனம் பெற செய்யவேண்டிய பரிகாரம்

வெள்ளிக்கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்குப் பன்னீர் அபிஷேகம், வாஸனாதி திரவியங்களால் அபிஷேகம் செய்து வெண்மை நிறப்பட்டுடுத்தி ராஜகிரீடம் பட்டால் அணிவித்து ஸ்வர்ணமாலை, தாமரைமலர் மாலை அணிவித்து பால்பாயாசம், சர்க்கரைப் பொங்கல், ஸ்வீட்ஸ், ஆப்பிள்பழம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து தட்சணாமூர்த்தி, குபேரன், லட்சுமி, ஸ்வர்ண ஆகர்ஷணா பைரவர் காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர பொன்பொருள் தேடிவரும்.

திருமணத் தடைநீங்கி திருமணம் நடைபெற

வெள்ளிக் கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்கு சந்தனம் கலந்த பன்னீர் அபிஷேகம், தேனபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம் செய்வித்து சந்தனக்காப்பிட்டு மஞ்சள் நிற ஆடை அணிவித்து ரோஜா மலர் மாலை, தாமரை மலர் மாலை அணிவித்து பலகாரங்கள், பழங்களுடன் கூடிய விருந்து நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து சுக்ரன் காயத்ரி, தட்சணாமூர்த்தி காயத்ரிகளை ஓதி வழிபட்டு வர விரைவில் திருமணம் நடைபெறும்.

குழந்தை பாக்கியம் கிட்டிட

வியாழக் கிழமை நாளில் தட்சணாமூர்த்திக்குப் பாலபிஷேகம், தேனபிஷேகம் , இளநீர் அபிஷேகம் செய்வித்து சந்தனக்காப்பிட்டு, மஞ்சள் நிற ஆடை அணிவித்து முந்திரிக் கொட்டை மாலை, முல்லைமலர் மாலை சூட்டி சர்க்கரை பொங்கல், முந்திரிப் பருப்பு பாயசம் இனிப்பு பதார்த்தங்கள் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து வழிபட்டு குழந்தைகளுக்கு இனிப்பு வழங்குவதுடன் விளையாட்டு சாமான்கள் தானம் செய்து வந்தால் விரைவில் குழந்தை பாக்கியம் ஏற்படும். தட்சணாமூர்த்தி குரு பிரஹஸ்பதி காயத்ரிகளை ஓதி வரவேண்டும்.

தட்சணாமூர்த்திக்கு தெரிவிக்கக்கூடிய பரிகாரங்கள் குருவால் அடையக்கூடிய நன்மைகளின் பொருட்டு என்றாலும் மோனகுருவான தட்சணாமூர்த்தி சர்வேஸ்வரன் என்பதால் நம்முடைய கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றக் கூடியவர்.

கேட்டவரமெலாம் தரக்கூடிய சிவபெருமான் தான் தட்சணாமூர்த்தி என்பதைப் புரிந்துகொண்டால் நம்முடைய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றக்கூடிய தயாநிதி என்பதை அறிந்து கொண்டால் அவர்வழிபாட்டினை நாளும் மறக்கமாட்டோம்.

தட்சணாமூர்த்திக்கு கொண்டைக்கடலை மாலை போட்டு வணங்குவர். உடலுக்கு புரதசத்தை வழங்கக்கூடிய கொண்டைக்கடலையை அறிவுக்கு ஆட்சியாளரான தட்சணாமூர்த்திக்கு போடுவதன் மூலம் நம் ஆன்மா அவரை அறிந்து கொள்வதுடன் நம்முடைய அறிவும் வளர்ச்சி அடையும்.

எளியவழி

பொட்டு கடலையும் சர்க்கரையும் கலந்து தட்சணாமூர்த்திக்கு படைத்து அர்ச்சனை செய்து உங்கள் கையால் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு வழங்கினால் உங்கள் தோஷங்கள் விலகும் நன்மைகள் நடக்கும். பரிகாரங்களைச் செய்து பயன் பெறுங்கள்.

அற்புத ஆலமர்ச் செல்வன்

வைப்புத்தலம் - திருப்புலிவனம். இத்தலம் காஞ்சிபுரத்திற்கு தெற்கேயும் உத்திரமேரூரிலிருந்து வடக்கே 5 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. இறைவனின் பெயர் வியாக்ர புரீஸ்வரர் (புலி). புலிநகச்சுவடுகள் பதிந்த சிவலிங்கம் உள்ளது. இவ்வாலயத்தின் தெற்குப் பிரகாரத்தில் ஆலமர்செல்வருக்கு (தட்சிணாமூர்த்தி) தனிக் கருவறை உள்ளது. படிகள் ஏறிச் சென்று தரிசிக்க வேண்டும். யோக சித்தியளிக்கும் சின்முத்திரை விளங்க, பரந்து வழியும் கேசத்தை பந்தனம் செய்யும் கிரீடம்; மார்பில் விளங்கும் வடங்கள்; வயிற்றை அழகு செய்யும் பட்டை ஆகியவற்றுடன் ஆசன நிலையில் உள்ள ஆடலழகர் போன்று அற்புதக் காட்சி அளிக்கிறார் தட்சிணாமூர்த்தி. இவருடைய திருமேனி அழகை கண்கள் சுவைக்கத் தொடங்கிவிட்டால் நேரம் போவதே தெரியாது என்பது நிதர்சனம்.

நவக்கிரகத்தில் பிரகஸ்பதி (வியாழன்) சிறப்பு

கலைகளின் நாயகியான கலைமகளை நாவிலே கொண்ட படைக்கும் கடவுளான பிரம்மதேவர் பிரஜாவிருத்தியின் பொருட்டு பிரஜாபதிகளையும் ரிஷிகளையும் படைத்தார். மரீசி,அத்திரி, பிருகு, ஆங்கிரஸ், புலஸ்தியர், கிருது, வசிஷ்டர் என்ற சப்தரிஷிகளிலே ஆங்கிரஸ் மகரிஷிக்கும் சிரத்தாதேவிக்கும் வியாழன், உதத்தியன் ஆகியோருடன் யோகசித்தி என்ற பெண்ணும் பிறந்தாள்

ஆங்கீரஸின் மகனான வியாழன் எனப்படும் பிருஹஸ்பதி சகல வேதங்களையும் அனைத்து கலைகளையும் கற்றுத் தேர்ந்து அறிவுடை அந்தணனாகி சிவபெருமானைத் தவத்தின்மூலம் தரிசித்து தேவர்களுக்கு குருவாகும் தகுதியைப் பெற்றார். தேவாசுரப்போராட்டங்களில் தேவர்களின் வெற்றிக்கு வழிவகுத்துக் கொடுத்தவரும் இவர்தான்.

ஒருசமயம் தன்னை மதியாத தேவேந்திரனை விட்டு குருவான பிருஹஸ்பதி விலகிச் சென்றார். அவரை எவராலும் கண்டுபிடிக்கமுடியாத நிலையில் அசுரர்களின் அட்டகாசம் அதிகரிக்க விப்ரசித்து

என்பவரை குருவாகக் கொண்டு இந்திரன் ஆட்சி செலுத்த இந்திரனைக் காக்க நாராயணக்கவசம் என்ற மந்திரத்தைக் கூறி தேவர்களின் பாதுகாப்புக்கு வழிவகுத்த விப்ரசித்து மறைமுகமாக அசுரர்களுக்கு உதவிசெய்வதையறிந்த இந்திரன் அவரைக் கொன்று விட்டான். விப்ரசித்துவைக் கொன்ற இந்தரனைக் கொல்ல விருத்தராசூரன் என்பவன் ஏவிவிடப்பட்டான். அவனைக் கொல்ல தன்னுடைய முதுகெபலும்பைத் தந்து தன்னை பலியாக்கிக் கொண்ட ததீசி முனிவரின் முதுகெலும்பில் ஆயுதம் செய்து விருத்திராசூரனை இந்திரன் கொன்றான்.

இதற்கிடையில் மிருத சஞ்சீவினி மந்திரத்தை பெற தவம் செய்யச்சென்ற சுக்கிராச்சாரியார் வெற்றிபெற்றதும் அவருடன் தாம்பத்ய தர்மத்தை இந்திரன் மகள் ஜெயந்தி அனுஷ்டித்து வந்தாள். அதேநேரம் தேவேந்திரனை விட்டுப் பிரிந்தபோதும் தேவர்களின் நலன்கருதி சுக்ராச்சாரியார் போல உருமாறி அசுரர்களை வழிநடத்திய தேவகுரு தேவர்களுடனான வெறுப்புணர்வை அசுரர்களின் உள்ளத்திலிருந்து போக்கி வந்தார். அவர்கள் மாறிவரும் வேளையில் சுக்கிராச்சாரியார் வந்து சேர்ந்தார். அசலைவிட போலிக்குத்தான் எப்பொழுதும் மதிப்பதிகம் என்பதை நிரூபிப்பதுபோல் அசல்சுக்கிராச்சாரியரை அசுரர்கள் நம்பவில்லை. எனவே சுக்கிராச்சாரியார் கோபம் கொண்டு இன்றுமுதல் தோல்விமேல் தோல்வி கண்டு அல்லல் படுவீர்களாக என அசுரர்களுக்கு சாபம் கொடுத்தார். அதை எதிர்பார்த்த தேவகுருவும் தன்னிருப்பிடம் திரும்ப குருவைக் காணாது தவித்த தேவர்கள் குரு திரும்பிய தகவலை இந்திரனிடம் தெரிவிக்க மன்னிப்பு கேட்டு குருபீடத்தை அலங்கரிக்கக் கூறிய இந்திரனின் பேச்சை ஏற்றுக்கொண்ட தேவகுரு தன் மகன் கசனை சுக்கிரனிடம் அனுப்பி செத்தவர்களை உயிர்ப்பிக்கும் மிருதசஞ்சீவினி மந்திரத்தை செயலற்றுப்போகச்செய்தார்.

பொறுமை மிக்கவரும் நன்மை செய்வதையே தன்னுடைய கடமையாகக் கொண்டவருமான தேவகுருவின் பார்வைக்கு பலம் அதிகம். நவகிரக நாயகர்களில் ஒருவராக பரிபாலனம் செய்யும் குரு தான் இருக்கும் இடங்களில் இருந்து 5,7,9 ஆகிய இடங்களைப் பார்க்க பட்டுப்பபோனது கூட துளிர்க்கும். குருபார்த்தால் கோடி புண்ணியம் என்றும் குருபார்த்தால் கோடி தோஷம் விலகும் என்றும் கூறுவர்.

வாகீசர், பீதாம்பரர், யுவர், த்ரிலோகேசர், லோகபூஜ்யர், கிரகாதீசர், தயாகரர், நிதீஜ்ஞர், நீதிகாரகர், தாராபதி, கிரகபீடாபஹாரகர், ஸௌம்யமூர்த்தி, அந்தணன், அமைச்சன் அரசன், ஆசான், ஆண்டளப்பான், குரு, சிகண்டிசன், சிகண்டிதன், சீவன், சுரகுரு, தெய்வமந்திரி, நற்கோள், பிரகஸ்பதி, பீதகன், பொன் மறையோன், வேந்தன், வியாழபகவான், தேவகுரு எனப்பலவாறு அழைக்கப்பட்ட போதிலும் குரு என்றே பலரும் அழைத்து வருகின்றனர்.

தூய்மைக்கும் அறிவுக்கும் இருப்பிடமாகத் திகழும் வியாழ பகவான் புத்திர உற்பத்திக்கு காரகம் ஏற்றுள்ளார். விஞ்ஞானப் பூர்வமாக பூமியில் உயிரினங்கள் தோன்ற சூரியனிலிருந்து வெளிப்படும் அல்ட்ராவயலெட் என்ற நீலநிறகிரணமும் வியாழன் கிரகத்திலிருந்து வெளிப்படும் மீதேன் என்ற மஞ்சள் நிறக்கிரணமும் இணைவது தான் காரணம் என்பது நாமறிந்ததே எனவே புத்திர காரணாக வியாழனை ஏற்றுக்கொண்டனர்.

வியாழன் எனப்படும் குரு கிரகம் தனத்திற்கும் புத்திர பாக்கியத்திற்கும் காரகமாக அமைந்திருப்பது போல் கீழ்க்கண்டவற்றிற்கும் காரகமாக அமைவதால் குரு பகவானை வழிபட்டு அவற்றினை எளிதில் அடைய முடியும்.

குருபகவானும் அதிதேவதையாக பிரம்மனும் பிரத்யதிதேவதையாக இந்திரனும் ஒரு சில நூல்களில் அதிதேவதை இந்திரன் ஒன்றும் பிரத்யதிதேவதையாக பிரம்மனும் மாறி மாறி குறிப்பிடப்பட்டுள்ளனர். வேறு சில நூல்களில், பிரம்மனுக்குப் பதிலாக அதிதேவதையாக தட்சணாமூர்த்தி குறிப்பிடப்படுகிறார். பரவலாக எல்லோரிடத்தும் குருவின் அதிதேவதையாக தட்சணாமூர்த்தியே வலம் வருகிறார். குருவிற்கு செய்யவேண்டிய பரிகாரங்களனைத்தும் தட்சணாமூர்த்திக்கே செய்யப்படுவதுடன் அவரையே குருவாகவும் எண்ணி மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

குருபகவான் காரகம் வகிப்பனவற்றைக் காண்போம் 1. வேதம் ஓதுதல் 2. புராணப் பிரசங்கம் 3.உபதேசம் 4.வக்கீல் 5.ஆசிரியர் 6.அரசவர்க்கம் 7.யாத்திரை 8.கோயில். 9.யோகப்பியாசம் 10.மஞ்சள்நிறம் 11.வடக்கு திசை 12. சுபகர்மம் 13. மகான்கள் 14. சந்தோஷம் 15. மருத்துவ கட்டிடம் 16.அரசு அலுவலகங்கள் 17. உபகாரம் 18. கீர்த்தி 19. பழங்கள் 20. வேள்வி 21. கிராமாதிபத்தியம் 22.தேசாதிபத்தியம் 23. நம்பிக்கை 24.தாட்சண்யம் 25. தெய்வபக்தி 26. உபகாரம் 27. வாக்கு 28.தருமம் 29.கற்பூரச் சுடர் 30. எலுமிச்சம்பழம் 31.அரசமரம் 32. சொர்ணம் 33. புஷ்பராகம் 34. கடலை 35. சீரகம் 36. கோரோசனை 37. பூர்வபுண்ணியம் 38. ஆலமரம் 39. இனிப்பு பானங்கள் .

இதுபோல் இன்னும் பலவற்றிற்கு காரகம் வகிக்கும் குருபகவான் அருளால் அவைகளைப் பெற குருஅருளைப் பெறவேண்டும்.

பிருஹஸ்பதி தாராதேவியுடன் சேர்ந்து அருள்பாலிக்கும் திருவுருவப்படத்தினை உங்கள் அருகில் எதிரில் நீங்கள் அவர் பார்வையில் இருப்பதுபோல் மாட்டிவைத்து அவரின் பார்வை சக்தியைப் பெற்று பலனடையுங்கள்

அல்லது தட்சணாமூர்த்தி சனகாதி முனிவர்களுடன் கூடிய திருவுருவப்படத்தினை உங்கள் எதிரில் மாட்டி வைத்து அவர் பார்வையில் நீங்கள் இருந்தாலும் உங்கள் கஷ்டங்கள் விலகி நலம் பெறுவீர்கள்.

பிரஹஸ்பதியின் பார்வை பலத்தினை அறிய ஒரு குட்டிக்கதை. குருபகவானின் சீடர்களில் ஒருவனாக இருந்த சந்திரன் சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தான். ஒருநாள் பிறந்த குழந்தையின் ஜாதகத்தை குருவின் உத்தரவுப்படி கணித்து பலன் சொன்னான் சந்திரன். பிறந்த ஒரு வருட முடிவில் தொட்டிலில் தூங்கும் குழந்தையினை பாம்பு ஒன்று கொத்தி சென்றுவிடும் என்று சந்திரன் பலன் கூற அதையும் பார்ப்போம் என்ற குருபகவான் அந்தநாளில் சந்திரனை அழைத்துக் கொண்டு அந்த குழந்தையை பார்த்தவாறிருந்தார். சந்திரன் கூறியபடி பாம்பும் வந்தது தொட்டிலில் இறங்கவும் செய்தது ஆனால் குழந்தையைக் கொத்தாமல் சென்றுவிட்டது.

சந்திரனுக்கோ மகாகோபம் தனக்கு ஜாதகப் பலன்கூற சரிவர கற்றுக் கொடுக்கவில்லை என்று கூறிய சந்திரனைக் கையமர்த்திய குரு நீ சொன்ன ஜாதக பலன் சரி ! குரு பார்த்தால் என்னாகும் எனக் கேட்டார்.

குரு பார்த்தால் குழந்தை ஆயுளுக்கு ஊறு நேராது ஆனால் ஜாதகத்தில் தான் குழந்தையின் ஆயுள் ஸ்தானத்தை குரு பார்க்கவில்லையே என்று சந்திரன் கூறினான்.

அப்பொழுது பார்க்கவில்லை வாஸ்தவம் தான் இப்பொழுது பார்க்கவில்லையா எனக் கேட்டதும் தான் பிறந்த ஜாதகத்தில் பார்க்காவிட்டாலும் நடப்பில் (கோச்சாரத்தில்) பார்த்ததால்தான் குழந்தையை பாம்பு கொத்தவில்லை என்பதைப் புரிந்து குருவிடம் மன்னிப்பு கேட்டான் சந்திரன்

அதேபோல் ஒரு குருவின் மகளுக்கு மாங்கல்ய பலம் இல்லை என்பதால் மணமகன் மண இரவன்றே இறந்து விடுவான் என்ற தன்னுடைய கனிப்பினால் மகளுக்கு திருமணமே செய்து வைக்காதிருந்தார். ஒருசமயம் ஓர் இளைஞன் அவருடைய மகளைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தான். அவர் உண்மையைக்கூற அந்த இளைஞனோ தனக்கு குருமூர்த்தமாயிருந்து வியாழ அனுக்கிரகத்தைப் பெறும் வழியை உபதேசிக்க வேண்டினான். அவரும் குருவாயிருந்து உபதேசித்தார். பின்னொரு நாளில் திருமணம் நடைபெற இரவு தம்பதியர் இருக்கும் அறை சாவி துவாரம் வழியே மணமகனையே பார்த்தவண்ணம் இருந்தார். தான் பார்ப்பது தவறு என்று தெரிந்தும் தன்னுடைய ஜாதக கணிப்பின் நம்பிக்கையில் என்ன நடக்குமோ என்று பார்த்தவாறிருந்தார். மணமகனுக்கு எதுவும் ஆகவில்லை.

குருவுக்கு ஆத்திரம் வந்தது தான் கற்றதெல்லாம் வீண். ஜோதிடமே பொய் என்ற முடிவுக்கு வந்த அவர் ஜோதிட சம்பந்தமான சுவடிகளையெல்லாம் எரித்துவிடுவது என்ற முடிவுடன் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு தனியிடத்தில் போட்டு எரிக்கப்போகும் வேளையில் அங்கு சிறுவனாக குருபகவான் தோன்றினார். ஐயா என்ன செய்யப்போகிறீர்கள் எனக்கேட்டார் சிறுவனாக வந்த குரு. காரணத்தைக் கூறிய ஜோதிட குரு ஜோதிடமே பொய்யாகிவிட்டதைத் தெரிவித்தார்.

ஐயா ஜோதிடத்தில் குருபார்த்தால் கோடி தோஷம் விலகும் என்பார்களே! தங்கள் மகளின் கணவனுக்கு குருவான நீங்கள் இரவு முழுக்க அவரைப் பார்த்ததை கவனத்தில் கொள்ளவில்லையே என்று கூறினார் சிறுவனாக வந்த குரு. அந்த குரு வியாழபகவான் அல்லவா என்றார் ஜோதிட குரு.

சாஸ்திரத்திலே குரு பார்த்தால் கோடி புண்ணியம் என்றும் குரு பார்த்தால் கோடி தோஷம் விலகும் என்றும் சொல்லும்போது தேவகுருவென்றோ, அசுர குரு என்றோ ஆசார்ய குரு என்றோ சொல்லாதபோத ஜோதிடம் பொய் என்ற முடிவுக்கு வரலாமா என சிறுவனாக வந்த குருபகவான் கேட்டதும் ஜோதிட குருவுக்கு குரு ஸ்தானத்திலிருந்ததால் தன்னுடைய பார்வைக்கும் பலம் உண்டு என்பது புரிந்து ஜோதிடச்சுவடிகளை கையில் எடுத்துக் கொண்டு நிமிர்ந்த போது அறிவூட்டிய குருபகவான் மறைந்துவிட்டிருந்தார்.

இவ்வாறு குருவுக்கு பார்வை பலம் எப்படி சக்தி நிறைந்ததாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

ஏகலைவன் கட்டைவிரலை குருதாட்சணையாகக் கேட்டு அவன் வளர்ச்சியைத் தடுத்த துரோணர் கற்ற வித்தை காலத்தில் மறந்து போகும் என சாபம் கொடுத்த பரசுராமர். இவர்களைப் போன்ற குணமில்லாது தன் மனைவியுடன் உறவாடி புதன் என்ற மகனை உருவாக்கிய சீடனான சந்திரனையும் தன் மனைவி தாராதேவியையும் மன்னித்த பிரகஸ்பதியான குருபகவான் பொறுமையின் இலக்கணம் ஆவார்.

தன்பார்வை பலத்தால் எல்லோருக்கும் குருபகவான் தானிருக்கும் இடத்திற்கு சுபிட்சம் தருவதில்லை என்பது ஜோதிட கருத்தாக உள்ளது. அந்தணன் தனித்து நின்றால் அவதிகள் மெத்த உண்டு என்பதும் கோச்சாரத்தில் 2,5, 7, 9, 11 ஆகிய இடங்கதைத் தவிர மற்ற இடங்களில் கெடுபலன்களை தருவதும் நல்ல குருவும் கெடுபலன் தருகிறாரே என வருத்தத்தினைத் தருகிறது. இதனால் தான் நம் முன்னோர்கள் கெட்டவர்களை விட நல்லவர்களே அதிபத்தியம் காரணமாக அதிக கெடுதல்களைச் செய்வார்கள் என்றார்கள்.

ஆனால் அதற்குப் பரிகாரமாக அந்த நல்ல கிரகங்களை வழிபட்டு வந்தால் கெடுபலன்கள் ஏற்படாது என்றும் தெரிவித்துள்ளனர்.

ஒரு கணம் மனம் சஞ்சலித்ததால் தவறான பார்வை மமதை என்ற தன் அண்ணியின்பேரில் விழாமல் வேறுபக்கம் திருப்ப அங்கிருந்த கருங்குருவிக்கு குருவித்தலையுடனும் மனித உடலுடனும் மகன் உருவாக தன்பாபம் தீர்க்க தலம் மேற்கொண்ட குரு பகவான் ஒரு பக்கமும் குருவி மகன் ஒரு பக்கம் தவம் செய்து விமோசனம் பெற்றனர். குருவிற்கு பாபம் விலகியது. குருவித்தலையனுக்கு மனிதத்தலை அமைந்து பரத்வாஜர் ஆனார்.

நல்லது செய்யும் குருவின் வாழ்விலும் சோகம்.

1. இந்திரனை விட்டு பிரிந்து சுக்கிராச்சாரியாராக அசுரர்களுடன் வாழ்ந்தது.
2. மனைவியான தாரையால் ஏற்பட்ட அவமானம்
3. குருவித்தலையுடன் மகன் பிறந்தது.
4. காலற்ற நட்சத்திரங்களை சூரியனும் உடலற்ற நட்சத்திரங்களை செவ்வாயும் பெற்றது போல் அறிவுடைய குரு தலையற்ற நட்சத்திரங்களான புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களுக்கு அதிபதியானது.

இதுபோன்ற சோகங்களுக்கு ஆளான போதிலும் பிறர் நலமே தன் எண்ணமாகக் கொண்ட குருபகவானை வியாழக் கிழமை நாளில் சந்தனக்காப்பிட்டு மஞ்சள் நிறப்பட்டணிவித்து முல்லை மலர் மாலையும், கொண்டைக்கடலை மாலையும் அணிவித்து கடலைப் பருப்பால் செய்த பலகாரங்களை நைவேதியமாக படைத்து அர்ச்சனை செய்து வர எண்ணிய காரியம் கைகூடும்.

கோச்சாரபலன்கள் அடிப்படையில் குரு நற்பலன் தராத இடங்களில் இருந்தால் வசதிக்குறை வானவர்கள் வியாழக்கிழமை தோறும் பொட்டுக்கடலை சர்க்கரை வாங்கித்தந்து குரு மற்றும்

தட்சணாமூர்த்தி காலடியில் வைத்து அர்ச்சனை செய்து வழிபட்டு அதனை தங்கள் கையால் விநியோகம் செய்தால் கஷ்டம் விலகும் நன்மை பெருகும்.

ஒவ்வொரு ராசிக்காரர்களும் குருபகவான் வழிபட்டு பயன்பெற்ற ஆலயங்களில் எந்த ஆலயத்திற்கு சென்று வழிபட்டால் பயன் கிடைக்கும் என்பதைப் பார்ப்போம். கீழ்க்கண்ட ஊர்களில் உள்ள இறைவனை வழிபடுவதன் மூலம் பயன்பெறலாம்.

ராசி	**வழிபடவேண்டிய தெய்வம்**	**ஆலயம் அமைந்துள்ள ஊர்.**
மேஷம்	பூமிபாலர்	திருப்புளிங்குடி
ரிஷபம்	திரைலோக்கிய சுந்தரர்	திருலோக்கி
மிதுனம்	சோமேசர்	குடந்தைக்காரோணம்
கடகம்	வசிஷ்டேஸ்வரர்	தென்குடித்திட்டை
சிம்மம்	அக்னிபுரீஸ்வரர்	திருப்புகலூர்
கன்னி	பெருமாள்	குருவித்துறை
துலாம்	மயூரநாதர்	மயிலாடுதுறை
விருச்சிகம்	வல்லீஸ்வரர்	திருவலிதாயம்
தனுசு	காயாரோகணேஸ்வரர்	காஞ்சிபிள்ளையார்பாளையம்
மகரம்	வீரேட்டேஸ்வரர்	திருக்கோயிலூர்
கும்பம்	ஸ்ரீ வரதராஜர்	காஞ் சிபுரம் அத்திகிரி
மீனம்	பொன்வாசி நாதர்	இலுப்பூர்

எல்லா ராசிக்காரர்களுக்கும் உரிய குருபரிகாரத் தலமாக திருச்செந்தூர் முருகன்கோயில் பல காலமாக திகழ்கிறது. திருச்செந்தூர் முருகனையும் ஒருமுறை வழிபடுவது சிறந்தது. அப்பனுக்கே பாடம் சொன்ன குருபகவானல்லவா முருகப்பெருமான். அருணகிரி நாதர் கூட "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என குருவாக முருகப்பெருமானை அழைக்கிறார். முருகனும் குருவாயிருந்த போதிலும் திருச்செந்தூரில் சிவலிங்கவழிபாடு செய்துள்ளார். முருக குரு வழிபட்டதலம் குரு தோஷங்களைப் போக்கும் தலமாக சிறந்து விளங்குவதில் வியப்பேதுமில்லை.

ஹயக்ரீவரும், கலைவாணியும் கல்விக்கதிபதியாக விளங்கிய போதிலும் கீதா உபதேசம் செய்த பார்த்தசாரதியும் குருவாகத் திகழ்வதால் பார்த்தசாரதி கோயில்களும் குருதோஷம் போக்கும் தலமாகத் திகழ்கிறது. வைணவத்தை கடைப்பிடித்து நாராயணனை முழுமுதல் கடவுளாக கொண்டவர்கள் பார்த்தசாரதி கோயிலுக்கு சென்று பார்த்தசாரதியான கிருஷ்ணரை தரிசித்து வருவதன்மூலமும் சோழவந்தான் அருகிலுள்ள குருவித்துறையிலுள்ள பெருமாளையும் குருபகவானையும் தரிசித்து வருவதன் மூலமும் குருவால் ஏற்பட்டுள்ள தோஷங்களைப் போக்கிக் கொள்ளமுடியும்.

எனவே தெய்வ வழிபாடுகளின் மூலம் குரு தோஷங்களைப் போக்கிக் கொள்வதே சிறப்பாக கருதவேண்டியுள்ளது. ஏனென்றால் தற்காலத்தில் குருபக்தி குறைந்து வருகிறது. குருவிற்காக கண்களை இழக்க தயாராக இருந்த கோரக்கரும் குரு சொன்னதற்காக கட்டைவிரலை வெட்டிக் கொடுத்த ஏகலைவனும் பிறந்த நாட்டில் குருபக்தி குறைந்து வருவது மட்டுமல்ல குருவிடம் பெறக்கூடிய தீட்சைகளான 1. நயனதீட்சை, 2.ஸ்பரிச தீட்சை, 3. மானச தீட்சை 4. வாசகதீட்சை, 5. யோகதீட்சை, 6.அவுத்திரி தீட்சை, 7. ஞானதீட்சை, 8. கிரியா தீட்சை, 9. சுபீச தீட்சை போன்றவற்றில் ஏதேனும் ஒன்றைப் பெற முடிந்தால் குரு பார்வையிலிருக்க முடிந்தால் ஏது கஷ்டம். குருவிடம் எல்லாவற்றையும் சமர்ப்பிக்க முடிந்தால் அவரது கருணைப் பார்வை நம்மீது விழுந்தால் போதும் நலமே விளையும்.

குருபகவான் குலத்தை காப்பவர் குலதெய்வ வழிபாட்டினைத் தவறாது செய்ய வைப்பவர். குருவை வழிபடுபவர் தரும நெறிகளை கடைப்பிடித்து எல்லோருக்கும் நல்லவராகத் திகழச் செய்வார்.

குருமேடு வலுவற்றவர்கள் தட்சணாமூர்த்தியையும் கிருஷ்ணரையும் வழிபட்டால் குருமேடு வலுப்பெற்று அதிகாரம் செய்யும் வாய்ப்பமையும். மூன்றாம் எண்ணிலே பிறந்தவர் கஷ்டப்பட்டால் எண் ஒன்றிலே பெயரமைத்துக் கொண்டால் கஷ்ட வாழ்வு இஷ்ட வாழ்வாக மாறும்.

குருபகவான் அருள்பெறவும் குருபகவானால் ஏற்பட்ட தோஷங்களைப் போக்கிடவும் செய்யக்கூடிய ஒரு சில பரிகாரங்களைப் பார்ப்போம். அதற்குமுன் அவர் நன்மைதரும் அமைப்பையும் பார்ப்போம். ஜனனகாலத்தில் ரிஷபத்தில் குரு இருந்தால் அவருடைய உதடசைந்தால் ஊர் அசையும் என்பார்கள்.

சிம்மராசியில் குரு இருந்தால் பகைவர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்வார்கள்.

தனுசு ராசியில் குரு இருந்தால் முடி சூடா மன்னராகத் திகழ்வர்.

கும்பராசியில் குரு இருந்தால் அறிவுடைய அந்தணனாகத் திகழ்வர்.

சந்திரனுக்கு 1,4,7,10ல் குரு இருந்தால் அனைத்து தோஷங்களும் ஒரு சிங்கத்தைக் கண்டு பல யானைகள் பயந்து ஓடுவதைப் போல் பறந்து ஓடிவிடும் இதனை கெஜகேஸரி யோகம் என்பர்.

1,5,9 ஆகிய திரிகோணங்களில் புதன், சுக்கிரன் குரு ஆகியோர் இருந்து சுக்கிரன் ஆட்சி பெற்றிருந்தால் ஜாதகர் கவிஞராகத் திகழ்வர்.

2,4,7,8,12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் என்பர். அந்த செவ்வாயை குரு பார்த்தால் செவ்வாய் தோஷம் விலகிவிடும் என்பர்.

இப்படியெல்லாம் நற்பலன்தரும் குரு தானிருக்கும் இடத்திலிருந்து 5,7,9 ஆகிய இடங்களைப் பார்ப்பதன் மூலம் அந்த இடங்களின் நற்பலன்களைவிருத்தியடையச் செய்வர்.

நல்ல பலன்களைத் தருபவர் தரும் கெடுதல் பலன்களிலிருந்து விடுபட செய்யவேண்டிய பரிகாரங்களைக் காண்போம்.

1,4,7,10 ஆகிய இடங்களில் குரு இருந்தாலும் கேந்திரத்திற்குரிய வீட்டதிபதியாக குரு இருந்தாலும் கேந்திராதிபத்திய தோஷத்தை தந்து ஜாதகரைப் படாத பாடு படுத்திவிடுவார்.

கேந்திராதிபத்திய தோஷம் நீங்க

வெள்ளிக் கிழமை நாளில் பிரகஸ்பதியாகிய குருவிற்கு அல்லது தட்சிணாமூர்த்திக்கு ஜவ்வாது அரகஜா சந்தனம் கலந்த பன்னீரால் அபிஷேகம் செய்து சந்தன காப்பிட்டு வெண்பட்டு அணிவித்து தாமரைமலர் மாலை சூட்டி சர்க்கரைப் பொங்கல், சுண்டல் படையலிட்டு, அர்ச்சனை செய்து லட்சுமி, நாராயணன், குரு காயத்ரிகளை ஓதி வர கேந்திராதிபத்திய தோஷம் விலகி ஜாதகருக்கு நற்பலன்கள் ஏற்படும். மாரகாதிபதியாக வரும் குரு மாரகத்தைத் தராவிடில் மாரகத்திற்கு ஒப்பான கண்டங்களை கஷ்டங்களைத் தரக்கூடியவர் அத்தகைய கெடுபலன்களைத் தரும் அமைப்பைப் பார்ப்போம்.

ஸ்திரலக்கனங்களான ரிஷபம், சிம்மம் ஆகியவற்றிற்கு எட்டாமிடத்ததிபதியாக வரும் குரு மாரகாதிபதி ஆவார். உபயலக்கினங்களான மிதுனம், கன்னிக்கு ஏழாமிடத்து அதிபதியாக வரும் குருமாரகாதிபதி ஆவார். இதேபோல் ஒருவருக்கு ஜனனகால தெசையிலிருந்து ஆறாவது தெசையாக குரு தெசை வந்தால் அவருக்கு அது மாரகதெசை ஆகும். இத்தகைய மாரகாதிபதி குருவானவர் கொல்லாமல் கொல்வார் அதிலிருந்து விடுபட செய்யக்கூடிய பரிகாரத்தைப் பார்ப்போம்.

மாரக கண்டத்திலிருந்து விடுபட

சனிக்கிழமை நாளில் குரு அல்லது தட்சணாமூர்த்திக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் இளநீர் அபிஷேகம் மஞ்சள் பொடி கலந்த பன்னீர் அபிஷேகம் செய்வித்து அரகஜா, ஜவ்வாது, கஸ்தூரி, கோரோசனை

சேர்த்தரைத்த சந்தனத்தால் காப்பிட்டு இடையில் நீலநிற பட்டணிவித்து தலையில் மஞ்சள் நிற தலைப்பாகை அணிவித்து நீலநிறமாலை, முல்லை மலர்மாலை சூட்டி எள் கலந்த இனிப்பு பதார்த்தங்கள், கறிவேப்பிலை பொடி கலந்த அன்னம், கடலைப்பருப்பு பொடி கலந்த அன்னம், மிளகு கலந்த வெண்பொங்கல் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து குருபகவான், சனிபகவான், தட்சணாமூர்த்தி காயத்ரிகளை ஓதிவர மாரகத்திற்கு ஒப்பான கண்டங்கள் விலகி நற்பலன்கள் விளையும். பிறந்த இடத்தைப் பாழ் செய்யும் அமைப்பில் மூன்றாமிடத்தில் குரு அமர்ந்திருந்தால் செய்யவேண்டிய பரிகாரத்தைப் பார்ப்போம்.

பிறந்த இடம் செழிப்படைய

திங்கட்கிழமை நாளில் குரு அல்லது தட்சணாமூர்த்திக்கு பாலாபிஷேகம், தேனபிஷேகம், பன்னீராபிஷேகம் செய்வித்து சந்தனக்காப்பிட்டு சந்தனக் கலர் பட்டணிவித்து ஜவ்வரிசி பாசாசம், சாத்துக்குடி, ஆரஞ்சுப்பழம், சுண்டல் , தயிர்சாதம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து குரு, சந்திரன், தட்சணாமூர்த்தி காயத்ரிகளை ஓதிவர பிறந்த இடம் பெருமை பெறும் வகையில் தழைத்தோங்கும். குரு ஐந்தாமிடத்திலிருந்தால் காரகோ பாவநாஸ்தி என்பதற்கேற்ப புத்திர பாக்கியத்தால் கவலை விளையும் புத்திரர் பற்றிய கவலை நீங்க செய்ய வேண்டிய பரிகாரத்தினைப் பார்ப்போம்.

புத்திரக் கவலை நீங்க

வியாழக் கிழமை நாளில் குரு அல்லது தட்சணாமூர்த்திக்கு பாலபிஷேகம் செய்வித்து சந்தனக்காப்பிட்டு முல்லைமலர் மாலை, முந்திரிக்கொட்டை மாலை சூட்டி பால்சாதம் பால்பாயாசம் சுண்டல் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து குரு, தட்சணாமூர்த்தி காயத்ரிகளை ஓதி சிறு வயது குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினால் புத்திரக் கவலை நீங்கும்.

தனப்பிராப்தி இல்லையே காசு கஷ்டம் கலங்க வைக்கிறதே என்போரும் தனகாரகனாகிய குரு இரண்டிலே அமர்ந்து காரகோ பாவ நாஸ்தி என்பதற்கிணங்க வருமானமின்றி அவதிப் படுவோரும் செய்யவேண்டிய பரிகாரத்தைப் பார்ப்போம்.

தனம் பெருக

வெள்ளிக்கிழமை நாளில் குரு அல்லது தட்சணாமூர்த்திக்கு ஸ்வர்ணாபிஷேகம் செய்வித்து வெண்ணிறப் பட்டுடுத்தி வெண்பட்டு தலைப்பாகை அணிவித்து முல்லைமலர் மாலை, வெண்தாமரை மலர்மாலை சூட்டி பால் பாயாசம், சர்க்கரைப்பொங்கல், ஆரஞ்சுப்பழம், மாம்பழம் சுண்டல் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து குரு, சுக்கிரன், தட்சணாமூர்த்தி காயத்ரி ஓதிவர செல்வம் பெருகும்.

குரு தரும் நோய்களான தோல் வியாதி, சர்க்கரை வியாதி, மஞ்சள் காமாலை, சரீரம் தடித்தம், கொழுப்பால் உண்டாகும் நோய்கள், அஜீரணக்கோளாறுகள் காதுநோய், ஈரல் கோளாறு, தொடைகளில் கட்டி, கைகால்வீக்கம், மர்ம உறுப்பில் புண் போன்றவைகளிலிருந்து விடுபட செய்யவேண்டிய பரிகாரத்தினைப் பார்ப்போம்.

நோய்களிலிருந்து விடுபட

புதன்கிழமை நாளில் குரு அல்லது தட்சணாமூர்த்திக்கு மூலிகை அபிஷேகம், தயிர் அபிஷேகம், செய்வித்து வெண்ணெய் காப்பிட்டு சிறயாநங்கை இலை, முடக்கத்தான் இலை, குப்பைமேனி இலை ஆலாம் இலை, மணத்தக்காளி இலை, வில்வ இலை, துளசி இலை, மரிக்கொழுந்து போன்றவற்றால் கட்டப்பட்ட மாலை, முல்லைமலர் மாலை, நாகலிங்கப்பூ மாலை அணிவித்து பச்சைப்பயறு சுண்டல், கொண்டக்கடலை சுண்டல், கறிவேப்பிலை பொடி கலந்த அன்னம் கொத்தமல்லி துவையல், புதினா துவையால், சாத்துக்குடி, ஆப்பிள், ஆரஞ்சு படையலிட்டு அர்ச்சனை செய்து, குரு, புதன், சுக்கிரன் தட்சணாமூர்த்தி காயத்ரி ஓதி வழிபட்டு வர சகல நோய்களிலிருந்தும் நிவாரணம் கிடைக்கும்.

கோச்சாரத்தில் குரு ராசிகளுக்கு 2,5,7,9,11 ஆகிய இடங்களில் வரும் போது நல்ல பலன்களையும் மீதி இடங்களில் கெடு பலன்களையும் தருவார் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஜென்மராமர் வனத்திலே சீதையை சிறை வைத்ததும்
தீதிலாதொரு மூன்றிலே துரியோதனன் படைமாண்டதும்
இன்மையெட்டினில் வாலிபட்டமிழந்து போம்படியானதும்
ஈசனாரொரு பத்திலே தலையோட்டிலே இரந்துண்டதும்
தர்மபுத்திரர் நாலிலே வனவாசமப்படி போனதும்
சத்திய மாமுனி யாறிலே யிருகாலிலே தலை பூண்டதும்
வன்மை யுற்றிட ராவணன் முடி பன்னிரண்டில் வீழ்ந்ததும்
மன்னுமா குருசாரி மாமனை வாழ்விலாதுறுமென்பவே.

பாடலைக் கண்டோம் பரிகாரங்களைப் பார்ப்போம்.

ஜென்மத்திலே குரு வந்தபொழுது ராமர் வனவாசம் செய்தார். சீதையோ ஜென்மத்தில் குருவந்த போது இராவணனால் சிறை வைக்கப்பட்டாள். அவதாரங்களே அவதிப்பட்டார்களென்றால் நாம் எம்மாத்திரம்?

ஜென்ம குருவிற்கு பரிகாரம்

ஞாயிற்றுக்கிழமை நாளில் குரு அல்லது தட்சணாமூர்த்திக்கு பாலபிஷேகம் செய்வித்து சந்தன காப்பிட்டு சிவப்புநிற பட்டுடுத்தி சிவப்புநிறப்பட்டு தலைப்பாகை அணிவித்து முல்லைப் பூ மாலையும், செந்தாமரை மலர்மாலையும் அணிவித்து கோதுமை அவல் கேஸரி , சுண்டல், சர்க்கரைப் பொங்கல் படையலிட்டு அர்ச்சனை செய்து குரு, சூரியன், தட்சணாமூர்த்தி காயத்ரிகளை ஓதி வழிபட்டு வீட்டுப் பெரியோர்கள் குருமார்கள் மகான்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றால் ஜென்ம குருவால் எவ்வித தொந்தரவும் ஏற்படாது.

தீதிலாதொரு மூன்றிலே துரியோதனன் படை மாண்டதும். குரு மூன்றாமிடத்திலே வந்ததும் சக்கரவர்த்தியாய் ஆடாத ஆட்டம் ஆடிய துரியோதனன் படைகளே மாண்டது என்றால் நம் அதிகாரத்திற்குட்பட்டவர்கள் பாதிப்படைய மாட்டார்களா என்ன? குடும்ப நாசம் ஏற்படாதிருக்க செய்யவேண்டிய பரிகாரத்தினைப் பார்ப்போம்.

மூன்றாமிட குருவிற்கு பரிகாரம்

செவ்வாய்க்கிழமை நாளில் குரு அல்லது தட்சணாமூர்த்திக்கு குங்குமம் கலந்த பன்னீர் அபிஷேகம் செய்வித்து கொண்டக்கடலை காப்பிட்டு சிவப்பு பட்டணிவித்து வெற்றிலை மாலை, முல்லைப்பூ மாலை தாமரைப்பூ மாலை அணிவித்து சர்க்கரைப்பொங்கல் பால்பாயாசம் சுண்டல் படையலிட்டு அர்ச்சனை செய்து குரு, செவ்வாய், தட்சணாமூர்த்தி காயத்ரிகளைஓதி வழிபட்டு உறவினர்களுக்கும், குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் அன்னம் வழங்கி குலதெய்வத்தை வழிபட மூன்றாமிட குருவால் இன்னலில்லை.

இன்மையெட்டினில் வாலி பட்டமிழந்து போம்படி யானதும். எதிர்ப்போரின் சக்தியிலே பாதியை கவர்ந்து விடக்கூடியவனும் இராவணனை வாலில் கட்டி வாட்டியவனும் பராக்கிரம சாலியுமான வாலியே குரு எட்டாமிடத்தில் வந்தபோது பட்டத்தை இழந்தானென்றால் நாம் எம்மாத்திரம் எட்டாமிட குருவால் உரிமையையும், கீர்த்தியையும் இழக்காதிருக்க செய்யவேண்டிய பரிகாரத்தினைப் பார்ப்போம்.

ஞாயிற்றுக்கிழமை நாளில் குரு அல்லது தட்சணாமூர்த்திக்கு பால், தயிர், வெண்ணெய், நெய், தேன் கலவையால் அபிஷேகம் செய்வித்து வெண் பட்டாடையும், தலைப்பாகையும் அணிவித்து வெற்றிலைமாலை, துளசிமாலை, முல்லைப்பூமாலை அணிவித்து எலுமிச்சம்பழ தீபமேற்றி புளியோதரை, எலுமிச்சம்பழ சாதம் தயிர்சாதம் நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்து, குரு, சூரியன், தட்சணாமூர்த்தி காயத்ரியை ஓதி வழிபட்டு பங்காளிகளுக்கு அன்னமிட்டு உபசரித்துவர எட்டாமிட குருவால் ஏற்பட்ட தோஷம் விலகும்.


''ஈசானாரொரு பத்திலே தலையோட்டிலே இரந்து கண்டதும்'' குரு பத்தாமிடத்தில் வந்தபோது கல்லினுள் தேரைக்கும் உணவளிக்கக்கூடிய பரம்பொருளான பகவான் ஈஸ்வரனே தலையோட்டிலே பிச்சையெடுத்ததாக சொல்லும்பொழுது நாம் எம்மாத்திரம்.

கையில் ஒட்டியகபாலத்திற்காக பிச்சையேற்றாரேயன்றி தன் உணவிற்காக எடுக்க வில்லை. அதுபோல் நம்மைச் சார்ந்தவர்களுக்காக அவர்களின் உணவிற்காக அலைந்து திரிந்து வேலை செய்வதும் வசூலுக்காக பிறரிடம் கையேந்துவதும் கூட பிச்சையேற்பது போலத்தான் அதன் காரணமாக அவமதிப்பு ஏற்படாமலிருக்க செய்யவேண்டிய பரிகாரத்தைப் பார்ப்போம்.

பத்தாமிட குருவிற்கு பரிகாரம்

சனிக்கிழமை நாளில் குரு அல்லது தட்சணாமூர்த்திக்கு ருத்ராபிஷேகம் செய்வித்து அன்னக்காப்பிட்டு மரிக்கொழுந்து மாலை அணிவித்து அன்னம் படையலிட்டு அர்ச்சனை செய்து குரு சனி, தட்சணாமூர்த்தி காயத்ரிகளை ஓதி வழிபட்டு பின் அன்னதானம் செய்துவர பத்தாமிட குருவால் தொந்தரவுகள் விளையாது.

நான்காமிட குருவிற்கு ஜென்மகுருவிற்கு சொல்லப்பட்ட பரிகாரத்தையும் ஆறாமிட குருவிற்கு மூன்றாமிட குருவிற்கு சொல்லப்பட்ட பரிகாரத்தையும் பனிரெண்டாமிட குருவிற்கு எட்டாமிட குருவிற்கு சொல்லப்பட்ட பரிகாரத்தையும் செய்து வர சுபம் கிடைக்கும்.




திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
மயிலாடுதுறை அருள்மிகு ஸ்ரீ அபயாம்பிகை உடனாகிய ஸ்ரீ மாயூரநாதப் பெருமான் திருக்கோயில்
புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன
மஹாகும்பாபிஷேகப் பெருவிழா அழைப்பிதழ்
14.09.2005 புதன்கிழமை
பார்த்திப வருடம் ஆவணி மாதம் 29 ஆம் தேதி
காலை 9-15 மணிக்கு மேல் 10-15 மணிக்குள்

திருமயிலாடுதுறை திருப்பதிகம்

கரவின்றி நன்மாமலர் கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரமொன்றிய செஞ்சடையான் வாழ்
வர மா மயிலாடுதுறையே

- திருஞானசம்பந்தர்.



திருமயிலாடுதுறை திருப்பதிகம்

நிலைமை சொல்லு நெஞ்சேதவம் என்செய்தாய்
கலைகள் ஆயவல்லான் கயிலாய நன்
மலையன் மா மயிலாடுதுறையன் நம்
தலையின் மேலும் மனத்துளுந் தங்கவே.

- திருநாவுக்கரசர்



தேனே பாலே சர்க்கரையே தெவிட்டா அமுதே கற்கண்டே
சீனி யுடன்முப் பழச்சாற்றில் சிறந்த ரசமே செம்பொன்மலை
மானே மடலே மடக்கொடியே வளர்ந்த வனமே திருவதன
மயிலே குயிலே அன்பரெல்லாம் வாரிச் சொரியும் மணிநிதியே
ஊனே என்றன் உயிர்க்குயிரே உள்ளும் புறம்பும் உறுமொழியே
ஒளிசேர் கனகக் கற்பகமே உதித்த சுடரே திருப்பரமே
வானே வானின் வளிக்கனலே வனமே பூவே வரைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே அபயாம் பிகைத்தாயே.


- அபயாம்பிகை சதகம்



கோயில் சிறப்பு

ஸ்ரீ மத் அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும்வண்ணம் பெருங்கருணையுடன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தலங்கள் பலவாகும். அவற்றுள் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளாலும் திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடப்பெற்றதும் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை இயற்றிய தலபுராணம், நல்லத்துக்குடி கிருஷ்ணஅய்யர் பாடிய அபயாம்பிகை சதகம், காளமேகப்புலவர் தனிப்பாடல் ஆகிய பாடற் சிறப்புகள் பெற்றதும், காவிரி நதியின் தென்பால் விளங்குவதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறந்ததும், பிரமபுரம், கௌரீமாயூரம், மாயூரம், மயிலாடுதுறை எனப் பல பெயர்கள் தாங்கியதும், பிரமதீர்த்தம், இடபதீர்த்தம், காசியபதீர்த்தம், அகத்திய தீர்த்தம் முதலிய எண்பத்தாறு தீர்த்தங்களைப் பெற்றுள்ளதும் ஆகிய கௌரீ மாயூரத்தலம் மிகச் சிறந்தது.

ஒவ்வொரு ஆண்டும் துலா மாதத்தில் இடப தீர்த்தத்திலே காசி முதல் கன்னியாகுமரி வரையுள்ள மக்கள் வந்து, நியமப்படி நீராடி வருவதையும், கடைமுழுக்கு, முடவன் முழுக்குகளில் பல்லாயிர மக்கள் வந்து நீராடி இருமைப்பயன் எய்துவதையும் யாவரும் அறிவர். மற்றும் பிரமன் பதினாயிரம் ஆண்டுகள் தவஞ்செய்து சிருட்டித்தொழில் கைவரப் பெற்றதும், முதன்முதல் சூரிய வம்சத்து அரசரான திலீப சக்கரவர்த்தி என்பவரால் திருப்பணி செய்விக்கப் பெற்றதும், அவருக்கு இம்மையிலே ஆட்சிச் சிறப்பினையும், மறுமையிலே சிவலோகத்தையும் அளித்தருளியதும், சிவாபராதம் செய்த தக்கனது குற்றங்களைப் பொறுத்தருளி அவன் வேண்டிய வரங்களை அருளியதும், மயிலுருவம் பெற்ற அம்மையார் இறைவனை பூசித்து அவ்வுருவம் நீங்கப் பெற்று இறைவனை மணக்க அருள் செய்ததும், இறைவன் ஆண்மயிலாகித் தாண்டவம் ஆடியருளியதும், இறைவன் கௌரி தாண்டவ நடனம் செய்யப் பெற்றதும், மனத்தினால் நினைக்கக் கூடாத பாவங்களையெல்லாம் நீக்குவதும், நோன்பு, பூஜை, ஜபம், தவம், தியானம் இவைகளைச் செய்யின் ஒன்றுக்குப் பத்தாக ஆயிரமாகப் பெருகிப் பயனளிக்கவல்லதும், கௌவுடில்ய முனிவர் வழிபட்டுப் பிதிரர்களைக் கரையேற்றுவித்ததும், யோகவித்தமன் என்ற பிராமணன் இம்மையில் செல்வம் பெற்று மறுமையில் சுவர்க்கத்தைப் பெறச் செய்ததும், சுகன்மனுக்குச் சித்தசாந்தி அருளியதும், காகபுசுண்டர் பூசிக்க வீடுபேறு அருளியதும், திருமாலும் அவருடைய அவதார மூர்த்திகளாகிய மத்ஸ்யாவதாரநாதர் முதலியவர்களும் பூசை செய்ய அவர்களுக்கு உலகக்காவலைப் பொருத்தச் செய்ததும், மார்க்கண்டேயர் மீது வீசிய பாசம் பெருமானுடைய திருமேனியில் கட்டியதாலுண்டான பாவம் நீங்க எமதருமனுக்கு கருணைசெய்து அருள் பாலித்ததும், மன்மதன் பூசித்து அநங்கனாக உயிர்பெற்று வரச்செய்ததும், நாதசர்மாவும் அவர் மனைவி அனவித்தையும் வழிபடச் சிவசாயுச்சியப்பேறு அளித்ததும் முதலாகிய அளவிறந்த பெருமைகளையுடையது இத்தலம்.



இத்தலத்தில் துலா மாதத்து அமாவாசை நண்பகலில் கங்கை முதலிய புண்ணியநதிகள் யாவும், காவிரித் துலாக் கட்டத்திலுள்ள இடப தீர்த்தத்தில் நீராடி, இடபாரூடரான மாயூரநாதரையும் அஞ்சல் நாயகியையும் வழிபட்டு பாவம் நீங்கப் பெறுகின்றனர். அன்றியும் சப்தமாதர்களும் அட்டதிக்குப் பாலகர்களும் வழிபட்ட சிவலிங்கங்கள் அமைந்துள்ள தலங்கள் சூழவுள்ளன. காசி விசுவேசப்பெருமான், இத்தலத்து ஐந்து இடங்களில் திருக்கோயில் கொண்டிருந்து, கங்கையிற் புனிதமானது காவிரி என்பதை விளக்கியருளுகின்றார்.

இறைவன் விளநகரில் துறைகாட்டும் வள்ளலாகவும், மூவலூரில் நெறி காட்டும் வள்ளலாகவும், வள்ளலார் கோயிலில் ஞானங்காட்டும் வள்ளலாகவும், பெருஞ்சேரியில் உரை காட்டும் வள்ளலாகவும், மாயூரத்தில் வள்ளலாகவும் எழுந்தருளி, வள்ளல் நாயகமாகத் திகழ்வது இத்தலமேயாகும். இவ்வண்ணம் அளவற்ற பெருமைகள் வாய்ந்த இத்தலத்தில் உள்ளதும் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதுமாகிய ஸ்ரீ மாயூரநாதஸ்வாமி தேவஸ்தானம்,

திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்து மூன்றாவது குருமகாசந்நிதானம்

சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளப்பாங்கின் வண்ணம், ஸ்ரீ மாயூரநாதர் நற்பணி மன்றம் பொறுப்பேற்று,
பக்த மகாஜனங்களின் உதவியைக் கொண்டு, சுவாமி அம்பாள் விமானங்கள், கோபுரங்கள்,
மேல்தளங்கள், இராஜகோபுரம் மற்றும் பரிவார மூர்த்திகளின் விமானங்கள்
ஆகியவை சிறப்பாகத் திருப்பணிகள் செய்விக்கப் பெற்று,

நிகழும் பார்த்திப ஆண்டு ஆவணித்திங்கள் 29 ஆம் நாள் 14.09.2005 புதன்கிழமை உத்திராட நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 7.00 க்கு மேல் 10.42 க்குள் காலை 9.15 மணிக்குமேல் 10.15 மணிக்குள் துலா லக்கினத்தில்
ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.
பக்த மகாஜனங்கள் அனைவரும் வந்து தரிசித்து இன்புற்று பிறவிப்பயன் அடைவார்களாக.

இங்ஙனம்


காறுபாறு- வைத்தியநாதத் தம்பிரான்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
ஸ்ரீ மாயூரநாதசுவாமி கோயில் டிரஸ்டி ஸ்தானீகம்.

ஸ்ரீமாயூரநாதர் நற்பணி மன்றம்,
திருமயிலாடுதுறை.



தமிழ்த்தேதி	ஆங்கிலத்தேதி	கிழமை	நிகழ்ச்சிநிரல்
ஆவணி 22	07.09.2005	புதன்	மாலை 6.50 க்கு மேல் 8.15 மணிக்குள் மீன லக்னத்தில் எஜமான அனுக்ஞை தனபூஜை. விக்னேஸ்வர பூஜை தொடர்ந்து சுவாமி அனுக்ஞை.
ஆவணி 23	08.09.2005	வியாழன்	காலை 8.00 மணி முதல் பகல் 12.00 மணிவரை கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், கோபூஜை, கஜபூஜை, ப்ரும்மசாரி பூஜை. மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை பிரவேசபலி கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, ரக்ஷோக்ன ஹோமம்.
ஆவணி 24	09.09.2005	வெள்ளி	காலை 6.00 மணி முதல் 9.00 மணி சாந்தி-மூர்த்தி ஸம்ஹிதா திசா ஹோமங்கள் காலை 9.30 மணி முதல் பகல் 1.00 மணிவரை காவேரியிலிருந்து புனித நீர் கொண்டுவருதல் மாலை 6.00 முதல் இரவு 9.00 மணி வரை மிருத்ஸங்கிரஹணம். யாகசாலை அலங்காரம்.
ஆவணி 25	10.9.2005	சனி	காலை 8.00 மணி முதல் பகல் 12.00 மணி வரை ஸ்ரீ அபயாம்பிகை சமேத ஸ்ரீ மாயூரநாதஸ்வாமிக்கு மஹன்யாஸ ருத்ர ஜபஹோம ஸஹித ப்ரஸன்னாபிஷேகம். மாலை 4.00 மணிக்கு அங்குரார்ப்பணம் ஆசார்ய ரக்ஷா பந்தனம். முதற்காலம்
		மாலை	மாலை 6.30 மணிக்கு மேல் 8.00 மணிக்குள் மீன லக்னத்தில் கும்பாலங்காரம். கலாகர்ஷணம். யாகசாலைபிரவேசம் தொடர்ந்து முதற்கால யாகபூஜைகள் ஆரம்பம். இரவு 10.00 மணிக்கு பூர்ணாஹுதி - தீபாராதனை இரவு 10.15 மணிக்கு மேல் 11.15 மணிக்குள் ரிஷப லக்னத்தில் பரிவார மூர்த்திகள் அஷ்டபந்தன மருந்து சாத்தத் தொடங்குதல்.



தமிழ்த்தேதி	ஆங்கிலத்தேதி	கிழமை	நிகழ்ச்சிநிரல்
ஆவணி 26	11.09.2005	ஞாயிறு	**இரண்டாம் காலம்**
		காலை	காலை 8.00 மணிக்கு ஆசார்ய விசேஷ சந்தி. தொடர்ந்து யாகசாலையில் பாவனாபிஷேகம் காலசந்தி பூஜை. காலை 9.00 மணி முதல் இரண்டாம் கால யாகம். பகல் 12.00 மணிக்கு பூர்ணாஹுதி - தீபாராதனை.
		மாலை	**மூன்றாம் காலம்**
			மாலை 6.00 மணிக்கு ஆசார்ய விசேஷசந்தி. தொடர்ந்து யாகசாலையில் பாவனாபிஷேகம். சாயரட்சை பூஜை தொடர்ந்து மூன்றாம் கால யாகம். இரவு 9.00 மணிக்கு பூர்ணாஹுதி - தீபாராதனை.
ஆவணி 27	12.09.2005	திங்கள்	**நான்காம் காலம்**
		காலை	காலை 7.20 மணிக்கு ஆசார்ய விசேஷசந்தி. தொடர்ந்து யாகசாலையில் பாவனாபிஷேகம் - காலசந்தி பூஜை 9.00 மணி முதல் நான்காம் கால யாகம் தொடக்கம் காலை 9.30 மணிக்கு மேல் 10.15 மணிக்குள் துலா லக்னத்தில் விமான கலச ஸ்தாபனம் பகல் 12.00 மணிக்கு பூர்ணாஹுதி - தீபாராதனை.
		மாலை	**ஐந்தாம் காலம்**
			மாலை 5.00 மணிக்கு ஆசார்ய விசேஷசந்தி. தொடர்ந்து ஐந்தாம் கால யாகம் தொடக்கம். மாலை 6.30 மணிக்கு மேல் 8.30 மணிக்குள் மீனலக்னத்தில் பிரதான மூர்த்திகள் அஷ்டபந்தன மருந்து சாத்துதல்.
			இரவு 9.00 மணிக்கு பூர்ணாஹுதி - தீபாராதனை.





தமிழ்த்தேதி	ஆங்கிலத்தேதி	கிழமை	நிகழ்ச்சிநிரல்
			ஆறாம் காலம்
ஆவணி 28	13.09.2005	செவ்வாய்	காலை 8.30 மணிக்கு ஆசார்ய விசேஷ சந்தி. தொடர்ந்து யாகசாலையில் பாவனாபிஷேகம் - காலசந்தி பூஜை. தொடர்ந்து ஆறாம் கால யாகம் தொடக்கம் பகல் 12.00 மணிக்கு பூர்ணாஹுதி - தீபாராதனை
			ஏழாம் காலம்
		மாலை	மாலை 5.00 மணிக்கு ஆசார்ய விசேஷ சந்தி. தொடர்ந்து யாகசாலையில் பாவனாபிஷேகம் - சாயரட்சை பூஜை. ஏழாம் கால யாகம் தொடக்கம். இரவு 7.00 மணி முதல் 8.00 மணி வரை யாகசாலையில் தீபலக்ஷ்மி பூஜை சுவாஸினீ பூஜை. கன்யா பூஜை. இரவு 9.30 மணி முதல் 10.30 மணி வரை பீம்பசுத்தி ரக்ஷாபந்தனம்.
			எட்டாம் காலம்
ஆவணி 29	14.09.2005	புதன்	விடியற்காலை 5.00 மணிக்கு எட்டாம் கால யாகம் தொடக்கம். காலை 6.30 மணிக்கு பரிவார யாகசாலை பூர்ணாஹுதி கடம் புறப்பாடு. காலை 9.30 மணிக்கு அனைத்து விமான - ராஜகோபுர கலச மஹாகும்பாபிஷேகம்
			மஹா கும்பாபிஷேகம்
			காலை 10.00 மணிக்கு ஸபரிவார ஸ்ரீ அபயாம்பிகை சமேத ஸ்ரீ மாயூரநாதஸ்வாமி மூலஸ்தான மஹாகும்பாபிஷேகம். மஹா தீபாராதனை. மாலை 5.00 மணிக்கு மஹாபிஷேகம். இரவு 8.00 மணிக்கு திருக்கல்யாணம் தொடர்ந்து பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக் காட்சி மற்றும் 63 நாயன்மார்கள் புறப்பாடு.



அருளாசியுடன்

மஹா கும்பாபிஷேகம் சர்வசாதகம்

சிவ ஸ்ரீ **A.V. சுவாமிநாத சிவாச்சாரியார்** முதல்வர்
சிவபுரம் வேத சிவாகம பாடசாலை, மயிலாடுதுறை

பரம்பரை பூஜை ஸ்தானீகம்

சிவஸ்ரீ. T. ராமநாத சிவாச்சாரியார்,
சிவஸ்ரீ. N. பாலசந்திர சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. K. சுந்தரேச சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. B. கல்யாணசுந்தரம் சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. V. சுப்ரமணிய சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. R. வெங்கட்ராம சிவாச்சாரியார்
மயிலாடுதுறை.

T.M. பாலசுப்ரமணியன் - கண்காணிப்பாளர்
மற்றும்
அலுவலர்கள், ஆலய ஊழியர்கள்,
ஆலய இசைக் கலைஞர்கள், தேவஸ்தான கொத்தனார்கள்,
ஸ்ரீ மாயூரநாதஸ்வாமி தேவஸ்தானம், மயிலாடுதுறை.
அனைத்து சிவாலய வழிபாட்டு அமைப்புகள், மயிலாடுதுறை.

சுதை மற்றும் வர்ணம்

ராஜகோபுரம், 3 நிலைகோபுரம், ஆதிமாயூரநாதர், ஸ்ரீ மகாகணபதி,
ஸ்ரீ ஆறுமுகம், 16 கால்மண்டபம் ஸ்ரீ நடராஜர் நாதசர்மா சன்னதி ஆகியவை சுதை வர்ணம்
S. ராம்குமார் ஸ்தபதி, கூறைநாடு, மயிலாடுதுறை.

யாகசாலை

ராஜகோபுரம் சாரம், அனைத்து விமானங்கள் சாரம் மற்றும் யாகசாலை அமைப்பு
G. செல்வம் - தேவஸ்தான கொத்தனார், தரங்கை சாலை, மயிலாடுதுறை.

இறைபணியில்...

M.P. கணேசன். Ganes Digital Design, சன்னதி தெரு, மயிலாடுதுறை.



கும்பாபிஷேக அழைப்பிதழ் அச்சிடும் பாக்கியம் பெற்றோர் :

ஸ்ரீ மாயூரநாதர் நற்பணி மன்றம்

திருப்பணி கமிட்டியினர்

தலைவர் : C.R. குஞ்சிதபாதம்

செயலர் : அருண். ராமதாஸ்

துணைத் தலைவர் : G. மனோகர்

துணைச் செயலர் : R. விஜயகுமார்

பொருளர் : R. ராஜூ

ஆலோசகர்கள் :

K. சேகர்

K. சோமசுந்தரம்பிள்ளை

R. சுப்பிரமணியம்

திருப்பணி மேற்பார்வையாளர்கள்


P. லெட்சுமிபதி D.பாலசுப்ரமணியன்

C.சந்திரமௌலி G.முருகானந்தன்


மற்றும்

சிறப்புலி நாயனார் வார வழிபாட்டு மன்றம்

ஆக்கூர், மயிலாடுதுறை தாலுகா.



14.9.2005 மயிலாடுதுறை அருள்மிகு அபயாம்பிகை உடனுறை மாயூரநாதப் பெருமான் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னாளில் மகாதட்சிணாமூர்த்தி என்னும் விழாமலரை வெளியிட்டருள தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசன்னிதானம் அவர்கள் பெற்று மகிழ்தல்




14.9.2005 மயிலாடுதுறை அருள்மிகு அபயாம்பிகை உடனுறை ஸ்ரீ மாயூரநாதப் பெருமான் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாமலரை வெளியிட்டருள பனசை காசி மடத்து அதிபர் திருவளர்திரு முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பெற்று மகிழ்தல்.



சீர்வளர்சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் பரிவார யாகசாலையை கண்டு வழிபட எழுந்தருளல்



அருட்பெருங்கடலும்
அன்புசெறிகடலும்
யாகசாலையில் எழுந்தருளியிருக்கின்ற
அருள்மிகு மாயூரநாதப் பெருமானை
வணங்கிடும் காட்சி.



அருள்மிகு மாயூரநாதர் யாகசாலையில்
நடைபெறும் மகா தீபாராதனையை
சீர் வளர் சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள்
தரிசித்தல்.



அருள்மிகு மாயூரநாதர்
திருக்கோயில் திருக்குட
நன்னிராட்டுப் பெருவிழாவில்
திருவாவடுதுறை
ஆதீன குரு மகாசன்னிதானம் அவர்களும்
தருமையாதீன
குரு மகாசன்னிதானம் அவர்களும்
யாகசாலை வழிபாட்டினைச்
செய்து மகிழ்தல்.



குடமுழுக்கு நடைபெறுவதற்கு யாகசாலையில் இருந்து திருக்குடங்கள்
சீர் வளர் சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் முன்னிலையில் எழுந்தருளி வருதல்.



அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் யாகசாலையில்
சீர் வளர் சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் மலர்தூவி வழிபாடாற்றுதல்.



திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால் நூல் நிலையம் மற்றும் ஆய்வு மையம், திருவாவடுதுறை - 609803.

நூலின் பெயர்	விலை ரூ.
திருஞானசம்பந்தர் தேவாரம் (முதல் திருமுறை-உரையுடன்)	60.00
திருவாசகம்	25.00
திருமந்திரம் பாயிரம் முதல் மூன்று தந்திரங்கள்	175.00
திருமந்திரம் 4 ஆம் தந்திரம் (உரையுடன்)	75.00
திருமந்திரம் 5,6 ஆம் தந்திரம் (உரையுடன்)	60.00
திருமந்திரம் 7 ஆம் தந்திரம் (உரையுடன்)	60.00
திருமந்திரம் 8 ஆம் தந்திரம் (உரையுடன்)	150.00
திருமந்திரம் 9 ஆம் தந்திரம் (உரையுடன்)	75.00
திருமந்திரம் வைத்திய பகுதி	20.00
சித்தாந்தப் பிரகாசிகை	10.00
சித்தாந்தாப் படம்	15.00
சிவஞான பாடியமும் சிற்றுரையும்	10.00
அஷ்டப்பிரகரணம் (5,6)	15.00
அஷ்டப்பிரகரணம் 7	15.00
அஷ்டப்பிரகரணம் 8	15.00
மகா கால சம்ஹாரர்	275.00
விதியை வெல்வது எப்படி?	15.00
திருவள்ளுவர் சித்தாந்த சைவர்	10.00
திருக்குறள் பொதுநூலா?	10.00
திருவாவடுதுறை ஆதீனவடமொழி ஒலைச் சுவடிகள்	100.00
தெய்வத் திருமேனிகளின் தியானம் -ரூபம்-யந்திரம்-மந்திரம்	200.00
ஆகமநெறியில் அனந்தேசுவரர்	50.00
துறையசை ஆதீன ஞானப் பண்ணையில் ஓர் மெய்ஞ்ஞான சிந்தாமணி	15.00

நூலின் பெயர்	விலை ரூ.
சேந்தனார் அருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (தமிழ்-ஆங்கிலம்)	15.00
திருவாவடுதுறை ஆதீன வரலாற்றுச் சுருக்கம்	15.00
கணபதி	150.00
திருப்பெருந்துறை - கலைக்கோயில்	10.00
மகா சிவசக்தி	350.00
முருகன்	200.00
திருமாந்துறைத் தலவரலாறு	10.00
பண்டாரசாத்திரம் (சன்மார்க்க சித்தியார், சிவாச்சிரமத் தெளிவு)	20.00
பண்டார சாத்திரம் (சித்தாந்த சிந்தாமணி)	15.00
பண்டார சாத்திரம் (தசகாரியங்கள்)	15.00
பண்டார சாத்திரம் (பஞ்சாக்கரப் பஃறொடை,உபதேசப் பஃறொடை)	20.00
சைவ அநுட்டான விதி	7.00
பார்த்திப பூசாவிதி	10.00
மகா பைரவர்	275.00
கலசைப் பதிற்றுப்பத்தந்தாதி	15.00
ஆடல்வல்லான்	350.00
சைவகாலவிவேகம்	50.00
கச்சியப்ப முனிவரின் சிவநெறி விளக்கம்	25.00
பன்னிரு திருமுறை அருளாளர்கள் கலைக்களஞ்சியம்	300.00
முதல்திருமுறை (பண்முறை)	60.00
மகா தட்சிணமூர்த்தி	275.00

ஆதீன நூலகத்தில் விற்பனையில் உள்ள பிற வெளியீடுகள்

நூலின் பெயர்	விலை ரூ.
சோமேசர் முதுமொழிவெண்பா	150.00
திருவாவடுதுறை ஆதீனம் (ஆங்கிலம்)	100.00
திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள்	100.00
திருவாவடுதுறைப் புராணம்	250.00
திருவாசகம் - விளக்கவுரையுடன் (இருபாகம்)	420.00
சிவஞானபோத வசனலங்கார தீபம்	160.00
ஸித்தாந்தப் பிரகாசிகா	40.00
சைவ சாதனங்கள்	40.00

நூலின் பெயர்	விலை ரூ.
சிவநெறிப் பிரகாசம்	80.00
சிவப்பிரகாசம்	40.00
திருவைந்தெழுத்து	12.00
தசகாரியம்	30.00
சிவஞானபோதம்	100.00
திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார்	40.00
அற்புதத் தேவார திருப்பதிகங்கள்	50.00

ஆதீன வெளியீடான 'மெய்கண்டார்' மாதஇதழ் படியுங்கள்!



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23 ஆவது குரு மகாசன்னிதானம்

சீர் வளர் சீர் **சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்கள்

இவ்வாதீனத்து ஞானக் கருவூலமாகத் திகழும் சரசுவதி மகால் நூல் நிலையம் மற்றும் ஆய்வு மையத்தில் சிவாகமம் மற்றும் சிற்பத்துறை ஆராய்ச்சியாளராக பணிமேற் கொண்டு பல சிவாகம சிற்பக் களஞ்சிய நூல்களை எழுதிச் சமர்பித்த இந்நூலாசிரியர் திருவிடைமருதூர்

திரு. எஸ். நாராயணசுவாமி M.A. (Philo)., M.A., (His)., M.Ed., Dip. in Sanskrit

அவர்களின் நூற்பணியினைப் பாராட்டு முகத்தான், பங்குனி – திருவோணம் குருபூசைத் திருநாளில், அருள்திரு. நமசிவாய மூர்த்திகள் ஆசிக் கவசமாகப் பொன்னாடை, மோதிரம், பொற்கிழி ரூ.3000 இவற்றுடன்
'ஆகம சிற்பக் களஞ்சியக் கலைமணி' என்னும்
சிறப்பு விருதினை வழங்கி வாழ்த்தியருளுகின்றார்கள்.

4.4.2005 திங்கள் கிழமை

விலை : ரூ. 275

Published by

Phone : 04364 -232021 Cell : 94435 04353

THIRUVAVADUTHURAI ADHEENAM SARASWATHI MAHAL LIBRARY AND RESEARCH CENTRE

THIRUVAVADUTHURAI - 609 803. TAMILNADU STATE. SOUTH INDIA